கலைஞரின்
கடிதங்கள்

1

22.10.1968 - முதல்
01.12.1974 - வரை

சீதை பதிப்பகம்

கலைஞரின் கடிதங்கள்

தொகுதி - 1

22.10.1968 - 01-12-1974

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
அன்பழகன் நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

தலைவர் கலைஞர்

சீதை பதிப்பகம்,
சென்னை-05. ☎ 97907 06549/97907 06548

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்

9, செயின்ட் ஜான் சர்ச்சு வணிக
வளாகம், ராக்கின்ஸ் சாலை,
திருச்சி - 620 001.
9952034876 / 9943428994
04312419584.

GOWRA PUTHAGA MAIYAM

9, SAINT JOHN CHURCH COMPLEX,
ROCKINS ROAD, TRICHY - 620 001
99520 34876 / 04312419584.
gowraputhagamaiyam@gmail.com

AVAILABLE @ :

கௌரா ஏஜென்ஸீஸ்

எண்.1 சாமி தெரு,
(சாய் பாபா கோவில் பின்புறம்)
திருவல்லிக்கேணி, சென்னை - 05.
9790706548 / 9790706549
044 28443791.

GOWRA AGENCIES

NO : 1 SAMY STREET,
(SAI BABA TEMPLE BACK SIDE)
TRIPLICANE, CHENNAI - 05.
9790706548 / 044 28443791.
gowra09@gmail.com

கலைஞரின் கடிதங்கள்

KALAIGNARIN KADITHANGAL

விலை : ரூ.**300.00** CODE :**2300**

எழுதியவர் : **கலைஞர்**
தொகுப்பாசிரியர்கள் :
கோ.சண்முகநாதன் M.com BGL
முனைவர் கி. இராஜமாணிக்கம் IAS ஓய்வு
(கலைஞரின் செயலாளர்கள்)
பொருள் : கடிதம்

© உரிமை :

பதிப்பாசிரியர் :
எஸ். கௌமாரீஸ்வரி M.A., M.L.I.S.,
பதிப்பு :
முதற் பதிப்பு – 2022
வெளியீடு :
சீதை பதிப்பகம்
6ஏ/4, பார்த்தசாரதி சாமி தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை – 600 005
பக்கம் : 400
ஒளி அச்சு : ஜெய் ஜீனா
அச்சிட்டோர் :
சேகர் ஆப்செட், சென்னை–5.
ISBN :

A 22 08
த 894.811 6

AUTHOR : KALAIGNAR
EDITORS:
K. SHANMUGANATHAN M.COM BGL
DR K. RAJAMANIKAM IAS
SUBJECT : EPISTLE

© RIGHTS :

PUBLISHER :
S.GOWMAREESWARI M.A., M.L.I.S.,
EDITION :
1ST EDITION - 2022
PUBLISHED @ :
SEETHAI PATHIPPAGAM
6A/4, PARTHASARATHI SAMY STREET,
TRIPLICANE,
CHENNAI-600 005.
PAGES : 400
TYPESET BY : JAIJEENA
PRINTED @ :
SEKAR OFFSET, CHENNAI - 5.
ISBN :

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வகம் நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

அம்மாவுக்கு....

கௌரா பதிப்பகக் குழுமம்

மு.க. ஸ்டாலின்
தமிழக முதலமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை – 600 009.

அணிந்துரை அல்ல இது; மிகவும் பணிந்துரை!

"கலைஞரின் கடிதங்கள்" அனைத்தையும் அச்சியற்றி, வெளியிடுவதென முடிவெடுத்து, அந்த முடிவு கனிந்து, இப்போது கடிதங்கள் அனைத்தும் 54 தொகுதிகளாக வெளிவருகின்றன.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் மீது கொண்டிருக்கும் மாறாத பற்றாலும், மதிப்பாலும், மரியாதையினாலும், கழக வரலாற்றில் சிறப்பு வாய்ந்த இந்த அரிய - பெரிய பணிமுழுவதையும் ஆற்றிட முன்வந்திருக்கும் சென்னை - சீதை பதிப்பகத்தார்க்கும், அதன் உரிமையாளர் அருமை நண்பர் திரு. இராஜசேகரன் அவர்களுக்கும், நெஞ்சார்ந்த நன்றியையும், மகிழ்ச்சியையும், பாராட்டுதல்களையும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில், இங்கே பதிவு செய்வது என்னுடைய முதல் கடமை ஆகும்.

இந்தத் தொகுதிகள் வெளிவருவதற்குப் பின்னணியில் இருந்து, பல்லாற்றானும் உதவிய, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர்கள் - பாசம் மிகுந்த எனது அண்ணன்மார், திரு. கோ.சண்முகநாதன், முனைவர் கி.இராஜமாணிக்கம் ஆகிய இருவர்க்கும் என்னுடைய நன்றியையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. இராஜசேகரன் அவர்கள் என்னிடம், "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கு, அணிந்துரை வழங்கிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டார். தந்தைக்குத் தனயன் "அணி"யாகத் திகழ்ந்திட முடியுமே அன்றி; அணிந்துரை அளித்திடத் துணிவது, அதிகப்படியான செயலாக ஆகிவிடும்.

தலைவர் கலைஞர் அவர்களின் எழுத்துக்கு அணிந்துரை வழங்கிடும் உயரம் எனக்கு நிச்சயமாக இல்லை என்பதை நானறிவேன். அதனாலே அணிந்துரைக்குப் பதிலாக "பணிந்துரை" தருகிறேன் என்று சொன்னேன். அதன்படி, இது அணிந்துரை அல்ல; மிகவும் பணிந்துரை!

எழுதுவதை உயிர்மூச்சாகக் கொண்டு இயங்கிய தலைவர் கலைஞர் அவர்கள், வாழ்ந்த காலம் முழுவதும் எழுதி எழுதி இமயம்போல் குவித்தவர். அவர் எழுத்து வேந்தர்; சொல்லேருழவர்; கருத்துக் கருவூலம்; வண்ணமயமான எண்ணங்களின் வற்றாத ஊற்று!

தலைவர் கலைஞர், கழக உடன் பிறப்புகளுக்குக் கடிதம் எழுதத் தொடங்கி, மொத்தம் 4051 கடிதங்கள் எழுதியிருக்கிறார்.

ஏ அப்பா, கேட்கவே மலைப்பாக இருக்கிறது அல்லவா!

ஒரு நாளைக்கு ஒரு கடிதம் என்று வைத்துக் கொண்டாலும், தொடர்ந்து 11 ஆண்டுகள், 36 நாட்கள் கடிதம் எழுதியிருக்கிறார். இப்படி எழுதுவது தனியொரு மனிதருக்குச் சாத்தியப்படுமா என்றால்; சாத்தியப்படாத எதையும், எந்தத் துறையாக இருந்தாலும், அதை எடுத்துச் சாத்தியப்படுத்திச் சாதனை செய்து சரித்திரம் படைத்தவர் கலைஞர்!

முடியுமா, நேரம் கிடைக்குமா, உடல் நலனுக்கு ஒத்துவருமா - என்ற கேள்விகளின் முனைமுறித்துப் போட்டவர் கலைஞர். பெரும்பாலும், காலை எழுந்ததும் கடிதம் எழுதுவது, கலைஞர் தவறாது தொடர்ந்து இறுதிவரை ஆற்றிய கடமையாகவே இருந்தது. இந்த அளவுக்கு, நான்கு ஆயிரத்திற்கும் மேற்பட்ட கடிதங்கள் எழுதி வெளியிட்டிருக்கும், ஒரே அரசியல் தலைவர் அகில உலகத்திலும் அவர் ஒருவரேதான்!

கடிதம் எழுதுவது என்பது, கிரேக்கத்திலிருந்து தொடங்குகிறது. டையோஜெனீஸ் (கி.மு.412 - 323) என்ற கிரேக்க ஞானி, தன்னைக் காண அலெக்சாந்தர் விரும்பியதாக அவருடைய நண்பர் அரிஸ்ட்டிப்பஸ் எழுதிய கடிதத்திற்கு, அனுப்பிய பதில் கடிதம் பிரபலமானது.

கிரேக்க தத்துவ ஞானி சாக்ரட்டீஸின் 9 கடிதங்கள் வரலாற்றில் இடம்பெற்றிருப்பவை. இயேசுநாதரின் சீடர்கள்

எழுதிய கடிதங்கள், விவிலியத்தின் புதிய ஏற்பாட்டில் பொறிக்கப்பட்டுள்ளன. சிசரோ, ரோமாபுரியின் வரலாற்றை 835 கடிதங்களாக எழுதி வைத்திருக்கிறார்.

லியோ டால்ஸ்டாய், ஹோரஸ் வால்போல், மெக்காலே, கோல்ட் ஸ்மித், பைரன், கீட்ஸ், பெர்னாட்ஷா போன்ற அறிஞர்கள் பலரும் எழுதிய கடிதங்கள் கடித இலக்கியத்தில் முக்கியமான பங்கு வகிக்கின்றன.

கலையரசி மாதவி, கோவலனுக்கு இரண்டு கடிதங்கள் அனுப்பியதாகச் சொல்கிறது சிலப்பதிகாரம். விவேகானந்தர், அமெரிக்கா சென்றிருந்தபோது அவருடைய நண்பர்களுக்கு எழுதிய கடிதங்கள், அண்ணல் காந்தி அடிகள் பல்வேறு சூழ்நிலைகளில் எழுதிய எண்ணற்ற கடிதங்கள், பண்டித நேரு அவர்கள் சிறையில் இருந்தவாறே அவருடைய மகள் இந்திரா காந்தி அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் (உலக வரலாறு) ஆகியவை கடித இலக்கியமாகப் பார்க்கப்படுகின்றன.

மறைமலை அடிகளாரின் நாவல் “கோகிலாம்பாள் கடிதங்கள்”, இலக்கியச் சுவையும் தரமும் உடையது. கடிதக் இலக்கியத்தை கருத்துச்செறிவுடன் கையாண்டவர் டாக்டர் மு.வரதராசனார் அவர்கள் ஆவார்கள். அவருடைய “அன்னைக்கு’, "தம்பிக்கு”, “நண்பர்க்கு’, "தங்கைக்கு" ஆகியவை

ஒருகட்டத்தில் மொத்தத் தமிழ் மக்களின் கவனத்தையும் கவர்ந்தவை.

அந்த வரிசையில் வைத்துப் போற்றிப் புகழத் தக்கவை, புகழ்ந்து நினைவிலே வைத்து எப்போதும் பாதுகாத்திடத் தக்கவை, பாதுகாத்துப் பாரம்பரியமாகப் படித்துப் பயன்பெறத் தக்கவை, பேரறிஞர் அண்ணா அவர்களின் “தம்பிக்கு” கடிதங்களும்; அண்ணா அவர்களைப் பின்பற்றி, தலைவர் கலைஞர் எழுதிய “உடன்பிறப்புக்கு” கடிதங்களும் ஆகும்.

தந்தை பெரியார் அவர்கள் எதிலும், எப்போதும் அறிவியல்பூர்வமான அணுகுமுறையைப் பின்பற்றியவர் என்றால்; பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அடிப்படையில் கலை உணர்வு மிக்கவர்கள் என்பதால், அறிவியல் உண்மைகளையே, கவித்துவ நடையில் எடுத்து இயம்பியவர்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும், அன்றாட அரசியல் பிரச்சினைகளையும், உலக நிகழ்வுகளையும், கட்சித் தோழர்களுக்கு எடுத்துச் செல்லவும், ஏற்றபடி தொகுத்துச் சொல்லவும், கடித வடிவத்தைக் கைக்கொண்டார்கள்; அந்தக் கடிதங்களை இலக்கியத் தேனில் தோய்த்து, திகட்டாத தெள்ளுதமிழில் வாரி வழங்கினார்கள். அவற்றைப் படித்துப் படித்து, தம்பிமார்களும், உடன்பிறப்புகளும், விவரங்களை அறிந்து, விழிப்புணர்ச்சி வளர்ந்திடப் பெற்றார்கள்.

அண்ணா - கலைஞர் கடிதங்கள், "வீழ்ச்சியுற்ற தமிழினத்தில் எழுச்சி வேண்டும்; விசை ஒடிந்த தேகத்தில் வன்மை வேண்டும்; சூழ்ச்சிதனை வஞ்சகத்தைப் பொறாமைதன்னைத் தொகையாக எதிர் நிறுத்தித் தூள்தூளாக்கும் காழ்ச்சிந்தை மறச்செயல்கள் மிகவும் வேண்டும்; கடல்போலச் செந்தமிழைப் பெருக்க வேண்டும்;" என்ற உயரிய, உன்னத நோக்கில் எழுதப் பட்டவை.

பேரறிஞர் அண்ணா அவர்களின் கடித இலக்கியத்தில், இல்லாததே இல்லை என உறுதியாகச் சொல்லலாம். உலக நாடுகளின் வரலாறு, இந்திய வரலாறு, சங்கத் தமிழ், இலக்கியங்கள், அரசியல் நிகழ்வுகள் என எல்லாவற்றையும்;

தமது தம்பிமார்கள் அறிந்திருக்க வேண்டும்; அறிந்திருப்பவற்றை அய்யம் திரிபறத் தெரிந்திருக்க வேண்டும்; தெரிந்து கொண்டவற்றைத் தெருக்கள்தோறும், திண்ணைகள்தோறும் கொண்டுசென்று விளக்கி உரைத்து, இன - மொழிப் பெருமையை மீட்டெடுக்க வேண்டும்; தமிழர்கள் மானமும் அறிவும் வளர்த்து மாமனிதர்களாக உயர்ந்திட வேண்டும்; என்ற பேரவாவுடன் எழுதப்பட்டவை அந்தக் கடிதங்கள்!

பேரறிஞர் அண்ணா அவர்களைப் போலவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களும், உடன்பிறப்புகளுக்குக் கடிதம் எழுதும் முன்; அன்று தலையாயதான எந்தப் பிரச்சினையைப் பற்றி எழுத வேண்டும் என்பதைத் தீர்மானித்து, அந்தப் பிரச்சினையின் முழுப் பரிமாணங்களையும் அறிந்து, சிந்தித்து, சொல்ல வேண்டியவற்றை மன ஏட்டில் வரிசைப்படுத்தி; படிப்போர் வியக்கும்படி எழுதி முடிப்பதில், ஈடு இணை இல்லாதவர் என்பதை, ஒவ்வொரு கடிதத்திலும் நிரூபித்துக் காட்டி விடுவார்.

அதுமட்டுமல்ல; ஒரு கடிதத்தை எழுதியதற்குப் பிறகு, அவரே ஒரு முறை அதை நுட்பமாகப் படித்துப் பார்த்து விடுவார்; அத்துடன் விட்டு விடுவாரா? இல்லை; தமது செயலாளரைக் கூப்பிட்டுப் படிக்கச் சொல்வார்; ஏதாவது சந்தேகம் இருக்கிறதா என்று கேட்பார்; சந்தேகம் என்றால், அந்த இடத்தை எளிதில் புரிந்து கொள்ளும்படி மாற்றம் செய்வார்; அத்துடன் முடிந்ததா என்றால், இல்லை; கடிதம் அச்சியற்றப்பட்டு, "ப்ரூஃப்" வந்ததும், மீண்டும் ஒருமுறை அவரே படித்துப் பார்ப்பார் அல்லது தன்னுடைய செயலாளரை படிக்கச் சொல்லி ஊன்றிக் கேட்பார்; பின்னர் அன்றைய "முரசொலி" இதழ் முழுமையாகி வந்ததும், ஒரு முறை படிப்பார்; மாலையில் வெளியூர் - இதழ் கைக்குக் கிடைக்கும்போது, அண்ணன் ஆர்க்காட்டாரோ, அண்ணன் துரைமுருகனோ, முனைவர் பொன்முடியோ, அல்லது நானோ பக்கத்தில் இருந்தால், இதழைக் கொடுத்துப் படிக்கச் சொல்லிச் செவிமடுப்பார்.

மறுநாள், அறிவாலயத்திலோ, அல்லது இல்லத்திலோ, கழகத் தோழர்கள் யாரும் எதிர்ப்பட்டால், "கடிதம் படித்தாயா?" என்றுதான் முதலில் கேட்பார்.

இவை அனைத்தையும் அருகிருந்து நான் பார்த்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் அவருடைய முகத்தில் அலுப்போ, சலிப்போ தோன்றாது. படிக்கப் படிக்க உற்சாகம் கொள்வார். கடிதத்தில் எழுதி இருப்பதை அப்படியே நினைவில் செதுக்கி வைத்திருப்பார்; எத்தனை மாதங்கள் ஆனாலும் கடிதத்தில் எழுதிய கருத்தை அப்படியே திருப்பிச் சொல்வார்; நாங்கள் அவருடைய கருத்தை, நினைவாற்றல் பிசகு காரணமாக, மாற்றிச் சொல்ல நேரிடும்போது, திருத்துவார்.

அப்பப்பா; அப்படி ஒரு தலைவரை, இன்னொரு முறை வாழ்நாளில் காண முடியுமோ? "இங்கிவரை யாம் பெறவே என்ன தவம் செய்து விட்டோம்!".

கலைஞர் ஒரு பன்முகங்கொண்ட பேராளுமை. கடித இலக்கியம், அவரது ஒரு முகம், ஒப்பிலாத் திருமுகம்!

1968-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 22-ஆம் நாள் முதல், 1977-ஆம் ஆண்டு பிப்ரவரி 13-ஆம் நாள் வரையில் கலைஞரின் கடிதங்கள், பத்துத் தொகுதிகளாக 1986-ஆம்

ஆண்டில் வெளிவந்தன; அதைத் தொடர்ந்து, 11 மற்றும் 12-ஆவது தொகுதிகள், 1993-ஆம் ஆண்டில் வெளிவந்தன.

22.10.1968-இல் தலைவர் கலைஞர் எழுதிய முதல் கடிதத்திலிருந்து, 15.11.2016 அன்று எழுதிய கடைசிக் கடிதம்வரை அனைத்துக் கடிதங்களையும் வெளியிட முடிவுசெய்து; இப்போது, சீதை பதிப்பகத்தார் வெளியிடுகிறார்கள்.

கலைஞர் கடிதங்கள் ஏற்கனவே 12 தொகுதிகளாக வெளியிடப்பட்டபோது, "என்னுரை" என்ற பகுதியில், தலைவர் கலைஞர் அவர்கள் எழுதி அளித்த முன்னுரை, அப்போதும் இப்போதும் முக்கியத்துவம் வாய்ந்தது மட்டுமல்லாமல்; வெளிவரவுள்ள "கலைஞரின் கடிதங்கள்" ... தொகுதிகள் அனைத்திற்கும் முன்னுரை - அறிமுக உரையாகக் கொள்ள வேண்டும்.

தலைவர் கலைஞரின் அந்த "என்னுரை"யில், "நண்பா" என விளித்துத் தொடங்கியும், "உடன்பிறப்பே" என விளித்துத் தொடங்கியும், இங்ஙனம் "மறவன்" என முடித்தும் "அன்புள்ள மு.க.'' என முடித்தும், "மறவன் மடல்" வார இதழிலும், "நம் நாடு" வார இதழிலும் மற்றும் பெரும்பாலும், நாள்தோறும் அல்லது வாரத்தில் நாலைந்து முறை "முரசொலி' நாளிதழிலும் நான் எழுதிய கட்டுரைகளின் வடிவமே "கலைஞர் கடிதம்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது, இப்போது வெளிவரும் "கலைஞரின் கடிதங்கள்" தொகுதிகளுக்கும் மெத்தப் பொருந்தும்.

மேலும் அந்த "என்னுரை"யில்: "என் கடிதங்கள் காலை ஏழு மணிக்குப் பிறப்பெடுக்கும்; ஒவ்வொரு நாளும்! பொதுவாழ்வில் இதுவரை; பாசறை - போர்க்களம் - பதவிப் பொறுப்பு - பணியாற்றும் வாய்ப்பு - இப்படி மாறி மாறி வரினும் சந்தித்த; இன்னமும் சந்தித்துக் கொண்டிருக்கிற சோதனைகள் எண்ணிலடங்கா!"

"குமுறல் - கொந்தளிப்பு - கவலை - கலக்கம் - ஏமாற்றம் - துரோகம் - இப்படி எத்தனையோ ஈட்டிகள் என் இதயத்தில் பாய்ந்து ரணமாக்கியுள்ளன". அந்த ரணம் ஆற்றிடும் மருந்தாகத்தான் எனது எழுத்துகள் எனக்குப் பயன்பட்டிருக்கின்றன!"

"எனது கடிதத் தொகுப்புகளில் பல செய்திகள், நிகழ்ச்சிகள், மதிப்புமிக்க தலைவர்கள், அன்புக்குரிய நண்பர்கள் விமர்சிக்கப்பட்டிருக்கலாம். அது; அந்தக் காலகட்டத்து அரசியல் தட்பவெப்பத்தைக் காட்டுவதாகவே எடுத்துக்கொள்ள வேண்டுமெனப் பணிவன்புடன் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன்" என்று தலைவர் கலைஞர் அவர்கள் விளக்கிச் சொன்னதை, இந்தத் தொகுதிகளைப் படிக்கும்போது, கவனமாகக் கருத்தில் இருத்திக் கொள்ள வேண்டுமென்று விரும்பி வேண்டுகிறேன்.

தலைவர் கலைஞர், 22.10.1968 - அன்று, "அன்பு நண்பா !" என விளித்து, "ஜாக்குலின்கள்" என்று தலைப்பிட்டு எழுதிய முதல் கடிதம், அவர் எவ்வளவு

அதிசயிக்கத்தக்க நுட்பமான ஆற்றலாளர் என்பதை எடுத்துக் காட்டும்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் மனைவி ஜாக்குலின், தனது கணவர் கல் நெஞ்சன் ஒருவனின் துப்பாக்கிக்கு இரையானதற்குப் பின்னர், அய்ந்தாண்டுகள் பொறுத்திருந்து, தனது 39 வயதில், ஒனாசிஸ் என்ற 68 வயது கோடீஸ்வரனை, மறுமணம் செய்துகொண்டார்; இந்தத் திருமணத்தை அமெரிக்க நாட்டிலேயே பெரும்பாலானோர் விரும்பவில்லை; என்பது செய்தி.

இந்தச் செய்தியை கழகத் தோழர்கள் அறிந்துகொள்ள வேண்டும் என எண்ணிய தலைவர் கலைஞர், அந்தச் செய்தியை; கழகத்திலே இருந்த சிலர் - பாசத்தோடு பழகிய நண்பர்கள், சென்னை மாநகராட்சித் தேர்தலில் சுயேட்சை வேட்பாளர்களாக மாறிய நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதியிருக்கிறார்.

அங்கே, சொந்த நாட்டிலே பாராட்டப்படாத மறுமணம்; இங்கே பதவி வெறியைத் தணித்துக் கொள்ள, கழகத்தையே எதிர்த்து சுயேட்சைகளாகப் போட்டியிட்ட கழகத் தோழர்கள்.

எந்தச் செய்தியையும் மேலோட்டமாகப் பார்த்து, கடந்து செல்பவரல்ல கலைஞர். அந்தச் செய்தியை, கழகத்தை நிலைநிறுத்தவும், கழகத் தோழர்களுக்கு உணர்ச்சி ஊட்டவும், எப்படிப் பயன்படுத்தலாம் என்று நினைத்துக் காத்திருந்தவர் கலைஞர்.

15.11.2016 - அன்று தலைவர் கலைஞர், “மத்திய அரசின் அறிவிப்பும், சாதாரண மக்களின் அவதியும்” என்ற தலைப்பில் "முரசொலி”க்கு எழுதிய கடைசிக் கடிதம்; பிரதமர் நரேந்திர மோடி அவர்களின் பண மதிப்பிழப்பு அறிவிப்பைப் பற்றியது. ’

அந்தக் கடிதத்தில், ஏடுகளில் வெளியான செய்திகளை எடுத்துக்காட்டி, பணமதிப்பிழப்பு நடவடிக்கையினால் நாட்டிலே ஏற்பட்ட விளைவுகளை விளக்கியிருக்கிறார்.

குபேரர்களைப் பற்றியோ, கோடி கோடியாய்ப் பணம் குவித்திருக்கும் செல்வந்தர்களைப் பற்றியோ, மேட்டுக்குடிகளைப் பற்றியோ எப்போதும் கவலைப்படாதவர் கலைஞர்.

நடுத்தர மக்கள், அடித்தள மக்கள், உழைத்து வாழும் பிரிவினர், அன்றாடங்காய்ச்சிகள் - ஆகியோரைப் பற்றியே சதாசர்வ நேரமும் நினைந்து நினைந்து கசிபவர் கலைஞர் என்பதை; பண மதிப்பிழப்பு நடவடிக்கையினால் அவர்களுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை, அந்தக் கடைசிக் கடிதத்தில் பட்டியல் இட்டிருக்கிறார்.

அந்தப் பிரிவினர்தானே கழகத்தின் வேர்கள்! மண்ணுக்குள் மறைந்திருந்து மரத்தைத் தாங்கும் வேர்களைப் போல, கண்ணுக்கெட்டிய தூரம்வரை கழகத்தைக் காத்து நிற்பவர்கள் அவர்கள் அல்லவோ! அதனால்தான் தலைவர் கலைஞர் அவர்களுக்கு, கடைசிவரை, அவர்கள் மீது அவ்வளவு அக்கறை, ஆழ்ந்த பிடிப்பு!

பேரறிஞர் அண்ணா அவர்களும், தலைவர் கலைஞர் அவர்களும் கடிதத்திற்குத் தலைப்பு சூட்டும்போது; சிற்பி செதுக்கியானதும் சிற்பத்திற்குக் கண் திறப்பு செய்வதைப் போல, ஒளி பொருந்திய - கருத்தாழம் மிகுந்த - நினைவில் நீடித்து நிற்கக்கூடிய, தலைப்புகளைத் தேர்ந்தெடுத்து அலங்கரிப்பார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்கள்:

"காகிதக் கப்பலில் கவனம் செலுத்தாதே தம்பி"
"மகுடி ஊதும் மகானுபாவர்கள்”
“கிளிக்குப் பச்சை பூசுவதா?”
"கண்ணீரும் பன்னீரும்”

“படமும் பாடமும்”
“மூலவர் மூவர் முரசொலி”

போன்ற எண்ணற்ற தலைப்புகளை கடிதங்களுக்குச் சூட்டியிருக்கிறார். -

ஒவ்வொரு அங்குலமும் அண்ணாவின் அடியொற்றி வளர்ந்த கலைஞர்

அவர்கள்:

"நேர்மையும் பொறுப்பும், நீர்மேல் எழுத்தல்ல!"
"எருக்கம் பூவில், இனிய மணம் தேடுவதோ?"
"கண்ணுக்கு விருந்தானாய் - மனப் புண்ணுக்கு மருந்தானாய்!"
"அன்று எத்தனை பிரிவு? இன்று எத்துணைப் பரிவு?”
"இடர் எது வரினும், ஏற்பேன்"
"பறித்து வராத பாரிஜாதம்"

போன்ற நினைவில் நங்கூரம் போட்டு நிற்கும் தலைப்புகளையே சூட்டியிருக்கிறார்.

கலைஞரின் கடிதங்கள், காலத்தின் கண்ணாடி! கலைஞரின் கடிதங்கள், கற்கண்டுச் சொற்கோவை! கலைஞரின் கடிதங்கள், கருத்துச் சுரங்கம்! கலைஞரின் கடிதங்கள், வானவில்லைப் போல, வண்ணங்கள் நிறைந்த எண்ணங்களின் பசுஞ்சோலை! கலைஞரின் கடிதங்கள், கடலின் ஆழத்தைக் காட்டும், மலையின் உயரத்தை உரசும்! கலைஞரின் கடிதங்கள், நினைத்தாலே இனிக்கும், நெஞ்சமெல்லாம் மணக்கும்!

கலைஞரின் ஒவ்வொரு கடிதத்தையும் ஊன்றிப் படித்து, ஒப்பிலாப் பயன் பெறுக! “யாம் பெற்ற இன்பம், பெறுக தமிழ் வையகம்!”

அன்புடன்,

(மு.க. ஸ்டாலின்)
14.09.2021

பதிப்புரை

அரசியல் இலக்கியமான கலைஞரின் கடிதங்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்தை ஆறாவது முறையாக ஆட்சிக் கட்டிலில் அமர்த்தி, அதனை உங்களுக்குக் காணிக்கையாக்குவேன் என வங்கக் கடலோரம் பேரறிஞர் அண்ணா துயிலுமிடத்தை ஒட்டி, ஓய்வெடுக்கும் முத்தமிழறிஞர் கலைஞரின் நினைவிடத்தில் சூளுரைத்தவர் கழகத் தலைவர் தளபதி அவர்கள். தேர்தல் களத்தில் மகத்தான வெற்றி பெற்று, அந்த வெற்றியைக் கலைஞரின் ஓய்விடத்தில் காணிக்கையாக்கி, தமிழ்நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றவர் மாண்புமிகு **முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின்** அவர்கள்.

சொன்னதைச் செய்வோம் என்று சூளுரைத்து நிறைவேற்றியவர் முத்தமிழறிஞர் கலைஞர். சொல்லாமலே செய்து முடிப்பவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள். தலைவர் கலைஞரின் விருப்பப்படி, கடற்கரையில் இடம் ஒதுக்கப்படுமா என அவர் மறைந்தபோது தமிழ்நாட்டில் மட்டுமின்றி, உலகெங்கும் வாழும் தமிழர்களிடம் பதற்றம் கலந்த எதிர்பார்ப்பு மிகுந்திருந்தது. அப்போதைய ஆட்சியாளர்கள் காழ்ப்புணர்வுடன் மறுத்த நிலையில், நீதிமன்றத்தை நாடி, விடிய விடிய சட்டப் போராட்டம் நடத்தி, கடற்கரையில் தலைவர் கலைஞருக்கான இடத்தை உறுதி செய்து, உலகத் தமிழர்களின் நெஞ்சில் உயர்ந்து நின்றவர் நம் முதல்வர்.

தந்தைக்குத் தனயனாக, தலைவருக்குத் தொண்டனாக, இயக்கத்தின் தலைமையாக எல்லா நிலையிலும் தலைவர் கலைஞரின் பேராற்றலை மக்கள் நெஞ்சங்களில் நிலைத்திருக்கச் செய்யும் பெரும்பணியை முதல்வர் அவர்கள் மேற்கொண்டு வருகிறார். அத்தகைய பெரும்பணிகளில் ஒன்றைச் சீதை பதிப்பகத்திடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்தார். அதுதான், கலைஞர் கடிதங்கள் எனும் இந்த மாபெரும் தொகுப்பு. 4051 **கடிதங்களைக் கொண்ட 54 பாகங்களாக** வெளியாகியுள்ள இந்தத் தொகுப்பிற்கு அணிந்துரையை மாண்புமிகு முதல்வர் அவர்களே வழங்கியிருப்பது, சீதை பதிப்பகத்தின் மீது அவர் வைத்திருக்கும் நம்பிக்கையின்

வெளிப்பாடு. அணிந்துரை என்ற சொல்லுக்குப் பதில் பணிந்துரை என அவர் பயன்படுத்தியிருப்பது தனது தந்தையும் தலைவருமான முத்தமிழறிஞர் கலைஞர் மீது எப்போதும் அவர் வைத்திருக்கும் பெருமதிப்பின் அடையாளம். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

'கலைஞரின் கவிதை மழை'யை வெளியிடும் முதல் வாய்ப்பைப் பெற்றுத் தந்த எங்கள் வழிகாட்டியான மூத்த பத்திரிகையாளர் **அய்யா சின்னகுத்தூசி**யை நினைவில் கொள்கிறோம். தலைவர் கலைஞர் அவர்களே அப்போது அதனை மெய்ப்புப் பார்த்து, முழு வடிவம் பெறச் செய்தார். ஒன்றிய அமைச்சர்கள், தோழமைக் கட்சித் தலைவர்கள், தமிழின் மிகப் பெரும் கவிஞர்கள், கழக நிர்வாகிகள் முன்னிலையில் அண்ணா அறிவாலயம் கலைஞர் அரங்கில் கவிதை மழை வெளியீட்டு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதுபோலவே, முத்தமிழறிஞர் கலைஞரின் சிறுகதை இலக்கியத்தை சிறுகதைப் பூங்கா எனும் தலைப்பில் சீதை பதிப்பகம் வெளியிட்ட போதும், மிகச் சிறப்பான விழா நடத்தப்பட்டு, அருமையான உரையை வழங்கினார் தலைவர் கலைஞர் அவர்கள். கல்லூரிகளிலும், பல்கலைக்கழகங்களிலும் அவர் ஆற்றிய உரைகளை 'கல்வி நிலையங்களில் கலைஞர்' எனக் கடலூர் இள. புகழேந்தி அவர்கள் தொகுத்திட, அதனைச் சிறப்பான முறையில் வெளியிட்டது சீதை பதிப்பகம்.

இன்றைய தகவல்-தொழில்நுட்பமும் சமூக வலைத்தளங்களும் இல்லாத காலத்தில், ஒவ்வொரு நாளும் தனது இயக்கத் தொண்டர்களுடன் உரையாடுவதற்கான ஊடகமாக உடன்பிறப்புக் கடிதங்களைத் தலைவர் கலைஞர் மிகச் சிறப்பாகக் கையாண்டார். அந்தக் கடிதங்களை முழுமையான தொகுப்பாகக் கொண்டு வரவேண்டும் என்ற எண்ணம் அவரிடம் இருந்தது. அந்த எண்ணத்தை முதல்வர் அவர்கள் நிறைவேற்றியுள்ளார்.

கடிதங்களின் முழுத் தொகுப்பு உருவாக்கப் பணியில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டவர் தலைவர் கலைஞரின் நிழலாக, அவரது மனதின் குரலை அறிந்தவராக விளங்கிய உதவியாளர் **அய்யா கோ.சண்முகநாதன்** M.com BGL அவர்கள். கலைஞர் அந்தக் கடிதங்கள் பலவற்றையும் எழுதியபோதே

அருகிலிருந்து கவனித்தவர் என்பதாலும், அப்போதே மெய்ப்புப் பார்த்து அச்சுக்கு அனுப்பியவர் என்பதாலும், ஒவ்வொரு கடிதத்தின் காலகட்டத்தையும் அறிந்து முறையாகத் தொகுத்தளித்தார். தனது இறப்பிற்கு முன்பாக, கடிதத் தொகுப்புப் பணியை முழுமையாக நிறைவேற்றிவிட்டே நம்மிடமிருந்து பிரியாவிடை பெற்றிருக்கிறார் அய்யா சண்முகநாதன். எப்போதும் எங்கள் மீது அளப்பரிய அன்பைப் பொழிந்த அய்யாவை சீதை பதிப்பகம் எந்நாளும் நினைவில் கொண்டிருக்கும்.

மறவன் என்ற பெயரில் முதலில் கடிதங்களை எழுதிய தலைவர் அவர்கள் பின்னர் மு.கருணாநிதி, மு.க. என உடன்பிறப்புகளுக்குக் கடிதங்கள் எழுதியுள்ளார். பின்னர் மீண்டும் மு.கருணாநிதி என்ற பெயரிலேயே கடிதங்களைத் தொடர்ந்து எழுதியுள்ளார். தலைவர் கலைஞர் அவர்களின் கடிதங்களைக் காலவரிசைப்படுத்தி, தொகுப்பில் விடுபட்ட கடிதங்களையும் தேடி இணைப்பதில் முனைவர் **திரு கி. இராஜமாணிக்கம்** ஐ.ஏ.எஸ்.(ஓய்வு) அவர்களின் பணி அளப்பரியது. தலைவர் கலைஞரின் அருகிலிருந்து ஆட்சிப்பணியையும் இயக்கப் பணியையும் கவனித்த அவர், இந்தத் தொகுப்பு மிகச் சிறப்பான முறையில் வெளியாவதற்குத் துணை நின்றவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் படைப்புகளை வெளியிடும் ஒவ்வொரு வாய்ப்பும் சீதை பதிப்பகத்திற்குப் பெருமை தரக்கூடியதாகும்.

சீதை பதிப்பகத்தின் வெளியீடுகளைத் தலைவர் கலைஞர் அவர்களை நேரில் சந்தித்து வழங்கும் போது ஏற்பட்ட மகிழ்ச்சிக்கும் உணர்ச்சிக்கும் அளவில்லை. அதன் தொடர்ச்சியாக, கழகத் தொண்டர்களுக்கும் தமிழ்நாட்டு மக்களுக்கும் அரசியல் இலக்கியமான முரசொலி உடன்பிறப்புக் கடிதங்கள் முழுத் தொகுப்பு எனும் இமாலயப் பணியை நிறைவேற்றியிருப்பதை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்குச் சீதை பதிப்பகத்தின் புகழ்வணக்கமாகக் கருதுகிறோம்.

இந்தப் பணியை எங்களிடம் நம்பிக்கையுடன் ஒப்படைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்குகிறோம்.

பதிப்பகத்தார்

உள்ளே...

தலைப்பு	தேதி	
1.“ஜாக்குலின்கள்”	22-10-1968	23
2. நீ விளைத்த கழனி - நீ உழைத்த உழைப்பு!	24-10-1968	27
3. நிதானமாகப் பேசுங்கள்!	25-10-1968	31
4. உன்னால் முடிந்ததைச் செய்து விட்டாயா?	27-10-1968	35
5. நேர்மையும் பொறுப்பும் நீர்மேல் எழுத்தல்ல!	29-10-1968	38
6. வெற்றி பெற்றவனே உன் வேலை என்ன?	30-10-1968	43
7. தோற்ற முயலே! முன்போல சுறுசுறுப்பாக இரு!	31-10-1968	48
8. “தீராதி தீரர்- தேசீய மகிபர்- பராக்! பராக்!”	31-10-68	54
9. வீரனே! வெற்றி என்றைக்கும் உன் பக்கம்தான்!	01-11-1968	58
10. பாவி கெடுத்தானே; பலே சாப்பாட்டை!	02-11-1968	63
11. தென்றல்- தெம்பாங்கு- தேன்கீதம்!	06-11-1968	67
12. “பூப்போட்ட கிளாசிலே போடய்யா ஒண்ணரை!”	07-11-196 8	70

13. மேயர் தேர்தல் நேரம் - நிலை - நேர்த்தியான முடிவு!	09-11-1968	73
14. 'பகைமரம்' தழைக்க விடோம்!	11-11-1968	78
15. நம்பிக்கையில்லாத் தீர்மானம் - நாடாளுமன்ற நிகழ்ச்சி!	14-11-1968	82
16. யார் அந்த உணவு அமைச்சர்?	16-11-1968	86
17. கிளம்பிற்றுக்காண் தமிழச் சிங்கக் கூட்டம்!	18-11-1968	90
18. கழுதையும் - பன்றியும்!	22-11-1968	94
19. "பசுத்தோல் வேங்கை பாராய்!"	25-11-1968	97
20. "தமிழ்த்தாயே அவர்களை மன்னித்துவிடு!"	26-11-1968	101
21. 'தமிழ் நாடு' ஒரு முழு விளக்கம்!	28-11-1968	105
22. கண்கள் திறக்க ஒரு கதை!	02-12-1968	117
23. பரிதாபப்படுகிறேன்!	05-12-1968	119
24. "அரசியல் மோசடியாம் - அறிவிக்கிறார்; அபூர்வப்பிறவி!"	07-12-1968	120
25. இந்தியும் மொரார்ஜி தேசாயும்!	09-12-1968	123
26. தகுந்த பாடம் தரவேண்டாமா?	20-12-1968	125
27. காட்சி காண அல்ல - களம் காண!	26-12-1968	127
28. வெண்மணிச் சம்பவம் ஒரு விளக்கம்!	28-12-1968	129
29. காங்கிரஸ் வெற்றியும் இந்தித் திணிப்பும்!	11-01-1969	132
30. பாழடைந்த மண்டபமும் வெளவால்களும்!	17-01-1969	134
31. வேங்கை போடும் வெள்ளாடு வேடம்!	18-01-1969	136

32. காமராஜரின் கடற்கரைப் பேச்சின் பொருள் என்ன?	28-01-1969	141
33. தெளிந்திடும் நீரோடை!	01-01-1971	143
34. வென்றிட வேறு யாருளர்?	07-01-1971	148
35. உனக்காக விழித்திருப்போம்!	10-01-1971	152
36. “கிழச் சிங்கம், கிளறிய நெஞ்சம்!”	16-04-1971	156
37. நீயும் நானும் தூங்குவோமா?	17-04-1971	161
38. இன்றே தொடங்கிடுக பணி!	18-04-1971	165
39. “கோவை - ஒரு கனி! நீ ஒரு கிளி!”	22-04-1971	169
40. அண்ணன்-கண்ணன் எங்கே?	23-04-1971	174
41. நான் கேட்கும் பிச்சை!	26-05-1971	178
42. ஜூலை 15!	10-07-1972	181
43. பெருமை எது?	17-07-1972	184
44. வழக்கு ஜோடனை!	22-07-1972	187
45. மதுரை மாட்சி (1)	09-08-1972	192
46. மதுரை மாட்சி (2)	10-08-1972	196
47. “தாயே எட்டடி என்றால்...”	29-08-1972	200
48. பாவம்; பண்பாடு, படும் பாடு!	10.10.1972	203
49. அன்பகம்! அறிவகம்!	20-10-1972	206
50. நமக்குப் புரியவில்லை!	21-10-1972	210
51. அகல்விளக்கு கையில் அண்ணன் மொழி நெஞ்சில்!	23-10-1972	214
52. பிப்ரவரி மூன்றாம் நாள் !	23-01-1973	219
53. நட வேகமாக! நமக்கே வெற்றி!!	12-05-1973	223

54. ஐந்தாம் ஜார்ஜா? ஆறாம் ஜார்ஜா?	13-05-1973	227
55. “அரிதாரம் கலையும்!”	23-05-1973	230
56. சிந்தனைக்கு!	24-05-1973	233
57. “பிறந்த நாள் வேண்டுகோள்!”	28-05-1973	236
58. “நடக்கின்ற ஆச்சரியம்!”	29-05-1973	239
59. இதுதான் உலகம்!	30-05-1973	241
60. “கண்ணீர் மடல்!”	02-06-1973	246
61. “ஒழுங்கான கணக்கு!”	15-06-1973	250
62. உண்மை! உண்மை!!	24-06-1973	253
63. “கிலுகிலுப்பை!”		256
64. பதவி-துறவி!	02-07-1973	260
65. உன் பெயர் எங்கே?	23-07-1973	263
66. “அண்ணன் எழுதிய மடல்!”	02-10-1973	266
67. நடக்கட்டும் நாடகம்!	29-11-1973	269
68. “டெல்லி லாயத்தில்!”	03-12-1973	271
69. படையெடுப்பு பலிக்குமா?	07-12-1973	273
70. உணரச் செய்வோம்!	11-12-1973	275
71. காலக் கருவூலம்!	12-12-1973	277
72. ஒன்று சொல்க!	13-12-1973	279
73. புன்னகையும் பெருமூச்சும்!	15-12-1973	281
74. குறள் மறவோம்!	16-12-1973	283
75. உன் எதிரே!	18-12-1973	285
76. தட்டிக் கேட்கலாமா?	20-12-1973	287
77. பெரியாரின் வெற்றி!	26-12-1973	289
78. நம்மை வென்றாரா?	28-12-1973	291
79. இருபதாயிரம் பாடி வீடுகள்!	01-01-1974	293
80. கொள்கை மலர்கள்	04-01-1974	296

81. தெள்ளிய ஆலின் சிறு பழத்தொரு விதை!	10-01-1974	298
82. பொங்கல் உறுதி!	14-01-1974	301
83. காண வருகிறேன் உன்னை!	11-02-1974	302
84. 'தொய்வு இல்லை! தொடர்க பயணம்!'	05-03-1974	305
85. "எல்லா மலர்களும் ரோஜா மலர்களே!"	19-03-1974	308
86. மே தின வாழ்த்து!	01-05-1974	310
87. 'நமது நிலை'!	10-05-1974	313
88. என் பிறந்த நாளில்...!	15-05-1974	316
89. "மறவாதே!"	18-05-1974	319
90. கோடையிலே...!	05-06-1974	322
91. நமது விழாக்கள்!	16-06-1974	326
92. பயணம் தொடரட்டும்!	23-06-1974	328
93. பிறந்த நாள் விழாவும் மறந்த சில விவரங்களும்!	28-07-1974	330
94. நேரமும் நினைப்பும்!	04-08-1974	335
95. 'மாம்பழ மங்கை!'	11-08-1974	339
96. அதே தேதிகள்!	01-09-1974	343
97. இன்றே தயாராகு!	08-09-1974	345
98. உயர்த்திடுவோம் தோள்!	15-09-1974	347
99. வழி மேல் விழி...	22-09-1974	351
100. அழைக்கிறேன் - வா! அன்பே வா!	25-09-1974	354
101. உயிரே! உடன்பிறப்பே! வா! வா!	29-09-1974	359
102. என் காணிக்கை!	06-10-1974	361

103. பார், பார்-இதோ பார்! இந்தியா பார்!	13-10-1974	365
104. 'கல்கி'யின் கண்ணோட்டம்!	**26-10-1974**	369
105. 'கல்கி'யின் கண்ணோட்டம் (2)	27-10-1974	374
106. 'கல்கி'யின் கண்ணோட்டம்(3)	03-11-1974	380
107. வாழ்க-உன் புன்னகை!	10-11-1974	384
108. வாண வேடிக்கை!	17-11-1974	388
109. அவள் ஒரு தொடர்கதை!	24-11-1974	392
110. கயிற்றில் தொங்கிய கணபதி!	01-12-1974	396

1. "ஜாக்குலின்கள்"

அன்பு நண்பா!

திருமணச் செய்தியோடு இந்த மடலைத் தொடங்குகிறேன். கல்நெஞ்சன் ஒருவனின் கொலைத் துப்பாக்கிக்கு இரையான அமெரிக்க ஜனாதிபதி கென்னடி மனைவி ஜாக்குலின், ஐந்தாண்டுகள் பொறுத்திருந்து இப்போது ஒனாசிஸ் என்ற கோடீஸ்வரனை மணந்து கொண்டிருக்கிறார். அம்மையாருக்கு வயது முப்பத்தி ஒன்பது. புதிய கணவனுக்கு வயது அறுபத்து எட்டுத்தான்! விவாகரத்து செய்து கொண்ட ஒனாசிஸ், ஜாக்குலினை விதவைத் திருமணம் செய்து கொண்டிருக்கிறார். மணவிழாவின் போது ஜாக்குலினின் பத்து வயது மகளும், எட்டு வயது மகனும் கையில் மெழுகுவர்த்திகளுடன் நின்று கொண்டிருந்தார்கள்.

விதவைத் திருமணமென்றால் அறிவியக்கவாதிகள் பாராட்டத்தான் வேண்டும்.

வாழ்த்துச் செய்தி அனுப்பத்தான் வேண்டும்.

"பாடாத தேனீக்கள்

பசியாத நல்வயிறு! பார்த்ததுண்டோ?"

எனக்கேட்டு, விதவைகளின் உணர்ச்சிகளுக்குத் தீ வைத்து சுட்டெரித்துவிடக்கூடாது என்று பாரதிதாசன் பாடியதை எத்தனையோ முறை படித்து படித்துப் பாராட்டியிருக்கிறோம்.

ஆனாலும் ஜாக்குலின் திருமணம் யாருக்கும் மகிழ்ச்சி தரவில்லை; அவருக்கும் அவர் புதிய கணவருக்கும் தவிர!

அமெரிக்கா நாடு-விவாகரத்துக்களை விதவை மணங்களை வியப்போடு பார்க்கிற நாடல்ல! ஆனாலும் அந்த நாட்டில் பெரும்பாலோர் இந்தத் திருமணத்தைப் பாராட்டிட முன் வரவில்லை.

காரணம்; ஜான் கென்னடிக்கு ஜாக்குலின் இழைத்து விட்ட பெரிய கொடுமையாகவே அவர்கள் கருதுகிறார்கள்.

இதுபோல் எத்தனையோ திருமணங்கள், யார் யாருக்கோ நடைபெற்றிருக்கின்றன. அந்த "யார் யாருக்கோ" என்ற வார்த்தையிலேயே அதன் முக்கியத்துவம் அடிபட்டுப்போய் விடுகிறது.

ஜான்கென்னடி-ஜாக்குலின் இல்லற வாழ்வு, எல்லா நாட்டு மக்களாலும் போற்றப்பட்ட ஒன்றாகும். கோடிக்கணக்கான வாலிபர்களையும் அணங்குகளையும் கென்னடி தம்பதியின் வாழ்க்கை, கவர்ந்திருக்கிறது. அவர்கள் இணைந்து நிற்கும் எழிலோவியங்களை, அவர்கள் இருவரும் சிரித்து மகிழும் வண்ணப்படங்களை இன்றைக்கும் பார்த்துப் பார்த்து மகிழ்வோர் ஏராளம்!

அவர்களுக்கெல்லாம் இந்தச் செய்தி தலையில் விழுந்த இடிபோன்ற அதிர்ச்சியைத் தந்ததில் வியப்பில்லை.

ஜாக்குலின், தனது இளங் கணவனை-எழில்மிகு காதலனை-திடீரெனக் கொடியவனின் துப்பாக்கி ரவைகளுக்குத் தீனியாகக் கொடுத்த போது-பல பேர்; தங்கள் சொந்தச் சகோதரிக்கு ஏற்பட்ட பெரும் இழப்பைப் போல வேதனையில் ஆழ்ந்து துடித்தனர்.

மனித இயல்பு-உணர்வு அலைகள்-இவைகளை மையமாக வைத்து, இப்போது நடைபெற்று விட்ட நிகழ்ச்சியைப் பார்த்தால் குற்றம் குறைசொல்ல முடியாதுதான்.

ஆனால்-அன்றில் பறவைகள் என்பார்களே; அது போல அனைத்துலக மக்களின் கண்ணெதிரே காட்சி தந்தவர்களின் குடும்பத்தில் இப்படியொரு செய்தி முளைப்பதை அந்தக் குடும்பத்தின்பால் அன்பு கொண்டவர்களால் ஏற்றுக் கொள்ள இயலவில்லை.

ஜாக்குலினின் மென்மையான உள்ளம்-திறமையான போக்கு-எழில் வடிவம்-இனிய சுபாவம்-காந்தக் கண்கள்-கவரும் வதனம் என்றெல்லாம் புகழப்படும்போது அவர்பால் ஒரு தூய்மை நிறைந்த பாசம்தான் அனைவருக்கும் ஏற்பட்டது; ஒனாசிஸ் ஒரு ஆளைத் தவிர!

"என்னப்பா; ஜாக்குலின் கதைக்குப் போய் விட்டாய்; ஒரு நாளுமில்லாத திரு நாளாக!" என்று நீ நினைப்பது எனக்குப் புரிகிறது நண்பா!

ஜாக்குலின் விவகாரத்தை நான் வீணாக இழுக்கவில்லை. நம்மவராயிருந்த சிலரோடு ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்வாய் என்று தான் அதனைக் குறிப்பிட்டேன்.

நம்மோடு ஒன்றியிருந்து எவ்வளவோ பாசத்தோடு பழகிய நண்பர்கள் சிலபேர், திடீரென மாநகராட்சித் தேர்தலில் சுயேச்சை வேட்பாளர்களாக மாறியிருக்கிறார்கள்.

சுயேச்சைகளாகப் போட்டியிட யாருக்கும் உரிமை இருக்கிறது. ஆனால் நம்மிடையே இருந்தவர்கள் நம் கழகத்திற்கு ஊனம் ஏற்படுத்தும் நோக்குடன் இல்லாவிட்டாலும்; தங்கள் பதவி வெறியைத் தணித்துக் கொள்வதற்காக சுயேச்சைகளாகப் போட்டியிடுகிறார்கள். தேர்தல், சுயேச்சையாகப் போட்டியிடும் உரிமையைத் தடுக்க முடியாது! விதவை விவாகத்தைக்கூடத் தடுக்கத்தான் கூடாது!

ஆனால் ஜாக்குலின் திருமணத்தை ஒத்துக் கொள்ள மக்கள் மனம் ஒப்பவில்லையே!

சுயேச்சைகள் போட்டியிடலாம்-ஆனால் நமது தோழர்கள் சுயேச்சைகளாக மாறுவதா?

ஜாக்குலினுக்கு இப்போது மக்கள் மன்றம் தரும் மதிப்புத்தானே அந்த சுயேச்சை நண்பர்களுக்கும் கிடைக்கும்.

சுயேச்சைகள் சுயேச்சைகளாகப் போட்டியிடலாம்.

மாலையில் இருந்த மலர்கள் திடீரென உதிரிப் பூக்களாவதா?

கழகத்தில் இருந்தவர்கள் கழகத்தையே எதிர்க்க சுயேச்சைகள் ஆவதா?

விதவைகள், விதவைத் திருமணம் செய்து கொள்ளலாம்.

ஆனால், ஜாக்குலின் செய்து கொண்டதைத்தானே; அவர்மீது அளவற்ற மரியாதை வைத்திருந்த அமெரிக்க ஏடுகளே கண்டிக்கின்றன.

அதை மனதிலே வைத்துக் கொண்டு இவர்களைப் பார்!

ஜான்கென்னடியை இழந்த ஜாக்குலின், ஒனாசிசைத் தேடிக் கொண்டார். உரிமை உண்டெனினும் உலகம் ஒப்பவில்லை.

தலைமைக் கழகத்தில் வேட்பு மனுத் தேர்வை இழந்த வேட்பாளர், சுயேச்சை என்ற நிலையைத் தேடிக் கொண்டார்.

ஜாக்குலின் பெற்ற மதிப்பையே இவர்களும் பெறுவார்கள். அதுமட்டும் உண்மை!

அன்புள்ள,

மறவன்

(22-10-1968)

2. நீ விளைத்த கழனி - நீ உழைத்த உழைப்பு!

ஆருயிர்த் தோழா!

அன்பின் ஊற்றே!

ஆற்றல் நிறை வீரா!

இன்றைக்குத் தேதி இருபத்தி நான்கு! நாளை மாலை ஐந்து மணியுடன் பிரச்சாரக் கூட்டங்கள் முடிவடைகின்றன. மேடையின் வாயிலாக மக்களுக்குத் தர வேண்டிய விளக்கமெல்லாம் தந்தாகி விட்டது. தலைமைக் கழகச் சார்பில் மாநகராட்சியின் சாதனை களை விளக்கி வெளியிடப்பட்ட சுவரொட்டிகளையெல்லாம் ஆங்காங்கு ஒட்டி விளம்பரப் படுத்திவிட்டாய். நீ கட்டியுள்ள இருவண்ணக் கொடித் தோரணங்கள் - பதாகைகள் - எழுச்சிமிகு வளைவுகள்... அனைத்தும் உன் கை வண்ணம் காட்டி நிற்கின்றன. நமது அண்ணனை எத்தனை எத்தனையோ கோணங்களில் எடுக்கப்பட்ட படங்களையும்-அவர் தம் பொன் மொழிகளையும் இணைத்து நீ அமைத்துள்ள காட்சிகள் கண்ணையும் கருத்தையும் கவருகின்றன. நோக்குமிட மெல்லாம் உதய சூரியன் சின்னம். அதன் ஒளியுமிழ்க் கோலம். எவ்வளவு உயரத்தில் கொடிகளைப் பறக்க விட்டிருக்கிறாய்; தோரணங்களை நீ கட்டியிருக்கும் அழகைப் பார்க்க அண்ணாந்து பார்த்தால்; ஆகா! இன்னும் கொஞ்சம் முயற்சித்தால் மேகக் கூட்டங்களுக்கிடையே கூட நீ வண்ணத் தோரணங்களை அமைத்திடுவாய் என்ற நம்பிக்கை தோன்றுகிறது.

தோரணங் கட்டுவதற்காகச் சுவரொன்றில் ஏறிய தோழன் ஒருவன் கால் தவறி கீழே விழுந்து மாண்டான் திருப்பூரில்! இன்னொரு செயல்வீரன், சென்னையில் மின்சாரக் கம்பத்தின் உச்சியில் சிக்கி கருகிப் போனான்.

அப்படியெல்லாம், கொடி கட்ட, தோரணம் தொங்கவிட, மேடையமைக்க, பாடுபட்ட கரங்களப்பா உன் கரங்கள்! என் கரங்களும் கூட அப்படித்தான். கூட்டம் நடத்திப் பழக்கப்பட்டவன்.

கொடி தூக்கிக் கோஷம் போட்டுப் பழக்கப்பட்டவன். அந்த உரிமையோடுதான் உன்னை அழைக்கிறேன்; இத்தனை நாள் செய்த வேலை பெரிதல்ல... இன்னும் இரண்டு மூன்று நாட்கள் செய்திட வேண்டிய பணியே மிக முக்கியம்!

முயலும் ஆமையும் கதை-தொடக்கப் பள்ளியிலேயே கற்றுக்கொண்டது! தூங்கிவிட்ட முயலாகி விடாதே-துள்ளிக் குதித்து தூயபணியாற்று!

வாக்காளர் பட்டியல் சரி பார்த்து விட்டாயா? தெருத் தெருவாகப் பிரித்து எழுதிவிட்டாயா? இன்னென்ன தெருவுக்கு இன்னன்னார் என்று குழுக்கள் அமைத்து அவர்பால் பொறுப்பை வழங்கிவிட்டாயா? வீட்டுக்கு வீடு 'சிலிப்' கொடுத்து விட்டாயா? விலாசம் மாறிய வாக்காளர்களின் கணக்கு தயாரா? இறந்துபோன வாக்காளர்கள், எழுந்து வராமல் பார்த்துக் கொள்ள கண்காணிப்பு செய்து விட்டாயா?

தேர்தல் வேடிக்கை பார்க்காதது மட்டுமல்ல; அந்த வேடிக்கை பார்க்க வருபவர்களையும் தயவு தாட்சண்ய மன்னியில் கடிந்து கொண்டு அவர்களைப் பணியாற்ற தக்க இடம் பார்த்து அனுப்பிட; ஏற்பாடுகள் செய்து விட்டாயா?

தேர்தல் நாளன்று பரபரப்பு அடைவதில்லை...பீதி அடைவ தில்லை-அமைதியான முறையில் ஆக்கப் பணிகளை ஆற்றுவேன் என்றுரைத்து அதற்கான திட்டங்களைத் தீட்டி விட்டாயா?

வீரனே! வெற்றி உன் பக்கந்தான்-என்று நாடே கூறுகிறது; எனினும் நீ காட்டுகிற ஒரு சிறு அலட்சியத்தால் உன் கைக்கு வரும் வெற்றிக்கனியைத் தட்டிப் பறித்திட முயல்வர்.

காமராஜர் பேசியிருக்கிறார்; பார்த்தாயா!

'மா நகராட்சித் தேர்தலில் காங்கிரசை வெற்றி பெறச் செய்து தமிழ் நாட்டுக்கு ஒரு நல்ல திருப்பத்தைத் தாருங்கள்'

இருபதாண்டு கால இருட்டறை வேதனைக்குப் பிறகு 1967 பொதுத் தேர்தலில் தமிழ் நாட்டில் ஏற்பட்ட நல்ல திருப்பத்தைக் காமராஜர் மறந்து விடவில்லை. ஆனாலும் காங்கிரசுக்கு ஒரு புதிய திருப்பம் தேவையென்று கருதுகிறார். அது அவருக்குள்ள கட்சிப் பற்று!

எப்படியாவது வெற்றி பெற வேண்டுமென்று அவர்கள் ஏதேதோ பேசுகிறார்கள்.

‘தி. மு. க. ஆட்சியில் தீபாவளியைக் கொண்டாட மக்களிடம் பணம் இல்லை என்பதை இந்த ஆண்டு காண்கிறோம்’

காமராஜர் திருவாய் மலர்ந்தருளிய பொருளாதாரத் தத்துவம்!

இதையெல்லாம் நினைத்து, சிரிக்கக் கூட நேரமில்லை உனக்கு.

உன் பணியினைத் துவக்கு-பம்பரமெனச் சுழன்றிடு-எறும்பெனச் சுறுசுறுப்பு காட்டிடு. 27 ஆம் நாளுக்குப் பிறகு ஓய்வெடுத்துக் கொள்ளலாம், இரண்டொரு நாளைக்கு.

ஓய்வின்றி உழைத்துப் பழகியவனே! ஒப்பற்ற செயல் வீரனே-ஓட்டுச்சாவடிக்கு வாக்காளர் புறப்படுவதற்கு முன்பு வரையில் அவர்களுக்கு “உதய சூரியன்” சின்னத்தை நினைவுபடுத்திடத் தவறாதே!

அதேபோல தோழமைக் கட்சிகள் போட்டியிடும் வட்டங்களில் அவர்களின் சின்னங்களை வாக்காளர்களுக்கு நினைவுபடுத்து!

ஏழைக் குடிசைகள் காங்கிரசாட்சியிலும் தீப்பிடித்து எரிந்திருக்கின்றன. முப்பது அல்லது நாற்பது ரூபாய் கொடுத்துவிட்டு; அதற்குமேல் கேட்டால் அதிகாரிகளை விட்டு மிரட்டினார்கள்.

இன்று சுமார் நானூறு ரூபாயில் கட்டித்தரும் எரியாத குடில்களை ஏளனம் செய்கின்றனர் காங்கிரசார்.

அவர்களுக்குப் புத்தி புகட்ட வேண்டாமா? புறப்படு தோழா புறப்படு!

முன்பெல்லாம் தேர்தல் என்றால் ஒரு குடிசைப் பகுதிக்கு நூறு பேரைக் கைது செய்து கூண்டிலே போடுவார்கள்.

ஏழை எளிய தாய்மார்கள் அது கண்டு அழுது புலம்புவார்கள். இன்றைக்கு எவ்வளவு அமைதியாகத் தேர்தல் நடைபெறுகிறது பாருங்கள் என்று குடிசை வாழ் மக்களிடம் எடுத்துக் கூறு;

இனியவனே!

இளஞ்சிங்கமே!

நீ எழுதிய வெற்றி வரலாறுகள் எத்தனை! எத்தனை!

‘சில பேர் மந்திரியாயிருக்கப் பல பேர் உழைப்பதா?’

இப்படிக் கேட்கிறார்கள் காங்கிரசின் முன்னாள் மந்திரிகள்!

அவர்கள் ஆண்டபோது தொண்டர்கள் பத்தாயிரம் பேர் மந்திரிகளாக இருந்தது போலவும் இவர்கள் பத்துப் பேர் கூட்டம் நடத்திக் கொடி கட்டியது போலவும் பேசுகிறார்கள்.

காங்கிரசின் கோள்மூட்டும் மாய்மாலப் பேச்சை உன் கால் தூசுக்குச் சமமாக்கு!

விழிகளை வெற்றி நோக்கிச் சங்கமமாக்கு!

அயராதே!

அயராதே!

அருமைத் தோழா!

நீ விளைத்த கழனி-நீ உழைத்த உழைப்பு-நம் கழகம்!

அந்தக் கழகம்

வெற்றி பல குவித்திட

விரைந்து செயலாற்று!

இதோ நானும் வருகிறேன்!

அன்புள்ள

மறவன்

(24-10-1968)

3. நிதானமாகப் பேசுங்கள்!

அன்புள்ள சுப்பிரமணியனாருக்கு;

"தமிழக ஆட்சியாளர்களிடம் இன்று நிறைய பணம் இருக்கிறது. பல்வேறு துறையில் சம்பாதித்த பணம், பல வசூலின் பணம், இவைகளும் இருக்கிறது. அதை வைத்து வெற்றிபெற முடியுமா என்று திட்டமிடுகிறார்களாம்."

மாநகராட்சித் தேர்தல் கூட்டத்தில் தாங்கள் பேசியதாக இன்று காலை காங்கிரஸ் ஏடொன்றில் வந்த மேற்கண்ட செய்தியைப் பார்த்தேன்.

ஆட்சியாளர்களிடம் இருக்கும் பணத்தை அரசாங்க இலாக்காவில் இருந்து எடுத்துத் தேர்தல் செலவுகளைக் கட்சிக்காகச் செய்யலாம் என்ற தங்கள் புதிய வாதம்; பொறுப்புள்ளவர்களின் வாதம் தானா?

தங்கள் வாதம் சரியானது என்றால் சுப்பிரமணியம் அவர்களே! இருபதாண்டு காலம் காங்கிரஸ் கட்சி தேர்தலுக்காகச் செலவழித்த பணமெல்லாம், மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களுக்காக ஒதுக்கப்பட்ட பணம் தானோ என்று கேட்கத் தோன்றுமல்லவா?

அரசாங்கம்-

அதற்குப் பல

இலாக்காக்கள்,

நிதி இலாக்கா

என்று ஒரு தனி இலாக்கா

அதற்கும் பொறுப்பான

அதிகாரிகள்

அதற்கான கணக்கு

வழக்குகள்.

இவ்வளவையும் மீறி, ஆட்சியாளர்கள் அரசாங்கப் பணத்தைத் தேர்தலுக்குச் செலவிடுவார்கள் என்று காங்கிரசிலேயுள்ள நாலாந்தரப் பேச்சாளர் பேசுவாரேயானால் அதனை அலட்சியப்படுத்தி விடலாம். ஆனால் தங்களைப் போன்ற பொறுப்பான நிலையிலே இருப்பவர்கள் பேசினால் இது வழக்கு மன்றத்திலே சந்தித்து முடிவு காணவேண்டிய விஷயமல்லவா?

திடீரென்று தி. மு. க. பணக்காரக் கட்சி ஆகிவிட்டது போலவும், காங்கிரஸ் பரம்பரையாகப் பஞ்சைகளின் கூடாரம் போலவும் தாங்களும், தங்கள் பெருந்தலைவர் காமராஜரும் தேர்தல் கூட்டங்களில் பேசுவதால் மக்கள் உங்களை நம்பி விடுவார்கள் என்று கனவு காண்கிறீர்களா?

காங்கிரசில் தாங்கள் அமைத்துள்ள குழுவின் போர்க்களத் தள நாயகர் யார்? பொள்ளாச்சி மகாலிங்கம் அல்லவா? அவர் என்ன பாவம்; அன்றாடங் காய்ச்சியா? தங்கள் கட்சி ஆண்டபோது 'அமுல்டின்' ஏஜண்டு எடுத்தவர்களுக்கு இன்று அம்பத்தூரிலே எழுபது கிரவுண்ட் நிலம் எப்படி வந்திருக்கிறது?

பஞ்சைக் கோலம் போடும் சுப்பிரமணியனார் அவர்களே! இந்த மாநகராட்சித் தேர்தலுக்கு காங்கிரஸ் பெற்றுள்ள பணத்தின் கணக்குத் தெரியாதா நாட்டுக்கு!

மதுரையிலிருந்து ஒரு பெரிய கம்பெனியார் ஐம்பதாயிரம் அனுப்பியுள்ளார்களாமே!

சூரக் கோட்டையிலிருந்து ஐயாயிரம் வந்துள்ளதாமே!

இரட்டைக் குழலார் ஐயாயிரம் அளித்துள்ளாராமே!

எப்படியோ ஒரு லட்சத்துக்கு மேல் சென்னை மாநகராட்சித் தேர்தலுக்காக நிதி திரட்டி வைத்துக் கொண்டு;

"தி. மு. கழகம், பணத்தை வைத்து வெற்றி பெற முடியுமா; என்று திட்டமிடுகிறது"

என்று தாங்கள் திருவாய் மலர்ந்தருளியுள்ளது; காங்கிரசின் கடந்த கால வரலாறு தெரிந்தவர்களை விலா நோகச் சிரிக்க வைக்கும் நகைச்சுவைப் பேச்சாகும்.

காங்கிரஸ், தேர்தலுக்காக எத்தனை கம்பெனிகளிடம் எத்தனை லட்சம் ரூபாய் நன்கொடை வாங்கியுள்ளது என்ற கணக்கு முன்பு பாராளுமன்றத்தில் பகிரங்கமாக அறிவிக்கப்பட்டதே! அதனை மறந்து விட்டீர்களா?

அய்யா, தமிழ் நாடு காங்கிரசு தலைவர் அவர்களே!

முந்திரா ஊழல் முப்பத்து முக்கோடி தேவர்களும் அறிந்த விவகாரம்.

அமீர்சந்த் பியாரிலால் விவகாரம் அதிலே சிக்கிக்கொண்டு தவித்த தவிப்பு- இதெல்லாம் ஈரேழு பதினாலு உலகமும் சிரிப்பாய்ச் சிரித்ததை யாரும் மறந்து விடவில்லை.

இந்த அழகில், "ஊழலை எதிர்ப்பவர்கள் நாம் ஒருவர்தான்; மற்றவர்கள் எல்லோரும் ஊழலுடன் கூட்டு!" என்று தாங்கள் பேசியிருக்கிறீர்கள்.

இந்த ஒன்றரை ஆண்டு தி.மு.க. ஆட்சியில் காங்கிரசார் நடத்திய கூட்டுறவு ஊழல்கள் எத்தனை கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன; எத்தனை வழக்கில் இருக்கின்றன என்ற பட்டியலைத் தாங்கள் ரகசியமாகக் கூடக் கேட்டறிந்தது கிடையாதா?

"முதலில் உன் கண்ணில் கிடக்கும் தூசியை எடு! பிறகு எதிரியின் கண்ணில் இருக்கும் தூசியை எடுக்கலாம்" என்பது முதுமொழி!

ஊழல்! ஊழல்!! என்று ஊரெல்லாம் பேசுகிறீர்களே; எதைப்பற்றியாவது ஆதாரம் அளித்ததுண்டா? சென்ற தேர்தலில் இப்படித்தான் "லாரி பேர ஊழல்" என்று நகரெங்கும் நோட்டீஸ் ஒட்டினீர்கள். நீதி மன்றத்தின் தீர்ப்பு என்ன ஆயிற்று? பேரமும் இல்லை-ஊழலும் இல்லை-என்று முடிவாயிற்று!

தேர்தலுக்காக எதை வேண்டுமானாலும் பேசலாம் என்ற முடிவுக்கு வராதீர்கள். நீங்கள் பொறுப்பு மிக்கவர்கள்.

ஆட்சியாளர்கள் அரசாங்கப் பணத்தை எடுத்துத் தேர்தல் செலவு செய்கிறார்கள் என்றால்;

"ஓகோ! அப்படிச் செய்யலாம்போலும்! இதுவரை

காங்கிரசார் அப்படித்தான் அரசாங்கப் பணத்தில்

தேர்தல் வாண வேடிக்கை நடத்தியிருக்கிறார்கள்.

அதனால் தான் இப்படிப் பேசுகிறார்கள்”

என்று-(கட்சியைப் பற்றிக் கவலையில்லை) அரசாங்கத்தைப் பற்றியே ஒரு தவறான முடிவுக்கு வந்துவிடுவார்கள்.

பாவம்! தாங்களும் வேண்டுமென்று பேசவில்லை. தங்களையும் மீறி வார்த்தைகள் தடுமாறுகின்றன.

பலகீனமான நேரத்தில் பதட்டம் ஏற்படத்தான் செய்யும். பரவாயில்லை; தேர்தல் முடிந்த பிறகாவது நிதானமாகப் பேசத் தொடங்குங்கள்!

அன்புள்ள

மறவன்

(25-10-1968)

4. உன்னால் முடிந்ததைச் செய்து விட்டாயா?

மாஜி நண்பா;

என் ஆருயிர் நண்பனுக்கே மடல் எழுதிப் பழக்கப்பட்ட கரம் இன்று மாஜி நண்பனாகிவிட்ட உனக்கும் எழுதித் தொலைக்க வேண்டியதாகி விட்டது.

இன்று காலை தொடங்கி உன்னால் முடிந்த அளவுக்குத் தேர்தல் வேலையை நடத்தி முடித்துவிட்டாய் அல்லவா?

உதயசூரியனுக்கு வாக்குக்கேட்டு முன்பெல்லாம் யார்யாரைச் சந்தித்தாயோ; எந்தெந்த வீடுகளுக்குப் போனாயோ அங்கெல்லாம் உதயசூரியனைத் துரோகத்தால் மறைத்துக் கொண்டு ஏதேதோ சின்னங்களுக்கு வாக்கு கேட்டாய் அல்லவா?

கழகத்தின் - தோழமைக் கட்சி வேட்பாளர்களுக்கு தேடித்தர அக்கட்சியினரின் தேர்தல் சின்னங்களை வாக்காளர்களிடம் அறிமுகப்படுத்தியவாறு உழைத்துக் கொண்டிருந்த நீ; இன்றைக்குத் துரோகத்தின் எல்லைக் கோடுவரையில் போய்விட்டாய் அல்லவா?

"தி.மு. க.வுக்கு வாக்கு அளிக்காதே!" என்று தெருத் தெருவாக ஒலிபெருக்கி வைத்துக் கூச்சல் போட்டு ஓய்ந்து விட்டாய் அல்லவா?

மாஜி நண்பனே! பழைய உறவு-பாசம்-நேசம்-அனைத்தையும் மறந்து விட்டு; பதவிப்பித்து தலைக்கேறிய காரணத்தால் பத்து நாட்கள் வெறியாட்டம் போட்டுத் தீர்த்துவிட்டாய் அல்லவா?

பேசத் தகாதவைகளையெல்லாம் பேசி-எழுதத்தகாத சொற்களையெல்லாம் எழுதி-உன் மன எரிச்சலைக் கொட்டிக் குவித்து விட்டாய் அல்லவா?

அண்ணன் அமெரிக்காவில் இருந்தால் என்ன-அறுவை சிகிச்சைக்குப் போனால் என்ன-அவர் மனம் எப்பாடு பட்டால்

எனக்கென்ன என்று; நீ நடத்த வேண்டிய விபீஷண வேலையை நடத்தி முடித்துவிட்டாய் அல்லவா?

மனம் குளிர்ந்ததா இப்போது! நாளைக்குத் தேர்தல் முடிவுகள் வெளிவரப் போகின்றன. அந்த முடிவுகள் எப்படியோ இருக்கட்டும்; ஆனால் நீ வளர்த்த கழகத்திற்கு நீ நேற்று வரை சேர்ந்திருந்த கழகத்திற்கு உன்னால் செய்ய முடிந்த தீங்குகளைச் செய்து முடித்து விட்ட திருப்தி ஏற்பட்டு விட்டதா?

வெளிப்படையாகக் கழகத்தை எதிர்த்து
வேலை செய்த மாஜி நண்பனே!
ஒளிந்திருந்து கழகத்தின் முதுகில்
குத்திய துரோக வடிவமே!

உங்களால் கழகத்திற்கு மலை அளவு வீழ்ச்சியை ஏற்படுத்தி விட முடியாது என்றாலும், கடுகளவு கஷ்டத்தைக் கூட நீங்கள் கழகத்திற்கு அளித்துவிட முடியாது என்றாலும், உங்கள் தொகை விரல் விட்டு எண்ணக்கூடிய அளவில் தான் ஒவ்வொரு வட்டத்திலும் உள்ளது என்றாலும்; நீங்கள் திடீரெனச் செய்த துரோகச் செயலை இதயம் உள்ளவர்கள் யாரும் தாங்கிக் கொள்ள முடியாது!

"என்ன நண்பா! துரோக வேலை முடிந்ததா?" என்று உன் நண்பன்; மொழியாலல்ல விழியால் கேட்பது விளங்குகிறதா?

இதோ உன் தாயார்; 'மகனே! தாய் போல் இருந்த அண்ணனுக்கு மாபாதகம் செய்து முடித்து விட்டாயா? இப்போது மகிழ்ச்சிதானே!' என்று கேட்பது காதில் விழுகிறதா?

எப்படியப்பா காது கேட்கும்? அதன் கர்ண பேரிகை கிழிந்து தான் பல நாளாகிறதே!

'அத்தான்! என்ன இருந்தாலும் அண்ணாவுக்கு நீங்கள் இப்படி துரோகம் செய்திருக்கக்கூடாது. வெளியே தலைகாட்ட முடியவில்லை. பக்கத்து வீட்டுக்காரர்கள் உன் கணவனுக்கு ஏன் இப்படி ஒரு கழுத்தறுக்கிற புத்தி வந்தது என்று கேட்கிறார்கள்'

என்று மனைவி அழுவது தெரிகிறதா? மாஜி நண்பனே! மதோன்மத்தனே! தலையைத் தொங்கப்போட்டுக்கொள்!

"அப்பா! கடைசியில் என்னை துரோகியின் மகன் என்று என் நண்பர்கள் எல்லாம் அழைக்கிற நிலையை உண்டாக்கி விட்டாயே! இதற்குத்தானா இந்த வீட்டில் பிறந்தேன்?"

என்று நீ பெற்றெடுத்த பிள்ளை தொடுக்கிற கணைக்கு என்ன பதில் தரப் போகிறாய்?

"தன்னால் கழகத்திற்கு என்ன லாபம் என்று எண்ணுபவனே உண்மையான தலைவன்-தொண்டன்! கழகத்தால் தனக்கு என்ன லாபம் என்று கணக்கிடுபவன் தலைவனுமல்ல; தொண்டனுமல்ல!"

இந்த உண்மையை உணர உன் பதவி வெறி இடம் கொடுக்க வில்லை.

எப்படியோ சில இடங்களில் கழகத்திற்குத் தொல்லை கொடுத்து விட்டோம் என்ற திருப்தியைத் தவிர வேறு என்னப்பா விளைவைக் கண்டு விட்டாய்!

இன்றோடு முடிந்து விட்டது உன் துரோகக் கதையின் ஆரம்ப அத்தியாயம்!

அடுத்து; நாளை நீ எங்கேயிருக்கப் போகிறாய்?

- கருங்காலி
- துரோகி
- வீடணன்
- மீர்ஜாபர்

இப்படிப்பட்ட துரோகிகளுக்குரிய அருமையான அடைமொழிப் பெயர்களோடு வலம் வந்து கொண்டிருப்பாய்!

மாஜி நண்பனே! மாநகராட்சித் தேர்தல், உன் வஞ்சக நெஞ்சத்தை வெளியிலே கண்ணாடிபோல் காட்டுவதற்குப் பயன்பட்ட வரையில் எனக்கு மகிழ்ச்சி!

உன்னைப் புரிந்து கொள்ளாமலேயே உன்னிடம் இவ்வளவு நாள் பழகிக் கொண்டிருந்த என்னை மன்னித்துவிடப்பா!

இங்ஙனம்
மறவன்
(27-10-1968)

5. நேர்மையும் பொறுப்பும் நீர்மேல் எழுத்தல்ல!

அன்பு நிறைந்த அண்ணனே!

தாங்கள் இங்கு இல்லாத சமயத்தில்-தங்களின் தங்கம் நிகர் யோசனைகளை நேரடியாகப் பெற்றுப் பணியாற்ற முடியாத நேரத்தில்-தங்கள் திருவுருவத்தைத் தியானித்தவாறு-விசாலமான தங்கள் ஒளி விழிகளின் எழிலை நெஞ்சில் பதித்தவாறு-தம்பிகளாம் நாங்கள் பெற்ற வெற்றியினை இதோ தங்கள் தாள்களின் முன் வைக்கிறோம்.

"மில்லர் தந்த மருந்தைவிட-பார்த்தசாரதியார் பரிவுடன் தந்த விருந்தைவிட-இனிக்குதடா தம்பீ; நீ தந்த வெற்றிச் செய்தி" என்று இதழின் கடைகோடிச் சிரிப்பால் தாங்கள் தெரிவிப்பதை பத்தாயிரம் மைல் தொலைவிலேயிருந்து எங்களால் காண முடிகிறது அண்ணா!

அப்பப்பா; காங்கிரஸ் தலைவர்கள் என்ன பேச்சுப் பேசினார்கள்-என்ன ஆட்டம் ஆடினார்கள்-என்ன எழுத்து எழுதினார்கள்.

> "தி.மு.க. ஆட்சிக்குப் பாடம் கற்பிக்க மாநகராட்சியில் காங்கிரசை வெற்றி பெறச் செய்யுங்கள்"

என்று முழங்கினார் காமராஜர்.

> "பாதயாத்திரைக்காரரே! அதுவும் பாதியாத்திரைக்காரரே! பாடம் பெறவேண்டியது நீங்கள்தான்"

என்று புத்தி புகட்டிவிட்டார்கள்.

> "மாநில அரசின் தவறுகளைக் கண்டிக்க மாநகராட்சியில் தி.மு.க.வை தோற்கடியுங்கள்" என்றார் பெருந்தலைவர்.

> "மாநகராட்சித் தேர்தலில் மாநில அரசின் தவறுகளைக் கண்டிக்கலாம் என்றால்; அதற்காகத் தண்டிக்கலாம்

அதுவும் ஒரு கேடா என்றால்; நாடு-"ஏடா!மூடா!" என்று நகைக்காதோ?

என வினா மூலம் விடையிறுத்துக் காங்கிரஸ் நண்பர்களுக்கு அறிவு புகட்டிவிட்டனர் அற்புதமான தீர்ப்பின் வாயிலாக!

அம்மவோ! என்னென்ன வசை மொழிகள்! எத்துணைத் தரக்குறைவான தாக்குதல்!

"இறந்துபோன தேவதாசுவின் உயிரை விட அண்ணா துரையின் உயிர் எந்த வகையில் மேலானது"

என்று ஒரு காங்கிரஸ் ஏடு கர்ண கடூரமாக எழுதியது; அதைப் படித்து, சுப்பிரமணியமே கூட கண்கலங்கிவிட்டாராம்! என்ன செய்வது; அவரால் அதையெல்லாம் கண்டிக்க முடியுமா என்ன?

அதைச் செய்தால் அவர் பாடே ஆபத்து!

வேடிக்கை தெரியுமா அண்ணா!

கல்கிகூட 'கார்ட்டூன்' போட்டது-

சாக்கடை நாற்றத்தில் ஒரு வேட்பாளர் மூக்கைப் பிடித்துக்கொண்டே ஓட்டுக் கேட்கிறார்.

குழாயில் தண்ணீர் சொட்டு சொட்டாக வருகிறது. அந்த சொட்டுத் தண்ணீருக்கு நாக்கை நீட்டிக்கொண்டு ஒரு 'கியூ' வரிசையே நிற்கிறது.

கொசுக்கடி பொறுக்க முடியாமல் வேட்பாளர்கள் கொசுவலையை நடமாடும் கூடாரமாக்கிக் கொண்டு அதற்குள்ளிருந்தவாறு ஓட்டுக் கேட்கிறார்கள்.

ஓட்டுக் கேட்கும் வேட்பாளர்கள் ஒருவருக்கொருவர் முட்டிக் கொள்கிறார்கள். வீதியெங்கும் விளக்கில்லாமல் அவ்வளவு இருட்டாம்!

இப்படியொரு கேலிச் சித்திரத் தொகுப்பு கல்கியில் தேர்தல் நேரத்தில் வெளிவந்தது. அதனைக் காங்கிரசார் தங்கள் ஏடுகளில் வெளியிட்டு மகிழ்ந்ததுமட்டுமல்ல; இரவோடு இரவாக ஏராளமான துண்டு நோட்டீசுகளாக அச்சடித்தும் வழங்கினர்.

ஆனால், அந்தக் கேலிச்சித்திரத்தையும் பார்த்து வேட்பாளர்களையும் சந்தித்த மக்கள் உண்மையைப் புரிந்து

கொண்டார்கள். சுதந்திரக் கட்சி வேட்பாளர்களைத் தோற்கடிக்க; சுதந்திரக் கட்சிக்குள்ளேயே யாரோ சிலர் 'கல்கி' அலுவலகத்தில் புகுந்து கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் அந்த உண்மை! ஏனெனில் "கல்கி கார்ட்டூன்", சுதந்திரக் கட்சி வேட்பாளர் நின்ற இடங்களில்தான் அதிகமாக விநியோகிக்கப்பட்டது.

எந்த வேட்பாளரும் மூக்கைப் பிடித்துக் கொண்டு 'அனுஷ்டானம்' செய்தவாறு ஓட்டுக் கேட்கவுமில்லை. கொசுவலை போட்டுக் கொண்டு ஓட்டு வேட்டையாடவும் இல்லை. தண்ணீருக்கு நாக்கை நீட்டிக் கொண்டு நிற்கவுமில்லை. இருட்டில் மோதிக் கொள்ளவும் இல்லை. கல்கிக்கு ஏதோ ஒரு விளையாட்டு என்று மக்கள் கருதிக் கொண்டார்கள்.

எதிர்ப்பு-ஏகடியம்-எல்லாவற்றையும் கடந்து வெற்றி பெற்றுவிட்டோம் அண்ணா;

இடையில் கழகக் கட்டுப்பாடு மீறிய நண்பர்கள்-தங்கள் துரோகச் சிந்தையின் மூலம் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கழகத்திற்குச் சிறுசிறு தொல்லைகள் கொடுக்க முடிந்ததே தவிர, கழகத்தின் மொத்த வலிவின் முன்னால் அவர்கள் பொட்டுப் பூச்சிகளாய்-புன்மைத் தேரைகளாய்-புழுதியில் போய் மறைந்து கொண்டார்கள்.

இந்த வெற்றிக்காகத் தரப்பட்டுள்ள உழைப்பை-பம்பரமெனச் சுழன்று பணியாற்றிய தொண்டர்களின் உணர்வை-வென்றவர்கள் மறந்துவிடாமல் தொண்டாற்றிட வேண்டும் என்பதுதான் வெற்றி தந்த வாக்காளர்களின் வேண்டுகோளாகும்.

தங்கள் எண்ணமும்-தமிழகத்தின் எண்ணமும் கூட அதுவே தானே அண்ணா!

வெற்றி பெற்றவர்களுக்குப் பொறுப்பு அதிகம். அந்தப் பொறுப்பினை உணர்ந்து கடமையாற்ற வேண்டுமென்ற நினைவு-

வென்ற நேரத்தில் இருந்தால் மட்டும் போதாது. எந்த நேரத்திலும் இருந்திட வேண்டும்.

அந்த நினைவும்
நேர்மையும்
பொறுப்பும்
பொதுப்பணி ஆர்வமும் -

வெற்றி பெற்ற இன்று போல் என்றும் விளங்கிடுமாறு உறுதியெடுத்துக்கொண்டு தாங்கள் இருக்கும் திக்குநோக்கி வணக்கம் செலுத்துகிறார்கள் வாகை சூடியவர்கள்!

உறுதி; நீர்மேல் எழுத்தல்ல –

கல்மேல் எழுத்தாக்க

அண்ணனே; தங்கள் கட்டளைக்குக் காத்திருக்கிறது கழகம்.

தங்கள் தம்பி

மறவன்

(29-10-1968)

6. வெற்றி பெற்றவனே உன் வேலை என்ன?

அனபு நணபா,

வெற்றி பெற்ற மகிழ்ச்சியில் திளைத்திருக்கும் உன்னை வாழ்த்துகிறேன். உன் வெற்றிக்குக் காரணமானவர்களை யெல்லாம் கரங் கூப்பித் தொழுகிறேன். உன்னை மாநகராட்சி மன்ற நாற்காலியில் உட்கார வைப்பதற்காகப் பாடுபட்ட உத்தமத் தொண்டர்களின் உழைப்புக்கு நன்றி செலுத்துகிறேன். அவர்கள் இரவு பகல் அலைந்து திரிந்து கண் துஞ்சாது கருமமே உயிராய்க் கொண்டு உன் கழுத்தில் வெற்றி மாலையை சூட்டியிருக்கிறார்கள். அந்த வாகைமாலை தொடுப்பதற்கு அவர்கள் மலர் பறித்த போது குத்திய முட்கள் எத்தனை? மாலை தொடுக்கும் நாராகத் தங்கள் நரம்புகளை அவர்கள் ஈந்திருக்கிறார்கள் என்பதை மறந்துவிடாதே நண்பா!

பதவியின் மூலம் பணி புரியும் வாய்ப்பு ஒன்றைக் கழகம் உனக்கு அளித்திருக்கிறதேயல்லாமல் அந்தஸ்து எனும் அலங்கார மகுடத்தை உன் தலையில் தூக்கி வைத்திருப்பதாகத் தயவுசெய்து எண்ணிக் கொள்ளாதே! நீ, ஏழை எளியவர்களுக்காகப் பாடுபடத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாய். வசதியற்ற மக்களோடு அவர்களது தொல்லையைப் பகிர்ந்து கொண்டு தொண்டாற்றுவதற்காக உன்னை வெற்றி பெறச் செய்திருக்கிறார்கள்.

“எனக்குப் பதவி வந்துவிட்டது பார்த்தாயா? அதற்கு அடையாளம் பட்டுச் சொக்காயும் பளபளப்பான வேட்டியும் கண்டாயா?” என்று மினுக்கித் திரிவதற்கு அல்ல; மேனியைச் சந்தனம் போல் கழகத் தொண்டர்கள் தேய்த்து உனக்குப் பதவி தந்திருப்பது!

அதைப் புரிந்து கொள்!

அண்ணன் உள்ளத்தைத்

தெரிந்து கொள்!

அவர் எவ்வளவு எளிமையானவர். எவ்வளவு தொண்டுள்ளம் படைத்தவர். அவருக்குத் தம்பி என்று சொல்லிக் கொள்ள அந்த எளிமை இயல்பு; தானாக வரவேண்டாமா உனக்கு!

வராது என்ற முடிவில் அல்ல; வரவேண்டும் என்ற ஆசையில் கூறுகிறேன்.

உனக்கு வழங்கப்பட்டுள்ள வாய்ப்புக்குப் பதவி என்று பெயர். அது, மக்கட் பணியாற்ற உன் கையில் தரப்பட்டுள்ள கருவி.

தோழமைக் கட்சியின் துணையோடு அமையப் போகும் மாநகராட்சி தி.மு.க. நிர்வாகத்தில் நீ பலமான போட்டி போட வேண்டும்.

எதற்கு; நண்பா! எதற்கு?

மேயர் பதவிக்கா?

கமிட்டித் தலைமைக்கா?

வேறு பொறுப்புக்கா?

அல்ல! அல்ல!

அதுவல்ல நான் எழுத வந்தது.

பொதுப்பணியாற்றுவதில் போட்டிபோட வேண்டும். யாரோ பணியாற்றட்டும்-எவரோ விதைக்கட்டும்-எவரோ உழைக்கட்டும்-எவரோ வியர்வை சிந்தட்டும்-நமக்குப் பதவியும் அந்தஸ்தும் அடுக்கடுக்காய் அறுவடையானால் போதும் என்ற போட்டிக்கு முந்தாதே!

நீ, நகராட்சியின் உறுப்பினர். உன் வட்டத்தில் குண்டு குழிகளாய் இருக்கும் சாலைகளைச் சீர்திருத்த வேண்டிய வேலையில்-பக்கத்து வட்டத்து உறுப்பினரோடு போட்டி போடு!

தெருவில் தேங்கியிருக்கும் கழிவு நீரை அகற்றுவதில்-அடுத்த வட்டத்து உறுப்பினரோடு போட்டி போடு!

உன் வட்டத்தைக் கண்ணாடிபோல் ஆக்க-வசதி வளங்கள் மிக்கதாய் ஆக்க-எதற்கும் துணிந்து மற்றவர்களோடு போட்டி போடு! இந்தப் போட்டியில் உனக்குப் புகழ்தான் குவியும்.

நீ போட்டி போடக் கூடாதன சில உண்டு நண்பா-

- ❖ வராத பதவியை வலியுறுத்திப் பெறுதல்.
- ❖ கையைக் கறையாக்கிக் கொள்ளுதல்.
- ❖ காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள எண்ணுதல்.

இது போன்ற வகைகளில்; போட்டியை நீ-கனவிலும் கருதாதே; நண்பா!-கனவிலும் கருதாதே!

அந்த நம்பிக்கையோடுதான் மக்கள், உன்னையும் உன்னைச் சார்ந்தவர்களையும் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

நீ, மாநகராட்சி மன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள நேரம் பொன்னான நேரம்!

இரண்டாண்டு காலமாகத் தமிழகத்தில் தி.மு.க. அரசு நடைபெறுகிறது. தமிழகத்தில் பல்வேறு பகுதிகளில் மட்டுமின்றிச் சென்னையிலும் அது ஏழை எளியவர்கள் வாழ்வை மனதில்வைத்துச் செயல்பட்டு வருகிறது.

29ந் தேதி **'நவமணி'** இதழே எழுதுகிறது பார்!

"ஏழை மக்களுக்குத் தி.மு.க. ஆட்சி, நன்மை செய்யவில்லை என்று சொல்ல முடியாது. ரூபாய்க்கு ஒரு படி அரிசி போடும் திட்டமும் பல நேரங்களில் உயர்ந்த ரக முதல் தர ரக அரிசியையே ஏழை மக்களுக்கு ரூபாய்க்கு ஒருபடி அரிசியாகக் கழக ஆட்சி போட்டது. ஏழை மக்களுக்கு மலிவான விலையில் சத்தான பால் விற்க அரசு ஏற்பாடு செய்தது. மர்மத் தீ விபத்துக்களால் பாதிக்கப்பட்டு குடிசை இழந்த மக்களுக்கு தீப்பிடிக்காத வீடுகளை தி.மு.க. ஆட்சிதான் கட்டித் தந்திருக்கிறது. பஸ் கட்டணச் சலுகை, பார்வை இழந்தோர், அங்கஹீனர்களுக்கு அரசாங்க பஸ்களில் இலவச பஸ் சவாரி போன்றவைகளைச் செய்து கொடுத்தது."

இப்படிப் பலரும் பாராட்டும் ஏழைகளின் அரசு அண்ணா தலைமையில் அமைந்துள்ளது. அதற்கு முன்பு மாநகராட்சியின் திட்டங்கள் எதையும் காங்கிரஸ் அரசு ஏற்றுக்கொண்டதில்லை. காரணம்; நகராட்சியில் தி.மு.க. நிர்வாகம்! முன்பே காவிரி நீரை கொண்டுவரும் திட்டத்தைப் பழைய அரசு ஏற்றுச் செயல்படுத்தியிருந்தால் நீ, வாக்கு கேட்கப் போகும்போது "தண்ணீர்ப் பஞ்சம்" பற்றிய பிரச்சனையையே வாக்காளர்கள் எழுப்பியிருக்க மாட்டார்கள். நாம் அரசுப் பொறுப்பை ஏற்ற

பிறகு ஒரு ஆண்டுகாலமாக முயற்சித்து இப்போது காவிரி நீர்த் திட்டத்திற்கான அனுமதியைத் திட்டக் குழுவிடம் பெற்றிருக்கிறோம். கூவம் சீர்திருத்த வேலையினைத் தொடங்கியிருக்கிறோம். நகராட்சி நல்ல வகையில் இயங்கப் புதிய அரசு அக்கறை கொண்டிருக்கிறது.

அதனால்தான் சொல்கிறேன், இந்தப் பொன்னான நேரத்தைப் பயன்படுத்திக்கொண்டு, சென்னை நகரை மேலும் சீராக்கிடு! செழிப்பாக்கிடு! செம்மையாக்கிடு!

பழைய 91வது வட்டம் (இப்போது 111, 112) பழைய 96வது வட்டம் (இப்போது 115, 116) ஆகிய வட்டங்களில் இது வரையில் காங்கிரசு உறுப்பினர்கள் இருந்தனர். போய்ப்பார் அந்த இடங்களை! புதைக்குழிகள் போன்ற பள்ளங்கள் பாதைகளில்! மற்றும் பல வசதிக் குறைவுகள்! தங்கள் வட்டங்களின் தேவைகளை எடுத்துச் சொல்லவே அவர்களுக்கு நினைப்புமில்லை. நேரமும் இல்லை! அந்த நினைப்பும் நேரமும் காங்கிரசுகாரர்களுக்கு இருக்கிறதோ இல்லையோ உனக்கு நிச்சயமாக இருக்க வேண்டும்.

மாநகராட்சி எல்லா வட்டங்களையும் பொதுவாகக் கவனிக்க வேண்டும் எனினும், அதனைத் துரிதப்படுத்தவும் முறைப்படுத்தவும் தான் உன்னைப் போன்றவர்கள் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். நிர்வாகம் ஒழுங்காகச் செயல்பட நீ தூண்டு கோலாக இரு! அதோடு நீயும் தூய்மையாக இரு!

உன் வெற்றிக்காகப் பாடுபட்ட கழகத்தொண்டர்களைக் கருவேப்பிலையாக்கிவிடாதே! அவர்கள்தான் கழகத்தின் அச்சாணி-சிலர் இருந்தனர் துரோகிகள்! அவர்கள் அகற்றப்பட்டுவிட்டனர். அதில் மிச்சமிருப்போர் போய்விடுவர். விலக்கப்பட்டவர்களைக் காங்கிரசார் வலை கொண்டு தேடுகிறார்களாம்.

கழகத்தை உயிராய் மூச்சாய் இதயமாய் எண்ணிச் செயல்பட்டு வெற்றிக் கொடி நாட்டிய ஆற்றல் மறவர்களை உன் ஆயுள் உள்ள வரையில் நெஞ்சத்திலிருந்து அகற்றிவிட, விளையாட்டாகக்கூட நினைக்காதே!

உன்னை நம்பி வாக்களித்த மக்களை ஒவ்வொரு நாளும் பார்க்கத் தவறாதே!

வட்டத்தை வண்டுபோல் சுற்றிச் சுற்றி என்ன வசதி வேண்டும் எனக் கேட்பாய் என்றுதான் உன்னைத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள்.

தேர்தலுக்காகப் பாத யாத்திரை தேவையில்லை! தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு பாத யாத்திரை தேவை. சைக்கிளில் போனாலும் பாதகமில்லை. கைமாறு கருதாமல் கடமையாற்றும் கழகக் கண்மணி யென்று நீ பெயர் வாங்குவாய் என்று தெரியும்.

இருந்தாலும்;

நகுதற் பொருட்டன்று நட்டல்-மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தல் பொருட்டு.

என்ற குறளை-நண்பன் என்ற முறையில் உனக்கு நினைவு படுத்துவதில் தவறில்லை அல்லவா?

வெற்றி பெற்ற உனக்கு இன்று எழுதிவிட்டேன்-நாளை; தோற்றுவிட்ட தோழனுக்கு மடல் தீட்டுகிறேன்.

அன்புள்ள,

மறவன்

(30-10-1968)

7. தோற்ற முயலே! முன்போல சுறுசுறுப்பாக இரு!

அன்பு நண்பா!

மாநகராட்சித் தேர்தலில் 96 இடங்களில் போட்டியிட்டுக் கழகம் 54 இடங்களைப் பெற்றிருக்கிறது; 42 இடங்களை இழந்திருக்கிறது. தோழமைக் கட்சிகள் 24 இடங்களில் போட்டியிட்டு 14 இடங்களைப் பெற்றிருக்கிறது. 10 இடங்களை இழந்திருக்கிறது. பெரும்பான்மை பலம் கூட்டணிக்கு இருக்கிற தென்றாலும்; மேலும் எட்டு ஆதித்திராவிடத் தோழர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பலம் பெருகிடும் என்றாலும்; சென்னை மேயர் நம்மவர்தான் என்றாலும்; நீ உன் வட்டத்தில் வெற்றிக்கான வாய்ப்பை இழந்தது உன்னால் தாங்கிக்கொள்ள முடியாததுதான்.

“புரூடஸ்! நீயுமா?” என்று கட்டாரிக் குத்தை முதுகிலே தாங்கிக்கொண்டு, ரத்த நீர்வீழ்ச்சி போல் நின்ற ஜூலியஸ் சீசர் வேதனையோடு கேட்டான்.

அப்படிச் சிலரைப் பார்த்து நீ கேட்க வேண்டியிருந்தது.

அண்ணன் தலையைக் கொய்து வருபவர்க்கு ஆயிரம் பொன் பரிசு என அறிவித்தான் குமணன் தம்பி இளங்குமணன்.

அவனையேகூட நல்லவனாக்கிவிட்ட தம்பிகள் சிலர் நமது அண்ணனுக்கு இருந்திருக்கிறார்கள் என்பதை 1960-ஆம் ஆண்டிலும் கண்டோம்; இப்போது இந்த மாநகராட்சித் தேர்தலிலும் கண்டோம்.

அவர்களின் துரோகத்தால் நீ வெற்றி பெற முடியாமல் போய்விட்டது. நீ, தோல்வியால் துவண்டுபோய் மூலையில் உட்கார்ந்துவிடமாட்டாய் என்பதை நான் அறிவேன்.

காஞ்சி மண்ணில் நமது அண்ணன் தோல்வி கண்ட போது என்ன சொன்னார் 1962 இல்!

"நான் தோற்றதாக எண்ணவில்லை. ஐம்பது பேர் உருவிலே நான் சட்டமன்றத்திற்குச் செல்வதாகவே கருதுகிறேன்"

இப்படிச் சொன்னவருக்குத் தம்பியப்பா நீ! 67இல் ஆட்சிப் பொறுப்பைப்பறி கொடுத்துவிட்டு,

"அய்யோ போச்சே!

அம்மா போச்சே!

அந்தஸ்து போச்சே!

ஆடம்பரம் போச்சே!

பதவி போச்சே!

பவிஷு போச்சே!"

என்று அலறிக் கொண்டு கிடக்கிறார்களே; மாஜி மந்திரிகள் சிலரும்-காலமெல்லாம் பதவியில் இருப்போம் எனக் கனவு கண்டு கவிழ்ந்துவிட்ட பலரும் - அவரைப் போன்ற எரிச்சல் உள்ளமா உனக்கு?

இல்லை! இல்லை! எழுச்சி உள்ளம் படைத்தவன் நீ! உன் தோல்விக்காகக் கவலைப்படுவதை மறந்து விட்டுத் தோல்விக்கான காரணங்களைச் சிந்தித்துப்பார்.

அந்த வீதியில் நூறு ஓட்டு போய்விட்டது. இந்த வீதியில் எழுபது ஓட்டுக்களை அழைத்து வராமல் விட்டு விட்டோம். இவைகள் பேசத் தக்க காரணங்கள் என்றாலும் பேசிக்கொண்டேயிருக்கக்கூடிய காரணங்கள் அல்ல.

துரோகிகள் செய்த சதியால் சில வாக்கு வித்தியாசத்தில் வெற்றிக்கான வாய்ப்பை இழந்தேன். அது உண்மைதான் என்றாலும்-ஊரறியும் அந்தக் காரணத்தை என்றாலும் அந்தத் துரோகத்தையும் கடந்து வெற்றிபெற முடியாமல் போனது ஏன் என்று ஆர அமர சிந்தித்துப்பார்.

நாம் தேர்ந்தெடுக்கப்பட்ட வட்டத்திற்கு சரிவர வேலை செய்யாமல் இருந்து விட்டோமா?

இந்தக் கேள்விக்கான பதிலை உன் மனச்சாட்சியிடம் கேட்டுக்கொள்.

பம்பரம்போல் பணியாற்றி வட்டத்தைச் செம்மைப் படுத்தியிருக்கிறேனே என்று கூறுவாயானால்-

"உன்னைப் பதவியில் அமர்த்திய கழக அமைப்பில் உள்ளவர்களைப் பகைத்துக் கொண்டாயா? அவர்களை அலட்சியப்படுத்தினாயா? அதனால் அவர்கள் உன்னை அலட்சியப்படுத்தி விட்டார்களா?"

அப்படி அவர்கள் செய்திருந்தால் நீ செய்த குற்றத்திற்கு அவர்கள் கழகத்தைத் தண்டிக்க முனைந்தது பெரும் பாதகம் என்பதை நல்லோர் உணர்வர்!

அவர்கள் அந்தப் பாதகர் பட்டியலில் இடம் பெறுவர் எனினும்; அந்தப் பட்டியல் பெருகிடும் வண்ணம் நீ நடந்து கொண்டிருந்தால்; அந்த உன் போக்கும் கழகத்தின் வலிவைக் குறைத்திடும் என்பதை உணர்ந்து நீயே உன் தோல்விக்கு ஒரு காரணம் ஆகிவிட்டாய் என்பதையும் கணக்கிலெடுத்து சிந்தித்துப் பார்.

தோற்றுவிட்டதால் உனக்கும் நீ எதிர்பார்த்த பதவிக்குமுள்ள தொடர்புதான் அறுந்துவிட்டது.

பதவி என்றால் என்ன?

பணி புரிய ஒரு வாய்ப்பு!

அந்த வாய்ப்பைப் பதவியில் இல்லாமலேயே கூடப் பயன்படுத்திக் கொள்ளலாம் அன்றோ?

நீ தோற்றுவிட்டாலும்; உனக்காக வாக்களித்தவர்கள் உன் வட்டாரத்தில் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள். அவர் களுக்காகவும்-பொதுவாக உன் வட்டத்தின் மேன்மைக்காகவும் பணியாற்றுவதே உன் கடமை உணர்ச்சிக்குத் தக்க சான்று!

சென்ற முறை தோற்றுவிட்ட தோழர்களைப் பார்த்தாயா? வெற்றி பெற்ற காங்கிரஸ்காரர்கள் கவுன்சிலராக இருந்து பணியாற்றியதைவிடப் பன்மடங்கு பணிகளை அந்த வட்டாரத்தில் நிறைவேற்றியிருக்கிறார்கள்.

அதனால் இந்த முறை அதிகாரப்பூர்வமான கவுன்சிலராகி விட்டார்கள்.

நீ சுழன்று சுழன்று சுறுசுறுப்பாகப் பணியாற்றிக் கொண்டே இரு! பதவிகள் உன்னைத் தேடிவந்து காலடியில் விழும்.

நீ பதவிக்காகக் கழகத்தில் சேர்ந்தவனல்லவே!

சிறை செல்ல,

சித்ரவதைகள் அனுபவிக்க,

அடக்குமுறையை ஏற்க,

அராஜகத்தைத் தாங்கிட,

உறுதி கொண்ட உள்ளத்தோடு கொடி தூக்கி உழைக்கத் தானே புறப்பட்டாய்.

நீ பட்ட பாடுகள் கொஞ்சமா?

நீ ஏற்ற கொடுமைகள் குறைவானதா?

காங்கிரசார் ஆண்டபோது தேர்தல்கள் நடைபெற்ற முறையை நாடு அறியாதா?

குடிசை பகுதியில்-

இரவோடு இரவாகப்

போலீசார் நுழைவர்-

ஒன்று இரண்டு

பத்து நூறு என்று

பகுதிக்குப் பகுதி ஏழை எளியவர்களை வேட்டையாடி கழகத்திற்கு உழைக்கும் உன்னையும் உன் தோழர்களையும் வேனிலே ஏற்றிச் செல்வார்கள்.

சென்னையில் மட்டும் ஒரு தேர்தலுக்கு ஐயாயிரத்துக்குக் குறையாதவர்கள் சிறைப் பிடிக்கப்படுவார்களே!

அப்போதுதானே நண்பா; நீ திடமனதுடன் நின்று வெற்றிச் செய்திகளைத் திரட்டிக் கொடுத்தாய்!

இப்போதுதான் என்ன வந்து விட்டது. எதிர்பார்த்த சில இடங்கள் கிடைக்கவில்லை, அந்த இடங்களில் உன் இடமும் ஒன்று. கிடைத்த இடங்களில் நீதான் வெற்றி பெற்றிருக்கிறாய் என்பதை மறந்து விடாதே.

உன் வெற்றிக்குக் குந்தகம் புரிந்தவர்கள் என்னதான் ஆயிரம் காரணங்களை அடுக்கிக் காட்டினாலும்-உன் மீது கோடி கோடிப் பழிகளைச் சுமத்தினாலும்-அவர்கள் கழகத்திற்குச் செய்த நேரிடையான-அல்லது மறைமுகமான பாதகத்திற்குப் பதில் சொல்லித்தான் தீரவேண்டும். நமக்கல்ல; அவர்கள் மனச்சாட்சிக்கு!

கழகக் கண்மணியே! களையெடுக்கப்பட்ட கழனியில் கம்பீரமாக நிற்கும் உழவனைப்போல் நீ நிற்கிறாய்.

நீ விளைத்த பயிர் வளர்ந்தோங்கும் காட்சியினைப் பார்த்தவாறு நிற்கிறாய்.

நீ இறைத்த ரத்தம், வாய்க்கால் வழியோடி இந்த இலட்சியப் பயிர் பூங்கதிர் விட்டுக் குலுங்கி நிற்கிறது.

பூச்சிகள் விழாமல் மருந்து தெளிப்பதிலேயிருந்து-மாடுகள் மேயாமல் காவலிருப்பதிலேயிருந்து-எல்லாமே உன் வேலைதான்!

அந்த வேலைக்கு அச்சாணி; மக்கள் பணி-உன் கழகம் ஏழை எளிய நடுத்தர மக்களின் இயக்கம்-செட்டிநாட்டரசர் உன்னைப் பார்த்து சிரித்து மகிழ்வார். ஆனால் அவர் 'செக்' போகும் திக்கு-காங்கிரஸ் மாளிகைக்குத்தான்! அது உனக்குத் தேவையில்லாததுங்கூட!

"வாக்கு எண்ணிய பிறகே-எத்தனை இடம் என்று சொல்ல முடியும்"

என்று முதல் நாள் சொன்ன சுப்பிரமணியம்; முடிவு தெரிந்த பிறகு "நான் அப்போதே நினைத்தேன், ஐம்பது இடம் வருமென்று" என தீர்க்கதரிசி வேடம் போடுகிறார்.

120 இல் ஐம்பத்திரெண்டை வென்றவர்கள் "வெற்றி வெற்றி!" என்று குதிக்கிறார்கள். அவர்கள் கணக்கில் அது பெரும்பான்மை!

ஆரம்பத்தில் எவ்வளவு பலகீனமாகத் தங்களைப்பற்றி எண்ணியிருந்தால் 52 கிடைத்ததும் இப்படி மகிழ்வார்கள் என்பதை நினைத்துப் பார்!

அவர்கள் தங்களைப் பலகீனமாக நினைத்து எதிர்பார்த் ததைவிட அதிகம் பெற்றார்கள்.

நாம் முயலைப் போல் கொஞ்சம் தூங்கிவிட்டோம்- நல்லவேளை; ஆமை நம்மைத் தாண்டிப் போவதற்குள் விழித்துக் கொண்டோம்!

ஆனால் உன் வட்டத்தைப் பொறுத்த வரையில் முயலும் ஆமையும் கதை முழுக் கதையாகவே முடிந்துவிட்டது!

அதனால் ஆமை முயலாகிவிடுமா?-

ஆகாது; ஆகவே ஆகாது!

முயலே! முன்போல சுறுசுறுப்பாக இரு! துடிப்போடு செயலாற்று!

தொண்டுள்ளம் உன் சொத்து-

பண்புள்ளம் உன் செல்வம்-

அதனை மறவாமல் உன் வழக்கமான கழகப் பணியை அனைவருடனும் கூடி ஒற்றுமையாக நிறைவேற்ற உறுதி எடுத்துக்கொள்!

அன்புள்ள

மறவன்

(31-10-1968)

8. "தீராதி தீரர்- தேசீய மகிபர்- பராக்! பராக்!"

அன்பு நண்ப,

"ஜமீன்தார் ஜாகீர்தார் நம்மிடமில்லை. மிட்டா மிராசுகள் நம்மிடமில்லை ஆலை அரசர்கள்-பண முதலைகள் நம்மிடமில்லை. இதற்குக் காரணம், நாம் ஏற்றுக் கொண்டுள்ள சமதர்ம லட்சியந்தான்."

இப்படியொரு வாசகம் எந்த ஏட்டிலே வெளி வந்திருக்கும் என்று நீ கருதுகிறாய்? இந்த வாசகத்தை தீட்டி வெளிவந்துள்ள ஏடு எது என்று ஒரு கேள்வியைக் கேட்டு பரிசுப் போட்டி ஒன்று வைத்தால்; அந்தப் போட்டியில் கலந்து கொண்டு விடை எழுதிய ஒருவர்கூட சரியான பதிலைச் சொன்னதற்காகப் பரிசுபெற முடியவே முடியாது.

காரணம் என்ன?

இந்த வாசகத்தைப் படிக்கிற யாருக்கும்;

"இது நம்நாடு இதழில் வந்திருக்கும்"
"அல்லது முரசொலியில் எழுதப்பட்டிருக்கும்"
"மாலைமணி ஏட்டில் வெளியிடப்பட்டிருக்கும்"
"மறவன் மடலில் தீட்டப்பட்டிருக்கும்"
"ஒருவேளை ஜனசக்தியாக இருக்கும்"

என்ற வகையிலேதான் பத்திரிகைகளின் பெயர்கள் நினைவுக்கு வரும்.

அதனால், இவைகளில் ஏதாவது ஒரு பத்திரிகையின் பெயரைக் குறிப்பிடத்தான் பொதுவாக எண்ணம் தோன்றும்!

நீ கூட நண்பா; அப்படித்தானே நினைக்கிறாய்!

சொன்னால் ஆச்சரியப்படுவாய்!

உலகில் எத்தனையோ ஆச்சரியங்கள் நடக்கின்றன. பெண் ஆணாக மாறிவிட்டாள் என்று செய்தி வருகிறது. பரங்கிக் கொடியில் ஒரு பூவின் தோற்றம் ஆதிசேஷன் பாம்பைப் போல் இருக்கிறது; அதற்கு மக்கள் பூஜை செய்கிறார்கள் என்று பரபரப்பாகச் செய்திகள் வெளியிடப்படுகின்றன. அவைகளில் அடையும் வியப்பைவிட நான் சொல்லும் தகவலைக் கேட்டு நீ அதிக வியப்படைவாய்!

தவளைகள் எல்லாம் ஒரு மாநாடு போட்டு, எங்களிடத்தில் மழைக்காலத்தில் கத்துவோர் யாருமில்லை என்று பேசினால் எப்படியிருக்கும்?

பெருச்சாளிகள் எல்லாம் ஒன்றுகூடி "நாங்கள் பிறர் பொருளைச் சுரண்டி வாழ்வதே கிடையாது" என்று பெருமை பேசினால் எப்படியிருக்கும்?

அதில் நீ பெறுகிற வியப்பைவிட இப்போது தரப் போகிற தகவலைக் கண்டு பெரும் வியப்படைவாய் என்பதில் சிறிதும் சந்தேகமில்லை.

மீண்டும் பத்திரிகை வாசகத்தைப் படித்துப்பார்!

"ஜமீன்தார் ஜாகீர்தார் நம்மிடமில்லை,

மிட்டாமிராசுகள் நம்மிடமில்லை.

ஆலை அரசர்கள் – பண முதலைகள்,

நம்மிடமில்லை. இதற்குக் காரணம் – நாம்

ஏற்றுக் கொண்டுள்ள சமதர்ம லட்சியந்தான்!"

இந்த முத்தான வார்த்தைகளை வடித்தெடுத்து வாரித் தெளித்துக் கொட்டை எழுத்துக்களில் விளம்பு கட்டிப் போட்டிருப்பது காங்கிரஸ் கட்சியின் ஒரு மாலை ஏடாகும்.

வேங்கை, வேதாந்தம் பேசிக் கேட்டிருக்கிறாயா? கேட்டிருக்கமாட்டாய்! கேட்டிருக்க முடியாது! ஆனால், இதோ அரசியலில் அந்த அற்புதம் நிகழ்கிறது!

'கனிவு' என்ற தலைப்பில் கரடியார் பேசுகிறார். காட்டில் காண முடியாத விளம்பரத்தை, நாட்டில் காணுகிறோம் இப்போது!

காங்கிரசில் ஜமீன்தார் ஜாகீர்தார் இல்லையாம்-மிட்டா மிராசுகள் கிடையாதாம்-ஆலை அரசர்கள், பண முதலைகள் அறவே இல்லையாம்!

"காங்கிரஸ் கட்சியின் மேலவை உறுப்பினர் ராஜா முத்தையா செட்டியார்; பாவம் - காலையிலே கிளம்பி வேலைக்குச் சென்று நாளெல்லாம் அலைந்தால்தான் ஏதோ ஒரு நாளை நகர்த்தலாம்!"

"புதுக்கோட்டை ராஜா சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார். அவரும் அப்படியே!"

"பொள்ளாச்சி மகாலிங்கத்துக்கு ஒரே ஒரு ஓட்டை லாரி! ஒரே ஒரு தள்ளு மாடல் பஸ்! இந்த இரண்டும்தான் அவரது குடும்பத்தைக் காப்பாற்றுகிறது-அவரும் பாவம்; மிகமிக ஏழை!"

"வடபாதிமங்கலத்தாருக்கு; ஏதோ, ஒரு காணியோ, ஒன்றரைக் காணியோ தரிசு நிலம் கிடக்கிறது! அதற்குத் தண்ணீர் கூடப் பாய்வதில்லை. அவ்வளவு கஷ்டமான குடும்பம் அவருக்கு!"

"ராஜம் ராமசாமி - ஒயர்மேனாக இருக்கிறார்! ஹாஜா ஷெரீப்பு துறைமுகத் தொழிலாளி!"

இப்படியெல்லாம் காங்கிரசு ஏடுகள் எழுதினாலும் அதில் அதிர்ச்சியடைவதற்கு ஒன்றுமில்லை.

உச்சவரம்பு சட்டத்திலேயிருந்து தப்பித்துக் கொள்வதற்காக, கரும்புக்கு விதி விலக்கு கேட்டுத் தங்களிடமுள்ள பல்லாயிரக் கணக்கான ஏக்கர் நஞ்சை நிலங்களைக் கரும்பு வயல்களாக மாற்றிக் கொண்டவர்கள் யார்?

எட்டிய மட்டும் பரந்து கிடந்த தனது வளமான நிலங்களை யெல்லாம் "மேய்ச்சல் நிலம்" என்று ஏமாற்று வித்தை காட்டி; மேய்ச்சல் நிலங்களுக்கு உச்சவரம்புச் சட்டத்திலே விதி விலக்கு பெற்றது யார்?

தொண்ணூறு லட்ச ரூபாய் தனிப்பட்ட கம்பெனிகளிடம் தேர்தல் நிதியாகப் பெற்றது எந்தக் கட்சி?

பஸ் முதலாளிகளிடம், பஸ் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் எனத் தேர்தல் நிதி கிஸ்தி பெற்றது எந்தக் கட்சி?

தேர்தலிலே பஸ் முதலாளிகள் தயவு வேண்டு மென்று, தேசீய மயக் கொள்கையை 120 மைல்களுடன் நிறுத்திக் கொண்ட கட்சி எந்தக் கட்சி?

கோவையிலே ஆலை அரசர்களைக் கூட்டி வைத்து அவர்களிடம் பல லட்ச ரூபாய்களை ஒரே இரவில் தேர்தல் நிதியாக அள்ளிக் கொண்டு வந்த கட்சி எந்தக் கட்சி?

பழைய கோட்டையும்
புதுக் கோட்டையும்
கபிஸ்தலமும்
வடபாதிமங்கலமும்

ராஜ நடை போட்டு வர;

“தீராதி தீர
தேசீய மகிப
திவ்விய சொரூப
திக்கெட்டும் புகழும்
திரவிய நாயகர்-
செல்வக் குபேரர்-
ஏழையினும் ஏழை-
எளிமையினும் எளிமை
எங்கள் சேனையின்
தங்கத் தளபதிகள்
பராக்!
பராக்!!”

என்று காங்கிரசிலேயுள்ள பிரச்சாரகர்கள் கூவிட;

அதி ஆடம்பரமாக நடைபெறுகிற காங்கிரஸ் தர்பாருக்குப் பெயர்; ஏழைகளின் மன்றமாம்!

எத்தர்கள் கூறுகிறார்கள்; இன்றும் ஏமாளிகள் இருக்கிறார்கள் நம்புவதற்கு; என்ற எண்ணமுடன்!

இதனை நீ மட்டும் தெரிந்து கொண்டால் போதாது; நண்பா- மற்றவர்க்கும் தெளிவு படுத்து!

அன்புள்ள

மறவன்

(31-10-68)

9. வீரனே! வெற்றி என்றைக்கும் உன் பக்கம்தான்!

அன்பு நண்பா!

வெற்றி பெற்ற நண்பனுக்கு நேற்று முன் தினமும்-தோல்வியுற்ற தோழனுக்கு நேற்றும் மடல்கள் தீட்டினேன். பணிபுரிந்த வீரனே! இன்று உனக்குத் தீட்டுகிற மடல் அந்த இரண்டையும்விட எத்தனையோ விதத்தில் உயர்ந்தது.

120க்கு 68 இடங்களை இழந்துவிட்ட காங்கிரசார், மாநகராட்சித் தேர்தலில் வெற்றி பெற்றவர்களைப் போலக் குதிக்கிறார்களே; பார்த்தாயா?

“தி. மு. க. வுக்குச் சரிவு?
காங்கிரசுக்குப் பலம் பெருகுகிறது?
இதுவே வெற்றி! பெரிய வெற்றி!”

என்றெல்லாம், பிறவிக் குருடன் கண் பெற்றது போலவும்-நொண்டி, கால்களைப் பெற்றது போலவும்-பிணம் உயிர் பெற்றது போலவும்-பேரானந்தம் கொண்டு குதியாய் குதிப்பதற்கு என்ன இருக்கிறது!

தேர்தல் முடிவு தெரிந்ததும் சுப்பிரமணியனார் டெல்லிக்கு ஓடுகிறார். பிரதமரிடம் பெருமகிழ்ச்சி தெரிவிக்கிறார். டெல்லி வட்டாரங்களில் தன் பெருமையினைக் கூறுகிறார். நிஜலிங்கப்பா, சபாஷ் போடுகிறார். தேசாய், தித்திப்பான செய்தியென்று திருப்தி தெரிவிக்கிறார். என்றைக்குமே நம்மைப் பிடிக்காத மித்திரனார், “மாநகராட்சித் தேர்தல் என்றால் சாதாரணமல்ல-அது மிக முக்கியத்துவம் வாய்ந்தது” என்று எழுதுகிறார். இதே மித்திரனார், 1959 இல் தி.மு. க. மாநகராட்சியில் வெற்றி பெற்ற போது எந்த ‘ராகம்’ பாடினார் என்பதை நாடறியும்.

சென்ற நகராட்சித் தேர்தலைவிட சென்னையில் சில இடங்களை அதிகம் பெற்றிருக்கிறது காங்கிரஸ்!

அதுவும் காங்கிரசு முன்பு பெற்றிருந்த இடங்களைவிட அதிகம், அவ்வளவுதான்!

நம்மைவிட அல்ல!

காங்கிரஸ் முன்பு பெற்றிருந்த வாக்குகளைவிட சில ஆயிரம் வாக்குகளை அதிகம் பெற்றிருக்கிறது; அவ்வளவுதான்!

அதுவும் நம்மைவிட அல்ல!

இந்த நிலையில், மலடி பெற்ற மகன் போல்-புதையல் எடுத்த தனம் போல அவர்கள் மகிழ்வதற்கு என்ன இருக்கிறது?

ஒரு விதத்தில் மகிழ்ச்சியடையலாம் அவர்கள்! கழகத்தில் தூண்டிவிடப்பட்ட துரோக சக்திகளின் நேரிடையான-மறைமுகமான-எதிர்ப்பால் கழகம் சில எதிர்பார்த்த இடங்களை இழந்திருக்கிறதல்லவா; அதற்காக காங்கிரசார் மகிழ்ச்சி அடைவதிலும்-நீ; மனங் கலங்குவதிலும் அர்த்தமுண்டு!

நீ அயராது பாடுபட்டவன். அல்லும் பகலும் ஊனுறக்கமின்றி அலைந்து திரிந்து செயலாற்றியவன். கூலிக்கு மாரடித்தவன் அல்ல. கொடியுங் கையுமாக வீதிக்கு வீதி-வீட்டுக்கு வீடு சுழன்று சுழன்று; அண்ணன் மனம் மகிழ வெற்றி குவிக்க வேண்டுமென்று வெயில் என்றும் பாராமல்-மழையென்றும் பாராமல் பாடுபட்டவன். உனக்குத் தெரியும் வெற்றியின் அருமை! நீ அறிவாய் அதற்கான சிரமங்களை!

இருபதாண்டு காலம் இரும்புப் பிடியாய்ப் பதவியைப் பிடித்துக் கொண்டிருந்த காங்கிரசார்-கோட்டையில் கோலோச்சியபோதுதான்; நீ ரிப்பன் மாளிகையைக் கைப் பற்றினாய். அப்போது காமராஜர் என்ன சொன்னார்-"கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்கள் கழகத்திற்கு ஓட்டுப் போட்டு விட்டார்கள்" என்று புதிய கண்டுபிடிப்பை அவிழ்த்து விட்டார்.

பொதுத் தேர்தலில் நீ, கோட்டையையே பிடித்த போது பக்தவத்சலம் என்ன சொன்னார்.

"மக்கள் போதையில் ஓட்டுப்போட்டு விட்டார்கள்" என்றார்.

இன்று அவர்கள் கணக்குப்படி காங்கிரசின் ஆதரவு பெருகியிருக்கிறதென்றால் கள்ளச்சாராயம் காய்ச்சுவோர் தொகை

குறைந்துவிட்டதாகப் பொருள்! போதையின்றித் தெளிந்த மக்கள் பெருகிவிட்டார்கள் என்று பொருள்!

இது யாருடைய வெற்றி? இருபதாண்டு காலம் காங்கிரஸ் கட்சியினரின் மதுவிலக்குச் சட்டம் சாதிக்க முடியாததை இரண்டாண்டு காலத்திற்குள் அண்ணாவின் ஆட்சியில் மது விலக்குச் சட்டம் சாதித்திருப்பதாகத் தானே இதற்குப் பொருள் கொள்ளவேண்டும்.

என்னதான் ஆதரவு பெருகிவிட்டது என்று ஆட்டம் போட்டாலும்; அவர்களால் மேயரைத் தேர்ந்தெடுத்து வெற்றி விழா கொண்டாட முடியவில்லை. 1959 இல் நாம் கொண்டாடிய விழா மேயர் வெற்றி விழா! நாளை நாம் கொண்டாட இருக்கிற விழா மேயர் வெற்றிவிழா!

அவர்களோ நாளை கடற்கரையில் கூட்டம் போட்டு "தேர்தலுக்குப் பிறகு தி. மு. க. அராஜகம்" என்று பேசப் போகிறார் களாம், மான் குட்டியைக் கடித்த வேங்கை ரத்த நாக்குடன் மறைநூல் ஓதப்போகிறதென்றால் எவ்வளவு வேடிக்கையோ, அவ்வளவு வேடிக்கை இது!

மாநகராட்சித் தேர்தலில் 72வது வட்டத்தில் வெற்றி பெற்ற ஜேசுதாஸ் என்ற கழக நண்பர், வெற்றிச் செய்தி அறிவிக்கப்பட்ட அடுத்த ஒரு மணி நேரத்திற்கெல்லாம் காங்கிரசுக்காரர்களால் வளைத்துக் கொள்ளப்பட்டார், முதுகில் கண்ணாடியால் கிழித்தார்கள். ரத்தம் சொட்டச் சொட்ட ஆடை எல்லாம் ரத்தத்தால் நனைய காவல் நிலையம் நோக்கி ஓடினார். திடீரென போலீசார் உதவி கிடைக்காவிட்டால் அவர் பிணமாக்கப்பட்டிருப்பார். 53வது வட்டத்தில் வெற்றிபெற்ற காங்கிரசார், தோல்வியுற்ற தோழர் மதுரையின் வீடு புகுந்து கலவரம் செய்திருக்கின்றனர். 64வது வட்டத்திலும் அதே மாதிரிதான்! அறிஞர் அண்ணா அவர்களின் படங்கள் ஒட்டப்பட்டிருந்த தட்டிகளை யெல்லாம் அலங்கோலப் படுத்திக் கிழித்தெறிந்தனர்.

முரசொலி அலுவலகத்தின் முன்னேயிருந்த முதலமைச்சர் அண்ணாவின் படத்தைக் கிழித்து சீரழித்தவர்கள்-அலுவலக உச்சியில் பறந்துகொண்டிருந்த கழகக் கொடியை இறக்கிக் கொளுத்தியவர்கள் யார் என்று உனக்குத் தெரியாதா?

இதெல்லாம்; அவர்கள் ஆளுங்கட்சியாக இருந்த போது கடைப் பிடித்துப் பழகிப் போன முறைகள்!

இந்தியை எதிர்க்க, அவரவர்கள் தங்கள் தனிப்பட்ட இல்லங்கள், தனிப்பட்ட அலுவலகங்களில் கட்டிக் கொண்டிருந்த கறுப்புக் கொடிகளைக் காங்கிரஸ்காரர்கள் போலீஸ் துணையோடு இறக்கி, எரித்து, வீடுகளில் கல் கொண்டு எறிய வில்லையா? வீட்டில் இருந்த பெண்டு பிள்ளைகளைக் கரம் பிடித்து இழுக்க முனையவில்லையா? இலட்சிய நடிகர் ராஜேந்திரன் வீட்டில் நள்ளிரவு நேரத்தில் முன்னூறுக்கு மேற்பட்ட காங்கிரஸ் குண்டர்கள் கறுப்புக் கொடியை இறக்கச்சொல்லி கல் எறியவில்லையா? அந்தக் காலிகளுக்குத் துணையாகப் போலீசாரே போய் வீட்டில் உச்சியில் இருந்த கொடியை அகற்ற வில்லையா? இந்த நிகழ்ச்சிகள் எல்லாம் புகைப்படங்களாக அப்போதே வந்ததை நாடு மறந்து விடுமா நண்பா!

கருணாநிதியைக் கொல்ல கோட்டூரில் முயற்சிக்க வில்லையா? பொதுத் தேர்தலின்போது கடலூர் கழகத் தேர்தல் அலுவலகத்திற்குச் சென்ற கருணாநிதியைக் காங்கிரசார் கத்தி கம்புகளுடன் தாக்குவதற்காகத் துரத்தி துரத்தி அலைந்து, இறுதியில் இளம்வழுதி அவர்கள் வீட்டை முற்றுகையிட்டு விட வில்லையா? சிதம்பரத்தில் மதியழகனைத் தாக்கியவர்கள் யார்? உடுமலைப் பேட்டைக்கருகே திருமூர்த்தி ஆலைக்கு எதிரே அறிஞர் அண்ணாவின் காரை மடக்கிக் கொலை முயற்சியில் ஈடுபடத் துணிந்தவர் யார்?

நெல்லிக் குப்பம் மஜீதை,

கோவை ஆரோக்ய சாமியை,

ஆலந்தூர் சின்னானை,

மயிலாடி மாரியப்பனை,

ஆலங்குடி சிதம்பரத்தை,

தூத்துக்குடி சாமியை,

வடசென்னை பாண்டியனை,

இன்னோரன்ன பல கழகக் கண்மணிகளைப் படுகொலைக்கு ஆளாக்கியது யார்?

அவர்கள் இன்னும் தங்கள் அராஜக வெறியைத் தணித்துக் கொள்ளாமல் செயல்படுகிறார்கள். பேசுகிறார்கள். எழுதுகிறார்கள்.

மதுரையிலிருந்து வெளிவரும் ஒரு காங்கிரஸ் ஏட்டில் தலைப்புச் செய்தியாக-

"மானங்கெட்ட மகாதேவன்"

என்று போலீஸ் ஐ. ஜி. யைப் பற்றிக் கொட்டை எழுத்தில் பிரசுரித்திருக்கிறார்கள்.

எழுதுகிற-பேசுகிற நண்பர்களுக்கு அந்த வீரமாவது கடைசி வரையில் நிலைக்கிறதா?

வெட்கக் கேடு- அதுவுமில்லை! நீதிமன்றத்துக்கு வந்ததும்- "நான் அப்படிப் பேசவில்லை. அந்தக் கருத்தில் எழுதவே இல்லை" என்று அவர்களது பத்திரிகையில் வந்ததையே மறுத்து மழுப்புவதைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறது.

இப்படி, அராஜகங்களுக்கான விதையை எழுத்திலும் பேச்சிலும் விதைத்து... அவர்கள் தொண்டர்களை அராஜகத்திலும் ஈடுபட முடுக்கிவிட்டு;

"ஆகா! தி. மு. க. ஆட்சியில் அராஜகம்!"

என்று நடிப்பதுதான் அவர்களின் தனித்திறமை!

எதிர்பாராமல் கிடைத்த சில இடங்களுக்கே இந்தப் பாடுபடுத்துகிறார்களே; முழுவெற்றி பெற்றிருந்தால் என்ன பாடுபடுத்துவார்கள் என்பதை, என்னுடைய நண்பனே எண்ணிப்பார்! ஆகவே இந்த நிலையை உனக்கு வழங்கப்பட்ட ஒரு எச்சரிக்கையாகவே எடுத்துக் கொண்டு செயலாற்று!

அன்புள்ள

மறவன்

(01-11-1968)

10. பாவி கெடுத்தானே; பலே சாப்பாட்டை!

அன்புள்ள சுப்பிரமணியம்
அவர்களுக்கு

தொண்டை மண்டல முதலியார் ஒருவர் பழுத்த சைவர்-பால் சாப்பிடுவது கூட மாமிசம் சாப்பிடுகிற பாபத்திற்குச் சமம் என்று அழுத்தமாகக் கூறிக் கொண்டிருந்தவர். ஒரு முறை அவருக்கு ஏதோ வியாதி வந்த போது 'ஈரல் கலந்த டானிக்' ஒன்றை அவசியம் சாப்பிட்டாக வேண்டுமென்று டாக்டர் வற்புறுத்திச்சொன்னார். டானிக்கில் தொடங்கி பிறகு முட்டை மாத்திரம்தான் என்று விதிவிலக்கு அளிக்கப்பட்டு-இறுதியாக இறைச்சி இல்லாவிட்டால் இன்றைக்குச் சாப்பாடு இறங்காது என்ற நிலையில் வீட்டாரும் உறவினரும் அறியாத வகையில்

பிரியாணிப் பிரியர்-
கோழிப் பைத்தியம்-
ஆட்டுக் கால் விசுவாசி-
ஆராமீன் அன்பர்-

என்றெல்லாம் பட்டங்களைப் பெற்றுப் புலால் விடுதிகளுக்கு நிரந்தரப் போக்குவரத்தாளர் ஆகிவிட்டார். இந்த ரகசியம் அவருடன் பழகும் மிக நெருங்கிய நண்பர்கள் இரண்டொரு வருக்குத்தான் தெரியும். அந்த நண்பர்களில் ஒருவன் பெயர் தந்திரி; அந்தத் தந்திரி நல்ல விளையாட்டு வீரன். வெளிநாடு சென்று அவனும் அவன் விளையாட்டுக் குழுவினரும் பத்து போட்டியில் ஒரு போட்டியில் வெற்றி பெற்றதற்காகவும்; அதுவும் "ரன்னர்" கோப்பை எடுத்து வந்ததற்காகவும் பாராட்டு விருந்தொன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அந்த விருந்துக்குத் தொண்டை மண்டலமும் அழைக்கப்பட்டிருந்தார்.

"என்ன விருந்து என்று
சொன்னால் தான் வருவேன்.

மீன் உண்டா? கறி உண்டா?

கோழி சூப் உண்டா?

எரா உண்டா?

ஈரல் வறுவல் உண்டா?

கோலா உண்டா?

கொடுவாக் குழம்பு உண்டா?”

இப்படியெல்லாம் நாவில் நீர் சொட்டக் கேட்டு, எல்லாம் உண்டு என்று சொன்ன பிறகே தொண்டை மண்டலம் விருந்துக்கு ஒத்துக்கொண்டார். விருந்து விழாவுக்கே தொண்டை மண்டலத்தையே தலைவராகவும் போட்டு விட்டார்கள்.

மேஜையில் விருந்துக்கான தட்டுக்கள் வைக்கப்பட்டன. தொண்டை மண்டலத்துக்குப் பக்கத்திலே விளையாட்டு வீரன் தந்திரி உட்கார்ந்து இருந்தான். அன்று அவனுக்கு ஒரு ஆசை; இறைச்சி! இறைச்சி! என்று அலையும் தொண்டை மண்டலத்தை எப்படியாவது ஏங்கவைத்து ஏமாற்ற வேண்டுமென்று!

பரிமாறுவோர் பிரியாணித் தட்டுடன் வந்தனர். வரிசையாகப் பரிமாறினர். தொண்டை மண்டலம் அருகே வந்ததும்; தந்திரி பரிமாறுபவனைத் தடுத்து-

“டே, டே! அங்கே வைக்காதே! அவர் அதி தீவிர சைவம் என்று தெரியாதா? .....ஏதோ போனால் போகிறதென்று நண்பனாயிற்றே என்று என்னை கௌரவப்படுத்த விருந்துக்குத் தலைமை தாங்க வந்தால்... அவருக்குக் கொண்டு போய் பிரியாணி போடப் போகிறாயே; அதை இங்கே வைத்து விட்டு அவருக்கு வெள்ளைச் சோறு கொண்டுவா!”

என்று சப்தம் போட்டான். பக்கத்திலே யிருந்தவர்கள்; "அப்படியா? அய்யா சைவமா?”என்று ஆச்சரியத்தோடு கேட்டார்கள்.

தந்திரி மேலும் விளக்கினான்.

“என்ன அப்படிக் கேட்டு விட்டீர்கள். அவர் பூசியிருக்கும் விபூதியைப் பார்த்தால் தெரியவில்லை?

அவர் போட்டிருக்கும் நவரத்ன மாலையைப் பார்த்தால் புரியவில்லை?

என்னேரமும் சிவ சிவா! எப்போதும் அரோகரா! திருக்குறளிலேயே புலால் உண்ணாமை அதிகாரம்தான் அவருக்கு அதிகமாகப் பிடிக்கும்.

சைவத்தைப் பற்றி நேற்றிரவு நமது ஊர் தேவாலயத்தில் மூன்று மணிநேரம் பேசினாரே; அதோ இருக்கிறார்களே பத்திரிகை நிருபர்கள், அவர்களைக் கேட்டாலே தெரியுமே!"

"ஆமாம்! ஆமாம்!" என்றனர் அப்போதுதான் 'ஆம்லெட்டை' வாய்க்குள் தள்ளிக் கொண்டிருந்த நிருபர் கூட்டத்தினர்.

தொண்டைமண்டலம் விழித்தார், பதைத்தார். பிரியாணியின் மணமும், பக்கத்துத் தட்டுகளில் முட்டைகள் உருளுவதும், மற்றவர் எலும்பு கடிக்கும் ஒலியும், அவரைப் படாதபாடு படுத்தின.

ஆயினும் நண்பன் சொன்னதை ஆமோதிப்பதைப் போல அசட்டுச் சிரிப்போடு தலையை ஆட்டினார், ஆமாம் என்று!

"முட்டை மாத்திரம் வைக்கட்டுமா?" என்றான் பரிமாறியவன்!

"டேய்! முட்டாள்! இப்படியெல்லாம் கேட்டு அவர் தகுதியைக் குறைக்காதே! சைவத்தைக் கெடுக்காதே! சாம்பார், காய்கறி இருந்தால் கொண்டு வந்து போடு!"

என்றான் தந்திரி ஆத்திரமாக!

'எதுவும் இல்லீங்களே'

என்றான் - பரிமாறியவன்.

"பரவாயில்லை-ஒரு குவளை மோர் கொண்டு வந்து கொடு! அவர் குணம் தெரியாமல் விளையாடாதே! அவர் நம்மை மதித்துவந்ததே பெரிய பாக்கியம்! அதற்குக் கைமாறாக அவருக்குப் புலால் உணவு கொடுத்து அவரது புனிதத்தைக் கெடுப்பதா?"

என்று உணர்ச்சி பொங்கப் பேசினான் தந்திரி.

கடைசியில் ஒரு குவளை மோருடன் விருந்தை முடித்துக் கொண்டார் தொண்டை மண்டலம்.

உள்ளூர எரிச்சல் தாளமுடியவில்லை. கோபமோ பொங்குகிறது! நாக்கிலோ நீர் ஊறுகிறது! எல்லாவற்றையும்

பொறுத்துக்கொண்டு, "பாவி கெடுத்தானே; பலே சாப்பாட்டை!" என்று மனத்துக்குள் சபித்துக்கொண்டார்.

என்னப்பா மறவா; கடிதம் எழுதத் தொடங்கிக் கதை எழுதுகிறாய் என்று கேட்கத் தோன்றுகிறதா?

சுப்பிரமணியம் அவர்களே! தாங்கள் பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் காமராஜரைப் பற்றியும் நாகர்கோயில் தேர்தல் பற்றியும் விளக்கம் அளித்திருக்கிறீர்களே; அதைப் படித்தபோது எனக்கு இந்த கதைதான் ஞாபகம் வந்தது.

"மந்திரியாக ஆவதற்காகக் காமராஜர் நாகர்கோயிலில் போட்டியிடப் போகிறார் என்பது விரும்பத் தகுந்த வதந்தியல்ல! அவரைப் பற்றி இப்படி வதந்திகள் பரப்புவது அவருக்குத் துரோகம் இழைப்பதாகும், பதவிக்காக ஒரு காரியத்தைச் செய்பவர் காமராஜர் அல்ல. பார்லிமெண்ட் உறுப்பினர் பதவி அல்லது மந்திரி பதவி எல்லாவற்றுக்கும் மேம்பட்டவர் அவர்."

இதுதான் தாங்கள் அளித்த நிருபர்கள் பேட்டி! இதனைக் காங்கிரசு ஏடுகளேகூடத் தெளிவாக வெளியிட்டிருக்கின்றன.

இந்தப் பேட்டியைப் படித்தபோது எனக்குத் தொண்டை மண்டலத்தை ஏங்கிட வைத்த தந்திரியின் கதை நினைவுக்கு வந்தது தவறில்லை அல்லவா?

பலே புத்திசாலி தாங்கள்! முன்பு மந்திரியாக இருந்தீர்கள்; இப்போது தந்திரியாகி விட்டீர்கள்-

தங்கள் பேச்சின் பொருள்; எனக்கு மட்டுமல்ல- எல்லோருக்கும் உள்ளங்கை நெல்லிக்கனி போல நன்றாகப் புரியும்.

அன்புள்ள

மறவன்

(02-11-1968)

11. தென்றல்- தெம்பாங்கு- தேன்கீதம்!

அன்பு அண்ணனே!

ஐம்பத்தாறு நாட்கள் எமைப் பிரிந்து அமெரிக்கத் திருநாட்டில் மறுபிறவி எடுத்துவரும் மாணிக்கத்திருவே! மலரினும் மென்மை உன் இதயம்-மலையினும் மாணப் பெரிது உந்தன் அருங்குணம்- மாற்றாரும் போற்றுகின்ற திறன் உன் திறன்-

உனைக்காணாது, உன்னுடன் பேசாது, உன் சங்கீத மொழி கேளாது, ஐம்பத்தாறு நாட்கள் ஐம்பத்தாறு நூற்றாண்டுகளாக மாறி எம்மை வாட்டி வதைத்த கொடுமையெல்லாம் தீர்க்க இதோ வந்துவிட்டாய். இருள்வெள்ளம் துரத்துகின்ற இளங்கதிராக வந்துவிட்டாய்! பொங்கும் புதுவெள்ள இன்பத்தால் தமிழ்ப்பூமி வாழ்வோரெல்லாம் பூரித்து நிற்கின்றார். எங்கும் ஆரவாரம்! எழுச்சி! தென்றல்- தெம்பாங்கு- தேன்கீதம்!

மாமுகில் கூடக் கண்டு மயிலினம் ஆடக் கண்டோம். மாங்குயில் கூவக்கண்டு மானினம் தாவக் கண்டோம். பூம்பொழில் மலரக் கண்டு பூவையர் பாடக் கண்டோம். எம்முயிர் அண்ணன் கண்டு, தம்முயிர் பெற்றாற்போலத் தமிழர்கள் மகிழக் கண்டோம்.

செப்டம்பர் பத்தாம் நாள் சிந்தையில் ஆயிரம் தேள் சேர்ந்தாற்போல் கொட்டியதால் செத்தவர்போல் கிடந்தோம்- இன்றைக்கோ! இனிச்சாவில்லை தமிழர்க்கென்று உறுதியின் சிகரம் நின்றோம்.

அகன்ற நெற்றி காட்டும் ஆயிரம் சிந்தனையும்- அகல விழிகள் காட்டும் அறிவு விளக்கின் சுடரும்- அமைதிதனைக் காட்டுவதற்கு இதழோரம் தெரிகின்ற புன்னகையும் புத்தனையே நினைவுறுத்தும்-

பாயவரும் வேங்கைதனைப் பரிவுடனே தடவிக்கொடுப்பாய்- முட்டவரும் விலங்கினமும் நீ தொட்டவுடன் சீற்றம் தணியும்!

நிலவே!
மலரே!
குளிரே!
தமிழே!

நின் புகழ் பாடுதற்குக் கவிஞரெல்லாம் கூடுகின்றார்.

தலைமை அமைச்சராய்த் தமிழ்நாட்டில் இருப்பதாலே இத்தகுதி பெற்றாய் என்று நெடுநாள் பகைவன் கூட நினைக்கமாட்டான்.

நீ எழுத்தின் வேந்தன்-

இலக்கியத்தின் மணிமுடி-

அரசியலில் வழிகாட்டி-

தலைவர்க்குத் தலைவன்...

நீ, தலையெடுத்துச் செம்மாந்து நடை போட்ட பின்னர்தான் தமிழுக்கோர் ஏற்றம் பிறந்த தென்பர் பெருமைசால் சான்றோர். பண்பாடுடைய அரசியல் உன் படைப்பு. அன்போடு தம்பியரை அரவணைத்துக் கழகம் நடத்துகிற மாண்பே மாண்பு.

மண்ணெல்லாம் செந்தமிழ் மனங்கமழ வைத்த மன்னன் நீ!

பண்ணெல்லாம் பகுத்தறிவுச் சாடைக்காட்டச் செய்திட்ட பகலவன் நீ!

கண்ணெல்லாம் திறந்துவிட்டாய் மொழிப்போரில்- தமிழர்களை அணிவகுத்தாய்- மறவர்க்குத் தலைவன் நீ!

மூச்சின்றிச் சுருங்கிக் கிடந்த எங்கள் சுவாசக் குழாய்களிலே உன் வருகை மூச்சூட்டும்!

தமிழர் வாழ்வுக்குப் பூச்சூட்டும்!

துடிப்பின்றித் துவண்டு கிடந்த எங்கள் இருதயப் பைகளிலே உன் வருகை புது ரத்தம் ஓடவிடும்!

தமிழ் மயிலை ஆடவிடும்!

நாடி நரம்பெல்லாம் வீணையின் நாதத்தை எழுப்பி விட்ட நாயகனே!

ஐம்பத்தாறு நாட்கள் மங்கிக் கிடந்த எம் விழியெல்லாம் புத்தொளி பார்த்தனையா?

அன்பே வருக!

அமுதே வருக!

அமைதிக் கடலே! வருக!

எங்கள் அண்ணனே! வருக! வருக!

அன்புள்ள

மறவன்

(06-11-1968)

12. “பூப்போட்ட கிளாசிலே போடய்யா ஒண்ணரை!”

அன்பு நண்பா!

கோவா காங்கிரஸ் நிகழ்ச்சிகளையெல்லாம் ஏடுகளில் கண்டிருப்பாய். அதிலும் முக்கியமாக ஏழு ஆண்டுக்காலம் மது அரக்கனுக்கு ஆயுளை நீடிக்கலாம் என்ற தீர்மானத்தின் மீது நமது தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் சி. சுப்பிரமணியனார் எடுத்து வைத்துள்ள வாதங்களையெல்லாம் படித்திருப்பாய்.

“மதுவிலக்கை அமலாக்கவில்லையென்று யாரையாவது குறைகூற வேண்டுமானால் காங்கிரஸ் மீதுதான் இந்தப் பழியைப் போட வேண்டும். மதுவிலக்கை அமலாக்க மக்கள் ஆதரவைக் காங்கிரஸ் திரட்டாமல் இருந்துவிட்டது.”

என்று பேசிய சுப்பிரமணியம், மதுவிலக்கிற்குத் தற்போது சட்டம் தேவையில்லை, ஓராண்டில் சட்டம் போட்டு அதனை ஒழித்துவிட முடியாது. ஏழாண்டுக் காலம் கெடு கொடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

“மதுவிலக்கை அமலாக்க, மக்கள் ஆதரவைத் திரட்டாமல் காங்கிரஸ் இருந்து விட்டதாம்.”

மக்கள் ஆதரவு கிடக்கட்டும்! முதலில் மதுவிலக்குக்கு காங்கிரஸ் ஆதரவாவது இருக்கிறதா என்பதே இப்போதைய கேள்வி.

“ஒரு மத்திய அமைச்சர் வீட்டில் நடைபெற்ற திருட்டைப்பற்றி அந்த அமைச்சர் போலீசுக்கு விபரம் அளித்தபோது, அப்படி திருட்டுப்போன பொருள்களில் விஸ்கி பாட்டில்களும் இரண்டு என்று குறிப்பிட்டிருக்கிறார்.”

என்பதாக சுசிலா நய்யார் அவர்கள் கோவா மாநாட்டில் குற்றம் சாட்டி ஆவேச உரையாற்றியதை நீ ஏடுகளில் கண்டிருக்கக் கூடும். இந்த நிலையில் காங்கிரஸ் அமைச்சர்களே இருந்திடும் போது, மதுவிலக்கிற்கு மக்களிடம் ஆதரவு திரட்டுவது என்பது எவ்வாறு?

எப்படியோ ஒரு வழியாகக் காந்தியக் கொள்கைகளில் அவர்கள் மிச்சம் வைத்திருப்பதாகச் சொல்லி வந்த மது விலக்குக் கொள்கையையும் கோவாவில் குழி தோண்டிப் புதைத்து விட்டார்கள்.

மகாத்மாவே ஊர் ஊராகச் சென்று பிரச்சாரம் புரிந்து, மாநிலங்கள் பலவற்றில் சட்டமாக்கப்பட்ட மதுவிலக்குத் திட்டத்தைச் சிறிது சிறிதாகத் தளர்த்தி ஒரு பக்கம் குடிப்பதற்குத் தாராள அனுமதியும், மறுபக்கம் "குடித்தால் தீது" என்னும் பிரச்சாரமும் செய்யப் போகிறார்களாம்.

மதுவிலக்குச் சட்டத்தை எல்லா மாநிலங்களிலும் அமலாக்கிவிட்டு, அந்தச் சட்டத்தையும் மீறி அங்கொன்றும் இங்கொன்றுமாகச் செய்யப்படும் குற்றங்களைத் தடுக்க மக்களிடையே பிரச்சாரம் செய்வதென்றால் பொருத்தமாக இருக்கும்.

திருடுவது கொடியது-கொலை வெறி பயங்கரமானது என்றெல்லாம் அறிவுரை வழங்கப்படுவது; திருடுவதும் கொலை புரிவதும் சட்டங்களின் மூலம் தடைப்படுத்தப்பட்டு; அதை மீறுகிறவர் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிற நாட்டிலே தான் நடைபெறுகிறது.

மக்கள் திருந்தும் வரையில் ஏழு வருடம் காலக் கெடு கொடுப்போம் என்று திருட்டு, கொலை போன்ற குற்றங்களைத் தடுக்கும் சட்டத்தை பின் வலித்துக் கொள்ளவில்லை.

ஏழு வருடங்களுக்குள் மக்கள் திருந்திவிடுவார்கள். பிரச்சாரம் மூலம் அவர்களைத் திருத்திவிடலாம் என்றால், அதற்குப் பிறகு மதுவிலக்குச் சட்டமே தேவையில்லையே!

இந்தியாவில் எல்லா மாநிலங்களிலும் மதுவிலக்கிற்கு பிரிவுபசாரப்பத்திரம் படித்துக் கொடுத்ததைப் போல், மிச்ச மிருக்கிற தமிழகம் போன்ற ஒரு சில மாநிலங்களிலும் மதுவிலக்கை ரத்து செய்து விட்டு; ஒருமைப்பாட்டை இந்த விஷயத்திலாவது நிலை நாட்டி விட்டு; பிறகு இந்தியா முழுவதும் மதுவிலக்குப் பிரச்சாரத்தைத் தொடங்கி ஏழு ஆண்டுகளுக்குள் மக்களைத் திருத்தி; அதன் பிறகு மதுவிலக்குச் சட்டமே தேவையில்லை என்று அறிவித்து விடலாமே!

கோவாவில் காங்கிரசார் நிறைவேற்றியுள்ள குழப்பமான தீர்மானத்தின் மூலம் இந்த முடிவுக்குத்தானே மற்றவர்கள் வர வேண்டியிருக்கும்!

தமிழக சட்டமன்றத்தில் முன்பொருநாள் முதலமைச்சர் பக்தவத்சலம் அவர்களைப் பார்த்து ஒரு கேள்வி கேட்கப்பட்டது.

"மதுவிலக்குக் குற்றங்கள் அதிகமாகின்றன. பலர் கள்ளச்சாராயத் தொழில்களை நடத்துகிறார்கள், இதை விட, மதுவிலக்கு சட்டத்தையே எடுத்து விடுவது நல்லதல்லவா?"

அதற்கு அவர் சொன்ன பதில் என்ன தெரியுமா?

"சில பேர் திருடுகிறார்கள், சில பேர் கொலை செய்கிறார்கள் என்பதற்காக, அதனைத் தடுக்கும் சட்டங்களையே ரத்து செய்ய முடியுமா? அது போலத்தான் சிலர் மீறுகிறார்கள் என்பதற்காக, மதுவிலக்குச் சட்டத்தை வாபஸ் பெற முடியாது" என்று அழுத்தமாக விடையளித்தார். இந்த ஏழாண்டு காலக் கெடு பற்றி அவர் என்ன விளக்கம் தரப்போகிறாரோ! தெரியவில்லை.

பொதுவாக வேதனையோடு கூற வேண்டுமானால் கோட்சேயினால் கொல்லப்பட்ட உத்தமர் காந்தியாருக்கு, கோவாவில் காங்கிரசார் சமாதிகட்டி முடித்து விட்டார்கள்! இனி;

"பூப்போட்ட கிளாசிலே

போடய்யா ஒண்ணரை"

என்பது இந்தியாவின் பொது கீதமாக இருக்கும்!

காங்கிரஸ் மாநிலங்களில், தேசீய கீதத்திற்கு அடுத்தபடியாக இந்தக் கருத்துள்ள பாடல் ஒலிபரப்பப் பட்டால் வியப்படைய ஒன்றுமில்லை!

அன்புள்ள

மறவன்

(07-11-1968)

13. மேயர் தேர்தல்
நேரம் - நிலை - நேர்த்தியான முடிவு!

அன்பு நண்பா!

நீ, சும்மா இருந்தாலும் சில ஏடுகள் உன்னைச் சும்மா இருக்க விடுவதில்லை. உன் பெயரைச் சொல்லி நாலு நாட்களுக்குத் தனக்குத் தேவையான செய்தித் தீனியைத் தயாரித்துக் கொள்கின்றன.

"யார் மேயராக வந்தால் என்ன? என் கட்சித் தோழன் மேயராக வந்தால் சரி!"

என்று பெருமிதமாக எண்ணியவாறு இரவு தூங்கச் செல்வாய். காலையில் உன்னை எழுப்புவதற்கு வந்த உன் துணைவி,

"என்னங்க, பத்திரிகை பார்த்தீங்களா? மேயருக்குப் போட்டி போடுறவுங்க பட்டியல் வந்திருக்கு"

என்று சொன்னவாறு பத்திரிகையை உன் கையில் கொடுப்பார். நீ பத்திரிகையை வாங்கும் போதே உன் வாய் முணுமுணுக்கும்.

"ஏன் இப்படி பட்டியல் எல்லாம் போடுறாங்க! அண்ணா பார்த்து யாரை மேயர் என்கிறாரோ; அவர்தானே மேயர்!"

என்றவாறு பத்திரிகையின் எட்டு காலத் தலைப்பை உற்று நோக்குகிறாய்?

மேயர் தேர்தல்;
பலத்த போட்டி

என்று கொட்டை எழுத்துக்களில் செய்தி காண்கிறாய்!

"இப்படியெல்லாம் செய்தி போடுவதற்கு நம்ப ஆளுகளே விட்டு விடுகிறார்கள்! இவர்கள் தங்கள் ஆசைகளை வளர விட்டதுதான் இப்படியெல்லாம் ஒவ்வொருவரும் ஒவ்வொரு செய்தி போடும்படி ஆகிவிடுகிறது"

என்று கடுங்குரலில் கூறியவாறு, படுக்கையை விட்டு எழுந்து உடம்பிலுள்ள சோம்பலை முறித்துத் தள்ளிவிட்டு மீண்டும் பத்திரிகையைப் படிக்கத் தொடங்குகிறாய்... ஒன்று, இரண்டு, மூன்று என்று மேயர் பதவி வேட்பாளர்களின் பெயர்களைப் படித்துக் கொண்டு வருகிறாய்!

திடீரென அதிர்ச்சி! உனக்கே ஒரு திகைப்பு! காரணம்; அந்தப் பட்டியலில் உன் பெயரும் இருக்கிறது!

"அடேடே! என் பேரைக்கூடப் போட்டிருக்கானே!"

பத்திரிகையை விட்டு கண்களை எடுக்க முடியவில்லை உன்னால்!

எத்தனையோ முறை:

பலகாரத்தைச் சாப்பிட்டுக் கொண்டே;

"இன்னைக்கு இட்லி பிரமாதம்"

என்று மனைவியின் முகத்தைப் பார்த்தவாறுதான் புன்னகையுடன் கூறியிருக்கிறாய்! இட்லியைப் பார்த்துக் கொண்டே "இட்லி பிரமாதம்" என்று நீ கூறியதே இல்லை. ஆனால் இப்போதோ-

"அடேடே என் பேரைக் கூடப் போட்டிருக்கானே!"

என்று வியப்புடன் அல்லது வெறுப்புடன் மனைவியின் முகத்தைப் பார்த்திருக்க வேண்டிய நீ, பத்திரிகையையே பார்த்துக் கொண்டிருக்கிறாய்.

ஏன் இந்த மாற்றம் வந்தது உன் மனதில்! பத்திரிகைக்காரர் உனக்கு ஒரு பெரிய பதவியல்லவா கொடுத்துவிட்டார். அதனால் உன் பெயரைத் திரும்பத் திரும்பப் படிக்கிறாய். நீ, உன் பெயரைத் திரும்பத் திரும்பப் படித்து தோள்கள் விம்மிட, விழிகள் மலர்ந்திட, இதழ்கள் துடித்திட, நின்றிருந்த கம்பீரமிக்க காட்சிகளை நான் பல முறை கண்டிருக்கிறேன். அது எப்போது தெரியுமா?

இந்தி எதிர்ப்புப் போர்!

அந்தப் போராட்டப் பட்டியலில்

உன் பெயர்!

விலைவாசி உயர்வுக் கண்டன

மறியல்-

அந்தப் போர்வீரர் வரிசையில்

உன் பெயர்-

மும்முனைப் போராட்டம்-

அந்த அணியிலும் உன்

பெயர்.

அந்தப் பட்டியலைக் கண்டபோது உன் முகத்தில் மலர்ந்த வீரங் கொழித்த சிரிப்பையும் வீங்கிப் புடைத்த தோள்களையும், பார்த்துக் களித்த எனக்கு; அந்த வரிசைப் பெயர்களில் என் பெயரும் முன்னோ பின்னோ இருந்தது கண்டு பெருமைப்பட்ட எனக்கு;

இன்றைய உன் முகத்தில் காணும் புன்னகை - இயற்கைப் புன்னகையாகத் தோன்றவில்லை. எதற் காகவோ செயற்கையாக வரவழைத்துக் கொண்ட தாகத் தெரிகிறது.

பத்திரிகை வீசிய வலையில் நீயும் விழுந்து விட்டாய்! மேயராக வருவதற்கு நீ தகுதி இல்லாதவன் அல்ல! ஆனால் அந்த ஆசையையே வரவழைத்துக் கொள்ளாமலிருந்தாய், அதற்குள் பத்திரிகையாளர் உன் உறுதியைச் சோதனைக் களத்துக்கு அனுப்பி விட்டார்.

பதவிகள் கூடா தென்பதல்ல என் வாதம்

பதவிகள், பணிபுரியும் வாய்ப்புக்கள்.

- **பதவியின்றிப் பணி புரிவது**
- **பதவியைப் பணிபுரியும் வாய்ப்பாக ஆக்கிக் கொள்வது-**

இந்த இரண்டில்; முதலாவதை நாமே தேடிச் செல்லலாம்.

இரண்டாவது வகையிருக்கிறதே; அது நம்மை நாடி வர வேண்டும்.

நாமே அதனைத் தேடிச் சென்றால்; பணிபுரியும் நோக்கம் மறைக்கப்பட்டு பதவி விரும்பும் நிலைமை மட்டுமே கண்ணுக்குத் தெரியும்.

இந்த அசைக்க முடியாத மனதிடத்துடன் இருப்பாய் என்று உன்னை நினைத்தேன்; ஆனால் உன்னையும் 'பதவி' பற்றியிருக்கிறது-பத்திரிகைகளின் தூபத்தில் நீயும் மயங்கி விட்டாய் என்கிறபோது என் வேதனை தாள முடியவில்லை.

மேயர் பதவி மட்டுமல்ல; எந்தப் பதவியானாலும், எந்த மட்டத்திலானாலும் அதனைத் தேடிப் போய் நெருக்கடி கொடுத்துப் பெற முனையும்போதோ அல்லது பெற்றுவிட்ட பிறகோ-

உன்னைப்பற்றி உனக்கே ஒரு வெறுப்பு தோன்றும்!
உனக்குத் தோன்றுகிறதோ இல்லையோ; நாட்டுக்குத் தோன்றும்-

பணிபுரியத் துடித்தெழு!

பதவிபெறப் பொறுத்திரு!

உன் நெஞ்சுக்கு நீ உணர்த்த வேண்டிய அறிவுரை இஃது!

கசக்கிப் பிழிந்து ஒன்றை நீ பெற்றுவிடலாம்-அதை பெற்ற உனக்கும் நிறைவு இல்லை! தந்தவருக்கும் மகிழ்ச்சி இல்லை.

காலைப் பத்திரிகை-உன்னை என்ன பாடு படுத்திவிட்டது பார்!

நீ கேட்டது ஒரு மேயர்!

அண்ணா சந்திக்க வேண்டியது

பத்து மேயர்களை!

ஜனநாயகத்தில் பெரிய தொல்லை;

ஒரு சமயத்தில் ஒருவரைத்தான் மேயராக்க முடிகிறது மற்ற ஒன்பது பேர் விடப்பட்டு விடுகிறார்கள்.

ஆகவே; நண்பா-அந்தப் பொறுப்புமிகு வேலையை அண்ணாவிடம் விட்டுவிடு!

நீ துணைக்குச் செல்ல வேண்டியதில்லை!

"நேரம்-நிலை-இவைகளுக்கேற்ப நேர்த்தியான முடிவு எடுக்க நமது அண்ணாவுக்குத் தெரியும்".

அது உனக்கும் தெரியும்; ஆனாலும் "கேட்டு வைப்போமே!" என்று கருதுகிறாய்!

உன்னைப் பற்றிய நல்ல எண்ணத்தைக் "கெடுத்து வைக்காதே!" என்று நான் உனக்குக் கூறுகிறேன்.

அன்புள்ள

மறவன்

(09-11-1968)

14. 'பகைமரம்' தழைக்க விடோம்!

அன்பு நண்பா!

அயூப்கானைக் கொல்ல முயற்சி.

அமெரிக்காவில் நிக்சனைக் கொல்ல சதி.

தக்க நேரத்தில் இரண்டு அரசியல் படுகொலைகள் தடுக்கப் பட்டு விட்டன; உண்மைதான்! ஆனால் கொலை வெறி பிடித்த 'அரசியல் மூர்க்கர்களின்' போக்கு அறவே நீக்கப்பட்டு விட்டதா? இல்லை; நண்பா இல்லை!

அரசியல் கொலைகள் தொடர்ந்து நடைபெற்று வருவதும், அதனையொட்டி அனுதாபங்கள்-கண்டனங்கள் எழும்புவதும்-சில நாட்களுக்குப் பிறகு அவைகளை மக்கள் மறந்து விடுவதும்; மீண்டும் திடீரெனப் பயங்கர வன்முறைச் செயல் மின்னலெனத் தோன்றுவதும், பெரும் அரசியல் தலைவர் ஒருவர் அதற்கு பலியாவதும்- நாகரிகமுள்ள மனித சமுதாயத்திற்கு ஏற்ற காரியமல்ல.

அமைதியின் வடிவம்-உலக உத்தமர் காந்தியடிகளைக் கொலை வெறிக்குப் பலி கொடுத்தோம்,

அரசியல் மேதை லியாகத் அலிகான் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அமெரிக்க ஜனாதிபதி கென்னடியின் உயிரைக் கொடியவன் ஒருவனின் துப்பாக்கி குடித்தது.

அன்புருவாம் லூதர்கிங்கையும் கொன்று தீர்த்தார்கள். அதனையடுத்து கென்னடியின் தம்பி, ராபர்ட் கென்னடியும் சுட்டுக் கொல்லப்பட்டார்.

அண்மைக் காலத்தில் நடைபெற்ற அரசியல் படுகொலை களில் சிலவற்றை மட்டும் குறிப்பிட்டேன். இதோ நிக்சனுக்குக் குறி வைத்துவிட்டார்கள்; அயூப்கானுக்கும் ஆபத்து நெருங்கி

அகன்றிருக்கிறது. அரசியலில் இப்படிப்பட்ட பெருந்தலைவர்கள் மீது நடத்தப்படுகிற வன்முறை பாய்ச்சலேயன்றி, கட்சிகளின் முன்னோடிகள் தொண்டர்கள் மீதும் வன்முறைப் பேயாட்டங்கள் நடைபெற்றிருக்கின்றன. தி.மு.கழகத்தையே எடுத்துக் கொண்டால்;

உடையார்பாளையம் வேலாயுதம்
தூத்துக்குடி கே.வி.கே.சாமி
தூத்துக்குடி தாளமுத்து
வடசென்னை பாண்டியன்
நெல்லிக்குப்பம் மஜீது
கோவை ஆரோக்யசாமி
மயிலாடி மாரியப்பன்
ஆலந்தூர் சின்னான்
ஆலங்குடி சிதம்பரம்.

இப்படிப் பல கண்மணிகள் படுகொலைக்கு ஆளாகியிருக் கிறார்கள். கழகத்திற்கு மட்டுமன்றி; வேறு சில கட்சிகளுக்கும் இப்படிப்பட்ட இழப்பு உண்டு.

கொலை வெறி அளவுக்குப் போகாவிட்டாலும்; ரத்தக் காயங்களை உருவாக்கும் வகையில் தாக்குதல்-வெட்டுதல்-அடித்தல்-போன்ற வன்முறைகளால் தங்கள் அரசியல் பகைமையைத் தீர்த்துக்கொள்ள முனைகின்றவர்களும் அரசியலில் இருக்கிறார்கள்.

கருத்துக்குக் கருத்து மோதி-ஜனநாயக ரீதியில் மக்கள் மன்றத்தின் செல்வாக்கைப் பெற்று-மாற்றுக் கட்சியையோ அல்லது அதன் தலைவரையோ, வெற்றி காண்பதுதான்; வளர்க்கப்பட வேண்டிய அரசியல் பண்பாடாகும்.

மாறுபட்ட கருத்துக்கொண்ட தலைவனையோ, தொண் டனையோ கொன்று புதைத்து விட்டு-அவர்கள் கல்லறையின் மீது-கொலை வெறியன், வெற்றிக் கொடியைப் பறக்க விடுவானேயானால்; அந்த இடுகாட்டில் புதைந்து கிடக்கும் எலும்புக்கூடுகள் அவன் முகத்தில் காறித் துப்பும்!

முண்டா தட்டுதல்-மீசை முறுக்குதல்-அரசியலுக்கு ஏற்றதல்ல!

துப்பாக்கி தூக்குதல் -கத்தி எடுத்தல்- காட்டு மிராண்டிகள் கூட கடைப்பிடிக்க அஞ்ச வேண்டிய அரசியல் முறையாகும்!

அரசியல் வன்முறையைத் தூண்டி விடுகிற கருத்துக்கள் ஒழிந்தாக வேண்டும். வெறுப்பு உணர்ச்சியை வளர்த்து மனிதாபிமானத்தை வேரறுக்கிற எழுத்துக்கள்-பேச்சுக்கள்-அடியோடு அகற்றப்பட்டாக வேண்டும்.

கருத்துக்களில்-கொள்கைகளில்-போக்குக்களில் - காணப் படுகிற குறைபாடுகளை கடுமையாக விமர்சிப்பதிலோ; கண்டனங்களைப் பொழிவதிலோ; உண்மையான அரசியல்வாதி, பின்வாங்கத் தேவையில்லை.

மாற்றார் நெஞ்சத்தில் தனது கருத்துக்களை ஆழப் பதிய வைத்து அவரைத் தன் பக்கம் இழுப்பவன் நேர்மையான அரசியல்வாதி!

அதிலே தோல்வி கண்டு தொடையைத் தட்டுபவன் ஏழாந்தர அரசியல்வாதி!

கண்ணில் கனலும்,

கையில் கத்தியும்,

அரசியல் ஆயுதங்கள் எனக் கருதிடுவோர் எங்கிருந்தாலும் அந்த நாடு, விலங்கினங்கள் வாழும் காட்டை விடக் கீழானது!

அயூப்கான்-நிக்சன் செய்திகள், இந்தக் கருத்தை வலுப் படுத்துகின்றன. அரசியல் மோதுதல்கள்- ஆள் மோதுதல்களாக இருத்தல் கூடாது!

எழுத்தில்-பேச்சில்-எண்ணத்தில்-செயலில்- தெளிவும் தூய்மையும் அன்பும், அமைதியும் தேவை!

மாற்றுக் கட்சியினரைத் தாக்கும் எழுத்தையும் பேச்சையும், மாற்றுக் கட்சியினரே ரசிக்க வேண்டும். வெளிப்படையாக இல்லாவிட்டாலும் ரகசியமாகவாவது அவர்கள் அதனை ரசிக்கும் அளவுக்கு எழுதிட வேண்டும்-பேசிட வேண்டும்!

எழுத்துக்கு எழுத்து-பேச்சுக்குப் பேச்சு-பதிலுக்குப் பதில்-அரசியலில் தவிர்க்க முடியாதவைகள்!

ஆனால் ரசம் கெடக்கூடாது!

விரசம் தலைநீட்டக் கூடாது!

விரசம், விரோத உணர்ச்சிகளுக்கு வித்திடுகிறது!

அந்த வித்து வளர்ந்து 'பகைமரம்' தழைக்கிறது!

படை கூட்டுதல்- தாக்குதல்- கொலை புரிதல்- என்ற அளவுக்கு நச்சுக் கனிகள் உதிர்கின்றன.

தலைவர்கள் மட்டத்திலும், தொண்டர்கள் மட்டத்திலும் அந்தப் பகை மரத்தை வளர விடாமல் தடுப்போம்! எல்லாக் கட்சியினரும்-எல்லா அரசியல் வாதிகளும்- அப்படியொரு உறுதி எடுத்துக் கொள்வோம்!

உறவு உணர்வோடு கருத்துக்களை மோத விடுவோம். நேசப்பான்மையோடு இருதரப்புக் கொள்கைகளைக் கேலி புரிவோம்- விமர்சிப்போம்!

வெறியுணர்வென்னும் விஷக்கொடியை வேரோடு கெல்லி யெறிவோம்!

நாடெங்கும்- நானில மெங்குமுள்ள, அரசியல்வாதிகள் இந்தச் சூளுரையை எடுத்துக் கொண்டால்-குழப்பம் தொலையும்- கொலை வெறி தணியும்!

அதற்கு, முதலில் நமது தமிழகம் வழி காட்டியாக அமையட்டும்!

இங்கே;

அங்கொன்றும் இங்கொன்றுமாக சில அசம்பாவிதங்கள் ஏற்பட்டாலும், மொத்தத்தில் 'அரசியல் பண்பாடு' காப்பாற்றப்பட வேண்டுமென்ற முயற்சி- நல்லெண்ணம் இவைகளுக்கான அடையாளங்கள் இருக்கின்றன.

அந்த அடையாளம், வளர்பிறையாகட்டும்! வாழ்க அன்பும் அமைதியும் கலந்த அரசியல் மனப்பான்மை!

அன்புள்ள

மறவன்

(11-11-1968)

15. நம்பிக்கையில்லாத் தீர்மானம் - நாடாளுமன்ற நிகழ்ச்சி!

அன்பு நண்ப,

நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்ட நிகழ்ச்சிகளை, அமைதியான முறையில் ஜனநாயகத் தத்துவம் செயல்பட வேண்டும் என்று விரும்புகிற யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். பொதுவாகவே நாடாளுமன்றத்தில் தங்களுக்குப் பிடிக்காத கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்படும் போது ஆளுங்கட்சி-எதிர்க்கட்சி என்ற பாகுபாடு இல்லாமல் இரு தரப்பினரும் கூச்சல் எழுப்புவதும், அந்தக் கூச்சலும் குழப்பமும் தொடர்ந்து நீடிப்பதும் "ஜனநாயகத்தில் உள்ள கோளாறுகள்" என்று யாராவது நூல் எழுதினால் அவர்களுக்குத் தேவையான எடுத்துக்காட்டுகளாக விளங்கி வருகின்ற நிகழ்ச்சிகளாகும். நவம்பர் 13ஆம் நாள் நம்பிக்கையில்லாத் தீர்மான விவாதத்தின்போது தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அம்மையார் பேச முடியாதபடி பெரும் அமளி! "என் தொண்டை வறண்டு விட்டதே" என்று சபாநாயகரின் முறையீடு. சவானைப் பார்த்து ஒரு உறுப்பினர்; "அடுத்த ரயிலிலேயே பம்பாய்க்குப் போய் விடுங்கள்" என்றார். பி. சோ. கட்சித் தலைவர் துவிவேதி குறுக்கிட்டு அமைதி நிலவுவதற்கு ஒரு யோசனை கூற முயன்றபோது, காங்கிரஸ் உறுப்பினர்கள் காது செவிடுபடும்படி கூச்சல் எழுப்பி, அந்த யோசனையை நிராகரித்தனர். இந்திரா காந்தி பதில் கூறாமலே நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடந்து முடிந்து விட்டது.

வாக்கெடுப்பின் முடிவு, அனைவரும் எதிர்பார்த்ததுதான்! ஆனால், அங்கு நடைபெற்ற அமளியும் ஆர்ப்பாட்டமும் பிரதமர் பேச முடியாமலே அமர்ந்து விட்டதும் எதிர்பார்த்தது அல்ல! ஏற்றுக் கொள்ளக் கூடியதும் அல்ல!

அரசு ஊழியர்கள் செப்டம்பர் 19 ஆம் நாள் நடத்திய வேலை நிறுத்தத்தின் போது; அரசு அலுவலகங்களில் போலீசார் நுழைந்து ஊழியர்களை அடித்தது - பத்திரிகையாளர்களைத் தாக்கியது. குதிரை கீழே தள்ளியதுமல்லாமல் குழியும் பறிப்பது போல அரசு ஊழியர்களைப் பழி வாங்குகிற அளவுக்கு நடவடிக்கை மேற்கொண்டிருப்பது எல்லாக் கட்சித் தலைவர்களின் வேண்டுகோளுக்குப் பிறகும் அந்த நடவடிக்கைகளைத் திரும்பப் பெற மறுத்துக் கொண்டிருப்பது-

இவையனைத்தும் காரசாரமாகக் கண்டிக்கத் தக்கவை-ஈவு இரக்கமற்ற போக்கு என்று விமர்சிக்கத் தக்கவை. காங்கிரசல்லாத ஆட்சி நடைபெறும் மாநிலங்களில் கடுகை மலையாக்கித் திரியும் காங்கிரசார், டில்லித் தலைநகரில் நடைபெற்ற அநியாயங்களை எடுத்துக் கூறும் போதும், மேலும் மேலும் அரசு ஊழியர்களைப் பழி வாங்குவது நிறுத்தப்பட்டு, நிலைமையை அமைதிப் படுத்த வேண்டுகோள் விடுக்கும் போதும், கேளாக்காதினராக இருப்பதை மிகக் கடுமையாகத் தாக்கிப் பேசுவதில் எந்தத் தவறும் இல்லை. ஜனநாயகத்தில் வாதாடும் உரிமை வழங்கப்பட்டிருக்கிறது. அமைதியாகப் போராடும் முறை அனுமதிக்கப்பட்டிருக்கிறது. ஜனநாயக உரிமைகளை எப்படி-எப்போது-அளவோடு பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென்பதும் அரசியலை ஒழுங்குற நடத்திச் செல்ல விரும்புகிறவர்கள் சிந்திக்க வேண்டிய ஒன்றாகும்.

நாடாளுமன்றம்; கருத்துக்களை மோத விட்டு, நல்லவை எது அல்லவை எது என்பதை அங்குள்ள பெரும்பான்மை பலம் தீர்மானிக்கத் தவறினாலும், நாட்டு மக்கள் புரிந்து கொண்டு அடுத்து வரும் பொதுத் தேர்தலில் தீர்ப்பளிக்கக் கூடிய அளவுக்கு அவர்களைத் தயார்படுத்தப் பயன்படும் அவையாகும்!

சட்டப் பேரவைகள்-மேலவைகள்-நாடாளுமன்றம்-மாநிலங்கள் அவை-அனைத்திலும் சூடும் சுவையும் குன்றாத வாதங்கள், கருத்துப் போராட்டங்கள் நிரம்ப இருக்கலாம்.

ஆனால், ஒரு ஜனநாயக அவை, கூச்சலிலும் குழப்பத்திலும் முடிந்தது என்பதை யாரும் வரவேற்க முடியாது!

"ஆகா! இந்திரா காந்தியைப் பேசவிடாமல் உட்கார வைத்து விட்டார்கள்"

இது, காங்கிரசல்லாத மற்றவர்களிடத்திலே எல்லோருக்கும் இல்லாவிட்டாலும் சிலருக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தக் கூடும். பிரதமரைப் பேசவிடாமல் தடுத்து, கூச்சலிட்டதும் குந்த வைத்ததும் 'அபாரமான சாதனை' என்று கூடப் பேசி விடலாம்.

ஆனால், நல்லோர் கட்டிக் காக்க விரும்புகிற அமைதியான ஜனநாயகத்தின் வருங்கால நிலை என்ன?

அம்மையாரைத் தமது கருத்துக்களை முழுமையாகச் சொல்ல இடமளித்து; அவை திருப்தியளிக்கத் தக்கவை யல்லவென்றால் அதன்பிறகு அந்தக் கருத்துக்களுக்கு மறுப்புரைக்கும் வாய்ப்பு, தீர்மானம் கொண்டு வந்த உறுப்பினர்க்கு இருக்கிறது. வெளி நடப்பு மூலம் தங்கள் அதிருப்தியைக் காட்டிக் கொள்ளும் உரிமை இருக்கிறது. பெரும்பான்மை பலத்தை வைத்துக்கொண்டு எதிர்க்கட்சியின் நியாயமான வேண்டுகோளைத் துச்சமெனத் தள்ளி விடுவார்களேயானால் அதனை மக்கள் மன்றத்திலே எடுத்துரைக்கும் வாய்ப்பு இருக்கிறது.

உணர்ச்சி வயப்பட்டு, இடையிடையே கடுமையான குறுக்கீடுகள் இருந்தாலும் சபாநாயகர் வேண்டுகோளுக்குப் பிறகு அமைதியை உருவாக்குவதில்; எதிர்க்கட்சி-ஆளுங்கட்சி இரண்டுக்கும் மிகுந்த பொறுப்பு இருக்கிறது.

நாடாளு மன்றத்திலும் சரி; வேறு மாநிலங்களின் சட்ட சபைகளிலும் சரி; எத்தனையோ அமளிகள் ஆர்ப்பாட்டங்கள் விரும்பத்தகாத நிகழ்ச்சிகள்; மிகச்சாதாரண காரியங்களுக்காக நடைபெற்றிருப்பதையும்-கொந்தளிப்பு மிகுந்த நேரங்களில்கூட தமிழகச் சட்ட மன்றத்தில்-இன்று நேற்றல்ல; நீண்ட பல ஆண்டுகளாக நிதானம் இழக்காத தன்மை நிலைபெற்று வருவதையும் காணுகிற நேரத்தில் நமக்கே ஒரு மகிழ்ச்சி ஏற்படுகிறதல்லவா நண்பா!

இந்த மகிழ்ச்சி, இந்தியா முழுவதுமுள்ள எல்லா மாநில அவைகளிலும்-டில்லி பாராளுமன்றத்திலும் மலர்ந்திட வேண்டு மென்று விரும்புவது இயற்கையே யன்றோ!

எதிர்க் கட்சியினரின் போக்கு, இந்திரா அரசினருக்கு மேலும் கோபத்தை உண்டாக்கியிருக்கலாம். அதன் விளைவு, பாதிக்கப்பட்டுள்ள அரசு ஊழியர்கள் மீது பாயாமல் இருக்க வேண்டு மென்பதே நடுநிலையாளர்களின் ஆசையாக இருக்கும்.

எதிர்க் கட்சியினர் சட்டமன்ற, நாடாளுமன்றங்களில் உணர்ச்சி வயப்படுவது இயற்கை! சில நேரங்களில் தவிர்க்க முடியாமலும் போய் விடும்! அப்போது ஆளுங் கட்சிதான் அமைதியேற்படுத்தப் பொறுப்பேற்க வேண்டும்.

நாடாளுமன்ற நிகழ்ச்சிகளுக்கும்-அரசு-ஊழியர்கள் பழி வாங்கப்படும் பிரச்சினைக்கும் முடி போடாமல்; பாதிக்கப்பட்டுள்ள அரசு ஊழியர்களின் எதிர்காலம்-அவர்களது குடும்பம்- குழந்தை குட்டிகள்-அவைகளின் வருங்காலம்-அனைத்தையும் மனதிற் கொண்டு அனுதாப உணர்வோடு; தலையமைச்சர் பெண்மணியாக இருப்பதால்; தாய்மை உணர்வோடு சிந்தித்து நல்ல முடிவு எடுக்க வேண்டும்.

“இதையெல்லாம் எனக்கு எழுதி என்னப்பா பயன்?” என்று கேட்கிறாயா?

நண்பா! உனக்கு எழுதுவதின் மூலம் நாட்டுக்கு எழுதுகிறேன்! இந்திய நாட்டை ஆள்பவருக்கு இதனை எடுத்துச் சொல்ல அதிகாரிகள் இருக்கிறார்கள். அவர்கள் தெரிவிப்பார்கள் என்ற நம்பிக்கையோடு எழுதுகிறேன்.

அன்புள்ள

மறவன்

(14-11-1968)

16. யார் அந்த உணவு அமைச்சர்?

அன்பு நண்ப,

உலகத்தில் எந்த மூலையில் எது நடந்தாலும் அதைத் தி. மு. க. ஆட்சியின் மீது தூக்கிப் போட்டுக் கும்மாளம் அடிப்பதையே தங்கள் தொழிலாகக் கொண்டிருக்கிறார்கள் காங்கிரசார்! காங்கிரஸ் கட்சியின் ஏடுகள் அந்த வேலையைத் திறம்படச் செய்து வருகின்றன.

"கணவன் மனைவி தகராறு" என்று செய்திக்குத் தலைப்பிட்டு; கணவன் தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகிறது என்பதாக ஒரு பொய்ச் செய்தி!

"சினிமாக் கொட்டகையில் டிக்கட் வாங்கும்போது நெரிசலில் சிக்கி ஒருவர் சாவு! அதற்கு அந்தப் படத்தில் நடித்த தி. மு. க. நடிகரே காரணம்."

இப்படியொரு கண்டுபிடிப்பு!

"தி. மு. க. ஆட்சியில் வங்காளத்தில் ஒரு ரயில் கவிழ்ந்தது."

"தி. மு. க. ஆட்சியில் 'ஆல்ப்ஸ்' மலையில் ஒரு விமானம் மோதி நொறுங்கியது."

"தி. மு. க. வேட்பாளர் ஹம்ப்ரியை, நிக்சன் வெற்றி கண்டார்! வெற்றி! வெற்றி!!"

இன்னும் இது போன்ற செய்திகள்தான் அவர்களது பத்திரிகையில் வரவில்லை. விரைவில் இந்த ரகச் செய்திகளையும் எதிர்பார்க்கலாம்.

தனியார் பஸ் ஒன்று; நாமக்கல்லில் கவிழ்ந்ததை வைத்துக் கொண்டு "தி.மு.க. ஆட்சியில் பஸ் கவிழ்ந்தது" என்று எழுத வில்லையா? மூலைக்கு மூலை பேசித் திரியவில்லையா?

"காராப்பூந்தி சாப்பிட்ட பையனுக்கு தொண்டையில்
காராப்பூந்தி சிக்கியதால் ஆஸ்பத்திரியில் அனுமதி!

கழக ஆட்சியின் கொடுமை பாரீர்!"

இப்படியெல்லாம் செய்திகளைத் தேடிக் கண்டுபிடித்து தி.மு.க. ஆட்சி மீது குறைகூறும் ஏடுகளும், பேச்சாளர்களும் சத்தியமூர்த்தி பவன் தரும் 'சர்டிபிகேட்'டுகளுடன் வலம் வருகின்ற காட்சியை நாடு காண்கிறது.

தஞ்சை மாவட்டத்திலும் மற்றும் சில மாவட்டங்களிலும் அரசின் சார்பில் அரிசி கொள்முதல் செய்யப்பட்டு வாங்கிப் புசிப்போர் அதிகமுள்ள இடங்களுக்கு-நியாய விலையில் விற்பனை செய்ய அனுப்பி வைக்கப்படுகிறது.

அந்தக் கொள்முதலில் தங்களுக்கு 'விலை' கட்டுப்படியாகா தென்று ஒரு சில நிலப் பிரபுக்கள்; உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளனர். அதனையேற்றுக் கொண்டு, அந்நிலப் பிரபுக்களைப் பொறுத்தவரையில் கொள்முதல் செய்யத் தடைவிதித்து நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது.

இந்தத் தீர்ப்பைக் கொட்டை எழுத்தில் வெளியிட்டு; காங்கிரஸ் ஏடுகள் மகிழ்ச்சியால் துள்ளுகின்றன, அரசாங்கத்திற்கு எதிராக ஒரு தீர்ப்பு கிடைத்துவிட்டதாக காங்கிரசுக்காரர்களுக்குப் பூரிப்பு!

எல்லா மக்களுக்கும் உணவு வழங்க வேண்டுமென்று அரசு எடுத்துள்ள முயற்சியில் நிலப்பிரபுக்கள் சிலரது போக்கால் ஒரு குறுக்கீடு ஏற்பட்டுவிட்டதே என்று வருந்துவதற்குப் பதிலாக, அவர்கள் புளகாங்கிதமுறுகிறார்கள் என்றால் என்ன பொருள்?

மக்கள் வயிற்றில் அடிக்கப்பட்டாலும் பரவாயில்லை;
அரசாங்கத்தின் கொள்முதல் வேலைக்குத் தடங்கல்
ஏற்பட்டால்; அதுவே தங்களுக்குத் திருப்தி.

இதுதான் காங்கிரசாரின் லட்சியம்! அவர்கள் களிப்புக்குக் காரணமும் தெளிவாகப் புரிகிறது!

கொள்முதல், காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலேயிருந்து நடந்து வருகிறது! இப்போது தரப்படுகிற விலைதான் அப்போதும் தரப்பட்டது! காங்கிரசார் ஆண்டபோதும் கொள்முதலை எதிர்த்துச்

சில நிலவேந்தர்கள் வழக்குப் போட்டார்கள் தடை வாங்கினார்கள். அப்போதெல்லாம் தி. மு. கழகத்தினரோ கழக ஏடுகளோ; அதனை நிலப் பிரபுக்களின் வெற்றியாகக் கொண்டு கூத்தடிக்கவில்லை. கொள்முதல் விஷயத்தில் அரசாங்கம் மேலும் தீவிரமாக இருக்க வேண்டுமென்றுதான் அப்போது கழகத்தினர் வற்புறுத்தினர்.

இன்றைய காங்கிரசாரோ; எப்படியாவது கழக அரசைக் குறை கூற வேண்டுமென்ற இழிந்த நோக்கத்தில் இருக்கிறார்கள். எனக்கு ஒரு சந்தேகம் கூட உண்டு நண்பா!

மத்திய அரசில், காங்கிரசார் இல்லாமல் மாற்றுக் கட்சியின் ஆட்சி நடைபெற்று; அந்த வேளையில் சீனாக்காரனோ; பாகிஸ்தானோ படையெடுத்தால்கூட; இங்குள்ள காங்கிரசார் அந்தப் படையெடுப்பைப் பாராட்டிப் பள்ளுப் பாடுவார்களோ; என்னவோ!

அந்த அளவுக்கு எதிர்க் கட்சிகளின் மீது அவர்களுக்குக் காய்ச்சல் இருக்கிறது.

இதோ நவசக்தி; (16-11-68) யில் வெளி வந்துள்ள கொட்டை எழுத்துச் செய்தியைப் பார்!

“மில் அரிசி - கைப்பற்றுதல் கட்டட சோதனை! தமிழக அரசு நடவடிக்கையை ஹைகோர்ட் ரத்து செய்தது! மில் வர்த்தகர்களின் ‘ரிட்’ அனுமதி.”

இது தலைப்புச் செய்தியாகும். உள்ளே பிரசுரித்துள்ள விஷயத்தைப் படித்துப் பார்!

“உணவு அமைச்சரிடமிருந்து வாய் மொழியாக உத்தரவு பெற்றுக் கட்டட சோதனையும் மில் அரிசிக் கைப்பற்றுதலும் நடந்தன என்று உணவு இலாக்கா காரியதரிசி கூறியதற்கு ஆதாரமில்லை யென்று கூறி, மில் வர்த்தகர்களின் ‘ரிட்’ மனுக்களை ஹைகோர்ட் அனுமதித்தது”

இதுதான் நண்பா; நவசக்தி பிரசுரித்துள்ள செய்தி! இதைப் படிக்கும்போது உணவு அமைச்சர் மதியழகன் அவர்கள்தான் வாய் மொழியாக உத்திரவிட்டதாகக் கோர்ட்டில் சொல்லப்பட்ட தென்று நீகூடக் கருதிக் கொள்வாய்!

ஆமாம்; நவசக்திச் செய்தி அப்படித்தான் உருவகப் படுத்தப்பட்டிருக்கிறது.

நீதிமன்றத்தில் செல்லாது எனத் தீர்ப்பு கூறப்பட்டது எந்த உத்திரவின் பேரில் தெரியுமா; உனக்கு?

1966 ஆம் வருஷத்திய சென்னை நெல் அரிசி லைசென்ஸ் உத்திரவுதான் அது என்ற விபரத்தை மற்ற ஏடுகள் பிரசுரித்திருக்கின்றன.

அப்போது உணவு அமைச்சராக இருந்தவர் திரு. ராமய்யா அவர்கள் ஆவார்கள். நவசக்திச் செய்தியில் 1966 என்பதும் அமைச்சர் ராமய்யா என்பதும் மறைக்கப்பட்டு விட்டது. படிக்கிறவர்கள்; மாண்புமிகு மதியழகன் என்று எண்ணிக் கொள்ளட்டுமே யென்று ஒரு நப்பாசை!

அதனால்தான் தலைப்பில்;

"தமிழக அரசு நடவடிக்கையை
ஹைகோர்ட் ரத்து செய்தது"

என்று கொட்டை யெழுத்துக்கள் மின்னுகின்றன அதிலே ஒரு திருப்தி!

அதிலே ஒரு மகிழ்ச்சி!

மகன் இறந்தாலும் பரவாயில்லை; மருமகள் மாங்கல்யம் இழந்தால் போதும் என்று மாமியாருக்கு ஏற்படுகின்ற ஆசை;

தமிழ் நாட்டில் உள்ள காங்கிரசாருக்கு ஏற்பட்டிருக்கிறது!

பாவம்; வாழட்டும் அவர்களின் நல்ல (?) எண்ணம்!

அன்புள்ள

மறவன்

(16-11-1968)

17. கிளம்பிற்றுக்காண் தமிழச் சிங்கக் கூட்டம்!

அன்பு நண்ப,

தி. மு. க. ஜனநாயகத்தின் முகாம்.

தி. மு. க. தமிழ் வளர்க்கும் பாசறை.

தி. மு. க. இந்தி எதிர்ப்பின் கூடாரம்.

தி. மு. க. சமத்துவத்தின் தாழ்வாரம்.

தி. மு. க. நல்லாட்சியின் வழிகாட்டி.

தி. மு. க. மறுமலர்ச்சியின் தூதுவன்.

அன்பகத்தில் நேற்றுக்கூடிய சென்னை மாணவர்களின் பிரதிநிதிகள் மேற்கண்டவாறு முழங்கினர்.

கழகத்திற்கும் மாணவர்களுக்கும் நீண்ட நெடு நாட்களாக இருந்துவரும் பாசப் பிணைப்பையும், அதனை இடையிலே அறுத்தெறிய முயன்ற சிலர் அடையாளம் கண்டு கொள்ளப்பட்டதையும் அவர்கள் விரிவாக விளக்கிப் பேசினர். காங்கிரசின் பக்கம் மாணவர்கள் தொகை தொகையாகப் போய்ச் சேர்ந்துவிட்டார்கள் என்ற தப்புக் கணக்கின் உண்மை உருவத்தையும் அவர்கள் படம் பிடித்துக் காட்டத் தவறவில்லை.

"தமிழ் வாழ்க! இந்தி ஒழிக!-என்று முழங்கியதற்காகத் துடிக்கத் துடிக்கச் சுட்டுக் கொல்லப்பட்ட சிவகெங்கை மாணவ வீரன் ராஜேந்திரனின் நினைவு எங்கள் நெஞ்சில் பதிந்திருக்கும் போது துப்பாக்கித் துரைத்தனம் நடத்திய காங்கிரசை நோக்கி மாணவர்கள் அணி செல்கிறது என்பதை யார் தான் நம்புவார்கள்?"

என்று உள்ளம் உருக ஒரு மாணவ நண்பர் பேசிய போது; மாணவச் சிங்கம் ராஜேந்திரனின் குரலே எதிரொலித்தது போலிருந்தது.

"மாயூரம் மண்ணிலே, தன் மாம்பழ மேனிக்கு நெருப்பு வைத்துக் கொண்டு ஊனும் உயிரும் தீயிலே கருகிக் கொண்டிருந்த நேரத்திலும் "என் சாம்பலிலே தமிழ் மணக்கட்டும்" என எக்காளக் குரல் கொடுத்து "அன்னைத் தமிழே! நீ வாழ்க! எங்களை அடிமை கொள்ள வரும் இந்தி ஆதிக்கமே! நீ வீழ்க!" என்று ஒலித்தவாறு கல்லறைக்குச் சென்றானே; கண்மணி சாரங்கபாணி; அவன் உடலிலும் எங்கள் உள்ளத்திலும் நெருப்பு மூளக் காரணமாயிருந்த நெருப்பினுங் கொடிய காங்கிரசாரிடமா மாணவ நண்பர்களுக்குப் புதிய அன்பு பிறந்துவிடும்? இல்லை! இல்லவே இல்லை! என்றைக்கும் தமிழுக்குத் துரோகம் செய்யும் சிலர் அங்கே இருக்கிறார்கள். அவர்களுக்குக் கல்லூரியில் கிடைக்கும் சில மறைமுக ஆதரவுகள் கிடைத்துக் கொண்டு வருகின்றன. எங்கள் அணி சிதறவில்லை. எங்கள் வரிசை குலையவில்லை. எங்கள் அண்ணன் மீதும், கழகத்தின் ஏனைய தலைவர்கள் மீதும் நாங்கள் கொண்டுள்ள நேசமும் பாசமும் குறையவில்லை!"

என்று அந்த இளஞ்சிங்கக் கூட்டம் அன்பகத்தில் அறிவித்தபோது ஏற்பட்ட உணர்ச்சிப் பிரவாகத்திற்கு அளவே இல்லை நண்பா; அளவேயில்லை!

அன்பகத்தின் முகப்பிலே எழுச்சி வடிவிலே அமைக்கப் பட்டிருக்கும் மாணவர் மொழிப் புரட்சியின் அடையாளச் சின்னத்தை நீ பார்த்திருப்பாயே அடிக்கடி.

"குண்டடிப்பட்டு ஒரு மாணவன்-அவனைக் கீழே விழாமல் தாங்கியவாறு வீரங் கொப்பளிக்கக் கையிலே கொடியைப் பிடித்தவாறு ஒரு மாணவன். ரத்தங் கொட்டக்கொட்டத் தரையிலே கிடக்கும் ஒரு மாணவன். அப்போதும் கரத்திலே அழுத்தமாகப் பிடித்திருக்கும் இலட்சியக் கொடி நோக்கி அவன் விழிகள் மலர்ந்திருக்கும் காட்சி"

காங்கிரசாட்சியில், மொழி காக்க மூண்ட போரில் மாணவர் களுக்கு அவர்கள் அளித்த பரிசு! மாணவர் எழுச்சி வரலாற்றின் வீரமிக்க நினைவுச் சின்னம்!

அன்பகத்து மாடியில் ஏறிவந்த மாணவச் சீயங்கள் அந்த வீரச் சின்னத்தைக் கண்டதும், தங்களையுமறியாமல் விழிகளைக் குளமாக்கிக் கொண்டார்கள். தங்களின் நெஞ்சத்து அன்பையெல்லாம் மலர்களாக்கி அந்தச் சின்னத்தின் மீது தூவினர்.

"அமைச்சர் அவர்களே! இந்தி ஆதிக்கத்தால் நாட்டில் ஏற்படும் அல்லல் பற்றி எடுத்துரைக்க வந்துள்ளோம் அழைத்துப் பேசிடுக எம்மை!"

எனக் கோரிக்கை விடுத்தபோது; "முடியாது! சந்திக்க முடியாது!" என்று முசோலினியின் மொழியில் கர்சித்து-அடித்து விரட்டினார்களே; அந்நாள் காங்கிரஸ் அமைச்சர்கள்! அந்த ஆணவப் போக்கை மாணவர் சமுதாயம் மறந்துவிடுமா?

என்று சில மாணவ நண்பர்கள் ஆவேசமாகப் பேசிய போது கூடியிருந்த அத்தனை மாணவர் கண்களிலும் தீப்பொறி பறந்தது.

"படிக்காமலே பாஸ் செய்திட மாணவர்கள் நினைக்கிறார்கள்" என்று கூறி எல்லா மாணவர்களையும் புண்படுத்திய காங்கிரஸ் தலைவர்களின் பேச்சை மாணவர் சமுதாயம் அதற்குள் மறந்து விடவில்லை."

"சென்னையில் ஏற்பட்ட பஸ் தொழிலாளர் மாணவர் மோதுதலில், அமைச்சர்களின் அறிக்கைகளையும், பேச்சுக்களையும் திரித்துக் கூறி, மாணவர்களிடையே கழக அரசு பற்றிக் கசப்பு உணர்வை உருவாக்க முயன்றார்கள் என்பது உண்மை! ஆனால் அவர்கள் போட்ட வேஷம் விரைவிலே கலைக்கப்பட்டது."

"காங்கிரஸ் அரசாண்ட காலத்தில் இந்தி எதிர்ப்பில் ஈடுபட்ட மாணவர்களை சந்திக்கவே மறுத்தனர் மந்திரிகள். கழக அரசு உருவான பிறகு, மாணவர்கள் நடத்திய இந்தி எதிர்ப்புப் போரில்; மாணவர்களை அமைதிப்படுத்த கழக அமைச்சர்கள் சென்ட்ரல் ஸ்டேஷனுக்கே ஓடிவந்தனர். ஐந்து நாட்கள் இரவு பகல் கண் விழித்து மாணவப் பிரதிநிதிகளோடு அறிஞர் அண்ணா அவர்களும் மற்ற அமைச்சர்களும் விவாதித்தார்கள்."

மாணவ நண்பர்களின் வீரங் கொந்தளிக்கும் பேச்சுக்கிடையே, விழிநீர் கொப்பளிக்கும் சொற்பொழிவுக்கிடையே, இதுபோன்ற நிகழ்ச்சி விளக்கங்களும் எடுத்துக் காட்டப்பட்டன.

கழகப் பொருளாளரும், அமைப்புச் செயலாளரும் மாணவ மணிகளின் குன்றா ஆர்வங் கண்டு மகிழ்ந்தனர். குன்றும் தோற்றிடும் அவர்கள் குலையாத உள்ளங்கண்டு பூரித்தனர்.

எழுச்சி போற்றத் தக்கது!

உணர்ச்சி பாராட்டத் தக்கது!

உள்ளம் வாழ்த்தத் தக்கது!

அனைத்தையும் தக்கதோர் அமைப்பின் வாயிலாக வகைப்படுத்திட வேண்டாமோ? என்ற கேள்விக் குறிக்கான விடையினையும் மாணவ மணிகள் கண்டனர்.

அந்த விடை தான்;

மாநிலமெங்கும் மாணவர் தி. மு. க.

அருமைத் தோழர் எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் வீறு நடை போட்டு விரிவடைந்திருந்த மாணவர் அமைப்பு, சில ஆண்டுகளாக அமைப்பு ரீதியில் செயல்பட முடியாமற் போய் விட்டதற்கான காரணங்களைத் தலைவர்கள் விளக்கினார்கள். பல்வேறு மாவட்டங்களிலுமுள்ள அந்த அமைப்புகளோடு தொடர்பு கொள்ளவும், புதுப்பிக்கவும் மாநில அளவில் தி.மு.க.வை உருவாக்கவும், ராஜாமுகமது அவர்களை அமைப்பாளராகக் கொண்டு, தற்காலிக அமைப்புக் குழு நிறுவப் பெற்றது. அந்தக் குழு, மாவட்டங்களில் தொடர்பு கொள்ள, மாணவ நண்பர்களின் பட்டியலைத் தயாரித்துள்ளது.

"பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு திறக்கப்பட்டது
சிறுத்தையே வெளியில் வா!"

பாவேந்தரின் புரட்சிக் கவிகேட்டு, செயல் புரியக் கிளம்பிய மாணவர் அணி-

"கிளம்பிற்றுக் காண்
தமிழச் சிங்கக் கூட்டம்!"

என்ற அவரது வீர வரிகளுக்கு இலக்கணமாய்த் திகழும் மாணவர் வரிசை-

தன் அமைப்பினைப் புதுப்பித்துக்கொள்ள ஆர்த்தெழுந்து விட்டது!

"மாணவ நண்பனே,

எலியென உன்னை இகழ்ந்தவர் நடுங்கப் புலியெனச் செயல் செயப் புறப்படுவாய்" என, நாமும் வாழ்த்தி வரவேற்போம்.

அன்புள்ள

மறவன்

(18-11-1968)

18. கழுதையும் - பன்றியும்!

அன்பு நண்ப,

“இந்திய ஜனநாயகத்தில் வயது 21 ஆகி விட்டால் எந்தக் கழுதையும் மந்திரியாகலாம். தமிழ் நாட்டில் மந்திரிகள் பிளாட்பாரங்களில் இருந்தும்-கோயில்களில் இருந்தும் கோட்டைக்குள் நுழைந்திருக்கிறார்கள்.”

இப்படியொரு காங்கிரஸ் தலைவர், தனது ஏட்டில் எழுதி யிருப்பது பற்றி நீ கொதிப்படைந்து எனக்கு எழுதியுள்ள மடலைப் படித்தேன். அந்த நண்பரின் இயல்பு தெரியாமல் நீ இவ்வளவு கோபப்பட்டுக் கொந்தளித்திருக்க வேண்டியதில்லை. அந்த நண்பர் கண்ணதாசன் தி. மு. கழகத்தில் இருந்த போது பேசிய பேச்சுக்களையும் எழுதிய எழுத்துக்களையும் அறிஞர் அண்ணா அவர்கள் கடுமையாகக் கண்டித்த காரணத்தால்தான் அவரது தோழர் சம்பத்தின் மனம் புண்பட்டு இருவருமாகச் சேர்ந்து புதுக் கட்சி ஆரம்பித்து; அதற்கு ஓராண்டில் ஈமக் கடன் செய்து முடித்தார்கள்.

“காமராஜரே! உமக்கு ஆனாவுக்கு அடுத்த எழுத்து என்ன வென்று தெரியுமா?

திருக்குறள் என்பது ஒரு ஊரா? அல்லது நதியா?”

என்று காமராஜரைக் கேட்டுக் கடுமையாகத் தாக்கினர்.

“எருமைக் குரலோன் சிவாஜி கணேசன்; கட்டபொம்மன் படத்தில் “கத்தோ கத்து” என்று கத்துகிறான்.”

என்று சிவாஜிக்கு அர்ச்சனை செய்து தனது வாரப் பத்திரிகையில் நாலுபக்கம் கட்டபொம்மனைக் கண்டித்து எழுதினார்.

“பக்தவத்சலம் மகளும், அழகேசன் மனைவியும், காலையிலே கிராம சேவைக்கு என்று புறப்படுகிறார்கள். மாலையிலே திரும்பி வரும்போது ..... சேலையிலே. .....”

என்று கர்ண கடூரமாகத் திருக்கழுக்குன்றம் கூட்டத்திலே பேசினார்.

இப்படியெல்லாம் பேசுவதையும், எழுதுவதையும் தி. மு. க. தலைவர்கள் கண்டித்தார்கள்.

“பாதக் குறடு எடுத்துப் பண்டித நேருவை பன்னூறு அடி அடிப்போம்.”

என்று கவிதை தீட்டினார். அந்தக் கவிதை வந்த மலரை வெளியிடக்கூடாதென்று அண்ணா அவர்கள் தடுத்து விட்டார்கள்.

தன்னைக் கண்டிப்பதா?

தனது புனித எழுத்துக்களுக்குப் பூட்டுப்போடுவதா முடியாது! முடியாது!

சாக்கடைத் தமிழை என்னால் விடமுடியாது! அதனை வரவேற்கும் இடம் நோக்கிப் போகிறேன்; என்று அந்த நண்பர்; காங்கிரசுக்குப் போய்ச் சேர்ந்திருக்கிறார்.

காங்கிரசில் அவரைக் கண்டிப்பார் இல்லை. ஏன் என்று கேட்பார் இல்லை. எச்சில் இலைகள் விழும் குப்பைத் தொட்டி; தன் வாய்க்குள்ளே என்னென்ன பொருள்கள் வந்து விழுகின்றன என்பது பற்றிக் கவலைப்படுவதில்லை. வயிறு உப்பி விட்டால் போதும் என்று ‘சிவனே’ என்று இருக்கிறதல்லவா?

“எந்தப் பிள்ளை நல்ல பிள்ளை?” என்றானாம்! “அதோ கூறையிலே கொள்ளி வைக்கிறதே அந்தப் பிள்ளைதான்” என்றானாம் மற்றொருவன்! அது போல, கட்சிக் கட்டுப்பாட்டை பதவி வெறிக்காக மீறிய ஒரு பதரை; காங்கிரசில் சேர்த்துக் கொண்டு கும்மாளம் போடுகிறார்கள்.

அப்படிப்பட்ட முகாமில்; அடங்காப்பிடாரிகளுக்குக் கட்டுப்பாடு ஏது?

அதனால்தான்; தி. மு. கழக அமைச்சர்களை ‘கழுதைகள்’ என்று நண்பர் வர்ணிக்கிறார்.

அந்த நண்பர்; தன்னைப்பற்றியே ஒரு அழகான கட்டுரையை அவரது இதழில் எழுதியிருக்கிறாரே; நீ படிக்கவில்லையா?

"நீ பன்றியாகக் கடவாய்! என்று ஒரு அரசன் சபிக்கப்பட்டான். சாபம் பெற்ற அரசன், தன் மகனை அழைத்து; "மகனே! மன்னனாக வாழ்ந்த நான் பன்றியாக வாழ விரும்பவில்லை. ஆகவே நான் பன்றியாக மாறியதும் என்னை வெட்டிக் கொன்றுவிடு!" என்று கேட்டுக் கொண்டான். மகனும் சம்மதித்து; தந்தை-பன்றியாகும் சமயத்தை எதிர்பார்த்திருந்தான். அரசன் பன்றியாகி விட்டான். மகன், பன்றியை வெட்ட வந்தான். பன்றி சொன்னது; "மகனே! இந்த வாழ்க்கையும் எப்படியிருக்கிறது என்று பார்த்து விடுகிறேன்! அடுத்த ஆண்டு வந்து என்னைக் கொன்றுவிடு" என்று! சரி என்று மகன் போய் விட்டான். ஓராண்டு முடிந்து தந்தைப் பன்றியைக் கொல்ல இளவரசன் வந்தான். எங்கும் தேடினான். கடைசியில் கண்டுபிடித்தான். தந்தைப் பன்றி; ஒரு பெண்பன்றியுடனும் சில குட்டிகளுடனும், சகதியில் படுத்திருந்தது. தந்தைக்கு அளித்த வாக்கின்படி இளவரசன், பன்றித் தந்தையைக் கொல்லப் போனான். அதற்குள் பன்றித் தந்தை மகனைத் தடுத்து; "அன்பு மகனே! எனக்கு இந்தப் பன்றி வாழ்க்கை பழகி விட்டது. அதனால் நான் இந்தச் சகதியிலேயே காலங்கழிக்கிறேன். என்னைக் கொல்லாதே! போய்விடு!" என்று கூறிவிட்டது. அதுபோல; என் இனிய நண்பர்களே! காங்கிரஸ் எனும் சகதியிலே வாழும் பன்றி வாழ்வு எனக்குப் பழகி விட்டது!

நம்மைக் கழுதைகள் என்று கூறுகிறவர்; தன்னைப் பற்றி எழுதிக் கொண்ட கதை இது!

அவர் சொன்ன கதையைக் கொண்டே அவரைப் புரிந்து கொள்க!

அன்புள்ள

மறவன்

(22-11-1968)

19. "பசுத்தோல் வேங்கை பாராய்!"

அன்பு நண்ப,

"வீண் மிரட்டல்கள் என்னிடம் பலிக்காது என்னை; இதைச் செய்-அதைச் செய்-என்று யாரும் கட்டுப்படுத்த முடியாது. என்னை நீங்கள் கொன்றாலும் உங்களுக்கு எந்தப் பயனும் கிட்டாது."

லட்சுமணபுரியில் மாணவர்களின் கோரிக்கைகளுக்குப் பதில் அளித்துப் பல்கலைக்கழகத்தில் உதவிப் பிரதமர் மொரார்ஜிதேசாய் அவர்கள் அளித்த அமைதியான கருத்தின் ஒரு பகுதி இது?

மாணவர்களின் கோரிக்கை நியாயமானதோ அல்லவோ; அவர்களின் போக்குச் சரியானதோ அல்லவோ; அவர்களை அணுகிப் பேசிப் பிரச்சினைகளை விவாதிப்பதில் காங்கிரசின் பெருந்தலைவர்கள் காட்டுகிற பொறுமைக்கு இது ஒரு எடுத்துக்காட்டு!

கழக அரசு பொறுப்பேற்ற பிறகு நடந்த இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தீப்பிழம்பெனத் திக்கெட்டும் குமுறிக்கிளம்பிய மாணவமணிகளைத் தன் இனிய குரலால் அழைத்து-கனிவு மிகு நல்லுரைகளால் ஈர்த்து-அவர்களை அமைதிப்படுத்திய தமிழக முதல்வராம் நமது அண்ணன் காட்டிய பொறுமையையும் நினைத்துப்பார்! பொங்குமாங் கடல் போலச் சீறிச் சினந்தெழுந்திடும் மொரார்ஜிதேசாயியையும் பார்!

காங்கிரஸ்காரர்களுக்கு மாணவர்கள் என்றாலே ஒரு கசப்பு! வெறுப்பு!

இப்போது, தமிழ் நாட்டுக் காங்கிரஸ்காரர்கள் கொஞ்சம் மாணவர்களைத் தட்டிக் கொடுக்கிறார்கள். குறைந்த எண்ணிக்கையினராக இருந்தாலும் அந்த மாணவர்களும் கட்டுப்பாட்டு உணர்வுடன் காங்கிரசைக் கண்ணைமூடிக் கொண்டு ஆதரிக்கிறார்கள். ஆனால் பாவம் அவர்களுக்குக்

காங்கிரசின் "சுயரூபம்" தெரியவில்லை. ஏதோ; தங்கள் மீது திடீரென அன்பு தோன்றி விட்டதாக அவர்களுக்கு ஒரு மயக்கம்! ஆட்டுக் குட்டியின் மீது ஓநாயும்-ஆடித்துள்ளும் அழகான மான் மீது வேங்கையும் அன்பு கொண்டு அவைகளின் முதுகைத் தங்கள் நாக்கினால் தடவிக் கொடுக்கின்றன என்று அறிவுள்ள யாரும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

காங்கிரஸ் என்பது மாநிலக் கட்சியல்ல. அகில இந்தியக் கட்சி! மொரார்ஜியோ காங்கிரஸ் தலைவர் மட்டுமல்ல; இந்தியாவின் துணைப் பிரதமர்! அவர், மாணவர்களிடம் நடந்து கொண்ட முறையும் உதிர்த்த வார்த்தைகளும்; அவர் வீற்றிருக்கிற இடத்திற்குப் பெருமை தேடித் தரக்கூடியவைகள் அல்ல!

பல்கலைக் கழகத்திற்கு வந்தவர் முன்னால்-மாணவர்கள் கருப்புக் கைக்குட்டைகளை ஆட்டி; கிளர்ச்சி செய்தனர். அது கண்டு மொரார்ஜி வெகுண்டெழுந்தார். வேலெனச் சொற்களை வீசினார்.

நண்பா; உனக்கு நினைவிருக்குமென நம்புகிறேன்-"மாணவர்-பஸ் தொழிலாளர் தகராறு" சென்னையில் நடந்த போது; தமிழக முதல்வர் அண்ணா அவர்கள், கிளர்ச்சி செய்தவர்களைச் சந்திக்க அவரே சென்றார். பேச்சு வார்த்தை நீடித்த போது தாகமெடுத்த அண்ணாவுக்குத் தண்ணீர் கொடுப்பதையும் தடுத்தனர் சிலர். அவர் பேசும்போது எதிர்ப்புக் குரல் கொடுத்தனர். ஆனால் நமது அண்ணன்; சாந்தகுண காந்திபோல-சாரநாத் புத்தன் போல-பொறுமையின் குன்றேறி நின்று புன்னகை புரிந்தார்.

"எங்கள் மீது கண்ணீர்ப் புகையா?
இது என்ன பாரபட்சம்?"

எனக் கேட்ட பஸ் தொழிலாளரைப் பார்த்து;

"போலீசார் உங்கள் மீது கண்ணீர்ப்புகை விட்டதற்கு ஆத்திரப்படுகிறீர்கள். பிறிதோர் இடத்தில் மாணவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் நடந்ததாகக் கூடச் செய்தி வந்திருக்கிறது."

எனக் கண்கலங்கப் பதில் சொன்ன அமைச்சர் ஒருவரின் பேச்சைத் திரித்துக் கூறி;

"தொழிலாளர்களே உங்களுக்குக் கண்ணீர்ப் புகைதான்! மாணவர்களைச் சுடவே சொல்லி யிருக்கிறேன்."

என்று பேசியதாகக் கதை கட்டிவிட்டு; மாணவர்களைக் காங்கிரசார் தூண்டிவிடப் பார்த்தார்களே-அந்தக் காங்கிரஸ் கட்சியின் பிரதானத் தலைவர்களில் ஒருவரான துணைப் பிரதமர்தான்; நண்பர்-லட்சுமணபுரியில் மாணவர்கள் மீது தீப்பொறி கக்கியிருக்கிறார்.

சென்ட்ரல் ஸ்டேஷனில் அமளி என்றதும் ஓடோடிச் சென்று தன்னந்தனியாக மாணவர்கள் மத்தியிலே நின்ற தமிழக அமைச்சர்களுக்கும்-காங்கிரஸ் ஆட்சியாளருக்கும் இருக்கின்ற முரண்பாட்டைப் புரிந்து கொண்டாயா?

"மாணவர்களுக்காகச் சட்டசபை அவசரக் கூட்டமா?
அவர்களுக்காக ஒரு தீர்மானமா?"

என்று காங்கிரஸ் தலைவர்கள் சட்டசபையில் கேலிக்குரல் எழுப்பிய போது;

"ஆமாம்! அவர்களுக்காகத்தான்!
அந்த மாணவர்களுக்காகத்தான்!
அவர்கள் என் ரத்தத்தின் ரத்தம்-
சதையின் சதை!"

என்று பாசம் பீறிட-பந்தமும் சொந்தமும் திகழ்ந்திட-பதிலிறுத்தாரே அண்ணா; அந்தத் தென்றல் உள்ளத்தையும் பார்!

மொரார்ஜியின் புயல்வேக நெஞ்சத்தையும் பார்!

மொரார்ஜி, லட்சுமணபுரியோடு நிற்கவில்லை-தமிழகத்துக்கும் தாவியிருக்கிறார்; அங்கிருந்தவாறே!

"இந்திதான் தேசிய மொழி!
இந்தியை ஏற்றுக்கொள்ளாமல்
தமிழக அரசு, தவறான பாதையில்
போய்க் கொண்டிருக்கிறது.
இந்தக் கதை வெகுநாள் ஓடாது!"

இதுவும், லட்சுமணபுரியில் மொரார்ஜி தேசாய் பேசியதுதான்!

தமிழகத்தில் இன்னும் காங்கிரசை நம்பியிருக்கிற சில

மாணவர்கள் மொரார்ஜியின், இந்தக் கருத்துக்குத் தலை வணங்கப் போகிறார்களா?

அல்லது, "தமிழ் வளர்க்கப் போகிறோம்" என்று காங்கிரசை விட்டு வரப்போகிறார்களா?-

வடக்கிலிருப்போர் நெஞ்சில் இன்னும் இந்தி வெறி இருக்கிறது! அதனை இந்தியா வெங்கும் பரப்பிடத் துடிக்கிறார்கள் என்பதும்; அதற்குத் தமிழக அரசு தடையாக நின்றால் ஆத்திரப்படுகிறார்கள் என்பதும் மொரார்ஜியின் பேச்சுக்கு விளக்கமாகும்.

"மீண்டும் காங்கிரஸ் அரசு, தமிழ்நாட்டில்
வரவேண்டும். இந்திக்கு ஆதிக்கம்
மலர வேண்டும்."

இந்த ஆசையில்தான்; **"இந்தக் கதை வெகு நாள் ஓடாது தமிழ் நாட்டில்!"** என்று தேசாய் எக்காளக் குரல் கொடுத்திருக்கிறார்.

"கதை ஓடாது" என்றால் "கழக ஆட்சி நடக்காது" என்ற பொருளில் கூறியிருக்கிறார்.

கழக ஆட்சி ஒழிந்தால்; இந்திக்குச் சாமரம் வீசுவோர்-அரசு கட்டில் ஏறுவர்! அதற்குப் படிக்கட்டாகத்தான் சில மாணவர்களைப் பயன்படுத்தப் பார்க்கிறார்கள் காங்கிரசார்!

பாவம்; என்னதான் பசுத்தோலைப் போர்த்திக் கொண்டும் காங்கிரசார் பசப்புமொழி கூறினாலும்; உள்ளேயிருப்பது வேங்கை யென்ற உண்மை அடிக்கடி வெளிப்பட்டு விடுகிறது!

அதற்கு உதாரணமதான
மொரார்ஜியின் பேச்சு!

அன்புள்ள
மறவன்
(25-11-1968)

42208.
8894.8116
அருணா
தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

20. "தமிழ்த்தாயே அவர்களை மன்னித்துவிடு!"

அன்பு நண்ப,

ஆருயிர்த் தோழ,

வெட்டிவா என்றுரைத்தால் கட்டி வரும் வீரா!

அருமை அண்ணனுக்குத் தம்பீ!

பெருமை மிகு கண்மணியே!

உன்னைத்தான் அழைக்கின்றேன்; உனது ஒளிமிகு விழிகளைப் பூரிப்போடு பார்த்தவாறுதான் அழைக்கின்றேன்; விம்மிப் புடைத்த உன்தோளைத் தட்டித்தான் அழைக்கின்றேன்; இடையிலிருப்பது நாலைந்து நாட்கள்தான்!

டிசம்பர் முதல் தேதி-நமது எண்ணமெலாம் இனிக்கும் நாள். எழுச்சி பொங்கும் நாள். இதயம் பூரிக்கும் நாள்.

"என்னப்பா! ஊரெல்லாம் தெருவெல்லாம் தோரணம் கட்டுகிறார்கள்? கோயில் திருவிழாவா?"

என்று கேட்கும் மழலையை முத்தமிட்டவாறு;

"திருவிழாதானடா என் கண்ணே! திகைத்துக் கிடந்த சமுதாயத்தை விழிக்க வைத்த பேரறிஞன் சாதனைகளில் ஒன்றைப் பாராட்டுகின்ற திருவிழாதானடா என் கண்ணே"

என்று தகப்பன் பதில் கூறிட;

"ஆமாம்! அவனோடு விளையாடிக் கொண்டிருந்து விட்டால் வேலையாகுமா? வீட்டு வாயிலில் "தமிழ்நாடு வாழ்க" என்று மின்சாரச் சரவிளக்கு ஏற்றுவதாகச் சொன்னீர்களே; அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டாமா?"

என, குழந்தையின் தாய், கணவனிடம் கேட்டிட;

"பார்! பார்! இன்றிரவு பார்! வீட்டிலே மட்டுமா? வீதி முழுவதும் வண்ண விளக்கு எரியப் போகிறது பார்! முதலில், நீ தாழ்வாரத்திலும் கூடத்திலும் "தமிழ் நாடு வாழ்க" என மாக்கோலம் போடப் போவதாகச் சொன்னாயே; அந்த வேலையைக் கவனி!"

என்று அவன் செல்லமாகச் சொல்லிட; இப்படி வீட்டுக்கு வீடு பல, வீட்டுப் புலித் தமிழர் இன்ப மழலையோடும், இல்லறத் துணைவியோடும் உரையாடல் நடத்தி ஊரெல்லாம் அழகுபடுத்தும் நாள் அந்த நாள்!

தமிழ் நாடு!
தமிழ் நாடு!!
தமிழ் நாடு!!!

ஆகா! இதற்கா இவ்வளவு ஆர்ப்பாட்டம் என்று அசூயைக்காரர்கள் வாலறுந்த நரிகள் என ஊளையிடுகின்றனர் ஒரு பக்கம்! அந்தக் கூச்சல் பிறர் காதில் விழா வண்ணம்; "வாழ்க தமிழகம்!" என்று ஒலியெழுப்ப உன்னைப் போன்றோர் லட்சோப லட்சம் பேர் இருக்கிறார்கள்.

இருபதாண்டு காலம் தமிழர்கள் நடத்திய தவத்திற்குக் கிடைத்த வரம்; தமிழ் நாடு!

கடுஞ்சோதனைகளுக்குப் பிறகு அடைந்திட்ட பயன்; தமிழ் நாடு!

ரத்தச் சகதியிலே தமிழ் இளைஞர் பலர் தங்கள் தலைகளைச் செந்தாமரை மொட்டுக்களாக மிதக்க விட்டதற்குப் பிறகு கிடைத்த வெற்றி; தமிழ் நாடு!

அறப்போர்கள் அலட்சியப்படுத்தப்பட்டு; அத்தகைய அலட்சிய மேதைகள்-ஆணவக்காரர்கள் ஜனநாயகத்தின் கையினால் குட்டுப்பட்ட பிறகு கிடைத்த உரிமை; தமிழ் நாடு!

"தமிழ் நாடா? இலக்கியத்திலே இருக்கிறதா அப்படியொரு பெயர்?"

தருக்குடன் கேட்டனர்; தர்பார் நடத்தியவர்கள்!

"உலகத்திற்கு 'மெட்ராஸ்' என்பதுதான் அறிமுகமான பெயர்! தமிழ் நாடு என்று சென்னையிலே மட்டும்

அழைக்கலாம். மெட்ராஸ் என்று உலகத்தோர் அழைக்கட்டும்”

என்று ஆர். வெங்கட்ராமன் போன்ற பழைய மந்திரிகளும்-புதிய எதிர்க் கட்சித் தலைவர் கருத்திருமனும்-சட்ட சபையில் கருத்தறிவித்தார்கள்!

நாலுகோடித் தமிழ் மக்களின் நெஞ்சிலே நீங்கா நிறை நாதமாகிவிட்ட அந்தப் பெயருக்குக் காங்கிரசார் வீம்புடன் காட்டிய எதிர்ப்பு ஏராளம்! ஏராளம்!

எழுபத்து எட்டுநாள் உண்ணா விரதம்! உடல் இளைக்கிறது! எடை குறைகிறது! மூச்சு வாங்குகிறது! நாடித் துடிப்பு அடங்குகிறது! ஈளை கட்டுகிறது! இழுப்பு காணுகிறது! அய்யகோ! தமிழ் நாடு பெயர் மாற்றக் கோரிக்கைக்காக உண்ணா நோன்பிருந்த சங்கரலிங்கனாரின் பக்கமே திரும்பவில்லை, அன்றைக்குப் பாராண்ட பாவிகள்!

இன்றைக்கு நமது மகிழ்ச்சியிலே பங்குகேட்க வந்தாலும் பரவாயில்லை; “உனக்கென்ன மகிழ்வதற்கு உரிமை யிருக்கிறது?” என்று உரத்த குரலில் கத்துகிறார்கள்.

என்று தமிழன்னையிடம் கேட்டுக் கொண்டு;

“தமிழ்த் தாயே! அவர்களை மன்னித்து விடு. முத்து பிறக்கும் கடலில் நண்டு நத்தைகளும் பிறப்பது போல்; தமிழ்ப் பகைவர் சிலர் பிறந்து விட்டார் உன் வயிற்றில்! என்ன இருந்தாலும் உன் பிள்ளைகள் தானே! ஆகவே அவர்களை மன்னித்துவிடு தாயே; மன்னித்துவிடு!”

என் உயிரனைய நண்பா!

உயர்குண மேவிய தமிழா!

உலகெங்கும் பரவியிருக்கும் உத்தமனே!

உன் விழி திறந்த தமிழுக்கு விழா எடுப்பாய்!

தமிழ் நாடு வாழ்க! வாழ்க! என முரசறைவாய்!

மங்கல முரசறைவாய்!

கொடிகள், வான்முட்டப் பறக்கட்டும்!

கொள்கை மணக்கும் "பதாகைகள்"
தெருவெல்லாம் திகழட்டும்!

இனிமைத் தமிழ் நாடு வாழ்க என
இசை முழக்கம் எங்கெங்கும் கேட்கட்டும்!

ஊர்வலங்கள் கடல் அலையை
வெல்லட்டும்!

கூட்டங்கள், பட்டி தொட்டியெல்லாம்
நடக்கட்டும்!

விழா! விழா! விழா!
மகிழ்ச்சி! மகிழ்ச்சி! மகிழ்ச்சி!

தமிழ் நாடு! தமிழ் நாடு! தமிழ் நாடு!

இந்தப் பெருமைமிகு திருநாளை உருவாக்கிடக் காரணமாகத் திகழ்கின்ற;

தெவிட்டாத செங்கரும்புப் பேச்சாளர்-தித்திக்கும் சீனிக்கற்கண்டு எழுத்தாளர்-எத்திக்கும் புகழுகின்ற நம் தலைவர்-பேரறிஞர் அண்ணாவின் புகழ் பாடி;

நாடெங்கும் நல்லவிழா கொண்டாட-

நண்பனே! உன் முயற்சிகளைத் தொடங்கிடுக!

அன்புள்ள

மறவன்

(26-11-1968)

21. 'தமிழ் நாடு' ஒரு முழு விளக்கம்!

அன்பு நண்ப,

"புளுகினாலும் புளுகினான் மனுஷன்
நீலம் கட்டுப்படப் புளுகினான்"

என்று கிராமங்களிலே ஒரு வேடிக்கை மொழி பேசுவதுண்டு.

சலவை செய்கின்ற தொழிலாள நண்பர்களுக்கு; சலவை உடையில் நீலம் சரியாகப் பாவாத நேரத்தில்; ஊரில் ஏதாவது ஒரு பொய்யைச் சொல்லிப் பரப்பி வைத்தால் உடனே சலவைக்கான உடையில் நீலம் பிடிக்கும் என்பது ஒரு தவறான நம்பிக்கை. சலவைத் தொழிலாளர்களை சாக்காக வைத்துக் கொண்டு சந்தர்ப்பவாதிகள் புளுகுப் பிரச்சாரத்தில் ஈடுபடுவது உண்டு.

ஒரு இருபது ஆண்டுகளுக்கு முன்பு "வடலூர் ராமலிங்கம் வரப்போகிறார். மீண்டும் நாட்டில் உலவப் போகிறார்" என்று துண்டு அறிக்கைகள் வெளியிடப்பட்டன. ஏராளமான மக்கள் அதனை நம்பி ஏமாந்தார்கள்.

ஐந்தாறு வருடங்களுக்கு முன்பு, திருப்பதி கோயிலைப் பற்றி ஒரு துண்டு அறிக்கை லட்சக்கணக்கில் நாடெங்கும் விநியோகிக்கப்பட்டது. அதில்;

ஒருநாள் திருப்பதி கோயில் குருக்கள் சாமி சந்நதிக்குப் போன போது; ஒரு ஐந்துதலை நாகம் பட மெடுத்து ஆடியது என்றும், குருக்கள் அந்த நாகத்தை வணங்கி நின்றார் என்றும், உடனே பெரிய ஜோதி தெரிந்து நாகம் மறைந்து விட்டது என்றும், திகைப்படைந்த குருக்களின் காதில் வெங்கடாஜலபதிப் பெருமாள் அசரீரியாகப் பேசினார் என்றும், விரைவில் உலகம் அழிந்து அவர் அடுத்த அவதாரம் எடுக்கப் போகிறார் என்றும்; பெரிய கதையொன்றே எழுதப்பட்டிருந்தது.

போகப் போக மக்கள் இவைகளையெல்லாம் பொய்ச் சரடுகள் என்று புரிந்து கொள்ளத் தலைப்பட்டனர்.

சமுதாயத்தில் கோயில் குளம் சாமி இவைகளை அடிப் படையாக வைத்துக் கூறப்படும் பொய்களையெல்லாம் மிஞ்சுகிற அளவுக்கு இன்றைக்குச் சில நண்பர்கள், அரசியலில் பொய்யை நம்பிப் புகுந்திருக்கிறார்கள். புளுகுகிற வரையில் லாபம்! அகப்பட்டால் வாயைப் பொத்திக் கொண்டு இருந்து விடுவோம்! என்பது அவர்களது எண்ணம்.

கவி. கா. மு. ஷெரீப், "தமிழ்நாடு பெயர் மாற்றம்" பற்றி ஒரு நீண்ட கட்டுரையை எழுதியுள்ளார். அதில்; தமிழ் நாடு பெயர் மாற்றியதில்-தி. மு. க. மகிழ்ச்சி அடைய ஒன்றுமில்லை-பெருமை யடைய வேண்டியது காங்கிரஸ் கட்சிதான் என்று அழுத்தம் திருத்தமாகப் பல்லைக் கடித்துக் கொண்டு; வாதம் செய்திருக்கிறார்.

தொடக்கமே, பொய்யிலே தொடங்குகிறார்!

"காமராஜர் முதலமைச்சராக இருந்த போது 1961 பிப்ரவரி 24 ஆம் நாள் பகல் 12-40க்கு சென்னை சட்டமன்றத்தில் தீர்மானம் கொணர்ந்து 'சென்னை ராஜ்யம்' என்பதை "தமிழ்நாடு" என்று மாற்றியது காங்கிரஸ் ஆட்சி."

இது, அவரது கட்டுரையின் தொடக்கம், 1961 பிப்ரவரி 24 ஆம் தேதி அப்படியொரு தீர்மானத்தைக் காங்கிரஸ் ஆட்சியாளர்கள் கொண்டு வரவே இல்லை. சட்ட சபை நடவடிக்கைக் குறிப்புக்கள் என்ற புத்தகம் (அரசாங்க வெளியீடு) முழுமையும் நான் தேடிப் பார்த்துவிட்டேன். எந்தப் பக்கத்திலும் எந்த வரியிலும் காங்கிரஸ் ஆட்சியின் சார்பில் அப்படியொரு தீர்மானம் கொண்டு வந்து நிறைவேற்றப்பட்டதாகவோ; ஷெரீப்பு குறிப்பிட்டிருப்பதைப்போல அந்தத் தீர்மானத்தை சி. சுப்ரமணியம் முன்மொழிந்து பேசியதாகவோ; "தமிழ்நாடு வாழ்க!" என்று எல்லா எம்.எல்.ஏ. க்களும் வாழ்த்தொலி முழங்கியதாகவோ, எந்தக் குறிப்பும் கிடையாது. திரு. சுப்பிரமணியம் அவர்களே கூட கா. மு. ஷெரீப்பின் கடைந்தெடுத்த பொய்யை ஒப்புக்கொள்ளமாட்டார். ஏனென்றால், சட்டசபைக் குறிப்பேடு அப்படித்தான் கூறுகிறது.

ஆனால்! நடந்தது என்ன தெரியுமா நண்பா?

1960 ஆம் ஆண்டு ஆகஸ்டு 19 ஆம் நாள் சட்டசபையில் உத்தியோகப்பற்றற்ற நாள் (Non Official Day) என்ற நாளில் திரு. பி. எஸ். சின்னத்துரை என்ற பி. சோ. கட்சி உறுப்பினர்,

"சென்னை ராஜ்யத்துக்குத் தமிழ்நாடு எனப் பெயர் சூட்ட அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும்."

என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அன்று அவர் பேசிக் கொண்டிருந்தபோதே; உரிய நேரம் முடிந்து விட்டபடியால்; அடுத்த உத்தியோகப்பற்றற்ற நாளில் அவர் பேசலாம் என்று அன்று தலைமை வகித்த துணைச் சபாநாயகர் அறிவித்தார்.

அதற்குப் பிறகு அந்தத் தீர்மானத்தை நாலைந்து மாதங்கள் கழித்து, 1961 பிப்ரவரி 24-ஆம் தேதியன்று அதே நண்பர் சின்னத்துரை அவர்கள் தான் கொண்டு வந்த தமிழ்நாடு பெயர் மாற்றத் தீர்மானத்தை (உத்தியோகப் பற்றற்ற நாளில்) தொடர்ந்து உரையாற்றினார். அந்த விவாதத்தில் கழக சட்டமன்ற உறுப்பினர்கள் பேராசிரியர் அன்பழகன், திரு. ப. உ. சண்முகம் ஆகியோர் கலந்து கொண்டு, தமிழ்நாடு பெயர் மாற்றத்துக்கான காரணங்களைக்கூறி, அதனை நிறைவேற்றுமாறு காங்கிரஸ் அரசைக் கேட்டுக் கொண்டனர். தீர்மானம் சி. சுப்பிரமணியம் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படவில்லை, இறுதியாகத் தோழர் சின்னத்துரை அந்தத் தீர்மானத்தை வலியுறுத்த வில்லை; அப்போது சுப்பிரமணியம் ஒரு விளக்கம் தந்தார். **அதாவது தமிழ் நாட்டுக்குள்ளே மாத்திரம் சென்னை ராஜ்யம் என்று எழுது வதற்குப் பதில் 'தமிழ் நாடு' என்று எழுதலாம் என்பதேயாகும்.**

பொய்யிலே பெரிய பொய்!

அதோடு சின்னத்துரை திருப்தி அடைந்து தீர்மானத்தை வலியுறுத்தாது விட்டுவிட்டார்.

ஆனால் கா.மு. ஷெரீப்பின் கட்டுரை; நேர் மாறான தகவல்களைத் தந்திருக்கிறது. சந்தேகமிருந்தால் 1960 ஆகஸ்டு 19-ஆம் தேதி சட்டசபை நடவடிக்கைப் புத்தகம் பக்கம் 186-187 ஆகியவைகளையும்; 1961 பிப்ரவரி 24-ஆம் தேதி சட்டசபை நடவடிக்கைப் புத்தகம் 432 முதல் 486 வரையிலுள்ள பக்கங்களையும் படித்துப் பார்த்துக் கொள்ளலாம்.

"நமது மாநிலத்திற்கு 'சென்னை ராஜதானி' என்பது முதல் பெயராகும். அடுத்தது "மெட்ராஸ் ஸ்டேட்" என்பது, இவை ஆங்கிலேயரால் சூட்டப் பட்டவை. இந்தப் பெயர்களை முதன் முதலாக மாற்றித் "தமிழ்நாடு" என்று பெயர் வைத்ததே காங்கிரஸ் கட்சி தான்! ஆம்; தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருந்த போது 1961 பிப்ரவரி 24ஆம் நாள் பகல் 12-40க்கு சென்னை சட்டமன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்து சென்னை ராஜ்யம் என்பதை தமிழ் நாடு என்று மாற்றியது காங்கிரஸ் ஆட்சி"

என்று கட்டுரை எழுதிய கா. மு. ஷெரீப்பு கூறியுள்ள பொய்க்கு ஈடாக உலகத்தில் எந்தப் பொய்யுமே இருக்க முடியாதப்பா!

'மெட்ராஸ் ஸ்டேட்' என்பதைத் தமிழ்நாடு என மாற்ற வேண்டுமென்று எதிர்க்கட்சியினர் வலியுறுத்திக் கூறியபோது; சுப்பிரமணியம் சொன்ன பதில் என்ன தெரியுமா?

"இன்றைக்கு இருக்கக்கூடிய முறையில் 'மெட்ராஸ்' என்று சொல்லிவருகிறோம். நமது அரசியல் அமைப்பில் 'மெட்ராஸ்' என்று இடம் பெற்றிருக்கிறது. அதை மாற்ற வேண்டிய அவசியமில்லை யென்ற முடிவுக்குச் சர்க்கார் வந்திருக்கிறது."

வீட்டுக்குள் லட்சுமி பள்ளியில் மூதேவியா?

1961 பிப்ரவரி 24 ஆம் நாள் காங்கிரஸ் ஆட்சியின் சார்பில் சுப்பிரமணியம் உதிர்த்த அலட்சியம் நிறைந்த பதில்தான் இது!

பாவம்; போனால் போகட்டும் என்று தமிழ் நாட்டுக்குள்ளே தமிழ்நாடு என்று அழைத்துக் கொள்ளலாம் என்ற உரிமையை மட்டும் அவர்கள் வழங்கச் சிறிது மனம் இரங்கினார்கள்.

வீட்டுக்குள்ளே "லட்சுமி" என்று கூப்பிடுவோம்-பள்ளிக் கூடத்துப் பதிவேட்டுப் பெயர் 'மூதேவி' என்று இருக்கட்டும் என்பதாகப் பெற்றோர்கள் கருத்தறிவித்தால் எப்படியிருக்குமோ, அப்படிப்பட்ட ஒரு கருத்தை, சுப்பிரமணியனார் அமைச்சராக இருந்தபோது சட்டசபையில் அறிவித்தார்.

“இன்றைக்கு அந்த அடிப்படையில் வெளியில் மற்றவர்களுக்கு ஆங்கில மொழியில் எழுதும் போதும் ஆங்கிலத்தில் பேசும் போதும் மெட்ராஸ் என்று வைத்துக் கொண்டு, அதற்காக இப்போது போய் அரசியல் சட்டத்தை மாற்றிக் கொண்டிராமல், ‘மெட்ராஸ் ஸ்டேட்’ என்பதற்குத் தமிழில் ‘சென்னை ராஜ்யம்’ என்று எழுதுவதற்குப் பதில் ‘தமிழ் நாடு’ என்று எழுதுவது சட்டத்திற்கு விரோதமாக இருக்கப் போவதில்லை. இன்றைக்கு இப்போதுள்ள அரசியல் சட்டத்தை மாற்ற வேண்டிய அவசியமில்லை.”

இதுதான் 1961 பிப்ரவரி 24ஆம் நாள் சுப்பிரமணியம் தந்த ஆணித்தரமான பதில்.

சென்னை ராஜ்யம், தனித்தமிழில் ‘தமிழ் நாடு’ என அழைக்கப்படலாமே தவிர;

‘மெட்ராஸ் ஸ்டேட்’ என்பது மாற்றப்பட வேண்டிய அவசியமில்லை என்று விளக்கிக் கூறிவிட்டார். அது மட்டுமா? ஒட்டக் கூத்தன் பாட்டுக்கு இரட்டைத் தாழ்ப்பாள் என்பது போல இறுதியாகப் போட்ட ஒரு போடு!

“ஆகவே இந்த முடிவை இந்தச் சபையும் ஏற்றுக்கொண்டு, இனிமேல் இந்தப் பெயர் வைக்கும் பிரச்சினையில் யாரும் அனாவசியமாக ஈடுபடத் தேவையில்லை என்பதை வலியுறுத்த விரும்புகிறேன்.”

வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்பார்களே அது போலப் பேசி முடித்துவிட்டார் அன்றைக்கு சுப்பிரமணியனார்!

ஆனால்; இந்தப் பொய்யா (?) மொழிக்கவிராயர், திரு. ஷெரீப்பு என்ன எழுதுகிறார் தெரியுமா?

மராட்டியம் வேண்டாம்
பம்பாய் போதும்!

“வேளை வரட்டும்; என்று காங்கிரஸ் ஆட்சி; பெயர் மாற்றத்தைத் தள்ளி வைத்திருந்தது.”

இப்படியொரு அதிசயமான செய்தியை அன்பர் ஷெரீப்பு வெளியிடுகிறார்.

"அரசியல் சட்டத்தில் மெட்ராஸ் ஸ்டேட் என்றிருப்பதை மாற்ற வேண்டுமானால் பாராளுமன்றத்தில் தீர்மானம் போடவேண்டும். அந்தத் தீர்மானத்தையும் நாம் உரிய சமயத்தில் நிறைவேற்றித் 'தமிழ் நாடு' என்ற சொல் அரசியல் சட்டத்தில் இடம் பெறச் செய்வோம்; என்று சட்ட சபையில் சுப்பிரமணியம் பலத்த கரகோஷத்திற்கிடையே கூறினார்."

என்பதாக, கவி. ஷெரீப்பு எழுதியுள்ளதை நானும் 1961 பிப்ரவரி 24 சட்டசபை நடவடிக்கைப் புத்தகத்தில் தேடித் தேடிப் பார்க்கிறேன் என் கண்ணுக்குத் தென்படவே இல்லை.

அண்டப் புளுகர்-ஆகாயப் புளுகர் என்றெல்லாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அவர்களையெல்லாம் நேரிலே காண்பதென்றால் "சத்திய மூர்த்தி பவன"த்திற்குத்தான் செல்ல வேண்டும் போலிருக்கிறது.

"மெட்ராஸ் ஸ்டேட்"டை "தமிழ் நாடு" என்று மாற்றுவதற்கு ஒப்புக்கொள்ளாதது மட்டுமல்ல; பம்பாய் மாநிலத்தை மராட்டியம் என்று அவர்கள் மொழிப் பற்றோடு மாற்றிக்கொண்டதைக் கூட அன்றையதினம் அமைச்சர் சுப்பிரமணியம் தவறு என்று குறிப்பிட்டார்.

"மகாராஷ்டிரா என்று சொல்லிக் காட்டி, நாமும் அதற்காக வைத்துக் கொள்ள வேண்டும் என்று சொல்வதை நான் ஏற்றுக்கொள்ள வில்லை. மகாராஷ்டிரா என்று வைத்திருப்பது கூடச் சரியல்ல என்பது என் சொந்த அபிப்பிராயம்."

1961 பிப்ரவரி 24 ஆம் நாள் சட்டசபையில் சுப்பிரமணியம் திருவாய் மலர்ந்தருளிய வாசகம்தான் நண்பா; இதுவும்! (பக்கம் 480 சட்டசபை நடவடிக்கைப் புத்தகம்) அதாவது; தன்னைப்போலவே மராட்டிய மண்டலாதிபதிகளும் உணர்ச்சியற்றவர்களாக இருக்க வேண்டும்-அல்லது மக்களின் விருப்பத்தைக் குப்பைக்கூடையில் அள்ளிப் போடும் மமதையாளர்களாக இருக்க வேண்டுமென்று அவர் எதிர்பார்த்தார்.

இந்த ஆணவப் போக்கு-அலட்சிய மனப்பான்மை-சர்வாதிகார நடத்தை-அனைத்தையும் மறைத்துவிட்டு "ஆகா! நாங்கள் அப்போதே 'தமிழ்நாடு' என்ற பெயரை வைப்பதற்கு

ஆதரவாளர்களாக இருந்தோம் என்று காங்கிரசார் எழுதுவதும் பேசுவதும் எவ்வளவு பெரிய ஏமாற்றுவித்தை என்பதை எண்ணிப் பார் நண்பா!

ஆக; இந்த அளவோடு 1961 பிப்ரவரி 24-ஆம் தேதியன்று தமிழ் மக்களின் ஆசைக்கு முற்றுப்புள்ளி வைத்து விட்டார்கள். தி. மு. கழகம் போன்ற சட்டசபைக் கட்சிகளின் ஏகோபித்த குரல் எள்ளி நகையாடப்பட்டு; தமிழரசுக் கழகத்தினர் நடத்திய போராட்டம் கேலி செய்யப்பட்டு; சங்கரலிங்கனாரின் உண்ணாவிரதம் அலட்சியப்படுத்தப்பட்டு; அவரது சாவு சாதாரணமாகக் கருதப்பட்டு; காங்கிரசார், தாங்கள் பிடித்த முயலுக்கு மூன்றே கால் என்று அடம் செய்து எட்டேகால் லட்சணங்களாய் காட்சியளித்தனர்.

அரங்கண்ணல் தீர்மானம்

அதற்குப் பிறகு, 1962 பொதுத் தேர்தல் முடிந்து சுப்பிரமணியம், டெல்லி மந்திரியாகப் போய்ச் சேர்ந்தார். கழகத்தினர் ஐம்பது பேர் நாவலர் தலைமையில் சட்ட சபையில் நுழைந்தனர்.

1964-ஆம் ஆண்டு, ஜனவரி 24ஆம் நாளன்று தமிழக சட்டமன்றத்தில் திரு. இராம. அரங்கண்ணல் அவர்கள் 'தமிழ்நாடு' பெயர் மாற்றத் தீர்மானத்தைக் கொண்டு வந்தார். அப்போது அரங்கண்ணல் பேசியதைக் காங்கிரஸ் நண்பர்களுக்கு நினைவூட்ட வேண்டியது மிக அவசியமாகும்.

> **"இந்தத் தமிழ் நாடு பெயர் மாற்றக் கோரும் தீர்மானம் 1961 ஆம் ஆண்டு இதே மாமன்றத்தில் விவாதிக்கப்பட்டிருக்கிறது. கடந்த செப்டம்பர் 6ஆம் தேதியன்று டெல்லி ராஜ்ய சபையில் 'தமிழ் நாடு' பெயர் மாற்றத் தீர்மானத்தைக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் புபேஷ் குப்தா அவர்கள் கொண்டு வந்த போது அதற்குப் பதில் அளித்த மத்திய அமைச்சர், இந்தத் தீர்மானம் மாநில சர்க்காரிலிருந்து வர வேண்டும் என்று கூறியதைக் கண்ட பிறகே, நமது மாநில அரசுக்கு ஒரு கெட்ட பெயர் வந்துவிடக் கூடாதே யென்றும் தமிழ் நாட்டிலே இருக்கிற அத்தனை கட்சிகளும் அத்தனை மக்களும் நல்ல**

காரியங்களைச் செய்யத் தயாராக இருக்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டவும் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கிறேன்.”

அரங்கண்ணல் அவர்கள் இப்படியொரு முன்னுரையுடன் கொண்டு வந்த தீர்மானத்தின்மீதான விவாதம் 1964ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் நாளுக்கு ஒத்திவைக்கப்ப

கருவாட்டுக் கடையில்
மல்லிகை மணமா?

அந்த விவாதத்தில் ஒரு தமிழ்ப் புலவர் தொடக்கத்தில் பேசினார். அவர் பெயர் ஈரோடு தட்சணாமூர்த்திக் கவுண்டர். தமிழ்ப் புலவராக இருந்தாலும் காங்கிரசிலே அல்லவா இருக்கிறார்? கருவாட்டுக் கடையில் மல்லிகைப் பூவின் மணம் மிஞ்சுமா?

அதனால் அவர் என்ன பேசினார் தெரியுமா?

“வடாதுபனிபடு ..... வடாது பெருங்கல்”... இவ்வாறு பல செய்யுள்கள் இருக்கின்றன. இலக்கிய வகையிலே பார்த்தாலும் நாம்; ‘நாடு’ என்று வழங்குவது உணர்ச்சி பூர்வமாக பாரத தேசத்தைத் தான் கொள்ளவேண்டும். தமிழ் மாநிலத்துக்கு “தமிழகம்” என்று வேண்டுமானால் பெயர் வைத்துக் கொள்ளலாம். நான் இதனை யோசனையாகத்தான் சொல்கிறேன். என்ன இருந்தாலும் தி. மு. க. நண்பர் அரங்கண்ணல் இந்தத் தீர்மானத்தைக் கொண்டு வந்திருப்பதில் அவசியம் இல்லை. இதை நான் வன்மையாக ஆட்சேபிக்கிறேன்.”

வெங்கட்ராமனின் எதிர்ப்பு

பாவம்; தமிழ் உணர்ச்சி சிறிது தலை காட்டியது. உடனே காங்கிரஸ் உணர்ச்சி வந்து அவரைத் தடுத்துவிட்டது.

“தமிழ் நாடு என்று பெயர் வைத்து விட்டால் வேலையில்லாத் திண்டாட்டம் நீங்குமா? எல்லோரும் படித்து விடுவார்களா? வறுமை நீங்குமா? வீடு வருமா? இது ஒரு சாதாரணப் பிரச்சினை!”

இப்படி ஒரு காங்கிரஸ் அம்மையார் சட்டசபையில் கனல் தெறிக்கப் பேசினார். மிகக் கொடிய பேச்சு! பெயரோ

குழந்தையம்மாள்! மீண்டும் அந்தப் பேச்சுக்களை நீ படித்துப் பார்க்க விரும்பினால்; (1964 ஜூலை 23 என்ற தேதியுள்ள சட்டசபை நடவடிக்கைப் புத்தகம், பக்கம் 64 முதல் 101 வரையில்) படித்துப் பார்க்கலாம்.

"மெட்ராஸ் ஸ்டேட் என்று சொன்னால்தான் உலகத்திலேயே ஒரு கண்யம் இருக்கிறது. உலகத்திலே ஒரு மரியாதை இருக்கிறது"

அதே நாளில் தீர்மானத்தை எதிர்த்துப் பேசிய காங்கிரஸ் உறுப்பினர் கோசல்ராமின் பேச்சில் ஒரு பகுதிதான் மேலே குறிப்பிட்டது!

"தமிழ் நாடு என்று கூறுவதால் எல்லோருக்கும் சந்தோஷமாகத் தானிருக்கிறது. அதே மாதிரி "மெட்ராஸ் ஸ்டேட்" என்று சொல்லும் போதும் சந்தோஷமாகத்தானிருக்கிறது. அப்படி இருந்து வருவதை எதற்காக இப்போது போய்க் கெடுக்க வேண்டும்? கான்ஸ்டிட்யூஷனில் இருக்கிறபடி இருக்கட்டும். இங்குமட்டும் தமிழில் போய்க் கொண்டிருக்கட்டும். வெளியார்கள் 'மெட்ராஸ் ஸ்டேட்' என்றே வைத்துக் கொண்டிருக்கலாம். ஆகவே நாம் எடுத்திருக்கிற முடிவே நியாயமானது.....கனம் அங்கத்தினர் தீர்மானத்தை வாபஸ் வாங்கிக் கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் அதை எதிர்க்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும்."

இப்படிப் பதில் கூறியவர் யார் தெரியுமா? அவர்தான் மென்மையான உள்ளமும், இனிமையான புன்னகையுங் கொண்ட **அமைச்சர் வெங்கட்ராமன்!**

கழகத் தோழர்கள்
வெளி நடப்பு!

தீர்மானத்தைக் காங்கிரஸ் அமைச்சரவை புறக்கணித்தது. எதிர்க் கட்சித் தலைவர் நாவலர் எழுந்து;

"நாங்கள் எவ்வளவோ விளக்கங்களை வினயமாக எடுத்துச் சொல்லியும், பல முறை வேண்டுகோள் விடுத்தும், வற்புறுத்திக் கூறியும், அமைச்சரவையும்

ஆளுங் கட்சியும் திட்டவட்டமாக ஏற்றுக் கொள்வதற்கில்லை யென்று குறிப்பிட்ட காரணத்தால் எங்கள் அதிருப்தியைத் தெரிவிக்கவும், ஆளுங் கட்சியின் போக்கைக் கண்டிக்கவும் வெளி நடப்பு செய்வதைத் தவிர வேறு வழியில்லை”

எனக் கூறியதைத் தொடர்ந்து எதிர்க் கட்சியினர் வெளிநடப்புச் செய்தனர்.

நண்பா! தமிழ்நாடு சட்டசபையில் மட்டுமா காங்கிரசார் இப்படி நடந்து கொண்டனர்? டெல்லி மாநிலங்கள் அவையிலும் அப்படித்தான் நடந்து கொண்டனர். அதுவும் தமிழ்நாட்டைச் சேர்ந்த காங்கிரசார்!

அறிஞர் அண்ணா அவர்கள், தமிழ்நாடு பெயர் மாற்றத் தீர்மானம் பற்றி டெல்லி மாநிலங்கள் அவையில் வீர உரை ஆற்றிய போது;

தமிழ்நாட்டைச் சேர்ந்த காங்கிரஸ் உறுப்பினர் ராஜகோபாலன் (காமராஜரின் நெருங்கிய நண்பர்) அவர்கள் பேசியதைப் படித்துப்பார்!

“தமிழ் நாடு பெயருக்காக ஒரு நபர் உண்ணா விரதம் இருந்து உயிரையும் விட்டார். அதற்குப் பிறகும் நாங்கள் தேர்தலில் ஜெயித்தோம். சென்னை ராஜ்யம் என்ற பெயர் இருக்கிறபடி இருக்கட்டும் என்று மக்கள் தீர்ப்பளித்து விட்டார்கள்.”

இதுதான் அவரது பேச்சு! சங்கரலிங்க நாடார் யாரோ ஒரு நபராம்! அவ்வளவு ஆணவம் அவர்களுக்கு!

கருத்திருமனின் ‘கருத்து’

இத்தனைக்கும் பிறகுதான் நண்பா; நமது ஆட்சி வந்த பிறகு-அண்ணன் அரியாசனம் ஏறிய பிறகு- தமிழன்னையைச் சரியாசனத்தில் அமர்த்த-1967 ஜூலை 18ஆம் நாள் தமிழகச் சட்டமன்றத்தில் தமிழர்களின் நெடு நாளைய கனவு நிறைவேறுகிறவகையில் தமிழ்நாடு பெயர் மாற்றத் தீர்மானத்தை அண்ணா அவர்கள் முன்மொழிந்தார்கள். அப்போதுகூட காங்கிரஸ் தலைவர் கருத்திருமன் என்ன பேசினார்?

“தமிழ் நாடு-மெட்ராஸ் ஸ்டேட் என்று இரண்டும் இணைந்திருக்க வேண்டுமென்று வேண்டிக் கொண்டு ‘தமிழ் நாடு’ எனப் பெயர் சூட்டுவதை பெருமதிப்புடனும் ஆர்வத்துடனும் வரவேற்கிறேன்.”

என்றுதான் கருத்திருமன் கருத்தறிவித்தார்.

டெல்லியிலும் ‘தமிழ்நாடு’ பெயரை அங்கீகரித்து அரசியல் சட்டத்தில் மாற்றம் செய்து நமது பெரு விருப்பத்தை ஒருமனதாக நிறைவேற்றியிருக்கிறார்கள்.

அதற்கு மகிழ்ச்சி அடைய வேண்டிய காங்கிரசார், மாறாக நம்மீதும், ம. பொ. சி. மீதும் மாடு போல் முட்டத் தொடங்கி யிருக்கிறார்கள்.

தமிழ் நாடா?

தமிழகமா?

தமிழ் நாட்டரசா?

தமிழக அரசா?

ஆகா! குழப்பம்!

ஓகோ! குழப்பம்!

என்றெல்லாம் கூச்சல் கிளப்புகிறார்கள்.

தமிழ் நாடா?

மெட்ராஸ் ஸ்டேட்டா?

அதிலே இல்லாத குழப்பம், இதிலே வந்து விட்டதாம்!

இலக்கியத்தில் உள்ள
இனிக்கும் பெயர்கள்

புறநானூற்றில்;

“வையக வரைப்பின் தமிழகம்”

சிலப்பதிகாரத்தில்;

“இமிழ் கடல் வரைப்பின் தமிழகம்”

மணிமேகலையில்;

“சம்புத் தீவினில் தமிழகம்”

பெரிய புராணத்தில்;

“நற்றமிழ் நாடு”

கம்பராமாயணத்தில்;

“தென் தமிழ் நாடு”

என்றிருப்பதையெல்லாம் படிக்கக் கேட்கவும் விருப்பமில்லாதவர்களின் வரட்டுக் கூச்சல்தான்;

தமிழகமா?
தமிழ் நாடா?
குழப்பம்!
குழப்பம்!

என்பதாகும்!

“தமிழ் நாடு” என்று தமிழ்நாட்டிலும் “மெட்ராஸ் ஸ்டேட்” என்று உலகத்திலும் அழைப்பது;

‘லட்சுமி’ என்று வீட்டிலும்-‘மூதேவி’ என்று பள்ளிப் பதிவேட்டிலும் அழைப்பது போலாகும்.

தமிழ்நாடு என்றும் தமிழகம் என்றும் அழைப்பது;

‘கண்மணி’ என்று பள்ளிப் பதிவேட்டிலும், ‘கண்ணு’ என்று வீட்டிலும் அழைப்பது போலாகும்.

இந்த விபரங்களையெல்லாம் புரியாதவர்க்கும் புரியவைக்கத்தான் அண்ணன்; டிசம்பர் முதல் நாளை விழாவாகக் கொண்டாடப் பணித்துள்ளார்.

நெஞ்சினிக்கும் இந்த நாளில் எதிரிகளின் ஏகடியங்களைக் காலில் குத்தும் ‘நெருஞ்சி முள்’ எனக் கருதித் தொலைவில் வீசிவிட்டு;

நம் பயணத்தைத்
தொடருவோம்!
வா, நண்பா வா!

அன்புள்ள
மறவன்
(28-11-1968)

22. கண்கள் திறக்க ஒரு கதை!

பழைய நண்பனே!

அரசியலில் கொள்கை மோதுதல் குறைந்துபோய் "குக்கல் குறைப்பு" அதிகமாகி இருக்கிறது. பொய்ப் பேச்சுக்கள் நிறைந்து விட்டன. இல்லாததை இட்டுக்கட்டி விமர்சித்துச் சபாஷ் பெறுகிற நண்பர்கள் வரிசையில் உனக்கு முதலிடம் கிடைத்துவிட்டது. உன்னைப்போல் ஒருவனை அவனது தாய் திருத்திய கதையைச் சொல்கிறேன்; நீயும் உன்னைத் திரும்பிப் பார்!

வேசிமகன்!

விபச்சாரி மைந்தன்!

தகப்பன் பெயர் அறியாதவன்!

இப்படி மாற்றுக் கட்சிக்காரர்களைத் திட்டுவதே அவன் கற்ற அரசியல் இலக்கணம். ஊரார் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்கள்; அவன் கேட்கவில்லை.

பிறர் தடுக்கத் தடுக்க அவன் இழிதகைப் பேச்சில் சூடு மேவிற்று!. அவனால் திட்டப்பட்டவர்களோ; அவனைப் பைத்தியக் காரர்கள் பட்டியலில் இணைத்துவிட்டு மிக்க அலட்சியத்தோடு தங்கள் காரியத்தைக் கவனித்துக் கொண்டிருந்தனர்.

மகனின் அநாகரீகப் பேச்சுக்குத் தாயாரும் குறுக்கே நின்றாள். அன்னையின் அறிவுரையையும் அவன் பொருட்படுத்தவில்லை. அவள் அழுது அழுது சொல்லிப் பார்த்தாள்.

"பேச விஷயங்களா இல்லை? உன் கொள்கையை நீ சொல்!

அவர்கள் கொள்கையை அவர்கள் கூறட்டும்!

பொய்யும்-புனைச் சுருட்டும்-பொல்லாங்கு மொழிகளும் வேண்டாம் அப்பா!"

என்று கதறியழுதாள்,

"அம்மா! என்னைத் தடுக்காதே!
அந்த வேசி மக்களை நான்
விடமாட்டேன்!"

என்று எரிமலை போலக் குமுறினான்!

"ஏய்! தம்பி! யாரைப் போய் வேசி மக்கள் என்கிறாய்? நான் ஒரு உண்மையைச் சொல்கிறேன் கேள்! நீ யார் தெரியுமா? உன் அப்பா கப்பலுக்குப் போயிருக்கும்போது, அவர் போன இரண்டு வருடம் கழித்து என் வயிற்றில் உதித்தவன்!"

என்று அந்தத் தாய் கூறிக் கொண்டே மூர்ச்சையுற்றுக் கீழே சாய்ந்தாள்.

"அய்யோ! அம்மா!"

என்று அலறினான் இந்த அரசியல் கோமாளி! உலகமே சுற்றியது போலிருந்தது! அவன் தலையில் ஆயிரம் சம்மட்டி அடிகள்! மௌனமாகிவிட்டான்!

என் பழைய நண்பா! இந்தக் கதை உன் கண்களைத் திறக்கப் பயன்படுமானால் நான் மிக்க மகிழ்ச்சி அடைவேன்.

அன்புள்ள

மறவன்

(02-12-1968)

23. பரிதாபப்படுகிறேன்!

பழைய நண்பா!

நீ என்னை இன்று வசைபாடித் திரியும்போது-முதலில் நீ என்னைப் புகழ்ந்து பேசியதையும் பாராட்டி எழுதியவைகளையும் நினைத்துப் பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கிறேன்.

நீ இப்போது சிலரைத் தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடும்போது, அவர்களையே ஒருகாலத்தில் நீ தரக்குறைவாகத் தாக்கிப் பேசியதையும், எழுதியதையும் எண்ணிப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருக்கிறேன். அதனால் நீ என்னைக் குமுற வைக்கலாம், அழவைக்கலாம் என்று எண்ணி ஏமாந்துவிடாதே!

சிரங்கு பிடித்தவன் அழுத்திஅழுத்தி-கையை மாற்றி மாற்றி-முரட்டுத் தனமாகச் சொறிந்து கொள்வதிலே ஒரு தனி இன்பம் காண்பான். ஆனால் அந்த இன்பம் சில விநாடிகளுக்குத்தான். சொறிந்த இடத்தில் ரணம் ஏற்பட்டு எரிச்சல் எடுக்கும் போதல்லவா தெரியும் வேதனை.

என்னை நீ தாக்கும் போது உன் மனப்புண்ணை குரங்குப் புண்ணாக ஆக்கிக் கொள்கிறாயே என்பதற்காகப் பரிதாபப் படுகிறேன்.

ஆண்டாண்டு காலமாக அரசியல் மாச்சரியங்கள்-கொள்கை முரண்பாடுகள்-இலட்சிய வேறுபாடுகள்-செயல்முறைத் தகராறுகள் நாட்டில் இருந்து கொண்டுதான் இருக்கின்றன.

ஆனால் மழுவேந்திப் போரிட்டு உயிர் துறப்பதற்கும் மாற்றார் மீது மலம் அள்ளி வீசி உயிர் வாழ்வதற்கும் இடையே உள்ள வேறுபாட்டை இனிமேலாவது நீ தெரிந்துகொள்க; என் பழைய நண்பா!

அன்புள்ள

மறவன்

(05-12-1968)

24. "அரசியல் மோசடியாம் - அறிவிக்கிறார்; அபூர்வப் பிறவி!"

அன்பு நண்ப,

எதிர்க்கட்சித் தலைவர் கருத்திருமன் இருக்கிறாரே; நேரில் பேசும்போது பழம் நழுவிப் பாலில் விழுவதுபோலப் பேசுவார். இந்தப் பூனையும் இந்தப் பாலைக் குடிக்குமா என்று தோன்றும்; அவர் பல் காட்டிப் பேசும் போது! அதுவும் நமது அண்ணா விடத்திலே அவர் அன்பு தவழப் பேசுவதைப் பார்த்தால்; ஆகா! எவ்வளவு தங்கமான குணம்! எத்துணைத்த தயாள சிந்தை! அரசியல் மாச்சரியங்களை மறந்து நமது அண்ணனிடத்திலே எவ்வளவு பாசம் வைத்திருக்கிறார் என்றுதான் பார்ப்பவர்கள் நினைப்பர், கள்ளங்கபடமற்ற நமது அண்ணா அவர்களும் அவரது கனிவான உரையாடலால் கவரப்பட்டு உள்ளந்திறந்து பேசுவார். உவகை பூத்திடுவார், கடுமொழி கூறும் கயவர்கள் எதிரே நின்று மேலும் மேலும் சுடுமொழி வாரி இறைத்திடினும் புன்னகை காட்டுகின்ற அமைதியின் வடிவமாம் அண்ணா அவர்கள்; கருத்திருமனாரின் உள்ளத்தைப் பற்றி ஒரு சிறிதும் எண்ணிப்பாராமல் பள்ளம் போய் வீழுகின்ற பாய்ச்சல் நீரது போல் பாசத்தை வழங்கிடுவார்.

கருத்திருமன் பேச்சோ; தேன்பாகெனும்
பேச்சு; ஆனால் அதிலே தேளின் விஷம்!
தென்றல் போல வார்த்தைகள்! ஆனால்
தீயினும் கொடிய நினைவுகள்! நயமிகு
மொழிகள்! அய்யகோ; அத்தனையும்
நச்சு எண்ணத்துடன்!

"தொழுத கையுள்ளும் படையொடுங்கும் ஒன்னார்
அழுத கண்ணீரும் அனைத்து"

என்ற குறள், கருத்திருமனுக்காகவே எழுதப்பட்டது என்று கூடத் துணிந்து கூறலாம்.

அண்ணாவைப் பற்றி அவர் ஆயிரங்கூறட்டும்; பொறுத்துக் கொள்ளலாம். நம்முடைய அன்பின் திருவுருவம் திரும்பி வருமா என்று திக்குத் தெரியாத காட்டில் நின்று தமிழகமே தேம்பியழுது வழியனுப்பியதே; அப்படிப்பட்ட அண்ணனுக்கு ஏற்பட்ட சிகிச்சை செலவை 'சர்க்கார்' ஏற்க வேண்டியதில்லை-கட்சி ஏற்றுக் கொள்ளும் என்று விடுத்த அறிவிப்புக்குக் கருத்திருமன் பதில் கூற ஆரம்பித்து நரகல் நடையழகராய்-நடுங்கா நாக்கழகராய்-காட்சி தருவதைக் காணும்போது; அய்யோ! இவரும் ஒரு மனிதரா? என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

அண்ணா சிகிச்சை செலவை சர்க்கார் ஏற்கிறது என்று கூறினால், எதிர்க்கட்சித் தலைவர் கருத்திருமன், அதைக் கண்டிப்பதிலே மனித உணர்வு இல்லாவிட்டாலும் "வாதம்" இருக்கிறது என்று ஒப்புக் கொள்ளலாம்.

முதலமைச்சர், சிகிச்சைச் செலவை சர்க்கார் ஏற்க முழுக்க முழுக்கக் கடமைப்பட்டிருந்த போதிலும்; அது தேவையில்லை என்று கட்சி, அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டுவிட்டது.

இதற்கு ஒரு ஆபாசமான அறிக்கை-இருதய மற்ற அறிக்கை-பேய்கள் கூடப் பேசுவதற்கு அஞ்சுகிற தோரணையில் கருத்திருமன் விட்டிருக்கிறார் என்றால்; அவரை மனித குலத்திலே சேர்ப்பதற்கே வெட்கமாக இருக்கிறது!

அண்ணன் உருவாக்கிய கழகம்!

அவர் வளர்த்த கட்சி!

அவரால் ஆளாக்கப்பட்டவர்கள் நாம்!

அவருக்காக ரத்தம் சிந்த, வியர்வை கொட்ட, உயிரை அர்ப்பணிக்கத் தயாராயிருக்கிற தம்பிமார்கள் அணிவகுப்பு!

கருத்திருமனைப் போல;

"அன்று சுப்பிரமணியத்துக்கு ஜே!

இன்று! காமராஜருக்கு ஜே!"

போடுகிற கூட்டமல்ல!

எங்கள் அண்ணன்

சுகம்பெற-

எங்கள் அண்ணன்

நலமுடன் இருக்கிறார்

என்ற செய்தி கேட்க-

உடல், பொருள், ஆவி மூன்றையும் பரிசாகக் கேட்பினும் தரத் தயாராக இருக்கிற கழகத் தோழர்கள் மனம் புண்பட;

"அண்ணா சிகிச்சை நிதி
அரசியல் மோசடி!"

என்று அறிக்கை விட்டிருக்கிறாரே கருத்திருமன்-அவரை நாடு கேட்கிறது-

எது மோசடி?

சிகிச்சைப் பணத்தை அரசாங்கம் ஏற்க வேண்டாமென்பதும் மோசடியா?

அல்லது

இந்திராகாந்தி செய்த காங்கிரஸ் தேர்தல் பிரச்சாரத்துக்கு சர்க்கார் செலவில் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி 'கும்மாளம்' போட்டதே அது மோசடியா?

அந்தச் செலவை காங்கிரஸ் கமிட்டி ஏற்குமென்று கூறி; ஆண்டு இரண்டாகப் போகிறதே; இன்னும் நாணயத்துடன் கட்டாதது மோசடியா?

இந்த முதல்தர மோசடிக்காரர்கள்; நம்மைப் பார்த்து மோசடிக்காரர்கள் என்று கூறுவது மொட்டைத் தலை மங்கை; கூந்தல் உள்ள காரிகையைப் பார்த்துக் கேலி செய்த கதையாக இருக்கிறது. இல்லையா நண்பா!

அன்புள்ள

மறவன்

(07-12-1968)

25. இந்தியும் மொரார்ஜி தேசாயும்!

நண்பா,

“இந்திக்கு எதிர்ப்பு காணப்படும் அதே நேரத்தில் மகாராஷ்டிரா, குஜராத் போன்ற இந்தி பேசா மாநிலங்களில் இந்திப் பிரச்சாரம் வெற்றிகரமாக நடப்பது கண்டு மகிழ்ச்சி அடைகிறேன்.”

–துணைப் பிரதமர் மொரார்ஜி தேசாய் இந்தியைப் பரப்புவதில் எத்தனை தீவிரம் காட்டுகிறார் பார்த்தாயா? இந்தி பேசாத மாநிலங்களில் இந்திப் பிரச்சாரம் வெற்றிகரமாக நடப்பது கண்டு மகிழ்ச்சி அடைகிறாராம். அவர் தி. மு. கழகத்தின் மீது எப்போது பார்த்தாலும் எரிச்சலைக் கக்குவதின் உள்நோக்கம் உனக்கு இப்போது புரிந்திருக்குமே!

இந்திக்கு இங்கு இடமில்லை எனச் செய்த தமிழக அரசை ஆளும் தி. மு. கழகத்தை எப்படி நண்பா அவரால் பாராட்ட முடியும்?

தி. மு. கழகம், தான் கொடுத்த வாக்குறுதிகளை நிறை வேற்றவில்லை–எனக் கூச்சல் எழுப்பும் காங்கிரஸ்காரர்களுக்கு மொரார்ஜியின் பேச்சு தகுந்த விளக்கமாக அமையும் என்றே கருதுகிறேன்.

இந்தி ஆதிக்க எதிர்ப்பைத் தனது உயிர் மூச்சனைய கொள்கையாக ஏற்ற தி. மு. க. தனது வாக்குறுதியை இன்று நிறைவேற்றவில்லையா? இந்தி இங்கு இல்லை என்ற நிலையை உருவாக்கவில்லையா?

மொரார்ஜிக்குப் புரிவது இங்குள்ள காங்கிரஸ்காரர்களுக்குப் புரிய மறுக்கிறது. என்ன செய்வது?

ஆனால் நண்பா, ஒன்றைத் தெளிவாக்கியதற்காக மொரார்ஜியை நாம் பாராட்ட வேண்டும். காங்கிரஸ் ஆட்சியிருந்தால் அந்த மாநிலத்தில் இந்திப் பிரச்சாரம்

வெற்றிகரமாக நடைபெறும் என்பதை எத்தனை தெளிவாகக் கூறிவிட்டார் பார்த்தாயா?

மகாராஷ்டிரத்திலும், குஜராத்திலும் அவை இந்தி பேசாத மாநிலங்களாக இருந்த போதும் இந்திப் பிரச்சாரம் வெற்றிகரமாக நடக்கிறது; என்று கூறியுள்ளார் துணைப் பிரதமர். அங்கு இந்திப் பிரச்சாரம் வெற்றிகரமாக நடைபெறுவதின் காரணம் உனக்கு விளங்கியிருக்குமே! **காங்கிரஸ் ஆளும் மாநிலங்கள் கட்சிக் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டு இந்தியை ஆதரித்துத் தீரவேண்டிய நிலையில் உள்ளது என்பது வெளிப்படையாக வில்லையா?**

இப்போது தமிழகத்தைப் பார் நண்பா! இந்தி இங்கு இல்லை என்ற நிலை ஏற்பட்டது எதனால்?

பல கோடித் தமிழ் மக்களின் ஆவல் பூர்த்தி செய்யப்பட்டது எப்படி?

மாணவர்களின் இதயக் குரலுக்கு வெற்றி ஈட்டித் தரக் காரணமாக இருந்தது எது?

காங்கிரஸ் ஆட்சி ஒழிந்து கழக ஆட்சி எழுந்ததால் ஏற்பட்ட வெற்றியல்லவா இது!

காங்கிரஸ் தமிழகத்திலே பெறும் ஒவ்வொரு தோல்வியும்- இந்தி ஆதிக்கத்தின் சவப் பெட்டிக்கு அடிக்கப்படும் ஆணி. இந்தி வெறியரின் கொட்டம் அடக்க எடுக்கப்படும் நடவடிக்கை என்பதை உனக்கு நான் சொல்லித்தானா தெரிய வேண்டும்!

அன்புள்ள

மறவன்

(09-12-1968)

26. தகுந்த பாடம் தரவேண்டாமா?

அன்புள்ள நண்பா,

"சென்னையிலுள்ள அகில இந்திய வானொலி நிலையத்தின் பெயரை "ஆகாஷ்வாணி" என்பதிலிருந்து 'வானொலி' என்று மாற்ற வேண்டும் என்ற தமிழக அரசின் கோரிக்கைக்கு மத்திய அரசு இணங்கியதையொட்டிப் பிற கோரிக்கைகள் முளைத்தன. இந்தி பேசுவோர், சில விஷயங்களிலாவது ஆங்கிலத்துக்குச் சமமான அந்தஸ்து இந்திக்கு அளிக்கப்பட வேண்டும் என்றனர். எனவேதான் இந்தி பேசுவோரின் கோரிக்கையான 'இந்தி செய்தி ஒலி பரப்பும்' கோரிக்கையை எதிர்க்க முடியவில்லை."

-ஷாவின் பதிலைப் பார்த்தாயா நண்பா; இந்தி பேசுவோரின் கோரிக்கையை ஷா நிறைவேற்றட்டும், வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆனால் அது இந்தி பேசும் மாநிலத்தில் மட்டும் இருக்கட்டும்.

'வானொலி'-என ஆகாஷ்வாணியின் பெயரை அகில இந்திய அளவிலா மாற்றினார்கள்? தமிழகத்துக்கான, தமிழ் ஒலிபரப்புக்களில்தானே வானொலி என பெயர் மாற்றம் செய்யப்பட்டது; ஷாவின் விளக்கம் சிறு குழந்தையும் நம்ப முடியாத ஒன்றல்லவா?

அப்படியே ஷாவின் வாதத்தை ஏற்றாலும், இந்தி மொழி பேசுவோருக்கு இதுவரை செய்த சாதகங்களுக்கு பிரதிபலனாக, மற்ற மாநிலக்காரர்களுக்கு இந்தி பேசாதோருக்குச் சாதகங்கள் செய்யப்பட்டுள்ளதா?

அஞ்சல் அட்டையில் இந்தி

வானொலியில் இந்தி

தந்தியில் இந்தி

மைல் கற்களில் இந்தி

-இப்படி எங்கும் எதிலும் இந்தி எனச் செய்தார்களே அப்போதெல்லாம் அதற்கு கைமாறாக இந்தி பேசாத மாநிலங் களுக்கு என்ன செய்யப்பட்டது?

ஷா தனது நெஞ்சத்தைத் தொட்டுச் சொல்லட்டும். இந்தி ஆதிக்கத்துக்குத் எதிராக தமிழக மக்கள் கொண்டுள்ள உணர்ச்சியை மத்திய அரசினர் அறியாதவர்கள் அல்ல!

1967 பொதுத் தேர்தலிலே தமிழகத்தில் காங்கிரசின் மாபெரும் வீழ்ச்சிக்குக் காரணத்தை உணராமல் இருக்க மாட்டார்கள் மத்திய அரசினர்! தமிழகத்தில் கழகம் பெரு வெற்றி ஈட்டியதும் இந்தியை நுழைக்கும் தங்களது போக்குக்கு சிறிது காலம் விடுமுறை கொடுத்தனர் டெல்லி ஆட்சியினர். பின்னர் மீண்டும் மத்திய சர்வீஸ் கமிஷனில் இந்தி திணிப்பு தீவிரமாகும் என அறிவித்தனர். தென் சென்னை இடைத் தேர்தல் தோல்வி அந்தத் தீவிரத்தைக் குறைத்தது!

பிறகு தமிழக சட்டமன்றம் கூடி, தனது வரலாற்றிலே சிறப்பு மிகு தீர்மானங்களைக் கொணர்ந்து 'இந்தி தமிழகத்தில் இல்லை' எனும் நிலையை உருவாக்கியது!

மீண்டும் இப்போது இந்தி நுழைப்பில் ஈடுபடுகின்றனர் மத்திய அரசினர். அவர்களுக்குத் தகுந்த பாடம் புகட்டத்தக்க விதத்திலே உன் பணிகளைத் தீவிரமாக்கு என நான் உனக்குச் சொல்லிட வேண்டுமா; என்ன?

அன்புள்ள

மறவன்

(20-12-1968)

27. காட்சி காண அல்ல - களம் காண!

அன்பு நண்பா!

அழைக்கிறேன்-உன்னைப் போல் அன்னைத் தமிழ் காக்கும் வீரர்களை!

நீலத் திரைக் கடலோரத்திலே நின்று நித்தம் தவம் செய்யும் குமரி எல்லைக்கு அழைக்கிறேன்!

ஓலமிடும் மூன்று கடல் எழிலைக் காணவா? இல்லை! இல்லை!

கோலம் காட்டி எழுந்து மறையும் 'சூரியக் காட்சி' காணவா? இல்லை! இல்லை!

தேனிருக்கும்-திறக்கும் பூவிதழில்! தேனிசை இருக்கும்-பறக்கும் வண்டின் இறகில்! மானிருக்கும்-மலைப் புறத்தில்! வான்நோக்கித் துள்ளும் மீனிருக்கும்-வயற்புறத்தில்! நாணம் இருக்கும்- நங்கையர் முகத்தில்! மானம்...மானம் எனத் துடிக்கும் வீரம் இருக்கும் மறவர் நெஞ்சில்!

அந்தப் பூமி எழில்காண புறப்பட்டு வா-என்று உனை நான் அழைக்கவில்லை நண்பா!

மேகத்தின் அழைப்பு என்றால் மழை இருக்கும்; மோகத்தின் அழைப்பு என்றால் சுகமிருக்கும்! ஆலையின் அழைப்பென்றால் உழைப்பு இருக்கும்; பூஞ்சோலையின் அழைப்பென்றால் மணமிருக்கும்!

இது மறவன் அழைப்பு! மகத்தான களம் உண்டு! வரலாறு காணாத வெற்றி தருவாய் என அழைக்கிறேன்! வருவாய்-தோழா!

வில்லின் சரம் பட்ட இடத்தில் பகை வீழும்! விண்ணின் மழைச்சரம் பட்ட இடத்தில் வரட்சி வீழும்! விரிமார்பு உழவனின் கரம்பட்ட இடத்தில் பதர் வீழும்!

‘விரிகதிர்ச் செல்வா! வீரர் குலத் திலகா! உன் முகத்தின் ஒளிபட்ட இடத்தில் வெற்றி முழங்கும்!”-என அறிந்தேன்! அழைக்கின்றேன்! வா! வா!

அறுபத்தேழில் ஆதிக்கம் வளர்த்தோரின் அடிவேரை அறுத்தோம்!

அது மீண்டும் வளரத் துடிக்கிறது;

பயிரிடையே ‘களை’ விளைய அனுமதிப்பானா உழவன்?

பாட்டுக்கிடையே இருமல் வர அனுமதிப்பானா-கலைஞன்?

போராட்டத்துக்கிடையே சோர்வு வர அனுமதிப்பானா மறவன்?

இல்லை; இல்லை; ஒருபோதும் இல்லை!

உறை விட்டெழுந்த வீர வாள் போல- குகை விட்டெழுந்த வரிப்புலிபோல பாய்ந்து வா - பகையைக் காய்ந்து வா!

களம்புகும் வீரா-உன் உளம் ஏற்ற கருத்தொன்றை மீண்டும் வலியுறுத்துகிறேன்.

எதிரிப்படை நேர்மையானது அல்ல; தோல்வி அவர்களது நேர்மையை அரித்துவிட்டது!

எனவே-தவறான வழியே தமது வழி எனக் கொண்டு ஆடுகிறார்கள், தவறான ஆட்டம்!

தவறான கேள்விக்குத் தவறான பதில்-சரி அல்ல; இருட்டை நீக்க இருளைத் தேடுவது சரி அல்ல! குற்றத்தைத் தண்டிக்க குற்றமல்ல பரிகாரம்!

நீ-சரியான பதிலையே சொல்! ஒளிவிளக்கையே ஏற்றிப்பிடி! குற்றமிலாச் செயல் திறத்தையே காட்டு!

தவறுகள் அவர்களுடைய உடமையாகவே இருக்கட்டும்; தவறுக்குரிய தண்டனையும் அவர்களுக்கே சேரட்டும்!

விழித்திரு; வழி தவறாதே; பழி-வரவிடாதே; பணியாற்று-பார் புகழும் வெற்றி மகுடம் உனக்கே! புறப்படு-தோழா!

அன்புள்ள

மறவன்

(26-12-1968)

28. வெண்மணிச் சம்பவம் ஒரு விளக்கம்!

அன்பு நண்பா,

வெண்மணிக் கிராமத்தில் நடைபெற்ற பயங்கர நிகழ்ச்சியை பத்திரிகை வாயிலாக அறிந்து கண்ணீர் வடித்திருப்பாய்.

எனக்கோ கண்களில் நீர் வரவில்லை நண்பா-இதயமே இரத்தக் கண்ணீர் வடிக்கிறது.

எரிமலை வெடித்து நூற்றுக்கணக்கானோர் பலியாயினர் எனக் கேள்விப்பட்டிருக்கிறோம்.

பூகம்பம் ஏற்பட்டு-பூமி பிளந்து ஆயிரக்கணக்கானோர் அழிந்த கோரச் சம்பவத்தைப் படித்திருக்கிறோம்.

புயலாலும் வெள்ளத்தாலும் மாண்டுபோனவர்களைப் பார்த்திருக்கிறோம்-

ஆனால் வெண்மணிக் கிராமத்தில் நடைபெற்ற வெறித் தனத்தை - கொடுமையை வரலாறுகளிலும் காண முடியாது.

ஜாலியன் வாலா பாக்கில், நான்கு பக்கமும் கோட்டை சுவர் அரண்போல அமைந்த பகுதிக்குள் மக்களைத் தள்ளி-டயர் என்ற வெள்ளைக்கார வெறியன் சுட்டுப் பொசுக்கினான் - அந்த நிகழ்ச்சியில் தான் ஒரே சமயத்தில் ஆயிரத்துக்கு மேற்பட்டோர் அலறித் துடித்து இறந்தனர்.

அதற்குப்பிறகு-வெண்மணிக் கிராமத்தில்தான் நண்பா வெறிச்செயலுக்கு ஒரே நேரத்தில் நாற்பத்தி மூன்று பேர் பலியாகியிருக்கின்றனர்.

வெறியர்கள் மூட்டிய தீயில் பூக்களும் பிஞ்சுகளும் வெந்து கருகிய இடத்தை அவர்கள் நேரில் பார்வையிட்டிருக்கின்றனர்.

அக்கிரமக்காரர்கள் யாராயினும் அவர்கள் தயவு தாட்சண்ய மின்றித் தண்டிக்கப்படுவர் என முதலமைச்சர் அண்ணா அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

உயர்தரப் போலீஸ் அதிகாரிகள் வெண்மணிக் கிராமத்திலேயே தங்கியிருந்து அதற்கான நடவடிக்கைகளைத் துரிதமாக எடுத்து வருகின்றனர்.

வெறித்தனம் சம்பந்தமாக இதுவரை பதின்மூன்று பேர் கைதாகியிருக்கின்றனர்.

கைதானவர்களில்-நாகை காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவரும்-தற்போது மண்டல காங்கிரஸ் கமிட்டியில் அங்கம் வகிப்பவருமான மிராசுதார் கோபாலகிருஷ்ண நாயுடு முக்கியமானவர்.

வீடு இழந்து தவிப்போருக்கு உடனடியாக வீடுகள் கட்டிக் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன.

முழு விவரங்கள் கிடைத்த பிறகு இறந்தவர்களின் குடும்பங்களுக்கு நட்டஈடு தருவது பற்றி மிகுந்த அனுதாபத்துடன் கவனிக்கப்படும் என்று தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் கூறியிருக்கின்றார்.

சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கும்-அமைதி காப்பதற்கும் வெண்மணிக் கிராமப் பகுதியிலுள்ள மக்கள் ஒத்துழைப்புத் தர வேண்டுமென்றும் அண்ணா அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

நண்பா, எந்த நிகழ்ச்சிக்கும் அரசியல் முலாம் பூசி ஆதாயம் தேட முயற்சிக்கும் காங்கிரஸ் பத்திரிகை ஒன்று-வெண்மணிக் கிராம நிகழ்ச்சிக்கும் - தி. மு. கழகத்துக்கும் முடிச்சுப் போட முயற்சிக்கிறது.

தீ வைப்பு சம்பவத்தை ஒட்டி கைது செய்யப்பட்ட நபர் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு கடந்த பொதுத் தேர்தலில் தீவிரமாக வேலை செய்த நபர் என்றும் ஒரு மந்திரிக்கு மிக வேண்டியவர் என்றும் தெரிய வருகிறது.

என்று 'நவசக்தி' (28-12-68) நாளேட்டில் ஒரு செய்தி வெளிவந்திருக்கிறது.

அனைவரும் ஒன்று சேர்ந்து பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவித்து அமைதி காக்கவேண்டிய நேரத்தில்

தி. மு. கழகத்தின் மீது பழி போட்டுக் கொடுமையிலும் ஆதாயம் தேட முயலுகின்றனர் காங்கிரசார்.

தீவைப்புச் சம்பவத்தை யொட்டி கைதானவர் ஒரு மந்திரிக்கு மிக வேண்டியவர் என்று கை கூசாமல் எழுதியிருக்கின்றனர். எவ்வளவு பெரிய பழி பார்த்தாயா? மக்கள் நம்பி விடுவார்கள் என்ற எண்ணம் அவர்களுக்கு.

நண்பா! உனக்கு நினைவிருக்குமென்று கருதுகிறேன். தென்சென்னை இடைத் தேர்தல் நேரத்தில் இப்படித்தான் ஒரு புரளியைக் கிளப்பிவிட்டனர்.

நன்னிலம் எம்.எல்.ஏ. ஜெயராஜ் அவர்களின் காலை வெட்டியவர் அமைச்சர் ஒருவருக்கு வேண்டியவர் எனத் தெரிகிறது-என்று காங்கிரஸ் ஏடுகள் அனைத்தும் எழுதின.

இப்போதும் அதே புரளியைத்தான் 'நவசக்தி' ஏடு கிளப்புகிறது.

ஜெயராஜ் பற்றிய புரளி தென் சென்னைத் தேர்தலுக்கு-

இப்போது கிளப்பியுள்ள புரளி நாகர்கோவில் தேர்தலுக்கு.

நண்பா! தென் சென்னைத் தேர்தல் முடிவு என்னவாயிற்று-

வெண்மணிக் கிராமச் சம்பவத்திற்காக அவர்கள் இரக்கப்படவில்லை. கொடுமையிலும் அரசியல் லாபம் தேடப் பார்க்கிறார்கள்.

கொடுமைக்கு ஆளான வெண்மணிக் கிராம மக்களுக்கு நமது கண்ணீரைக் காணிக்கையாக்கும் போது-தமிழக காங்கிரசாருக்கு நமது அனுதாபத்தையும் உரித்தாக்குவோம்.

அன்புள்ள,

மறவன்

(28-12-1968)

29. காங்கிரஸ் வெற்றியும் இந்தித் திணிப்பும்!

அன்பு நண்பா!

நாகர்கோவில் முடிவுக்குப் பிறகு உனக்கு எழுதிடும் முதல் மடல் இது. "வெற்றி பெற்றதற்காக வெறி கொண்டு திரியவும் கூடாது. தோற்றுவிட்டதற்காகத் துவண்டுவிடவும் கூடாது" என்ற முறையைக் கடைப்பிடித்து வளர்ந்துள்ள உனக்கு நான் ஒன்றும் மேலே எழுதிட விரும்பவில்லை. நமது பணி நாகர்கோவில் பகுதியில் தீவிரப்படுத்தப்பட வேண்டும்-பரவலாக்கப்பட வேண்டும் என்பதே நாகர்கோவில் முடிவு நமக்குத் தந்துள்ள பாடமாகும்.

காங்கிரஸ் வெற்றி பெற்றால் ஏற்படும் தீமைகளை நாம் எச்சரித்தோம்! இந்தி ஆதிக்கம் தலை நிமிர்ந்து நடைபோட காங்கிரசின் வெற்றி வழி வகுத்துவிடும். அதற்கு இடம் கொடாதீர்கள் எனத் திரும்பத் திரும்ப வேண்டுகோள் விடுத்தோம். காங்கிரசுக்குத் தரும் தோல்வி இந்தி ஆதிக்க வெறியர்களுக்குத் தரும் பாடம் என எடுத்துக் கூறினோம். ஆனால் நாகர்கோவில் மக்களோ காங்கிரசின் மீது தாங்கள் வைத்திருந்த பற்றுதலை மாற்றிக்கொள்ள இயலவில்லை. மீண்டும் காங்கிரசிடமே நாகர் கோவில் தொகுதியை ஒப்படைத்திருக்கிறார்கள்.

ஆனால் நண்பா, நாகர்கோவில் தேர்தல் முடிவு வருவதற்கு முன்னும்-முடிவு வெளிவந்த பின்னும் மத்திய அரசிலிருந்து வந்த இரு செய்திகளை ஏடுகளில் படித்திருப்பாய் எனக் கருதுகிறேன். நாகர்கோவில் தேர்தலுக்கும்-அந்தச் செய்திகளுக்கும் தொடர்பு உண்டா என்று ஆராய விரும்பவில்லை. ஆனால் செய்தி வந்த நேரம் தொடர்புபடுத்திட வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்திடத்தான் செய்கிறது. செய்திகளை மீண்டும் உன் பார்வைக்கு வைக்கிறேன். நீயே சிந்தித்துப் பாரேன்!

வானொலியில் இந்திச் செய்தி ஒலிபரப்பாகும் நேர மாறுதலை ரத்து செய்ய கொள்கை ரீதியில் மத்திய

செய்தித்துறை அமைச்சர் ஷா 8ஆம் தேதி அதாவது நாகர்கோவில் தேர்தலில் வாக்குப் பதிவாகும் நாளன்று அறிவித்துள்ளார்.

ஆனால் ஜனவரி 10ஆம் நாள் அதாவது நாகர்கோவிலில் காங்கிரஸ் வெற்றிபெற்ற மறுநாள் ஒரு செய்தி வருகிறது. "**அகில இந்திய ரேடியோவில் இந்திச் செய்தி அறிக்கையை ஒலிபரப்பும் நேரத்தை மாற்றுவதற்கான யோசனை எதுவும் யூனியன் தகவல், ஒலிபரப்பு மந்திராலயத்தின் பரிசீலனையில் இல்லை**" என அதிகாரி ஒருவர் மறுத்துள்ளார்.

மத்திய தகவல் மற்றும் ஒலிபரப்பு இலாகாவினைச் சேர்ந்த அதிகாரி இத்தனை உறுதியோடு கூறியுள்ளதற்கும்-நாகர்கோவில் தேர்தலில் காங்கிரசின் வெற்றிதான் காரணமாக இருக்கும் என உறுதியாகக் கூற நான் முன்வரவில்லை! காங்கிரசின் வெற்றிதான்-மத்திய தகவல் ஒலிபரப்பு இலாகா அதிகாரியின் இந்த உறுதியான அறிவிப்புக்குக் காரணம் என்ற எண்ணம் பெரும்பாலானோரது மனதில் நிச்சயம் எழத்தான் செய்யும்.

மொழிப்பிரச்சினைக்குத் தீர்வுகாணக்கூடிய ஒரே ஒரு தலைவர் காமராஜர்தான் என அறிவித்த தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் மத்திய அரசின் இந்த முடிவை உடனடியாகக் கண்டித்து-அதனை மாற்றிட முழு முயற்சியில் ஈடுபடுவார் என நம்பிடுவோமாக!

வெற்றிபெற்ற காமராஜரும் தமிழக அரசுடன் சேர்ந்து வானொலியில் இந்தியைத் திணிக்கும் முயற்சிக்கு எதிராக கண்டனத்தை எழுப்பி நாகர்கோவில் காங்கிரஸ் வெற்றிதான்-இந்தித் திணிப்புக்குக் காரணமோ என பலர் மனதில் எழுந்துள்ள ஐயத்தைப் போக்கிடுவார் என எதிர்பார்ப்போமாக!

அன்புள்ள,

மறவன்

(11-01-1969)

30. பாழடைந்த மண்டபமும் வெளவால்களும்!

அன்பு நண்பா;

இன்றைய செய்தித்தாளில் இரண்டு வித செய்திகள் வந்துள்ளன. காங்கிரஸ் கட்சி "நகைச்சுவை" கள் நிறைந்த கூடாரமாகிவிட்டது என்பது போல அந்தச் செய்திகள் பத்திரிகைகளில் காட்சியளிக்கின்றன. ஒரு செய்தியில் தலைவரின் அறைகூவல்-மற்றொரு செய்தியோ தலைவருக்கே அறைகூவல் விட்டு நிற்கிறது. அகில இந்திய ரீதியிலே காங்கிரஸ் எப்படி கலகலத்து கிடக்கிறது என்பதற்கு இரண்டு செய்திகளும் சிறந்த எடுத்துக் காட்டுகள்.

என்ன, செய்தியைக் கூறாமல் பீடிகையை பலமாகப் போடுகிறானே எனக் கருதுகிறாயா? நீயே படித்துப் பாரேன் அந்த வேடிக்கை மிகுந்த செய்திகளை!

> **"கட்சிவிட்டுக் கட்சி மாறுபவர்களை காங்கிரஸ் தலைவர் நிஜலிங்கப்பா கடுமையாகத் தாக்கிப் பேசினார். அவர்களைப் "பாவிகள்" என்று வர்ணித்தார்."**

படித்தாயா செய்தியை! நிஜலிங்கப்பா கட்சி விட்டுக் கட்சி மாறுபவர்களைப் பாவிகள் என வருணித்துள்ளார். அத்தோடு விட்டாரா-தொடர்ந்து பேசுகிறார் பார்!

> **"நான் காங்கிரஸ் தலைவராக இருக்கும்வரை கட்சி மாறிகளுக்குக் காங்கிரசில் இடம் கொடுக்க மாட்டேன்!"**

ஆம், நண்பா! அகில இந்தியாவுக்கும் காங்கிரசின் தலைவராக விளங்கும் நிஜலிங்கப்பாதான் இப்படி முஷ்டிகளை உயர்த்தி அறைகூவல் விட்டு பீகாரில் பேசியிருக்கிறார். காங்கிரசின் அகில இந்தியத் தலைவரின் பேச்சுக்கு காங்கிரஸ் இயக்கம் எத்தகைய மதிப்புத் தருகிறது என உனக்குத் தெரியுமா?

செய்தி வந்த அன்றே பத்திரிகைகளில் வந்துள்ள மற்றொரு செய்தியை படித்துப் பாரேன்.

இன்று அரியானாவில் மூன்று சுயேச்சை உறுப்பினர்கள் காங்கிரசில் சேர்க்கப்பட்டதைத் தொடர்ந்து அரியானா சட்டசபையில் காங்கிரசுக்குப் பூரண மெஜாரிடி ஏற்பட்டுள்ளது!

அகில இந்தியத் தலைவர் பேச்சு வந்த தினமே இச் செய்தி வந்துள்ளது. நிஜலிங்கப்பா அரியானா காங்கிரஸ் மீது என்ன நடவடிக்கை எடுக்கப் போகிறார்?

"காங்கிரசிலே கட்சி விட்டுக் கட்சி மாறி யாரும் சேரவில்லை. சுயேச்சைகள்தானே சேர்ந்தார்கள். அதனால் நடவடிக்கை இல்லை" என வாதிடலாம்.

அந்த சுயேச்சைகள் காங்கிரஸ் அபேட்சகர்களை முறியடித்து வெற்றிவாகை சூடியவர்கள்தானே என்ற வாதம் ஒருபுறமிருக்கட்டும். எதிர்க்கட்சிக்காரர்களையே காங்கிரஸ் இயக்கம் ஜீரணித்துள்ள செய்தி ஒன்றும் நிஜலிங்கப்பாவின் வீராவேசப் பேச்சு வெளி வந்த அன்றே வெளிவந்துள்ளது. இதிலே வேடிக்கை என்ன தெரியுமா? இந்தச் செயல் நிஜலிங்கப்பாவின் சொந்த மாநிலத்திலேயே நடந்து இருக்கிறது.

"எஸ். ஆர். பொம்மை, எப் எஸ். பாடீல் ஆகிய இரு எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மைசூர் சட்டசபை காங்கிரஸ் கட்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள். மேலும் ஒரு எதிர்க்கட்சி உறுப்பினர் காங்கிரஸ் கட்சியில் சேரக்கூடும் என்று எதிர்க்கட்சி வட்டாரங்கள் கூறின.

நிஜலிங்கப்பாவின் பேச்சுக்குச் சொந்த மாநிலமே எந்த அளவு மரியாதை காட்டியிருக்கிறது பார்த்தாயா?

காங்கிரஸ் மாளிகை பாழடைந்த மண்டபமாகி விட்டது; அதிலே வெளவால்கள் குடியேறத்தான் செய்யும். நிஜலிங்கப்பா போன்றவர்கள் என்னதான் முயன்றாலும் இனி அதைச் சீர்படுத்த முடியாது என்பதை ஒரே நாளில் வெளிவந்த செய்திகள் விளக்கிக் காட்டவில்லையா?

அன்புள்ள

மறவன்

(17-01-1969)

31. வேங்கை போடும் வெள்ளாடு வேடம்!

அன்பு நண்பா;

வேங்கை வெள்ளாடு போல வேஷம் போட்டு வந்ததை கதைகளில் படித்திருப்பாய்! ஆனால் அது போன்ற காட்டுக் கதைகள் கட்டுக்கதைகள் என்று நினைத்து கதையின் கருத்தைச் சுவைத்திருப்பாய்! அந்தக் காட்டுக் கதைகளை மெய்ப்பிக்கும் விதத்திலே நாட்டு நடப்புகள் பலவற்றையும் சந்தித்திருப்பாய். ஆனால் அவற்றிற்கெல்லாம் சிகரம் வைக்கும் விதத்திலே நடக்க இருக்கும் ஒரு நிகழ்ச்சியைத்தான் உனக்கு இன்று எழுதப் போகிறேன்.

காமராஜர் வெற்றி பெற்ற தினத்தை ஜனநாயக உரிமை பாதுகாப்புத் தினமாகத் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியினர் கொண்டாடப் போகின்றனராம். காட்டிலே மட்டுமல்ல நாட்டிலேயும் வேங்கை வெள்ளாடு வேடம் பூணுகிறது என்று அதனால்தான் கூறினேன். காங்கிரசார் அதுவும் நாகர்கோவிலில் ஜனநாயகத்தைப் படுகொலை புரிந்த காங்கிரசார் ஜனநாயக உரிமையைப் பாதுகாக்கப் போகிறார்களாம் நண்பா!

கொள்கைத் தங்கங்களை

கொலை செய்தல்

கொள்ளையர்போல்

வழிமறித்துத் தாக்குதல்

எதிரிகளின் பிரச்சார

வண்டிகளை உடைத்தெறிதல்

ரூபாய் நோட்டுக்களை வீசி

மக்கள் ஓட்டுக்களைப் பறித்தல்

போன்ற ஜனநாயக உரிமைகளை(!) பாதுகாக்க காங்கிரசார் விழா எடுக்கிறார்கள் போலிருக்கிறது. நாகர்கோவில் தேர்தலை நேரில் பார்த்தவர்கள் ஜனநாயகம் அங்கு எப்படி காங்கிரசாரால் கழுத்து நெரிக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டது என்பதை உணர்வார்கள். ஜனநாயக உரிமை பாதுகாப்புத் தினம் எனக் கொண்டாடி, காங்கிரசார் நாகர்கோவிலில் செய்ததுதான் ஜனநாயக உரிமையைப் பாதுகாக்கும் செயல்கள் எனப் பெருந்தலைவர் காமராஜரும், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் சுப்பிரமணியமும்-தொண்டர்களைத் தட்டிக் கொடுக்கப் போகிறார்கள்.

பழைய படம் ஒன்றிலே உள்ள நகைச்சுவைக் காட்சி ஒன்று நினைவுக்கு வருகிறது. கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் ஒரு வீட்டுத் திண்ணையில் அமர்ந்து கொண்டு சாலையிலே போய்க் கொண்டிருந்த ஒருவர் மீது கல்லை எறிவார். அவரோ கோபத்தைக் காட்டாது கலைவாணரைத் தட்டிக்கொடுத்துத் தன்மேல் கல் எறிந்ததற்காகக் காசும் கொடுத்து செல்வார். கல் விட்டெறிந்தால் காசு கிடைக்கும் போலிருக்கிறது என்ற தவறான எண்ணம் கொண்ட கலைவாணர் அடுத்து ஒரு முரடன் வரும்போது அவன்மீதும் கல்லை விட்டெறிவார். முரடன் என்.எஸ். கே. இருக்கும் இடம் நோக்கி வருவான். காசு கொடுப்பான் என இவரும் கையை நீட்டுவார். என்ன கிடைத்திருக்கும் என்பதுதான் உனக்குத் தெரியுமே!

அந்தச் சினிமாக் கதையைப்போல கொலைகள் செய்து-கலகம் விளைவித்து-கல்லெறிந்து-அராஜகம் நடத்தியவர்களை ஜனநாயக உரிமையைப் பாதுகாத்தவர்கள் எனப் பாராட்டுகிறார்கள். ஜனநாயக உரிமையை பாதுகாக்க வேண்டுமானால் இதுபோன்றவைகளைத் தொடர்ந்து நடத்தவேண்டும் என காங்கிரஸ் தொண்டர்கள் எடுத்துக்கொண்டு அடுத்துவரும் இடைத் தேர்தல்களிலும் இதே முறையைப் பின்பற்ற தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி கொண்டாடும் விழா வழி வகுத்துவிடும் என்பதை பொறுப்புள்ள தலைவர்கள் உணரவேண்டும்.

அராஜகமும்-வெறியாட்டமும் நடத்தி தேர்தல் நடத்தி விட்டு சுப்பிரமணியம் நாள் தவறாமல் பத்திரிகை நிருபர்களைக் கூட்டி வைத்து-தி. மு. கழக அரசு அதிகார துஷ்பிரயோகம்

செய்ததாகவும்-காங்கிரஸ் தொண்டர்கள் தாக்கப்பட்டதாகவும் கூறி வந்தார்; கூறியும் வருகிறார். அந்தச் செய்தியைப் பெரிதுப்படுத்தி வெளியிட்டு தங்களது உண்மை சொரூபத்தை பல பத்திரிகைகள் காட்டிக் கொண்டன.

அவர்கள் ஆட்சி பீடத்திலே இருந்தபோது நடந்த தேர்தல்களை நினைத்துப் பார். எந்த ஒரு தேர்தலாவது நமது தோழர்கள் நூற்றுக்கணக்கானவரை சிறையில் வைக்காமல் நடத்தியதாக வரலாறு உண்டா?

ஆனால் நாகர்கோவில் தேர்தல் நடந்தபோது கலவரம் நடத்தியதால்-கல்லெறிந்ததால்-அமைச்சர்கள் இருந்த விடுதியை சூழ்ந்து தாக்க முயற்சித்ததால் கைது செய்யப்பட்ட அத்தனை காங்கிரசாரும் தேர்தலுக்கு முன்னால் பொறுப்பில் விடுதலை செய்யப்பட்டார்கள். அதிகார துஷ்பிரயோகம் என்றால் அத்தனை பேரையும் உள்ளே அடைத்து வைத்து-காங்கிரஸ் பாணியில் தேர்தல் நடத்தியிருக்கலாமே!

நாகர் கோவில் தேர்தலில் காங்கிரசார் நடந்து கொண்ட விதத்தை 'இந்து' இதழில் திருவனந்த புரத்தைச் சேர்ந்த ஹண்டே என்பவர் எழுதிய கடிதம் தெளிவாகக் காட்டுகிறது.

ஜனநாயக உரிமை பாதுகாப்பு தினம் கொண் டாடுமுன் காங்கிரசார் அந்தக் கடிதத்தை நினைவு கூரட்டும்.

"நாகர்கோவில் தேர்தல் முடிந்து விட்டது. காமராஜர் வென்றுவிட்டார். காங்கிரஸ் கட்சி பெரிய அளவில் வெற்றி பெற்றுவிட்டது. டாக்டர் மத்தியாஸ் தோற்றுவிட்டார். இந்த வெற்றியை ஜனநாயகத்தின் வெற்றி என்று புகழ்கிறார்கள். அதோடு விஷயம் முடிந்துவிடவில்லை. கூட்டணியை, போலீசை, அதிகாரிகளை - சி. சுப்பிரமணியம் கடுமையாகத் தாக்கி இருக்கிறார். அவர் யாரையும் விடவில்லை. இந்தக் கூச்சல், குழப்பம், வெறுப்பு, வன்முறை இவை யெல்லாம் எழுப்பியுள்ள புகை மண்டலத்தின் நடுவில் உண்மைதான் என்ன என்பதைக் கண்டுபிடிக்க வேண்டும்.

"நான் இந்தத் தொகுதியை பல முறை-நள்ளிரவில் சுற்றிப் பார்த்திருக்கிறேன். என்னுடன் என் மனைவியும் என் சகோதரரும் வந்தார்கள். நான் கண்டவை கேட்டவை நேரடியாக உணர்ந்தவை. அனைத்தும் என்னுள் தீராத மன வேதனையை ஏற்படுத்தியது. ஜனநாயகத்தின் எதிர்காலத்தை பற்றிய கவலையை ஏற்படுத்தியது. எதிர்க்கட்சி அரசாங்கத்தைச் சகித்துக் கொள்வதற்கான பொறுமையும், நிதானமும் அற்ற காங்கிரஸ்காரர்கள் இத் தேர்தலில் அழிக்கும் தன்மை வாய்ந்த நச்சு நடவடிக்கைகளை இத்தேர்தலில் கையாண்டார்கள். காங்கிரசின் இந்தப் போக்கை இதர கட்சிகளும் பின்பற்றுமானால் இங்கே உள் நாட்டுப் போரே தொடங்கிவிடும்.

"நாகர்கோவிலில் வெற்றி பெற்றது ஜனநாயகமல்ல. பச்சை வகுப்புவாதமும், முடுக்கிவிடப்பட்ட காலித்தனமும்தான் அங்கே வெற்றி பெற்றது. ஏற்கெனவே விதைக்கப்பட்டிருந்த வகுப்பு விரோதம் இப்போது வளர்ந்து பெரிய மரமாகி விட்டது. இந்த நச்சு சூழ்நிலை மாறுவதற்கு நெடுநாட்களாகும். நீண்ட தூரத்திலிருந்தெல்லாம்கூட பணம் வந்து ஆறாகப் பாய்ந்தது. மாநிலத்தின் பல பகுதிகளிலிருந்தும் லாரிகள் வந்தவண்ணமாயிருந்தன. இவை முடிவேயில்லாத நீண்ட வரிசையில் ஊர்வலம் போலச் செல்வதைக் காண்பது ஒரு காட்சியாகத்தானிருந்தது. ரஷ்யாவின் ராட்சஸ டாங்கிகள் நுழைந்து ஆக்கிரமித்தபோது செக்கோஸ்லோவேக்கியா இருந்ததைப் போல-நாகர்கோவில் சக்தியற்று இருந்தது.

"கூட்டணியைச் சேர்ந்த எந்தக் காரும் லாரியும் நகரக்கூட முடியவில்லை."

"கூட்டணியைச் சேர்ந்த கார் எங்காவது ஒன்று நகர்ந்தால் காங்கிரசைச் சேர்ந்த நான்கு வண்டிகள் அதைச் சூழ்ந்துகொள்ளும். முதிர்ந்த காங்கிரஸ்காரர்கள் கூட போலீசையும் அதிகாரிகளையும் நாள் தவறாமல் குற்றம் கூறிப் பேசியது வருந்தத்தக்கது. போலீஸ்காரர்களும் அதிகாரிகளும் கடந்த 30 ஆண்டுகளாக காங்கிரசின் அதிகாரத்தின் கீழேயே இருந்து வந்தவர்கள். இன்று காங்கிரஸ்காரர்கள் கூறுகிற குற்றச்சாட்டு உண்மையாக இருக்குமானால்-அவர்கள் தங்கள் கீழ் உள்ள அதிகாரிகளுக்கு எத்தகைய பயிற்சியைக் கொடுத்திருக்கிறார்கள் என்பதைத்தான் இது காட்டுகிறது.

"இது ஒருபுறமிருக்கட்டும். போலீசாரின் நடத்தைக்காக அவர்களையும் போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜெனரலையும் பாராட்டத்தான் வேண்டும்.

"கூட்டணி ஆதரவாளர்களுக்கு சாதாரணமான பாதுகாப்பைக் கூட அவர்கள் வழங்கவில்லை. இதற்காக வேண்டுமானால் குற்றம் சொல்லலாம்.

"இத்தேர்தலில் தி. மு. கழக அரசின் நடைமுறை-நீண்டகாலத்துக்கு அவர்களின் புகழைப் பறை சாற்றிக் கொண்டிருக்கும்."

"இத்தேர்தலில் தி. மு. கழக அமைச்சர்கள் காட்டிய பொறுமையும் சகிப்புத்தன்மையும் நிதானமும் பெரிதும் பாராட்டத்தக்கவை. மற்ற இடிபாடுகளுக்கிடையில் அவர்கள்தான் வெற்றி பெற்றிருக்கிறார்கள் என்று நான் கூறுவேன்."

கடிதத்தைப் பார்த்தாயா நண்பா; ஜனநாயக உரிமைப் பாதுகாப்பு தினம் கொண்டாடும் காங்கிரசார் செயல் வேங்கை வெள்ளாடு வேடம் போடுவது போன்ற செயல்தானே?

அன்புள்ள

மறவன்

(18-01-1969)

32. காமராஜரின் கடற்கரைப் பேச்சின் பொருள் என்ன?

அன்பு நண்பா;

சென்னை கடற்கரையில் நடைபெற்ற குடியரசு நாள், நாகர்கோவில் வெற்றி விழா ஆகியவைகளின் கூட்டுக் கூட்டத்தில் சுப்பிரமணியம், காமராஜர் பேசிய பேச்சுக்களைப் படித்திருப்பாய்! குடியரசு தினத்தன்று கூட கழகத்தின் மீது குற்றச்சாட்டுகளை வாரியிறைப்பதை நிறுத்திவிடவில்லை இருவரும்! சுப்பிரமணியம் அடி எடுத்துக் கொடுக்க காமராஜர் அதைத் தொடர்ந்து பாடியிருக்கிறார்.

மொழிப்பிரச்சினை இருக்கும்வரை எங்களுக்குக் கவலை இல்லை என்று யாரோ ஒரு பொருளாதார நிபுணரிடம் அண்ணா அவர்கள் கூறினார்களாம். அதை அந்த நிபுணர் உடனே போய் சுப்பிரமணியத்திடம் கூறிவிட்டாராம், அதைச் சுப்பிரமணியம் கடற் கரையில் கூடிய கூட்டத்திலே சொல்லிவிட்டார். சுப்பிரமணியத்தைத் தொடர்ந்து பேசிய காமராஜர்,

"ஓட்டுப் பெறுவதற்காக இந்தப் பிரச்சினை ஒன்றே போதும் என்று முதலமைச்சர் ஒரு பொருளாதார நிபுணரிடம் குறிப் பிட்டதாகத் தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் குறிப்பிட்டார். தாங்கள் அதிகாரத்தில் இருக்க வேண்டும். இதற்கு ஓட்டு பெற இந்தப் பிரச்சினை இருக்க வேண்டும் என்பதால் இந்தப் பிரச்சினை தீரக் கூடாது என்பவர்களும் இருக்கிறார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது? இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் அக்கறை இல்லை என்பதுதானே?"

-எனப் பேசி மொழிப் பிரச்சினையைத் தீர்ப்பதில் அண்ணாவுக்கு அக்கறை இல்லை என்று குறிப்பிட்டுள்ளார்கள்!

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் சுப்பிரமணியம் பேசும் போது மொழிப் பிரச்சனையைத் தீர்க்கக் கூடிய ஒரே தலைவர் காமராஜர் என்று குறிப்பிட்டிருக்கிறார். மொழிப் பிரச்சினை இந்தியாவில் திடீரெனத் தோன்றிய ஒன்றல்ல-1949 ஆம் ஆண்டிலே கூடிய அரசியல் நிர்ணய சபையிலேயே இந்தியாவில்

மொழிப் பிரச்சினை வாதப் பிரதி வாதங்களுடன் ஆரம்பமாகி விட்டதை உணராதவர்களாக இருக்க முடியாது காமராஜரும் - சுப்பிரமணியமும்!

இத்தனை ஆண்டு காலமாக அகில இந்திய காங்கிரசுக்குத் தலைமைப் பொறுப்பை ஏற்றுத் திகழ்ந்த காலத்திலும் மொழிப் பிரச்சினையை காமராஜரால் தீர்க்க முடியவில்லை-இனிமேல் தான் சுப்பிரமணியம் கூற்றின்படி தீர்க்கப் போகிறார்! அப்படித் தீர்க்கமுடியாத பிரச்சினையை அதிகாரத்தில் இருக்க வேண்டும், ஓட்டுப் பெற வேண்டும் அதனால் பிரச்சினை தீரக்கூடாது-என அண்ணா நினைத்து தீர்க்காமல் இருக்கிறார் எனக் குற்றம் சாட்டுவது எத்தனை போலித்தனமான வாதம் என்பதை உணர்ந்து பார் நண்பா!

அப்படியே வாதத்துக்கு காமராஜர் வாதத்தை ஏற்றுக் கொண்டாலும், இந்தப் பிரச்சினை ஒரு கட்சியை ஆட்சிப் பீடத்தில் ஏற்றும் தன்மை வாய்ந்தது என்றால் அந்தப் பிரச்சினை எந்த அளவு மக்கள் மனதில்-குறிப்பாக தமிழக மக்கள் மனதில் வேரூன்றி உள்ளது என்பதையாவது காமராஜர் உணர வேண்டாமா? மத்திய அரசின் மொழிக் கொள்கையை தி. மு. கழகம் எதிர்ப்பது அதிகாரத்தில் இருக்க வேண்டுமென்பதற்காக என்றால்-ராஜாஜி எதிர்ப்பது எதனால்?

முன்னாள் நீதிபதி சுப்பாராவ் எதிர்ப்புணர்வைக் காட்டுவது எதனால்?

சி. பி. ராமசாமி எதிர்ப்பு காட்டியது எதனால்?

இவர்களெல்லாம் ஆண்டு அனுபவிக்காத அதிகாரங்களா? அதிகாரத்தில் இருக்க வேண்டுமென்பதற்காக மொழிப் பிரச்சினையை நீடிக்கிறார்கள் என்று காமராஜர் கூறுவதில் நியாய உணர்வு உள்ளதா என்பதை நீயே சிந்தித்துப் பார் நண்பா!

தமிழகத்திலே மொழிப் போரில் துறவிகளும் பங்கேற்ற வரலாறு உண்டே!

மொழிப் பிரச்சினையைத் தீர்க்கக் கூடிய சக்தி வாய்ந்தவர் என சுப்பிரமணியத்தால் கூறப்படும் காமராஜர் பழியை பிறர் மீது போட்டு தப்பிக்க எண்ணுவதாகத்தான் அவரது கடற்கரைப் பேச்சின் பொருள் இருக்கிறது.

அன்புள்ள

மறவன்

(28-01-1969)

33. தெளிந்திடும் நீரோடை!

அண்ணா,

மோப்பக்குழைந்த அனிச்சம் போல் உன் முகம் வாடி யிருப்பதற்கு எனக்குக் காரணம் புரிகிறதண்ணா! வாரம் இரு முறையாவது வரைகிறேன் மடல் என்று கூறிவிட்டு, இத்தனை நாட்கள் ஏதும் எழுதாமல் இருந்து விட்டேன் என்றுதானே!

"இல்லை தம்பி; இல்லை! உனக்கு ஓய்வில்லாத தொல்லை என்று எனக்குத் தெரியும். நாள்தோறும்; ஏன் மணித்துளிகள் தோறும் பார்வையாளர்கள் மாநாடு - பரிந்துரைக்க வருவோரைக் கடிந்துரைக்க முடியாமல் நீ படும்பாடு! அரசியல் களத்தில் சந்தித்துத் தீர வேண்டிய சக்கரவியூகங்கள்! மரண வாசலில் நான் இருந்தபோதுகூட என் உழைப்பைப் பெற்றுக் கொண்டு, கழக மணிகளாம் என் கண்ணின் மணிகள் பலரின் கை கால்கள் முறிபடவும், கழக அமைச்சர்கள் தங்கியிருந்த இடங்கள் முற்றுகையிடப் படவும், தொண்டினையும் பெற்று அவர்தம் தொண்டர்க்குத் தொகையினையும் பெற்று நம்மிடம் வெற்று அன்பு காட்டியோர் இன்று தங்களின் உண்மை உருவத்தைக் காட்டி விட்டனரே என நீயும் மற்றவரும் நெஞ்சு நெகிழ்ந்திட நிற்கின்ற காட்சி! இனிய நறுமணத்தினை திரையிட்டு மறைக்க முயலும் இதழார் சிலரின் பத்திரிகா தர்மம்! பொய்யும், புனைசுருட்டும், பொல்லாங்கு மொழியும் கொண்டு பொது வாழ்வில் ஒளிவிடக் கருதி கண் சிமிட்டும் அரசியல் மின்மினிகள்! இத்தனைக்குமிடையே கழகத்திற்கு எதிரிகள் போதாதென்று, கழகத்திற்குள்ளேயே கட்டுப்பாட்டை மீறிடும் போக்கினர்; இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சிலர் இருப்பினும் அதுகண்டு குமுறும் உன் போன்றோர் சங்கடம்! இவையனைத்தும் என் முக வாட்டத்திற்குக் காரணமென எண்ணாதே! முந்தித் தவமிருந்து முந்நூறுநாள் சுமந்து அந்தி மல்லிகைபோல் மகவொன்று

பெற்றெடுக்கும் அன்னையினும் சிறந்தவளாம்; கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றி மூத்த தமிழ்த் தாய் - அந்தத் தாயின் உயிர்பறிக்கக் கொடுவாள் தூக்கிடும் கரங்கள் முப்பது ஆண்டுகளுக்கு முன்புதான் உயர்ந்தன. உயர்ந்த வேகத்தில் அவை ஒடுங்கின. "வெங்கொடுமைச் சாக்காட்டில் விளையாடும் தோள் எங்கள் வெற்றித் தோள்கள் - வெங்குருதி தனிற் கமழ்ந்து வீரஞ் செய்கின்ற மூச்சு எங்கள் தமிழ் மூச்சாம்" என பசுமலை பாரதி முறுக்கு மீசையைத் திருகி எழுந்தார்; "அன்னைத் தமிழை அழிப்பவர் யாரடா?" என ஆர்த்தெழுந்தார். புலவர் கூட்டம் போர்முரசு கொட்டிற்று - வெண் தாடி வேந்தர் பெரியாரின் தமிழ்ப் படை களம் புகுந்தது - ஆடவர், பெண்டிர் ஆயிரக்கணக்கில் சிறை ஏகினர். தாளமுத்து, நடராசன் எனும் இரு தமிழ் வாலிபர்கள் சிறைப்பிணமாயினர். "நடைப்பிணமாவதோ தமிழர்?" எனப் பகைப்புலம் மாய்க்க மூண்டது பெரும் போர்! அந்தப் போருக்கோர் முடிவு இன்றுவரை ஏற்படவில்லையென எண்ணும்போது; தம்பீ! - என் முகம், மோப்பக் குழைந்த அனிச்சமென்ன; தீயிடை வீழ்ந்த முல்லையெனக் கருகிடாதோ?"

என நீ என்னைப் பார்த்துக் கேட்பது என் செவிப்பறைகளைக் கிழிக்கிறது அண்ணா - அந்தப் போரின் தொடக்கத்தில் தானே என் அருமை அண்ணனே; உன் பெயர் தமிழகத்தில் ஒளிவிடத் தொடங்கிற்று. அந்தப் போரில் ஆறுதிங்கள் சிறைவாசத் தண்டனை பெற்றாய். என் தலைவர்க்குத் தலைவராம் பெரியார் பெல்லாரி சிறையில் அடைபட்டார். அந்தக் கால கட்டத்தில்தான் அண்ணா; திருவாரூர் உயர்நிலைப் பள்ளியின் மாணவனாக இருந்த நான்; நீயும் பெரியாரும் அண்ணன் அழகிரியும் முத்தமிழ்க் காவலர் விசுவநாதமும் ஊட்டிய தமிழ் உணர்வால் உந்தப் பெற்று தமிழ்காக்கும் அணியிலோர் இடம் பெற்றேன். அழகிரி தலைமையில் மூவலூர் மூதாட்டி ராமாமிர்தம் அம்மையாரும், மணவை திருமலை சாமியும், எஸ். வி. லிங்கமும், தமிழ்ப்புலவர் பெருமக்களும் "தமிழர் படை"யொன்றினைத் திரட்டித் தமிழகமெங்கும் நடந்தே சென்று இந்தி ஆதிக்கத்தை எதிர்த்து இன்பத் தமிழ் வென்றிட முடிவு ஒலித்தனர். அதற்குப் பிறகு தமிழ்நாட்டில் தமிழைக் காத்திட எத்தனையோ போராட்டங்கள். குடந்தை வீதிகளில் குருதி மழை பொழிந்தது. "தமிழ் வாழ்க" என்றோர் உதைக்கப்பட்டனர். வதைக்கப்பட்டனர். ஐந்தாண்டுகளுக்கு முன்பு மூண்ட மொழிப்

புரட்சியில் மாண்டவர் தொகை; அம்மவோ! சொல்லவும் போமோ! அந்தக் கணக்கை எழுதிய ஏடுகள் தடுக்கப்பட்டன. ஏட்டின் உரிமையாளர்கள் சிறையில் அடைக்கப்பட்டனர். உண்மைக் கணக்கைச் சொன்னவர்க்கே அன்று அந்த சித்ரவதை! தணலின் நாக்குகள் தங்களைத் தழுவிடத் தழுவிட "தமிழ் வாழ்க" எனக் கூறியவாறு தங்கங்கள் எட்டுப்பேர் தீக்குளித்துச் செத்தனர். தில்லையிலே மாணவன் ராஜேந்திரன் சிலையாக மாறிவிட்டான். மார்பில் குண்டுகளை மலர்ச் செண்டுகள் என ஏந்தி உயிர் விட்டனர் மாணவர்கள். திருச்செங்கோட்டுத் தெருவெல்லாம் பிணக்குவியல்! ஆரணியில் ஏழு பிணங்கள்! ஏழு வயது, எழிற்கண்மலர், பார்வதியென்னும் பச்சிளங் குழந்தைத் தண்ணீர் முகக்கத் தாயுடன் குழாயடிக்குச் சென்றபோது குண்டுக்கு இரையான பரிதாபச் செய்தி! இப்படி ஒன்றா? இரண்டா? இன்னும் கடுமையாக நடவடிக்கை எடுத்திருக்க வேண்டுமென்றார் பழைய பச்சைத் தமிழர். அந்தப் போர்க்களக் காதை முடிவுற்று, பெருமூச்சு விடுவதற்கும் நேரமில்லை. மீண்டும் தமிழ் அழிக்க, தமிழர் எதிர்காலம் அழிக்கப் பெரும் சூழ்ச்சி உருவாயிற்று!

நீயிருந்தாய் தமிழகத்தின் முதல் அமைச்சராய்; தாயிருக்கப் பேயின் உறவு எதற்காக என்று தடைக்கற்கள் உடைத்தெறியத் தடந் தோள் உயர்த்தினாய்.

உரிமை ஒளிவழங்கத் தமிழும், வெளி உறவுக்கு ஆங்கிலமும் போதுமென்று கூறி, இந்தியினை அகற்றி சட்டமன்றத்தில் தீர்மானம் தந்து, நீ ஆற்றிய உரை யினைத் தொடர்ந்தே உன் அடியொற்றி நடக்கும் கழக அரசு செயல்படுகிறது.

ஆனால் அண்ணா முன்பெல்லாம் தமிழை வளர்க்கக் களம் கண்ட வரலாறு உண்டு! இன்றோ தமிழை வீழ்த்திட தமிழகத்தில் களம் அமைக்கும் புதிய வரலாறு தோன்றுகிறது. களங்கமில்லா உளம் படைத்த கண்மணிகளாம் மாணவர் சிலரைப் பயன்படுத்தி அந்தத் தமிழ்ப் பகைவர் தமக்கு பலன் தேட முனைகின்றனர்.

இது கண்டு, உன் மனம் என்ன பாடுபடும் என்பதைத் தமிழர்கள் அறிவர்.

உடல் நலங்குன்றி, நின்றிடவும் இயலாத நிலையில், மருத்துவர் தடுத்தும் கேளாமல்; தமிழ் நாடு என்ற பெயர் வந்த

இந்த நாளைக் கொண்டாட முடியாமல் அந்த உயிர் இருந்தால் என்ன; போனால் என்ன என்று கேட்டு - தமிழ் நாடு பெயர் சூட்டு விழாவில் கலந்து கொண்ட உன் தமிழ் உணர்ச்சியையும்; 'தமிழ் நாடு' கோரிக்கைக்காக உண்ணாவிரதமிருந்து உயிர்விட்ட சங்கரலிங்கனாரை அலட்சியமாகப் பேசியவர்களின் தமிழ் உணர்ச்சியையும் இந்த நாடு புரிந்து கொள்ளாமல் இல்லை.

நீ காட்டிய அந்த தமிழ் உணர்ச்சியின் வடிவந்தான் இன்று தமிழ் எதிர்ப்பாளருக்கு எதிராக மலைபோல் எழுந்து நிற்கிறது.

தமிழர் வாழ்ந்தால்தான் தமிழ் வாழும்; ஆகவே தமிழர் வாழ ஆங்கிலம் தேவை என்கிறார்கள் அவர்கள்!

உடல் இருந்தால்தான் உயிர் வாழும்! ஆகவே உடல்வாழ உடை தேவை யென்கிறார்கள். உயிரும் உடலும் தேவை: அந்த உடலுக்கு உடையும் தேவை யென்கிறோம் நாம்! தமிழும், தமிழர் வாழ்வும் தேவை. அவர்கள் தேவைக்கு உடைபோல் ஆங்கிலமும் தேவையென்கிறோம்.

புரிகிறது அவர்களுக்கு! ஆனாலும் நாம் ஆளுவது அவர்களுக்கு எரிகிறது வயிற்றில்! என்ன செய்வார்கள் பாவம்;

சென்ற ஆண்டு சிவகங்கை, திருச்சியில் கூடி "எங்கே தமிழ்ப் போதனா மொழி?" என எக்காள மிட்டனர்.

பச்சைத் தமிழர், பச்சையப்பன் கல்லூரியில் பேசியபோது "பயிற்று மொழி தமிழேதான் வேண்டும்" என்று கர்ச்சனை செய்திட்டார்.

இன்றோ அர்ச்சனை செய்கின்றார் நம்மை அவதூறு பல கூறி!

"அரசியல் தம்பீ! அரசியல்"

-எனக்கூறி புன்னகை புரிகிறாய்; அய்யோ எவ்வளவு வேதனை தோய்ந்த சிரிப்பு அது!

அண்ணா, உனது பழைய நண்பர் ஆற்றல் மிக்க டாக்டர் கிருஷ்ணசாமி, திடீரென நேற்று ஆங்கிலம் அகற்றப்பட்டால் இந்தி நுழைந்து விடுமெனக் கடும் இந்தி எதிர்ப்பாளராக மாறியிருக்கிறார். அப்படி ஒரு வீராவேசமான பேச்சு! ஆங்கிலம் அகற்றப்பட்டால்

தானே இந்தி வரமுடியும்! ஆங்கிலத்தை யார் அகற்றுவதாகச் சொன்னார்கள்? பிறகு எதற்காகக் கற்பனையின் மீது வாதம் செய்கிறார் அந்த வல்லுநர்? பயிற்று மொழியில் தோன்றியுள்ள ஐயமும், அச்சமும் களைந்து நடைமுறைச் சிக்கல் தீர்ந்து, தமிழர்தம் எதிர்காலம் பாதிக்காத வகை கண்டு அரசுக்குக் கருத்து வழங்க பேராற்றல் படைத்த பெரியவர் லட்சுமணசாமி தலைமையில் குழு அமைத்த பிறகும் "குழப்பநிலை" உருவாக்குவானேன்?

அண்ணனே, "மாணவர்கள் என் சதையின் சதை-ரத்தத்தின் ரத்தம்!" எனக் கூறிய உன் வழிநின்று நடக்கின்ற இந்த ஆட்சியில் மாணவச் சகோதரர்கள், இரட்டை நாக்கு படைத்தோரின் மாய்மாலப் பேச்சுக்கு இரையாக வேண்டாமென உன் பெயரால் பல முறையும் கேட்டுள்ளேன், இப்போதும் கேட்கிறேன்.

"இந்தி நுழைந்துவிடும்" என இங்கே எச்சரிக்கிற டாக்டர் கிருஷ்ணசாமி, சிண்டிகேட் காங்கிரசின் உறுப்பினர். **எதிர்கால பாராளுமன்ற வேட்பாளர்**. இந்தக் கருத்தை மொரார்ஜிக்கு முன்பு, ராம் சுபாக் சிங்கிற்கு முன்பு எடுத்துக் கூறும் துணிவு அவருக்கு மட்டுமல்ல; அவரது தலைவர் திரு. காமராஜருக்கே வரமுடியாதே! வந்தால் அவர்கள் அகில இந்திய சிண்டிகேட்டில் இருக்க முடியாதே! இதனை மாணவர்கள் உணர்ந்தால் அவர்தம் மனதில் தோன்றியுள்ள அச்சம் அகலும்! ஐயம் தொலையும்! மாணவர்களின் உண்மை நண்பர்களை, எதிர்காலத் தமிழகத்தின் மேன்மைக்கு உழைப்பவர்களை அவர்கள் தெரிந்து கொள்வர்!

அந்த நிலையினை அமைதியாக உருவாக்க இயலுமென்ற நம்பிக்கையை உன்னை எண்ணிப் பெறுகின்றோம்; கலங்கிய நீரோடை விரைவினில் தெளிந்திடு மென்று!

தம்பி,

மு. கருணாநிதி.

(01-01-1971)

34. வென்றிட வேறு யாருளர்?

அண்ணா,

வண்ண வண்ணக் கொடிகள் வான்முட்டப் பறந்திட, வாழ்த்தொலிகளும் அதற்கு மறுப்பு முழக்கங்களும் செவிப்பறை கிழித்திட, வீதிக்கு வீதி, தெருவுக்குத் தெரு ஒலி பெருக்கிகள் கர்ச்சித்திட வந்து விட்டது தேர்தல்!

இந்திய மண்ணில் பல மாநிலங்களில் நாடாளுமன்றத்திற்கு மட்டுமே தேர்தல்-இங்கு நம் தமிழகத்திலோ சட்ட மன்றத்திற்கும் தேர்தல். "என்ன சட்டமன்றத்திற்கும் தேர்தல் நடத்தி விடலாமா? மக்களை ஆண்டுதோறும் தேர்தல் தேர்தல் என்று அலைக்கழிக்க வேண்டுமா?" என நிலைமையை விளக்கிடவும், கருத்துக்களைப் பெற்றிடவும் செயற்குழுவையும் பொதுக்குழுவையும் கூட்டியபோது, அதில் சிறப்பு அழைப்பினராகக் கலந்து கொண்ட சட்டமன்ற உறுப்பினர்கள் இம்மியளவு எதிர்ப்பும் காட்டாமல்; "ஆம்; அதுவே உகந்த வழி"யென்று எடுத்துக் கூறிய பாங்கினைக் கண்டபோது என் உள்ளமெல்லாம் சிலிர்த்தது.

1967 ஆம் ஆண்டு; உன் தலைமையில் பொதுத் தேர்தல் களம்புகுந்தது கழகம்! இப்போது நினைத்தாலும் என் நெஞ்சு நெகிழ்கிறது - கண்கள் குளமாகின்றன - விருகம்பாக்கத்தில் நடைபெற்ற தேர்தல் சிறப்பு மாநாட்டில் கழக வேட்பாளர்களின் பட்டியலைப் படித்துக் கொண்டு வந்த நீ; சைதாப்பேட்டை தொகுதி என்று கூறி, சிறிது நிறுத்தி - உனக்கேயுரிய அந்த நளினமான குரலில் 'பதினோரு லட்சம்' என்று அறிவித்தாயே; அதனை எப்படியண்ணா மறந்திட முடியும்?

ஐந்தாண்டுகள் பதவிப் பொறுப்பினை மக்கள் கழகத்திற்கு அளித்தார்கள். அதனை இப்போது எதேச்சாதிகாரமாகக் கலைத்துவிட்டனர் என்று கடுமொழியும், சுடுமொழியும் கூறுகின்ற பெரியவர்களையெல்லாம் காணுகிறேன். "பதவிப் பொறுப்பு" என்ற

சொல் இணைப்பையும் அதன் உண்மைப் பொருளையும் உணராத காரணத்தால்தான் அவர்கள் அவ்வாறு கூறுகிறார்கள்.

பொறுப்பை உணர்ந்திருக்கிற காரணத்தால்தான் ஓராண்டுக் காலம் தங்கு தடையின்றி நீடிக்கக் கூடிய பதவியைப் பொருட்படுத்தாமல் பொது மக்களின் சங்கடங்களை நீக்கி, நன்மைகளைப் பெருக்கும் நிர்வாகச் சகடம் ஒழுங்காகச் சுழன்றிட இந்த முடிவினைக் கழகத்தினர் மேற்கொண்டனர்.

ஏழெட்டு நாட்களுக்கு முன்பு காங்கிரஸ் ஏடொன்றில் எட்டு பத்தி தலைப்பிட்டு ஒரு செய்தி படித்தேன் அண்ணா! அதில்; சுதந்திரக் கட்சியும், இடது கம்யூனிஸ்டும், தி. மு. க. வுக்கு அளித்து வந்த ஆதரவைத் திரும்பப் பெற்றுவிட்டதால், இனிமேல் தி. மு. க. வினர் தொடர்ந்து பதவியில் இருக்கக் கூடாது என்று யாரோ சிலர் கூடி, கவர்னருக்கு தாக்கீது அனுப்பியதாகப் பரபரப்பான விளம்பரம் தரப்பட்டிருந்தது. இது சட்டசபைக் கலைக்கப் படாததற்கு முன்பு!

இப்போது சட்டசபை கலைக்கப்பட்டு, கழகம் மறு தேர்தலுக்குத் தயாரானதும் "இது ஜனநாயக விரோதச் செயல்" என்று அதே ஏட்டில் அதே அளவு பரபரப்புடன் செய்தி வெளி வருகிறது.

காங்கிரஸ் கட்சி இரண்டாகப் பிளந்தபோது, மொரார்ஜி குழுவினர் நாடாளுமன்றத்திற்கு உடனடியாக மறுதேர்தல் வேண்டுமென்று இந்தியாவின் மூலை முடுக்குகளில் எல்லாம் எக்காளமிட்டனர். இன்றைக்கு அந்த அம்மையார் மறுதேர்தல் என அறிவித்ததும், "அய்யோ! அநியாயம்! சர்வாதிகாரம்!" என்று அதே வாய்கள் ஓலமிடுகின்றன.

"எங்கே தமிழ் போதனா மொழி?" என்று சென்ற ஆண்டு கேட்ட தமிழ்நாட்டுக் காங்கிரஸ் பெருந்தலைவர், இந்த ஆண்டு; "எதற்காகத் தமிழில் போதனா மொழி?" என்று கேட்கிற காட்சியை நாடு காண்கிறதே!

இந்த முரண்பாட்டுக் கருத்துக்களை மூடிவைத்து அவர்களுக்கு விளம்பரம் தர ஏடுகள் சில வரிந்து கட்டிக்கொண்டு கிளம்பியிருக்கின்றன. எங்காவது வன்முறை தலை தூக்காதா? அதை மேலும் தூண்டி விடலாமே - என அந்த எரிச்சலாளர்கள் தூபமேந்தி நிற்கிறார்கள்.

நீதானே அண்ணா அடிக்கடி சொல்வாய்; வன்முறை என்பது இருபுறமும் கூர்வாய்ந்த கத்தி - அது பயன்படுத்தியவன் மீதே பாய்ந்திடவும் கூடுமென்று; அதை அறியாதவர்கள்-ஏதேதோ செய்து கொண்டிருக்கிறார்கள். இன்னும் ஐம்பது அல்லது அறுபது நாட்கள் - அதற்குள் ஆடவேண்டிய ஆட்டமெல்லாம் ஆடி, ஆட்சியை எப்படியாவது பிடித்து விட வேண்டுமென்று துடியாய்த் துடிப்பவர்களுக்கு இந்த இதழ் ஆசிரியர்கள் துணையாய் நிற்கிறார்கள்.

ஒரு இதழ் ஆசிரியர்; அவரைப் பற்றி நீ எனக்கு முன்பே சொல்லியிருக்கிறாய். மந்திரிச் சபைப் பட்டியலை எடுத்துக் கொண்டு நீயும், நானும், நாவலரும் கவர்னர் மாளிகைக்குச் செல்லும் வழியில் காரில் சொன்னாய், அவரைப் பற்றி!

“தம்பீ! நாம் அமைச்சர்களாகின்றோம், இன்றைக்கு. ஆனால், நம்மோடு-பழம் நழுவி பாலிலே விழுந்தது போல் பாசங்காட்டிப் பேசுகிறார்களே சிலர்; அவர்கள் நேற்று மாலையில் நம்மைப் பற்றி என்ன பேசிக் கொண்டார்கள் தெரியுமா? என்னிடம் அன்புடன் பழகிடும் இரு நண்பர்கள்! ஒருவர் இதழ் ஆசிரியர்-இன்னொருவர் கலியுகக் கம்பர்-அவர்கள் பேசிடும் பொழுது நம்மவர் ஒருவர் அங்கே இருந்திருக்கிறார்.”

“என்ன அண்ணா பேசினார்களாம்?”

“என்ன பேசுவார்கள்! இதுகள் எல்லாம் நாடாள வந்துவிட்டதே; நம் தலைவிதியை பார்த்தாயா? என்று ஒருவர் கவலைப்பட்டார்! இன்னொருவர் கர்மம்! கர்மம்! என்று வேதனையை வெளியிட்டார்!”

அண்ணா! அவர்களை நீ அன்றைக்கே எங்களுக்கு அடையாளம் காட்டியிருந்தும், நாங்கள் இதுவரையில் அவர்களிடம் அவர்களது உள்ளம் எங்களுக்குத் தெரிந்தது போலக்கூடக் காட்டிக் கொண்டதில்லை. அவர்கள் இப்போது தாமாகவே முன்வந்து தாங்கள் யார் என்பதை வெளிப்படையாகக் காட்டிக் கொண்டிருக்கிறார்கள். அண்ணா என்ற காந்தியின் எண்ணங்களைச் செயல்படுத்துவதற்கு இவர்தான் தமிழ்நாட்டு வல்லபாய்பட்டேல் என்று அந்த ஆசிரியர் என்னை வர்ணித்துப் பேசியபோது கவர்னர் மாளிகைக்குப் போகும் வழியில் காரில் நீ சொன்னதைத்தான் நினைவுபடுத்திக் கொண்டேனேயல்லாமல் வர்ணனை யென்னும் அந்த வஞ்சக வலையில் வீழ்ந்திடவில்லை.

அதனால்தான் இப்போது அவரது எழுத்துக்கள் கண்டு எனக்குத் திகைப்போ, வருத்தமோ ஏற்படவில்லை.

என்ன செய்வது; சாதாரணக் குடும்பத்தில் பிறந்து விட்டோம்! குலப் பெருமை - கோத்திரப் பெருமை - கோடீஸ்வரன் வீட்டுப் பிள்ளை என்ற பரம்பரைப் பெருமை - எதுவுமில்லாத சாமானியன் - பின் தங்கிக் கிடக்கும் சமுதாயத்தில் தோன்றியவன் - மேட்டுக் குடியினர் சிலரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

கை வலிக்க வலிக்கக் கடுமொழி எழுதுகிறார்கள். வாய் வலிக்க வலிக்க அவதூறு அர்ச்சனை புரிகிறார்கள். அவர்கள் தாக்கியும் தரக் குறைவாகவும் விமர்சிக்கும்போதெல்லாம் அவர்களே முன்பு நம்மைப் பற்றிப் போற்றியும் புகழ்ந்தும் எழுதியவைகளைப் படித்து மகிழ்ச்சியடைய முடிகிறது. இத்தகையோர் சூழ்ந்து முற்றுகையிட தேர்தல் களம் நுழைகிறோம் நாங்கள்!

“தம்பி! நம்மை நாமே அழித்துக் கொண்டால் தவிர, வேறு யாரும் நம்மை அழிக்க முடியாது”

-என்று நீ கூறிய வாசகத்தை இருதயத்தில் பதித்துக் கொண்டு; உன் வாழ்த்துக்களோடு மக்கள் மன்றம் செல்கிறோம்; வெற்றி மலர்கள் அள்ளி வருகிறோம்; உன் காலடியில் குவிப்பதற்கு!

தம்பி,

மு. கருணாநிதி.

(07-01-1971)

35. உனக்காக விழித்திருப்போம்!

அண்ணா,

உன் தம்பிமார்களைக் கொண்ட ஓரணி; துணை ஆய்வுக் குழுக்களாகப் பிரிந்து மாவட்டங்கள் தோறும் சுற்றுலா நடத்திக் கொண்டிருக்கிறது.

தேர்தல் களம் புகும் வேட்பாளர் அணியின் பெயரை அறிவிக்கச் சென்னையிலே சிறப்பு மாநாடு நடைபெற இருக்கிறது.

தேர்தல் களமாயினும், அறப்போர்க்களமாயினும் வில்லில் இருந்து கிளம்பிய கணைகளெனக் கிளம்பி விறுவிறுப்புடன் பணியாற்றும் தூய தொண்டர் அணி, தோள் தட்டி நிற்கிறது!

ஒவ்வொரு தொகுதியிலும் நாலுபேர், ஐந்து பேர்களென வேட்பாளர்களின் விண்ணப்பங்கள் தரப்படுகின்றதே; அவர்களில் ஒருவருக்குத்தானே கழகச் சார்பில் போட்டியிட வாய்ப்புக் கிடைக்கும்; இன்னும் சில இடங்களில் தொகுதியில் தோழமைக் கட்சிகள் போட்டியிட வாய்ப்பு அளிக்கப்பட்டுவிடுமே; இதனால் இடம் கிடைக்காதவர்கள் இடரப்பட்ட புலிகளாக மாற மாட்டார்களா? அவர்களது மனக்கசப்பை முதலாக வைத்து லாபமடைய வழி ஏற்படாதா? என்றெல்லாம் எதிரிகள் விழிகளை அகலமாக்கிக் கொண்டு நிற்கிறார்கள்.

ஓரிரு இடங்களில், கட்டுப்பாட்டை மீறியவர்கள் உண்டென்றும்; அவர்கள் எல்லாம் தாங்கள் செய்த தவறை உணர்ந்திடும் நிலையில் கடந்த காலத் தேர்தல் முடிவுகள் இருந்திருக்கின்றன என்பதையும், அவர்களால் மக்கள் ஆதரவைப் பெறமுடியாது போனதையும் அவர்களும் மறுத்திட முடியாது.

அவர்களை நம்பி, ஏதோ ஒன்று நடக்கப் போவதாக எண்ணி எதிர்பார்த்திருப்பவர்களும் மறந்திட முடியாது. நீ போதித்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் அறவழியினை விட்டு

விலகியவர்கள், தாங்கள் செய்த தீவினைக்கு உன் முன்னாலேயே கண்ணீர் வடித்திருக்கிறார்கள்.

இன்று நீ எங்கள் மத்தியிலே இருந்து உடனுக்குடன் அறிவுரை கூறி ஆவன செய்திடும் வாய்ப்பையும் நாங்கள் இழந்திருக்கிறோம். இதனையுணர்ந்த உன் தம்பிமார்கள் மேலும் தங்கள் கட்டுப்பாட்டை உறுதிப்படுத்திக் கொண்டு கடமையாற்றப் புறப்படுவார்களேயல்லாமல்; காலமெல்லாம் நமது வளர்ச்சி கண்டு கண் எரிச்சல் கொண்டு திரிபவர்களின் கனவு நிறைவேறிட ஒருக்காலும் இடந் தந்திட மாட்டார்கள்.

தம்பியர், உன் உருவப் படத்தினை தம் வீட்டுக் கூடத்தில் மாட்டி வைத்து மாலையணிவித்து வணங்கி நிற்கின்றனரே; அவர்கள் நீ உரைத்த கட்டுப்பாட்டை மீறிடுவர் என்றால் அந்த வணக்கத்தில் பொருள் இல்லை என்பதை நீ உணர்ந்து கொள்வாய் என்று அவர்களுக்குத் தெரியாதா என்ன?

வங்கக் கடலோரம் நீ உறங்குகின்ற கல்லறையின் மீது மலர் தூவி நிற்கின்ற தம்பியர்க்கு நீ தருகின்ற அறிவுரையே; கட்டுப்பாடு காப்பாற்று என்பதுதானே!

அதனை மீறிடும் தம்பி எவனாயினும் அவன் அள்ளிச் சொரிவதை மலர்என நீ எண்ண மாட்டாயே; உன் இதயத்தில் குத்தும் முட்கள் என்றுதானே கூறிடுவாய்!

எரிச்சல்காரர்கள் சல்லடம் கட்டிப் புறப்பட்டு விட்டார்கள். இதுகள் நாடாளுவதா? என அன்று கேட்டவர்கள் இன்று பெரிய தோர் யுத்த முஸ்தீபுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். பணத் திமிங்கிலங்கள் தங்கள் பைகளை அவிழ்த்து அவர்கள் காலடியில் கொட்டுகின்றன. சீமான்களின் வீடுகளில் பிற்போக்கு சக்திகளின் சதியாலோசனைக் கூட்டங்கள் நடைபெறுகின்றன!

எது கிடைக்கும்? அதனை எடுத்து இவர்கள்மீது வீசலாம் என்று அகப்பட்டதையெல்லாம் நமக்கு எதிராகப் பயன்படுத்தத் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள்.

இருபதாண்டு காலம் அனுபவித்த “ராஜ வாழ்வு” பறி போயிருந்ததை மீண்டும் பெற்றுவிட வேண்டுமென்பதில்

கொள்கைகள் எல்லாம் குழி தோண்டிப் புதைக்கப்பட்டு விட்டன. ஜனநாயக சோசலிசம் சவப்பெட்டிக்குள் அடக்கம் செய்யப்பட்டுக் கிடக்கிறது. ஒரே குறிக்கோள் அவர்களுக்கு!

தமிழகத்தில் தி. மு. க. ஆட்சியை ஒழித்துவிட வேண்டும். ஏன்? எதற்காக? இதுவரையில் அவர்களும் விளக்கமளித்ததில்லை. அவர்களுக்காக வாதாடுகிற சில ஏடுகளும் விளக்கமளித்ததில்லை.

ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் - சட்டமன்றத்தில் எடுத்துரைத்து அதனைப் பின்னர் திரும்பப் பெற்று வருத்தம் தெரிவிக்கிற படலங்கள் - பேரவைத் தலைவரால் மன்னிக்கப் படுகிற நிகழ்ச்சிகள் - இவைகளில் அவர்கள் கதாபாத்திரங்களாக இருந்திருக்கிறார்களேயல்லாமல்; கழகத்தை எதிர்த்து வாதாடிட வேண்டிய இடத்தில்; ஆம்; ஆட்சிமன்றத்தில் வாதாடி வென்ற தில்லை.

கொள்கைக் குழப்பங்களால் சிக்கித் தவித்து, எப்படியும் கொலு மண்டபத்துக்குள் மீண்டும் புகுந்திட வேண்டும் என்ற ஒரே ஆத்திர உணர்ச்சியைத் திரும்பத் திரும்ப வெளியிட்டு; அந்த உணர்ச்சி இப்போது வெறியாகவே மாறி கழகத்தை வென்றிடக் கூடுமென கர்ச்சித்து களம் நோக்கி வருகின்றனர்.

அவர்கள் ஆண்டபோது அடைந்த துயரத்தை அவ்வளவு எளிதில் மக்கள் மறந்திருப்பர் என்ற நம்பிக்கையோடு அவர்கள் இந்தத் துணிச்சலைப் பெற்றிருப்பதாக நான் கருதவில்லை. கழக அரசின் சாதனைகளை மக்கள் நன்றியுணர்வோடு எண்ணிட மாட்டார்கள் என்ற தைரியமும் எதிரிகளுக்கு ஏற்பட்டு விடவில்லை.

அவர்களது நப்பாசையெல்லாம் நமக்குள் பிளவு ஏற்பட்டுவிடாதா? கட்டுப்பாடு மீறும் காரியங்கள் ஒன்றிரண்டு நடைபெற்றாலும்; அந்த நெருப்பில் குளிர்காயலாமே - என்பது தான்!

அதற்கு உன் தம்பிகளில் யாராவது இடம் கொடுப்பார்களேயானால்; அவர்கள் இத்தனை நாளும் உன்னை அண்ணா என்று அழைத்ததற்கே நீ வெட்கப்படுவாய்! அவர்கள் உன்னை சாகடித்த நோயினும் கொடியவர்கள் என்று நாடு கூறிடத் தயங்காது!

❖ உன்னை நாக்கூசாது
இகழ்ந்தவர்கள்!

❖ உன்னை ஒரு அறிஞனா
என்று கேட்டவர்கள்!

❖ உனக்கு ஆளத்தகுதி
யுண்டா என
வினவியவர்கள்!

❖ உன் உருவு கண்டு
பழித்தவர்கள்!

❖ உன்னை சொல்லத்தகாத
வார்த்தைகளால் அர்ச்சித்
தவர்கள்!

❖ உன்னை உடுமலைக்கு அருகே
தடிகொண்டு தாக்கி
உயிர் பறிக்கவந்தவர்கள்!

-இவர்கள் அனைவரையும்-என் அண்ணனே! நீ மன்னித்து விடுவாய்; என்பது எனக்குத் தெரியும்; ஆனால், ஒரு தம்பி-கட்டுப்பாடு மீறி கழகத்திற்குக் களங்கம் உண்டாக்கினால் அவனை மேற்சொன்னவர்களை யெல்லாம்விட நீ-கீழாகத்தான் மதிப்பாய் என்று உன்னை அறிந்தவர்களாகிய நாங்கள் அறிவோம்!

தேர்தல் நேரமெனில்; உறக்கமில்லாமல் விழித்திருந்து எத்தனை யோசனைகள் சொல்வாய் எங்களுக்கு! இன்று நீ உறங்குகின்றாய்! உறங்கு - அண்ணா - உறங்கு! உனக்காக நாங்கள் விழித்திருந்து உன் புகழுக்காகச் சூளுரைத்துப் பணியாற்றுகிறோம்.

தம்பி,
மு. கருணாநிதி.
(10-01-1971)

36. "கிழச் சிங்கம், கிளறிய நெஞ்சம்!"

உடன் பிறப்பே!

உன் உழைப்பும், கொள்கைப் பிடிப்பும் விளைத்த வெற்றி கண்டு உலகம் வியக்கிறது. உனக்கே மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. என்னையும் கழக முன்னணியினர் சிலரையும் அமைச்சர்களாகப் பார்த்துப் பார்த்துப் பூரிப்படைகிறாய். தொண்டன் நீ! நாங்களும் தொண்டர்களாய் இருந்து உன்னைப் போல அடி உதைகள் பட்டு, அடக்குமுறைகளை ஏற்று-சிறைச்சாலைகள்-பாதுகாப்புச் சட்டங்கள் என்ற கணைகள் பாய்ந்த போதெல்லாம் கலங்காது-உள்ளத்தைச் சலனத்திற்கு ஆளாக்காது உழைத்தவர்கள்தான் என்பதால், நீயே அமைச்சரவையில் வீற்றிருப்பது போன்ற உணர்வினைப் பெறுகிறாய். "**பல தொண்டர்கள் சில தலைவர்கள்**"-இதுதான் உலகத்தின் எல்லாக் கட்சிகளுக்கும் இலக்கணம் எனினும், கழகப் பாசறையில் தலைவர்கள் தங்களைத் தொண்டர்களாகக் கருதியே பொது வாழ்க்கையை அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். நான் அடிக்கடி சொல்லியிருக்கிறேன்; தன்னால் கட்சிக்கு என்ன லாபம்! என்று சிந்தித்துச் செயலாற்றுபவனே கட்சியின் ரத்த நாளம்! கட்சியால் தனக்கு என்ன லாபம்? என்று கணக்கிடுபவன் கட்சிக்குள் வளரத் தொடங்கும் தொத்து நோயின் அறிகுறி! தன்னால் கட்சி பயனடைய வேண்டும் என்று பாடுபட்டுத் தியாகச் சுடர்களான கழகக் கண்மணிகளை, இன்று நேற்றல்ல-திராவிடர் கழகத்தில் நாமெல்லாம் பணியாற்றிய அந்தக் காலத்திலிருந்தே மறந்தது கிடையாது. அவர்கள் குடும்பங்களையும் தவிக்கவிட்டது கிடையாது. உடையார்பாளையம் வேலாயுதம்-திராவிடர் இயக்கக் கொள்கைகளைப் பரப்புகிறார் என்று குற்றஞ்சாட்டி, இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு அடித்துக் கொன்று மரக்கிளையிலே பிணத்தைத் தொங்க விட்டார்கள். அந்தக்

குடும்பம் இந்த ஏழையர் இயக்கத்தால் கைவிடப்படவில்லை, அறிவியக்கத் தளபதி அண்ணன் அழகிரிசாமி திராவிடர் கழகமாக நாம் இருந்த போது குடும்பத்தைத் தவிக்கவிட்டு மறைந்து போனார். அவர் குடும்பத்தைத் தத்தளிக்க விடாமல் இந்தச் சாதாரணமானவர்களின் கட்சி முயற்சிகளை மேற்கொண்டது. இந்த இயக்கத்தின் எந்தத் தலைவனும், முன்னணி வீரனும் திடீரெனக் குதித்து உச்சிக்குப் போய் விட்டவனல்ல. திருவாரூரில் மேடை போட்டு, தோரணங்கட்டி, சுவரொட்டிகளை ஒட்டிக் கூட்டம் நடத்தும் தொண்டனாக இருந்த இந்தக் கருணாநிதியைத்தான் களிப்பு பொங்கிட "முதல்வரே" என நீ அழைக்கிறாய்!

எனக்குச் சளைத்தவர்களல்ல, இன்று கழகத்தைக் கட்டிக் காக்கும் காவலர்கள், தொண்டர்கள் இல்லையேல் தலைவர்கள் இல்லை-தலைவர்களின் பாசப் பிணைப்பும் பரிவும் இல்லையேல் தொண்டர்கள் இல்லை - என்ற நிலையில் வளர்ந்தோங்கியிருப்பது தான் இந்தக் கழகம். கதாநாயகன் மட்டும் தனியாகத் தன் திறன் முழுதும் காட்டி நடித்துவிட்டால் படம் வெற்றி பெற்று விடாது. துணை நடிகர்களின் உழைப்பும், அவர்கள் ஏற்றுக் கொள்கிற சிரமங்களும் இணைந்துதான் படத்தின் வெற்றி அமைகிறது. நாங்கள் இல்லையேல் படமில்லையென்று கதாநாயகனை ஒதுக்கித் தள்ளி விட்டால், துணை நடிகர்களால் மட்டும் படம் ஓடிவிடுமா? அதுபோல் கதாநாயகன் கருதினாலும் படத்தின் வெற்றிக்கே இந்த இணைப்பு அவசியமென்றால், பரந்து கிடக்கும் ஒரு இயக்கத்தின் வெற்றிக்குத் தலைவர்கள் தொண்டர்கள் இணைப்பு எவ்வளவு தேவையென்று கூறவும் வேண்டுமோ?

"கழகத் தொண்டர்களே! நாங்கள் சிலர் அமைச்சர்களாக இருக்கிறோம். ஆம்; அப்படி உங்களால் ஆக்கப்பட்டிருக்கிறோம். நாம் அனைவருமே அமைச்சர்களாகவோ சட்டமன்ற உறுப்பினர்களாகவோ ஆவதற்கு சட்டமன்றக் கட்டிடத்தில் இடம் போதாத காரணத்தால் எங்களில் சிலரை நீங்கள் அது போலாக்கிக் கண்டு களிக்கிறீர்கள்."

-என்று ஒருமுறை அண்ணா அவர்கள் கூறிய வாசகத்தை நீ மறந்திருக்க மாட்டாய்.

பெரும் பெரும் பதவிப் பொறுப்புக்களிலே இன்று கழகத்தினர் சிலர் அல்லர், பலர் இருக்கிறார்கள். திருவண்ணாமலையில்

ஒரு சண்முகத்தை மட்டும் நகராட்சித் தலைவராகப் பெற்று அதை ஊருக்கெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தோம். அது ஒரு காலம்! - இன்று ஐம்பதுக்கு மேற்பட்ட நகராட்சிகளில் நமது கழக நகராட்சித் தலைவர்கள்-நகராட்சி உறுப்பினர்கள்! சென்னை மாநகராட்சியில் 1958-ஆம் ஆண்டு வரையில் ஒரு முனுசாமி. ஒரு அ. பொ. அரசு, ஒரு ஜீவரத்தினம்-இதுதான் நமது பலம்! இன்று நமது மேயர்கள் உலகம் சுற்றி வருகிறார்கள். கழகத் தொண்டர்கள் பலர் மாநகராட்சி உறுப்பினர்கள்! தொண்டர்க்குத் தொண்டராய் இருந்து மதுரையைக் கழகக் கோட்டையாக்கிய நமது மாவீரர் முத்து, மே முதல் நாள் மதுரை மேயராகிறார்! 180-க்கு மேற்பட்ட ஊராட்சி ஒன்றியங்களில் கழகம் வளர்த்த பெரும்பான்மையான தொண்டர்கள் இன்று ஒன்றியத் தலைவர்கள்! ஆயிரக்கணக்கான ஊராட்சி மன்றங்களில் நம்மவர் தலைவர்கள்! சட்டமன்ற உறுப்பினர்கள் - மேலவை உறுப்பினர்கள் - நாடாளுமன்ற உறுப்பினர்கள்!

1938 இல் இந்தி எதிர்ப்புப் போர் நடந்த போது இந்தப் பதவிகளை எண்ணிப் பார்த்தா திராவிடர் இயக்கத்தில் நம்மைப் பிணைத்துக் கொண்டோம்? இல்லை! இல்லை!!

சிறைச்சாலை!

சித்ரவதை!!

இவை நமக்கு நித்ய நிகழ்ச்சிகளாக இருக்குமென்று கருதித்தான் இந்த வேலைக்கு வந்தோம்.

- ஃ பாண்டிச்சேரிகள் பாய்ந்திடும்
- ஃ பாளையங்கோட்டைகள் கிடைத்திடும்
- ஃ கோட்டூர்கள் குறுக்கிடும்
- ஃ குண்டுகள் பறந்திடும்
- ஃ தேனீக்கள் நுழைந்திடும்
- ஃ தில்லைகள் எதிர்த்திடும்

என்று எதிர்பார்த்தே இப்பணிக்கு நம்மை ஒப்படைத்துக் கொண்டோம்.

அன்று சிறைச்சாலை
இன்று கோட்டை!
நேற்று கழுத்துக்குக் கத்தி
இன்று பூமாலை!
நாளைக்குக் கொலைவாள் வராது என்பது
என்ன நிச்சயம்?
அதுதானே பொது வாழ்க்கை!

இந்த நினைவெல்லாம் இப்போது ஏன் வந்தது என்று கேட்கிறாயா?

நேற்றிரவு அண்ணன் சி. பி. சி. அவர்களுக்கு 66வது பிறந்த நாள்விழா!

ஆடம்பரமில்லாமல் நண்பர்கள் சிலர் கூடி விழாக் குழு அமைத்து விருந்தொன்று நடத்தினார்கள் என் தலைமையில்!

என்னருகே பேரவைத் தலைவர் சகோதரர் மதி அமர்ந் திருந்தார். இன்னொரு புறத்தில் அமைச்சர் என். வி. என். (இல்லை-இல்லை-நமது பழைய அமைப்புச் செயலாளர்) உட்கார்ந்திருந்தார். அவர்கள் இருவருடனும் கூட நான் அதிகம் பேசவில்லை. என் சிந்தனை எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சிகளை வட்டமிட்டுக் கொண்டிருந்தது.

அண்ணன் சி. பி. சி. யின் காலடி படாத கிராமம் தமிழ்நாட்டில் உண்டா? அவர் முழக்கம் கேட்காத பகுதி தமிழகத்தில் இருக்க முடியுமா? வழிச் செலவுக்குப் பணமில்லாமல், வயிற்றுக்கு வேளா வேளைக்குச் சோறில்லாமல் நாளொன்றுக்கு எத்தனை கூட்டங்கள் - எத்துணை உழைப்பு!

தொண்டர்க்குத் தொண்டராய் அவர் பழகிய பண்புதான் என்னே! துடிக்கும் கட்சி வெறியராய் அவர் அலைந்த அலைச்சல் தான் என்னே!

இப்படிப்பட்டவர்களின் உழைப்பன்றோ, இந்தக் கழகம்! இந்த வெற்றி!! இந்த அரசு!!!

அந்தக் கிழச் சிங்கத்தை இன்று மேலவைத் தலைவராக ஆக்கி, அந்தக் காட்சி கண்டு பெருமிதங் கொள்கிறோம்.

தொண்டர்கள்
பொறுப்பேற்கும் காலம் இது!
சாதாரணமானவர்கள்
நாடாளும் சகாப்தமிது!

அதனால்தான் சிலருக்கு எரிச்சல்-காழ்ப்பு-காய்ச்சல்!

விருந்தில் மனம் செல்லவில்லை. அந்தக் காழ்ச்சிந்தையினரின் போக்கு பற்றியே எண்ணிக் கொண்டிருந்தேன். விழா முடிந்து வீட்டுக்கு வந்ததும், உனக்கு என் எண்ணச் சிதறல்களைத் தொகுத்து எழுத வேண்டும் போல் தோன்றிற்று. எழுதினேன் மடலாக, அவ்வளவுதான்!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(16-04-1971)

37. நீயும் நானும் தூங்குவோமா?

அன்பு நண்பா,

மத்திய அமைச்சர் மோகன் குமாரமங்கலமும் திரு. சி. சுப்பிரமணியமும் சென்னையில் ஆற்றிய உரைகளை உன்னைப் போல நானும் நாளேடுகளில் படித்துப் பார்த்தேன்.

> **“முற்போக்கான பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்ற இன்னின்ன அதிகாரங்கள் வேண்டுமென்று மாநில அரசுகள் கேட்டால் அந்த அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டியதே! அதே போல் அகில இந்திய ரீதியில் முற்போக்கான பொருளாதாரத் திட்டங்களை நிறைவேற்ற இன்னின்ன அதிகாரங்கள் தன்னிடமிருக்க வேண்டுமென்று மத்திய அரசு கேட்டால் அந்த அதிகாரங்கள் மத்திய அரசுக்குக் கொடுக்கப்பட வேண்டும். மத்திய மாநில அரசுக்கிடையே அதிகாரங்களை பகிர்ந்து கொள்வது பற்றி தமிழக அரசு நியமித்துள்ள ராஜ மன்னார் கமிட்டியின் அறிக்கை வந்த பிறகு அதுபற்றி சுமுகமாகப் பேசி முடிவு செய்யலாம்.”**

இது ஏப்ரல் 14ஆம் நாளன்று புத்தாண்டு பிறந்த தினத்தில் சென்னையில் மாண்புமிகு மோகன் குமாரமங்கலம் பேசியதாகும். மத்திய மாநில அரசு அதிகாரங்களை பகிர்ந்து கொள்வதுபற்றி பேசி முடிவு செய்யலாம் என்ற கருத்தை அதே கூட்டத்தில் திரு. சி. எஸ். அவர்களும் எடுத்துக் கூறியுள்ளார்.

நமது உரிமைக் குரலுக்கு ஊக்கமளிப்பது போல அவர்களது உரை அமைந்திருப்பது கண்டு நீ மகிழ்வதைப் போலவே நானும் மகிழ்கிறேன்.

மத்தியில் அதிகாரங்கள் குவிந்திடுவது, மாநிலங்களின் வளர்ச்சியைத் தடுக்கும் என்பதினாலேயே மாநில சுயாட்சியை வலியுறுத்துகிறோமே அல்லாமல் இந்தியாவைப் பலகீனப்படுத்தும் நோக்கம் எள்ளளவும் நமக்குக் கிடையாது! மாறாக, இந்தியாவின் பாதுகாப்பும் பலமும் மேலும் உறுதிப்படுத்துவதற்கு மாநிலங்களுக்கு சுயாட்சி வழங்குவது இன்றியமையாததாகும்.

"சுயாட்சி" என்று நமது கழகம் சுட்டிக் காட்டிக் கேட்பதைப் போலக் கேட்காவிடினும், வெவ்வேறு முறைகளில் நமது குரலைப் பல்வேறு மாநில அமைச்சர்களும் எதிரொலித்துக் கொண்டுதானிருக்கிறார்கள். அண்மையில், அச்சுதமேனன் வெளியிட்ட கருத்தும், அடிக்கடி ஆந்திர முதல்வர் எடுத்துக் கூறுகிற கருத்தும் - நமது வாதத்திற்கு வலுவளிக்கக் கூடியவைகளே தவிர, பிரச்சினையைச் சிக்கலாக்குவன அல்ல!

நாம் சொல்கிற விஷயம் பெரியது எனினும்-சிந்தித்துப் பார்க்கிறவர்கள் இறுதியில் ஒத்துக் கொள்ளக் கூடியது எனினும்-அவ்வளவு பெரிய விஷயத்தைச் சொல்கிற நாம், மிகச் சிறியவர்களாக அல்லவா இங்குள்ள சிலருக்குத் தென்படுகிறோம். புராணீகர் மொழியிலே கூற வேண்டுமானால் நமது 'ஜாதகம்' அப்படி!

நம்மிடம் பல் இளித்துப் பதவிகளைப் பெறுகிறவர்கள்கூட அதனைப் பெற்ற பிறகு, "இவன் கொடுத்து நாம் இந்தப் பதவியைப் பெறவேண்டிய அளவுக்கு நிலைமை ஆகிவிட்டதே!" என்றுதான் பெருமூச்சு விட்டுக் கொள்கிறார்கள். காரணம், அருமை நண்பா! நீயும் நானும் அவ்வளவு சாதாரணக் குடும்பத்தில் பிறந்து விட்டதாக அவர்களுக்கு ஒரு நினைப்பு!

கடற்கரைக் காற்று வாங்கும் பதவிக்குக் கால் கடுக்க நடந்த காலமும் உண்டு. அந்தக் காற்றை ஆசைதீர சுவாசித்த பிறகு, ஒரு அஞ்சலட்டையில் "உன் வெற்றிக்குப் பாராட்டு!" என்று ஒரு வரியில் எழுதி அனுப்பிய நிலை அதே மனிதருக்குச் சில நாட்களுக்கு முன் ஏற்பட்டதும் உண்டு.

அவர்களது முடிவு, தாங்கள்தான் அறிவின் சிகரங்கள்-அறிவுரை நாயகர்கள் - ஆற்றல் அரசர்கள் - விற்பன்னர்கள் - வித்தகர்கள் - என்று!

நண்பா; அவர்கள் 'அடக்கம்' என்பது இன்னதென்று அறியாதவர்கள். 'நன்றி' என்ற சொல்லைக் கேட்டுப் பழக்கப் பட்டவர்களே தவிர, உணர்ந்து பழக்கப்பட்டவர்களல்ல!

அதோ வெண்மணற் பரப்பில் கண்துயிலும் அண்ணனைத் தட்டி எழுப்பிக் கேட்டால், அவர் சொல்வார் - அடக்கத்திற்கு இலக்கணம்! நன்றிக்குப் பொருள்!

அந்த மேதையையும், என்னையும் உன்னையும் அலட்சியப் படுத்தியே மக்களால் புறக்கணிக்கப்பட்டவர்கள், இன்று நாம் சொல்வதாலேயே நமது கருத்துகளுக்கு "சோடை" சொல்கிறார்கள்.

யார் அவர்கள்?

எங்கே இருக்கிறார்கள்?

நீ அரும்பு மீசை துடித்திடக் கேட்கிறாய், உன் தோள்கள் விம்முகின்றன - எனக்குத் தெரியாமல் இல்லை!

நான் அவர்களை உனக்கு அடையாளம் காட்டப் போவ தில்லை - காரணம், அவர்கள் அடையாளம் தெரியாமல் அழிந்து கொண்டிருக்கிறார்கள்.

"மாநில அரசுக்கு அதிக அதிகாரங்கள் தேவை!"

இதை நாம் சொல்கிறோமாம், அதற்காக எதிர்க்கிறார்கள் இங்குள்ளோர்!

"தொழில் உரிமங்கள் வழங்குவது மாநில அரசின் உரிமையாக இருக்க வேண்டும்."

இது நமது முழக்கமாக இருப்பதால், வேண்டாம் வேண்டாம் கொடுக்காதே என்கிறார்கள், அரசியலில் விதூஷகர்களாகப் போனவர்கள்.

மதுரைக் கோயிலில் திருமலை நாயக்கர் சிலை இருக்கிறது. அந்தக் கோயில் தமிழக அரசின் தொடர்புடன் இருப்பதால்! ராமேசுவரத்தில் சேதுபதி சிலை இருக்கிறது.

ஆனால் தஞ்சைக் கோயில் கட்டிய ராஜராஜ சோழன் சிலைக்குக் கோயிலுக்குள் இடம் கிடையாது என மறுக்கிறது, மத்திய அரசு! காரணம் தஞ்சைக் கோயில் அவர்கள் பிடியில் இருப்பதுதான்;

இதனை நாம் சுட்டிக் காட்டுவது சில 'அறிவாளி'களுக்குக் கேவலமாகத் தெரியலாம்! ஆனால் சோழமன்னன் ராஜராஜனுமா இவர்கள் கண்ணுக்கு சாதாரணமாகத் தெரிய வேண்டும்.

நண்பா, தலைமைச் செயலகம் இருக்கிற கோட்டையைச் சுற்றியுள்ள புல்பூண்டுகளை அகற்றி பூக்கள் மலரும் சோலைகளாக ஆக்கிட, நான் பட்டபாடு கொஞ்சமல்ல!

மத்திய அமைச்சர் ஒருவரை நேராகவே அழைத்து வந்து கோட்டையைச் சுற்றிக்காட்டி, பிறகு அவர் மூலமாக புல்பூண்டுகளை அகற்றும் வேலைக்கு அனுமதி பெற்றோம், ஏன் தெரியுமா? செயின்ட் ஜார்ஜ் கோட்டை மத்திய அரசின் பாதுகாப்பு இலாகாவுக்குச் சொந்தம்! அதனால்தான் புல் பூண்டுகளைச் செதுக்கி அதனை எழிலாக்கிடவும் இத்துணை சிரமம் ஏற்றிட வேண்டியுள்ளது.

இப்படிச் சிறியதும் பெரியதுமாகப் பல்வேறு வேலைகள் தடைப்படுகின்றன - மாநில அரசின் கைகள் கட்டிக் கிடப்பதால்!

"அதிகாரங்களைப் பகிர்வதைப் பேசி முடிவு செய்யலாம்."

என்று மத்திய அமைச்சர் ஒருவரும்; அமைச்சராக, ஆகக் கூடிய மற்றொருவரும் உறுதியளித்திருப்பது; நம் கருத்திற்கு கிடைத்துள்ள முதல் கட்ட வெற்றி யாகும்!

இறுதி வெற்றி பெறாமல், என் இனிய நண்பா! நீயும் நானும் தூங்குவோமா என்ன?

அன்புள்ள,

மு. கருணாநிதி

(17-04-1971)

38. இன்றே தொடங்கிடுக பணி!

என் உடன் பிறப்பே!

நண்பன் என்கின்றேன்; இனிய தோழன் என்கின்றேன்; அன்புச் சோதரன் என்கின்றேன்; ஆருயிர்ச் செயல்வீரன் என்கின்றேன் – எப்படி விளித்தாலும் என் அருமைக் கழகக் கண்மணியே! எல்லாமே உன்னைத்தான் குறிக்கும்.

பக்தர்கள் ஆண்டவனைப் பார்த்து 'தேவே! கோவே! தெய்வமே! திருவே! எம்மானே! பெம்மானே! தாயே! தந்தையே!' என்றெல்லாம் பலவாறு அழைத்து மகிழ்வதுபோல் நானும் உன்னை ஒவ்வொரு நாளும் உயிரே! தமிழே! ஒப்பற்ற தீரனே! உடன்பிறப்பே! உழுவலன்பு கொண்ட தோழனே! என்றெல்லாம் கூறி இன்ப நிறைவு கொள்கிறேன். அத்துணை பாசத்தை அண்ணன், உனக்கும் எனக்குமிடையே வளர்த்து வைத்துவிட்டுப் போயிருக்கிறார். அந்த உணர்வினையும், உன்பால் நான் கொண்டிருக்கிற அன்பினையும், என்பால் நீ கொண்டிருக்கிற அன்பினையும் நம்மிருவரைப் போலவே நாடு முழுவதுமுள்ள கழகத்தின் உயிர்நாடிகள் ஒருவருக் கொருவர் காட்டிக் கொள்கிற நேசத்தையும் குலைத்துவிட யாராலும் முடியாது என்பதை நாடறியும்.

இந்த இயக்கத்தை வளர்க்கத்தான் ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டே தவிர, "வளர்த்தவன் நான்! அழிக்க முற்படுகிறேன்" என்று யார் கூறினாலும் அவர்களை நீ விட்டு வைத்தது கிடையாது. அடுத்த கணம் அவர்கள் எங்கேயோ ஒரு ஆழமான பள்ளத்தில் தூக்கி எறியப்பட்டிருக்கிறார்கள்.

கழகத்தின் இருபத்திரண்டு ஆண்டு கால வரலாற்றில் எத்தனையோ சோதனைகள்! அறிஞர் அண்ணா அவர்களுக்கே அறிவுரை கூறிடும் தகுதி தங்களுக்கிருப்பதாகக் கருதிக் கொண்டு இறுதியில் கழகத்தைப் பிளக்க முயற்சித்து அந்த முயற்சியில் மூக்கறுபட்டு புதிய கட்சி ஆரம்பித்து இன்று மூலைக்கு ஒருவராகப் போய்விட்ட நண்பர்களின் கதையை எல்லாம் தமிழ்நாட்டு அரசியல் சரித்திரம் கூறிக்கொண்டுதானிருக்கிறது.

கழகத்திற்குச் சோதனை ஏற்பட்ட ஒவ்வொரு நேரத்திலும் இத்துடன் "கழக அத்தியாயம் முடிந்தது" என்று கனவு கண்டு களிப்படைந்தவர்கள் எத்தனையோ பேர் உண்டு!

ஆனால், என் அன்பு நண்பனே! ஒவ்வொரு சிக்கலான கட்டத்திலும் நீ காட்டிய தீரமும், உண்மையான தியாகத்திற்கு நீ தந்த மதிப்பும், அண்ணன் வளர்த்த இலட்சியத்திற்காக உயிர்விடவும் தயார் என்று நீ எடுத்துக் கொண்ட சூளுரையும் இந்தக் கோட்டையை எதிரிகளும் பிடிக்க முடியாமல் துரோகிகளும் காட்டிக் கொடுக்க முடியாமல் காப்பாற்றி இருக்கிறது.

வாள் முனைக்கு எதிர் நின்று நீ வடித்த வெற்றிகள் எத்தனை!

துப்பாக்கிச் சனியனுக்கு நெஞ்சு காட்டி நீ ஏற்றுக் கொண்ட அடக்குமுறைகள் எண்ணத் தொலையுமோ?

இன்று உன் வேலை முடிந்து விட்டதாக எண்ணிடாதே! உன் சகோதரர்கள் சிலபேரை அமைச்சர்களாக்கி விடுவதோடு உன் பணி முடிந்துவிடவில்லை! இது மட்டுமே நீ ஏற்றுக்கொண்ட பணியுமல்ல!

அமைச்சர் பதவி ஏற்கும்போது எத்துணை மகிழ்ச்சி எனக்கும் என் நண்பர்களுக்கும் இருந்திருக்குமோ; அதே மகிழ்ச்சி சிறைவாசத்தையும், அடக்கு முறைகளையும் ஏற்கும்போதும் - எங்களுக்கு இருந்ததுண்டு என நீ நம்புவதாலேயே அடைந்த வெற்றியில் இன்பங் காணுகிறாய்.

நாளைக்கு, இந்தப் பதவிகளை உதறி எறிந்து விட்டுத் தமிழகத்தின் உரிமைகளைப் பாதுகாக்கும் புனிதப்போரில் ஈடுபடுவதற்கும் தயார் எனத் தடந் தோள்தட்டிக் கொண்டிருப்பவர்கள்தான் இன்று

கோட்டையில் அமர்ந்திருக்கிறார்கள் என்பதை மட்டும் மறந்துவிடாதே!

மாநில சுயாட்சி! மத்திய அரசு அதிகாரங்கள் பரவலாக்கப்பட வேண்டும்! என்பன போன்ற நமது குறிக்கோள் பற்றிப் பேசித் தீர்த்துக்கொள்ளலாம் என்று சில பேர் கூறுகிறார்கள் எனினும்; எனக் கென்னவோ அவ்வளவு சுலபத்தில் அந்த வெற்றி முகட்டில் நீயும் நானும் நடைபோடலாம் என்று நான் கருதிடவில்லை!

உரிமைகளைக் கேட்கவும் பெறவும் நாம் கையாளுகிற முறை; பாராளுமன்ற முறை! அறப்போர் முறை! நம்மை நாமே வருத்திக் கொள்ளும் காந்தீய முறை! வன்முறை தவிர்த்த அண்ணாவின் முறை!

அந்த முறைகள்தான் நமது மாநில சுயாட்சி வெற்றிக்குத் தேவையெனும் காலம் வந்துவிட்டால்; அப்போது நானும் நீயும் சென்னைக் கோட்டையிலா இருந்திட முடியும்?

மீண்டும் 'பாளையங் கோட்டை'கள் வராது என்பது என்ன நிச்சயம்!

அதற்கும் தயாராகவே நமது பணிகள் இருந்திடல் வேண்டும்!

அதற்கேற்ற வகையில் கழகம் வலுவடைய வேண்டும்!

ஆயிரம் பல்லாயிரம் என்று கிளை அமைப்புக்கள் உருவாகிட வேண்டும்!

மே முதல் வாரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. பல லட்சம் உறுப்பினர்கள் கழகத்தில் சேர்ந்தனர் என்ற கணக்கினை நீ, தலைமைக் கழகத்திற்கு அனுப்பிட வேண்டும். அதற்கான ஆயத்தங்களை இப்போதே செய்து கொண்டிருக்க வேண்டும். வேறெதிலும் கவனம் செலுத்தாமல் வீதிக்கு வீதி கழகக் கொடி பறந்திட - ஊருக்கு ஊர் கிளைகள் பெருகிட - ஒன்றிரண்டு பல லட்சமென உறுப்பினர்கள் சேர்ந்திட - உழைத்திடுக தோழனே; உழைத்திடுக!

உன் உள்ள உறுதியும் - நீ அமைக்கும் கிளைக் கழகத்தின் கட்டுக்கோப்பும் - தமிழரின் இன எழுச்சி வரலாற்றில் புரட்சி அத்தியாயமாகப் புதுப்பொலிவு காட்டட்டும்!

இன்றே தொடங்கட்டும் உறுப்பினர் சேர்க்கும் பணி!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(18-04-1971)

39. "கோவை - ஒரு கனி! நீ ஒரு கிளி!"

உடன்பிறப்பே!

பொதுச் செயலாளர் நாவலரின் அறிக்கைக்கிணங்க இந்தத் திங்கள் 24 - 25 ஆகிய நாட்களில் கழகத்தின் செயற்குழுவும் பொதுக்குழுவும் கூடுகிறது. மாபெரும் பொதுத் தேர்தலுக்குப் பின் மகத்தான வெற்றிக் கிரீடத்தை அணிந்து கொண்டிருக்கிற நீ, மார்பினைக் கம்பீரமாக உயர்த்தியவாறு செயற்குழு, பொதுக்குழு கூட்டங்களுக்கு வர இருக்கிறாய். "சிறு பிள்ளையிட்ட வேளாண்மை வீடு வந்து சேருமா?" என்று கேட்டவர்கள், வியப்படையும் வண்ணம், இருபத்தி இரண்டு ஆண்டு காலத்தில் நீ வடித்த கண்ணீரில், வழித்தெறிந்த வியர்வையில், சிந்திய குருதியில் கழகத்தை முள் போட்டால் நெல் விளையும் கழனியாக ஆக்கிக் காட்டிய பெருமை; என் ஆருயிரே! உனக்கல்லவா உண்டு! மணவறைக்குச் செல்லும் மாப்பிள்ளையின் மகிழ்ச்சியை உன் மலர்ந்த முகத்தில் கண்டிருக்கிறேன்; நீ சிறைச்சாலைக்குள் சென்றபோதெல்லாம்! அடியும் உதையும் உன் அழகு மேனியை ஆலிங்கனம் செய்தபோது "அண்ணா! அண்ணா!" எனக் கூவியழைத்து வலியைத் துரத்திய உன் வைராக்கிய நெஞ்சத்தை நான் வாயார வாழ்த்தியிருக்கிறேன்.

நீ கண்ட களங்கள் எத்தனை! எத்தனை! நீ பெற்ற வெற்றிகள் சாதாரணமானவைகளா? நீயும் நானுந்தான் சாதாரணமானவர்களே தவிர; நமது வெற்றிகள் - நமது கொள்கைகள் - நமது லட்சியங்கள் - அனைத்துமே கோபுரத்துக் கலசங்கள்! ஆனால், நானும் நீயும்; வெறும் குப்பைக் கூளங்கள்! வயலுக்கு உரமாகிறோம் என்பதிலே குப்பைக் கூளங்களுக்குக்கூட மகிழ்ச்சி உண்டல்லவா; அந்த மகிழ்ச்சி எனக்கும் உனக்கும் ஏற்படுவதை எவர்தான் தடுத்திட முடியும்?

அன்புத் தோழ! தேர்தல் நேரத்தில் - மின்னல் வேகத்தில் நடைபெற்ற சுற்றுப்பயண நிகழ்ச்சிகளின்போது உன்னை நான்

நாடெங்கும் சந்தித்தேன். நீ நடத்திக் காட்டிய கடல்பெருக்கு போன்ற கூட்டங்களில் உன் ஆணைக்குக் கட்டுப்பட்டு; என் பணியினைச் செய்து முடித்தேன். அதற்குப் பிறகு, பொதுக் குழுவில்தான் பூரிப்பால் பொலிவு பெற்றுள்ள உன் திருமுகத்தைக் காணப்போகிறேன்.

நீ இளைஞனாக வருவாய்! நடுத்தர வயதினனாக வருவாய்! முதியோனாக வருவாய்! எப்படி வந்தால் என்ன; வேலனாக - வேடனாக - விருத்தனாக வந்தவனெல்லாம் முருகனாக இருந்தது கண்டு முறுவலித்துத் தழுவிக் கொண்ட வள்ளியைப் போலவே உன்னை அள்ளி அணைத்துக் கொள்ளப் பொதுக்குழுவில் காத்திருப்பேன். ஏனெனில், நீ கழகத்தின் உயிர் நாடியாக வருகிறாய்! களத்தில் வெற்றி கண்ட செங்குட்டுவனைப் போல் நிமிர் நடைபோட்டு வருகிறாய்! 'கை வேல் களிற்றொடு போக்கி வருபவன், மெய்வேல் பறியா நகும்' என்ற குறளுக்கு உண்மைப் பொருளாக உருவெடுத்து வருகிறாய்!

அண்ணன் இருந்தால்; "தம்பீ! வா!" என்று வாயில் வெற்றிலை குழைய உன்னை அழைத்திருப்பார்? நீயும் நானும் தான் அதற்குக் கொடுத்து வைக்காதவர்களாகி விட்டோமே! என் அழைப்பிலே; ஒரு வெறுமை தோன்றலாம் உனக்கு - ஆனால் இந்த அழைப்பில் அன்புக்கு வறுமையில்லை! அதனை மழையெனப் பொழிந்து உன்னை அழைக்கிறேன். உன் பாதம் பட்ட இடங்களில் பட்ட மரம் துளிர்க்கும் என்பதை நீ கையிலே பிடித்திருக்கும் வெற்றிக் கொடியின் மூலமாக உலகுக்கு உணர்த்திக் கொண்டிருக்கிறாய்!

பொதுக்குழு, எங்கே கூடுகிறது பார்த்தாயா? அதோ ஆலையிலே புகை கிளம்புகிறதல்லவா; அதைப் போல மாற்றார் சிலரின் நெஞ்சில் பகைப்புகை கிளம்பிடும் கோவைத் திருநகரில் கூடுகிறது. அங்கேதான் நண்பா; நமது கழகத்தை அழிக்க - கழக அரசை நிலை குலைக்க - எத்தனையோ கிளர்ச்சிகள்! ஆலை அரசர்கள்; நிலப் பிரபுக்கள் பண்ணையார்கள், பழைய கோட்டைக்காரர்கள், இப்படி ஆதிக்கபுரியினரின் எஃகுக் கோட்டையைக் கழகத்தின் தொண்டன் தூள் தூளாக நொறுக்கிப் போட்ட இடம்; கோவை மாநகரம்! துப்பாக்கிகள் முழங்கின தேர்தல் நேரத்தில்! காவல் துறையினர் கையிலிருந்தவையல்ல அவை! உன் பகைவர்களின் கரங்களில் இருந்தவை!

கோவை மாவட்டமா? அங்கு தி. மு. க. வுக்கு நாலு இடங்கள் கூட வராது - என உரத்த குரலெழுப்பிச் சிரித்துக் கொண்டிருந்த சீமான்களை அழ வைத்து வெற்றி முரசு கொட்டிய வீரர் கோட்டத்தில் நமது பொதுக்குழு கூடுகிறது.

செயற்குழுவிலும் பொதுக்குழுவிலும் பேச இருக்கின்ற பிரச்சனைகள் ஏராளம். அண்ணன் அமைத்த அரசை நமது கையை விட்டுப் பறித்து விடுவோமென ஆர்ப்பரித்தவர்களைப் புறமுதுகிடச் செய்து வலிமைமிக்கத் தமிழக ஆட்சியை உன் உழைப்பால் உருவாக்கியிருக்கிறாய்.

நாலு கோடித் தமிழ் மக்களின் "நம்பிக்கை நிழல்" தி. மு. கழகம் என்றும்; ஏழை எளியவர்களின் பாதுகாப்பு அரண் நமதியக்கம்தான் என்றும்; தமிழ் மொழி காத்திடும் போருக்கேற்ற படைக்கலன் இந்த அமைப்புத்தானென்றும் அனைத்திந்தியாவிலும் உள்ளோர், கழகத்தின் புகழ்முடியின் மீது முத்துக்களைப் பதிக்கின்றனர். என் வார்த்தைகள் அரசியல் அரங்கத்தில் ஆராயப்படுகின்றன - விமர்சிக்கப்படுகின்றன - அல்லது ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என்றால்; அந்த வார்த்தையின் ஒவ்வொரு எழுத்துக்கும் வலிமை யளித்து உலவவிட்ட உரிமைக்காரன் நீயல்லவா? அந்த வார்த்தை களைக் கோத்துத் தீர்மானங்களாக்கித் தலைமைக் கழக வாயிலாகக் கட்சிக்கும், அமைச்சரவை வாயிலாக நாட்டுக்கும் வழிகாட்டி நல்லன பிறந்திட சிரமமெடுத்துச் சிந்திக்கப்போகும் செயல் மறவனன்றோ நீ?

அண்ணன் இருந்து தேர்தல் அறிக்கை தந்தார். அவர் வழி நின்று அதில் பெரும்பாலானவற்றை அரசின் சார்பில் நிறைவேற்றிக் காட்டினோம். இந்தத் தேர்தலில் நாம் அளித்துள்ள வாக்குறுதிகள், ஏற்கனவே அளித்தவைகளில் எஞ்சியிருப்பவை அனைத்தையும் நிறைவேற்ற எவ்வழி நல்வழி என்று கருத்துக்கள் கூறிட நீ வரப்போகிறாய்; கோவைக்கு!

ஏற்றத்தாழ்வற்ற சமதர்ம சமுதாயம் விஞ்ஞான யுகத்திற் கேற்றவாறு அமைந்திட அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டு மெனக் கூறி, நமது நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களின் ஆதரவைப் பெற்று வெற்றி வீரர்களாகச் சென்றிருக்கிறார்கள். அதற்கேற்ப அவர்கள் எவ்வாறு பணியாற்றிட வேண்டுமெனக்

கட்டளையிடும் கழகத்தின் இதயமாம் செயற்குழு, பொதுக்குழுவில் நீ கலந்து கொண்டு விவாதிக்க இருக்கிறாய்.

இந்தி ஆதிக்கத்தைத் தடுத்து நிறுத்துவதை, தமிழைப் போற்றுவதை, கழகம், தான் பிறவியெடுத்ததற்கான காரணங்களில் ஒன்றாகக் கருதுகிறது என நமது தேர்தல் பிரகடனம் முழங்குகிறது. இன்ப நடைபோட்டு இந்தி வந்தால் நமது எழுச்சிப் படை கூட்டி அதனை எதிர்க்க நீ தரும் வீர உரைகள் கழகத் தலைமைக்கு அறப்போர் வேலாகும் - வாளாகும்! ஆதிக்க வெறியனைத்தும் தூளாகும்!

வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கும் வகையில் நான்காவது திட்டம் திருத்தியமைக்கப்பட வேண்டுமென்பதும், பெரிய தொழில்களோடு சிறு தொழில் வளர்ச்சி கிராமப்புற வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கும் வகையில் அமைய வேண்டுமென்பதும், வியர்வை கொட்டப் பாடுபடும் விவசாயத் தொழிலாளர்கள், பாட்டாளிகள், வசதியற்ற நிலையில் தங்கள் தொழிலை நடத்தும் முடி திருத்துவோர்; சலவையாளர் இன்னோரன்ன ஏழை எளியவர்க்கும் சமுதாயத்தின் அடித்தளத்தில் அவதிப்படுவோருக்கும் நடுத்தர வர்க்கத்தினருக்கும் படிப்படியாக வசதிகளை அளிக்கக் கழகம் சபதம் ஏற்கிறது எனத் தேர்தல் அறிக்கையில் தெரிவித்ததை இன்று, கழக அரசு செயல்படுத்தும் வகையில் உன் யோசனைகள் வேண்டப்படுகின்றன பொதுக் குழுவில்!

மத்திய அரசு வழங்க வேண்டிய நிதியைப் பொறுத்து நமது தமிழ் மாநிலம் எவ்வளவு ஏமாற்றத்துக்கு ஆளாகியிருக்கிறது என்பதை நடந்து முடிந்த சட்டமன்றக் கூட்டங்களில் எவ்வளவோ விளக்கப்பட்டிருக்கிறது. மக்கள் வாழ வசதிகள் எவ்வளவோ தேவை! வரிகளால் ஏழை எளியோரை வாட்டிடும் கொள்கை கழகத்தின் கொள்கையல்ல! குறைகள் களைய - முறையீடுகள் கவனிக்கப்பட - தமிழகம் வளம்பெற இன்னும் ஏராளமாகப் பணம் தேவை! அதற்கு வழி வகையும் தேவை! அதற்கு உன் ஆலோசனையும் தேவை!

மத்திய அரசோ; கேட்கும் போதெல்லாம் கை விரிக்கிறது.

கொழுத்த வரிகள் அனைத்தும் அங்கே போகிறது! இளைத்த பண முடிப்புக்களே இங்கே திரும்ப வருகின்றன!

அதிகாரக் குவியலில் மத்திய அரசு திளைத்துக்கிடக்கிறது. தெவிட்டிப் போகிற அளவுக்கு டெல்லியிலே அதிகாரங்கள்! அவை மாநிலங்களுக்குப் பரவலாக்கப்பட நமது மாநில சுயாட்சிக் கோரிக்கைக்கு ஆக்கம் சேர்க்க வேண்டும்!

இப்படி எத்தனையோ ஆலோசனைகளை உன்னிடம் எதிர்பார்த்துக் கோவையில் கூடுகிறது பொதுக்குழு.

பொதுக்குழுவைத் தொடர்ந்து ஊர்வலம், வரவேற்பு, வெற்றிவிழாக் கூட்டம் - கோவை நண்பர்கள், மாவட்டச் செயலாளர் ராஜமாணிக்கம் தலைமையில் சீர்மிகு ஏற்பாடுகளைச் செய்கின்றனர்!

கோவை ஒரு கனி!

நீ ஒரு கிளி!

சுவைத்திட வருவாய்! சுவைதரும் கருத்துக்களைத் தருவாய்!

அன்புள்ள,

மு. கருணாநிதி.

(22-04-1971)

40. அண்ணன்-கண்ணன் எங்கே?

உடன் பிறப்பே,

பெரியாரின் பகுத்தறிவு இயக்கம் ஒரு எரிமலையென வர்ணிக்கப்பட்ட நேரத்திலே அதனை "சஞ்சீவி பர்வதத்தின் சாரல்" எனப் புகழ்ந்தவாறு அணி வகுத்து நின்ற வீரத் தளபதிகள் பலரை நீ அறிய மாட்டாய். தென்பாண்டி மண்டிலத்துத் தீரன் சௌந்திரபாண்டியன் - தீப்பொறிப் பேச்சாளன் அஞ்சா நெஞ்சன் அழகிரிசாமி - பொங்குமாங் கடலனைய பொன்னம்பலனார் - நாகை மணி - மாயூரம் நடராசன் - திருவாரூர் - ராமன், லட்சுமணன் - சிந்தனைச் செல்வர் சிங்காரவேலர் - மூவலூர் மூதாட்டி ராமாமிர்தம் - சென்னை தர்மாம்பாள் - சிங்கராயர் - ரங்கராஜ் - எஸ். வி. லிங்கம் - கே. கே. நீலமேகம் - நாகம்மை - கைவல்யம் - ராமனாதன் - குஞ்சிதம் - குருசாமி - சாமி சிதம்பரனார் - ஜீவா மறைந்துவிட்ட வேங்கைப் புலிகளின் பட்டியலை மட்டுமே என் நினைவுக்கு வந்த வரையில் உனக்குச் சொல்கிறேன். இவர்களிடம் எனக்கு இளமைக்காலத்திலேயே மிகுந்த பழக்கமுண்டு. உழைப்பால், எழுத்தால், பேச்சால், அறிவியக்கத்தை வளர்த்துப் பெரியாரின் பெரும் படையைத் தமிழகத்தில் உருவாக்கினார்கள்.

முன்பெல்லாம்; கத்திக்கும் கல்லுக்கும் கலவரங்களுக்கு மிடையிலேதான் பெரியாரின் பிரச்சாரம் நடைபெற்றுக் கொண்டிருந்தது. அப்போது பெரியாரின் உயிரைக் காக்கும் அரணாகவும், கேடயமாகவும் விளங்கியதோடு, தங்கள் உயிரினும் மேலான கொள்கைகளைக் காப்பதிலும் தியாகச் சுடர்களாகத் திகழ்ந்தார்கள் அந்த மாவீரர்கள்.

பெரியார் என்ற சொல் அவர்களுக்குத் தெவிட்டாத தேன்பாகாக இருந்தது. உணர்ச்சிக் கீதமாக இருந்தது. இன எழுச்சியின் முரசமாக இருந்தது, அல்லும் பகலும் காடுமேடு சுற்றிச் சூறாவளி வேகத்தில் சுயமரியாதைப் பிரச்சாரம் செய்திட்ட அந்தக் கிழச் சீயத்திற்கு அந்தத் தானைத் தலைவர்கள் உற்ற துணைவர்களாக இருந்தார்கள்.

அந்தப் பழைய படை வரிசையில் சிலர்தான் இப்போது மிச்சமிருக்கிறார்கள். அவர்கள் எரிதழலுக்கும் பூகம்பங்களுக்கு மிடையே அமைத்த அழகான சாலையில் இன்று நமது பயணம் நடைபெறுகிறது. அது மண் சாலையாக இருக்கலாம். நீயும் நானும் அதனை சரளைக் கற்களைப் பரப்பி ஒழுங்குபடுத்தியிருக்கலாம். தார் போட்ட சாலையாக மாற்றியிருக்கலாம். அந்தப் பணியில் வேதனைகள் பலவற்றை நாம் தாங்கியிருக்கலாம். ஆனாலும், தடம் தெரியாது கிடந்த காட்டைச் சீர்படுத்தி மண்சாலை உருவாக்கிய பெருமை அந்தச் சுயமரியாதைச் சுடரொளிகளுக்கு உண்டு. அந்த ஒளிவிளக்குகள் ஒன்றன்பின் ஒன்றாக அணைந்து விட்டன. ஆனால் சில விளக்குகள் நம் கண்ணுக்குத் தென்படுவது மட்டுமல்ல; நமக்கு வாழ்த்துக் கூறிக்கொண்டுமிருக்கின்றன.

நண்பா! காலத்தின் கொடிய கரம், அந்த விளக்குத் திரி களையும் இழுத்து அணைத்துப் போடத் துடித்துக் கொண்டு தானிருக்கிறது.

அறிவியக்கக் கொள்கைகள் பரவுதற்காக நூற்றுக் கணக்கான ஆராய்ச்சி நூல்கள் வெளிவந்த காலம் அது. பேய் - பிசாசு - பூதம் இவைகளைப் பற்றியெல்லாம் ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதி "பகுத்தறிவு" என்ற வார இதழின் வாயிலாகக் கைவல்யமும், சிங்காரவேலரும் தமிழ் மக்களின் உள்ளத்தில் அழியாத இடத்தைப் பெற்றிருந்த வேளை, சுயமரியாதைக் கருத்துக்களை மக்கள் நெஞ்சில் பதிய வைக்கக் கட்டுரைகள், கவிதைகள் மட்டும் போதாது என்று கதை வடிவிலும் பிரச்சாரத்தைத் தொடங்கிய பெருமை; **'ஜே. பி. கிருஷ்ணன்'** இவர்களுக்கு உண்டு.

அவரது கதைகளை ஆர்வத்தோடு படித்த இளைஞர்களில் அன்று நானும் ஒருவன். ஜாதி வெறியைச் சாடி, சமய வெற்றியைத் தாக்கி, மூட நம்பிக்கையெனும் முடை நாற்றத்தைப் போக்கிடும் வகையில் ஜே. பி. கிருஷ்ணன் எழுதிய சிறுகதைகள் நூற்றுக்கணக்கில் இருக்கும். யார் அந்த ஜே. பி. கிருஷ்ணன்? இப்படிக் கேட்டால் உனக்குத் தெரியாது! அவர்தான் நண்பா; சலகண்டபுரம் **'ப. கண்ணன்!'**

நேற்று மாலைதான் தமிழக அரசு திரைப்படப் பரிசளிப்புக் குழுவின் உறுப்பினர்களில் ஒருவராக அவர் பெயரை பத்திரிகை களுக்கு அறிவித்துவிட்டு ராயபுரம் ராபின்சன் பூங்காவில் அறிஞர் அண்ணா அவர்களின் சிலையைத் திறந்து வைத்துவிட்டு

வீட்டுக்குத் திரும்பினேன். இரவு பனிரெண்டு மணி அளவில் வாசலில், செங்கற்பட்டுக் கழக நண்பர்கள் காத்திருந்தார்கள். செங்கற்பட்டு நகராட்சித் தலைவர் தேர்தலில் வெற்றிபெற்ற தோழர் பசுபதி மாலை அணிவிக்க வந்திருந்தார் அவர்களோடு! அந்த மகிழ்ச்சி ஒரு கணம்கூட இருந்திடவில்லை. வீட்டுக்குள் நுழைந்ததும் சோகச் செய்தி காத்திருந்தது; சலகண்டபுரத்தில் கண்ணன் மறைந்துவிட்டார் என்று!

நம்ப முடியவில்லை என்னால்! மீண்டும் தொலைபேசி மூலம் சலகண்டபுரத்துக்குத் தொடர்பு கொள்ளச் செய்தேன். ஆம்! அந்தச் செய்தி உண்மைதான்! அய்யோ; எத்தனையோ பொய்ச் செய்திகள் பரவுகின்றனவே; அவைகளில் ஒன்றாக அந்தச் செய்தி இருந்திருக்கக் கூடாதா?

சென்ற திங்கள் கடைசி நாளன்று சென்னை வந்திருந்தார். வீட்டில் என்னைச் சந்தித்து நீண்ட நேரம் அளவளாவிக் கொண்டிருந்தார். அவரது பழம்பெரும் பணிகளை என்றும் மதிப்பவன் நான். அவரது எழுத்தோவியங்கள் நாடக அரங்கேறும் போதெல்லாம் என்னை அழைக்காமல் இருக்கமாட்டார். நானும் தட்டியதில்லை. தமிழ்நாடு சங்கீத நாடக சங்கத்தின் செயற்குழு உறுப்பினர் என்ற நிலையிலும், வானொலி நிகழ்ச்சி ஆலோசனைக் குழுவின் உறுப்பினர் என்ற முறையிலும் பல்வேறு விஷயங்களை அன்று அவர் என்னிடம் பேசினார். நான் அவரை "அண்ணன்" என்றே அழைப்பது வழக்கம். அண்ணன் சிற்றரசு, அண்ணன் காஞ்சி கல்யாணம், அண்ணன் கண்ணன்-இப்படி அழைக்கும் வரிசையிலே அவர் ஒருவராக எனக்கு இருந்தார்.

ஆனால் அவரோ என்னைத் தம்பி என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டு முன்பெல்லாம் 'கலைஞர்' என்றும் இப்போது 'முதல்வர்' என்றும்தான் விளிப்பார். அந்தப் பண்பாடு மிக்கவரின் பழக்க வழக்கங்களிலேதான் எவ்வளவு எளிமை! என்போன்ற இளையவர்களிடம் எத்துணை மதிப்பு.

அன்று அவர் வீட்டுக்கு வந்திருந்தபோது; "சேலத்தில் ஒரு காரியம் என்னைக் கலக்காமல் முடிவெடுத்து விட்டீர்களே!" என்று சாதாரணமாகத்தான் கேட்டேன்! "அப்படியொன்றுமில்லை. அது தவறான தகவல்" என்று பதிலளித்தார். பிரச்சனை அதோடு முடிந்துவிட்டது. ஆனால் ஊருக்குச் சென்றவர் ஏப்ரல் 2-ஆம் தேதி ஒரு கடிதம் எழுதினார்.

நண்பா! வணங்காமுடி மன்னன் போல் உருவமைந்த அந்தப் பண்பாளரின் பெருந்தன்மையைப் பார்! எனக்கு எழுதிய அந்த மடலில் எவ்வளவு அன்பு! எவ்வளவு கட்டுப்பாடு! எவ்வளவு கடமை உணர்வு! என் வயதென்ன? அவர் வயதென்ன? நெடுஞ்செழிய பாண்டியனைப் போல் நிமிர்ந்த வடிவம்! நெஞ்சு வலி அவரை ஒரு வினாடியில் முடித்து விட்டது! அந்த மாவீரர் எழுதிய முடங்களில்:

"கழகத் தலைமையில் தாங்கள்! இதனால் பூரித்துப் புளகாங் கிதம் அடைபவன் நான். கழகத்தைக் கட்டிக்காத்து வளர்த்து வரும் தங்கள் கருத்துக்கு மாறாக என்னுடைய நடவடிக்கையின் ஒரு அசைவும் இருக்காது என்பதை மிகப் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். என்னைப் பற்றிய புகார்கள் யாரேனும் கூறின், என்னைக் கேட்கவும் கடிந்து கொள்ளவும் **'என்றும் போல்'** எல்லா உரிமையும் தங்களுக்கு உண்டு.

பணிவன்புடன்,

ப. கண்ணன்

-என்று முடித்திருந்தார். அந்த அன்பு மடலை இப்போது நான் கண்களில் ஒத்திக் கொள்கிறேன். கடிதம் நனைகிறது என் கண்ணீரால்!

'வீரவாலி'யை நாடக மேடையில் உலவ விட்டவர்-'நந்தி வர்மன்' மூலம் செந்தமிழ்க்கனி தந்தவர்-'தென்னவன் சின்னமலை' நாடகக் காவியத்தின் வாயிலாகக் கொங்குநாட்டு வீரர் மகிமை கூறியவர் - பகுத்தறிவுபுரியின் காவலர்-அறிவியக்கத் தூதுவர் என் அண்ணன்-கண்ணன் நேற்றிருந்தார்; இன்றில்லை!

"நெருநல் உளனொருவன் இன்றில்லை யென்னும்
பெருமை உடைத்(து) இவ்வுலகு"

-எனக் குறள் கூறிடினும்; அதை இப்போது திருப்பிச் சொல்லி அவர் குடும்பத்தார்க்கு ஆறுதல் அளிக்க இயலாமல் என் குரல் நடுங்குகிறது என் செய்வேன்; நண்பா!

அன்புள்ள,

மு. கருணாநிதி

(23-04-1971)

41. நான் கேட்கும் பிச்சை!

உடன்பிறப்பே,

ஜூன் மூன்றாம் நாள் என் பிறந்த நாளைச் சிறப்பாகக் கொண்டாடத் திட்டமிட்டு அந்த விழாவுக்கு நானும் வரவேண்டு மென்று மடல்கள் தீட்டிக் கொண்டேயிருக்கிறாய். என் பிறந்த நாளன்று நான் விழா அரங்குகளுக்கு வருவதை வழக்கமாகவே கொள்ளவில்லை என்பது உனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் ஒரு நிபந்தனையுடன் பிறந்தநாள் விழாவில் நான் கலந்து கொள்வதுண்டு.

என் பிறந்த நாளையொட்டி நான் தொடங்கி வைத்த "அண்ணா அறக்கட்டளை"க்குப் பெருந்தொகையொன்றினை அன்பளிப்பாகத் தருவதாக இருந்தால் மட்டுமே விழாக்களில் நான் பங்குகொள்ள முடியும் என்பதுதான் அந்த நிபந்தனை. அண்ணா அறக்கட்டளையைத் துவக்கி வைத்தது தான் என் பொறுப்பு!

ஏனைய பணிகளை அதன் பொறுப்பாளர்கள் கவனித்து வருகிறார்கள். ஒரு கணிசமான தொகை சென்ற ஆண்டும், அதற்கு முதல் ஆண்டும் என் பிறந்தநாளில் வழங்கப்பெற்று அதில் ஒரு குறிப்பிட்ட தொகையை அண்ணா குடும்பத்தாருக்கு அளித்து, மிச்சத்தை அறக்கட்டளையில் சேர்த்துவிட்டேன். வங்கியில் போடப்பட்டுள்ள அந்தப் பணத்திற்கு வரும் வட்டியைக் கொண்டு, ஆண்டுதோறும் பள்ளி இறுதி வகுப்பில் தமிழ்ப் பாடத்தில் முதல் எண்கள் எடுத்துத் தேர்ச்சி பெறும் மாணவ மாணவிகளுக்கு மாவட்ட வாரியாக ஒரு தொகை பரிசாக வழங்கப்படுகிறது.

இந்த ஆண்டு முதல் மேற்கொண்டும் பல அறச்செயல்கள் புரிந்திட அண்ணா அறக்கட்டளையினர் முனைந்துள்ளனர். தென்னிந்திய திரைப்படத் துறையினர் சென்ற ஆண்டு என் பிறந்தநாள் விழாவில் அளித்த பெருந்தொகையில் நான் பிறந்த

ஊரில் கட்டப்படும் உயர்நிலைப்பள்ளிக்கு இருபத்தையாயிரம் ரூபாய் அளித்தேன்.

மிச்சத்தொகையை வாழ்வில் இன்னலுறும் கலையுலகப் பெருமக்களுக்கு உதவி அளிக்கும் திட்டமொன்றைத் தொடங்குமாறு வேண்டி, கலையுலகத்து நண்பர்களிடமே அளித்து விட்டேன். அவர்கள் என் பெயரால் ஒரு அறக்கட்டளை உருவாக்கி இந்த ஆண்டு அத்தகைய கலைஞர்களுக்கு உதவிப் பணம் தந்திடத் திட்டம் தீட்டியுள்ளனர். ஜூன் இறுதி வாரத்திலிருந்து அந்தக் காரியம் தொடர்ந்து நடக்க இருக்கிறது.

நமது கழக அரசு, ஒரு குறிப்பிட்ட காலவரையறைக்குள் தமிழ் நாட்டில் பிச்சைக்காரர்களே இல்லாத அளவுக்கு மறுமலர்ச்சி ஏற்படுத்தப் பணியாற்றி வருகிறது என்பதை அனைவரும் அறிவர். அதற்காக விடுதிகள் அமைக்கப்பட்டு ஆங்கு பிச்சைக்காரர்களுக்குத் தொழிற் கூடங்கள் ஏற்படுத்த பெரிய முயற்சி எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு முன்னோடியாக இந்த ஆண்டு, தொழுநோய்ப் பிச்சைக்காரர்களுக்கு விடுதிகள் அமைத்து அவர்களை யாரும் வீதியில் அலைய விடாமல் அந்த விடுதிகளில் சேர்த்து வியாதிக்கு சிகிச்சை அளிப்பதோடு வேலைகள் கற்றுக் கொடுக்கும் பயிற்சியும் தரப்பட இருக்கிறது. அந்த விடுதிகளிலேயே அவர்களுக்கு வேலை வாய்ப்பும் கிடைக்கும். அதற்கெனத் திரட்டப்படும் நிதிதான் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி! - ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணத் துடித்த அண்ணனுக்குத் தம்பிகள் அல்லவா நாம்! அந்த ஆவலை நிறைவேற்றப் பாடுபடுவோம்.

ஜூன் மூன்றாம் நாள் பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்டத்தை புதிய கவர்னர் முன்னிலையில் தமிழக அரசு தொடங்குகிறது. என் பிறந்தநாள் விழா, பிச்சைக்காரர் மறுவாழ்வுத் திட்ட விழாவாக இருப்பதைவிட எனக்கு வேறொரு மகிழ்ச்சி இருக்க முடியுமா?

உத்தமர் காந்தியடிகள் தொழுநோய்க்காரன் உடலைத் தொட்டு சிகிச்சை அளிப்பது போன்ற படம் பொறித்த ஒரு அட்டையை அன்று தமிழக அரசு விற்பனைக்குக் கொண்டு வருகிறது. ஜூன் திங்கள் முழுவதும் அந்த அட்டை விற்பனை யாகும். அதன் விலை ஐம்பது காசுதான்!

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்காக தமிழக அரசுப் பரிசுச் சீட்டு சிறப்புப் பரிசுகளைப் பிரகடனப்படுத்தியிருப்பதையும் நாடு அறியும்.

ஆகவே, ஜூன் மூன்றாம் நாள் என்னைப் பார்க்க, பிறந்தநாள் வாழ்த்துச் சொல்ல, மாலைச் செலவு, ரயில் செலவு இவைகளையெல்லாம் வீணாகச் செய்து கொண்டிராமல் அந்தச் செலவில் பாதி பணத்தைக் கொண்டு ஐம்பது காசு அட்டைகள் பலவற்றைப் பெற்றிட வேண்டுகிறேன். பரிசுச் சீட்டுகள் வாங்கிட வேண்டுகிறேன்.

"ஆவல் அடங்கவில்லை. வந்துதான் தீருவேன்" என்று அடம் பிடித்தால், ஒவ்வொரு மாலை போடும்போதும் பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதிக்குப் பத்து ரூபாய் என்னிடம் கொடுத்தால்தான் ஜூன் மூன்றாம் தேதியன்று நான் மாலை போட்டுக் கொள்வேன் என்பதை மட்டும் கண்டிப்பாகச் சொல்லி விடுகிறேன். பிச்சைக்காரர் மறுவாழ்வுக்கு அரசு எடுக்கும் அரிய முயற்சிக்கு தமிழகத்தார் அனைவரின் பங்கும் இருந்திடல் வேண்டும். அது ஒன்றே இந்த ஆண்டுப் பிறந்த நாளில்; என் உடன்பிறப்பே! நான் உன்னிடம் கேட்கும் பிச்சையாகும்.

அன்புள்ள,

மு. கருணாநிதி

(26-05-1971)

42. ஜூலை 15!

உடன் பிறப்பே,

வன்முறை கூடாது என்று வலியுறுத்திச் சொல்லி நம்மை வளர்த்தவர் நமது அண்ணன். அவர் நோயுற்று இருந்தபோது அவர் சிலையைச் சுற்றி முக்காடிட்டு ஊர்வலம் வந்து, அவர் சிலையிருந்த பீடம் மறைகிற அளவுக்கு கறுப்புத் துணிகளைப் பரப்பித் துக்கம் கொண்டாடினார்களே; காங்கிரசார்–

அந்த வன்முறைச்செயலை, அரசியல் அநாகரிகச் செயலை – கண்டித்து ஒரு வரி எழுத "பெரிய இடத்து" ஏடுகள் அப்போது முன்வரவில்லை.

அப்போதும் நமது அண்ணன் பொறுமையுடன் புன்னகைதான் புரிந்தார். நம்மையும் அமைதி காக்கத்தான் பணித்தார்.

நாம் அரசு கட்டிலில் ஏறிய முதல் ஆண்டு நடைபெற்ற ஆகஸ்டு 15 விடுதலை நாள் விழாவின் போது அண்ணாவும் நானும் அமைச்சர்களும் கவர்னர் மாளிகையில் விடுதலை நாள் தேநீர் விருந்து விழாவில் கலந்து கொண்டிருந்தோம். அப்போது மவுண்ட் சாலையில் சென்ற காங்கிரசார் ஊர்வலம் முரசொலி அலுவலகத்தில் தாக்குதலைத் தொடங்கியது.

அலுவலக வாயிற்புறத்தில் நின்ற மூன்று சக்கர சிறிய கார் ஒன்றை உருத்தெரியாமல் நொறுக்கியது - அலுவலகத்தைச் சேதப்படுத்தியது.

அதையும் கண்டித்துப் பெரிய இடத்து ஏடுகள் ஒரு வரி எழுதிடவில்லை.

யாராயிருப்பினும் அவர்கள் வன்முறை வெறியாட்டங்களுக்கு ஒரு துளியும் இடங்கொடுத்தல் ஆகாது என்பதில், அண்ணனும் அவர் வளர்த்த கழகமும் என்றைக்குமே அசையாத நம்பிக்கை கொண்டு இயங்கியதை - இயங்கி வருவதை நாடறியும்.

1965-ஆம் ஆண்டு இந்தி எதிர்ப்புப் புரட்சி நடைபெற்றபோது வன்முறைச் செயல்கள் பல இடங்களில் நடைபெற்றதைக் கண்டித்து அண்ணா அவர்கள் ஒவ்வொரு நாளும் அறிக்கைகள் விட்டுக் கொண்டேயிருந்ததை யாரும் மறந்திருக்க முடியாது.

"சமூக விரோதிகள் - வன்முறையாளர்கள்; இடையில் நுழைந்து விட்டார்கள். ஆகவே, மாணவர்களே! இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சியை நிறுத்துங்கள்" - என்று அண்ணா அவர்கள் திட்டவட்டமாகத் தெரிவித்து அறிக்கை விடுத்தார்கள்.

ஆனால் இன்று?

விவசாயிகள் பிரச்சனை என்ற போர்வையில் வன்முறையாளர்கள் நடத்தியுள்ள நாச நடவடிக்கைகளைக் கண்டித்து இந்தியா முழுவதுமுள்ள ஏடுகள் பலவும், இங்குள்ள ஏடுகள் ஒன்றிரண்டும் எழுதியிருப்பதை நீ படித்திருப்பாய்.

போக்குவரத்து நடைபெறாமல் தடுக்கப் பாலங்கள் தகர்க்கப்பட்டன. சாலைகளின் குறுக்கே கட்டை வண்டிகள் நிறுத்தப்பட்டன. ஆமாம் அப்படித்தான் நிறுத்திப் போக்குவரத்தைத் தடை செய்தோம் என்று கிளர்ச்சித் தலைவர்களில் ஒருவரான கக்கன் அவர்களே ஒப்புக் கொண்டு விடுத்துள்ள செய்தி, சில ஏடுகளில் கூட வெளியாகியிருக்கின்றன.

துப்பாக்கிப் பிரயோகத்தில் மாண்டுவிட்ட தோழர்களுக்காக, நான் மனம் பதறினேன். இரங்கல் தெரிவித்து அறிக்கை விடுத்தேன். நாடே வன்முறைச் செயலைக் கண்டித்து நிற்கிறது! ஆனால் நாடாண்டு அனுபவம் பெற்ற நமது பெருந்தகையாளர் காமராஜரின் நாக்கு, வன்முறைக்கு எதிராக அசையவே இல்லையே; பார்த்தாயா?

நேற்று மாலை கூட அவர் தலைமையிலே சென்னையிலே ஊர்வலம்! ஆமாம் மௌன ஊர்வலம்!

இந்திரா காங்கிரசாரும்;

இந்திய கம்யூனிஸ்டுகளும்;

மன்றாடியார் குழுவினரும்-

விதைத்து, அறுத்து, களத்திலே கொட்டிய நெல் குவியலின் மீது அவர் நின்று கொண்டு வெற்றிச் சிந்து பாடுகிறார் -

மன்னிக்கவும் - வெற்றிச் சிந்தா - வெறிச் சிந்தா என்று நீ கேட்பது எனக்குப் புரிகிறது.

அவர் தலைமையில் மௌன ஊர்வலம் செல்லும் போது கூட அண்ணா சாலையில் பல இடங்களில் வன்முறைச் செயல்களை நடத்தியிருக்கிறார்கள்.

ஒரு வேளை, உனக்கு நான் இதை எழுதிக் கொண்டிருக்கும் போது கடற்கரையில் காமராஜர், குறைந்த பட்சம் அவர் தலைமை வகித்த ஊர்வலத்தினர் நடத்திய வெறியாட்டங்களையாவது கண்டித்துப் பேசிக் கொண்டிருப்பார் என்று நம்புகிறேன்.

வன்முறையைக் கண்டிப்பது பொதுவான விவகாரமாகும். எந்தக் கட்சியினர் நடத்தினாலும் அதனைக் கண்டிக்கிற தூய உள்ளம் ஏற்பட்டாக வேண்டும்.

அந்தப் பொது நோக்கோடுதான் வன்முறையின் பக்கம் எவருமே தலை வைத்துப் படுத்தலாகாது என்பதை எடுத்துச் சொல்லத்தான் ஜூலை-15 நாடு முழுவதும் "வன்முறைச் செயல் கண்டன நாள்" கூட்டங்கள் நடைபெறுகின்றன.

அதனை வெற்றியுறச் செய்ய வேண்டிய பணி, உன் பணி!

அன்புள்ள

மு. கருணாநிதி

(10-07-1972)

43. பெருமை எது?

உடன்பிறப்பே,

ஓராயிரம் கூர் அம்புகள் உன்னை நோக்கிப் பறந்து வந்தாலும் அதனைக்கண்டு இமைகொட்டுவதும் வீரத்திற்கு இழுக்கு என்ற உணர்வோடு நீ உலவிக் கொண்டிருக்கிறாய் என்பதை ஜூலை 15ஆம் நாளன்று ஊருக்கும் உலகிற்கும் புரியவைத்துவிட்டாய்.

புயல் வீசினாலும் உன் முகத்திலே புன்னகை மறைவதில்லை. நகை சிந்தும் உதடுகளின் மேலே அரும்புகட்டியிருக்கும் இளம் மீசையைத் தடவிவிட்டுக் கொண்டே புயலைப் புறங்கண்டவன் நீ என்பதற்கு எத்தனையோ வரலாற்றுச் செய்திகள் உண்டு.

இருபதாண்டு காலத்திற்கு மேலாக; ஏன் இன்னும் பல ஆண்டுகளைச் சேர்த்துக் கொள்வதும் தவறான கணக்கல்ல; எதிர்நீச்சல் போட்டு விழுப்புண்களை ஏற்றுக் கொண்டு, அடாத மழையில் ஓயாத வாடைக் காற்றில் - குன்றின் மீது அகல் விளக்கைக் கொளுத்தி வைத்து வெற்றி கண்டவன் நீ! ஆம்; பல்லாயிரம் பகைவர்கள் எதிர்ப்புப் புகை கிளப்பியபோதும் அஞ்சி நில்லாமல் அரசு அமைத்துக் காட்டிய ஆற்றல் மறவன் நீ!

'தம்பீ வா!' என்று அண்ணன் அழைத்த நேரமெல்லாம் துள்ளிக்குதித்து ஓடிவந்து - ஆவேசத்தை அள்ளிவரும் பகையைத் தலைகுனியச் செய்தவன் நீ!

என்ன கட்டளையிடுகின்றான் அண்ணன் என்று ஏங்கித் தவமிருந்து ஆணை பிறந்ததும் அதனை அறவழியில் நிறைவேற்றிக் காட்டி நெஞ்சு நிமிர்ந்து நின்றவன் நீ!

அந்தத் துணிவு மங்கிவிடவில்லை - தூய உள்ளம் மறைந்து விடவில்லை - உறுதி அழிந்து விடவில்லை - உழைக்கும் திறமை பட்டுப் போய்விடவில்லை - என்பதை; அண்ணனுக்குப் பிறகு - என் ஆருயிரே! நீ பலமுறை எடுத்து காட்டியிருக்கிறாய்

என்றாலும்; இந்த முறை நீ காட்டியுள்ள திறம் - நினைத்து - நினைத்து மகிழத் தக்கதாகும். எந்தக் கருத்துக்கள் வெற்றி பெற வேண்டுமென்றாலும் அந்தக் கருத்துக்களின் சொந்தக்காரர்கள் அதனை நிறைவேற்றிக் கொள்ள வன்முறையை நாடுதல் கூடாது என்பது கழகத்தின் தலையாய கொள்கை. "கத்தியைத் தீட்டாதே! புத்தியைத் தீட்டு!" என்பது நமது தலைவனின் வேதவாக்கு அல்லவா?

வன்முறைக்குப் பதில் வன்முறை என்பது சுலபமானது! எளிதில் சாதிக்கக் கூடியது!

ஆனால், வன்முறையைத் தாங்கிக் கொண்டு அதனை நன்முறையால் வெல்வதுதான் கடினமான காரியம்!

இந்தக் கடினமான காரியத்தைப் பழகிக் கொள்ள வேண்டும் என்பதுதான் கழகத்தின் கட்டளை!

நடந்து முடிந்த சில விரும்பத்தகாத நிகழ்ச்சிகள் தமிழகத் திற்கு மாசு விளைவிக்கக் கூடியவைகள் என்றால் அதில் எங்காவது ஓரிடத்திலாவது நமது கழகத் தோழனின் பங்கும் உண்டு என்றால் அவனைச் சட்டம் தண்டிப்பது மட்டுமல்ல - அவன் தன்னைத்தானே தண்டித்துக் கொள்ளவும் வேண்டும். இந்தப் பேருண்மையை உணர்ந்து, நீ செயல்படுகிற காரணத்தினால் தான் கடந்த ஐந்தாம் தேதியன்று தமிழகத்தில் பிரளயமே வந்து விட்டதென்று பேயாட்டம் போட்ட வன்முறையாளர்களை உன்னால் தோல்வியடையச் செய்ய முடிந்தது.

வன்முறைக் கூத்துக்களால் அமைதிப் பூங்காவில் அழிவினை ஏற்படுத்துவோரைப் பதினைந்தாம் தேதியன்று நீ அடையாளம் காட்டிய முறையினை எப்படிப் புகழ்வேன்!

நாடெங்கும் நடைபெறட்டும் வன்முறைக் கண்டனக் கூட்டங்கள் என்று அறிவித்ததுதான் தாமதம்-அப்பப்பா! மான் போல் குதித்து - தேன்போல் விளக்கமளித்து-உன் ஊன் கலந்து உயிர் கலந்து நிற்கும் கழகத்திற்கு எத்துணைப் பெருமை சேர்த்து விட்டாய்!

இடையிலே நாட்கள் குறைவென்றாலும்; என் ரத்தமே! நீ காட்டிய ஆர்வம்! நீ கட்டிய தோரணங்கள்! எங்கே காய்ப்பு ஏறிய உன் கையைக் கொடு. என் கண்களில் ஒத்திக் கொள்கிறேன்.

தேர்தல் நேரமா? - தென் தமிழகத்தின் தீர்ப்பு என்ன என்று திக்கெட்டுமுள்ள நாடுகள் ஆவல் காட்டுகின்றனவா? அங்கெல்லாம் வானில் மிதந்து செல்கின்ற முகில் கூட்டங்களின் முதுகில் வெற்றிச் செய்தியை எழுதி அனுப்பி சிங்கமெனச் சிலிர்த்து நின்ற செந்தமிழே! உனக்கு இந்த வேலைகள் எல்லாம் நொடிப் பொழுதில் முடியக்கூடியவை என்று எனக்குத் தெரியும்.

ஆளுங் கட்சியாகி விட்டார்கள்-இயற்கையாக ஆளுங் கட்சிக்கு வரக்கூடிய **'மத மதப்பு'** வந்து விடும் என்று எதிர்பார்த் தார்கள் சிலர். அண்ணனின் கதகதப்பில் வளர்ந்த நம்மை, ஆளுங்கட்சி என்ற மதமதப்பு எட்டிப் பார்க்காது என்பதை நிரூபித்துக் காட்டிக் கொண்டேயிருக்கிறாய் - கோட்டையில் நான் இருப்பதாலேயே; உன்னோடு நான் நெருங்கியில்லை என்று யாராவது கூற முடியுமா? நிழல் போல நான் உன்னைத் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறேன். உன் உழைப்புக்குத் தலைவணங்கி மரியாதை செலுத்திக் கொண்டு தானிருக்கிறேன்.

கடலெனத் திரண்டனர் மக்கள் - கழகத்தின் பக்கம் தான் நாங்கள் என்று சூளுரைத்தனர் என்று நமது நாவலரும் மற்றத் தலைவர்களும் ஜூலை 15-ஆம் தேதி கூட்டங்களை முடித்து விட்டுத் திரும்பி வந்து செய்தி கூறும்போது, செந்தேனாக இனிக்கிறது அந்தச் செய்தி!

செயல் வீரனே! உன் சிரித்த முகம் ஒரு முறை பார்க்க வேண்டும்போல் நெஞ்சு துடிக்கிறது.

நீ இருக்க, உன் நெஞ்சிலே அண்ணன் இருக்க உனக்கு உடன் பிறப்பு எனும் பெருமை எனக்கு இருக்க - நாம் எதற்குத்தான் அஞ்சிட வேண்டும்!

ஒன்று மட்டும் மறவாதே; வன்முறை கூடாதென்பது யாருக்கோ நாம் செய்கிற உபதேசம் அல்ல! நாம் அதனை உணர்ந்து அறவழி நடந்து - அதையே பிறருக்குச் சொல்கிறோம் என்பதில் தான் நமக்குப் பெருமை! நம்மை வளர்த்த அண்ணனுக்கும் பெருமை! நாம் அமைத்த ஆட்சிக்கும் பெருமை!

அன்புள்ள,

மு. க.

(17-07-1972)

44. வழக்கு ஜோடனை!

“வெளி வேடக்காரனே! முதலில் உன் கண்ணிலிருந்து விட்டத்தை எடுத்து எறி! பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கும் துரும்பை எடுக்க உனக்கு நன்றாகக் கண் தெரியும்.”

- லூக்காசின் சுவிசேஷம்

உடன்பிறப்பே!

ஜூலை 19-ஆம் நாளன்று சென்னையில் இந்திரா காங்கிரசார் செயற்குழுக் கூட்டத்தை நடத்தினார்கள். அதில் ஓரிரு தீர்மானங்களையும் நிறைவேற்றி அவைகளை ஏடுகளில் வெளியிட்டிருக்கிறார்கள்.

சென்ற ஜூன் திங்கள் 14-ஆம் நாள் அவர்கள் செயற்குழு கூடியது, விவசாயிகளின் கோரிக்கைகளை ஆதரித்துத் தீர்மானம் நிறைவேற்றியது. அப்போது மத்திய அமைச்சர்கள் இருவர் அந்த செயற்குழுவுக்கு வந்திருந்தனர்.

மின் கட்டணத்தைக் குறைக்க வேண்டும், விவசாய வருமான வரி கூடாது என்பது போன்ற கருத்து அடங்கிய தீர்மானங்கள் நிறைவேறிய போது மத்திய அமைச்சர்கள் இருவரும் ஒதுங்கிக் கொண்டார்கள். அந்தத் தீர்மான வாசகங்களும் ஏடுகளில் வந்தன. அதற்கிடையே விவசாயத் துறையில் மேலும் சுமார் பதினாறு கோடி ரூபாய்க்கு வரிகள் போட வேண்டும் என்றும், நிலத் தீர்வை ரத்து செய்திருப்பதை மீண்டும் விதிக்க வேண்டுமென்றும், மின் கட்டணம் செலுத்துவோர் மீது மேலும் ஏழு கோடி ரூபாய்க்கு வரி விதிக்க வேண்டுமென்றும் தமிழக அரசுக்கு மத்திய அரசு எழுதியது.

ஜூன் 3-ஆம் நாள் அதாவது விவசாயப் போராட்டம் தொடங்கி இரண்டு மூன்று வாரங்களில் - என் பிறந்த நாளைத் துக்க நாளாகக் கொண்டாட வேண்டுமென்று இந்திரா காங்கிரஸ்

எம். எல். ஏ. ஒருவர் கோவையில் முழங்கினார். அதன்படி கொண்டாடிக் களித்தனர். அதுகேட்டு நானும் எப்படியோ ஒரு வகையில் கொண்டாடினார்களே என்று மகிழ்ந்தேன். அந்தக் கட்சியின் கோபுரத்துக் கலசம், விவசாயிகளின் கோரிக்கைகளில் தங்களுக்கு அனுதாபம் இல்லை என்று தெரிவித்தது. ஆனால் கோபுரத்துப் பொம்மைகளோ அதற்கு மாறாக ஆரம்பத்திலும் சரி, அந்தக் கோரிக்கைகளுக்காக மறியல் செய்தன. போராடித் தீர்த்தன.

இப்போது ஜூலை 19-ஆம் நாளன்று மத்திய அரசிலுள்ள மூன்று அமைச்சர்களின் முன்னிலையில் செயற் குழு! அதில் தீர்மானங்கள்! தீர்மான வாசகங்கள், தி. மு. கழகத்தின் மீது தீயைக் கக்குவதாக அமைக்கப்பட்டுள்ளன.

- தி. மு. க. வினர் தங்கள் வசம் உள்ள போலீசையும் மற்ற அரசு யந்திரங்களையும் கட்சியை வளர்த்துக் கொள்ளவும், மாற்றுக் கட்சிகளை அழிக்கவும் ஈடுபடுத்துகின்றனர்.
- கத்தி, தடி, சைக்கிள் செயின், நாட்டு வெடிகள் ஆகியவைகளோடு நடமாடுகின்றனர்.
- கழகத்துக்காரர்களை, படைகளாக ஏவி விட்டு மாற்றுக் கட்சியினரையும், பொது மக்களையும் தாக்கித் துன்புறுத்தி அராஜகம் நடத்துகின்றனர்.
- காலித்தனம் புரிகின்றனர்.
- காலிகளோடு போலீசார் இணைந்து நின்று செயல் படுகின்றனர்.
- கொலை, கொள்ளைகளை நடத்துகிறார்கள்.
- தமிழர் படை என்ற பெயரிலும் சீரணி என்ற பெயரிலும் கழகத்தினர் நடத்திய வெறியாட்டத்தில் பெண்களும் குழந்தைகளும் கூட தப்ப முடிய வில்லை.
- கடும் எதேச்சாதிகாரம்-கழகத்தின் கொடுமையான அடக்குமுறை!

இவ்வளவும் அந்தத் தீர்மானத்தில் உள்ளடங்கிய வாசகங்கள். வழக்கறிஞர்கள் அல்லவா! மத்திய அமைச்சர்கள்!

அதனால் திறமையாக வழக்கு ஜோடித்திருக்கிறார்கள். நீதிக்கு முன் நிற்கிறதோ இல்லையோ, நன்றாக நிமிர்ந்து நின்று பொய் சொல்லியிருக்கிறார்கள்.

ஒரு மாநிலத்தின் ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு ஏதாவது காரணங்கள் சொல்லித் தீர வேண்டும்.

ஆளுங்கட்சியில் பிளவு ஏற்படுத்தினால் அது சுலபமாக நடந்து விடும். அந்த முயற்சியும் நடத்தினார்கள். நம்மிடமா பலிக்கும்! அதில் தோல்வி கண்டவர்கள் இப்போது வழக்கு ஜோடிக்கத் தொடங்கியிருக்கிறார்கள்.

திருவாளர்கள் மோகனும், சுப்பிரமணியனாரும் இணைந்து நின்று நமக்கு எவ்வளவு பட்டங்களை வழங்கியிருக்கிறார்கள் பார்த்தாயா?

காலிகளாம், கூலிகளாம்!

இந்தக் காலிகளின் தயவு புதுவைக்கும் கிருஷ்ணகிரிக்கும் தேவைப்பட்டது. அப்போது "கண்ணே! மணியே!!" என்றனர். இது "எங்கள் வெற்றியல்ல; கலைஞரின் வெற்றி; கழகத்தின் வெற்றி" என்றனர்.

உடன்பிறப்பே! இவர்களை உச்சாணிக் கொப்பிலே கொண்டு போய் வைக்க நான் சட்டசபையில் எதிர்க்கட்சிக்காரர்களிடம் எவ்வளவு தாக்குதலைப் பெறவேண்டியிருந்தது என்பதும், நம்மவர்களிடையே கூட நான் எவ்வளவு சமாதானம் சொல்ல வேண்டியிருந்தது என்பதும் நாடறிந்த செய்திகளாகும். பரவாயில்லை-நன்றிக்குப் பொருள் புரியாதவர்கள் நன்றாக வாழட்டும்.

'நன்றி மறப்பது நன்றன்று' என்று சொன்ன திருவள்ளுவன் செத்துத் தொலையட்டும்!

ஏனோதானோ என்று ஏதேதோ சொற்களை உதிர்த்துத் தீர்மானம் எழுதுவதும், அவைகளை ஏடுகளில் பிரசுரித்து ஒரு நாள் இன்பம் காண்பதும் அவர்களுக்குப் பொழுது போக்கு என்றால் அந்தத் திருப்தியை அவர்கள் அடைந்து கொள்ளட்டும்.

ஆனால் நீ ஒன்றைப் புரிந்து கொள்ள வேண்டும். அவர்கள் வழக்கு ஜோடிக்கத் தொடங்கி விட்டார்கள். அந்த வழக்கில் சத்துமில்லை - சாரமுமில்லை - என்பதை தமிழ் மக்கள் உணராமல் இல்லை! இருந்ததை இழந்ததுகளுக்கு எரிச்சல், அடி வயிற்றி லிருந்து எரிமலை போல் புகை கக்கிக் கொண்டுதான் வரும். அந்த உணர்ச்சியைத்தான் அவர்கள் ஜோடிக்கும் வழக்கில் என்னால் காண முடிகிறது.

ஆகா! தி. மு. க. வுக்கு எவ்வளவு பெரிய கண்டனம் - எப்படிப்பட்ட தாக்குதல் - என்று சிலர் சிரித்து மகிழ்வர்! சிலந்தி உள்ளங்களை நீயும் நானுந்தான் என்றும் அறிந்திருக்கிறோமே!

இரண்டொரு திங்களுக்கு முன்புதான் நெல்லை யில் நமது கழக நண்பர் சண்முகசுந்தர ராஜாவைக் கொலை வெறிக்குப் பறிகொடுத்தோம்.

சில நாட்களுக்கு முன்புதான் நமது தொழிற் சங்கத் தலைவன் பிரதாப் சந்திரனை கொலை வெறிக்குக் காவு கொடுத்தோம்.

ஆனால், இந்திரா காங்கிரஸ் தீர்மானம் போடுகிறது; நாம் கொலைகாரர்கள் என்று!

ஒருவேளை - தாங்கள் செயற்குழு கூட்டியுள்ள இடம், தமிழகம் என்பதை மறந்துவிட்டு - தங்கள் கட்சி ஆட்சி நடைபெறும் வேறு ஒரு மாநிலத்தைப் பற்றி விமர்சித்து விட்டார்களோ; என்னவோ!

சில மாதங்களுக்கு முன்பு பெர்னாண்டஸ் என்ற சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் என்னைச் சந்தித்தார். சில நாட்களுக்கு முன்பு மற்றொரு பெருந்தகையாளரோடு உரையாடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவர்கள் தெரிவித்த தகவல்களின்படி - ஒரு மாநி லத்தில் தேர்தல் நேரத்தில் ஒரு எதிர்க் கட்சியின் இரண்டாவது வரிசை முன்னணித் தலைவர்கள் எண்பது பேருக்கு மேல் படுகொலை செய்யப்பட்டார்களாம். இப்படிப்பட்ட ரத்த முத்திரை குத்திக் கொண்டவர்கள் நம்மைப் பார்த்துக் கொலைகாரர்கள் - கொள்ளைக் காரர்கள் - அராஜகவாதிகள் என்று குற்றம் சாட்டுகிறார்கள்.

நம்மை நோக்கி அவர்களின் ஒரு விரல் நீட்டப்படும் போது, அவர்களது மூன்று விரல்கள் அவர்களை நோக்கி நீட்டப் பட்டிருக்கின்றன என்பதை மறந்து விடுகிறார்கள்.

இந்தியா முழுதும் ஒரு குடைக்கீழ் - இல்லை; இல்லை; ஒரு கட்சியின் குடைக்கீழ் ஆள வேண்டுமாம்! மற்ற கட்சிகள் மாள வேண்டுமாம்! பிரதமர் இந்திரா காந்தி அம்மையாருக்கு அந்த ஆசை இருக்கிறதோ இல்லையோ; அதை எப்படியும் உருவாக்கி - அந்த அம்மையாரை இந்தியாவின் ஏகச் சக்கரவர்த்தினி ஆக்க வேண்டுமென்ற துடிப்பு அந்தக் கட்சியின் ஆழ்வாராதியார்களுக்கும் நாயன்மார்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது.

அவர்களைப் பார்த்துத் தமிழகம், கேலிப் புன்னகையோடு கேட்கும் கேள்வி இதுதான்;

"கொக்கென்று நினைத்தாயோ - கொங்கணவா?"

அன்புள்ள,

மு. க.

(22-07-1972)

45. மதுரை மாட்சி (1)

உடன்பிறப்பே,

உன்னிடத்தில் இரண்டு மணி நேரமாவது உரையாட வேண்டுமென்று மனக்கோட்டை கட்டிக் கொண்டு மாநாட்டு மேடைக்கு வந்தேன் மதுரையில்! ஆனால் ஓய்வின்மையால் ஏற்பட்ட களைப்பு என்னை இருபது நிமிடங்களுக்கு மேல் பேசவிடாமல் தடுத்து விட்டது.

மதுரை மாவீரர் முத்துவும், கழகச் செயல் மணிகளும் நாலாந் தேதியன்று நடத்திக் காட்டிய மகத்தான ஊர்வலமும், இரு நாட்களும் பொதுச் செயலாளர், பொருளாளர், அமைச்சர்கள் கழக முன்னணியினர் ஆற்றிய எழுச்சி மிகு உரைகளும் நான் பேசவில்லை என்ற உனது ஏக்கத்தை நிச்சயமாகப் போக்கியிருக்கும் என்பதில் எனக்கு எள்ளளவு சந்தேகமுமில்லை.

கண்ணின் கருமணிகளெனக் கூடியிருந்த உன்போன்ற உடன் பிறப்புக்களைப் பார்த்துக் கொண்டேயிருக்கலாம் போலிருந்தது. அதிலேயே உள்ளத்திற்கு ஒரு எழுச்சி. மகிழ்ச்சி.

எத்தனை தியாகங்களைச் செய்தவர்கள் - எவ்வளவு பேருழைப்பை இந்தக் கழகத்திற்கு வழங்கியவர்கள்-தென்பாண்டி மண்டிலத்து மண்ணைத் தங்கள் ரத்தத்தால் சிவப்பாக்கி இந்தப்பெரும் இயக்கத்தைக் கட்டிக் காத்தவர்கள் - அவர்களது திருமுகங்களையெல்லாம் ஒரு சேர சந்திக்க வைக்கும் வாய்ப்பினை நமது முத்து எத்துணைத் திறத்துடன் உருவாக்கியிருந்தார்.

பாண்டிமண்டிலம் முத்துக்குப் பெயர் பெற்றது என்று பழந்தமிழ்ப் பனுவல்கள் பகரும். அது கடல் முத்து! இதோ நம் கழக முத்து தமிழகத்தின் பெருமையை - தமிழ்ச் சமுதாயத்தின் வழிகாட்டியாம் தி. மு. கழகத்தின் பெருமையை மதுரை மாநாட்டின் மூலமாக விண்முட்ட உயர்த்திவிட்டார் என்று பண்கட்டிப் பாடுகிறார்கள் கவிதையுள்ளம் படைத்தோரெல்லாம்!

ஊர்வலம் நாலுமணிக்குப் புறப்படுகிறது, நீங்களும் நாவலரும் ஒரு மேடையில் நின்று ஊர்வலத்தின் முழு உருவத்தையும், முழு நீளத்தையும் கண்டு களித்த பிறகு தலைவர்கள் அமரும் ரதத்தில் ஏறவேண்டுமென்று முத்து அன்புக் கட்டளை பிறப்பித்தார்; உடன்பட்டோம்.

நாங்கள் நின்று காணவேண்டிய மேடையருகே ஊர்வலத்தின் முதல் முகப்பு வருவதற்கு மாலை ஆறுமணி ஆயிற்று! முதலில் ஒரு ஜீப் காரில் ராணுவ உடையில் முத்து வந்தான்! "என்ன இது வந்தான்!" என்று எழுதுகிறாயே என்று கோபிக்கிறாயா? என் மகன் முத்துவைக் குறிப்பிடுகிறேன். அவனைத் தொடர்ந்து ஊர்வலம் நடந்தது. நானும் நாவலரும் நண்பர் முத்துசாமியும் தென்னரசும் கழக முன்னணியினரும் அதே இடத்தில் நான்கு மணி நேரம் நின்றோம்.

ஊர்வலம் நகர்ந்து கொண்டேயிருக்கிறது. நாங்கள் ஏறிடவேண்டிய ரதம் மட்டும் வரவில்லை. ரதம் வரிசை ஒழுங்காக வரவேண்டுமானால் நாங்கள் நின்ற இடத்திற்குப் பதினோறு மணிக்கு மேல்தான் வந்திருக்குமாம். ஆனால் பல லாரிகளையும், வண்டிகளையும் பின்னுக்குத் தள்ளிவிட்டு அதனை முன்னே கொண்டுவந்ததால் இரவு பத்து மணிக்கு எங்களிடம் வந்து சேர்ந்தது.

இப்படியொரு ஊர்வலத்தை மதுரை நகர் மட்டுமல்ல; தமிழ்நாடு மட்டுமல்ல; இந்தியாவே இதுவரையில் கண்டிருக்க முடியாது என்பதை நான் நிருபர்களிடம் சொல்லும்போது என் மனமெல்லாம் மதுரை முத்துவையும், அவருக்குத் துணை நின்ற நமது கழக மாமணிகளையும், போற்றிப் போற்றி புகழ் மலர்களை வாரியிறைத்துக் கொண்டிருந்தது.

பார் சிறுத்ததால் படை பெருத்ததோ, படை பெருத்ததால் பார் சிறுத்ததோ என்று வியக்கும்படியான ஊர்வல மாட்சியை என்னவென்று வர்ணிப்பது!

ஆயிரத்துக்கு மேற்பட்ட கட்டைவண்டிகளில் விவசாயப் பெருங்குடிமக்கள் குடும்பம் குடும்பமாக அமர்ந்து தங்கள் உழைக்கும் கரங்களை அசைத்ததும் அவர்தம் வீட்டுப்பிஞ்சு மழலைகளின் கைகளில் கழகத்தின் இருவண்ணக் கொடிகள்

அசைந்ததும் அடடா! சோழமன்னன் திட்டமிட்டு நடத்தியிருந் தால்கூட அப்படியொரு பொங்கல் விழா பவனியை நடத்தியிருக்க முடியாது.

பாட்டாளி மக்கள், மாணவ ரத்தினங்கள், முதியோர், இளையோர் முத்துச்சரம் கோத்ததுபோல் ஊர்வலத்தில் அணிவகுத் தனர். நூற்றுக்கணக்கான பேருந்து வண்டிகளில் லாரிகளில் கழகக்காளையர் அவர்தம் குடும்பங்களுடன் தேனடையில் மொய்த்திருக்கும் தேனீக்களைப்போல் ஏறியிருந்த மாட்சியையும், வான்முகடு அதிரும் அளவுக்கு அவர்கள் எழுப்பிய மாநில சுயாட்சி முழக்கங்களையும் கண்டும் கேட்டும் மெய்சிலிர்த்துப்போனேன்.

முகில் கண்டு ஆடும் மயிலாயினர் மகிழ்ச்சி வெள்ளத்தில் மக்கள்; சேரன் வடபுலம் நோக்கி எடுத்த படையெடுப்பின்போது இப்படி ஒரு வரிசை குலையாத அணி வகுப்பு இருந்திருக்குமா என்பது சந்தேகமே; பாண்டியன் தலையாலங்கானத்து நெடுஞ்செழியன் வேளிர் மன்னரை வென்று நடத்திய வெற்றிவிழா இதுபோல் இருந்திருக்க முடியாது என்பதே மதுரை ஊர்வலம் கண்டோரின் தெளிவான முடிவாகும்.

உள்ளன்பே! என் உயிரே! உடன்பிறப்பே! மதுரை முத்துவின் மேற்பார்வையில் நீ அமைத்திருந்த வளைவுகள், வீதிகளில் எழுப்பியிருந்த கோட்டைகள் - கட்டியிருந்த தோரணங்கள் - எல்லாமே உன் உழைப்பின் அடையாளங்கள்! உன் வியர்வையின் விளைவுகள்; உன் மூச்சின் அசைவுகள்!

உன் கரங்களால் கட்டப்பட்ட மாநில சுயாட்சி அரண்மனை, உன் இதய உணர்வின் எடுத்துக் காட்டல்லவா?

அண்ணாசிலையை நீ அலங்கரித்திருந்த பாங்கினை எங்ஙனம் புகழ்வேன்?

நான்கு கரங்கள், அவை தாங்கும் உலக உருண்டை - அந்தச் சிந்தனையை எப்படித்தான் செயல் படுத்தினாயோ; நானறியேன்!

பாண்டியர்கள் ஆண்டபோது கூடல் நகரைக் காண வில்லையே என்றிருந்த கவலையை; கண்மணியே? நீ போக்கிவிட்டாய்-

உன் உறுதியை வாழ்த்துகிறேன்-

உன் உழைப்புக்கு பாராட்டுத் தெரிவிக்கிறேன்-

உன் உணர்ச்சிக்குத் தலைதாழ்த்தி வணக்கம் தெரிவிக் கிறேன்-

தொடர்ந்து மதுரை பற்றி நாளையும் எழுதுகிறேன்.

அன்புள்ள,

மு. க.

(09-08-1972)

46. மதுரை மாட்சி (2)

உடன் பிறப்பே,

மதுரையில் நமது மாநில மாநாடு நடந்ததே; நமது ஆருயிர் அண்ணன் நம்மிடையே இருந்த போது - அந்த அண்ணனின் அரவணைப்பில் நாமெல்லாம் பொதிகைத் தென்றலின் சுகத்தை அனுபவித்துக் கொண்டிருந்தபோது - அப்போது நமக்கு மாநாடு நடத்த மதுரையில் இடம் கிடைக்காமல் திருப்பரங்குன்றம் செல்ல நேர்ந்தது.

மதுரை ரேஸ்கோர்ஸ் மைதானத்தில் மாநில மாநாடு நடத்திட அனுமதி தந்திட வேண்டுமென்று மதுரை முத்து அவர்கள், அந்நாள் முதலமைச்சர் கனம் காமராஜர் அவர்களையும், கனம் பக்தவத்சலம் அவர்களையும் சந்தித்துக் கேட்டாராம். "ஆகட்டும் பார்க்கலாம் - அதற்கென்ன பார்க்கலாம்" என்ற பதில்கள்தான் கிடைத்தன. மாநாடு நடத்த இடம் கிடைக்கவில்லை.

இப்போது அந்த மைதானத்தை இந்திரா காங்கிரஸ் மாநாடு நடத்தவும், கம்யூனிஸ்டுக் கட்சி மாநாடு நடத்தவும் நாம் அனுமதித்தோம். நமது மாவட்ட மாநாடும் அங்குதான் இப்போது! இதனை மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர் மேயர் முத்து குறிப்பிட்டபோது பந்தல் அதிர்ந்தது கையொலியால்!

எவ்வளவு விசால மனம் படைத்த அரசியல் பெருந்தகை யாளர்கள் அன்று ஆட்சிக் கட்டிலில் வீற்றிருந்திருக்கிறார்கள் என்ற உண்மையையும் நாடு புரிந்துகொண்டது.

ஒரு பேச்சாளர் மாநாட்டில் குறிப்பிட்டார்; "மாவட்ட மாநாடு நடத்துவதற்கே இந்த மைதானம் போதவில்லையே-நீ எப்படி முத்தூ மாநில மாநாடு இங்கே நடத்த முடியும்?" என்றுதான் காங்கிரஸ் அமைச்சர்கள் அப்போது இடந்தர மறுத்திருப்பார்கள்

என்பதாக! அந்தப் பேச்சில் வேடிக்கை மட்டுமல்ல; நாம் கட்டிக் காத்து வருகிற அரசியல் நாகரீகமும் ஒளிவிட்டது கண்டு நான் மகிழ்ந்தேன்.

மதுரை மேயரின் உரை வரவேற்பு உரையாக மட்டும் அமைந்திடவில்லை. அவரது உடலில் உள்ள தியாக வடுக்கள் ஒவ்வொன்றும் முழங்கியதுபோல் இருந்தது. பல்லாண்டுகால உழைப்பின் உருவம், முதிர்ந்த வயதையும் பொருட்படுத்தாமல் முரசு கொட்டுவதுபோல் தோன்றியது.

அவரும் அவரது நிழல்கள் எனத் தொடர்ந்து தொண்டாற்றும் காவேரி, திருப்பதி, மணியன், காதர்சா, ராமலிங்கம், ராமச்சந்திரன், ராஜு, வெங்கிடசாமி மற்றும் நூற்றுக்கணக்கான செயல் மறவர்களும் ஆற்றிய பணி மதுரையின் முகத்தையே மாற்றிவிட்டது என்று அனைவரும் புகழ்க் காவியம் தீட்டும்போது முத்து வரவேற்புரையில் விளக்கங்கள் விரிவடைவதும், வீரம் கொப்பளிப்பதும்-இயற்கைதானே!

அவர் இன்று சிலருக்குச் சிம்ம சொப்பனமாகக்கூட இருக்கிறார். அவர் விரல் அசைந்தால்தான் மதுரை நகர்த் தொகுதியில் தங்கள் ஜாமீன் தொகை பறிபோகாமல் இருக்கும். தேர்தலில் வெல்ல முடியும்-என்றெல்லாம் அவர் வீட்டு வாசலில் தவங்கிடந்தவர்கள் இன்றைக்கு அவர் பெற்று வரும் இமாலய வெற்றிகளைக்கண்டு பொறாமைச் சகதியிலே தங்களை சிக்கவைத்துக் கொண்டு அவரைப் பற்றி ஏதேதோ பேசுகிறார்கள்.

அந்த அசூயைக்காரர்களின் அவதூறுப் பேச்சுக்களை யெல்லாம் தூள் தூளாக - பொடிப்பொடியாக-ஆக்கிய பேச்சு அன்றைய வரவேற்புரைப் பேச்சு! மதுரையில் கழகக் கொடியை ஏற்றுவார். ஏற்றிய மறுகணமே அந்தக் கொடி மரம் அடியோடு வெட்டி முறிக்கப்படும் வன்முறையாளர்களால்!

ஒருமுறை-சுமார் பதினைந்து வருடங்களுக்கு முன்பு-மதுரை மாநகரில் ஒரே நாளில் நூறு கொடிகளை ஏற்றுகிற விழாவில் நான் கலந்து கொண்டேன். அதிலும் போட்டிதான்!

திருச்சியில் ஐம்பது கொடி! சேலத்தில் அறுபது கொடி! கோவையில் எழுபது கொடி! என்று முறையே அன்பிலும், ஈ.ஆர்.கேயும், ராசமாணிக்கமும் விழாக்களை ஏற்பாடு செய்து

என்னை அழைத்து நடத்தியபோது "நான் நடத்துகின்றேன் நூறு கொடியேற்று விழா" என்று மதுரையிலே நடத்திக்காட்டினார்.

பல இடங்களில் கொடியேற்றவிடாமல் தடுத்தனர். கொடியேற்றும்போது கோடரியும் கத்தியும் கம்பும் கொண்டு கலகம் விளைவித்தனர். நமது தோழர்களின் கைகள், கால்கள் துண்டிக்கப்பட்டன. ரத்தம் ஒழுகும் மேனியுடன் கழக இளைஞர்கள் சாலைகளில் உருட்டப்பட்டனர். அவர்களைக் கலங்காதிருக்கச் செய்து கண்ணைக் காக்கும் இமையெனச் செயல்பட்டாரே; அந்த முத்து இன்றைக்கு மதுரையின் மேயராக-மாநாட்டின் வரவேற்புக் குழுத் தலைவராக-"சொன்னது போல் சிறப்புறச் செய்து முடித்து விட்டேன் பார்த்தீர்களா" என்று கேட்கும் பாசமிகு பார்வையுடன் தோற்றமளித்திடும்போது "முத்தான முத்தல்லவோ!" என்று கட்டித்தழுவிக் கொள்ளத்தான் என் கரங்கள் துடித்தன.

ஊர்வல ரதத்தில் அவர் என்னை ஏற்றி அமரச் செய்தபோது நான் மெய்மறந்து போய் அவரைத் தழுவித்தான் கொண்டேன்.

"ஒரு தாத்தா, இரண்டு பேரன்களை மாநாட்டுத் தலைவராகவும், மாநாட்டுத் திறப்பாளராகவும் தேர்ந் தெடுத்துள்ளார்."

-என்று மாநாட்டுத் தலைவர் முரசொலி மாறன் குறிப்பிட்டது எவ்வளவு பொருத்தமாக இருந்தது. மாநாட்டு பந்தலில் அமர்ந் திருந்த திருமதி முத்து அவர்களின் முகம் சற்று நாணத்தால் கவிழ்ந்ததே தவிர-மாறனின் அந்தப் பொருள் பொதிந்த வாசகத்தில் நமது கழகத்தின் வரலாற்றுச் சிறப்பே அடங்கியிருக்கிறதல்லவா?

கழகக் கிழங்கள் சிங்கங்களாக உலவிக் கொண்டிருக் கின்றன. இளைஞர்கள் பூட்டிய இருப்புக் கூட்டின் கதவு திறந்து வெளிவரும் சிறுத்தைகள் என வந்து கொண்டிருக்கிறார்கள்.

அதற்கு எடுத்துக்காட்டுதான் மாநாட்டைத் திறந்து வைத்த மாணவர் தலைவர் கணேசனின் பீடுநடைப் பேச்சு!

அந்தப் பேச்சில் சரித்திர ஏடுகள் புரண்டன. வர்க்கப் போராட்டம், வகுப்புப் போராட்டம் இரண்டுக்குமுள்ள விளக்கங்கள் நிறைந்தன. வாலிபத்தின் துடிப்பு, சொல்லுக்குச் சொல் மின்னலிட்டது. கயிற்றிலிருந்து விடுபட்ட பம்பரம்போல்

சுழன்று பணியாற்றும் அந்த இளைஞனின் குரல், முத்துவின் பேச்சுக்கேற்ற பேரிகை நாதமாகத் திகழ்ந்தது.

மாநாட்டுத் தலைவர் மாறனின் பேச்சை அனைவரும் புகழ்ந்தனர்.

மருமகனாயிற்றே எனக்கு; நான் புகழலாமா? நாளைக்கு மிச்சத்தை எழுதுகிறேன்.

அன்புள்ள,

மு. க.

(10-08-1972)

47. "தாயே எட்டடி என்றால்..."

உடன் பிறப்பே,

ஒன்றன்பின் ஒன்றாக எத்தனையோ நிகழ்ச்சிகள் - சட்டமன்ற கூட்டங்கள்-நான் உனக்கு மடல் தீட்டி விளக்க வேண்டிய பலவற்றைப் பொதுக் கூட்டங்களில் நிகழ்த்திய உரைகளின் வாயிலாகவும், சட்டமன்ற நிகழ்ச்சிகளில் தெரிவித்த விவரங்களின் வாயிலாகவும் சுட்டிக்காட்டி இருக்கிறேன். இருந்த போதிலும் உனக்கு என் மீது கோபம் இருக்கத்தான் செய்யும். அது 'செல்லக் கோபம்' என்று அறியாதவன் அல்லவே நான்! அந்தக் கோபத்தில் நீ என்னைப் பற்றி ஏதாவது முணுமுணுத்தால் கூட அதனை பக்தி பூர்வமான அர்ச்சனையாக எண்ணி மகிழ்பவன் நான்.

"மதுரை மாநாடு சிறப்பு பற்றி முரசொலியில் வேறு யாராவது எழுதியிருந்தாலும் எழுதியிருப்பார்கள். அதையும் கெடுத்து நீ தொடர்ந்து எழுதப் போவதாகச் சொல்லிவிட்டு இடையிலே நிறுத்திவிட்டாயே-இது நியாயம் தானா?" என்று இளநகை இதழில் தேக்கி-செல்லக் கோபம் சொல்லில் தேக்கி நீ கேட்பது என் செவியில் விழாமல் இல்லை.

எழுதுவது ஒன்றுதான் என் உழைப்புக்குச் சக்தி வாய்ந்த "தங்க பஸ்பம்" என்பதை நான் உணர்ந்து இருக்கிறேன்.

ஆனால் அதற்கும் நேரம் இல்லாமல் பல தடைகளில் நான் படும் துயரம் வார்த்தையில் அடங்காது.

மதுரை மாநாடு சிறப்பு பற்றி நான் தொடர்ந்து எழுதத் தேவையில்லாத நிலையை சட்டப் பேரவையில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்த நண்பர்கள் ஏற்படுத்திவிட்டார்கள். நம்பிக்கையில்லாத் தீர்மானத்தில் கண்டனக் கணைகளுக்குப் பெரிதும் ஆட்பட்ட ஒரு பெரும் பிரச்சினையாக இருந்தது மதுரை மாநாடுதான். அதிலிருந்து அந்த மாநாட்டின் எழிலும், ஏற்றமும், உணர்ச்சியும் உத்வேகமும், எத்தகைய எழுச்சியை, நாட்டில்

ஏற்படுத்தி இருக்கிறது என்பதை மிகத் தெளிவாக உணர்ந்து கொள்ளலாம்.

மிகமிகப் பெருந்தலைவரான காமராஜர் அவர்கள்கூட மதுரை மாநாடு முடிந்த பிறகு பந்தல் பிரிக்கப்பட்ட அந்த மைதானத்தின் மீது சீறி விழுந்திருக்கிறார்.

மதுரை மாநாடு ஒரு நாடகம் என்று வர்ணித்திருக்கிறார். அது உண்மைதான். உண்மையை ஒரு தடவையாவது அவர் சொன்னதற்காக நாம் அவரைப் பாராட்டத்தான் வேண்டும்.

"நாடு+அகம்=நாடகம்" என்று விளக்கினால் அவருக்குப் புரியும் என்றே நான் கருதுகிறேன்.

ஏனெனில் அவர் இலக்கியங்கள் பயின்ற மேதை என்பதில் எனக்கு எள்ளளவும் ஐயம் இல்லை.

தமிழாற்றல்-தமிழ் அறிவாற்றல் மெத்தப் படைத்தவர் காமராஜர் என்பதிலும் எனக்குச் சிறிதும் சந்தேகம் இல்லை. ஏனெனில் 'தமிழ்நாடு' என்று பெயர் வைக்க வேண்டுமென்று நாம் வற்புறுத்திய போது அந்தப் பெயர் இலக்கியத்திலேயே கிடையாது என்று வாதிட்டப் புலவரேறு அவர்!

"இமிழ்கடல் வரைப்பின் தமிழகம்" என்று சிலப்பதிகாரம் குறிப்பிடுகிறது என்று நாம் கூறியபோது அந்தச் சிலப்பதிகாரத்தை ஒரு இலக்கியமாக ஒப்புக் கொள்ளாத மாமேதை அவர்! நாட்டின் உள்ளத்தை பிரதிபலிப்பதே நாடகம் என்று அவரது தமிழ் அறிவு ஒப்புக் கொள்ளுமேயானால் அது நான் செய்த பெரும்பேறுதான்!

அந்த மாநாட்டு நாடகத்தில் எனக்குத் திடீரென உடல் நலிவு ஏற்பட்டது. உச்சக் கட்ட காட்சி என்று அருமைத் தலைவர் காமராஜர் பேசியதாக 'இந்து' பத்திரிகையிலே படித்தேன். என் உடல் நலிவு காமராஜருக்கு கேலிக்குரிய ஒன்றாகிவிட்டது.

நெல்லை மாவட்டத்தில் நடைபெற்றக் கூட்டங்களில் காமராஜர் உட்கார்ந்து கொண்டுதான் பேசினார் என்று நான் கேள்விப்பட்டு வேதனையடைந்தேன். அவர் நின்று கொண்டு பேசுகிற அளவுக்கு உடல்நலத்தோடும் தெம்போடும் நீண்ட நாள் வாழ வேண்டுமென்பதுதான் என் ஆசை. ஆனால் அவரோ நான் பிரக்ஞையற்று மயங்கி விழுந்ததை "நடிப்பு" என்று கிண்டல் செய்திருக்கிறார். பரவாயில்லை. என்னை அவர் ஒரு சிறந்த

நடிகன் என்றாவது ஒத்துக்கொண்டுள்ளாரே அதற்கு நான் நன்றி கூறத்தான் வேண்டும்.

நான் உடல் நலிவுற்றதும், உண்மையாகவே சொல்லுகிறேன். நான் அவரிடமிருந்து ஒரு தொலைபேசி விசாரணையை எதிர்பார்த்தேன். "என்ன மதுரை மாநாட்டில் உடம்பு சுகமில்லை யாமே, எப்படி இருக்கிறது இப்போது?" என்று கேட்பார் என்று எதிர்பார்த்தேன். அவர் தான் "நாடகம்" "நடிப்பு" என்று கூறி விட்டாரே. அது தெரியாமல் நான் எதிர்பார்த்தது மடமைதானே!

"விடுதலை நான் வெள்ளி விழாவில் சென்னை கூட்டத்தில் கலந்து கொண்டால் சிறப்பாக இருக்குமென்று அவரை நேரில் சென்று அழைத்தேன். அந்த நாளில் டில்லியில் கலந்துகொள்ளப் போகிறேன் என்று கூறி விட்டார். பிரதமர்களை ஒரு காலத்தில் உருவாக்கிடும் தகுதி பெற்றிருந்த அந்தத் தலைவருக்கு டில்லியில் அப்படி ஒன்றும் அன்றைய தினம் பெரிய நிகழ்ச்சி எதுவுமில்லை. அவர் சென்னையில் கலந்துகொள்ளவில்லையே என்று நான் வருத்தப்பட்டேன். அதை சிதம்பரம் பொதுக்கூட்டத்தில் மிகுந்த மரியாதையோடு வெளியிட்டேன். "என் கௌரவத்தைப் பற்றிப் பேச நீ யார்?" என்று ஆத்திரத்தோடு கேட்கிறார் அண்ணல் காந்தியின் அணியில் இருந்த அந்தப் பெரியவர்!

அவரது கட்சியில் நரகல்நடைப் பேச்சாளர்களைப் பற்றியும், அவர்கள் பேசி வரும் சில நாகரீகமற்ற பேச்சுக்கள் பற்றியும் அவரைச் சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும்போது அவரிடத்திலே எடுத்துக்கூறி தமிழ் நாட்டு அரசியல் மேடைகள் அனைத்திலும் ஒரு பண்பாடு பிறழாத ஒழுங்கு முறை ஏற்படுத்த வழி காண வேண்டுமென்று எண்ணியிருந்தேன். ஆனால் எனக்குப் பெரிய ஏமாற்றம்!

"தாய் ஒரு அடி பாய்ந்தால்,
குட்டி எட்டடி பாயும்"

என்பது பழமொழி. ஆனால் தாயே எட்டடி பாய்கிறபோது குட்டிகள் எத்தனை அடி பாயும் என்று நினைத்துகூடப் பார்க்க முடிய வில்லை. நன்றாகப்பாயட்டும்! நாடு அவர்களை மேலும் தெளிவாக உணரட்டும்.

அன்புள்ள,

மு. க.

(29-08-1972)

48. பாவம்; பண்பாடு, படும் பாடு!

உடன்பிறப்பே,

சில நாட்களுக்கு முன்பு நாவலர் நெடுஞ்செழியன் அவர்களுக்கு மணிவிழா மலர் வெளியீட்டு விழா நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட முத்தமிழ்க் காவலர் விசுவநாதம் அவர்களும், மேலவைத் தலைவர் சிலம்புச் செல்வர் அவர்களும், தவத்திரு அடிகளார் அவர்களும் நாவலரின் பண்பு, ஒழுக்கம், யாரையும் புண்படுத்தாமல் சொற்பொழிவாற்றும் நாகரீகம் ஆகியவை குறித்துப் புகழ்ந்து பேசியிருக்கிறார்கள்.

அந்த விழாவுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு தான் நாவலர் நெடுஞ்செழியன் மதுரையில் ஒரு பொதுக்கூட்டத்தில் பேசியிருக்கிறார். அந்தப் பேச்சு, அப்படியே மதுரை மாலைமுரசு இதழில் வெளியிடப்பட்டிருக்கிறது.

கருணாநிதியை பணத்தால் எடை போடுகிறார்கள். ஆனால் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆரைப் பண்பால் எடை போடுகிறார்கள்.

இது நாவலர் நெடுஞ்செழியனின் பேச்சில் ஒரு பகுதி! எம்.ஜி.ஆரின் பண்பு பற்றி, நாவலர் அவர்கள் 1972-ஆம் ஆண்டு முதல் 1976-ஆம் ஆண்டு வரையில் தமிழ்நாட்டுப் பொதுக்கூட்ட மேடைகளில் என்ன பேசினார் என்பது பொதுமக்கள் மறந்துவிட்ட ஒன்றல்ல!

நானும் பேராசிரியர் போன்றவர்களும் எனக்கு அப்போது நெருங்கிய நண்பர்களாக இருந்த சில அமைச்சர்களும் கூட அய்யோ! எம்.ஜி.ஆரின் குடும்பத்தைப் பற்றியெல்லாம் மேடையில் பேசாதீர்கள்! என்று எத்தனையோ முறை தடுத்துச் சொல்லியும் கூடக் கேட்காமல் நாராச நடையில் விடாமல் பேசியவர்தான்; இன்று திடீரென்று எம்.ஜி.ஆர். பண்பாளர் என்று வர்ணிக்கிறார். பாவம்; பதவி, எல்லாம் செய்யும் போலும்.

அப்படி எம்.ஜி.ஆர். அவர்களைப் பற்றி நாவலர் தனிப்பட்ட முறையில் என்னதான் பேசினார் என்பதை நான் எழுத விரும்பவில்லை! அதை எழுதிக் காட்டுவது கூட அரசியல் நாகரீகமாகாது என்பதால்!

இன்று எம்.ஜி.ஆர். அவர்களிடம் சென்று எப்படியோ சில பதவிகளில் ஒட்டிக் கொண்டிருப்பவர்களில் ஓரிருவரைத் தவிர மற்றபடி பெரும்பாலோர் எம்.ஜி.ஆர். அவர்களைக் கடுமையாக விமர்சித்தது மட்டுமல்ல; காரசாரமாக விமர்சித்தவர்கள்! நாவலர் நடையில் விமர்சித்தவர்கள்!

1972-ஆம் ஆண்டு எம்.ஜி.ஆர். தி.மு.க.வில் நீடிக்க முடியாத அளவுக்கு சில சங்கடங்கள் அவருக்கு ஏற்பட்டன! அதனை ஏற்படுத்தியவர்கள் இன்று உயிரோடு இல்லை! மத்திய அமைச்சராக இருந்த மோகன் குமாரமங்கலம் அதில் பிரதான பாத்திரம் வகித்தார். அதனால் எம்.ஜி.ஆர். தி.மு.கழகத்தைப் பற்றி அவதூறாகத் தி.மு.கழக மேடைகளிலேயே பேசினார். கழகத்தின் பொருளாளராக இருந்த அவர், கழகக் கணக்குகளைப் பொதுக்குழு செயற்குழுக்களில் வைத்திடும் பொறுப்பிலே இருந்த அவர், பொது மேடைகளிலே நின்று கொண்டு கழகக் கணக்கைக் கேட்டார்! ஒவ்வொரு கிளைக் கழகச் செயலாளரின் சொத்துக் கணக்கும் காட்டப்பட்டு ஆய்வு செய்யப்பட வேண்டுமென்று பொதுக்கூட்டத்தில் சொன்னார்! (அ.தி.மு.க. ஆரம்பித்து எட்டு ஆண்டுகள் ஆகின்றன! அந்தக் கட்சியின் கணக்குகளோ, அதன் கிளைச் செயலாளர்களின் அல்லது அமைப்பாளர்களின் சொத்துக் கணக்குகளோ இதுவரை காட்டப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.)

பொது மேடைகளில் கணக்கு விவகாரம் மட்டுமல்ல, மதுரை முத்து காங்கிரசில் சேருவார் என்று கூட ஒரு யூகத்தை வெளியிட்டு அவரையும் தாக்கிப் பேசினார்!

இப்படி ஒன்றிரண்டு கூட்டங்களில் பேசியவுடன், தலைமைக் கழக செயற்குழு உறுப்பினர்கள் (முப்பத்து மூன்று பேரில் இருபத்தைந்து பேர்) கையெழுத்திட்டு எம்.ஜி.ஆர். மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கழகத் தலைவராகிய என்னிடமும், பொதுச்செயலாளர் நாவலரிடமும் அளித்தனர். சற்றுப் பொறுமைக் காட்டலாம் என்று நானும், வேறு சில

நண்பர்களும் எடுத்துரைத்ததை மீறிப் பெரும்பாலான செயற்குழு உறுப்பினர்கள் ஆவேசமாக முழக்கமிட்டார்கள். அதுபற்றிய விவாதம் சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை மாடியில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே, எம்.ஜி.ஆர். விலக்கி வைக்கப்பட்டார் என்ற செய்தியைப் பொதுச்செயலாளர் நாவலர், எங்களில் யாருக்கும் தெரியாமல்; கீழே காத்திருந்த நிருபர்களுக்குச் சொல்லி அனுப்பி விட்டார்.

இதோ! நண்பர் ஈ.ஆர். கிருஷ்ணன் கைப்பட எழுதிய; நடவடிக்கை எடுக்கக் கோரும் கடிதம் - இத்துடன் இணைத்துள்ளேன்.

சென்னை.

10.10.1972

49. அன்பகம்! அறிவகம்!

உடன் பிறப்பே,

கண்களைக் குளமாக்கிக் கொண்டு இந்தக் கடிதத்தைப் படித்திடுவாய் என்று எனக்குத் தெரியும், உன் உள்ளத்து உணர்ச்சிகள், உதடுகளின் படபடப்பாக-விழிகளில் நீர்த்துளி களாக வெளிப்படுவதை உணர முடியாதவனா நான்!

எத்தனையோ முறை; என் உயிரினும் இனியவனே! உன் மீசைகள் துடித்ததைப் பார்த்திருக்கிறேன். தோள்களைத் தட்டியவாறு நீ நிமிர்ந்து நின்றதைக் கண்டிருக்கிறேன்.

மார்பைப் புடைத்துக்கொண்டு மானமறவன் நீ என்பதைத் தோற்றத்தால் பேச்சால் - வீரச்செயல்களால் அறிவித்த போதெல்லாம் அகம் குளிர்ந்தவன் நான் என்பதை நீ அறியாத வனல்லவே! உன் உருவத்தை அதுபோல நான் கண்டபோது; எதிரிகள் உன்னை - உன் தலைவர்களை - உன் கழகத்தைத் தாக்கியிருப்பார்கள். தரக்குறைவாக விமர்சித்திருப்பார்கள். அதனால் நீ வரி வேங்கைப் புலியென வடிவெடுத்து உறுமினாய்!

இன்றோ; உன் நெஞ்சுக் கொதிப்பு நீராக வழிகிறது கண்களில்! ஆம்; சுடு நீராக! காரணம்! காரணம் கண்டுபிடித்தா சொல்ல வேண்டும்? உன் கண்களைப் புண்களாக்கிய நிகழ்ச்சிக்குக் காரணம் கண்டுபிடித்தா சொல்ல வேண்டும்?

இதயத்தில் எழும் கனல் - உன் நீள் விழிகளில் புனலாகத் தோற்றமளிக்கிறது!

இதுபோல் ஒரு புயல், உன்னையும் என்னையும் ஆட்டிப் படைத்தது; 1961-ஆம் ஆண்டு!

மறந்திருக்க மாட்டாய்! பத்தாண்டுகளுக்கொரு முறை நமக்கு வரும் சோதனை போலும் இது!

என் அருமை நண்பர் சம்பத் - இன்றைக்கும் அருமை நண்பர்தான் - என் அன்பு நண்பர் கவிஞர் கண்ணதாசன் - இருவரின் தலைமையிலே எழுந்தது அமளி!

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற தலைவர் அறிஞர் அண்ணா அவர்களை எதிர்த்து மூண்டது அந்தப் பூசல்! அந்த அரசியல் சதுரங்கத்தில் கவிஞர் கண்ணதாசன் காயாகப் பயன்படுத்தப்பட்டார்.

நண்பர் சம்பத், கழகத்தின் வரவு செலவுக் கணக்கில் சந்தேகத்தை எழுப்பினார். அண்ணாவை சர்வாதிகாரி என்று வர்ணித்தார். ஜனநாயகத்தைத் தூக்கி எறிந்துவிட்ட தலைவர் என்று அண்ணா மீது சம்பத் குற்றம் சாட்டினார். அந்தக் குற்றச்சாட்டுகளின் தொடர்பாக வேலூரில் செயற்குழு நடைபெற்றது. தலைமைக் கழகத்தின் கணக்கு வரவு செலவுகள் செயற்குழுவில் வைக்கப்பட்டன. செயற்குழு கணக்கு விபரங்களை ஏற்றுக் கொண்டது. அத்துடன், விவகாரத்தை நிறுத்தவில்லை நண்பர் சம்பத்!

அண்ணாவை சர்வாதிகாரி என்று வர்ணித்து அவர் வெளியிட்ட கருத்து பற்றிய சர்ச்சை எழுந்தது. தகராறு பெரிதாயிற்று! பேச்சளவில்தான்!

சம்பத், செயற்குழுவை விட்டு வெளியேறினார். அவர் செயற்குழுவில் தாக்கப்பட்டதாகவே பத்திரிகைகளில் செய்திகள் வெளியிடப்பட்டன.

உடன்பிறப்பே! உனக்கு ஒன்று புரிகிறதா? கணக்கு கேட்பது - சர்வாதிகாரி என்று கூறுவது இந்த இரண்டு குற்றச்சாட்டுகளும் கழகத்திற்குப் புதிதல்ல! 1972-ஆம் ஆண்டில் முளைத்ததல்ல! அறிஞர் அண்ணா காலத்திலேயே அவர் மீதும், கழகத்தின் மீதும் சுமத்தப்பட்ட பழைய பழியின் தொடர்ச்சிதான் என்பது; இப்போது உனக்குப் புரிகிறதா?

அந்த நேரத்தில் தஞ்சையில் ஒரு சிறப்புக் கூட்டம்! தேர்தல் நிதி திரட்டுவதற்காக நடத்தப்படுகிறது.

1961-பிப்ரவரி 13-ஆம் நாள்! நான் கழகத்தின் பொருளாளர்! அந்த நிகழ்ச்சியில் அண்ணா சிறப்புரையாற்றுகிறார்.

சிறப்புக் கூட்டத்தின் தலைவர் தோழர் தங்கமுத்து! அவர் முன்னுரையில் குறிப்பிடுகிறார் உருக்கமாக!

"அண்ணா அவர்களே! கழகப்பொருளாளர் கருணாநிதியை நாங்கள் கண் என மதிக்கிறோம். அவர் கழகக் கணக்கை சரியாக வைக்கவில்லை என்று சிலர் களங்கம் கற்பிக்கிறார்கள்; கழகத்திற்குள்ளேயே! அதற்கு விளக்கம் தாருங்கள்!"

இது தங்கமுத்துவின் வேண்டுகோள்.

அண்ணா பேச எழுகிறார். ஆம் பேசுகிறார்.

"எந்தச் செயலிலும் முந்தியிருக்கிற தஞ்சை மாவட்டத் தோழர்களாகிய நீங்கள், உங்கள் மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட தேர்தல் நிதி பங்குத் தொகையைப் பூர்த்தி செய்து அதைத் திராவிட முன்னேற்றக் கழகப் பொருளாளராகிய தம்பி, கருணாநிதியிடத்தில் ஒப்படைத்துப் பெருமிதம் அடைகிறீர்கள். அதைக் கண்டு நானும் பெருமை கொள்கிறேன்.

பொருளாளர் கருணாநிதியிடத்தில் ஒப்படைக்கப்பட்ட பணம், ஒழுங்காகக் கணக்கு வரவு செலவு வைக்கப்பட்டுப் பத்திரமாகப் பாதுகாக்கப்படும்.

இதை நான் சொல்லவேண்டிய அவசியம் ஏன் ஏற்பட்டது? இதைப்பற்றி யாரோ ஏதோ கூறுவதாக - மிக்க வேதனைப்பட்டு எனக்கு முன் பேசிய நண்பர் குறிப்பிட்டார். வரவு செலவில் ஒரு காசு வித்தியாசப் பட்டாலும் அதனைச் சுடலை காத்தாவது ஒப்புவிக்கப்படும் என்பதற்கான பொறுப்பை நான் ஏற்றுக் கொள்கிறேன். மற்றவர்கள் பேசுவதற்கும் எழுதுவதற்கும் கவலைப்படாதீர்கள்.

சங்கீதத்தைப் பற்றி நன்கு தெரிந்த தஞ்சைப் பெருமக்களுக்குப் புரியும். மேல் ஸ்தாயியில் பாடும்போது சிறிது முறை தவறினாலும் 'சுருதி' கெடும்.

'அபசுரம்' பேசும். அதைப்போல அவசியமில்லாத செய்திகளை உரத்தகுரலில் பேசுவதால் சில நேரம் 'அபசுரம்' விளையும். யார் என்ன சொன்னாலும், எதை எழுதினாலும், நமது கழகம் அழியாது.

காரணம் இது பலவீனமான அடிப்படையில் கட்டப்பட்டதல்ல. ஊர்வலம் சென்று கொண்டிருக்கும்போது இடையே நாலுபேர்

இருமுவர்! இரண்டுபேர் கனைப்பர்! இருவர் தும்முவர்! அவர்களைப் பொருட்படுத்தி - அதற்காக ஊர்வலம் நின்றுவிடுவதில்லை.

மாட்டு வண்டி ஓடும்போது "கட கட" என்ற சப்தம் எவ்வளவு பெரிதாக எழுந்தாலும் யாரும் கவனிப்பதில்லை. ஆனால் மோட்டார் வண்டி ஓடும்போது ஒரு சிறு சப்தம் கிளம்பினாலும் உடனே அது என்ன என்று கவனிக்கிறார்கள். காரணம் என்ன? மாட்டு வண்டி விலை குறைந்தது. மோட்டார் வண்டி விலை உயர்ந்தது.

அதுபோலக் காங்கிரசில் பிளவென்றால் கவலைப்படு வாரில்லை. நமக்குள் பிளவென்றால் கலங்குகிறார்கள். கடந்த பத்து நாட்களுக்கு முன்பு நான்கூடத்தான் கலங்கிப் போனேன். ஆனால், இதனால் கழகம் எள்ளளவும் பாதிக்கப்படாது என்பதால் தெளிவு பெற்றேன்."

தஞ்சையில் கொஞ்சிய அண்ணனின் தமிழை 1961-ஆம் ஆண்டு அவர் தந்த அறிவுரையை - இல்லை; இல்லை: அவர் திறந்து காட்டிய நெஞ்சகத்தை உனக்கு இப்போது நினைவூட்டினேன். 16-2-61 முரசொலி இதழில் வெளியான பேச்சு இது! இப்போது பொருத்தமாக இருக்கிறதல்லவா?

அன்று அண்ணன் திறந்து காட்டிய நெஞ்சகம், என் மீதும் கழகத்தின்மீதும் கொண்ட அன்பகம்!

பத்தாண்டுகளுக்குப் பிறகு கணக்கு வழக்கு சர்வாதிகாரம் - என்ற பழிகள் சுமத்தப்படும் என்பதையறிந்து அன்றைக்கே முன் கூட்டித் திறக்கப்பட்ட அண்ணனின் அறிவகம்!

அன்பு உடன்பிறப்பே! அண்ணன் பேச்சை ஒரு முறைக்கு இருமுறை படித்திடு! நம்மை வீழ்த்தத் துடித்திடுவோர் பத்தாண்டுக்கு ஒரு முறை எப்படிக் கிளம்புவர் என்ற உண்மை விளங்கிடும். என்மீது வீசப்பட்ட பழிமொழிக்கும், தன்மீது வீசப்பட்ட இழிமொழிக்கும் பதில் சொன்ன அந்த நெஞ்சகம் இன்று இல்லையே; என் செய்வேன்! வஞ்சகம் விளையாடுகிறதே!

அன்புள்ள,

மு. க.

(20-10-1972)

50. நமக்குப் புரியவில்லை!

உடன்பிறப்பே,

சென்னை 20-10-72 ஆம் நாளிட்ட 'நவசக்தி' இதழில் முன்பக்கத்தில் "செய்தியும் வரலாறும்" என்ற ஒரு தலைப்பு! செப்டம்பர் 23-ஆம் நாள் நவசக்தியில் வெளியிடப்பட்டிருந்த முதல் பக்கக் கொட்டை எழுத்துச் செய்தியை எடுத்துத் திரும்பப் பிரசுரித்திருக்கிறார்கள்.

"தி. மு. கழகத்தில் பிளவு, தனிக்கட்சி தொடங்க கருணாநிதி அதிருப்தியாளர்கள் முடிவு" என்பது நவசக்தி செப்டம்பர் 23-ஆம் நாள் இதழின் தலைப்பாகும்.

"தி. மு. க. பிளவுபடும், புதுக்கட்சி ஆரம்பிக்கப்படும்" என்று நவசக்தி தான் முதலில் செய்தி வெளியிட்டது என்று அக்டோபர் 20ஆம் நாள்-ஆம் இன்றைக்கு அந்தக் காங்கிரஸ் ஏடு; தன்னுடைய செய்தி சேகரிக்கும் ஆற்றலை முரசறைந்து காட்டுகிறது.

புதுக்கட்சி ஆரம்பிக்கும் திட்டம், ஒரு மாதத்திற்கு முன்பே இருந்தது என்பதைக் கண்டுபிடித்து செப்டம்பர் மாதத்திலேயே வெளியிட்ட நவசக்தியின் திறமையைப் பாராட்டத்தான் வேண்டும். அக்டோபர் எட்டாம்நாள் சென்னையில் கழக மேடையில் கழகத்தையும், கழகத்து அமைச்சர்கள், மாவட்ட, வட்டச் செயலாளர்கள், கிளைக் கழகச் செயலாளர்களையும் பொதுமக்கள் முன்னால் நிறுத்துவேன் என்று அறைகூவல் விடப்படுகிறது. அதனைத் தொடர்ந்து அக்டோபர் பதினெட்டு பத்தொன்பதாம் நாட்களில் புதுக்கட்சி, புதுக்கொடி என்று அறிவிப்புக்கள் வருகின்றன.

நாட்டில் ஒன்றிரண்டு கிளைகள்தான் எனினும், ஏட்டில் ஏராளமான கிளைகள் புதுக்கட்சிக்குத் தோன்றிவிடுகின்றன. ஊரிலே உழைத்துக் கொண்டிருக்கிற உனக்கும் - உன்னையும் உன்போன்ற உடன்பிறப்புக்களையும் எண்ணிக்கொண்டு

உதட்டில் தேன்பொழிந்து பேசிக்கொண்டிருந்த நண்பர்கள் சிலரின் உள்ளங்களில் புலி பதுங்கியிருந்ததை உணராமல் கழகத்தின் பணிகளையும், கழக அரசின் பணிகளையும் கவனித்துக் கொண்டிருந்த எனக்கும் உள்ளுக்குள் உருவாகிக் கொண்டிருந்த 'புதுக்கட்சி' திட்டம் தெரியாமல்தான் போய்விட்டது. நவசக்தி யாருக்கு, நம்மைவிட அதிகமாகவும் நீண்ட நாட்களாகவும் டில்லித் தொடர்பு உண்டே!

நமக்கு டெல்லி அரசியல் புதியது தானே! அதனால், நானும் நீயும் அறிந்து கொள்ள முடியாததை அவர்கள் அறிந்து வெளியிட்டு விட்டார்கள். அக்டோபரில் நடக்கப் போவதை, செப்டம்பரிலேயே! ஆருடம் என்று நான் கூட கேலி செய்தேன் அப்போது! பச்சைப்பாம்பு நெளிகிறது என்று நவசக்தியார் சுட்டிக்காட்டியிருக்கிறார். நான் ஒரு பைத்தியக்காரன்; நவசக்தியைக் கேலி செய்துவிட்டு அது பச்சையுமல்ல; பாம்புமல்ல; - பச்சைக் கொடி இளந் தென்றலில் அசைந்தாடுகிறது என்றேன். நான் அக்டோபரில் உணருகிறேன். அரசியலில் நமக்கு மாற்றார்; அதனை செப்டம்பரிலேயே உணர்ந்து செப்பியிருக்கின்றனர்.

ஆகஸ்டு ஐந்து ஆறு தேதிகளில் மதுரையில் நமது மாநாடு; மாநில மாநாடுபோல நடத்திக் காட்டினார் நமது மதுரை மாவட்டச் செயலாளர் மேயர் முத்து. மாநாட்டின் மொத்த வசூல் ஐந்து லட்சத்துப் பத்தாயிரம் ரூபாய் என்று மாநாட்டு மேடையிலேயே அறிவிக்கிறேன்; மாநாடு மகிழ்ச்சி ஆரவாரம் செய்கிறது. அதற்குப் பிறகு இருபது நிமிடங்கள்தான் பேசினேன். ஆமாம்! பேசமுடிந்தது. அதற்குள் உடல் நலிவின் காரணமாக மயக்கமுற்றேன்.

அதனை நாடகத்தின் கதாநாயகனின் உச்ச கட்ட நடிப்பு என்றுகூட மதிப்புக்குரிய காமராஜர் விமர்சித்தார். என்னைவிடப் புகழ்பெற்ற ஒருவர் எனக்குமுன் பேசியதால் நான் பேசமுடிய வில்லை என்று ஆகஸ்டில் நடந்த நிகழ்ச்சிக்கு அக்டோபரில் காரணம் சொன்னார்கள். ஆம்; அந்த புகழ் மிக்கவரே சொன்னார்.

பரவாயில்லை; அதுபோகட்டும் - மதுரை மாநாட்டு வசூலில் மூன்று லட்ச ரூபாயை சென்னையில் திராவிட முன்னேற்றக் கழக அறக்கட்டளையின் பெயரால் வாங்கப்பட்டுள்ள இடத்திற்காக, மதுரை முத்து அனுப்பி வைத்து அந்த இடமும் வாங்கியாகிவிட்டது; ஆபட்சுபரிக்கு அருகாமையில்!

வசூலில் மிச்சமுள்ள இரண்டு லட்சத்து பத்தாயிர ரூபாய்க்கு, மாநாட்டு செலவுகள் விவரங்களை மதுரை மாவட்டக் கழகம் கூடி கணக்குப் பார்த்து அந்தத் தகவலைத் தலைமைக் கழகத்திற்கு அனுப்பி வைக்கும். இது, மாநாட்டுக் கணக்குப்பற்றி உனக்கு நான் அளிக்கும் விளக்கம். இப்போது கூடிய பொதுக் குழுவில் 1971 மார்ச் வரையில் உள்ள தலைமைக் கழக கணக்குகள்தான் வைக்கப்பட்டன.

1972-ல் நடைபெற்ற மாவட்ட மாநாடுகளின் கணக்குகள் அடுத்த பொதுக்குழுவில்தான் வைக்கப்பட முடியும். முதலில் மாவட்ட மாநாட்டுக் கணக்குகளை, மாவட்டக் கழகங்கள் பரிசீலித்து, அதன் பிறகே தேவைப்பட்டால் தலைமைக் கழகத்திற்கு அனுப்பும். கழக சட்ட திட்டப்படி முறையாகவும் ஆர்வத்தோடும் பொருளாளர் வேலை பார்த்த எனக்கு இந்த முறைகள் எல்லாம் தெரியும் என்பது உனக்கும் தெரியும். அந்த மாநாட்டில்தான் ஒரு முழக்கம் கேட்டது! கேள்வி வடிவிலே எழுந்த முழக்கம்.

“லட்சக்கணக்கிலே கூடியிருக்கிற தாய்மார்களே! நண்பர்களே! நமது கழக அரசில் லஞ்சம் ஊழல் என்கிறார்கள்! உங்களைக் கேட்கிறேன். உண்மையைச் சொல்லுங்கள். ஊழல் இருக்கிறதா?”

இப்படிக் கேள்வி எழுகிறது.

“இல்லை! இல்லை!”

என்று மாநாட்டு மக்கள் ஒலிக்கிறார்கள்.

“லஞ்சம் இருக்கிறதா?”

“இல்லை! இல்லை!!”

மாநாடு மீண்டும் முழக்கமிடுகிறது.

அந்தப் பதிலைக் கேட்டு, கேள்விக்குச் சொந்தக்காரர் புன்னகை பூக்கிறார். மக்கள் குரலை, மாற்றுக் கட்சியினர் புரிந்து கொள்ளட்டும் என்று எக்காளமிடுகிறார்!

இது ஆகஸ்ட் ஆறாம்தேதி!

இடையிலே செப்டம்பர் ஒரு மாதம்.

அக்டோபர் எட்டாம் தேதி, "லஞ்சம், ஊழல் இவைகளால் கழகத்தினர் கரங்கள் கறை பட்டிருக்கக்கூடும்; அதனை நீதிபதிகளைக்கொண்டு விசாரிக்க வேண்டு"மென்கிறார். அறுபது நாட்கள்தான் இடையிலே உருண்டோடியிருக்கின்றன. அதற்குள் கழகத்தினர் கைகளில் கறையிருக்குமெனக் கற்பனைச் சொற்பொழிவு நிகழ்த்துகிறார்.

அந்த அறுபது நாட்களுக்குள் நடந்த அற்புதங்களை அரசியலில் மாற்றுக் கருத்துடையோர் கூர்மையாகக் கவனித்திருக் கின்றனர். நாமோ, நம்பிக்கையில் ஏமாந்து போயிருக்கிறோம். இலைதழைகள் பரப்பிய இடத்தைப் படுகுழியென்று தெரியாமல் காலைவைத்து சிக்கிக்கொள்ளுமாமே யானை; நல்ல வேளை; காலை இழுத்ததும் ஒரே தாவாகத் தாவி குழியைத் தாண்டித் தப்பித்துக் கொண்டோம். இல்லையேல்; பசுமையான இலைகளில் நடக்கத் தொடங்கிப் படுகுழியில் வீழ்ந்த யானையின் கதிதான் கழகத்திற்கு ஏற்பட்டிருக்கும்.

ஆலந்தூரில் அவதூறு பிறந்தபோது புரியவில்லை - திருக்கழுக்குன்றத்தில் தி. மு. கழகம் கேள்விக்குறியாக்கப்பட்ட போது புரியவில்லை. ஆயிரம் விளக்கில் கழகம், கேள்விக்குறியைத் தாண்டி கேலிக்குரியதாகக் காட்டிக் கொடுக்கப்பட்டபோதுதான் திகைப்பு ஏற்பட்டது! திட்டம் முன்கூட்டியே போட்டாகிவிட்டது. வெளியேறுவதற்கு என்ற உண்மை முகிலைக்கிழித்துப் புறப்பட்டது. இல்லையேல் "பொதுக்குழுவுக்குத் தீர்மானம் கொண்டு செல்வேன். அது நிறைவேறாவிட்டால் பொது மக்களிடம் செல்வேன்" என்று பேசியதற்குப் பொருள் என்ன? புதுக்கட்சி ஆரம்பிக்கத் தயாராகிவிட்டேன் என்பதுதானே! என்ன செய்வது; நவசக்தியாருக்குத் தெரிந்தது நமக்குத் தெரியாமலே போய்விட்டது.

அன்புள்ள,

மு. க.

(21-10-1972)

51. அகல்விளக்கு கையில்
அண்ணன் மொழி நெஞ்சில்!

உடன்பிறப்பே,

அகல் விளக்கு கையில்; அந்தகார இருள் சுற்றிலும்! பெருமழை பொழிந்து கொண்டிருக்கிறது; சூறைக் காற்றும் கூட!

சரளைக்கற்கள் நிறைந்த பாதையில் நடந்து மலை உச்சியில் கொண்டுபோய் விளக்கினை வைத்திட வேண்டும். காற்றின் வேகத்தில் விளக்கு அணையாமல் ஒரு கரம் தடுத்தபடி இருக்க வேண்டும்.

மற்றொரு கரத்திலோ அந்தச் சிறிய அழகான அகல் விளக்கு. மழைத் துளிகள் விளக்கின்மீது விழாது காத்திட தலையைக் குனிந்து தலையையே குடையாக்கிக் கொள்ள வேண்டும். காற்றின் வேகம் - கடுங்குளிர் - சாட்டையடி போல் விழுகின்ற மழைத்துளி, கால்களிலோ கற்கள் குத்துகின்றன.

வழியும் ரத்தம், மழை நீரோடு கலந்தோடுகிறது. எப்பாடு பட்டேனும் அந்த விளக்கினை சிகரத்தில் சேர்த்து அங்குள்ள மாடத்தில் பாதுகாப்பாக வைத்திடல் வேண்டும்.

முன்னேற்றக் கழகத்தின் இலட்சியப் பயணத்தைப்பற்றி இதைவிட வேறொரு பொருத்தமான ஒப்புவமையினைக் கூற முடியாது.

கணக்கிலடங்காக் கண்டனக் கணைகள்-இழிமொழிகள்-பழி தூற்றல்கள்-இவைகளையே அன்றும் சரி; இன்றும் சரி, கழகம், தான் ஆற்றிய பணிக்குப் பரிசாகப் பெற்றுக் கொண்டு தன் வீரப் பயணத்தை நடத்திக் கொண்டிருக்கிறது.

நம் குடும்பத்தினர், தாய் தந்தை மனைவி மக்கள் நாராச நடையில் தாக்கப்படுவது என்பது நம்மால் அவர்களுக்குக்

கிடைத்த பாக்கியம் என்று அவர்கள் கருதிப் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

நான் பெற்ற பிள்ளையொருவன் இருக்கிறானே; முத்து-அவன் பிறக்கும்போதே பெற்ற தாயை இழந்தவன்.

அந்தத் தாயில்லாப் பிள்ளை இரண்டொரு நாட்களுக்கு முன் என்னிடம் வந்தான். அவன் கண்களில் கனலையும் புனலையும் ஒருசேரக் கண்டேன். "என்னப்பா!" என்றேன். ஒரு துண்டு அறிக்கையைக்காட்டி "இதோ பாருங்களப்பா! செத்துப்போன என் அம்மாவைப் பற்றி எப்படி எழுதியிருக்கிறார்கள்!" என்று கதறி அழுதான்.

நான் அவன் தோளைத் தட்டிச் சொன்னேன். "முட்டாளே! உன் அம்மாவை என்று ஏன் சொல்கிறாய்? என் மனைவியைப் பற்றியல்லவா எழுதியிருக்கிறார்கள். எனக்குத்தானே ஆத்திரம் வர வேண்டும்! சரி! போ! போ!" என்று ஆறுதல் கூறி அனுப்பி வைத்தேன்.

இருபது ஆண்டுகளுக்கு மேலாகிறது; அவள் இறந்து எரியுண்டு முடிந்து! அவளுக்கு இந்தப் பாராட்டு இப்போது! அதுவும் நம்மோடு இருந்தவர்களால்! என்னால் அவளுக்கு சேர்த்து வைக்க முடிந்த சொத்து இதுதான் போலும்!

உடன் பிறப்பே,

நான் மட்டுமல்ல; இப்படித் தாக்கப்படுவது; நீயும் உன்னைப் போன்ற பலரும் இது போலத் தாக்கப்படுகிறீர்கள் என்பதை நான் காண்கிறேன்.

இழிமொழிக்கு இழிமொழி எதிர்த்துக் கூறி விடுவது சுலபம்! அதைத் தாங்கிக் கொள்வதுதான் கடினம்! அந்தக் கடினமான வேலைக்கு அண்ணன் நம்மைப் பழக்கப்படுத்தியிருக்கிறார் என்பதை மறந்து விடாதே!

ஒருவன் சாணத்தை எடுத்து நம் மீது வீசுகிறான். அது நமது சட்டையில் படுகிறது. அப்போது நமக்கு ஏற்பட வேண்டியது ஆத்திரமல்ல-அதற்குப் பதிலாக; சாணம் வீசியவன் தன் கையையல்லவா கறை படுத்திக் கொண்டிருக்கிறான் என்ற அனுதாபம் தான் ஏற்பட வேண்டும்.

என்னப்பா, ஏசு மொழி பேசுகிறாய் என்று கேட்டு என்னை அவ்வளவு உயரத்தில் தூக்கி வைத்து விடாதே! அது என் கண்ணுக்கெட்டாத உயரம்! ஏசு மொழியல்ல இது; ஏசும் மொழிகளை எப்படித் தாங்கிக் கொள்வது என்பதற்கு நம் அண்ணன் தயாரித்துக் கொடுத்த கேடயம்.

எந்த ஒரு கட்சியும் அப்படியே நூற்றுக்கு நூறு புடம் போட்டு எடுக்கப்பட்ட தங்கமாக இருக்க முடியாது. அதற்காக நூற்றுக்கு நூறு அழுகிய கனியாக இருக்க வேண்டுமென்றும் நான் வாதிடவில்லை. ஒன்றிரண்டு குறைகள், கழகத்தில் இருக்கலாம். அதனை நீக்குவதில் நானும் சரி; கழகத்தின் மற்ற தலைவர்களும் சரி; ஒரேவிதமான கருத்துக் கொண்டவர்கள்தான்.

1970 ஆம் ஆண்டு கழக சட்டமன்ற உறுப்பினர்கள் நாலைந்துபேர் நிலப்பட்டா பெற்றனர் என்று கேள்விப்பட்டதும் அவர்கள் அதனை உடனடியாகத் திருப்பித் தந்துவிட வேண்டுமென்று கூறப்பட்டு, அவ்வாறே அவர்கள் திருப்பியும் தந்தனர். அரசாங்க அதிகாரங்களையோ, பதவிகளையோ தவறாகப் பயன்படுத்திய இரண்டொரு கழக நண்பர்கள் - எனக்கேகூட நெருங்கியவர்கள் அவர்கள்-சட்டத்தின் முன்னால் நிறுத்தப்பட்டு, கழகத்திலிருந்தும் விலக்கி வைக்கப்பட்டுள்ளார்கள்.

ஆகவே, எக்குற்றமாயினும் - குறையாயினும் அதனைப் போக்கிட நடவடிக்கை உரிய நேரத்தில் எடுக்கப்பட்டே வருகிறது. கட்சி தூய்மைப்பட வேண்டுமென்று தெருவிலே நின்று புழுதிவாரி வீசுவோரைப் பற்றி நமது அண்ணன் கூறிய உருக்கமிகு கருத்துக்களை உனக்கு நினைவூட்டுகிறேன்.

திராவிட நாடு இதழில் தம்பிக்கு எழுதிய மடலில் நமது அண்ணன் குறிப்பிடுகிறார்; படித்துப்பார் - எவ்வளவு ஆழமான துயரத்தோடு கடிதம் வரைகிறார் என்று!

அருமை நண்பர் சம்பத், கழகத்தின் கணக்கு வழக்குகள் அண்ணாவின் ஜனநாயகம் ஆகியவை பற்றி எழுதியும், பேசியும், கழகத்தை சோதனைக்கு ஆளாக்கிவிட்டுப் போன நேரத்தில் அண்ணா எழுதிய கட்டுரை இது!

“தம்பி! கட்சி நல்லமுறையிலே எவருடைய மனதுக்கும் குறையின்றி நடத்திச் செல்லப்பட வேண்டுமென்பதிலே எனக்கு இருப்பது போன்றே மக்களுக்கும் நிரம்ப அக்கறை இருக்கிறது.

ஆனால் கட்சியின் நடைமுறையில் குறை இருப்பதைக் கண்டு குமுறியோ-கொதித்தோ-அதை நீக்குவதற்கு உள்ள வழி பற்றித் தாம் கொண்டுள்ள கருத்தன்றி வேறெவர் கருத்தும் மேலானதுமல்ல; தேவையானதுமல்ல என்று எண்ணிக் கொண்டும் குறைகளை வேண்டுமென்றே குவித்து வைத்துக் கொண்டு, யாரோ சிலர் பயன் அடைகிறார்கள் என்று தாமாகக் கருதிக் கொண்டும் அச்சம், தயை, தாட்சண்யமின்றிப் பேசுவதாகவும், எழுதுவதாகவும் கருதிக் கொண்டு தம்மை ஒத்தவர்களைக் கூட்டுத் தோழர்களைப் பற்றிக் கேவலமான கருத்துக்களைப் பரப்புவதும்; காதைப் பிடித்திழுத்து கன்னத்தில் அறைந்து தலையில் குட்டினாலன்றி; மர மண்டைக்குப் புத்தி வரவே வராது என்று எண்ணிக் காட்டுப்போக்கில் நடந்து கொள்ளும் பழங்கால ஆசிரியர்களைப் போல்-

இடித்து இடித்துச் சொன்னாலொழிய இவர்கள் திருந்த மாட்டார்கள் என்று கருதும் போக்கை மேற்கொண்டும் நடந்து வருவது-கசப்பு உணர்ச்சி பரவவும், பகை உணர்ச்சியாகி விடவும், எதிர்ப்பாளர்களுக்கு நம்மையும் அறியாமல் உடந்தையாகவும்தான் பயன்படுமே ஒழிய திருத்தம் கிடைத்திட வழிகோலாது!"

அண்ணன், எவ்வளவு தெளிவாகச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறார் பார்த்தாயா? சம்பத் விஷயம் வேறு-இப்போது நடக்கும் விஷயம் வேறு-என்று சிலர் வாதிடக்கூடும். ஆமாம்; நண்பர் சம்பத் கூட இவ்வளவு பயங்கரமாகக் கழகத்தின் மீது பாய்ந்திடவில்லை.

அப்போது ஒரே ஒரு இடத்தில்தான் அண்ணா படம் உடைக்கப்பட்டது. இப்போது அந்த அண்ணன் வளர்த்த தம்பிக்கு எவ்வளவு பெருமை பார்! செருப்பு மாலை கூடப் போடுகிறார்கள் ரசிகச் செல்வங்கள் என் படத்துக்கு!

அன்றைக்கு, சம்பத் கட்சியைத் திருத்துவதாகத்தான் கிளம்பினார். கொள்கையில் மாற்றமில்லையென்றுதான் முரசு கொட்டினார். புதுக்கட்சி ஆரம்பித்து, புதுக்கொள்கைகளை

அறிவித்தார் - அந்தக் கட்சியின் சார்பில் தேர்தலிலே கூட போட்டியிட்டார்.

தென் சென்னை நாடாளுமன்றத் தேர்தலில் அவர் போட்டியிட்டபோது அவருக்கு அகில இந்திய விளம்பரம் தரப்பட்டது. அந்த விளம்பரத்திற்குத் தகுதியான அளவுக்கு அவர் அரசியல் அறிந்தவர் என்பதை நான் மறுக்கவில்லை.

அவரை எதிர்த்துப் போட்டியிட்ட நமது நண்பர் நாஞ்சில் மனோகரன் அவர்கள் தோழர் சம்பத்தைப் பற்றிக் குறிப்பிட்ட வாசகங்கள், நாட்டு மக்களைக் கவர்ந்தன.

"சொந்த வீடு என்பதற்காக சுவரில் கிறுக்கித் தள்ள எவனுக்கும் உரிமையில்லை"

-என்பதுதான் அந்தச் சூடான; ஆனால் உண்மையை சுட்டிக்காட்டிய வாசகம்!

சொந்த வீட்டைப் பழுது பார்ப்பதாகச் சொல்லி, இருந்த எழிலையும் குலைக்கமுனைந்து, பிறகு புதுவீடு கட்டிக் கொஞ்ச நாள் குடியிருந்து பார்த்து, இறுதியில் எதிர்த்த வீட்டுக்கே போய்விட்டார் தோழர் சம்பத் என்பது பழைய கதை!

அதற்கும் இப்போது இதுவரையில் நடந்திருப்பதற்கும் எந்த வேறுபாடும், முரண்பாடும் எனக்குத் தெரியவில்லை.

இருப்பினும் பத்திரிகைகள் எழுப்பும் பரபரப்பை சற்றுப் பொறுமையுடன் நீயும் நானும் தாங்கிக்கொள்ளத்தான் வேண்டும்.

அன்புள்ள,

மு. க.

(23-10-1972)

52. பிப்ரவரி மூன்றாம் நாள் !

உடன்பிறப்பே!

உனக்கு மடல் தீட்டி நீண்ட நாட்கள் ஆயின. எழுதிடக் கூடாது என்பதல்ல, எனக்குக் கிடைத்திடும் ஓய்வு நேரம் எவ்வளவு என்பது உனக்குத் தெரியும். உடன்பிறப்பிற்குக் கடிதம் எழுதுவது ஓய்வு நேரத்துப் பணிகளில் ஒன்றா என உன் குறும்பு விழிகள் என்னைக் கேட்கத்தான் செய்கின்றன. பொங்கல் வந்து போயிற்று. நமது கழக ஏடுகள் பல பொங்கல் மலர்களாக மலர்ந்தன. கவிதைகள், கட்டுரைகள், வாழ்த்துக்கள் கேட்டனர் அந்த மலர்களுக்கு. எழுதினேன் இயன்ற வரையில்-அப்போதுகூட என் உடன் பிறப்பாம் உனக்கு ஒரு தனிப்பட்ட கடிதம் எழுதாதது என் குற்றம்தான். கடிதங்களுக்கு நீ எனக்கு பதில் எழுதுவதில்லை.

ஆனால் நம்மிடையே இழையோடும் தூய அன்புக்கு இந்தக் கடிதங்கள் வலுவூட்டுகின்றன என்பதை நானறிவேன். என் எழுத்துக்களுக்கான பதிலை, உன் செயலிலே கண்டு களிப்பவன் நான்.

மனைவிக்குக் கடிதம் எழுதிவிட்டுப் பதிலுக்காகக் காத்திருக்கும் கணவனைப் போலவோ, கணவனுக்குக் கடிதம் அனுப்பி விட்டுக் கால்நோகக் கண் நோக வாயிற்புறத்தில் நின்றிருக்கும் அன்பு மனைவி போலவோ, உனக்குக் கடிதம் எழுதிவிட்டு நான், தபால்காரர் வரும் வழிநோக்கி விழியெறிந்து கிடக்கத் தேவையில்லை.

உன் பதிலை, உணர்ச்சிகளாக வெளிப்படுத்துகிறாய். உன் பதிலை உழைப்பாகத் தருகிறாய். உன் பதிலை கிளைக் கழகங்களின் எண்ணிக்கையாக ஆக்கிக் காட்டுகிறாய். உன் பதிலை உறுப்பினர்கள் தொகை அதிகரிக்கப்படுவதிலே காணுகிறேன். ஊருக்குப் பணியாற்றிடும் உன் உடலில் இருந்து சிந்தும் வியர்வைத் துளிகள், நீ எனக்கு எழுதும்

பதிலுக்காகப் பயன்படுத்தும் 'மை'த் துளிகள் என்பதை அறியாதவனா நான்?

உன்னையும் என்னையும் அன்பு ஒழுகத் 'தம்பீ' என்று அழைத்த அண்ணனின் நினைவு நாள் வருகிறது.

திராவிடக் கலாச்சாரத்தின் திருத் தூதனாகத் திகழ்ந்தவர் நம் அண்ணா.

தமிழ்ப் பண்பாட்டுக்குப் பாட்டுடைத் தலைவனாக விளங்கியவர் அவர்.

"ஏ, தாழ்ந்த தமிழகமே!" என்று ஓங்கிய குரலில் ஒலித்து நம் உறக்கம் கலைத்த ஒப்பற்ற தலைவர் அவர்.

அறியாமை இருளகற்றிப் பகுத்தறிவுச் செங்கதிர் பரப்பிய பெரியாரின் தளநாயகர் அவர்.

மக்களாட்சித் தத்துவத்தின் மாண்புகள் உணர்த்தி காந்தி யடிகளின் அன்பு மார்க்கம் அரசியற் பண்பு மார்க்கம் தழைத்திடத் தளராது பணியாற்றிய தென்னாட்டுக் காந்தி அவர்.

மத்திய ஆட்சியிலே அதிகாரக் குவியல் போக்கி, மாநில சுயாட்சியை முழுமையானதாக ஆக்கிட 'உயில்' எழுதி வைத்ததோடு, அதை நாம் உறுதியாக நிறைவேற்றுவோம் என்ற நம்பிக்கையோடு எழாத நித்திரைக்கு எழுந்து சென்றவர் அவர்.

மாநில அரசு அமைச்சர்கள் மீது புகார் விசாரணை போன்ற ஆதிக்கம் செலுத்தவோ, அதிகார அமைப் பினை உருவாக்கவோ மத்திய அரசு முயன்றிடக் கூடாது என்று முதலமைச்சர் என்ற முறையில்; மத்திய அரசுக்கு கனிவு, தெளிவு, துணிவு மூன்றையும் இணைத்து பதில் முடங்கல் தீட்டிய கொள்கைச் சிங்கம் அவர்.

சர்வ வல்லமை பெற்ற அறிஞர் எனினும், தன் கழகத்தின் பொதுக்குழு எடுக்கும் முடிவுக்கே கட்டுப்படுவேன்; என்று கூறி, அவ்வாறு நடந்து காட்டிய ஜனநாயகக் காவலர் அவர்.

இந்தித் திணிப்பை இறுதி மூச்சு உள்ளவரை எதிர்ப்போம் என்று சூளுரைத்துச் சுடர்முகம் தூக்கிச் சிறைக் கோட்டப்

பறவையாகப் பலமுறை அடைபட்ட சுயமரியாதைத் தமிழ்ப் பெருமகன் அவர்.

இலக்கியத் தேனருவி

எழுத்துக்கோர் பொன்னாட்ஷா

சொலல் வல்லான்-

சோர்விலான்

நம் அண்ணன்;

இதய மன்னன்.

நமக்கு நெஞ்சிலோர் ஆலயம் - அந்த - ஆலயத்துத் தேவனாக நமது அண்ணன்.

ஏழையின் சிரிப்புக்காண அந்தத் தெய்வம் விரும்பியது. அதனை நாம் இயன்றவரை செயல்படுத்துகிறோம்.

கண்ணொளி பெறுகின்ற ஏழை-மறுவாழ்வு பெறுகின்ற தொழுநோய்ப் பிச்சைக்காரன் - மாடிவீட்டில் குடியேறும் குடிசைவாசி-மனைப்பட்டா, நிலப்பட்டா லட்சக்கணக்கில் பெறுகின்ற கிராமவாசி - எங்கணும் மின்னொளி தாழ்த்தப்பட்டோர், பிற்படுத்தப்பட்டோர் - நல்வாழ்வு - விரிக்கிற் பெருகும் கல்லறையில் தூங்குகின்ற அண்ணன் கால்மலரில் வைக்கின்ற காணிக்கைகளன்றோ இந்த சாதனைகள்!

பீறிட்டுக் கிளம்பிய இருதயத்து ரத்தமெல்லாம் வீறிட்டு அலறிய நம் விழி வழியே கண்ணீராக வழிந்த நாளன்றோ; பிப்ரவரி மூன்றாம் நாள்!

காணக்கிடைக்காத தங்கத்தை கடற்கரை மண்ணுக்குள்ளே புதைத்த நாளன்றோ; அந்த நாள்!

அண்ணனின் நினைவு நாள், ஆண்டு தோறும் கண்கலங்கக் கொண்டாடுகிறோம். கொண்டாட்டமா அது? குமுறும் நெஞ் சங்கள்! புலம்பும் வாய்கள்! நீர் வழியும் கண்கள்! அனைத்தையும் அடக்கிக் கொண்டு அண்ணன் கூறிய "எதையும் தாங்கும் இதய"த்துடன் அமைதி ஊர்வலம் நடத்துகிறோம். அண்ணன் மறைந்த ஆண்டு, தலைமைக் கழகத்தின் சார்பில் நான் விடுத்த

வேண்டுகோளை ஏற்று நீயும் மற்ற உடன்பிறப்புக்களும் ஊரெல்லாம் அந்த உத்தமனுக்குச் சிலைகளை எழுப்பி யிருக்கிறீர்கள்.

ஒவ்வொரு ஊரிலும் இந்த ஆண்டும் மௌன ஊர்வலங்கள் நடைபெற்று அண்ணன் சிலைகளுக்கு மாலை அணிவித்து வணக்கம் செய்து;

"எங்கள் தலைவனே! உன் வழி நின்று உன் கொள்கைகளையும், நீ உருவாக்கிய கழகத்தையும், நீ எமது கையில் தந்த கொடியினையும் காப்போம்"

என்று சூளுரை எடுத்துக் கொள்ள வேண்டும்.

சென்னையில், அண்ணனின் கல்லறை மலர்வளையங்களால் மூடப்படும். வழக்கம் போல் மௌன ஊர்வலங்கள். உதடுகள் அசையாவிடினும், உள்ளங்கள் அண்ணனின் புகழ் கீதத்தை இசைத்துக்கொண்டிருக்கும். அவர் தந்த கழகத்தைக் காக்க உறுதிமொழிகளை உச்சரித்துக் கொண்டுதானிருக்கும்.

ஊர்வலம், மலர்வளையம், நினைவுநாள் நிகழ்ச்சி சிலை அமைப்பு, படத்திறப்பு இவைகள் மட்டும் அண்ணனுக்கு நாம் செலுத்தும் நன்றிக் கடன் அல்ல!

எட்டப்பனால் காட்டிக் கொடுக்கப்பட்ட கட்ட பொம்மனாகக் கழகம் ஆகாமல், காத்திடும் பொறுப்பு, உனக்கும் என் உயிரனைய உடன்பிறப்புக்களுக்கும் இருக்கிறது என்பதை மட்டும் மறந்துவிடாதே!

அன்புள்ள,

மு. க.

(23-01-1973)

53. நட வேகமாக! நமக்கே வெற்றி!!

உடன்பிறப்பே,

திண்டுக்கல் தேர்தல் நாள் நெருங்கிவிட்டது. எதிர்க்கட்சிகள் தங்கள் திறமைக்கேற்றவாறு உண்மைகளைத் திரித்துக் கூறும் முயற்சியில் ஒன்றோடொன்று போட்டிப் போட்டுக் கொண்டுள்ளன. தர்ம அதர்மங்களைப் பற்றியும் நியாய அநியாயங்களைப் பற்றியும், ஆண்டவனுக்கும் வேத சாத்திரங்களுக்கும் கட்டுப்பட்டு நடக்கின்றவர்களாகத் தங்களைக் காட்டிக் கொள்ளுகிற சில பத்திரிகையாளர்கள், எதிர்க்கட்சியினரின் அடிப்படையற்ற வாதங்களுக்குக் கொட்டையெழுத்து விளம்பரங்களைத் தருவதோடு நமது விளக்கங்களை பொடி எழுத்துக்களைப் பொறுக்கியெடுத்து அதனை அரை அங்குலச் செய்தியாக வெளியிட்டு மனுநீதி தர்மத்தை கடவுளுக்கு அடுக்கும் விதத்தில் கடைப்பிடித்து வருகிறார்கள். வாழ்க அவர்கள்!

வேட்பாளர்கள் யார் யார்? கவனித்தாயா?

1971-இல் சுயேச்சை.

1972-இல் இந்திரா காங்கிரஸ்.

1973-இல் புதுக் கட்சி; அவர் ஒரு வேட்பாளர்.

இன்னொரு வேட்பாளர் பற்றி சொல்கிறேன் கேள்:-

1970 ஆம் ஆண்டு சட்டசபையில் அவர் சுதந்திராக் கட்சியின் தலைவர். என்னை நோக்கி அவர் ஒரு அறைகூவல் விடுக்கிறார். "தி. மு. க. இந்திரா காங்கிரசை ஆதரித்தால் சுதந்திரா கட்சி, தி. மு. க.வுக்கு ஆதரவு தருவதை வாபஸ் வாங்கிக் கொள்ளும்." இதுதான் அவர் விடுவித்த அறைகூவல். இன்றைக்கு அவர் இந்திரா காங்கிரசின் வேட்பாளர். சோசலிசம் படும்பாட்டைப் பார்த்தாயா?

கட்சி சார்பாகக் போட்டியிடுபவர்களில் தி. மு. கழக வேட்பாளரும், பழைய காங்கிரஸ் வேட்பாளரும்தான் தங்கள் கட்சிகளில்

நிலையாக இருப்பவர்கள். அதிலும் இரண்டாவது, இடையில் சற்றுத் தடுமாறி, பிறகு நிலை நிறுத்தப்பட்டது என்பது பலருக்குத் தெரியாது; சிலருக்குத்தான் தெரியும்.

கழக வேட்பாளர் பொன். முத்துராமலிங்கம், நீண்ட நாட்களாக கழகத் தொண்டர். கழகம் நடத்திய போராட்டங்களில் ஈடுபட்டுச் சிறை புகுந்தவர்; அடக்குமுறைகளை ஏற்றுக் கொண்டவர்.

இந்திரா காங்கிரசுக்கு; இல்லை - இல்லை ஆளும் காங்கிரசுக்கு ஆதரவு திரட்ட வந்துள்ள மத்திய அமைச்சர்கள் நல்ல நகைச்சுவைப் பேச்சாளர்களாக விளங்குகிறார்கள். அவர்களில் ஒருவர் கூறியிருக்கிறார் - 'தி. மு. கழகம் முதலாளிகளின் கட்சி' என்று கழக அரசு முதலாளிகளுக்காகத் திட்டங்கள் தீட்டுகிறதாம்.

பஸ்களை தேசியமயமாக்குவது, உழுபவனுக்கு நிலம் சொந்தமாக சட்டம் கொண்டுவந்தது, உழைப்பவருக்கு நிர்வாகத்தில் பொறுப்பும், முதலீட்டில் பங்கும் அளிக்கத் தொடங்கியிருப்பது, விவசாய வருமான வரி விதித்தது. விவசாயத் தொழிலாளர்களுக்குக் குடியிருப்பு மனைகளைச் சொந்தமாக்கியது, உச்ச வரம்பில் விதிவிலக்குகளை அகற்றியது - இதுபோன்ற காரியங்கள் எல்லாம் முதலாளிகளுக்காகச் செய்யப்பட்டது என்பது அந்த மத்திய அமைச்சரின் வாதம் போலும். பாவம் - பிர்லா, பஜாஜ், டாடா, பூட்டா போன்ற ஏழைகளையே கவனிப்பவர்கள் அவர்கள்!

நாம் என்ன சாதாரணம், கைரிக்ஷா இழுக்கும் கந்தனும் - கண்ணிழந்த கருப்பனும் - கையில் ஓடேந்தி பிச்சை எடுக்கும் காத்தானும்தான் நமக்குக் கண்ணில் படுகிறார்கள். இவர்களை யெல்லாம் மத்திய அமைச்சர் - பிரபுக்கள், பண முதலாளிகள் என்று நினைக்கிறார் போலும்!

அந்த மத்திய அமைச்சர் இன்னொரு 'தமாஷ்' வெடியும் வெடித்திருக்கிறார். தமிழ் நாட்டில் தி. மு. க. அரசாங்கம் செய்கிற நல்ல காரியங்கள் அனைத்தும் மத்திய சர்க்கார் உத்தரவுப்படி நடைபெறுகிறதாம். எப்படியோ ஒன்றை அவர் ஒப்புக் கொண்டார் - தி. மு. க. அரசில் நல்ல காரியங்கள் நடைபெறுகின்றன என்பதை. அதுவரையில் அவருக்கு நன்றி! ஆனால் அந்தக் காரியங்கள் அனைத்தும் மத்திய அரசால்தான் உத்திரவிடப்பட்டு நடக்கின்றன என்று அவர் கூறும்போது நான் சிரிக்காமல் இருக்க முடியவில்லை.

மத்திய அரசு திட்டத் தொகை அளிக்கிறதாம் - அதைக் கொண்டு நாம் செலவு செய்கிறோமாம். முதலில் மாநிலங்கள் திரட்டும் தொகை, அதற்கேற்ப மத்திய அரசு அளிக்கும் திட்டத் தொகை, மாநிலங்களின் வரவு செலவு மதிப்பீடுகள் - இவைகளைப் பற்றியெல்லாம் அந்த அமைச்சர் நிதி இலாகா அதிகாரிகளிடம் பாடம் கேட்டுக் கொள்வது நல்லது. அவர் விஷயம் தெரியாமல் பேசினால், அவருக்காக அனுதாபம்! தெரிந்தும் வேண்டுமென்றே மக்களை ஏமாற்றுவதற்காகப் பேசினால் அது தோற்றுப்போன பழைய ராஜ தந்திரம் என்று கூறுவதைவிட வேறு வழி இல்லை.

இன்னொருவர் - புதுக் கட்சியின் தலைவர். அவர் நேற்றைக்கு பேசியதை இன்றைக்கு மறந்துவிடுவார். நேரத்திற்கு ஒரு பேச்சு! "கருணாநிதி பிறந்த நாளில் ரிக்ஷா கொடுப்பது யாருக்குத் தெரியுமா? தி. மு. க. ரிக்ஷாக்காரர்களுக்கு" இது அவரது கண்டுபிடிப்பு!. மொத்தம் தமிழ் நாட்டில் இருக்கிற கை ரிக்ஷா இழுப்பவர்கள் 2 ஆயிரம் பேருக்குள்ளேதான்! அவர்கள் அனைவருக்கும் இனாமாக சைக்கிள் ரிக்ஷா அளிக்கப்போகிறோம். அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை. வாய் விளம்பர வள்ளல்! அதற்கு ஒரு கதை கட்டுகிறார். 48-வது பிறந்த நாளில் தொழு நோய்ப் பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வுத் திட்டம். அவர்கள் அனைவரும் தி. மு. க. என்பது அவரது வாதமா?

49-வது பிறந்த நாளில் இதுவரையில் 35 ஆயிரம் பேருக்குக் கண்ணொளி வழங்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அனைவரும் தி. மு. க. என்பது அவரது கூற்றா?

அவரிடம் பதிலை எதிர்பார்க்க முடியாது! கேள்விதான் கேட்பார். நமது பதிலையும் சீரணிக்க மாட்டார். பிறகு பதிலும் சொல்லமாட்டார். என்ன செய்வது, தேர்தல் நேரம். நல்ல நேரத்திலேயே புளுகுகிறவர்கள் தேர்தல் நேரத்தில் சும்மா இருப்பார்களா?

பழைய காங்கிரஸ் தலைவர் மிகவும் ஆத்திரமாகக் காணப்படுகிறார். கடுகை எல்லாம் மலையாக்கி கர்ண கடூரமாகப் பேசி வருகிறார். கறவை மாடு வாங்கிக் கொடுத்து நாம் ஓட்டு கேட்கிறோமாம்; அவர் அப்படி ஒரு திடீர் குண்டை தூக்கிப்போடுகிறார். இந்திரா காங்கிரசின் தேர்தல் சின்னத்தை

சுவர்களில் பார்த்து அவருக்கு அப்படி ஒரு குழப்பம் ஏற்பட்டுள்ளது போலும்.

உடன் பிறப்பே, எல்லாவற்றையும் அலட்சியப் புன்னகை யோடும், உனக்கே உரித்தான குறும்புப் பார்வையோடும் உற்றுக் கவனி. உன்னை ஒருமுறை பார்த்துக்கொள்.

உறுதி படைத்த உன் நெஞ்சை; ஊழிக் காற்றுக்கும் அசையாத கொள்கை உள்ளத்தைத் தட்டிக் கொள்!

வன்முறையாளர் கொடுவாள் கண்டு துவளாத தோளை உயர்த்து!

சுயமரியாதைப் புலியே!

சுடர் முகம் தூக்கு!

தன்மானத் தமிழ் மகனே!

தமிழர்களால் தமிழர்களுக்காக நடத்தப்படுகிற ஆட்சியை கவிழ்க்க எந்த முயற்சி நடந்தாலும் அதனைத் தகர்க்க தடை பல கடக்க - படைபலம் உண்டென்று அண்ணாவின் புகழ் பாடி புறப்படு.

கடமை - கண்ணியம் - கட்டுப்பாடு போற்றி; கழகம் வென்றிட; கண்மணியே எழுந்திடு! நட வேகமாக; நமக்கே வெற்றி!

அன்புள்ள,

மு. க.

(12-05-1973)

54. ஐந்தாம் ஜார்ஜா? ஆறாம் ஜார்ஜா?

உடன்பிறப்பே,

வெள்ளையர்கள் சூரியன் அஸ்தமிக்காத பூபாகத்தை ஆண்டு கொண்டிருந்தபோது இங்கிலாந்தில் இருந்த மன்னர் களுக்கும் இல்லாத ஆணவம், இன்று மத்திய சர்க்கார் மந்திரிகளாக டில்லிப் பட்டணத்தில் வீற்றிருக்கும் சில "ஜூனியர்"களுக்கே ஏற்பட்டிருக்கிறது. ஆளும் காங்கிரசின் தேர்தல் சின்னம் பசுவும் கன்றும்! பசு, சாதுவாகத்தான் காணப்படுகிறது; கன்றுகள்தான் துள்ளுகின்றன என்று நான் முன்பே ஒருமுறை குறிப்பிட்டிருக்கிறேன். அதுபோல் டெல்லியிலிருந்து வரும் சில குட்டிதேவதைகள் திண்டுக்கல் தொகுதியில் வந்து தலைகால் தெரியாமல் ஆடுகின்றன. இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜகஜீவன்ராம் வந்தார்; திண்டுக்கல்லில் பேசினார். நிறைகுடம் தளும்பாது என்பது போல் நிதானம் தவறாமல் சில கருத்துக்களைச் சொல்லிவிட்டுப் போனார். கழகத்திற்கோ, கழக அரசுக்கோ மாறுபட்ட கருத்துக்களை யாரும் கூறக்கூடாது என்ற மடமை நிறைந்தவர்கள் அல்ல நாம்! அதற்காகக் கழக அரசின் மீது இல்லாத குற்றச்சாட்டுக்களை சுமத்துவதும், பொல்லாத அவதூறுகளை வாரியிறைப்பதும்தான் மத்திய அமைச்சரவையில் உள்ள ஒரு சில துணை மந்திரிகளின் தேர்தல் பிரச்சார இலக்கணமென்றால், கெட்டிக்காரன் புளுகே எட்டு நாள்தான் என்கிறபோது இவர்கள் புளுகு எத்தனை நாளைக்கு என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

ஏ. சி. ஜார்ஜ் என்று ஒரு அமைச்சர்! அவருக்கு; தான் டெல்லியில் மந்திரியாக இருப்பதாகவே நினைவு இல்லை! இங்கிலாந்து நாட்டில் இருந்து கொண்டு இங்கிருக்கும் நம்மை ஆளுகிற ஐந்தாம் ஜார்ஜ் அல்லது ஆறாம் ஜார்ஜ் என்ற நினைப்பு! என் தந்தை ஒரு கதை சொல்வார். மகாவிஷ்ணு, பரமசிவனைப்

பார்க்கப்போனாராம். அப்போது சிவனின் கழுத்தில் இருந்த பாம்பு, விஷ்ணுவின் வாகனமான கருடனைப் பார்த்து "என்ன கருடா; சுகமா?" என்று கேட்டதாம்? உடனே கருடன்; "இருக்கும் இடத்தில் இருந்தால் எல்லாருக்கும் சுகந்தான்" என்று பதில் கூறியதாம். அதுபோல் இருக்கிறது நண்பர் ஜார்ஜின் கதை.

"சின்னாளப்பட்டியில் ஏழாயிரம் நெசவாளர்கள். அவர்களுக்குத் தி. மு. க. அரசாங்கம் முப்பதாயிரம் நூல் கார்டுகள் வழங்கியிருக்கிறது. மீதி இருபத்து மூவாயிரம் கார்டுகள் எங்கே?"

என்று ஒரு அதிர்ச்சியும் பரபரப்பும் நிறைந்த கேள்வியைத் தோழர் ஜார்ஜ் கேட்டிருக்கிறார்.

இதுபோன்ற செய்திகளைக் கொட்டை எழுத்தில் வெளியிடத்தான் சில ஏடுகள் துடித்துக் கிடக்கின்றனவே!

செய்தியைப் பார்த்ததும் நானே திகைத்துப் போய் இலாக்காவிலும், அதிகாரிகளிடமும் விசாரித்தேன். சின்னாளப்பட்டியில் உள்ள நெசவாளர்களுக்கு (6908) ஆறாயிரத்துத்தொள்ளாயிரத்து எட்டு நூல் கார்டுகளே வழங்கப்பட்டிருக்கின்றன என்றும் மத்திய மந்திரி பேசியதாகப் பத்திரிகைகளில் வந்த செய்தி தவறு என்றும் தெரிய வந்தது.

என்ன செய்வது; தவறுக்கு வருந்தித் திருத்திக் கொள்ளும் மனப்பான்மை எல்லா மனிதர்களுக்கும் சுலபத்தில் ஏற்பட்டு விடுவதில்லை. சின்னாளப்பட்டி மட்டுமல்ல; திண்டுக்கல் தாலுக்காவிலேயே பனிரெண்டாயிரம் கார்டுகள் மட்டுமே தரப்பட்டிருக்கும்போது, சின்னாளப்பட்டிக்கு முப்பதாயிரம் நூல் கார்டு கொடுத்திருப்பதாக ஜார்ஜ், குற்றம் சாட்டியிருப்பது மிகக் கேவலமான அரசியல் பிரச்சாரம் என்றுதான் கூறவேண்டும்.

இந்தியாவை வைஸ்ராய்கள் ஆளுவார்கள், மாகாணங்களை கவர்னர்கள் ஆளுவார்கள். இந்தியா பற்றிய விபரங்களை ஒழுங்காக அறிந்துகொண்டுதான் லண்டனில் இருந்த ஜார்ஜ் மன்னர்கள் பேசுவார்கள். ஆனால் இந்த ஜார்ஜ் டெல்லியில் இருந்து கொண்டு விபரம் புரியாமல் விஷமப் பிரச்சாரம் செய்கிறார். பெயர்தான் பெரியபெயர்!

தேர்தல் முடியும் வரையில் இப்படிப்பட்ட திடுக்கிடும் பிரச்சாரங்கள் நிறைய நடைபெறும். திடசித்தம் கொண்ட தீரனே! தி. மு. கழக வீரனே! உன் பயணத்தை இந்த நெருஞ்சில் முட்களுக்காக நிறுத்தத் தேவையில்லை. காலில் குத்தும். எடுத்து மற்றவர் காலில் குத்தாமல் தொலைவில் எறிந்துவிட்டு; நட வேகமாக! நமக்கே வெற்றி!

அன்புள்ள,

மு. க.

(13-05-1973)

55. "அரிதாரம் கலையும்!"

உடன் பிறப்பே,

திண்டுக்கல் முடிவுக்குப் பிறகு தி. மு. க. அரசு பதவியில் இருப்பது நியாயமில்லையாம். தி. மு. க. அமைச்சர்களைப் பதவியி லிருந்து விலக்கி உடனடியாகத் தமிழ்நாட்டில் பொதுத் தேர்தல் நடத்த மத்திய அரசு முன்வரவேண்டுமாம். திரு. எம். ஜி. ஆர். இப்படி ஆணையிடுகிறார். அவரது பக்கத்திலிருந்து திரு. கல்யாண சுந்தரமும் அதற்கேற்ப முழக்கம் செய்கிறார்.

இந்தச் செய்தி வருகிற ஏடுகளிலேயே இன்னொரு செய்தியும் வருகிறது. பாகிஸ்தான் ராணுவத்தின் வெறிக் கொடுமைகளுக்கு ஆளாகி, மரண முகப்பிலிருந்து தப்பி, பங்களாதேஷ் எனும் தனிநாடு கண்ட மாவீரன் முஜிபுர் ரகுமான், அண்மையில் நடந்த பொதுத் தேர்தலில் மிகப் பெரிய வெற்றியினை ஈட்டிய செய்தி நாடறியும். அடிமை விலங்கொடிக்க அந்தச் சிங்கம் கர்ச்சித்ததை உலகறியும். அவனைச் சிறையிலே பூட்டிவிட்டு, அவன் உடலைப் புதைக்க சிறைக்கு அருகிலேயே குழிகூட வெட்டப்பட்டுத் தயாராகிவிட்டது. அதன்பிறகு அவன் தாயகம் விடுதலைபெற்றது. அவனும் விடுதலை பெற்றான். வங்கதேசம் அவனை மலர்தூவி வரவேற்றது. அவன் கைகளை மக்கள் முத்தமிட்டனர். மங்கையர் அவனுக்கு வாழ்த்துக் கூறினர். அவன் சிறந்த சினிமா நடிகன் என்பதற்காக அல்ல! காதல் காட்சிகளில் அவனைப் போல் நடிக்க யாரும் இல்லை என்பதற்காக அல்ல! வேறு எதற்காக? வங்க மண்ணுக்குரியவன் அவன். அந்த மண்ணை வாழ்விக்க தியாகங்கள் செய்த தீரன் அவன். அவனுக்கு பங்களாதேஷ், வெற்றி மாலை சூடியது. நாட்டின் பிரதமராக்கியது. பொதுத் தேர்தலில் மகத்தான வெற்றிகண்டான். அந்த வெற்றிக்குப் பிறகு;

இரண்டு நாட்களுக்குமுன் இரண்டு தொகுதிகளில் நடைபெற்ற இடைத் தேர்தல்களில் ஆம்; நாடாளுமன்ற தொகுதிகளில் முஜிபுர் ரகுமானின் தேசீய அவாமிலீக் கட்சி தோல்வியடைந்துவிட்டதாகச் செய்தி வந்துள்ளது.

ஏதோ சில சூழ்நிலைகளில் தியாகம், உழைப்பு, உண்மை ஆகியவை மதிப்பற்றுப்போய் விடுகின்றன. அதற்கு முஜிபுர் கட்சியின் தோல்வி ஒரு உதாரணம்.

சில வாரங்களுக்கு முன்பு இந்தியாவில் பங்கா நாடாளுமன்றத் தொகுதியில் இந்திரா காங்கிரஸ் திரு. மதுலிமாயிடம் டெபாசிட் இழந்து தோற்றது.

ஒரு திங்களுக்கு முன்பு கேரளத்தில் ஆளுங்கட்சி சார்புடைய வேட்பாளர்கள் இரண்டு தொகுதிகளில் தோல்வியுற்றனர். கேரள முதல்வர் அச்சுதமேனன், வலதுகம்யூனிஸ்டுக்கட்சிக்காரர், இங்குள்ள கல்யாணசுந்தரங்கள் கேரள மந்திரிசபை ராஜினாமாச் செய்ய வேண்டுமென்று பேசவில்லை.

பங்கா தொகுதியில் டெபாசிட் இழந்த இந்திரா காங்கிரஸ் கட்சி மத்திய மந்திரி சபையிலிருந்து விலகிட வேண்டுமென்று வலது கம்யூனிஸ்டுகள் வாய் திறக்கவில்லை.

வாய் திறந்தால் டெல்லியில் வால் அறுந்து விடுமே; அந்தப் பயம் அவர்களுக்கு!

அதுமட்டுமல்ல; திண்டுக்கல் தொகுதியில் இந்திரா காங்கிரஸ் டெபாசிட் இழந்திருக்கிறது; அது பற்றி விமர்சித்து உடனடியாக மத்திய அரசாங்கம் மாற வேண்டுமென்று குரல் கொடுக்க திரு. கல்யாணசுந்தரம் தயாராக இல்லை. திரு. எம். ஜி. ஆர். அப்படிக் கூறி டெல்லியைப் பகைத்துக்கொள்ள விரும்பவில்லை. பாவம்; அவருக்கு அங்கு எவ்வளவோ தொல்லை. நமது அரசு மட்டும் உடனே பதவி விலகி மீண்டும் ஒரு பொதுத் தேர்தல் நடத்த வேண்டுமாம்.

என்ன செய்வது; ஏ, தாழ்ந்த தமிழகமே! **"ஏமாந்த காலத்தில் ஏற்றங்கொண்டோன்; புலிவேஷம் போடுகின்றான்"** என்ற பாரதிதாசனின் கவிதைதான் நினைவுக்கு வருகிறது.

"தமிழை இகழ்ந்தவனை என் தாய் தடுத்தாலும் விடேன்" என்ற தமிழ் வேங்கையே! இன்று தமிழ்ச் சமுதாயமே இகழப்படுகிறது; தலைகனத்தவர்களால்! பரவாயில்லை; அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டிரு! அரிதாரம் கலையும்! அரசியல் நிலைமை புரியும்!

அனபுள்ள,

மு. க.

(23-05-1973)

56. சிந்தனைக்கு!

உடன்பிறப்பே,

தமிழ்நாட்டு மக்களின் மறதியைப் பயன்படுத்திக் கொண்டு யார் வேண்டுமானாலும் எது வேண்டுமானாலும் சொல்லலாம் என்ற நிலைமை இப்போது அரசியலில் ஏற்பட்டு விட்டது.

அரசியல்வாதிகள், தங்களுக்கு நினைவிருக்கும் நிகழ்ச்சிகளை மறைத்துவிட்டுப் பொது மக்களிடம் காரசாரமாகக் கருத்துக்களைச் சொல்லிக் "கரகோஷம்" பெறவேண்டுமென்று துடியாய்த் துடிக்கிறார்கள்.

சட்டசபை சுதந்திரக் கட்சித் தலைவர் அவர்கள் திண்டுக்கல் தேர்தல்பற்றிக் கருத்தறிவிக்கக் கடமைப்பட்டவர். அந்தக் கருத்து எதிர்பார்க்கப்படுகிற கருத்துக்களில் ஒன்றாகும் என்பதிலும் ஐயமில்லை.

அவருக்கு மட்டுமல்ல, அவரைப் போன்ற அரசியல்வாதிகள் சிலருக்கும் இன்றுள்ள அரசியல் எங்கே போய்க் கொண்டிருக்கிறது என்று புரியும் என்பது எனக்குத் தெரியும்.

மத்தியில் உள்ள ஒரு அரசு, ஒரே ஒரு மாநிலத்தில் மட்டும் எதிர்க்கட்சி அரசு இருப்பதா என்று ஏக்கமுற்று; அதுவும் நிலையான அரசாக இருப்பதா என்று எரிச்சல் கொண்டு - அதனைச் சிதைக்க துரோகிகள் கிடைக்க மாட்டார்களா எனத் தேடிக் கண்டுபிடித்து அப்படியொரு கவர்ச்சிகரமான கருவி கிடைத்ததும் அதனை வைத்துக் கொண்டு தமிழ்நாட்டில் விபரீத விளையாட்டு நடத்திப் பார்க்கிறது என்பதும் அவர்களுக்குத் தெளிவாக விளங்கும்.

அந்தச் சலசலப்பில் தி. மு. க. பிளவுபடும், அதன் காரணமாக இங்குள்ள பழைய காங்கிரஸ், சுதந்திரா போன்ற கட்சிகள் பலம்பெறக்கூடும் என்ற நம்பிக்கையில் அந்தக் கட்சிகளின் அணியினர் இந்தப் பிரச்சினையைப் பெரிதுபடுத்தியதுகூட அவர்களைப் பொறுத்து சரியானதேயாகும். ஆனால், இன்றுள்ள

நிலையில் பழைய காங்கிரஸ், சுதந்திராக் கட்சி கூட்டும் தோற்றுப் போயிருக்கிறது. ஆயினும் அவர்கள் கோபம் தி. மு. க. மீதுதான் இருக்கிறது.

அரசியல் பாரம்பரியம், கொள்கை, தியாகம், இவைகளைக் கொண்ட கட்சிகளுக்கிடையே வெற்றி தோல்விகள் மாறி வருவதை ஆரோக்யமான ஜனநாயகத்திற்கு அறிகுறிகள் என்றே ஏற்றுக் கொள்ள வேண்டும். அதற்கு மாறாக, நாட்டின் கலாச்சாரத்திற்கு அவமானம் ஏற்படுத்தும் வகையில் விளைந்து விடுகிற முடிவுகளை கட்சி வேறுபாடின்றிச் சமுதாயப் பொதுக் கண்ணோட்டத்தோடு நோக்கிட வேண்டும். அப்படி நோக்க விரும்பாமல், சுதந்திரக் கட்சி நண்பர் ஹண்டே அவர்கள், கருணாநிதி மந்திரிசபை ராஜினாமா செய்ய வேண்டும் என்று ஒரேயடியாக அறிவித்து விட்டார்.

அவருக்கு நினைவிருக்கக் கூடியதும், உனக்கு மறந்து விட்டிருக்கக் கூடியதுமான ஒரு அரசியல் செய்தியை எடுத்துக் காட்ட விரும்புகிறேன்.

1952-ஆம் ஆண்டு நடந்த பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி, பெரும்பான்மை இழந்தது.

ஐக்கிய முன்னணிக் கட்சி 166 பேர்களைக் கொண்டு அமைக்கப் பட்டது. காங்கிரஸ் கட்சிக்கு 152 பேர்கள். இதுதான் சட்டசபையில் கட்சிகளின் பலம். ஆனால், மந்திரி சபை அமைக்குமாறு கவர்னர், காங்கிரசைக் கேட்டுக் கொண்டார். ராஜாஜி தலைமையில் காங்கிரஸ் அரசு அமைந்தது. அதன் பிறகு அருப்புக்கோட்டையில் ஒரு இடைத்தேர்தல், ஆம்; நாடாளுமன்றத் தேர்தல்.

அந்தத் தேர்தலில் தன்மீது நம்பிக்கையிருக்கிறதா என்று பார்க்கப் போகிறேன் என்று முதல்வர் ராஜாஜி அறைகூவல் விடுத்தார். காங்கிரஸ் தோற்றது. ராஜாஜி ராஜினாமா செய்ய வேண்டுமென்று சட்டசபையில் கோரப்பட்டது. அவர், தன்மீது ஒரு நம்பிக்கைத் தீர்மானம் கொண்டு வந்து அதனை நிறைவேற்றினாரே தவிர, ராஜினாமா செய்யவில்லை.

மிகக் குறுகிய பெரும்பான்மை பலம் மட்டுமே இருந்த போதுகூட ராஜாஜி அவர்கள், இடைத்தேர்தல்களின் முடிவுகள் அரசாங்கத்தைப் பாதிக்காது என்றே கூறினார். நண்பர் ஹண்டே

அதை மறந்திருக்க மாட்டார். மக்கள் மறந்திருப்பார்கள் என்ற ஒரு நம்பிக்கை, அவருக்கு!

கம்யூனிஸ்ட் கட்சிகள் ஆபத்தானவை என்று எச்சரிக்கப் பட்டபோதும், இந்திரா காங்கிரசார் சமயம் பார்த்து நன்றி மறப்பார்கள் என்று கூறிய போதும், நாம் அவைகளை அலட்சியப் படுத்தியிருக்கக்கூடும். நாம், சோசலிசக் கொள்கையில் உள்ள பற்றின் காரணமாக கம்யூனிஸ்டுக் கட்சிகளிடம் ஏமாந்து போனது உண்மைதான்!

அது மட்டுமா; நம் மார்பின் மீது பாய்வதற்கே நாம் சில கடாக்களை வளர்த்து விட்டோம். அந்தப் பயனையும் இப்போது அனுபவிக்கிறோம்.

ஆனால், இன்று நாம் ஒரு முடிவுக்கு வந்துவிட வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

அரசியல் கட்சிகளுக்கிடையே எவ்வளவு வேறுபாடு இருந்தாலும் தீண்டாமை ஒழிப்பு எப்படிப் பொதுவான பிரச்சினையோ; அது போலத் தமிழ்நாட்டு அரசியலில் உடனடியாகக் களைந்தெறியப்பட வேண்டிய பிரச்சினை எது என்பதை உணர்ந்தாக வேண்டும்.

தேர்தல் வெற்றி தோல்விகளை மனதில் வைத்து இந்தக் கருத்தை நான் தெரிவிக்கவில்லை. தமிழ்நாட்டின் அமைதியும் பண்பாடும், கலாச்சாரமும் காப்பாற்றப்பட வேண்டுமென்ற ஒரே ஆசையில் தான் இதனைச் சொல்கிறேன்.

தமிழகத்தில் யார் ஆட்சிக்கு வருவது என்று கட்சிகளுக்குள்ளே சண்டை போட்டுக் கொள்ளலாம். ஆனால், அதற்கிடையே அரசியல் என்பதற்கு என்னதான் இலக்கணம் என்பதை நாட்டுக்கு உணர்த்த வேண்டாமா?

இதனை நம்மீது ஆத்திரமுள்ள அரசியல் தலைவர்கள் சிந்திக்க மறுத்தாலும்; நீயாவது சிந்திக்கத் தவறாதே!

அன்புள்ள,

மு. க.

(24-05-1973)

57. "பிறந்த நாள் வேண்டுகோள்!"

உடன் பிறப்பே,

ஒவ்வொரு ஆண்டும் எல்லோருக்கும் பிறந்த நாள் வருகிறது. அதுபோல் எனக்கும் பிறந்தநாள் வருகிறது. பணிபுரியும் வாய்ப்பைப் பெற்ற ஒரு இடத்தில் நான் இருப்பதால் இந்தப் பிறந்த நாட்களை, சமுதாயத்தில் ஒரு பகுதியினர் பயன் பெறத் தக்க அளவில் கொண்டாட வேண்டுமென்று நான் விரும்புகிறேன். அவ்வாறே 48-வது பிறந்தநாளில் தொழுநோய்ப் பிச்சைக்காரர்கட்கு மறுவாழ்வு அளிக்கும் திட்டத்தைத் தொடங்கினேன்.

அந்த மனித தெய்வங்களுக்காகக் கட்டப்பட்டுள்ள மறுவாழ்வு இல்லங்களைக் காணும் போதெல்லாம் களிப்பு மேலிடுகிறது. அந்த இல்லங்களில் வாழ்கின்ற தொழுநோயாளிகளின் இதய வாழ்த்துக்கள் இந்தப் பிறந்த நாளின் போது என் நெஞ்சுக்கு எவ்வளவு சுகமளிக்கிறது தெரியுமா?

49-வது பிறந்த நாளில் கண்ணொளி வழங்கும் திட்டம் தொடங்கப்பெற்றது. லட்சக்கணக்கான கிராமப்புறத்து ஏழை எளிய மக்களுக்கு இலவசக் கண் சிகிச்சை - இலவச அறுவை சிகிச்சை - இலவச மூக்குக் கண்ணாடிகள் - அந்தக் கள்ளங் கபடமற்ற தாய் உள்ளங்களும், தந்தை உள்ளங்களும் பொழிகின்ற வாழ்த்துக்கு ஈடு இணையேது?

என் பிறந்த நாட்கள் மட்டுமல்ல; உன்னால் உருவாக்கப்பட்டு என் தலைமையில் இயங்குகின்ற இந்த அரசு, நம் அண்ணனின் வழி நின்று தீட்டியுள்ள திட்டங்கள் அனைத்துமே சமுதாயத்தின் அடித்தளத்தில் கிடந்துழலும் மக்களுக்காகத்தானே!

குடிசைகளில் குமுறிக் கிடந்த மக்கள் அதோ கோபுரம் போன்ற வீடுகளில் குடியேறி கடற்கரை காற்றை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்களே; அதைப் பார்த்து மகிழ்வது அல்லவா உண்மையான சொர்க்கமாக இருக்கிறது. ஆளுகிற பொறுப்பு என்பது

அந்தஸ்து அல்ல; அதிகார பீடம் அல்ல; அன்றாடங்காய்ச்சிகளின் வாழ்வில் ஒளி ஏற்படத் தொண்டு புரிவதற்கு நமக்குக் கிடைத்த ஒரு சாதனம் என்ற நினைவோடுதான் இந்தக் காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறோம். இதுகண்டு "போற்றுபவர் போற்றட்டும்; புழுதிவாரித் தூற்றுபவர் தூற்றட்டும்" என்ற மன உறுதியோடு நமது லட்சியப் பயணம் தொடருகிறது. இந்தப் பொறுப்பு இல்லாமல் எதிர்க்கட்சியாக இருந்தபோதும் நமக்குப் பிறந்த நாள் விழாக்கள் நடந்தன.

அது யார் கண்ணையும் அவ்வளவாகக் குத்தவில்லை. இப்போது சிலபேருடைய கண்ணுக்கு எரிச்சலைத் தருகிறது. காரணம்; தகுதியற்ற நம் தலையில் தமிழ்நாட்டின் மகுடம் இருப்பதாக அவர்களுக்கு ஒரு உணர்வு! அதைவிட, சாமான்ய மக்களின் வாழ்வை மையமாக வைத்துச் சட்டங்களைத் தீட்டுகிறோம். திட்டங்களை வகுக்கிறோம். நாம் அகற்றப்பட்டு விட்டால் மீண்டும் பழைய ஆண்டான் அடிமை நிலையை ஏற்படுத்திவிடலாம். அதனால்தான் கடுகை மலையாக்கிப் பேசுகிறார்கள். அண்ணா சொன்னதுபோல அரைத்த மாவை அரைக்கிறார்கள்-அண்ணா வேதனையோடு சட்டசபையில் குறிப்பிட்டது போலத் தமிழ்நாட்டை ஆள்வதற்கும் வேறு மாநிலத்தவர் வேண்டுமென்கிறார்கள். அவர்களுக்கிடையேதான் நமது பயணம் எச்சரிக்கையாக நடைபெறவேண்டும். புலிகள் பதுங்கியிருக்கும் புதர்களுக்கிடையே கைக் குழந்தையை மார்புற அணைத்துக் கொண்டு நடந்து செல்லும் தாயைப்போல நாம் நமது கழகத்தைப் பாதுகாத்துத் தீரவேண்டும்.

தமிழர் அரசை வலுப்பெறச் செய்யவேண்டும். தாழ்த்தப்பட்ட, பின்தங்கிய, நடுத்தர மக்களின் நல்வாழ்வுக்காக நம்மை அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும்.

அந்த முயற்சியில் ஒரு கட்டம்தான், இந்த ஆண்டு ஐம்பதாவது பிறந்த நாளில், மனிதனை மனிதன் இழுக்கும் கொடுமையை மாற்றி, கைரிக்ஷா தோழர்களுக்கு சைக்கிள் ரிக்ஷாக்களை இலவசமாக வழங்கும் திட்டமாகும். அதற்கு உன் உதவியும், பொது மக்கள் உதவியும் நிரம்பத் தேவை. பிறந்த நாளன்று என்னைப் பார்ப்பதற்காக ஊரிலிருந்து நீ வருவதற்காக ஆகும் செலவை "ரிக்ஷா நிதி"க்கு அனுப்பி வைத்துவிடு.

மாலைகளுக்குப் பதிலாக நிதி தரவேண்டுகிறேன். எனக்காக வாழ்த்துச் சுவரொட்டிகள் போட்டு ஒட்டுவதை நிறுத்திவிட்டு அந்தப் பணத்தை "ரிக்ஷா நிதி"க்குக் கொடுத்திடக் கோருகிறேன்.

இதையெல்லாம் தயவுசெய்து மனதிலே நிறுத்தி, நான் சொன்னபடி செய்வாய் என்று நம்புகிறேன். என்னை வாழ்த்திட விரும்பும் பேரன்பு கொண்டோர்க்கும் பெற்ற தாய்மார்க்கும் நல் இளஞ்சிங்கங்களுக்கும் இதனையே விளக்கிச் சொல்லி, என் வேண்டுகோளை நிறைவேற்று.

அன்புள்ள,

மு. க.

(28-05-1973)

58. "நடக்கின்ற ஆச்சரியம்!"

உடன்பிறப்பே,

சிற்றூரும் வரப்பெடுத்த வயலும்
ஆறு தேக்கிய நல் வாய்க்காலும்
நெற்சேர உழுதுழுது பயன் விளைக்கும்
நிறையுழைப்புத் தோள்களுக்காகக்

கண்ணீர் விட்டுக் கண் கலங்கினான் ரஷ்ய நாட்டு ரஸ்புடீன் என்று நீ கேள்விப்பட்டிருக்கிறாயா?

கற் பிளந்து மலை பிளந்து
கருவியெலாம் செய்து தந்த
கைகளை

எடுத்து முத்தமிட்டு மோதிரம் அணிவித்தான் ஜார் அரசன் என்று கதையாவது படித்திருக்கிறாயா?

சித்திரச் சோலைகளை நன்கு திருத்த
இந்தப் பாரினிலே ரத்தம் சொரிந்தவர்களை

வாழ்த்திப் பாராட்டிய வண்ணக் கவிதைகளைத் தீட்டச் செய்து, அந்தக் கவிஞர்களுக்கும், பாட்டுடைத் தலைவர்களாம் அந்தப் பாட்டாளி மக்களுக்கும் பரிசில் பல வழங்கினான் லூயி மன்னன் என்று பாரிஸ் நாட்டில் கல்வெட்டு ஏதாவது காணப்படுவதாக உனக்கு யாராவது கூறியிருக்கிறார்களா?

உலைக்களத்தில் வியர்வை கொட்டி அனலிற் புழுவெனத் துடிக்கும் தொழிலாளியின் உடலை அணைத்து உச்சி மோந்த முதலாளிகளை நீ கண்டதுண்டா?

"காண்பதெல்லாம் தொழிலாளி செய்தான், அவன் காணத்தகுந்தது வறுமையும்-பூணத் தகுந்தது பொறுமையுமா?" என்று காதிலே வைரக் குண்டலமும், கைவிரல்களிலே வைடூரியக்

கணையாழிகளும், ஒளிவிடும் கனதனவான் கனக மணிக்கட்டிலில் இருந்தவாறு கதறியழுத காட்சியை எந்தத் திரைப்படத்திலாவது நீ காண நேரிட்டதுண்டா?

"உன் உழைப்பன்றோ, இந்த நாடு. உன் மூச்சன்றோ இந்தச் சமுதாயம் - ஊரை வாழவைக்கும் உத்தமத் தோழனே! உனக்குத் தானே உலகமே சொந்தம்!"

என்று பற்றற்றப் பதிகம் பாடும் பண்டார சன்னதிகள் திருவாய் மலர்ந்தருளியதாக உன்னிடம் யாராவது தெரிவித்ததுண்டா?

உடன் பிறப்பே, என் கேள்விகள் உன்னைத் திகைக்க வைக்கின்றன அல்லவா?

உழைப்போரை, உருக்குலையப் பாடுபடுவோரை, பாட்டாளியை, தொழிலாளியை, தொண்டு புரிவோரை, ஜாரும் - ரஸ்புடீனும் - லூயி மன்னனும் - சந்நிதானங்களும் - சப்ரகூட மஞ்சத்து சுகவாசிகளும் - எப்படியப்பா பாராட்டியிருக்க முடியும்?

ஆச்சரியமாயிருக்கிறதே! ஆட்டுக்குட்டியைக் கொல்வதற்காக இச்சகம் பேசியது ஓநாய் என்றுதான் பாலர் பாடத்தில் சிறுகதை படித்திருக்கிறேன் - ரஸ்புடீனாவது, ஜாராவது, உழைக்கும் வர்க்கத்தைப் புகழ்வதாவது என்று நீ என்னைப் பார்த்து வியப்புடன் கேட்பாய் என்று எனக்குத் தெரியும்.

ஆனால், இந்த விசித்திரமான தமிழ் நாட்டில் அதுவும் நடந்திருக்கிறது.

தி. மு. கழகக் கிளையா, அல்லது தன் பெயரால் உள்ள ரசிகர் மன்றக் கிளையா-எதற்கு முதலிடம் என்று கேட்டு, ரசிகர் மன்றத்திற்கே முதல் இடம் வழங்கிவந்த ஒருவர், திடீரென்று தி. மு. கழகத்தின் தொண்டர்களுக்காகக் கண்ணீர் வடித்திருக்கிறார். இந்த ஆச்சரியம் நடக்கும்போது நான் சொன்ன ஆச்சரியங்கள் ஏன் நடந்திருக்கக் கூடாது?

தொண்டர்களுக்கும் அவருக்கும் உள்ள தொடர்பைப் பிறகு எழுதுகிறேன்.

அன்புள்ள,

மு. க.

(29-05-1973)

59. இதுதான் உலகம்!

உடன் பிறப்பே,

பெரும்பான்மையான அரசியல் இயக்கங்களில் தொண்டர் கள்தான் தலைவர்களாக வருகிறார்கள். கழகத்தை உருவாக்கிய நமது அண்ணன், சென்னை நகரத்துச் சுவர்களில் நீதிக் கட்சியின் விளம்பரச் சுவரொட்டிகளைத் தனது இளமைப் பருவத்தில் பசைதடவி ஒட்டுவார் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். கழகத்தைத் தொடங்கிய பிறகும் எத்தனையோ மாநாடுகளில் முதல் இரண்டு நாட்களுக்கு முன்பு அவரே வந்து உட்கார்ந்து கொண்டு எங்களையும் சேர்த்துக்கொண்டு, கொட்டகையைச் சரிபார்ப்பதிலிருந்து கொடிமரம் நடுவதற்குக் குழிதோண்டுகிற வரையிலே உள்ள பணிகளை ஒரு தொண்டரைப் போலவே நிறைவேற்றுவார்.

அவரது நிழலில் வளர்ந்த நானாகட்டும் அல்லது மற்ற தலைவர்களாகட்டும். இந்தக் கழகத்தின் தொடக்கத்திற்கு முன்பே நீதிக் கட்சி காலத்திலேயே தெருத் தெருவாக அலைந்து திரிந்து திராவிட இன உணர்ச்சியைப் பரப்பிய இயக்கத்தின் ஊழியர்கள்தான்.

இந்தி எதிர்ப்பு இயக்கம் 1938-ஆம் ஆண்டு தமிழகத்தில் வீறு கொண்டு எழுந்தபோது திருவாரூர் வீதிகளில் இந்தி எதிர்ப்புத் துண்டு வெளியீடுகளைப் பொது மக்களிடம் விநியோகித் தவன்தான் நான்!

நமது பொதுச் செயலாளர் நாவலர், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்து மண்டபத்து உச்சியில் திராவிடர் கழகக் கொடியைக் கட்டுவதற்காக நள்ளிரவில் அந்த உயர்ந்த மண்டபத்தில் ஏறியவர்தான்! கூட்டங்கள் போட்டு மேடைகள் அமைத்து ஒலி பெருக்கி மூலமாக ஊரெல்லாம் அலைந்து திரிந்து விளம்பரம் செய்து மக்களைத் திரட்டி, இயக்கத் தலைவர்களின்

பிரச்சாரம் பரவிடப் பணியாற்றிய சாதாரணத் தொண்டனாகத்தான் என் பொது வாழ்வை ஆரம்பித்தேன்.

என்ன தான் குடும்பப்பெருமை செல்வாக்கு இருந்தாலும் தொண்டுள்ளம் படைத்தவர்கள்தான் உயர முடியும் என்பதற்குப் பெரியார் அவர்கள் மறுக்க முடியாத எடுத்துக் காட்டாகும். குடியரசு அலுவலகத்தில் அச்சாகும் ஏடுகளைத் தபாலில் அனுப்புவதற்கு அஞ்சல் தலை ஒட்டுகிற வேலையிலேயிருந்து, விற்பனையாளர் களுக்கு அனுப்புகிற பத்திரிகைகளைக் கட்டுக்கட்டாகச் செய்வதிலேயிருந்து பெரியாரும் உடனிருந்து உழைத்திடுகிற காட்சியை அவருடன் இருந்தே கண்டு மகிழ்ந்தவன் நான்.

தொண்டுள்ளம் கொண்டவர்கள், தொண்டர்களை மதிப்ப வர்கள் தான் அந்த இயக்கத்தில் பொறுப்புமிக்க நிர்வாகிகளாக வர முடிகிறது-தலைவர்களாக வரமுடிகிறது என்பதற்கு மாற்றான் தோட்டத்து மல்லிகையாகக் காமராஜர் இருப்பதும் ஒரு சரியான உதாரணமல்லவா?

ஒரு இயக்கத்தின் உண்மையான தொண்டர்கள் யார்? பளபளப்பு-ஜிலுஜிலுப்பு-இவைகளைக் கண்டு பல் இளிப்ப வர்களா! அல்லது கொள்கைக் குன்றங்களாகத் திகழ்பவர்களா? இந்தக் கேள்விக்குப் பதில் தேடினால், ரசிகர்கள்-தொண்டர்கள் என்பதற்கான உண்மைப் பொருளை உணர முடியும்.

தொண்டர்களோடு தொண்டர்களாய் இருந்தவர்கள், தலைவர் களாக ஆனபிறகு அந்தப் பொறுப்பில் அதிக கவனம் செலுத்திட முனையும்போது முழு நேரமும் தொண்டர்கள் மத்தியில் இருக்க முடிவதில்லை.

அசோக் குமார் படத் தயாரிப்பு நடக்கும்போது, துணை நடிகர் கூட்டத்தோடு குலவிக் கொண்டிருந்தவர், அலிபாபா படப்பிடிப்பின்போது தனக்குள்ள கடமையின் காரணமாக துணை நடிகர்களுடன் முழு நேரமும் இருக்க இயலாத நிலை ஏற்பட்டு விடுவதுபோல்; தலைவர்களுக்கும் ஏற்படுவதுண்டு.

ஆனால் நமது கழகத்தின் இன்றைய தலைவர்கள் யாரும் தொண்டர்களைப் புறக்கணித்தது இல்லை. ஏனெனில் நமது தொண்டர்கள் யாரும் ரசிகப் பெருமக்கள் அல்ல! ரசிக்க வேண்டியதை நினைப்பார்கள். செய்து முடிக்க வேண்டிய கழகப்பணிகளை செய்து முடிப்பார்கள்.

உடன் பிறப்பே,

“கிரெம்ளின் மாளிகையில் இருந்தாலும் என்னுடைய நினை வெல்லாம் சைபீரியாவில் வாழும் ஏழை மக்களைப் பற்றித்தான் சுழலுகிறது” என்றான் மாவீரன் லெனின்!

நான் லெனின் அருகாமையில் கூடப் போக முடியாது; உனக்குத் தெரியும்; செயின்ட்ஜார்ஜ் கோட்டையில் இருந்தாலும் எங்கள் நினைவெல்லாம் சேரிவாழ்மக்களை வாழ வைப்பதில்தான் என்பது!

ஆயினும் நாங்கள், ஏழைகளை நினைக்கவில்லை; கழகத்தை வளர்த்தத் தொண்டர்களைக் கவனிக்கவில்லை, தொண்டர்களால் உருவான நாங்கள், தொண்டர்களை அலட்சியப்படுத்திவிட்டோம் என்று திரு. எம். ஜி. ஆர். அவர்கள் தொடர்ந்து பேசிவருகிறார். அறிக்கைகளை விடுகிறார். நமது கட்சியில் உள்ள தொண்டர்களை மட்டுமல்ல; மாற்றுக் கட்சியில் உள்ள தொண்டுள்ளங்கொண்டவர் களையும் மதிப்பவர்கள் நாம் என்பதை ஏழாயிரத்துக்கு மேற்பட்ட விடுதலை வீரர்களுக்கு மாதந்தோறும் மானியம் வழங்குவதி லிருந்து, நாடே புரிந்துகொண்டிருக்கிறது. காங்கிரஸ் ஆட்சியில் கவனிக்கப்படாமல் போய்விட்ட எத்தனையோ தியாகச் சுடர்களுக்கு நினைவுச் சின்னங்கள் இந்த ஆட்சியில்தான் எழுப்பப்பட்டுள்ளன. 1965 இந்தி எதிர்ப்புப் போரில் உயிர்நீத்த தியாகிகளின் ஐம்பதுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு சில மாதங்களுக்கு முன்பு நமது ஆட்சியில் தான் குடும்பத்திற்கு இரண்டாயிர ரூபாய்வீதம் உதவித் தொகை வழங்கப் பெற்றது.

இன்னும் இந்தி எதிர்ப்பில் சிறை சென்றவர்கள், தமிழக எல்லைமீட்கும் அறப்போரில் ஈடுபட்டுச் சிறை சென்றவர்கள், குமரி மாவட்டம் தாய்த் தமிழகத்தோடு சேரப் போராட்டம் நடத்திச் சிறை புகுந்தோர் அனைவருக்கும் உதவியளிக்கும் திட்டம் பரிசீலனையில் இருக்கிறது.

தில்லையாடி வள்ளியம்மைக்கு நகரமும் சிதம்பரனார் இழுத்த செக்குக்குச் சிறப்பும், பாரதி இல்லம் வரலாற்றுச் சின்னமானதும் இந்த இரண்டு ஆண்டுக் காலத்திலேதான் என்பதை நீ மறந்திருக்க மாட்டாய்!

இப்படித் தொண்டுள்ளங்களைத் தொழுதிடப் பழகியுள்ள நான் தொண்டர்களை மதிப்பதில்லையென்று திரு எம். ஜி. ஆர். எவ்வளவு வாய் கூசாமல் கூறிவிட்டார் பார்த்தாயா?

அவருக்கு அவருடைய அன்புக்குரிய நண்பரைவிட்டே பதில் தர விரும்புகிறேன். தோழர் ஆர். எம். வீரப்பனைத் தெரியுமல்லவா உனக்கு? இன்று அவர் பெரிய படத் தயாரிப்பாளர். உழைத்து முன்னேறியவர். இப்பொழுது எம். ஜி. ஆர். அவர்களுடன் இருந்து மேடைகளில் என்னை எதிர்த்துக் கணைகளைப் பொழிகிறார்.

செஞ்சோற்றுக் கடன் கழிக்கும் கர்ணனைப் போன்றவர்களை நான் மதிப்பவன். எனக்குத் துரோகம் செய்த விபீஷணர்களைவிட அவரைப் போன்ற விசுவாசமுள்ள நண்பர்கள் எந்தப் பக்க மிருந்தாலும் நான் அவர்களைப் பாராட்டவே செய்வேன்.

கழகத்தைவிட்டு எம். ஜி. ஆர். வெளியேற்றப்படுவது 1972 அக்டோபர் மாதத்தில், திரு. வீரப்பன் எனக்கு ஒரு கடிதம் எழுதுகிறார் 1972 ஏப்ரல் 22ஆம் நாளன்று!

அதாவது அதற்கு ஆறு மாதங்களுக்கு முன்பு! அந்தக் கடிதத்தின் சில பகுதிகளை மட்டும் தருகிறேன் படித்துப் பார்.

“பெருமை மிகு முதல்வர் கலைஞர் அவர்கட்கு, வணக்கம்.

தங்களுக்குள்ள ஓய்வில்லா உழைப்பினை எண்ணி இக் கடிதம் மூலமாகவாவது தங்களின் பேருள்ளத்தை, கழகத்தின் நீண்டகாலத் தொண்டர்களை மதிக்கும் பெருமைமிக்க செயலை வாழ்த்தி ஒரு கழகத் தொண்டன் என்ற முறையில் என் நன்றி உணர்வை வெளிப்படுத்துவது என் கடமையெனக் கருதுகிறேன்...

தோழர் ராமசுப்பையா அவர்களோடு சுமார் இருபத்தொன்பது ஆண்டுகளுக்கு முன்பாக இணைந்து காரைக்குடியில் திராவிடர் கழகப் பணியை ஆற்றியவன் என்ற முறையில்... அந்த உத்தமத் தொண்டருக்குக் கிடைக்க வேண்டிய சிறப்பு கிடைக்கவில்லையே என்று வருத்தப்பட்டுக் கொண்டிருந்தேன். காலத்திற்காகக் காத்தி ருந்ததைப் போலத் தாங்கள் தக்க சமயத்தில் தக்கமுறையில் கழகத் தொண்டர்கள் மதிக்கப்படுவார்கள் என்பதைக் காட்டிய பாங்கு கழகத் தொண்டர்களை எல்லாம் பெருமகிழ்வில் ஆழ்த்துகிறது.

பேரறிஞர் அண்ணாவின் பிரதிபலிப்பாக எங்கள் தலைவர் விளங்குகிறார் என்று கழகத் தோழன் எதிரிகளிடையே மார்தட்டிப் பேசுவது வெறும் பேச்சல்ல. உயிரோட்டமுள்ள உண்மை.

அன்புள்ள,

வீரப்பன்.”

உடன் பிறப்பே! திரு. ராமசுப்பையா அவர்களை மேலவை உறுப்பினராக நியமித்தபோது, ஆர். எம். வீரப்பன் எழுதிய கடிதம் இது! தொண்டர்களை நான் மதிப்பவன் என்பது ஏழெட்டு மாதங்களுக்கு முன்பு எம். ஜி. ஆர். வட்டாரத்தில் உயிரோட்டமுள்ள உண்மையாக இருந்தது! இன்றைக்குப் பார்த்தாயா? உண்மை ஊமையாகி விட்டது! பொய் ஊர் சுற்றக் கிளம்பிவிட்டது! இது தானப்பா உலகம்.

அன்புள்ள,

மு. க.

(30-05-1973)

60. "கண்ணீர் மடல்!"

உடன் பிறப்பே,

31.5.73 இரவு மணி 11-30. தொலைபேசி மணி அடித்தது. என்ன செய்தியோ தெரியவில்லையே என்று கூறிக் கொண்டே எடுத்தேன். மாறனின் குரல், முரசொலி அலுவலகத்திலிருந்து!

டில்லி சென்ற சென்னை விமானம் விபத்துக்குள்ளாகிவிட்டது என்று தழுதழுத்த குரலில் மாறன் கூறியதும் எனக்குத் தலை சுழன்றது. "அய்யோ! அதில் யார் யார் சென்றார்கள்?" என்று கேட்டுத் துடித்தேன். "எந்த விபரமும் தெரியவில்லை. மோகன் குமாரமங்கலம் அதில் போனதாகச் சொல்கிறார்கள். பாலதண்டாயுதம் இருந்தாராம்; குருணாம்சிங்கும் பயணம் செய்தாராம்; எதுவும் உறுதியாகத் தெரியவில்லை. பிறகு விபரமறிந்து கூறுகிறேன்" என்றவாறு மாறன் தொலைபேசியை வைத்தவுடன், இரவு மூன்றரை மணி வரையில் தூங்காமல் துக்கம் நெஞ்சையடைக்க வீட்டுக்குள்ளேயே உலவிக் கொண்டிருந்தேன்.

தொலைபேசியின் எண்களைச் சுழற்றிச் சுழற்றி விரல்களும் வலியெடுத்து விட்டன. பத்திரிகை அலுவலகங்கள், விமான நிலைய அதிகாரிகள், நமது அரசு அதிகாரிகள் - யாராலும் உடனடியாக முடிவான விவரங்கள் தெரிவிக்க முடியவில்லை. அனைவரும் உயிர் தப்பிவிட்டார்கள் என்ற ஆறுதலான செய்தி வரக் கூடாதா என்று ஏங்கித் தவித்தேன். முடிவாக இதயத்தில் ஒன்றன்பின் ஒன்றாக வேல் பாய்ச்சும் செய்திகளாகவே வந்து விட்டன.

"அதோ டெல்லி வந்து விட்டது. கீழே இறங்கப் போகிறோம், விமான நிலையத்துக்கு நண்பர்கள் வரவேற்க வந்திருப்பார்கள், டெல்லியில் உள்ள அலுவல்களைக் காலையிலே தொடங்கிவிட வேண்டும்" என்றெல்லாம் எண்ணிக் கொண்டு, இறங்குவதற்கான ஆயத்தங்களைச் செய்து கொண்டிருக்கும்போதே, இயற்கையின் கோரக்கரங்கள் நாற்பதுக்கு மேற்பட்டவர்களின் மேனியைக்

கருக்கிச் சாவுக் கிடங்கில் தள்ளிவிட்டன என்றால் அதைச் சகித்துக் கொள்ள முடிகிறதா?

எத்தனை திட்டங்கள்! எவ்வளவு கனவுகள்! அவர்கள் ஒவ்வொருவருக்கும் எவ்வளவு பிரச்சினைகள்! அவைகளைத் தீர்க்க எந்த அளவு சிந்தனைகள்!

எல்லாமே ஒரு நொடியில் பொடிப்பொடியாகி அவர்களைப் பொறுத்தவரையில் நிம்மதியின் மடியில் நித்திரைக்குப் போய்விட்டார்கள்.

ஆனால், அவர்களின் அபிப்பிராயங்களுக்காகக் காத்திருந்தவர்கள் - அவர்களது வாழ்வினால் உற்சாகம் கொண்டிருந்தவர்கள் - அவர்களை நம்பியிருந்தவர்கள் - பெற்றோர், உற்றார், மனைவி, மக்கள் - அவர்கள் எல்லாம் இன்றைக்கு இருளில் விடப்பட்ட விழியற்றோர் நிலைக்கல்லவா ஆளாகியிருக்கிறார்கள். எங்கோ ஏற்பட்ட சிறு தவறு. அல்லது யாரோ காட்டிய ஒருக்கண அலட்சியம் - அல்லது இயந்திரத்தில் ஏற்பட்ட எதிர்பாராத கோளாறு நாட்டை, வீட்டை எந்த அளவு கலக்கியிருக்கிறது என்பதை எண்ணினால் கண்ணீர் பெருகிடுகிறது.

கண்மூடித் திறப்பதற்குள் மண் மூடிவிடுகிற வாழ்வு! அதற்குள் எத்தனை போராட்டங்கள்! எத்தனை உணர்ச்சிகள்! எத்தனை விவாதங்கள்! இயற்கையின் முடிவை நினைத்து இவைகளையெல்லாம் மனிதன் நிறுத்திக் கொள்ள முடியாது! அவனவன் கொண்ட கொள்கை, எடுத்த முடிவு - இவைகளுக்காகப் போராடியே தீருவான்.

ஆனால், இதுபோன்ற நிகழ்ச்சிகள் காழ்ப்பு உணர்ச்சிகள், கசப்பு எண்ணங்கள் ஆகியவற்றை மனித சமுதாயத்தில் இனிமேலாவது குறைப்பதற்கு வழிகோலுமா என்று பெருமூச்சுடன் கேட்கத்தான் தோன்றுகிறது.

எவ்வளவு கருத்து மாறுபாடுகள் இருந்தாலும் நேரில் சந்தித்து விட்டால் எவ்வளவு கனிவாகப் பேசக்கூடியவர் மோகன்குமாரமங்கலம்; மூன்று நான்கு மாதங்களுக்கு முன்புகூட அவருக்கும் நமக்கும் பொது மேடைகளில் காரசாரமான விவாதங்கள் நடந்து கொண்டிருந்த சமயத்திலும், திடீரென்று ஒரு நாள் வீட்டுக்கு வந்தார், கலகலவென்று பேசினார்.

என் மேஜை மீது ஒரு சிறிய மரத்தால் ஆன குதிரை இருந்தது. அதைப் பார்த்துவிட்டு "ரொம்ப அழகாயிருக்கே!" என்றார். மறுநாள் அவர் டெல்லி போகும் போது, அதே மாதிரி ஒரு குதிரையை வாங்கி விமான நிலையத்தில் கொண்டுபோய்க் கொடுக்கச் சொன்னேன்.

பிறகு நான் டெல்லி போயிருந்தபோது அவர் இல்லத்தில் நீண்ட நேரம் ஊர்க் கதைகள் எல்லாம் பேசினோம். உரையாடலின் போது அவர் பேசுகிற தமிழே, ஒரு தனி இன்பம்!

அவர் கண்ட சோஷலிசக் கனவுகளை நிறைவேற்றுவதில் மத்திய அரசு எடுத்த முயற்சிகளுக்குச் சிறிதும் குறையாமல் மாநில அரசும் முயற்சிகள் எடுத்தன என்றாலும் எப்படியோ, அவருக்கும் நமக்கும் கருத்து வேறுபாடுகள் அரண்களாக அமைந்து விட்டன. ஆனால் அந்த அரண், நட்பு உணர்வை ஒரு சிறிதும் தடுத்து நிறுத்த முடியவில்லை.

அப்படிப்பட்ட ஒருவரை நாம் இழந்தது பெரியதோர் இழப்பாகும். சேலம், நெய்வேலி திட்டங்களில் அவர் அண்மைக் காலத்தில் காட்டிய ஆர்வம் போற்றத் தகுந்தது. அதற்குள் அவரை இந்த விபத்து விழுங்கியது தாங்க முடியாத அதிர்ச்சியாகும்.

திருச்சி மாநாட்டில் நம்மோடு அமர்ந்து, கழகத் தோழர்களுடன் அளவளாவி மாநிலங்கள் அதிக அதிகாரங்களைப் பெற வேண்டு மென்று முரசு கொட்டினாரே; அந்த தாடிக்காரர்-பஞ்சாப்பின் முதல்வராக இருந்த குருணாம்சிங்-அவரையும் தீர்த்துக் கட்டி விட்டது அந்த 'போயிங் விமானம்'. இரண்டு திங்களுக்கு முன்பு சென்னையில் ஒரு கல்லூரி விழாவில் கலந்து கொள்ள வந்திருந்தார். விழாவில் தான் பேச இருந்த உரையின் பிரதிகளை என்னிடம் காட்டி மகிழ்ந்தார். அதில் தமிழக அரசைப் பற்றிப் பெரிதும் பாராட்டியிருந்தார். நமது கழகத்திற்குத் தொலைவிலே யிருந்து கிடைத்த ஒரு தூய்மையான நண்பர் போய் விட்டார்.

பஞ்சாப் மாநிலத்தில் அவர் முதல்வராயிருந்தபோது, தமிழ் நாட்டின் கழக அரசோடு அவர் கொண்டிருந்த நட்பு, குடியரசுத் தலைவர் தேர்தல் முடிவையே நிர்ணயித்தது என்பதை சேலம் அண்ணா சிலை திறப்பு விழாவில் குடியரசுத் தலைவர் கிரி அவர்களே விளக்கமாகக் கூறினார்கள்.

நீதித்துறையிலிருந்து நிர்வாகத் துறைக்கு வந்து மேலும் பல புதிய பொறுப்புக்களை ஏற்றுக் கொண்ட நேரத்தில் வாய்மை

நிறைந்த அந்த வாஞ்சையாளரை வஞ்சகச் சாவு நம்மிடமிருந்து பிரித்து விட்டது.

தோழர் பாலதண்டாயுதம் அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு 1971 பொதுத் தேர்தலில் அவர் கோவை நாடாளுமன்றத் தொகுதியில் நின்ற போதுதான் எனக்கு ஏற்பட்டது.

தீவிரமான கம்யூனிஸ்டுத் தலைவர் என்று அவர் நாட்டுக்கு அறிமுகமாகியிருந்த போதிலும் நல்ல தொண்டுள்ளமும்; அயராத உழைப்பும் ஆர்வமும் படைத்தவர் என்பதை நான் உணர்ந்தேன். அவர் போட்டியிட்ட நாடாளுமன்றத் தொகுதியில் பல்வேறு இடங்களுக்கு வேனில் சென்று பிரச்சாரம் செய்தபோது என்னுடனேயே அவரும் இருந்தார்.

கம்யூனிசக் கொள்கைகளை மிக வேகமாகப் பரப்பிட வேண்டு மென்ற உணர்ச்சிப் பெருங்கூடலாக, எழுச்சி எரிமலையாக அவர் திகழ்ந்தார்.

சமதர்மத் திட்டங்களைப் படிப்படியாக நிறைவேற்றுகிற நமது கழக அரசுக்கு அவரைப் போன்ற தீவிரவாதிகளின் ஆதரவு கிட்டும் என்று நாம் எதிர்பார்த்தோம். நிலைமை அதற்கு மாறாக ஆகிவிட்ட போதிலும் அவர் போன்றவர்களின் தீவிரவாத உள்ளங்கள்; விரைவில் நமது முயற்சிகளுக்குத் துணை நிற்கத் தயங்கமாட்டா என்று நாம் நம்பியது உண்டு. அம்மவோ! அவரையும் அந்தக் கொடிய இரவு, சாவூருக்குத் தூக்கிக் கொண்டு போய்விட்டது.

இளமைப் பிராயத்திலிருந்தே அரசியல் வானில் பிரகாசிக்கத் தொடங்கிய அந்த நட்சத்திரமும் கருகி விழுந்து விட்டது.

நாற்பதுக்கு மேற்பட்டோர், எழுத்தாற்றல் மிக்க கௌசல்யா நாராயணன், பிரபல தொழிற்சங்கத் தலைவர் சதீஸ்லுமும்பா, நிருபர் ராமசாமி உள்ளிட்டோர் வீழ்ந்து பட்டனர் விபத்தின் அகன்ற வாயில்!

கண்ணீரால் எழுதும் இந்தக் கடிதத்தை இதற்குமேல் தொடர இயலாமல் முடிக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(02-06-1973)

61. "ஒழுங்கான கணக்கு!"

உடன் பிறப்பே,

சில நண்பர்கள் எழுதிய பழைய கடிதங்களைப் பத்திரப் படுத்திவைக்கும் பழக்கம் சில நேரங்களில் பயன்படத்தான் செய்கிறது. தொண்டர்களை மதிப்பதில் அண்ணாவுக்கு நிகராக விளங்குகிறேன் என்று ஆறு ஏழு மாதங்களுக்கு முன்பு என்னைப் பாராட்டி எழுதிய ஒரு நண்பர், அந்தக் கடிதம் எழுதிய தேதிக்குப் பிறகுதான் என் போக்கு மாறிவிட்டது என்று "புதுக் கண்டுபிடிப்பு" ஒன்றை வெளியிடுகிறார். ஆனால், அது அவர் மனச்சாட்சிக்கே அளித்த பதிலாகாது என்பதை அவர் அறிவார்.

நாக்கு எப்படி வேண்டுமானாலும் புரள்கிறது என்பதற்கு இப்படிச் சில பேர் உதாரண மனிதர்களாகத் திகழ்கிறார்கள்.

கடந்த இரண்டொரு நாட்களாகக் கன்னியாகுமரி மாவட்டத்தி லிருந்து நூற்றுக்கணக்கான கழகக் கண்மணிகள், தொலைபேசி மூலமும், கடிதங்கள் மூலமும், தந்திகள் மூலமும் மகிழ்ச்சியும் புத்துணர்ச்சியும் நிறைந்த தங்கள் வாழ்த்துச் செய்திகளை எனக்கு அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு நண்பர் எழுதுகிறார்; பார்!

"கலைஞர் அவர்களே! தாங்கள் இதுவரை என்னைத் தவறாகக் கருதிய காரணத்தை நான் அறிவேன். நண்பனைப் போல் தங்களிடம் நடித்தவர்கள், என்னை நம்பத்தகாதவன் போல் காட்டித் தங்கள் காரியத்தில் வெற்றி பெற்றார்கள். சட்டக் கல்லூரி மாணவனாகக் கட்சி வெறி பிடித்து மாணவனாக இருந்த நான் அன்று போல் என்றும் இருப்பேன். உங்கள் இதயத்தில் எனக்கு இடம் உண்டானால் என் உயிர் உங்களுக்காக..."

இப்படி ஒரு மடல் இன்று வருகிறது எனக்கு! அந்த எழுத்துக்கள் என் நெஞ்சில் தைக்கின்றன.

நண்பர்களைப் போல் நடித்து நல்லதெல்லாம் பெற்றுக் கொண்டவர்கள் இப்படிப்பட்ட இதயங்களை என் போன்றவர்கள் கண்ணிலே காட்டாமல் திரைபோட்டும், திரித்துக் கூறியும் வைத்திருந்தனர் என்பது உண்மைதான்! அந்தத் திரை கிழிந்து தியாக இதயங்கள் பேசுகின்றன. அவைகளிலே ஒரு இதயம்தான் இந்த மடல் தீட்டிய இதயம். குமரி மாவட்டம் எவ்வளவு குதூகலத்தில் ஆழ்ந்திருந்தால் இது போன்ற கடிதங்கள் வரும் என்பதை நீ எண்ணிப்பார்!

உடன் பிறப்பே-ஒன்று கேள்! 1972-ஆம் ஆண்டு-ராஜ்ய சபாவுக்குக் கழகத்தின் சார்பில் சிலர் அனுப்பி வைக்கப்படுகிறார்கள். அவர்களை வாழ்த்தி வழி அனுப்பி வைக்கிறோம் நானும் நாவலரும்-மற்ற தலைவர்களும்!

டில்லி போய்ச் சேர்ந்ததும் அந்தப் புதிய ராஜ்யசபை உறுப்பினர்கள் எனக்குக் கடிதம் எழுதுகிறார்கள். அதிலே ஒரு கடிதம்; ஆமாம்; நான் 1971ஆம் ஆண்டு முதல் சர்வாதிகாரியாகி விட்டேன் என்று இன்று அறிக்கை விடுகிற ஒரு நண்பர் 1972ஆம் ஆண்டு எழுதிய கடிதம். ராஜ்யசபையில் அவர் உறுதிமொழி எடுத்துக் கொண்டதும் இந்தச் சர்வாதிகாரிக்கு எழுதிய கடிதம்-

"எனது தலைவர் கலைஞர் அவர்களுக்கு, ஆயிரம் வணக்கங்கள்!"

ஒன்றல்ல இரண்டல்ல; உடன்பிறப்பே! பத்து, நூறு கூட அல்ல! ஆயிரம் வணக்கங்கள். அப்படித் தொடங்குகிறது அந்தக் கடிதம். இன்னும் கேள்!

"நாங்கள் நேற்று இரவு 10 மணிக்கு டெல்லி வந்து சேர்ந்தோம். இன்று காலை 11 மணிக்கு, எனக்கு அரசியல் வாழ்வுதந்த என் அரசியல் தெய்வம் இருக்கும் கோபாலபுரம் நோக்கி வணங்கி, ராஜ்யசபையில் உறுதிமொழி எடுத்துக்கொண்டேன். என்றும் உங்கள் தொண்டன் நான்."

புரிகிறதா; யார் எழுதியது என்று? கோபாலபுரம் வீடு கோயிலாகத் தெரிந்தது! அதில் அரசியல் தெய்வமாக நான் தெரிந்தேன். இன்று அந்த நண்பருக்குக் கோபாலபுரம் வீடு ஒரு குப்பைமேடு! தெய்வம், அவர் காலில் மிதிபடும் ஒரு கல்லாகிவிட்டது! பரவாயில்லை; குப்பை மேட்டில் நன்றியுள்ள

ஜீவன்கள் இருக்கும். நான்தான் சிலருக்குக் கல்லாகிவிட்டேனே தவிர, என் நெஞ்சம் கல்லாகவில்லை! ஏமாற்ற, துரோகம் புரியக் கல்லாத நெஞ்சமிது! அதனால் கல்லாகவில்லை!

போனது போகட்டும்! ஆனால், ஒன்று; சென்ற இடத்திலாவது நன்றியோடு நடந்து கொள்ளப் பழகட்டும்!

நாம் வளமாக இருக்கும்போது நம்மிடம் எத்தனைபேர் இருந்தார்கள் என்ற கணக்கைவிட, நமக்குத் தொல்லைகள் வரும்போது நம்மோடு எத்தனை பேர் இருக்கிறார்கள் என்பதுதான் ஒழுங்கான கணக்கு!

அப்படி இருப்பவர்களை எண்ணி மகிழ்வோம்! அதுதான் நமது கழகத்தின் உண்மையான வலிவு-அந்த உறுதி உள்ளவரையில் நம்மை யாரும் அசைக்க முடியாது.

அன்புள்ள,

மு. க.

(15-06-1973)

62. உண்மை! உண்மை!!

உடன்பிறப்பே,

அமெரிக்க நாட்டில் சில ஆண்டுகளுக்கு முன்பு சுட்டுக் கொல்லப்பட்ட கென்னடி திடீரென வாஷிங்டன் நகரில் ஆபிரகாம் லிங்கன் சிலைக்கு நேரே தோன்றினார். அவரைக் கண்ட மக்கள் அப்படியே திகைத்துப் போய் ஒருக்கணம் நின்று விட்டனர். பிறகு அந்த மக்கள் சுய நினைவு பெற்று கென்னடியைச் சூழ்ந்து கொண்டு ஆரவாரம் செய்து வாழ்த்து கீதம் இசைத்தனர்.

மறுபிறவி எடுத்து வந்த ஜனாதிபதி கென்னடியை சந்திப்ப தற்கு நிக்சன் முதலிய வெள்ளை மாளிகை வாசிகள் அனைவரும் ஓடி வந்தனர். பிறகு, வெள்ளை வண்ணம் மின்னும் ஒரு பெரிய காரில் கென்னடியை நிக்சன் அழைத்துக் கொண்டு தன் மாளிகைக்குச் சென்றார்.

இருவரும், 'வாட்டர் கேட்' விவகாரம் பற்றி சுமார் ஒரு மணி நேரம் பேசிக் கொண்டிருந்தனர். பேச்சின்போது இடையிடையே மசால் வடையும் முறுக்கும் சாப்பிட்டார்கள்.

அப்போது தொலைபேசி மணி அடிக்கவே, அருகே இருந்த கென்னடி எடுத்து "ஹலோ" என்றார். "அத்தான்! மை டார்லிங்! சுகமாயிருக்கிறீர்களா? உங்களைப் பிரிந்து என் உயிர் துடிக்கும் துடிப்பை யார் அறிவார் அத்தான்! பாலும் சுவைக்கவில்லை; பழமும் ருசிக்கவில்லை. படுக்கையில் தூக்கமில்லை" என்று மளமளவென்று பேச ஆரம்பித்தாள் ஜாக்குலின்! அவர்களுடைய காதல் உரையாடல் அரைமணி நேரம் நீடித்தது. இருவரும் கண்கலங்கியவாறு பேசினர்.

கென்னடியும் ஜாக்குலினும் மீண்டும் வாழ்வு தொடங்குவது பற்றி ரஷ்யாவின் சர்வாதிகாரி ஸ்டாலினிடம் கேட்டபோது அவர் பதில் ஏதும் சொல்லாத காரணத்தால் பத்திரிகை நிருபர்கள் ஏமாற்றத்துக்கு ஆளானார்கள்.

இங்கிலாந்து மன்னர் எட்டாவது எட்வர்ட்டைப் பார்த்து ஒரு நிருபர், அமெரிக்காவில் நடந்த அதிசயத்தைத் தெரிவித்தார். உடனே எட்வர்ட், நிருபரைப் பார்த்து சிரித்தவாறு "சிம்சன் வேண்டுமா? சிம்மாசனம் வேண்டுமா? என்று என்னைக் கேட்டபோது-நான் சிம்மாசனம்தான் வேண்டுமென்று சொன்னேன். கென்னடிக்கு அமெரிக்கா தேவையில்லை போலும், ஜாக்குலினே போதும் போலும்" என்று பதில் அளித்தார்.

நிக்சன், கென்னடியின் பேச்சு வார்த்தையின் முடிவில் அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கு இருவரும் சேர்ந்து ஒரு நீக்ரோவை நிறுத்தி ஆதரிப்பது என்று முடிவாகியிருக்கிறது.

கிசிங்கர், மாசேதுங்கிற்குப் பிறகு சீனாவின் அதிபராகலாம் என்று செஞ்சீனப் பத்திரிகைகளில் நீண்ட தலையங்கங்கள் எழுதப்பட்டுள்ளன. எனினும், ஜான் எப் கென்னடியைப் பற்றி ஒரு வார்த்தைகூட குறிப்பிடவில்லை. இது மிகவும் கண்டிக்கத் தக்கது என்று திருமதி விஜயலட்சுமி பண்டிட் நேற்று ஆக்ராவில் நடைபெற்ற தாஜ்மகால் கும்பாபிஷேகத்தின் போது ஆவேசமாகக் குறிப்பிட்டார்.

அந்தக் கருத்தை வரவேற்று, மாஸ்டர் தாராசிங் இன்று காலை திருச்சி வானொலியில் ஒரு கதாகாலட்சேபம் நடத்தினார்.

சமீபத்தில் நடைபெற்ற ஒரு விமான விபத்தில் இந்தியாவைச் சேர்ந்த மிக முக்கியமான சிலர் இறந்து விட்டார்கள் என்ற செய்தி தவறானது. விழுந்து நொறுங்கிய விமானம் இந்திய விமானம் அல்ல என்றும் இந்திய விமானம் திசைமாறி போய் ரோம் நகருக்கு அருகேயுள்ள ஒரு பூங்காவின் நீச்சல் குளத்தில் இறங்கிவிட்டதாகவும் கூறப்படுகிறது.

பூரி சங்கராச்சாரியாருக்கு மார்ஷல் டிட்டோ அழைப்பு அனுப்பி யுள்ளார். அழைப்பை ஏற்றுக்கொண்ட பூரி ஸ்வாமிகள், தனது வெளிநாடு பயணத்தை பல்லக்கிலேயே மேற்கொள்வதாக இருக்கிறார்.

உடன்பிறப்பே! என்ன விழிக்கிறாய்? ஏன் திகைக்கிறாய்?

நீ ஏதாவது லாபகரமான தொழில் நடத்த வேண்டுமா? அப்படி யானால் ஒரு பத்திரிகை நடத்தத் தொடங்கு! அந்தப் பத்திரிகை பரபரப்பாக விற்க வேண்டுமானால் இது மாதிரி செய்திகளைப்

போட்டால் போதும். ஆறே மாதத்தில் நீ உன் தொழிலில் முன்னேறி விடுவாய்!

"மக்கள் நம்புவார்களா?" என்று கேட்காதே! தமிழ் நாட்டு மக்கள் எந்தப் புளுகையும் நம்புவார்கள்.

ஆனால் ஒன்று; கெட்டிக்காரன் புளுகே எட்டு நாளைக்குத் தான்! இருந்தாலும் வந்த வரையில் லாபம்தானே! அதனால்தான் இப்போது நமது நாட்டில் அந்தக் கலை வேகமாக வளர்கிறது!

அன்புள்ள,

மு. க.

(24-06-1973)

63. "கிலுகிலுப்பை!"

உடன்பிறப்பே,

நாடகத்து அரிச்சந்திரன், பொழுதுவிடிந்து "பவுடர்" கலைந்த பிறகும் பொய்யே சொல்லமாட்டான் என்று ஒரு ஏமாளி எண்ணி யிருந்தானாம். அவன் அந்த நடிகனுக்கு நூறு ரூபாய் கடன் கொடுத்திருந்த ஏமாளி!

நாடகம் முடிந்த மறுநாள் அரிச்சந்திர வேஷக்காரனின் வீட்டுக்குப் போனான், அவன். வரவேற்பு பலமாக இருந்தது. ஏமாளி, தான் கொடுத்த கடன் வட்டியுடன் வருமென்று எதிர்பார்த்து மகிழ்ந்திருந்தான். வரவேற்று உட்கார வைத்ததும் அரிச்சந்திர வேஷக்காரன், ஏமாளியைப் பார்த்து "அய்யாவுக்கு எந்த ஊர்?" என்றான். ஏமாளி, திடுக்கிட்டான், துள்ளி விழுந்தான், "என்னப்பா இப்படிக் கேட்டுவிட்டாய்? நான்தான் உனக்கு அவசரத்திற்கு நூறு ரூபாய் கடன் கொடுத்த ஜவுளிக்கடை ஜம்பு லிங்கம்" என்று அலறியே விட்டான்.

"கடனா? நானா? உம்மிடமா? வாங்கினேனா?" என்று அரிச்சந்திர வேடதாரி ஆச்சரியத்தால் மூக்கில் விரலை வைத்தான். ஜவுளிக்கடை ஜம்புலிங்கம், இரவு அவன் கண்ட நாடகத்தை எண்ணிக் கொண்டான்.

பட்ட கடனை அடைப்பதற்காக, அரிச்சந்திரன் நட்சத் திரய்யனிடமும், காலகண்டனிடமும், வீரபாகுவிடமும் அனுபவித்த கொடுமைகள்...அப்போதும் பொய் சொல்ல விரும்பாத அவனது தூய உள்ளம், வாய்மை - இந்தப் பாத்திரத்தை எந்த நடிகன் உணர்ச்சிகரமாகச் செய்து ஊர் மக்களைத் தேம்பித் தேம்பி அழவைத்தானோ அதே போர்வழிதான் ஜம்புலிங்கத்தை யார் என்று கேட்கிறான்! கடனா கொடுத்தாய் என்று அதட்டுகிறான்!

ஜம்புலிங்கத்துக்கு வியர்த்துக் கொட்டுகிறது. "அடப்பாவி; நேற்று உனக்கு நடந்த பாராட்டு விழாவில்; நாடகத்தில் மட்டுமல்ல

வாழ்க்கையிலே கூட நீ தான் உண்மையான அரிச்சந்திரன் என்று வாழ்த்திப் புகழ்ந்தார்களே; கலியுக அரிச்சந்திரன் என்று பட்டம்கூட கொடுத்தார்களே!" என்று ஜம்புலிங்கம் தனக்குத்தானே புலம்பிக் கொண்டு புறப்படுகிறான்.

உடன் பிறப்பே! நாடகத்தில் நாட்டு நடப்புதான் காட்டப் படுகிறது. அதற்குரிய பாத்திரமேற்றவர்களை அவர்களாகவே கருதிக் கொண்டு ஏமாறுவது ஜம்புலிங்கம் போன்ற ஏமாளிகளின் குற்றமே தவிர, வேஷம் போட்டவர்களின் குற்றமாகுமா?

ஆனால், அந்த வேடதாரிகள் நாட்டில் இன்னமும் ஏமாளிகள் இருப்பதை நம்பிக் கொண்டு எதையும் பேசலாம் என்ற துணிவினைப் பெற்றிருக்கிறார்கள்.

வான்கோழி, கலாப நடை பயில்வதும் அதனை ஏற்றிப் போற்றி இஃதன்றோ புள்ளி மயில் என்று சிலர் நாப்பறை கொட்டுவதும் வழக்கமாகிவிட்ட நமது நாட்டில் இப்போது எதுவும் எடுபடும் என்றாகிவிட்டது.

மத்தாப்பு, வண்ணங்காட்டும்; காண்போர் உள்ளங் கவர எரிந்து காட்டும்; வைத்த விழிவாங்காமல் அதனை வேடிக்கை பார்ப்போரும் உண்டு; மத்தாப்பு விளையாட்டு முடிந்த பிறகுதான், மனைக்குள்ளேயிருக்கும் தீபத்தின் அருமை அவர்களுக்குத் தெரியும்.

தாயின் இடுப்பில் அமர்ந்து, அவளது மார்ச்சேலையை இழுத்துப் பால் பருகிக் கொண்டிருக்கும் குழந்தைகூட, கிலுகிலுப்பையை எதிரே யாராவது ஆட்டினால், தாயின் இடுப்பி லிருந்து கிலுகிலுப்பை வைத்திருப்போரிடம் தாவி விடுவதைக் காண்கிறோமில்லையா?

அதற்காக அந்தக் குழந்தை, தாயை அலட்சியப்படுத்தி விட்டது என்று அர்த்தமா? ஆனால், கிலுகிலுப்பை ஆட்டியவன் சொல்லிக் கொள்கிறான்; அந்தப் பிள்ளைக்கு என் மேல்தான் அதிக ஆசை என்று! அது வெறும் கிலுகிலுப்பை ஆசைதானே தவிர தாய்ப்பாசமல்ல!

தாயல்லவா; அந்தக் குழந்தைக்குச் சிறுநீர் துடைத்து-மலங்கழுவி-உணவு ஊட்டி-உறங்குதற்குத் தாலாட்டி-அதன்மீது துரும்பு பட்டாலும் துடிதுடித்துப் போகிறவள்!

இந்தப் பாசத்தை மறைத்துவிடலாமென்றுதான்; தாய்க்கும் குழந்தைக்குமிடையே தற்காலிகமாக வெற்றி பெற்ற கிலுகிலுப் பைகள் எண்ணுகின்றன.

எனக்கும், நமது கழகத்தலைவர்களுக்கும் தொண்டர் களிடத்திலே அன்பு கிடையாதாம்!

தொண்டர்களை மதிக்காதவர்களை மதிக்காதவன் நான் என்பதை நீ அறிவாய்!

எனக்கும், கழகத் தொண்டர்களுக்கும் இடையிலே கணவாய் உருவாக்க விரும்பும் நண்பர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதற்கு ஒரே ஒரு உதாரணம் தருகிறேன்; இதோ! கீழேயுள்ள தபால் உறையைப் பார்?

பார்த்தாயா? தொண்டர்களை மதிப்பதாகச் சொல்லிக் கொள்ளும் நண்பர் திரு. எம். ஜி. ஆர். அவர்களுக்கு 19-4-71ஆம் நாளில் செங்கற்பட்டு மாவட்டம் பள்ளிப்பட்டுத் தி. மு. க. செயலாளர் தோழர் கோவிந்தராசன் அவர்கள் ஒரு பதிவுத் தபால் எழுதுகிறார்...

கடிதத்திலே உள்ள விஷயம் கழகத்தைப் பற்றியதுதான். வேறு எந்தத் தனிப்பட்ட விவகாரமுமல்ல. கழக வளர்ச்சி, கழக அரசு, இவைபற்றி ஒரு கடிதம் எழுதுகிறார். 19-ஆம் நாள் எழுதப்பட்ட மடல், 20-ஆம் நாள் திரு. எம். ஜி. ஆர். அவர்களுக்கு அவரது தோட்டத்தை நாடி வருகிறது. கடிதத்தை எம். ஜி. ஆர். பெற்றுக் கொள்ளவில்லை. அதற்குள் என்ன இருக்கிறது என்று தெரிந்து கொள்ள விரும்பவில்லை.

கடிதம் எழுதியவர், கழகத்தின் செயலாளர்களில் ஒருவரா யிற்றே என்று கவலைப்படவுமில்லை. ஒன்று நிச்சயம்! அது ரசிகர் மன்றத்திலிருந்து வந்த கடிதமல்ல! கொண்டு வந்த தபால்காரரிடமே அந்தக் கடிதம் திருப்பி அளிக்கப்படுகிறது. அதாவது கழகத் தொண்டன் எழுதிய கடிதம் கழகத்தின் நாடிநரம்பு எழுதிய கடிதம் - "வாங்க மறுக்கப்படுகிறது" என்ற குறிப்புடன் அனுப்பியவரின் முகவரிக்கே திருப்பிவிடப்படுகிறது.

1971-ஆம் ஆண்டு, கழகத்தின் பொருளாளர், கழகத்தின் கிளைச்செயலாளர் ஒருவருக்குக் காட்டிய மரியாதை! கொடுத்த

மதிப்பு இதுதான்! அந்த மாஜி பொருளாளர் சொல்கிறார்; எனக்குக் கழகத் தொண்டர்களிடத்திலே அன்பும் பாசமும் கிடையாதாம்!

உடன் பிறப்பே!

என் தோளில் ஏறி, மேலே உட்கார்ந்து கொண்டவர்கள், என் முகத்தில் எச்சில் துப்புகிறார்கள். பரவாயில்லை. என்னை ஆளாக்கிய அண்ணனை நினைத்துக் கொள்கிறேன்; அந்த எச்சில் துளிகள் பன்னீர்த் துளிகளாக இருக்கின்றன.

அன்புள்ள,

மு. க.

64. பதவி-துறவி!

உடன்பிறப்பே,

“பதவியைக் காப்பாற்றிக் கொள்ளவே கள்ளுக்கடைகளை மூடுகிறார்கள்”

இவ்வாறு மத்திய அமைச்சர் சுப்பிரமணியம் சென்னையில் பேசியிருக்கிறார். மதுக்கடைகளைத் திறப்பதாக நமது அரசு அறிவித்த போதே; “மதுவிலக்கை ரத்துசெய்யவில்லை. ஒத்தி வைத்திருக்கிறோம்” என்றுதான் நிதிநிலை அறிக்கையில் குறிப்பிட்டோம். நண்பர் சுப்பிரமணியம் அவர்களுக்கு அவைகளை யெல்லாம் படிக்கவோ, அல்லது அவைகளைப் படித்ததாகக் காட்டிக் கொள்ளவோ பிடிக்காது என்பது எனக்குத் தெரியும். பதவியைக் காப்பாற்றிக் கொள்ள நாம் முயற்சி செய்கிறோமாம். ஆமாம்! பதவியே பிடிக்காத சுப்பிரமணியம்தான் சொல்கிறார்.

சுப்பிரமணியனாருக்குப் பதவி என்றாலே; வேப்பங்காய் மாதிரி! விளக்கெண்ணெய் குடிப்பது மாதிரி. பதவியைப் பலமுறை அவர் காலால் உதைத்துக் காறி உமிழ்ந்தவர்.

ராஜாஜி மந்திரி சபையில் இருந்து குலக்கல்வித் திட்டத்துக்குக் கொடி தூக்கினார். அந்தக் கல்வித் திட்டத்தை எதிர்த்த காமராஜர் கோஷ்டியினரைக் கடுமையாகச் சாடினார். தமிழகமே ராஜாஜி மந்திரி சபையின் குலக்கல்வித் திட்டத்தை எதிர்த்தபோது, சுப்பிரமணியம் ராஜாஜியுடன் சேர்ந்து தமிழகத்தின் குரலை அலட்சியப்படுத்தினார்.

அந்தப் போராட்டத்தின் காரணமாக ராஜாஜி மந்திரி சபை கவிழ்ந்தது. காமராஜர், முதலமைச்சரானார். சுப்பிரமணியம் அந்த மந்திரி சபையிலும் இடம் பெற்றார். ராஜாஜி தலைமையிலிருந்து கொண்டு வந்த கல்வித் திட்டத்தை காமராஜர் தலைமையிலிருந்து கல்லறைக்கு அனுப்பினார்.

இதெல்லாம் அவருக்கு இருந்த பதவி ஆசை காரணமாக என்று யாரும் எண்ணிவிடாதீர்கள்! பதவியைப் பார்த்தால் அவருக்குப் பாம்பைப் பார்ப்பதுபோல இருக்கும்! மேனகையை வெறுத்த விசுவாமித்திரனைப் போல, சுப்பிரமணியம் பதவியை வெறுப்பவர்.

கிருஷ்ணகிரியில் தீர்த்தகிரிக் கவுண்டரை ராஜினாமாச் செய்து விடச் சொல்லிவிட்டு, அந்த இடைத்தேர்தலில் சுப்பிரமணியம் போட்டியிட்டதுகூட பதவிக்காக அல்ல! அல்லவே அல்ல!

"கலைஞர் கருணாநிதி எப்போது என் கையில் நாமினேஷன் தாளைக் கொடுத்தாரோ அப்போதே நான் கிருஷ்ணகிரியில் வெற்றி பெற்று விட்டதாக அர்த்தம்" என்று அவர் பேசி, "டேப் ரிக்கார்டு"களில் இன்றைக்கும் ஒலிக்கிறதே; அது பதவிக்காகப் பேசிய பேச்சு அல்ல!

"எல்லோரும் வாபஸ் வாங்கி விட்டார்கள்! இன்னும் ஒரு ஆள்தான் பாக்கி" என்று வரததேசிகன் என்ற சுயேச்சை வேட்பாளரைத் தேடித் தேடி அலைந்தாரே, அது கூடப் பதவிக்காக அல்ல! சத்தியமாக அல்ல!

"இது என் வெற்றியல்ல; அமைச்சர் ராஜாராமின் வெற்றி."

என்று சென்னை உட்லண்ட்ஸ் ஓட்டல் விருந்தில் சுப்பிர மணியம் குறிப்பிட்டாரே, அது கூடப் பதவிக்காக அல்ல!

உடன்பிறப்பே; கொங்குநாட்டுத் தங்கம் கொள்கைக்காக உயிர்வாழும் தங்கமே தவிர, பதவிக்காகத் துடிதுடிக்கும் பித்தளையல்ல!

அதனால்தான் அவர் நம்மைப் பார்த்து "பதவிப் பிரியர்கள்" என்று கேலி பேசியிருக்கிறார்.

அடக்கு முறைகள், சித்திரவதைகள், சிறைச்சாலைகள், பாதுகாப்புச் சட்டங்கள், பாளையங்கோட்டைகள்-இவைகளை எதிர்பார்த்து இந்த இயக்கத்தில் ரத்தக் கையெழுத்துப் போட்டுவிட்டு சேர்ந்தவர்களே தவிர நிலையில்லாத பதவி வரும்-அதிகாரம்-அந்தஸ்து குவியும் என்று நினைத்து நாம் யாரும் வந்தவர்கள் அல்ல! இதை சுப்பிரமணியனார் போன்ற ஆத்திரக்காரர்கள்-அவசரக்காரர்கள்-உணர்ந்து கொள்வது கடினம்!

அதோடு விட்டாரா நண்பர் சுப்பிரமணியம்? இல்லை!

தி. மு. கழகத்தைச் சாக்கடை என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் காலத்தில் சாக்கடையாக இருந்த கூவத்தை மாற்றியமைத்த தி. மு. கழகத்தைப் பார்த்து "சாக்கடை" என்கிறார்.

என்ன இருந்தாலும், அவர் போன்ற பெரிய மனிதர்கள் வாயில் "சாக்கடை" வருவதை நம்மால் சகித்துக் கொள்ள முடியவில்லை. என்ன செய்வது? அவர் இயல்பு அது!

அன்புள்ள,

மு. க.

(02-07-1973)

65. உன் பெயர் எங்கே?

உடன் பிறப்பே,

கழகத்தில் உறுப்பினர்களாகச் சேர்ந்துவிட்டீர்களா என்று நமது அமைப்புச் செயலாளர் நீலநாராயணன் நாள்தோறும் அறிக்கை விடுத்துக் கொண்டிருக்கிறார். போகுமிடமெங்கும் நமது பொதுச் செயலாளர் நாவலர் அவர்களின் வேண்டுகோளும் அதுதான். ஒவ்வொரு நாளும் உறுப்பினர்கள் ஆயிரக்கணக்கில் சேருகிறார்கள்.

உறுப்பினர் சேர்த்த தாள்கள் தலைமைக்கழகத்தில் குவிந்த வண்ணமிருக்கின்றன. அறிவேன் நான்.

ஆயினும் இன்னும் வேகம் வேண்டும்; நமது செயல் வீரர்கள் எப்படிச் செயல்படுவார்கள் என்பதை விழுப்புரம் மாநாடு விளக்கியிருக்கிறது. விம்மிப் புடைத்ததோள்களை உயர்த்தி, விழியெல்லாம் ஒளிச்சுடர் பாய்ச்சி, வீறு கொண்டு ஆர்த்தெழுந்த முரசங்களாக அவர்கள் முழங்கியதை, எறும்பு போல் அன்னார் சுறுசுறுப்புக் காட்டியதை, சுரும்புபோல் சுற்றிச் சுழன்றதை; துரும்பு போல் துரோகிகளைத் தூக்கி எறிவோம் என்று கை உயர்த்திக் கம்பீர நடைபோட்டதை நான் இன்னும் எண்ணி எண்ணி மகிழ்கிறேன். அந்த மகிழ்ச்சிப் பெருக்கை அதிகப்படுத்துவது போலத்தான் உறுப்பினர் சேர்க்கும் பணி உன் போன்ற உடன் பிறப்புக்களால் ஒளி பெற்றுத் திகழ்ந்திடக் காண்கிறேன்.

கருமுகில் குளிர்ந்து பெய்யும் மழையை வகைப்படுத்தி வாய்க்கால் அமைத்து, வயல் வரையில் கொண்டு போனால் தான் பயிர் கிடைக்கும். பயன் விளைக்கும். இல்லையேல் காட்டாற்று வெள்ளமாக, கானகத்தில் எரித்த நிலவாக ஆகிவிடும். கழகத்தின் கட்டுக் கோப்பும் அமைப்பும்தான் நமது கொள்கைகளும், இலட்சியமும் வெற்றி பெறச் செய்வதற்கேற்ற பாசறைகளை உருவாக்கக் கூடியவை.

இந்தியப் பெருநாட்டில் நமது கட்சிக்கு இருக்கக்கூடிய அமைப்பு முறை, கிளைகள், கிளைகளுக்கிடையே உள்ள தொடர்புகள் வட்ட, மாவட்டத் - தலைமைக் கழகப் பிணைப்புகள் - இவை, வேறு எந்தக் கட்சிக்கும் இல்லையென நாம் அறைகூவல் விட்டுச் சொல்லலாம்.

கட்டிடமும், கூரை வேய அமைத்திருந்த சட்டங்களும் பலமாக இருந்ததால்தான் அண்மையில் அடித்த காற்றில் சில ஓடுகள் மட்டும் கீழே சரிந்து வீழ்ந்தன. அதில் உடையாத ஓடுகளை மீண்டும் எடுத்துக் கூரை வேய்ந்து கொண்டோம். உடைந்தவைகளை விட்டு விட்டுப் பழையபடி கூரையைச் சரி செய்து கொண்டோம். கட்சியின் நாடி நரம்புகளாக உள்ள கழகத் தொண்டர்களில் - மாயையில் கருத்திழந்த ஒரு சிலரைத் தவிர வேறு யாரையும் விபீடணர்கள் தங்கள் பக்கம் இழுத்துச் செல்ல முடியவில்லை.

வளர்ந்த நகம், வெட்டப்பட்டிருக்கலாம். அதற்காக நகம், விரலை விட்டு விழுந்து விடாது. வெட்டப்பட்டு வீழ்ந்த நகம் தான் முளைக்கும் ஆற்றலை இழந்துவிடும்.

உடன்பிறப்பே! நகம் வெட்டும்போது, ஒரு தாளில் தான் வெட்டப்பட்ட நகங்களை குவித்து வைக்கிறோம். "ஆகா! நமக்கு எவ்வளவு அழகான ஆசனம்!" என்று அந்த நகங்கள் மகிழ்ந்து கொண்டிருக்கும்போதே, அவைகளைத் தாளோடு தூக்கித் தெருவின் ஒரு மூலையில் வீசி எறிந்து விடுகிறோம். நம்மிடமிருந்து வெட்டிக்கொண்டு போனவர்களுக்கு இன்று தாள் என்ன, தங்க ஆசனம் கூடக் கிடைக்கலாம். ஆனால் நாளை அவர்களின் நிலை-வெட்டப்பட்ட நகத்தின் நிலை தான்!

நான் விழுப்புரம் மாநாட்டில் கூறியது போல நமது கழகம் சில இலட்சியங்களை ஈடேற்றுவதற்காகத் தொடங்கப்பட்டது. அந்த லட்சிய வெற்றிக்குக் கிளர்ச்சியோ அல்லது ஆட்சியோ போர்க்கருவிகளாக அமையும். அதற்காகக் கருவியே லட்சியமாகி விட முடியாது. லட்சியமாகி விடவும் கூடாது. அண்ணா வகுத்தளித்த சமதர்ம சமுதாயம் காணும் லட்சியமும், மாநில சுயாட்சி பெறும் லட்சியமும், தமிழ்மொழி, தமிழர் சமுதாய மேன்மைக்காகப் பாடுபடும் லட்சியமும் நமது உதிரத்தோடு ஊறி, நமது உயிர் மூச்சாக ஆகிவிட்டிருக்கின்றன.

அந்த லட்சிய வெற்றிக்கு எத்தனைபேர், எந்தத் தியாகத் திற்கும் தயாராக இருக்கிறோம் என்ற எண்ணிக்கையை நாட்டுக்கு அறிவிக்க வேண்டாமா?

கழகத்தின் ஒவ்வொரு அமைப்பின் தேர்தலும் விரைவில் தொடங்கி, தலைமை அமைப்பின் தேர்தலையும் நாம் நடத்த இருக்கிறோம்.

நமது கழகம் நடத்திய மும்முனைப் போராட்ட நாளான ஜூலை 15 முதல் உறுப்பினர் சேர்க்கும் தீவிர இயக்கம், பட்டி தொட்டிகள் முதல் பட்டினங்கள் வரை பரவலாக நடைபெற்று வருகிறது.

மானத்தமிழ் இளைஞர்கள், பெரியவர்கள், தாய்மார்கள், சகோதரிகள் அனைவரும் தி. மு. கழகத்தின் போர்வாளாகத் தங்களை ஆக்கிக் கொண்டிருக்கிறார்கள். நாள்தோறும் தலைமைக் கழகத்திற்கு வரும் உறுப்பினர் தாள்கள் அதைத்தான் உணர்த்திக் கொண்டிருக்கின்றன.

பணி தொடரட்டும்!

விரைவில் முடியட்டும்!

வேறு பணிகள் நிறையக் காத்திருக்கின்றன!

உடன்பிறப்பே, உறுப்பினர்கள் சேர்க்கும் உற்சாகத்தில், உழைக்கும் ஆர்வத்தில், உன் பெயரைக் கழக உறுப்பினர் தாளில் இணைத்திட மறந்துவிடாதே! உன் பெயர் அதில் இருக்கிறதா, பார்த்துக்கொள்!

அன்புள்ள,

மு. க.

(23-07-1973)

66. "அண்ணன் எழுதிய மடல்!"

உடன் பிறப்பே,

15-1-1969 அன்று நமது ஆருயிர் அண்ணன் எழுதிய "தம்பிக்கு" என்ற கடைசிக் கடிதத்தை "சென்னை நண்பர்கள் கழகத்தினர்", சிறுநூல் வடிவில் வெளியிட்டு அந்த விழாவைப் பேராசிரியர் அவர்களைக் கொண்டு செப்டம்பர் 30 ஆம் நாள்-நேற்று முன்தினம்-எழுச்சியுடன் நடத்தியிருக்கின்றனர். அந்தக் கடிதம், நமக்கு உயிரானது-தமிழர்க்கு உயிலானது-என்று சிலம்புச் செல்வர் மேடைதோறும் முழங்கக் கேட்டிருக்கிறோம்! நமது அண்ணனின் எழுத்துக்களில் தமிழ்வளம் மட்டுமல்ல; தமிழ் மணமும் கமழக் கண்டவர்கள் நாம்.

ஆங்கிலத்தில் அவர் கட்டுரை தீட்டினாலும் அதில் தமிழ் உணர்வும், தமிழர் பெருமையும், தமிழ்நாட்டு வரலாற்றுச் சிறப்பும் கொடி கட்டி அரசோச்சுகிற காட்சியினைப் பார்த்ததாலேயே, எந்த எழுத்திலும் அண்ணன் தமிழ் மணம் தந்திடத் தவற மாட்டார் என்றுரைக்கின்றேன்.

"சூழ்நிலையின் கைதி" என்ற சொற்றொடருக்குத் தான் முதலமைச்சர் என்ற முத்திரையிட்டிருக்கிறார்கள் என்று அண்ணா அவர்கள் அந்தக் கடிதத்தைத் தொடங்கும்போதே, ஒரு மாநிலத்தின் உரிமைகள் எந்த அளவுக்குத் தடுக்கப்பட்டுக் கிடக்கின்றன என்பதை ஒரே வரியில் எவ்வளவு தெளிவாக விளக்கி விடுகிறார் பார்த்தாயா!

பொங்கல் திருநாள் பற்றி மடல் தீட்ட முனைந்த அண்ணா தமிழகத்தின் எதிர்காலத்தைப் பற்றிச் சிந்திக்கிறார். தான் இன்னும் எத்தனை வார காலம் இருக்கப் போகிறோம் என்பது பற்றிக் கவலைப்படாமல் தமிழகத்தின் எதிர்காலம் குறித்துக் கவலைப் படுகிறார்.

"தம்பி! தமிழகம் முழுதும் விழாக்கோலம் கொள்ளக்கூடிய விதமான வளம் கொழித்திட விழைகிறேன். திட்டங்கள் பல தீட்டப்படுகின்றன. ஆனால் அவைகளை நிறைவேற்றத் தேவைப்படும் பணம், இந்தியப் பேரரசிடமல்லவா முறையிட வேண்டியிருக்கிறது. முறையிடுகிறேன்; கனிவும் பணிவும் குறையாமல்! வம்பு, வல்லடிப் போக்கு துளியுமின்றி! ஆனால் கிடைக்கிறதா நிரம்ப? நான் கவலைப்படாமல் எப்படி இருக்க முடியும்? ஆகவேதான் மாநிலங்கள் அதிக அளவில் அதிக அதிகாரம் பெறத்தக்க விதத்தில் இந்திய அரசியல் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும் என்பது பற்றி வாய்ப்புக் கிடைக்கும்போதெல்லாம் எடுத்துக் கூறி வருகிறேன்."

நமது தலைவர் தந்த இந்த வாசகத்தைத்தான் 1971ஆம் ஆண்டு தி. மு. கழகம் வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் தி. மு. கழகத்தின் இதயமாம் பொதுக்குழு, ஒரே மனதான முடிவாக்கி தமிழ் மக்கள் முன்னிலையில் வைத்தது.

"அரசியல் துறை அதிகாரங்களும், நிதித்துறை அதிகாரங்களும் மாநிலங்களுக்கு மேலும் தேவை என்று கேட்பது மாநிலங்களில் இருப்போர் அதிக அதிகாரங்களை நுகர வேண்டுமென்ற ஆசையால் அல்ல. மாநில அரசுகள் மக்களுக்கு நெருங்கிய நிலையில் இருப்பதால் அந்த அதிகாரங்களை மத்திய அரசிடமிருந்து மேற்கொண்ட பிறகே எதிர்பார்க்கும் விதத்தில் மக்களுக்குத் தொண்டாற்ற முடியும் என்பதால்தான் மாநில சுயாட்சி கோருகிறோம்."

இந்தத் தேர்தல் அறிக்கையை வைத்துத்தான் நூற்று எண்பதுக்கு மேற்பட்ட சட்டப் பேரவை இடங்களிலும், இருபத்து நான்கு நாடாளுமன்றத் தொகுதிகளிலும் மக்களின் பேராதரவைப் பெற்று வெற்றி குவித்தோம்.

அந்தத் தேர்தல் அறிக்கையிலேயே "அகில இந்திய ரீதியில் மாநில சுயாட்சி இயக்கத்திற்கான ஆதரவு திரட்டும் முயற்சியைக் கழகம் மேற்கொள்ளும்" என்றும் சுட்டிக் காட்டியிருக்கிறோம். இத்தகைய தேர்தல் அறிக்கையை வெளியிட்டுத் தேர்தல் களத்தில் குதித்த கழகத்துடன் அன்று உடன்பாடுகொண்டு இருந்தவர்கள், இன்று 'மாநில சுயாட்சி' என்பது மறைமுகமான 'பிரிவினை முழக்கம்' என்று குற்றம் சாட்டுகிறார்கள். பிரிவினையைத் தடுக்கத்தான் நாம் மாநிலங்களுக்குச் சுயாட்சி கேட்கிறோம் என்பதைப் பல முறையும் தெளிவாக்கிவிட்டோம். தனித் திராவிடநாடு, தனித்தமிழ்நாடு-

என்ற கொள்கையைக் கைவிடுவது என்று அறிஞர் அண்ணாவின் தலைமையில் கழகத்தின் பொதுக்குழு முடிவெடுத்து எப்போதோ அறிவித்து விட்டது.

இந்திய ஒருமைப்பாட்டுக்கும் பாதுகாப்புக்கும் ஊறு நேரா வண்ணம் மத்தியில் கூட்டாட்சியும் மாநிலங்களில் சுயாட்சியும் உருவாக வேண்டுமென்பதே, கழகத்தின் கொள்கை!

இந்திய ஒருமைப்பாட்டைக் காத்திட முனையும்போது, தமிழகத்தின் தனித் தன்மைகளை மறந்துவிட வேண்டுமென்று வாதிடும் வகையினரும் சிலர் உளர். நீயும் அறிவாய். அவர்கட்கு நமது அண்ணன், தனது கடைசிக் கடிதத்தில் அளிக்கும் பதிலைப்பார்!

"தமிழகத்தின் தனித் தன்மைகள், சிறப்புக்கள் குறித்துப் பேசுவதையே இந்திய ஒருமைப்பாட்டுக்குக் கேடு பயப்பதாகும் என்று பேசுவோர் உளர்; இங்குகூட! அங்கு உள்ளவர்கள் அகமகிழ்வார்கள் என்ற நினைப்பினர்.

தமிழகத்திற்கென்று இருக்கின்றனவே தனிச் சிறப்புகள்; என் செய்வது? எப்படி மறைப்பது? தம்பி! உன்னால் இயன்ற அளவுக்குத் தமிழரின் தனிச் சிறப்புகளைக் குறித்து எடுத்துரைக்கும் பணியிலே ஈடுபடக் கேட்டுக்கொள்கிறேன். போலிப் பெருமை தேடிக் கொள்ளவோ, நாட்டின் பிறபகுதிகளைத் தரக்குறைவாகக் கருதுவதற்கோ அல்ல தம்பீ; தமிழகத்தின் தனிச் சிறப்புக்களை நாம் அறிந்திட வேண்டும்!"

பொன்மன அண்ணன், பொங்கலுக்கு எழுதுகிறார் கட்டுரை! அதில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய அரசியல் கொள்கைக்கு அடித்தளம் அமைத்துக் காட்டுகிறார். அந்தக் கொள்கை நிறைவேற அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டுமென்கிறார். "தமிழ், தமிழர், தமிழகம், அந்த இன்ப உணர்வுகளை இழந்திடாதே" என்று எச்சரிக்கிறார். உடன்பிறப்பே, அவர் நமக்கு எழுதிய கடிதத்தைப் படித்த பிறகு நாம் இணைந்து எழுப்புகிற முழக்கம்தான்-

"உறவுக்குக் கைகொடுப்போம்
உரிமைக்குக் குரல் கொடுப்போம்" என்பதாகும்.

அன்புள்ள,

மு. க.

(02-10-1973)

67. நடக்கட்டும் நாடகம்!

உடன் பிறப்பே,

அதோ வருகிறதே, அந்த உருவத்துக்குப் பேரழகி என்று பெயர். சிரங்கு பிடித்த மேனி, சீழ் ஒழுகும் காதுகள், சிந்தி ஓயாத மூக்கு, சிமிட்டாத கண்கள், அவள் தலையிலேதான் பேன் சந்தையே நடைபெறுகிறது. அவள் இளமை முதல் இதுவரையில் ஆடிய ஆட்டத்தையெல்லாம் கணக்கிட்டுக் காட்டுவது போல் மேடும் பள்ளமுமாகத் தோன்றுகின்ற முகம். மதுவாடை வீசுகின்ற அகன்ற வாய், "மன்மதர்கள் எத்தனை பேருக்கு மஞ்சம் விரித்த ரதி நான்" என்று உள்ளுக்குள்ளே முழங்குகின்ற இதய நாடிகளின் கூக்குரல். அந்தக் குரல் வெளியே கேட்பதில்லை.

அவள் இப்போது எங்கு போய்க் கொண்டிருக்கிறாள் தெரியுமா?

கண்ணகி கலை மன்றத்தில் கற்பரசி என்னும் தலைப்பில் உரையாற்றுவதற்காக! அத்துடன் "அழகு" பற்றி ஒரு கவியரங் கத்திலும் அவளைத் தலைமை வகிக்க அழைத்திருக்கிறார்களாம்.

ஆச்சரியப்படுகிறாயா?

ஆகுமா இது? என்று கேட்கிறாயா?

முறையா? தகுமா? என்று முணுமுணுக்கிறாயா?

ஓராயிரம் ஊழல்களுக்கு அதிபதி, ஆதாரமில்லாமல் கழக ஆட்சியின் மீது ஊழல் புகார் கூறி, தன்னை உத்தமன் என்று பறைசாற்றிக் கொள்கிறாரே; அது நடக்கும்போது இது நடக்காதா?

உச்ச வரம்பு கொண்டுவந்து ஊரார் நிலத்தையெல்லாம் சட்டத்திற்குள்ளே இழுப்பதாகக் கூறிவிட்டு, தன் நிலம், தன் குடும்பத்தார் நிலம் மட்டும் தப்பித்துக்கொள்ள வழிவகை கண்டு

கொண்டாரே; அவர் வாழும் இந்தப் பூமியில்-கற்பை விற்கக் கடை வைத்தவள், கண்ணகி விழாவில் கலந்து கெள்வதென்ன; கண்ணகிக்குக் கற்பு இல்லை என்று கூறினாலும் அதையும் ஏற்றுக்கொள்ள ஏமாளிகள் சிலர் இருக்கிறார்களே!

என் செய்வது? ஏழைகள் வாழ்வை ஏப்பம் விட்டவர்கள்! ஊரையடித்து உலையிலே போடுபவர்கள்.-

புத்தர்களாய்ச் சித்தர்களாய்த் தங்களை வர்ணித்துக் கொள்கிறார்கள்; நம்புவதற்குச் சில பித்தர்கள் இருப்பதால்!

அழகு என்ற பெயரால் அலங்கோலம் பவனி வரும் காலம்!

கற்பு என்ற பெயரால் கடைகெட்ட மூதேவி, கண்ணகியைக் குறை கூறும் காலம்!

நடக்கட்டும்; இந்த நாடகம் எத்தனை காட்சிகள் நடைபெறும் என்று பார்ப்போம்!

அன்புள்ள,

மு. க.

(29-11-1973)

68. "டெல்லி லாயத்தில்!"

உடன் பிறப்பே,

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் நினைவுத் தபால்தலை வெளியிடும் யோசனையைத் தபால்தலை ஆலோசனைக்குழு இருமுறை பரிசீலித்ததாகவும் இதைக் குழு ஏற்கவில்லை யென்றும் ராஜ்ய சபையில் தபால்துறை மந்திரி திரு. ராஜ் பகதூர் அறிவித்தார் என்று பத்திரிகைச் செய்தியொன்று கூறுகிறது.

"இருட்டறையில் உள்ளதடா
உலகம்-சாதி இருக்கின்ற
தென்பானும் இருக்கின்றானே!"

எனப் பெருமூச்சு விட்ட பாவேந்தன் பாரதிதாசன், அஞ்சல் தலை வெளியிடுகிற அளவுக்குத் தகுதி படைத்த கவிஞன்தானா என்று ஆராய்ச்சி நடந்திருக்கிறது.

"கனியிடை ஏறிய சுளையும்-முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும்-காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும்
நனிபசு பொழியும்பாலும்-தென்னை
நல்கிய குளிரிள நீரும்
இனியன என்பேன் எனினும்-தமிழை
என்னுயிர் என்பேன் கண்டீர்!"

என்று கவிதை பாடித் தமிழுக்கு யாரும் சேர்க்காத புகழைச் சேர்த்த புலவர் பெருமகனுக்கு அஞ்சல் தலை வெளியிடலாமா என்று ஆராய்ச்சி நடந்ததாம்.

“தொட்டி நீலத்தில் சுண்ணாம்பு கலந்த கலப்பன்ன
இருள், தன் கட்டுக் குலைந்தது”

எனப் பாடிய ஒப்பற்ற உவமைக் கவிஞனுக்குத் தபால்தலை வெளியிட இயலாது எனக் கூறிவிட்டது டெல்லி அரசு, இரண்டு முறை யோசனை செய்த பிறகு!

“தனித்துக் கிடந்திடும் லாயம்-அதில்
தள்ளி அடைக்கப்படும் குதிரைக்கும்
கனைத்திட உத்திரவுண்டு-வீட்டில்
காரிகை நாணவும் அஞ்சவும் வேண்டுமோ?”

புரட்சிக் கவிஞரின் எழுச்சி மிகு இந்த வரிகள், பெண்ணுரிமைக்காகக் குரல் உயர்த்திப் பேசுகின்றன.

லாயத்தில் அடைபட்ட குதிரைகூட கனைத்திடும் உரிமை பெற்றிருக்கிறது. இந்திய நாட்டில் உள்ள மாநிலங்கள் அந்த உரிமை கேட்டால் கூட, “ஆகா! லாயத்தையே அழிக்கத் துடிக்கின்றன குதிரைகள்!” என்று டெல்லியிலே உள்ளவர்கள் சீறுவதற்கு முன்பு இங்குள்ள அரசியல் பெரியவர்கள் சீறுகிறார்களே! பாரதிதாசன் நினைவுத் தபால்தலை வெளியிடுக என்று வேண்டுகோள் விடுத்ததும், அதை டெல்லி புறக்கணித்ததும், “**கனைக்கும் உரிமை**” கூட மாநிலக் குதிரைகளுக்கு டெல்லிப் பேரரசின் லாயத்தில் கிடையாது என்பதைத்தானே காட்டுகிறது.

அன்புள்ள,

மு. க.

(03-12-1973)

69. படையெடுப்பு பலிக்குமா?

உடன் பிறப்பே,

இந்திய மண்ணின் விடுதலைக்காகப் போரிட்ட தமிழ் நாட்டுத் தியாகிகளையும், தலைவர்களையும், கவிஞர்களையும் தி. மு. கழக அரசு தொடர்ந்து பாராட்டி வருகிறது. சிதம்பரனார்க்கும், பாரதியாருக்கும் சிலையெடுத்துள்ளோம். சிதம்பரனார் நகர், வள்ளியம்மை நகர் உருவாக்கியுள்ளோம். ஏழாயிரத்துக்கு மேற்பட்ட தியாகிகளுக்கு மாதந்தோறும் எழுபத்தைந்து ரூபாய் மானியம் வழங்குகிறோம். மத்திய அரசு வழங்கிய தாமிர விருது பெறாத தியாகிகளுக்குத் தமிழ் நாட்டு அரசின் சார்பில் வீரப் பட்டயங்களை ஆயிரக்கணக்கில் வழங்கியுள்ளோம்.

இவைகள் ஒன்றிரண்டு உதாரணங்கள். இன்னும் ஏராளம் உண்டு; எடுத்துச் சொல்ல நேரமில்லை. இவைகளின் தொடர்பாகத்தான் வெள்ளை வெறியன் ஆஷ் துரையைச் சுட்டுக் கொன்ற வீரர் வாஞ்சிநாதனின் நினைவாக, அந்தச் சம்பவம் நடைபெற்ற மணியாச்சி ஜங்ஷனுக்கு "வீரவாஞ்சி" என்று பெயரிட வேண்டுமென்று மத்திய அரசாங்கத்தைக் கேட்டோம். (Local) தலைவர்களின் பெயர்களை வைப்பது உசிதமல்ல என்று டெல்லி பதில் எழுதியது. இங்குள்ள சில காங்கிரஸ் தலைவர்களே கூட தமிழக அரசைக் கேலி செய்தனர். எல்லாவற்றையும் எதிர்க்கும் பக்தவத்சலப் பெரியவர் இதையும் எதிர்த்து ஒரு கட்டுரை எழுதினார். தென்பாண்டி மண்டிலத்தில் உள்ள சில உணர்ச்சிமிக்க காங்கிரஸ் நண்பர்கள், தமிழக அரசின் முறையீட்டைச் செயல் படுத்துமாறு டெல்லியைக் கேட்டுக்கொண்டனர். மணியாச்சி என்ற பெயரை மாற்றுவது பிரச்சினையாக இருந்தால் "சிதம்பரம்-அண்ணாமலை நகருக்கு இங்கே இறங்கவும்" என்று இருப்பதைப் போல "வீரவாஞ்சி ஜங்ஷன்-மணியாச்சிக்கு இங்கே இறங்கவும்" என்று பலகை அமைக்கலாம் என்று தமிழக அரசின் சார்பில்

மீண்டும் டெல்லிக்குக் கடிதம் எழுதப்பட்டது. எழுதி, ஏழத்தாழ ஒருமாத காலத்திற்கு மேலே இருக்கும். இன்னும் பதில் வரவில்லை. இந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ளலாம் என்று டெல்லி வட்டாரத்தில் பேசப்பட்டதாம். ஆனால் பதில் வரவில்லை.

இன்று பத்திரிகைகளில் ஒரு செய்தி பார்த்தேன்.

"யூனியன் சர்க்கார் இலாக்
காக்களில் காகிதப் பஞ்சம்"

இதுதான் அந்தச் செய்தி! பதில் கடிதம் வராததற்குக் காரணம் இப்போதுதான் புரிகிறது. எதற்கும் இன்று தேசீய வளர்ச்சிக் குழுவின் கூட்டத்திற்காக டெல்லி புறப்படுவதாக இருக்கிறேன். தமிழகத்தின் முறையீடுப் பட்டியலில் இதனையும் ஒன்றாக இணைத்துத் தொடர்புடைய அமைச்சரிடம் படையெடுத்துப் பார்க்கிறேன்! பலிக்கும் என்ற நம்பிக்கையுடன்!

அன்புள்ள,

மு. க.

(07-12-1973)

70. உணரச் செய்வோம்!

உடன் பிறப்பே,

பெரியவர் பக்தவத்சலம் அவர்களுக்கு என்மீது ஏனோ ஒரு பழிவாங்கும் உணர்ச்சி. நான் என்னமோ அவரை நானூறு மைல்கள் போலீஸ் லாரியில் கொண்டுபோய்ப் பாளையங்கோட்டைத் தனிமைச் சிறையில் அடைத்தது போலவும், அதற்காக அவர் என்னைப் பழிவாங்கத் துடிப்பது போலவும் காணப்படுகிறார். பரவாயில்லை. மாணவக் கண்மணிகள் மீது அவருக்குத் திடீரென ஒரு ஆசை பிறந்து அலை மோதுகிறது. அவருக்கு மட்டுமா? இந்தி எதிர்ப்புப் போரின்போது மாணவர்களின் உயிர் ஒன்று, பத்து, நூறாகப் பறிக்கப்பட்ட போது காங்கிரஸ் தலைவராக இருந்த காமராஜர், தமிழ்நாட்டுப் பக்கமே திரும்பிப் பார்க்கவில்லை. மாணவர்களுக்காகப் புறப்பட்டுள்ள "**புதிய பக்தர்**", இந்தப் பக்கத்துக் கடற்கரைகள் என்றால் ஆபத்து என்று "கோவா" கடற்கரைக்கே ஓடிப்போய் ஒளிந்து கொண்டார். இந்தச் செய்திகள் எல்லாம் இன்றுள்ள பல மாணவத் தளிர்களுக்குத் தெரியாமல் போயிருக்கலாம். நினைவூட்டி நிலையை விளக்குவது நமது கடமை. சில முக்கியமான சம்பவங்களையொட்டி சந்தேகம் எழும்போது, தவறு எந்தத் தரப்பில் நடந்திருக்கிறது என்பதை அறிய நீதி விசாரணை ஏற்பாடு செய்யப்படுகிறது. முன்பிருந்த காங்கிரஸ் அரசுகளைப் போல் இல்லாமல் இந்த அரசு நீதி விசாரணைகளுக்கு ஏற்பாடு செய்ததை நாடு அறியும். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நடந்த சம்பவத்தில் நீரில் வீழ்ந்து மடிந்தது உதயகுமார் அல்ல என்று நான் சொன்னதே கிடையாது.

சந்தேகமாக இருக்கிறது. யார் என்று நிச்சயமாகச் சொல்ல முடியவில்லை என்றுதான் சொன்னேன். அதனையொட்டித்தான் நீதிபதி விசாரணை ஏற்பாடாயிற்று.

"That the dead body found, in the reservoir is in all probability that of Udayakumar, but he did not die due to police excess and that he should have died as a result of drowning only on the night of 23rd July 1971"

என்று தான் நீதி விசாரணை நடத்திய நீதிபதி குறிப் பிட்டிருக்கிறார்.

பாளைச் சம்பவமானாலும், கிளைவ் விடுதிச் சம்பவமானாலும் உண்மை நிலையை அறியத்தான் கழக அரசு நீதி விசாரணைக்கு ஏற்பாடு செய்தது. விசாரணையில் வெளிவந்த விபரங்களின் அடிப்படையில் தொடர்புடைய அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. மாணவர்களைத் தூண்டிவிடுகிறவர்கள் இன்னும் என்ன செய்ய வேண்டும் என்கிறார்கள்? இவர்கள் ஆண்டபோது என்ன செய்தார்கள் என்பதை மறந்துவிட்டு மனச்சாட்சி இல்லாமல் பேசுகிறார்களே; நியாயம்தானா? தாங்கள் ஏதாவது சொல்ல வேண்டும் என்பதற்காக நான் சொல்லாத ஒன்றைக் கற்பனை செய்து கொண்டு பேசுவதும், எழுதுவதும், அறிக்கைகள் விடுவதும் இன்றைய அரசியலில் சர்வ சாதாரணமாகி விட்டது!

உடன்பிறப்பே, பொய்யை ஓங்கிச் சொன்னால் உண்மையாகி விடாதா என்று எதிர்பார்க்கிறார்கள். பொய்யைக் கருவியாகக் கொண்டு ஒரு அரசைக் கவிழ்த்துவிடச் சதி செய்கிறார்கள். அவர்தம் கணைகளைத் தாங்கிக் கொள்ள நெஞ்சை நிமிர்த்தி நிற்கிறது நமது கழகம் என்பதை அவர்கள் உணரவில்லை; பாவம்!

அன்புள்ள,

மு. க.

(11-12-1973)

71. காலக் கருவூலம்!

உடன் பிறப்பே,

உடல்நலத்திற்காக, நான் நாள்தோறும் Becosules - B-Complex என்ற Capsules ஒன்று சாப்பிட்டு வருகிறேன். "கேப்ஸூல்ஸ்" என்றால் என்ன வென்று உனக்குத் தெரியும். சத்துள்ள சிலவகை மருந்துகளைச் சிறு குழல் போன்ற கருவியில் அடைத்து வைப்பதற்குப் பெயர்தான். கேப்ஸூல்ஸ்-Capsules- என்பதாகும். நான் சாப்பிடும் அந்த Capsule-இல் என்னென்ன அடங்கியிருக்கின்றன என்பதை, அந்த மருந்துப் பெட்டியின் அட்டையின்மீதும், தனியாக ஒரு தாளிலும் அச்சடித்து வைத்திருக்கிறார்கள். நான் பயன்படுத்தும் Capsule மீது-

Each Capsule contains
Thiamine Mononitrate I. P. 50 mg
Riboflavine I. P. 25 mg
Pyridoxime
Hydrochloride I. P. 10 mg
Vitamin B 12. I. P. 5 mg

என்பது போன்ற குறிப்புக்கள் இருக்கின்றன; அதாவது பாட்டிலிலும், அதனைப் பாதுகாக்கும் பெட்டியிலும், பிறிதொரு தாளிலும்! உடலுக்குச் சாப்பிடும் Capsules பற்றிய குறிப்புக்களே இவ்வளவு வெளிப்படையாக இருக்கும் போது, ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்குப் பிறகு இருபதாம் நூற்றாண்டின் இந்தியாவைப்பற்றி அறிந்து கொள்ளப் பயன்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு இப்போது டெல்லியில் புதைக்கப்பட்டுள்ள Time Capsule பற்றி எந்த விபரமும் வெளியிடப்படாமல் இருப்பதும், ஐயப்பாட்டுக்குரியதும், பிரச்சினைக்குரியதுமான வதந்திகள் பரவியிருப்பதும் முறைதானா என்பதை அனைவரும் சிந்தித்தாக

வேண்டும். இந்தியாவின் மூத்த தலைவர்கள் பலரையும், முக்கிய நிகழ்ச்சிகள் பலவற்றையும் அந்தக் "காலக் கருவூலம்" (Time Capsule) அடக்கிக் கொண்டிருக்க வில்லையாம்.

அதைவிட வேடிக்கை, அதில் எந்த விபரங்கள் அடங்கியிருக் கின்றன என்பதும் சரியாக வெளியிடப்படவே இல்லை. வெளிவந்த ஒன்றிரண்டும் தவறான விபரங்கள். இவைகளையெல்லாம் நமது செழியன் அவர்கள் நாடாளுமன்றத்தில் விளக்கிப் பேசியிருக்கிறார். நலிவுபோக்கும் மருந்து Capsule காட்டுகிற விபரங்களைக்கூட நாட்டின் வரலாற்றைச் சுமந்து கொண்டிருக்கும் Time Capsule காட்டவில்லை என்பது வேதனைக்குரியதாகும். நமது குரலை ஆதரிக்கும் வகையில் அனைத்துக் கட்சியினரும் நாடாளுமன்றத்தில் பேசியிருக்கிறார்கள்-எத்தனையோ ஆண்டுகளுக்குப் பிறகு, நமது சந்ததியினர் காணக்கூடிய காலக் கருவூலத்திலே கூடவா அரசியல் என்று கேட்கத் தோன்றுகிறது!

அன்புள்ள,

மு. க.

(12-12-1973)

72. ஒன்று சொல்க!

உடன் பிறப்பே,

“தண்பொழிலில் குயில் பாடும் திருவாரூரில்
தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றம் காண்
வண்மையொடும் உண்மையொடும் வாழ்ந்திடுங்காண்
மக்களிடை எழுச்சிக்கு மருந்தாகுங் காண்
புண்வாய்ந்தோர் அல்லர் காண் திருவாரூரின்
புலி இளைஞர்கள் காண்-தோள்கள்
பூரித்தார் காண்-களம்பிற்றுகாண்
தமிழச் சிங்கக் கூட்டம்-
கிழித்தெறியத் தேடுது காண் பகைக் கூட்டத்தை”

இப்படி ஒரு கவிதையைப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எனக்கு அனுப்பி வைத்தார். எப்போது தெரியுமா? 1942 ஆம் ஆண்டு. ஆமாம்; திருவாரூரில் தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றத்தின் ஆண்டு விழாவை நடத்துகிறோம். பேராசிரியர் அன்பழகன் அவர்களும் அருமை நண்பர் மதி அவர்களும் அந்த விழாவில் கலந்து கொண்டு, தித்திக்கும் தேன் தமிழ் எடுத்து முக்கனியும் கலந்து திக்கெட்டும் புகழ்க் கொடி கட்டி ஆண்ட தமிழ் இனத்துமான வேந்தர்களின் மங்கா ஒளியை அன்றைய மாணவர் விழாவில் எடுத்தியம்பினர். எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு? நினைத்துப்பார் கொஞ்சம்! முப்பது ஆண்டுகளுக்கு முன்பு! அன்றைய மாணவர் சமுதாயம் கிழித்தெறியத் தேடிய பகை எது? பாவேந்தர் கவிதையில் முரசு கொட்டுகிற அந்த வீர வரிகளுக்கு உண்மையான பொருள் என்ன? கிழித்தெறியத் தேடுது காண் பகைக் கூட்டத்தை! எந்தப் பகைக் கூட்டத்தை? உயிருக்கு நேரான தமிழ் மொழியின்மீது தாக்குதல் நடத்தப்பட்ட இந்தி ஆதிக்கத்தை! இன உணர்ச்சியற்ற தன்மையை, அறிவுக் கண்களை மூடும் பழைய காலக் கண்மூடி வழக்கங்களை!

இத்தகைய பகைக் கூட்டத்தைத்தான் கவிஞர் குறிப்பிட்டார். மாணவர்கள் மருந்தாக அமைய வேண்டுமாம்! கவிஞரின் ஆசை அது! எதற்கு மருந்தாக இருக்க வேண்டுமென்று அந்தப் புதுவைக் குயில் கூவியது? மக்களிடையே எழுச்சிக்கு மருந்தாகுங்காண் என்றல்லவோ கூவியது? சுயமரியாதையற்று, சுடர் முகம் தூக்க வழியற்று, ஓடப்பராய், ஏழையப்பராய் சுழலும் பொட்டுப் பூச்சி மனிதர்களை எழுச்சி கொள்ளச் செய்யும் மருந்தாக மாணவக் கண்மணிகள் விளங்கிட வேண்டுமென்று அவர் விரும்பினார். அவர் எண்ணமே வண்ணக் கவிதை ஆயிற்று! என் உயிர் மூச்சனைய உடன்பிறப்பே, முப்பது ஆண்டுகளுக்கு முன்பு-என் மாணவப் பருவமும், என்போன்றோர் மாணவப் பருவமும், விழியனைய மொழிகாக்க, வீழாப்புகழ் கொண்ட தமிழகத்தின் மரபு காக்க, அணிவகுத்து நின்ற அந்தக் காட்சி தெரிகிறது, மனக்கண்களுக்கு! இன்று சில மாணவர்களின் போக்கு, அவர்களையும் சீர்குலைத்து ஏனைய மாணவச் செல்வங்களின் எதிர்காலத்தையும் கருக்கி விடுமோ என்ற கவலையல்லவா, நம் கண்களைக் குளமாக்குகிறது. இன்னது செய்கிறோம் என்று தெரியாமல் "இன்னா" செய்யும் இளம் மாணவத் தளிரைப் பார்த்துப் பேசும் வாய்ப்பு ஏற்பட்டால், நீ அந்தக் கொழுந்து உள்ளத்திடம் இதைச் சொல்:

"தம்பீ! உனக்காக உதைபட்டவன், தனிமைச் சிறையில் அடைபட்டவன், இன்று தமிழகத்தை ஆளும் பொறுப்பில் இருக்கிறான்.

உன் ஏசல் மொழிகளை இசை எனவும், நீ வீசும் கற்களை மகிழ மலர்கள் எனவும், நீ எரிக்கும் கொடும் பாவிகளை அவன் இலட்சியப் பயணத்திற்கேற்ற தீப்பந்தங்களெனவும் அவன் கருதிக் கொண்டிருக்கிறான். நீர் இடித்து நீர் விலகாது என்பது அவன் நம்பிக்கை!"

இதைச் சொல்; போதும்!

அன்புள்ள,

மு. க.

(13-12-1973)

73. புன்னகையும் பெருமூச்சும்!

உடன் பிறப்பே,

சென்னை மாநகராட்சி மன்றத்தில் நடைபெற்றுள்ள பணக்கையாடல் பற்றிக் கழக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளைப் பற்றி நீ பாராட்டி எழுதியுள்ளதைக் கண்டு உணர்ச்சி வசப்பட்டேன். எனக்கோ, அரசுக்கோ தனிப்பட்ட முறையில் பெருமை தர வேண்டுமென்பதற்காக இந்தப் பாரபட்சமற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை என்பதை நீ அறிவாய். இன்று நமது கழகத்தின் முன்னாள் மேயர்களும் மாநகராட்சி உறுப்பினர்கள் சிலரும் கூடக் கைதாகியுள்ளனர். சட்டம் தன்னுடைய கடமையைச் செய்யும்போதும், நீதியின் நெஞ்சம் தன்னுடைய தீர்ப்பை வழங்கிடும் போதும் அவைகளின் கண்ணோட்டத்தில் எல்லோரும் சமமே என்ற அழுத்தமான எண்ணத்திற்கு நாம் சொந்தக்காரர்கள். ஆகவே கவலைகள் அலைமோதிடினும், கண்கள் குளமாயினும், நட்பு குறுக்கிடினும், உறவு பாசம் போன்ற உணர்வுகள் இதயத்தைச் சுக்கு நூறாக ஆக்கிடினும்-அனைத்தையும் பொறுத்துக் கொண்டு கடமை வழி நடக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் யார் யார் வர வேண்டுமென்று அல்லும் பகலும் நாம் அனைவரும் பாடுபட்டோமோ அவர்களில் சிலர், இன்று சிறையிலே இருக்கிறார்கள். நமது கழக ஆட்சியில், நமது கழக மாநகராட்சி மன்ற உறுப்பினர்களிலே சிலர் சிறையில் இருக்கிறார்கள்! 1969ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு ஆண்டு மேயர் தேர்தலிலும் நமது மேயர் வர வேண்டுமென்பதற்காக நான் பட்ட கஷ்டங்களை ஏற்றுக்கொண்ட இன்னல்களை, விழித்த இரவுகளை, உணவு கொள்ளாது அலைந்த நாட்களை, மேயர்களாக ஒரு காலத்தில் இருந்து இன்று சிறையில் இருக்கிற நண்பர்கள் அறியாதவர்களல்லவே!

அந்தக் கஷ்டங்களின் விளைவுக்காக-அண்ணன் மகிழ்ச்சியுடன் அணிவித்த கணையாழிதானே இன்னும் விரலில்

ஒளி விட்டுக் கொண்டிருக்கிறது. மாநகராட்சி மன்ற வெற்றி குறித்துக் களிப்புக் கவிதை எழுதியதும் இந்தக் கைதான்; இன்று மாநகராட்சியைக் கலைத்துவிட ஆணை பிறப்பித்து கை எழுத்திட்டதும் இந்தக் கைதான்!

உடன்பிறப்பே, சிறுசிறு சுள்ளிகளாக எடுத்து வந்து பறவை கூடு கட்டுகிறது. முட்டையிடுகிறது. குஞ்சு பொரிக்கிறது. அப்போது பறவைக் கூட்டுக்குள்ளே ஒரு பாம்பு நுழைந்து குஞ்சுகளை விழுங்க முனைகிறது. பறவை வந்து விடுகிறது. பாம்பு அந்தக் கூட்டுக்குள்ளேயே மறைந்து கொள்கிறது. பறவை, பாம்பைக் கண்டுபிடிக்க கூட்டையே கலைக்கிறது. பெரிய பறவையின் கால் நகங்கள் பாம்பைக் கீறி எறிகின்றன.

கூடு சேதமடைந்தாலும் குஞ்சுகள் காப்பாற்றப்பட்டதில் அந்தப் பறவைக்கு ஒரு ஆறுதல்தான். பறவையின் இடத்தில் நமது அரசையும், பாம்பின் இடத்தில் மாநகராட்சியில் நடந்த தவறையும் பொருத்திப்பார். கலைந்த கூடாக மாநகராட்சியையும், காப்பாற்றப் பட்ட குஞ்சுப் பறவையாகக் கழகத்தையும் ஒப்பிட்டுப்பார். ஒரு பெருமூச்சு! ஒரு புன்னகை! அவ்வளவுதான் உனக்கு நான் சொல்ல முடியும்.

அன்புள்ள,

மு. க.

(15-12-1973)

74. குறள் மறவோம்!

உடன் பிறப்பே,

முன்னாள் முதல்வர் பெரியவர் பக்தவத்சலம் அவர்கள், மாநகராட்சி மன்றப் பணக்கையாடல் குறித்துக் கழக அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளைப் பாராட்டியிருப்பதோடு, "தலையீட்டுக்கு இடமின்றித் தவறு செய்தவர்கள் யாராயினும் தண்டிக்கப்பட வேண்டுமென்பதில் முதலமைச்சர் அக்கறை கொண்டுள்ளார்" என்ற கருத்தையும் நம்பிக்கையுடன் ஒரு அறிக்கை வாயிலாக வெளியிட்டிருக்கிறார். இதுபோன்ற விஷயங்களில் நிச்சயமாக அவர் நம்பிக்கை வீண் போகாவண்ணம் நான் நடந்துகொள்வேன் என்பதும் அவருக்குத் தெரியும். சென்னை மாநகராட்சி பற்றி ஒருமுறை சட்டப் பேரவையில் விவாதம் வந்தது.

எப்போது தெரியுமா? பெரியவர் பக்தவத்சலம் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது!

அப்போது அவர், மாநகராட்சி மன்றத்தில் தவறு செய்கிற உறுப்பினர்களில் கட்சிப் பாகுபாடே கிடையாது. இந்த ஒரு விஷயத்தில் எல்லோரும் கட்சிகளை மறந்து விட்டு ஒற்றுமையாகப் பணியாற்றுகிறார்கள் என்று மெத்த ஆதங்கத்தோடு குறிப்பிட்டார். அதன் பொருளை அன்றைக்கே நாடு நன்றாகப் புரிந்து கொண்டது.

இப்போது மாநகராட்சி மன்றத்தில் தி. மு. க. உறுப்பினர்களும், வேறு கட்சி உறுப்பினர்களும் கைது செய்யப்படும்போது அதற்கும் சிலர் அரசியல் உள்நோக்கம் கற்பிக்கிறார்கள் அல்லவா? அப்படிப்பட்டவர்களுக்கு உண்மையை உணர்த்திடத்தான் திரு. பக்தவத்சலம் அவர்கள் முதல்வராக இருந்தபோது ஆற்றிய உரையை நினைவுபடுத்துகிறேன்.

முன்னாள் முதல்வர் அவர்கள், எவ்வளவோ காரசாரமாக என்னைத் தாக்கிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் இந்த ஒரு விஷயத்தில் தனக்குள்ள அரசியல் அனுபவத்தின் காரணமாக

ஒரு நல்ல விளக்கத்தை நாட்டு மக்களுக்கு வழங்கியதற்காக நான் நன்றி பாராட்டுகிறேன்.

அரசின் செயல்கள் அனைத்தையும் ஆதரித்தால் தான் மகிழ்ச்சியும் நன்றியும் தெரிவிக்கப்படுமா என்று சிலர் கேட்கக்கூடும்.

பாராட்ட வேண்டியதைப் பாராட்டி, சுட்டிக்காட்ட வேண்டிய தவறுகளைச் சுட்டிக் காட்டிட யார் முன்வந்தாலும் அவர்களை இரு கரம் நீட்டி வரவேற்றிடவும், தன்னைத்தானே தவறு இருப்பின் திருத்திக் கொள்ளவும் கழகம் தயாராக இருக்கிறது! கழக அரசும் அவ்வாறே!

"இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்
கெடுப்பார் இலானுங் கெடும்"

என்ற குறளை நாம் மறந்திடவில்லை.

அன்புள்ள,

மு. க.

(16-12-1973)

75. உன் எதிரே!

உடன் பிறப்பே,

மதுரைப் புகைவண்டி நிலையத்தில் உன்னைக் கண்டேன். உணர்ச்சிப் பிழம்பாகக் காட்சி அளித்தாய். அங்கு நீ எழுப்பிய ஒலி முழக்கம், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழிய பாண்டியனின் படை முழக்கத்தோடு ஒப்பிட்டுப் புகழ வேண்டிய ஒன்று என்றுதான் புலவர்கள் கூறுவர். அன்று காலையில் தமுக்கம் கலையரங்கில் உன் சுடர் முகம் கண்டு நான் சொக்கிப் போனேன். உன் தூய தொண்டின் மேன்மை கண்டு, பிரிந்தவர் எல்லாம் கூடினரே அங்கு!

அவர்களை நீ கழகத்திற்குள் மீண்டும் அழைத்துக் கொண்ட அந்தப் பாச உணர்வை, அண்ணன் கற்றுத் தந்த அரசியல் நாகரிகத்தை எண்ணி எண்ணிப் பூரிக்கிறேன். நீ ஓடி ஓடிச் சேர்த்த ஒரு லட்சம் வெண் பொற் காசுகளை அண்ணா அறிவாலய நிதியாகப் பெற்றுக் கொண்டபோது என் இதயம் மகிழ்ச்சிக் கடலில் பாய்மரப் படகாயிற்று. மதுரை மண்ணின் உறுதியை, அந்தப் பழம்பெரும் பதியின் வீரத்தை விழிகளால் எழுதிக் காட்டிய என் தங்கமே! உன்னை வாழ்த்துகிறேன். முகவை மாவட்டத்திலும் உன் முழுநிலா முகத்தைக் காட்டினாய். கார்முகில் கூடி கடுமழை பொழிந்தாலும் கழகப் பணியை நிறுத்த மாட்டேன் என்று நீ எடுத்துக் கொண்ட உறுதிக்கும், ஆற்றிய பணிக்கும் என்னதான் பரிசு கொடுக்கமுடியும்? ஒரு லட்சத்து இருபதாயிரத்துக்கு மேற்பட்ட தொகையை, அறிவாலயத்திற்கு நீ காணிக்கையாக வழங்கியபோது அருந்தொண்டாற்றிய உன் அழகிய கைகளை எடுத்துக் கண்ணிலே ஒத்திக் கொள்ளலாம் போல் இருந்தது. உன் உழைப்பு வெல்க! வெல்க! என்று வாழ்த்துகிறேன். திருச்சியிலே உன் தொடர்பணியிலே சிறிது சோர்வு! அந்தச் சோர்வு போக்க நான் சற்றுக் கடுமையாகக் கூறிய சொற்களையும் பொறுத்துக் கொண்டு புன்னகை புரிந்தாயே; கண்மணி! அதுதானே யாராலும் பிரிக்க முடியாத நமது குடும்ப பாசம்!

சேலத்து நாமக்கல் பாறையில் நீ நமது கழகத்தின் சிகரமாக நின்றாயே. அதை நான் என்றைக்கும் மறக்க மாட்டேன். ஒரு லட்சத்து முப்பதாயிர ரூபாய் நீ வழங்கியது பெரிதல்ல! லட்சக் கணக்கான தமிழ்ப் பெருங்குடி மக்களை என் எதிரே அமர வைத்து, "பார்த்தாயா சேலத்துச் சிறப்பை!" என்று பல் எல்லாம் முல்லையாகச் சிரித்துக் காட்டினாயே; உடன்பிறப்பே! என் உயிரின் மூச்சே! உன் நெஞ்சுறுதியும் உழைப்பும் உள்ளவரையில் அண்ணன் உருவாக்கிய இந்தக் கழகத்தை யார் என்ன செய்ய முடியும்? உன் எதிரே பொய்மலைகள் பொடிப் பொடியாகும்!

துரோகம் தூளாகும்! மிரட்டல், இனி உன்னைக்கண்டு மிரண்டோடும்!

கழகத்தின் சக்தி நீ!
அண்ணன் கொள்கைக்குக் காவல் நீ!
ஆர்த்திடும் பகைக்குக் காலன் நீ!
நீ வாழ்க! வெல்க!

அனபுள்ள,

மு. க.

(18-12-1973)

76. தட்டிக் கேட்கலாமா?

உடன் பிறப்பே,

ஒரு வீட்டில் மூன்று பிள்ளைகள், ஒருவன் உடல் நலிவின் காரணமாகக் குழந்தைப் பருவ முதற்கொண்டு இளைத்துப் போய் இருக்கிறான். அவனுக்கு உடல் வலிவு பெறும் வண்ணம் சக்தி வாய்ந்த மருந்துகளையும், நல்ல உணவுகளையும் வழங்குவது தாயின் கடமை.

இன்னொருவன், நல்ல உடற்கட்டு இருந்தும், உழைக்காமல், தன் திறமையைக் காட்டாமல் அந்த வீட்டில் மிகுந்த பின்னணியிலே இருக்கிறான். அய்யோ பாவம். அவன் திறமையிருந்தும் உழைக் காமல் இருக்கிறானே என்று அவன் இருக்குமிடம்தேடிப் பழரசமும் பதார்த்த வகைகளும் அளித்துக் கொண்டேயிருந்தால், அந்த மகன் கவலையில்லாமலேயும், பொறுப்பில்லாமலேயும் வளர்வான்.

மற்றொரு மகன், மிக வலிவான உடற்கட்டுப் படைத்தவனல்ல என்றாலும், தன்னால் முடிந்த அளவு உழைத்து முன்னேறிக் கொண்டிருப்பவன். அவன்தான் முன்னேறிக் கொண்டிருக்கிறானே என்று எந்தத் தாயும் அவனுக்குத் தேவையான உணவைக் கொடுக்க மறுத்திட மாட்டாள்.

அண்மையில் வெளி வந்துள்ள ஆறாவது நிதிக்குழுவின் அறிக்கையைப் பார்த்த பிறகு மேற்கண்டவாறு சிந்திப்பதிலே தவறில்லை அல்லவா?

நல்ல முறையில் திட்டங்களை நிறைவேற்றுகிற மாநிலங்கள், தண்டிக்கப்படுகிற கொடுமையை யாரிடம் சொல்லி அழுவது?

இந்தியாவை எடுத்துக் கொண்டால் சிறப்பாக மூன்று வகையான மாநிலங்களைப் பிரிக்கலாம்.

அதாவது, வளமே இல்லாத காரணத்தால் தங்கள் வருமானங் களைப் பெருக்கிக் கொள்ள முடியாமல் வருந்துகிற மாநிலங்கள்.

இரண்டாவது, ஏராளமான வளம் இருந்தும் "ஏனோ தானோ" என்ற நிர்வாகத்தால் வருமானங்களைப் பெருக்கிக் கொள்ள முடியாமல் தங்களைப் பிற்போக்கு மாநிலங்களின் பட்டியலில் இணைத்துக் கொள்பவை.

மூன்றாவது வகைதான் நமது மாநிலத்தைப் போல், இருக்கிற வளத்தைக் கொண்டு ஏற்றமிகு திட்டங்களை வகுத்துச் சிக்கனம் சீரான நிலைமை ஆகியவற்றை உருவாக்கியுள்ள மாநிலங்கள்.

இந்த மூன்றாவது வகை மாநிலங்கள்தான் இப்போது சோதனைக்கு ஆளாகியிருக்கின்றன.

பிற்படுத்தப்பட்டவர்களுக்குச் சலுகைகள் தேவைதான்! அவைதான் நான் குறிப்பிடும் முதல் வகை மாநிலங்கள்.

நிர்வாகத் திறன் இல்லாமல் நிதிநிலையைச் சீராக்க முடியாத மாநிலங்களையும், பின் தங்கிய மாநிலங்களாகக் கணக்கில் எடுத்துக் கொண்ட தவறுதலுக்காக, செம்மையாகச் செயல்பட்டு வசதி வாய்ப்புக்களைப் பெருக்க முனைகின்ற தமிழ்நாடு போன்ற மாநிலங்கள் தங்களின் நியாயமான பங்குத் தொகைகளை நிதிக் குழுவிடம் பெற முடியாமல் தவிக்க வேண்டுமா என்பதே நமது கேள்வி!

இதையெல்லாம் தட்டிக் கேட்கும் அரசாக நமது அரசு இருப்பதுதானே சிலருக்குக் கண்ணை உறுத்துகிறது!

அன்புள்ள,

மு. க.

(20-12-1973)

77. பெரியாரின் வெற்றி!

உடன் பிறப்பே,

தொல்லை கொடுக்கிற பிள்ளையைத் தாய் அடிக்கும்போது, "அடிக்காதே! வாயால் கண்டித்து வளர்த்திடு" என்று சொல்லுகிற தந்தைகளையும் பார்த்திருக்கிறோம். "பிள்ளை என்ன செய்து விட்டான்? சாக்கடையில்தானே விழுந்துபுரண்டான். சந்தியில்தானே வம்பு இழுத்தான்-பிக்பாக்கெட் அடித்ததும் பெண்களைத் துரத்திச் சென்றதும் பெரிய குற்றமா? அதற்காகப் பிள்ளையை இப்படி அடிக்கிறாயே? கொலைகாரி!" என்று தாயைத் தாறுமாறாகத் திட்டி பிள்ளைக்காகப் பரிந்து பேசுகிற தந்தைகள் சிலரும் நாட்டில் இருக்கிறார்கள்.

சாதிவெறி, மதக்குரோதம், மூடநம்பிக்கை, இத்யாதி கொடுமைகளை அகற்றுவதற்கு, அடிக்கும் தாயைப்போல் பெரியார் ஆத்திரம் காட்டினார். அடிக்கத் தேவையில்லை, வாயாலேயே பிள்ளையைக் கண்டித்துத் திருத்தலாம் என்ற வகையில் தமிழ்நாட்டில் உள்ள படித்த பெருமக்களும் பத்திரிகையாளர்களும் நடந்து கொண்டிருப்பார்களேயானால், பெரியார், பிள்ளையைத் திருத்துவதில் - அதாவது சமுதாய நோயைத் தீர்ப்பதில் முழுமையான பெரு வெற்றி அடைந்திருப்பார்.

சமுதாயத் தீமைகளுக்குப் பரிந்து பேசுகிறவர்கள் மேல் மட்டத்தில் இருந்தார்களே தவிர, பெரியாரின் மீது சீறி விழுவோர் அணிவகுத்தார்களே தவிர, பெரியார் நோக்கம் சரிதான்; அதை நிறைவேற்றுகிற முறைதான் மாற்றப்பட வேண்டும் என்று கூறியவர்கள் மிகமிகச் சிலராகத்தான் இருந்தார்கள்.

தவறு செய்யும் பிள்ளையைத் தண்டிக்கும் தாயைக் காதகி-பாதகி என்று அர்ச்சிப்பது போல, பெரியாரையும் எதிர்த்தார்கள். அவர் வேகம் அதிகமாயிற்று. எரிமலையானார்!

அவர் மறைந்த பிறகு, அவரைப்பற்றி பிரபல ஏடுகளும், பிறகட்சித் தலைவர்களும் வெளியிட்டுள்ள வாசகங்களைப் பார்த்தால், அய்யோ! அவர் உயிரோடு இருக்கும் போது இந்தக் கருத்துக்களில் ஒன்றிரண்டைச் சொல்லியிருந்தாலும் அவர் நெஞ்சம் சிறிது குளிர்ந்திருக்குமே என்றுதான் எண்ணிடத் தோன்றுகிறது.

'வேதகாலத்திலேயே பெரியாரைப் போன்றவர்கள் இது போன்ற கருத்துக்களைச் சொல்லும் சிரேஷ்டர்களாக விளங்கினார்கள்' என ஒரு ஏடு எழுதுகிறது இன்று!

அவர் சிறந்த தேச பக்தர்-கதர் இயக்கத்தின் முன்னோடித் தலைவர் என்றெல்லாம் அனுதாபச் செய்தியில் தேசத் தலைவர்கள் புகழ்ந்துள்ளார்கள், இப்போது!

"தேசத்துரோகி"

"சமூக விரோதி"

என்றெல்லாம் நேற்று வரையில் அவரைப்பற்றி அவதூறுகளைப் பொழியாமல் இருந்து அவர் சொல்வதை எப்படிச் சொல்ல வேண்டும்; அவர் நோக்கம் நிறைவேற எப்படிச் செயல்பட வேண்டும் என்ற வகையில் பெரியாருக்கு அப்போது யோசனைகள் கூறப்பட்டிருக்குமேயானால்,

அந்த யோசனைகளை - 'எடுத்தேன், கவிழ்த்தேன்' என்று உதறி விடாமல் பரிசீலித்து ஏற்றுக் கொள்ளக் கூடிய இயல்பு கொண்டவர்தான் அவர்.

எப்படியிருப்பினும், எதிர்ப்புகளிலேயே உற்சாகம் காணக்கூடிய ஏந்தல் பெரியார் அவர்கள் தன்னுடைய அறுபது ஆண்டு காலப் பொது வாழ்க்கையில், எந்த முக்கிய லட்சியத்திற்காக இடைவிடாது உழைத்தாரோ அந்த இலட்சியத்தின் வெற்றி அறுவடையைக் கண்டுவிட்டார்; வெள்ளத்திற்கும் புயலுக்குமிடையே!

அன்புள்ள,

மு. க.

(26-12-1973)

78. நம்மை வென்றாரா?

உடன் பிறப்பே,

பெரியாரின் வெற்றி பற்றி நேற்று கடிதத்தில் எழுதியிருந்தேன். அதை எழுதி உனக்கு அனுப்பிய பிறகு சற்றுக் கண் அயரலாம் என்று படுத்தேன். உறக்கம் வரவில்லை. பெரியார் சாதி மத பேதங்களை மூடநம்பிக்கைகளை அகற்றுகின்ற பணியிலே வென்றார் என்றும், தன்னைத் தேசத் துரோகி என்றும் வகுப்புவாதி என்றும் சமூக விரோதி என்றும் கூறியவர்கள், தங்கள் மனப்போக்கை மாற்றிக் கொண்டு உண்மையை உணருகிற அளவுக்கு அவர்களை யெல்லாம் வென்றார் என்றும் எழுதியிருக்கிறேன். அதுசரிதான். ஆனால் ஒரு சந்தேகம். பெரியார் நம்மை வென்றாரா? என்ன இப்படித் திடீரென்று கேட்கிறேனே யென்று திகைக்கிறாயா? மனச்சாட்சிக்கு விரோதமில்லாமல் சிலவற்றைச் சிந்தித்துப் பார்த்தால் பெரியார் நம்மை வென்றிடவில்லை என்றுதான் தோன்றுகிறது. கடவுள் கொள்கையில் "ஒருவனே தேவன்" என்ற நமது கருத்து ஏற்கனவே வெளிப்படையாக அறிவிக்கப்பட்ட ஒன்று! ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம் என்பது நமது முழக்கம். ஆத்திகர் மனம் புண்படாமல் பண்படப் பணிகள் ஆற்றிட வேண்டும் என்பதே அண்ணா வகுத்த வழி! அதில் பெரியாருக்கும் நமக்கும் நடைமுறையில் வேறுபாடுகள் உண்டு என்பதைத் தெளிவாக்கியிருக்கிறோம். ஆனால் சாதிமத பேதங்களை மூடநம்பிக்கைகளை வேரோடு களைவதில் கட்சி வேறுபாடின்றி அனைவருமே பெரியாருடன் உடன்பாடு கொண்டவர்கள்தான்!

அந்த உடன்பாடான கருத்தை உரக்கச் சொல்லுகிறோமே தவிர, நம்மை சாதி உணர்ச்சி தொடாமல் இருக்கிறதா? பின்தங்கியோர், தாழ்த்தப்பட்டோர் என்றுதானே பெரியார் உழைத்தார். ஆனால் நாம் பின் தங்கியோரில் பல சாதிகளைப் பிரித்துக் கொள்கிறோம். தாழ்த்தப்பட்டோரில் இரண்டு

மூன்று சாதிகளைப் பிரித்துக் கொள்கிறோம். அந்தக் குறுகிய வட்டங்களுக்குள் நம்மை அடைத்துக் கொள்கிறோம். அந்தந்தச் சிறு பகுதியின் வளையத்துக்குள்ளேதான் நமது அரசியல் சிந்தனை-நமது சமுதாயச் சிந்தனை-நமது பதவிச் சிந்தனை-நமது உத்யோகச் சிந்தனை-நமது சிபாரிசுச் சிந்தனை-நமது உறவுச் சிந்தனை-நமது 'கொள்வன கொடுப்பன' சிந்தனை என்று நம்மையறியாமலே சாதிச் சகதியிலே மூழ்கி விடுகிறோம். நாம் எந்த இடத்தில் இருக்கிறோம்; எந்தெந்த அறிவுரைகளை மக்களுக்கு வழங்கினோம்; அந்த மொழிப்படி நாம் நடந்து கொள்கிறோமா என்று நம்மையே நாம் நிலைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டால், சாதி ஒழிப்பு விஷயத்தில் பெரியார் நம்மை வென்றாரா என்ற கேள்விக்கு "இல்லை! அவர் வென்றிடவில்லை!" என்ற பதில்தான் நமக்கு எதிரொலியாகக் கிடைக்கும். வேதனையுடன் இதை நான் வெளியிடுகிறேன். வேறு நேரமில்லை; அதனால்!

அன்புள்ள,

மு. க.

(28-12-1973)

79. இருபதாயிரம் பாடி வீடுகள்!

உடன் பிறப்பே,

வரும் ஜனவரி ஐந்து ஆறு நாட்கள் - சனி, ஞாயிறு ஆகிய இரு கிழமைகளில் நமது கழகத்தின் இருபதாயிரத்துக்கு மேற்பட்ட கிளை அமைப்புக்களின் தேர்தல் நடைபெற இருக்கிறது. பத்து லட்சத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்கள், இருபதாயிரம் கிளைக் கழகச் செயலாளர்களையும் ஏனைய கிளை நிர்வாகிகளையும் தேர்ந்தெடுக்கப் போகும் நமது அடித்தள அமைப்புக்கள் உருவான பிறகு அதன் மேல்மட்டங்களின் தேர்தல் படிப்படியாக நடைபெறத் தொடங்கி விடும். அண்ணா அவர்கள் 1949 ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17-ஆம் நாள் நமது கழகத்தைத் தொடங்கியதையொட்டி மிக விரைவாகவே கழகத்தின் ஜனநாயக அமைப்புகள் செயல்படத் துவங்கிவிட்டன. ஏற்கனவே ஏற்றுக் கொண்டிருந்த இலட்சியங்களுக்கான வடிவம் அமைக்கப்பட்டது. கொள்கை, கோட்பாடுகளைப் பிரகடனம் செய்தோம். கழக உறுப்பினர்கள், அமைப்புக்கள், நிர்வாகிகள் அனைத்துக்குமான கழகச் சட்ட திட்டங்கள் வகுக்கப்பட்டன. கழகம் தோன்றிய காலத்திலிருந்து கழகத்தின் வெள்ளிவிழா ஆண்டினை நாம் நெருங்கிக் கொண்டிருக்கும் இந்தக் காலம் வரையில் அண்ணா வடித்தளித்த ஜனநாயக நெறி தவறாமல் கழகத்தின் கட்டுப்பாடு காக்கும் சட்ட திட்டங்களுக்கு உட்பட்டு நடைபோட்டு வருகிறோம்.

கழகக் கட்டுப்பாட்டை உடைத்தவர்களை - அவர்களில் முன்னணி வரிசை, தொண்டர் வரிசை என்ற வேறுபாடு பார்க்காமல் கண்டித்தும், தண்டித்தும் நீங்காப் புகழ் எய்தியுள்ளது நமது இயக்கத்தின் வரலாறு.

தூக்கி எறியப்பட்ட துரோகிகள், துண்டிக்கப்பட்ட பல்லியின் வாலைப் போல் துடித்துக் காட்டியிருக்கிறார்களே தவிர, கழகத்தின்

சட்ட திட்டங்களுக்கு அறை கூவல் விடத் தக்க அளவுக்கு நியாய நெஞ்சம் பெற்றவர்களாகத் திகழவில்லை.

தன்னால் கழகத்துக்கு என்ன லாபம் என்று கருதுகிறவன் கழகத்தின் ரத்த நாளமாவான். கழகத்தினால் தனக்கு என்ன லாபம் என்று கணக்குப் போடுகிறவன் கழகத்துக்கு ஏற்பட்ட வலிப்பு நோய் ஆவான்...

இந்த உண்மை உணர்ந்து உழைத்தால் ஓராயிரம் வெற்றி களைக் குவித்திடலாம். அந்த உழைப்புக்கேற்ற பயிற்சிப் பாசறை களாகத்தான் இருபதாயிரத்துக்கு மேற்பட்ட கிளைக் கழகங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

அவைகளின் நிர்வாகிகள் தேர்தலில் எங்கும் கடுமையான போட்டியைக் காண்கிறேன் நான்! செயலாற்றும் பொறுப்புக்கு "நான், நீ" என்று ஒருவரையொருவர் முந்துவதும், போட்டி போடுவதும் கழகத்தின் வளர்ச்சியைத்தான் காட்டுகிறது.

ஓட்டுப் போடும் உறுப்பினரும், கழகக் கோட்டைக் காவல ராய்த் தேர்வு பெறும் நிர்வாகியும், வேறு யாருமல்ல! உன்னைப் போல் உடன்பிறப்புக்கள்தான். அனைவரையும் சுமப்பதற்கு அன்னை வயிறு தாங்காத காரணத்தால், தனித் தனித் தாய் வயிற்றில் பிறந்த சகோதரர்கள் நாம் என்று அண்ணா கூறியதை மறந்து விடாதே!

ஆசைப்பட்டவர், அல்லது நீ நினைத்தவர் ஒரு பொறுப்புக்குத் தேர்ந்தெடுக்கப்படாத நிலை ஏற்பட்டால், வெற்றி பெற்ற தோழரை விரோதியாகக் கருதாமல் அவருடன் இணைந்து கழக வளர்ச்சிப் பணிகளை மேற்கொள்ளும் பெருந்தன்மையும் கட்சிப் பற்றினையும் நீ பெற்றிருத்தல் வேண்டும்.

அன்பே! உன்னிடம் பகைமை விதைகளைத் தூவிக் கலகத்தை மூட்டிவிட்டுக் கழகத்தைப் பிளவு படுத்துவதற்கு எல்லாத் தரப்பிலிருந்தும் முயற்சிகள் நடைபெறுகின்றன.

எச்சரிக்கை! அண்ணன் தந்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு போற்றுவதோடு, உழைப்பு - ஒற்றுமை இரண்டின் பொருளும் அறிந்து செயலாற்றுக நீ சிங்கமென!

'நீர் இடித்து நீர் விலகாது' எனும் முதுமொழியை இதயத்தில் பதிய வைத்துக் கொள்க!

வெட்டி வா என்றுரைத்தால் கட்டிவரும் வீரன் நீ என்பதை நாடறியும்.

சுழன்றடிக்கும் சூறைக் காற்றுக்கு இடையிலேயும் கழகம் என்கிற கை விளக்கு அணைந்து போகாமல் காப்பாற்றும் திறன் படைத்தவன் நீ என்பதைப் பலமுறை உலகத்திற்கு அறிவித்திருக்கிறாய். அந்தத் திறமையை எனக்கும் உனக்கும் நமது முன்னணித் தலைவர்களுக்கும் அளித்தவர் நமது ஆருயிர் அண்ணனல்லவா? அந்த அண்ணன் கண்ட கழகத்தை அந்த அண்ணன் கண்ட கொடியைக் காத்திட இருபதாயிரம் பாடி வீடுகளை அமைத்து பத்து லட்சத்துக்கு மேற்பட்ட சிப்பாய்கள் பணிபுரியப் போகிறோம். நமக்கு அஞ்சா நெஞ்சம் தருவதற்கு அய்யாவும், அன்புவழி காட்டுவதற்கு அண்ணாவும் இருக்கும்போது கவலை எதற்காக?

அன்புள்ள,

மு. க.

(01-01-1974)

80. கொள்கை மலர்கள்

உடன் பிறப்பே,

இந்த சனிக்கிழமையும் ஞாயிற்றுக் கிழமையும் உன் கிளைக் கழகத்திற்கான நிர்வாகிகளின் தேர்தல். கிளைக் கழகத்தின் நிர்வாகப் பொறுப்பில் யார் அமர்த்தப்பட வேண்டுமென்பதில் எந்த விதமான விருப்பு வெறுப்பும் இல்லாமல் நீ நடந்து கொள்ள வேண்டும். நமக்குத் தெரிந்தவர் - நமக்கு வேண்டியவர் - நமக்கு நெருங்கியவர் - என்ற தகுதிகளுடன் நாளெல்லாம் ஓடியாடி உழைக்கக் கூடியவர் என்ற தகுதியும் முக்கியமானதாகும். நீயே அந்த நிர்வாகிகளில் ஒருவராக வருவதற்கு ஆசைப்பட்டால்கூட, "எத்தனை ஆண்டு காலம் கழகத்தில் இருக்கிறேன் தெரியுமா? யார் யாரை எனக்குப் பழக்கம் தெரியுமா?" என்ற உணர்வுகளுக்கு மட்டுமே இடம் தராமல், "நான் நிர்வாகியானால், எப்படியெல்லாம் கழகப் பணிகளை ஆற்ற முடியும்? ஒரு நாளைக்கு எத்தனை மணி நேரம் கழகத்திற்காக வேலை செய்ய முடியும்?" என்று உன்னையே ஒரு முறை கேட்டுக்கொண்டு அதற்குப் பிறகு கிளைக்கழகமாகட்டும், மற்றக் கழக அமைப்புகளாகட்டும்; அவைகளில் நிர்வாகப் பொறுப்புக்கு வருவது பற்றி முடிவு செய்!

கிளைக் கழகச் செயலாளர், மாவட்டச் செயலாளர், ஒன்றியச் செயலாளர், தலைமைக் கழகச் செயலாளர்கள், பொதுச் செயலாளர், தலைவர், மற்றும் எல்லா அமைப்புக்களின் நிர்வாகிகள் என்பதெல்லாம், ஏதோ அலங்காரத்திற்காக ஏற்றுக் கொள்கிற கழகப் பொறுப்புக்கள் அல்ல. அல்லும் பகலும் அயராது பணியாற்றி, அண்ணன் தந்த கழகத்தை ஆயிரங்காலத்துப் பயிராக வளர்த்துக் காத்திடும் காரியமாகும். எதிர்ப்புக்களை, ஏசற்கணைகளைத் தாங்கிக் கொள்கிற இதயமும், இடையூறுகளைக் கண்டு கலங்காத பொறுமையும், துரோகிகளால் உள்ளம் தூளாக்கப்படும்போது துவண்டிடாத மன உறுதியும், எல்லாவற்றுக்கும் மேலாகத்

தன்னலமற்ற-கண்ணயராத உழைப்பும் பொறுப்பு ஏற்பவர் களுக்குத் தேவை.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் கழக நெறியில் நின்று, ஜனவரி ஐந்து, ஆறு நாட்களில் இருபதாயிரம் கிளைகளில் இருந்து மணம் வீசி மலரப் போகிற அந்த இலட்சியப் பூக்களையெல்லாம் தொகுத்து வெற்றி மாலையாக்கி அண்ணன் தோளுக்குச் சூட்டத் தயாராகக் காத்துக் கொண்டிருக்கிறது தலைமைக் கழகம். என் தங்கமே! தந்திடுக அந்தக் கொள்கை மலர்களை!

அன்புள்ள,

மு. க.

(04-01-1974)

81. தெள்ளிய ஆலின் சிறு பழத்தொரு விதை!

உடன் பிறப்பே,

இந்த முறை நடைபெற்ற நமது கழகச் செயற்குழுக் கூட்டம், இயக்க வரலாற்றில் மட்டுமல்ல, இந்திய நாட்டு வரலாற்றிலே தலை சிறந்த ஒரு இடத்தை ஆக்ரமித்துக் கொள்ள இருக்கிறது என்பதை நான் உனக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். நமது ஆருயிர்த் தலைவர் அண்ணா அவர்கள் "ஹோம் ரூல்" என்ற ஆங்கில ஏட்டில் கடைசியாக எழுதிய கட்டுரையில் மாநில உரிமைகளுக்காக வாதாடுகிற உறுதியை எதிர்காலத்தில் நாம்பெற்றாக வேண்டுமென்றும், மத்திய அரசு மாநில அரசு இரண்டுக்குமிடையே மோதுதல் இல்லாத சூழ்நிலையை விரும்புகிறோம்; எனினும், நமது உரிமைக் குரல் அதனால் அடங்கிவிடக் கூடாது என்றும் பொருள்பட எழுதியுள்ளதைக் கருத்திற் கொண்டுதான் தமிழக அரசின் சார்பில் ராஜமன்னார் குழு அமைக்கப் பெற்று அந்தக் குழுவில் மூதறிஞர்களான ராஜ மன்னார், லட்சுமணசாமி முதலியார், சந்திரா ரெட்டி ஆகியோர் இடம் பெற்று மத்திய மாநில உறவு நிலைகள் எவ்வாறு இருக்க வேண்டுமென்ற பரிந்துரைகளைச் செய்தார்கள். இந்தியாவில் ஒரு மாநில அரசு, முதன் முதலாக எழுப்பிய முழக்கம் அதுவாகும். ராஜமன்னார் குழுவினரின் பரிந்துரைகளை எல்லாக் கட்சியினரும் ஆராய்ந்து கருத்துரை வழங்க உரிமை பெற்றிருக்கிறார்கள். அந்த வகையில் தி. மு. கழகம், செழியன், மாறன் இருவரின் தலைமையில் ஒரு குழுவை அமைத்து, நமது கழகம் கோருகிற மாநில சுயாட்சி அடிப்படையில் ராஜமன்னார் குழு பற்றிய அணுகுமுறையை நடத்தி, அறிக்கை தருமாறு கேட்டுக் கொண்டது.

அந்த அறிக்கை 8226 வார்த்தைகள் அடங்கியதாகத் தயாரிக்கப்பட்டு, அதனைச் செயற்குழு மிக ஆழமாக விவாதித்திருக்கிறது. நண்பர் செழியன் அவர்கள் பாராளுமன்றப் பயிற்சி பெற்ற சிந்தனையாளர் என்பது உனக்குத் தெரியும். முரசொலி மாறனோ, மூலை முடுக்குகளில் கிடக்கிற ஆதாரங்

களையும் தேடிப் பிடித்து வாதத்திற்கு வலுவேற்றுவதில் அக்கறை கொண்டவர். இருவருடன் இணைந்து பணியாற்றிய குழுவில் சட்டம் பயின்றோர்-அரசியல் தெளிவு படைத்தோர் தங்கள் ஒத்துழைப்பை வழங்கினர்.

எட்டாம் தேதி காலையில் செயற்குழுவில் துணைக்குழுவின் அறிக்கை, பொதுப்படையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அன்று பிற்பகல் மூன்று மணிக்கு விவாதம் தொடங்கியது. எங்கள் களைப்பெல்லாம் தொலைவில் ஓடுகிற அளவுக்கு விவாதத்தில் சுவையும், தெளிவும், எழுச்சியும், இலட்சிய உணர்வும் ஒளி விட்டபோது, அடடா! நமது அண்ணன் இருந்து பார்க்கவில்லையே இந்தக் காட்சியை என்று நான் பெருமூச்சு விட்டுக் கொண்டேன். ஏறத்தாழ இரண்டு மணி நேரம், தோழர் செழியன், தங்கள் குழுவின் பணிகள் குறித்து விளக்கமளித்தபோது, எவ்வளவு பூரிப்பு பொங்கியது தெரியுமா எனக்கு?

இடையில் செயற்குழு கலைந்து மீண்டும் இரவு 8½ மணிக்குத் தொடங்கிற்று. மாறன் விளக்கங்கள் ஆரம்பமாயின. சுமார் மூன்று மணி நேரம் மாறன் விபரங்களைத் தந்து முடித்தபோது இரவு மணி பன்னிரண்டு. அதற்குப் பிறகு செயற்குழு உறுப்பினர்கள் எழுப்பிய பல்வேறு பிரச்சினைகளுக்கு இரவு இரண்டு மணி வரையில் இருவரும் பதில்களை அடுக்கினார்கள். தூக்கத்தின் சாயலோ சோர்வின் அடையாளமோ சிறிதும் தலைகாட்டாத நிலையில் செயற்குழு உறுப்பினர்கள் பிரச்சினையிலே காட்டிய ஆர்வத்தை என்னால் மறக்கவே முடியாது.

இது என்ன சாதாரணப் பிரச்சினையா? இன்று தமிழகத்தில் தெள்ளிய ஆலின் சிறு பழத்தொரு விதையாக முளைக்கத் தொடங் கியிருக்கிற சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையல்லவா?

உடன்பிறப்பே, அண்ணா எழுதிய அரசியல் சாசனத்தை அடிப்படையாகக் கொண்டு, திருச்சி மாநாட்டிலே நமது கழகம் "மாநிலத்தில் சுயாட்சி-மத்தியிலே கூட்டாட்சி" என்று பிரகடனப்படுத்தியது. கடந்த சில மாதங்களுக்கு முன்பு நமது அன்புக்குரிய பிரதமர் அவர்கள் நமது கோரிக்கையை விவாத அரங்கில் நிறுத்தி விட்டார்கள். அண்மையில் சென்னையில் ஜெயப்பிரகாஷ் நாராயண் அவர்கள் என்னைச் சந்தித்தபோது, மாநில சுயாட்சி பற்றிய அகில இந்தியக் கருத்தரங்கம்

நடத்தப்போகும் கருத்தை அறிவித்துள்ளார். தமிழகச் சட்டப் பேரவையிலும் விவாதம் தேவையென்கிறார்கள். ராஜ மன்னார் குழு அறிக்கை பற்றிய தமிழக அரசின் கருத்து என்னவென்று அறிவதிலே மத்திய அமைச்சர் உமாசங்கர் தீட்சித் அக்கறை காட்டியுள்ளார்.

அனைத்துக்கும் பயன்படும் வகையில் தி. மு. கழகத்திற்கு, செழியன்-மாறன் குழுவினர், ஒரு லட்சியச் சுவடியைத் தந்திருக் கிறார்கள். இதன் பெருமையும், தி. மு. கழகத்தின் வலிமையும் எதிர்காலத்தில்தான் தெரியப் போகின்றன.

அன்புள்ள,

மு. க.

(10-01-1974)

82. பொங்கல் உறுதி!

உடன் பிறப்பே,

பொங்கல் திருநாளிலே கூட சில "நல்லவர்"(?)களுக்கும் ஏடுகளுக்கும் நம் மீது பாய்வதுதான் குறிக்கோளாக இருக்கிறது என்பதை நீ, அவர்களுடைய அறிக்கைகளிலும் எழுத்துக்களிலும் நேற்றும் இன்றும் கண்டிருக்கக்கூடும். எதையும் தாங்குகின்ற இதயம் நமக்குத் தேவை என்று அண்ணன் அடிக்கடி சொன்னதை மறந்து விடலாமா? வீசப்படும் கணைகளைக் கேடயம் கொண்டு தடுப்ப தாலேயே நம்மிடம் வில்லும் அம்பும் இல்லை என்று அர்த்தமல்ல. அவைகளைப் பயன்படுத்தாமல் இருந்துவிடப் போவதுமில்லை.

பொங்கல் பானையைத் தன்னுடைய நெருப்பு நாக்குகளால் சுட்டுப் பொசுக்குவதாகத்தான் அடுப்பு எண்ணிக்கொண்டு எக்காளமிடுகிறது. ஆனால் அந்தச் சூட்டைத் தனது உடம்பிலே தாங்கிக் கொண்டு, அந்தச் சூட்டையே பயன்படுத்திக் கொண்டு, பால் பொங்கலைத் தருகிறது பானை.

அதுபோல்தான் நமது கழகம், தீ நாக்கு, தீ நோக்கு படைத்த வர்களின் இழிமொழிகளைத் தாங்கிக் கொண்டு, சாதனைகளைச் சமைத்துத் தருகிறது.

இந்த உணர்வுடன் பொறுமையாக நமது பணிகளைத் தொடர்ந்திடுவோம்.

வில்லுக்கும் அம்புக்கும் வேலை கொடுத்துத்தான் தீர வேண்டுமென்றால், உடன்பிறப்பே! அப்போது நாம் கோழையாக இருக்கப் போவதில்லை.

அந்த உறுதியை உனக்கு நான் அளிக்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(14-01-1974)

83. காண வருகிறேன் உன்னை!

உடன் பிறப்பே,

கோவை, புதுவைத் தேர்தல்களைப் பற்றி, உலகமகா யுத்தத் தின்போது காட்டிய பரபரப்பைப் பத்திரிகைகள் காட்டுகின்றன.

- மின்னல் வேகப் பிரச்சாரம்.
- சூறாவளிப் பயணம்.
- சூடுபிடித்துவிட்ட வேலைகள்.
- சவால்!
- சவாலுக்குச் சவால்!

இப்படிப்பட்ட கவர்ச்சிகரமான தலைப்புக்கள். காரசாரமான செய்திகள்.

காங்கிரஸ் தலைவர் காமராஜர் அவர்களும் அவரது தளபதி களும் நடத்துகிற பிரச்சாரத்தில் ஒன்றை மிக முக்கியமாகக் குறிப்பிடுகிறார்கள்.

"கெட்டுப் போயிருக்கிற நாட்டைச் சீர்திருத்து வதற்குக் காங்கிரசால்தான் முடியும்."

இது அவர்களது முழக்கம். முதலமைச்சரைத் தேர்ந்து எடுத்து விட்டு, இன்னும் சட்டசபையைக் கூட்டாமல் பொதுத்தேர்தலிலும் குதித்துவிட்ட உத்தரப்பிரதேசத்தில் ஆட்சி நடத்துவது எந்தக் கட்சி? காங்கிரஸ் கட்சிதான்!

ஒரிசா மாநிலத்தில் கவிழ்ந்தது எந்த ஆட்சி? காங்கிரஸ் ஆட்சிதான்! கர்நாடகத்தில் கலவரம் நடந்தது எந்தக் கட்சி ஆட்சியில்? காங்கிரஸ் கட்சி ஆட்சியில்தான்! குஜராத் பட்டினிப் போராட்டம்! ஊரடங்குச் சட்டம்! துப்பாக்கிப் பிரயோகம்! நூற்றுக் கணக்கில் மக்கள் சாவு! மந்திரிசபை வீழ்ச்சி! எந்தக் கட்சி ஆட்சியில்? எல்லாமே; இங்கு காமராஜரால் ஆதரிக்கப்படுகிற காங்கிரஸ் கட்சியின் ஆட்சியில்தான்! ஆனால் மக்கள் அவற்றைப் பற்றியெல்லாம் தெரிந்து வைத்திருக்க மாட்டார்கள் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

இந்தச் சூழ்நிலையிலேதான் இடைவிடாத உழைப்புக்கு சொந்தக்காரனாகிய நீ, பம்பரம்போல் சுழன்று பணியாற்றுகிற பாங்கினை என் அகக்கண்கள் காணுகின்றன.

உன்னைத் திட்டுகிறார்கள். உன் தலைவர்கள் மீது பழி சுமத்துகிறார்கள். அவதூறு கூறியே அரசியல் நடத்தலாம் என்று கங்கணம் கட்டிக்கொண்டு புறப்பட்டிருப்பவர்களைப் பற்றிக் கவலைப்படாமல் நீ பணியாற்றுவாய் என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியும்.

ஊழலிலே பிறந்து, ஊழலிலே வளர்ந்து, ஊழலுக்கே வாழ்க்கைப்பட்டு, ஊழல்களையே பெற்றெடுத்து ஊரிலே உலவிக் கொண்டிருக்கிற சில பேர்கள், உத்தமிபோல் நடித்துக்கொண்டு, கண்ட இடத்து ஊழலைக் கண்டித்துத் தண்டிக்கும் நம்மைப் பார்த்து "ஊழலோ! ஊழல்!" என்கிறார்கள்.

இவர்களுடைய கறுப்புப் பணத்தால் மணம் வீசும் தோட் டங்கள் எத்தனை? புகை கக்கிடும் ஆலைகள் எத்தனை? இவர்தம் கறுப்புப் பணத்தின் லீலைகள் எத்தனை? மாளிகைகள் எத்தனை?

விரைவில் சட்டத்தின் சன்னிதானத்தில் கணக்கு ஒப்ப டைக்கும் காலம் வரப்போவதையும், கட்டளை பிறப்பிக்கப்படும் நேரம் வரப்போவதையும் புரிந்துகொள்ளாமல் ஊருக்குப் புத்தி சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

இவர்களின் ஆர்ப்பாட்ட அரசியல் கண்டு, அதிர்ச்சியடையாமல் அமைதியுடன் பணிகளை ஆற்றும் திறன்படைத்தவன் நீ என்பதை நான் அறிவேன் நன்றாக!

மாஸ்கோ வரையில் நுழைந்துவிட்ட இட்லரின் படைகளை எதிர்த்துத் தாக்கி இறுதியில் வெற்றி கண்ட ரஷ்ய நாட்டுச் சிப்பாய் களைப் போல், கழகக் காளையர் வெற்றிகளை ஈட்டித் தருவர் என்ற நம்பிக்கை, அண்ணா வழிவந்த நம் அனைவருக்கும் உண்டு.

உன் சுடரொளி முகம் கண்டு எதிரிகள் அஞ்சி நிற்பர். அவனி அறியும்.

உன் விழியின் பிரகாசத்தில் துரோகிகள் தலைகுனிந்து பணிவார்கள்-வரலாறு அப்படித்தான் இருக்கிறது.

கொள்கை முழங்கும் உன் இதயத்தில் சலனங்களுக்கு இடமில்லை.

இலட்சியக் கனல் கிளம்பும் உன் நெஞ்சம் சபலத்திற்கு ஆட்படுவதில்லை.

ஆயிரங்காலத்துப் பயிர் நமது அண்ணன் வளர்த்த தி. மு. கழகம்.

அதனைத் துரோகிகள் துவைத்து மிதித்து விடக் கூடாது என்று தான், நம்மைப் பிரிந்து சென்றவர்களும், நாலு நாள் அங்கிருக்க முடியாமல், நம்மிடையே திரும்பி வந்து கொண்டிருக்கின்றனர்.

வீரனே!
தீரனே!
வெற்றிச் சரிதம்
படைக்கும் என்
அன்பு உடன்பிறப்பே!

அரசியல் கட்சி நடத்துவது என்பது, புதிது புதிதாக ஒப்பனை களையும் உடைகளையும் மாற்றுவது போலல்ல!

அதற்குத் தெளிவான சிந்தனையும், திடமான உள்ளமும், தியாக மனப்பான்மையும் தேவை!

அந்தத் தெளிவும், திடமும், தியாக வரலாறுமுள்ள தலைவர் களும் தொண்டர்களும் நிறைந்துள்ள பாசறையே நமது கழகம்!

அந்தப் பாசறையிலிருந்து கிளம்பும் படைக்கருவியே!

பகைப்புலம் மாய்த்து, பண்பும், பகுத்தறிவும், தமிழ் உணர்வும், உரிமைவேட்கையும், உண்மைத் தொண்டும், நிறைந்த கழகத்தின் வெற்றிக் கொடியை விண்முட்டப் பறக்கவிடு! எங்கே பார்க்கலாம்; என் அன்பே! உன் ஆற்றலை நேரில் கண்டிடப் புறப்படுகிறேன் இன்று!

உடன்பிறப்பே!

உன் விழிகளும் என் விழிகளும் சங்கமமாகும் அந்தக் காட்சி காண இன்று கிளம்புகிறேன் சென்னையைவிட்டு!

உன் அன்பு இதயம் பேசும் மௌன மொழிகளுக்குப் பொருள் தெரிந்து கொள்ள நேரிலே வருகிறது இந்தப் பாசமுள்ள இதயம்! காண்போம் நேரில்!

அன்புள்ள,

மு. க.

(11-02-1974)

84. ‘தொய்வு இல்லை! தொடர்க பயணம்!’

உடன் பிறப்பே,

வியாபாரிகள் நீண்ட காலமாகக் கோரி வந்த பலமுனை வரிகளை ஒரு முனை வரியாக மாற்றி, அப்படி மாற்றும் போது பருப்பு, எண்ணெய் போன்ற பொருள்களுக்கு மூன்றரை சதவிகிதம் வரி என்று குறைத்து, விறகு, மாட்டுத் தீவனம், கண்ணாடி வளையல்கள் ஆகியவற்றுக்கு முழுமையாக வரி விலக்குச் செய்து, சிறுகடை வியாபாரிகள் இருபத்தையாயிரம் ரூபாய் வியாபாரம் செய்யும் வரையில் விற்பனையில் வரி கட்ட வேண்டியதில்லை என்று இரண்டு ஆண்டுக்கு முன் இந்த அரசு செய்த முடிவை, மேலும் மாற்றி ஆண்டுக்கு ஐம்பதாயிரம் ரூபாய் வரையில் வியாபாரம் செய்யும் ஏறத்தாழ 40 ஆயிரம் சிறு கடைக்காரர்களுக்கு விற்பனை வரி இல்லை என்று சலுகை அளித்து, வெளியிடப்பட்டுள்ள நமது கழக அரசின் நிதி நிலை அறிக்கையை “வரிபோட்டு வாட்டுகிற அறிக்கை” என்று சிலர் எழுதியும் பேசியும் வருகிறார்கள்.

அரிஷ்டம் என்று கூறப்படும் மயக்கம் தரும் பொருளுக்கு முப்பது சதவீத வரியும், மது வகையறாக்களுக்கு இருபத்தைந்து சதவீத வரியும், பத்து லட்ச ரூபாய்க்கு மேல் வியாபாரம் செய்கிற பெரும் வியாபாரிகளுக்கு மேலும் ஐந்து சதவீத உபரி வரியும் விதிக்கப்பட்டிருப்பது அந்த “சமதர்மவாதிகள்” கோபத்தைக் கிளப்பி யிருப்பதாகத் தெரிகிறது. சக்தி பைப் நிறுவனத்தையும், கோவை டெக்ஸ்டூல் கம்பெனியையும் மற்றும் இரு நிறுவனங்களையும் சேர்த்து ஆக நான்கு நிறுவனங்களைத் தேசீய உடைமையாக்கிடப் போவதாக அறிவித்திருக்கிறோம். அதனைப் பாராட்ட மனம் வரவில்லை; நம்மைப் பார்ப்பதையே ‘பாபம்’ என்று கருதுகிற “பண்பாளர்களுக்கு!”

விதி விலக்கால், காங்கிரசாட்சியில் தப்பித்துக் கொண்டிருந்த திரு ஆரூரான் ஆலைக்குச் சொந்தமான மூவாயிரம் ஏக்கராவுக்கு மேற்பட்ட கரும்பு நிலங்களை விதிவிலக்கை ரத்து செய்து, அரசே எடுத்து "தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகம்" நிறுவியிருப்பதாக அறிவித்திருப்பதை நினைத்துப் பார்க்கவும் மறுக்கிறார்கள், நெஞ்சில் நம்மைப் பற்றி நெருப்பை வளர்த்துக் கொண்டிருப்பவர்கள்!

அரசு அலுவலாளர், ஆசிரியர்கள் அகவிலைப்படியை உயர்த்தி யிருக்கிறோம்...அதிலும் குறை காணவே துடிக்கிறார்கள்.

மின்சாரக் கட்டணத்தை உயர்த்துவதைத் தவிர வேறு வழியில்லாத நிலையிலும், வேளாண்மைத் துறை - வீட்டு விளக்கு-வீதி விளக்குகளுக்குக் கட்டண உயர்வு கிடையாது எனத் தெளிவுபடுத்தியிருக்கிறோம். அதனைத் தெரிந்தும் தெரியாதது போல் கண்டனம் செய்து களிப்படைகிறார்கள்.

பேருந்து சரக்கு வண்டிகளின் வரிச் சீரமைப்பால், கட்டண உயர்வு, கட்டுப்பாட்டை மீறிச் செல்லாமல் இருக்க உத்தரவாதம் அளித்திருக்கிறோம்.

ஆனால், டெல்லி உயர்த்திய ரயில் கட்டணங் கண்டு பதைக்காதவர்கள் நம்மீது பாய்கிறார்கள்.

மண்ணெண்ணெய் விலை ஒரு ரூபாயைத் தாண்டுகிறது-டெல்லியின் கருணையால்!

அது பற்றிப் பேச நா எழ மறுக்கிறது சில நல்லவர்களுக்கு!

அஞ்சல் கடிதம், கார்டு விலை உயருகிறது, டெல்லியின் கடாட்சத்தால்!-

வாய் திறக்கவே மறுக்கிறார்கள் "வாய்மையாளர்கள்" அது பற்றிப் பேச!

பொது மக்களும் ஓய்வூதியம் பெறுவதற்கு ஒரு திட்டம்.

பரிசுப் பத்திரம் வாங்குவதின் மூலம், பணத்திற்கு இழப்பு இல்லாமல் ஆறு முறை பரிசு பெறுகிற வாய்ப்பு கொண்ட மற்றொரு திட்டம்.

அங்ககீனர்களுக்கு வாழ்க்கைப் பாதுகாப்பு வழங்க ஏற்பாடு.

"பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம்" அமைப்பு!

அரிசனங்களுக்கு ஐந்தாண்டு காலத்தில் ஒரு லட்சம் வீடு கட்டத் தனியாக ஒரு வீட்டு வசதி வாரியம்.

கட்டபொம்மன் நினைவுக் கோட்டை. திருவள்ளுவர் ஆலயம்.

இன்னோரன்ன சிறப்புக்கள் கொண்டது நிதி நிலை அறிக்கை என்று நெஞ்சுக்குள்ளே பாராட்டுகிறவர்கள் கூட வெளியில் சொன்னால், அது நமது கழகத்திற்கு வலிமை சேர்த்து விடுமோ என அஞ்சுகிறார்கள்.

சட்டியில் உள்ள மாவைக்கொண்டு நம்மால் செய்ய முடிந்த பலகாரம் இது! சூடும் சுவையும் குன்றாமல் இருக்கிறது!

எதற்கெடுத்தாலும் மத்திய அரசின் கையை எதிர்பார்த் திருக்கும் நம்மால், நமது அதிகாரத்திற்குட்பட்டு இவைகளைத் தான் செயல்படுத்த முடிகிறது.

இதிலே நமக்கொரு ஆறுதல்!

கார்முகில் கைம்மாறு கருதி மழைக்கரம் நீட்டுவதில்லை.

கதிரவனின் கடமையும் அவ்வாறே.

நமது பொறுப்புகளை நாம் பொறுமையுடன் நிறைவேற்றுகிறோம் என்பதற்கும்–

புயலுக்கிடையிலேயும் படகினைச் செலுத்திப் பழக்கப் பட்டவர்கள் நாம் என்பதற்கும் – இந்தச் சாதனைகள் சான்று! இதனைத் தொடர்ந்து செய்வோம். 'தொய்வு' விழாமல் நமது லட்சியப் பயணம் நடைபெற்றே தீரும்.

அன்புள்ள,

மு. க.

(05-03-1974)

85. "எல்லா மலர்களும் ரோஜா மலர்களே!"

உடன் பிறப்பே,

கழக அமைப்புகளின் தேர்தல், முறைப்படி நடந்து, முடிவுகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. இலட்சியப் பயணத்தின் குறுக்கே எதிர்ப்படுகின்ற இடையூறுகளைப் பற்றிக் கவலைப் படாமல் கிளை அமைப்புக்களின் பொறுப்புக்கும், பகுதி அமைப்புக் களின் பொறுப்புக்கும், அடுத்து நடைபெற இருக்கும் ஒன்றிய அமைப்புக்களின் பொறுப்புக்கும் போட்டியிடுகிற கழகக் கண்மணிகளின் ஆர்வத்தைக் காண்கிறேன். கேள்விப்படுகிறேன். மகிழ்ச்சி அடைகிறேன்.

சென்னை நகரில் வெற்றி பெற்ற பகுதிக் கழக நிர்வாகிகள் அணி அணியாக வந்து கொண்டிருக்கிறார்கள், மாலை அணிவிக்க! அவர்களை முந்திக்கொண்டு கழகப் பணியாற்றப் போட்டி யிட்டு, வெற்றி வாய்ப்பை இழந்துவிட்ட போதிலும் வெற்றி கண்ட வர்களுடன் உற்சாகமாகக் கைகோர்த்துக் கொண்டு என்னை வந்து சந்தித்த உடன்பிறப்புகளின் பாச உணர்வைப் பாராட்டுவதற்கு வார்த்தைகளே கிடைக்கவில்லை.

கழக அமைப்புக்களின் பொறுப்புக்களை ஏற்க "நான் முந்தி - நீ முந்தி!" என்று போட்டியிடுகிற அந்தச் செயல் வீரர்களின் நெஞ்சத்தில் திண்டுக்கல் திகில் இல்லை. கோவையின் முடிவு அதிர்ச்சியாக உருவெடுக்கவில்லை. புதுவை பற்றி எண்ணி எண்ணிப் புழுங்கிக் கொண்டிருக்கவில்லை, அந்தப் புலிப் போத்துக்கள்!

மேலவை-மாநிலங்கள் அவை என்ற வேட்பாளர் வரிசையில் தங்கள் பெயர்கள் இடம் பெற்றாலும், இடம் பெறாவிட்டாலும் அதைப் பற்றிக் கவலைக்கு ஆட்படாத கண்ணின் கருமணி களாம் அந்தக் கழகச் செல்வங்கள், கழகத்தின் கோட்டைகளை வலுப்படுத்துவதற்கு நிர்வாகப் பொறுப்புகளை ஏற்றிடத் துடித்திடும் காட்சி காண, என் மனம் களிப்பிலாடும் கான மயிலாகிறது!

கிளைக் கழகங்களின் தேர்தல்கள் முடிவுற்று, சென்னையில் பகுதிக் கழகங்களின் தேர்தல்களும் முடிவுற்று, ஏப்ரல் திங்களில் ஒன்றியக் கழகத் தேர்தல் நடந்து, அதன் தொடர்பாக மாவட்டக் கழகத் தலைமைக் கழகத் தேர்தல்கள் நடைபெற இருக்கின்றன.

இந்தத் தேர்தல்களில் நடைபெறுகிற போட்டிகள்-
கொள்கைகளின் மோதுதல் அல்ல!
இலட்சிய முரண்பாடுகள் அல்ல!
இருவிதக் கோட்பாடுகளின் போராட்டம் அல்ல!
அண்ணன் வழி நின்று அயராது உழைத்திடவும்-
ஆதிக்கமற்ற சமுதாயத்தை அமைத்திடவும்-
இந்தித் திணிப்பை என்றும் எதிர்த்திடவும்-
இன்பத் தமிழ் மொழி காத்திடவும்-
வன்முறை தவிர்த்து வறுமையை வென்றிடவும்-
மாநிலத்தில் சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி என்ற
முழக்கம் வெற்றி பெறவும்-

கழகக் கொடி நிழலில் அணி வகுக்க ஆங்காங்கு அமைப்புகளின் பொறுப்பை ஏற்பது யார் என்பதே இந்தப் போட்டிகளின் முடிவு!

இதில் வெற்றி தோல்வி என்ற பேச்சுக்கே இடமில்லை.

தேர்தல் முடியும் வரையில்தான் இரு அணி!

முடிந்த பிறகும் அந்த இரு அணி நீடித்தால் அதுவே கழகத்திற்குப் பிணியாகிவிடும்!

இதனை உணர்ந்து வென்றவரும், நின்றவரும் பணியாற்றிடுக.

என் அன்பு உடன்பிறப்புக்களே!

கழகச் சோலையில் பூத்த எல்லா மலர்களும் எனக்கு ரோஜா மலர்கள்தான்!

அன்புள்ள,

மு. க.

(19-03-1974)

86. மே தின வாழ்த்து!

உடன் பிறப்பே,

அமெரிக்க நாடு சென்றிருந்தபோது சிகாகோ நகரில் இரண்டு நாட்கள் தங்கியிருந்தேன். நகரில் நுழைந்ததும் எனக்கு ஏற்பட்ட முதல் நினைவு மே தினம்தான்! ஆம், அங்கேதான் 1886 மே முதல் நாளிலிருந்து தொழிலாளிக்கு எட்டு மணி நேர வேலையென்பதைச் சட்டப்படியாக்க வேண்டுமென்று தொழிலாளர்களின் புரட்சித் தலைவர்கள் தீர்மானம் நிறைவேற்றி அதன் தொடர்பாக எழுந்த போராட்டத்தில் கண்ணீரும் செந்நீரும் கலந்து ஓடியது தெருக்களில் ஆறு போல!

உழைக்கும் தோழனின் மே தினக் குரல், உலகெங்கும் எட்டியது. அந்தக் குரலைத் தமிழகத்தில் ஒலிக்கச் செய்த பெருமை, பெரியாருக்கே உண்டு.

பேரறிஞர் அண்ணா அவர்கள் மே தினத்தின் சிறப்புக்களை, மேடைகளில்-ஏடுகளில் எழுச்சிமிகு தமிழாலே எத்தனையோ முறை எடுத்துக் காட்டியிருக்கிறார்.

நமது அரசு அமைந்ததும் மே தினத்திற்கு விடுமுறையை அறிவித்தது. "இது தொழிலாளர் நல அரசு" என்று அண்ணா அடிக்கடி சுட்டிக் காட்டினார் ஆதாரங்களோடு!

அவர் வழிநின்று நாம் தொழிலாளர்க்கு, அரசு அலுவலர்க்கு ஆற்றிடும் பணிகள் ஆயிரம்! ஆயிரம்!

இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட விவசாயத் தொழிலாளர்க்கு குடியிருப்பு மனைச் சட்டத்தின் வாயிலாக நன்மை வழங்கியது நமது அரசுதான்!

உலகில் சில நாடுகளில் இருப்பதாகக் கூறப்படுவதும்-இந்தியாவில் வேறெங்குமே இல்லாததுமான அரசுத் துறையில், தொழிலாளர்களுக்கு நிர்வாகத்தில் பொறுப்பு-முதலீட்டில் பங்கு-என்ற நிலையை நடைமுறைப்படுத்தியிருப்பதும் நமது அரசுதான்.

அரசுத்துறையில்-குறிப்பாகப் போக்குவரத்துத்துறையில் முப்பத்து ஐயாயிரம் தொழிலாளர்களுக்குப் பயன்தரும் ஓய்வூதியம் தரப்படுமென்ற சலுகையும் நமது தமிழக அரசிலேதான் வழங்கப்படுகிறது.

எந்த மாநிலத்திலே, ஆலைகள் மூடப்பட்டதால் அவதியுற்ற தொழிலாளர்களுக்கு ஆறுலட்ச ரூபாயை நிவாரணமாக அள்ளிக் கொடுத்தார்கள் அரசின் சார்பில், நம்மைத் தவிர?

தொழிலாளர் பிரச்சினைகளைப் பேச்சு வார்த்தையின் மூலம் தீர்த்து வைப்பதில் நாம் காட்டும் அக்கறை அளவிடற்கரியது.

நமது தொழிலாளர் நல அமைச்சர், தொழிற்சங்கப் பிரதிநிதி களுடன் அல்லும் பகலும் அயராமல் உரையாடி, பிரச்சினைகளை முடிவு கட்டும் பாங்கினைப் பாராட்டாதார் யார்?

தொழிலாளர்களைப் பழிவாங்கப்படாமல் பாதுகாக்கும் பொறுப்பைத் தமிழக அரசு, என்றைக்கும் தட்டிக் கழித்ததில்லை யென்பதை அவர்கள் மனமே அறியுமே!

ஒன்றிரண்டைத் தவிர, தொழிலாளர் பிரச்சினைகளில் சட்டம் ஒழுங்கு காக்கும் அவசியம் ஏற்படாமலே அரசும், தொழிலாளர் தோழர்களும் நடந்து கொண்டிருப்பதை மறுத்துக் கூற யாருளர்?

உதட்டாலே சோஷலிசத்தை உச்சரித்துக் கொண்டு உலவுகின்றார் சில தலைவர்கள் நாட்டில்! அவர்களை ஏற்றிப் போற்ற ஏடுகள் உண்டு! நாம் அந்த "நாமாவளி"களுக்காக ஏங்கித் தவிக்காமல் தொழிலாளிக்குத் தேவையான மேன்மைமிகு கடமைகளை ஆற்றி, மே தினத்தன்று நிமிர்ந்து நிற்கின்றோம்.

சமதர்ம சங்கீதம் பாடுவோர், தாளம் தவறி, ராகம் குளறி, சுருதிவிட்டுக் கூவிக் கொண்டிருக்கிறார்கள்.

சாரீரம், லயம் எதுவுமில்லாதவனை 'சங்கீத பூஷணம்' என்பது போல், சிலரைச் "சமதர்மத் தூதர்"கள் என்று வர்ணிக்கிறார்கள்.

அவர்களைப் பார்த்து நாம் மெல்லச் சிரிப்போம்!

மே தினத்தில் சபதமெடுப்போம்.

"உறவுக்குக் கை கொடுப்போம்;
உரிமைக்குக் குரல் கொடுப்போம்"

என்பது மத்திய-மாநில உறவுபற்றிய முழக்கம் மட்டுமல்ல; அனைத்துக்கும் பொருந்தும்! தொழிலாளர் சமுதாயத்துக்கும் பொருந்தும்.

என் அன்பான உடன்பிறப்பே! பேரவை மேலவை நிகழ்ச்சி களால், உனக்கு நான் எழுதும் கடிதங்கள் தடைப்பட்டன: இனி தொடரும் என் மடல்கள்! மே தினத்தில் என் இதய வாழ்த்துக்களை ஏற்றுக்கொள்!

அன்புள்ள,

மு. க.

(01-05-1974)

87. 'நமது நிலை'!

உடன் பிறப்பே,

அனைத்திந்திய அளவில் ரயில்வே தொழிலாளர் வேலை நிறுத்தம், நாட்டில் பல்வேறு சிக்கல்களை உருவாக்கியிருக்கின்றது.

கழகச் சார்புடைய தோழர்கள் ஈடுபட்டுள்ள ரயில்வே தொழிலாளர் முன்னேற்ற சங்கமும், இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தில் கலந்து கொண்டிருக்கிறது. நமது கழகத் தொழிற்சங்கச் செயலாளர் அவர்களின் அறிக்கை மிகத் தெளிவாக இருக்கிறது.

வன்முறைகள் அமளிகள் தலைதூக்குமேயானால், தொழிலாளர் முன்னேற்ற சங்கம் கிளர்ச்சியிலிருந்து தன்னை விடுவித்துக் கொள்ளும் என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

நாட்டின் நலன் கருதி வேலை நிறுத்தமே நடைபெறாத சூழ்நிலையை உருவாக்கியிருக்க வேண்டுமென்பது நமது கருத்து.

பேச்சு வார்த்தைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கும் போதே திரு. ஜார்ஜ் பெர்னான்டஸ் அவர்களைக் கைது செய்தது நிலைமையைச் சிக்கலாக்கி விட்டது என்பதை நியாய உணர்வுடன் சிந்திப்பவர்கள் மறுக்கமுடியாது.

ரயில்வே தொழிலாளர்களின் கோரிக்கைகள் யாவை? அந்த விவாதங்களுக்கு இப்போது நாம் போகவில்லை. ஆனால், இரு சாராரும் இன்னும் சற்றுப் பொறுமை காட்டி விவாதித்து இருந்தால் பிரச்சினை இவ்வளவு மோசமான வடிவம் கொண்டிருக்காது என்பது என் கருத்து.

சட்டம் ஒழுங்கு அடிப்படையில், மத்திய அரசு மாநில அரசுகளுக்குக் கட்டளை பிறப்பித்துக் கொண்டிருக்கிறது. ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்களே, சட்டத்திற்கு மாறாக நடந்து

கொள்கிறார்கள் என்று "ஜாடை" தெரிந்தால்கூட அதில் பாரபட்சம் காட்டாமல் நமது அரசு நடவடிக்கை மேற்கொள்கிறது.

பேசித் தீர்க்கக் கூடிய பிரச்சினை - ஆனால் பேச வேண்டிய மட்டம், மேல் மட்டம்!

கட்டளைகளை நிறைவேற்றுங்கள் என்பதுதான் நமக்குத் தரப்பட்ட தாக்கீது!

அவர்கள் சொல்லாமலே, சட்டம் ஒழுங்கு காத்திட நாம் செயல்படுகிற பண்பை உணர்ந்தவர்கள். நூற்றுக்கணக்கானவர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள்.

சிறையிலிருந்தவாறு பேசுவதற்குத் தயார் என்கிறார் போராட்டத்தின் தலைவர். மத்திய அரசு மௌனம் சாதிக்கிறது.

இந்தப்போக்கு சரிதானா என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

தயவுசெய்து தாங்கள் தலையிடுங்கள் என்று தலைமை அமைச்சர் இந்திரா காந்தி அவர்களுக்குத் தந்திகள் கொடுத்தேன். என் தகுதி அவ்வளவுதானே! அதாவது முதலமைச்சர்களின் தகுதி!

வேலை நிறுத்தம்-ரயில்கள் ஓரளவுதான் ஓடுகின்றன-தொழிலாளர் கட்டுப்பாடு-இவைகளுக்கிடையிலேயும், நமது மாநிலத்தில் கட்டிக் காக்கப்படும் அமைதியைக் குலைத்துத் தொழிலாளர்களை நாச வேலையில் ஈடுபடுத்த சில நச்சு மனத்தினர் சுற்றித் திரிகின்றனர். அவர்கள் வலையில் தொழிலாளர்கள் விழாமல் இருத்தல் வேண்டும்.

பிரதமர் எதிர்க்கட்சித் தலைவர்களை அழைத்திருக்கிறார், இதுபற்றிப் பேசுவதற்கு!

தலைவர்களின் கூட்டத்தின் ஏகோபித்த முடிவு. "பிரச்சினைகளைக் கவனிக்கிறேன். வேலை நிறுத்தத்தைக் கைவிடுங்கள். பழிவாங்குதல் இருக்காது" என்ற உறுதி மொழி பிரதமரின் அறிக்கையாக வெளிவர வேண்டும்.

அந்த முடிவுக்கு ரயில்வே தொழிலாளர்களும் ஒப்புதல் தர வேண்டும்.

நாடு காப்பாற்றப்பட்டாக வேண்டும். இது தான் நமது ஆசை.

இதுபற்றிக் குழப்பிக் கொண்டிருப்பவர்களைப் பற்றியும், இதிலும் நம்மீது குறை காணத் துடிப்பவர்கள் பற்றியும், உடன் பிறப்பே! நீ கவலை கொள்ளாதே! நமது நிலை இதுதான்! நாட்டுக்குத் தேவை அமைதி! ஆவன செய்வது அனைவரின் கடமை!

அன்புள்ள,

மு. க.

(10-05-1974)

88. என் பிறந்த நாளில்...!

உடன் பிறப்பே,

எனக்குப் பொன்விழா எடுக்கப் போவதாக ஏடுகளில் செய்திகள் வெளியிட்டு அதற்கான ஏற்பாடுகளில் நீயும் மற்றவர்களும் ஈடுபட்டிருப்பதை அறிந்தேன்.

உன் ஆர்வத்துக்கு நன்றி.

உன் அன்புக்கு நான் என்றைக்கும் அடிமை.

என்னை நீ அறியாத அல்லது அறிய முடியாத நிலை உனக்குக் கிடையாது. என்னுடைய பிறந்த நாளை அறிஞர் அண்ணா தலைமையில் சென்னையில் நீ கொண்டாடிய போது, நான் ஊரிலே இல்லாமல் விழுப்புரத்திற்குப் போய் விட்டேன்.

மறந்திருக்க மாட்டாய்.

அதன் பின்னர் நடந்த பிறந்த நாட்களிலும், அந்த நாளை முன்னிட்டு நான் அறிவித்த-

பிச்சைக்காரர் மறுவாழ்வு நிதி,

கண்ணொளி நிதி,

கைரிக்ஷா அகற்றும் நிதி-

ஆகியவற்றுக்கான பண முடிப்புகளை வழங்குகின்ற நிகழ்ச்சிகளில் மட்டுமேதான் நான் கலந்து கொண்டேனே தவிர, என் பிறந்த நாள் விழாவுக்கான எந்த நிகழ்ச்சியிலும் நான் பங்கேற்றதில்லை என்பதை நீ அறிவாய்.

இல்லத்திற்கு வந்து வாழ்த்துகிறவர்கள்-நிதி வழங்குபவர்கள்-என்ற அளவோடு ஆடம்பரமின்றிப் பிறந்தநாள் முடிவதிலேதான் ஆண்டுதோறும் நான் கண்டிப்புக் காட்டியிருக்கிறேன். என்

வேண்டுகோளையும் மீறி உணர்ச்சி மேலீட்டால் சிலர் செய்த ஆடம்பர அலங்காரங்களையும் நான் தடுத்திருக்கிறேன்.

இந்த ஆண்டு, ஐம்பது வயது நிறைகிறது என்பதற்காக விரிவான விழாக்கள் எடுப்பது என்பது தேவையற்றது; நான் விரும்பாதது. நாட்டில் எவ்வளவோ பிரச்சினைகள் இருக்கின்றன. அவைகளில் கவனம் செலுத்துவதை விட்டு விட்டு என் பொன்விழாவில் கவனம் செலுத்துவது வேண்டாத வேலை என்பதே என் கருத்து.

கட்சிப் பணிகளை எப்படி நிறைவேற்றுவது என்பதைத் திட்டமிட்டு வகுத்து, அதில் உற்சாகம் காட்டுவதைத்தான் நான் விரும்புகிறேன். நாள்தோறும் கழகப் பணிகளில் நீ காட்டுகிற அக்கறைதான் நீ எனக்கு எடுக்கிற விழாவாயிலாக உருவாக்க எண்ணுகிற உற்சாகத்தைவிட அதிக உற்சாகத்தை எனக்கு அளிக்குமென்று உணர்ந்திடுவாயாக!

கவியரங்கம்

பாட்டரங்கம்

கலையரங்கம்

கூத்தரங்கம்

என்றெல்லாம் நிகழ்ச்சி நிரல்களை வகுத்துக்கொண்டு, மலர்களை வெளியிட்டு, என் பணிகளைப் பாராட்டிக் கொண் டிருப்பதைவிட, உன் பணிகளைப் பிறர் பாராட்டுகிற அளவுக்குக் கழகப் பணிகளைத் தீவிரமாக ஆக்கிடு!

ஐம்பதாண்டு எனக்கு நிறைவதையொட்டி ஏதாவது செய்து தான் தீரவேண்டுமென்று நீ விரும்பினால்-

முதலில் என் வேண்டுகோளை ஏற்று எனக்காக-என் பிறந்த நாளுக்காக ஊர்தோறும் நடத்தத் திட்டமிடும் ஆடம்பர விழாக்களை உடனே நிறுத்திவிடு!

அன்று ஏதாவது செய்ய வேண்டுமே என்று நீ விரும்பினால்-

உன் கையால் ஒரு கழகக் கொடியை ஏற்று!

அதில் எளிமையும் இருக்கும். எழுச்சியும் இருக்கும்.

அன்று வெளிவர இருக்கிற
தலைமைக் கழகத்தின் வார
ஏடான 'கழகக் குரல்'
இதழைக் காசு கொடுத்து வாங்கு!

அது நமது கழகப்
பிரச்சாரத்துக்குப்
பயன்படும்-

அன்றைக்கு முடிந்தால் ஒரு ஏழைக்கு உணவு கொடு!

அந்த ஏழையின் புன்னகையைக் கண்டு களித்திடு. ஒரு நாள் மட்டுமல்ல. அந்த ஏழையின் புன்னகை எந்நாளும் நிலைத்திடத் தான் கழகம் பாடுபடுகிறது.

அந்தக் கொள்கையைப் பரப்பிடு.

இது போன்ற பணிகளைத்தான் நீ எனக்குத் தரும் பிறந்த நாள் பரிசுகளாகக் கருதுகிறேன்.

உடன் பிறப்பே, முன்கூட்டி ஏற்பாடுகள் செய்து விட்டதாகக் கூறி, நீ என் வேண்டுகோளைப் புறக்கணிக்கக் கூடாது என்பதற் காகத்தான் முன்கூட்டியே இதனை எழுதுகிறேன்.

அன்புள்ள,

மு. க.

(15-05-1974)

89. "மறவாதே!"

உடன் பிறப்பே,

நமது கழகத்தின் பொதுத் தேர்தலில், கிளைகள், ஒன்றியங்கள் என்ற கட்டங்கள் முடிவுற்று இந்தத் திங்கள் முப்பத்து ஒன்றாம் நாள் மாவட்டக் கழக நிர்வாகிகளுக்கான தேர்தலும் பொதுக்குழு உறுப்பினர்களுக்கான தேர்தலும் நடைபெற இருப்பதை நமது அமைப்புச் செயலாளர் அறிவித்துள்ளார்.

இந்தத் தேர்தல் பணியில் தலைமைக் கழகம் எத்துணை பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டு சோர்வின்றிச் செயலாற்றி யுள்ளது என்பதை நீ அறிவாய்.

தலைமைக் கழகத்தில் எப்போதும் நூறுபேர், வெளியூர் கழகத் தோழர்கள் இருந்து கொண்டே தங்கள் தங்கள் ஊர்களில் நடைபெற்று முடிந்த தேர்தல் சிறப்புக்கள், ஒன்றிரண்டு இடங்களில் ஏற்பட்ட பிரச்சினைகள், அவைகளைத் தீர்த்து வைக்கத் தலைமைக் கழகம் ஏற்றிட வேண்டிய முயற்சிகள்- ஆகியவை குறித்து விவாதித்துக் கொண்டே இருக்கின்றனர். கட்சியின் உயிர்நாடியான அமைப்புமுறை, சற்றும் சரியாமல் மேலும் வலுப்படுகிற அளவுக்கு வளர்ந்து நிற்கிறது என்பதற்கு இது எடுத்துக்காட்டு!

நாம் நமது இயக்கத்தை எப்படி வளர்த்தோம்! எப்படி வளர்க்கிறோம்! எப்படி வளர்க்க வேண்டும்?

எதிரிகள் நம்மைச் சுற்றி!

பகைவர்களின் பல் இளிப்பில் மயங்கி விடும் ஒன்றிரண்டு பலஹீனர்கள், நம்மைக் காட்டிக் கொடுத்த கொடுமை- பத்திரிகைகளில் பெரும்பாலும் இருட்டடிப்பு அல்லது கற்பனைக் கயிறு திரிப்பு - இழிமொழிகள்-ஏசல்கள்-இல்லாதது கூறல்- எடுத்தெறிந்து பேசுதல்-

இத்தனைச் சூழல்களையும் சுழலும் ஆயுதங்களாகக் கொண்டு நமது கழகத்தை அழிக்க-நமது கொள்கையை வீழ்த்த-நமது

கொடியைச் சாய்க்க-நமது கொற்றத்தைக் கவிழ்க்க "பகீரத" முயற்சிகள் நடைபெற்று வருகின்றன.

அண்ணன் அடிக்கடி சொல்வதுபோல, வீசும் புயலுக்கிடையே, கொட்டும் மழையில், சரளைக்கல் மீது நடந்து குன்றின் உச்சியில் கொண்டு போய் வைக்க, அகல் விளக்கு ஏந்தி, இதனை அணையாமல் காத்து உச்சி நோக்கி ஏறிடுகின்ற மன உறுதியும் கொள்கை ஆழமும் இருந்திடில் யாரும் அசைத்திட இயலாது நம்மை! அணைத்திட இயலாது நமது இலட்சிய தீபத்தை!

அந்த உறுதியின் கருவூலமாய் இருக்கின்ற கண்மணிகள், கழகப் பொறுப்புக்கள் ஏற்க "நான் முந்தி, நீ முந்தி" என்று போட்டியிட்டுள்ளார்கள். அடுத்து மாவட்டக் கழகத் தேர்தலிலும் அந்தப் போட்டி தொடர இருக்கிறது, அதற்கு அடுத்து தலைமைக் கழகத் தேர்தல்.

இந்தக் கடிதம் உன் கைக்குக் கிடைக்கும் வேளையில் நீ ஒருவேளை, மாவட்டக் கழகத்தேர்தலில் ஒரு வேட்பாளராகவும் இருக்கலாம்; அல்லது வாக்காளராகவும் இருக்கலாம்.

ஒரே அளவும், ஒரே மாதிரி ஒளியும் கொண்ட பத்து முத்துக்களில் ஒன்றிரண்டு முத்துக்களை நீ கையில் எடுத்துக் கோப்பதாலேயே மற்ற முத்துக்கள் சொத்தைகள் என்று பொருளல்ல!

போட்டியில், ஒருவேளை நீ வென்றிடாமல் மற்றொரு கழகத் தோழர் வென்று விட்டால், நீ புறக்கணிக்கப்பட்டவன் என்று அர்த்தமல்ல! கழகப் பொறுப்பை அடுத்த முறையாவது ஏற்க நீ கடுமையாகக் கட்சிப் பணியாற்ற வேண்டுமென்று கட்டளையிடப்பட்டிருக்கிறாய் என்றுதான் நீ பொருள் கொண்டிட வேண்டும்.

கூடுமானவரையில், மாவட்டக் கழகத் தேர்தல்களில் வீம்பான போட்டிகளைத் தவிர்த்து வினையாற்றுவதற்கேற்ற வகையான சூழ்நிலையை உருவாக்கப் பொறுப்புள்ளவர்கள் முனைய வேண்டும்.

பொறுப்புக்களைப் பகிர்ந்து கொண்டு, கழகத்தின் வலிவு சிறிதும் குன்றாத அளவுக்கு அனைவரும் ஒத்துழைக்கவும் உடனிருக்கவும் ஏற்ற முறையில் விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையுடன் விளங்கிடல் வேண்டும்.

மிகப் பெரிய இலட்சியங்களை நிறைவேற்ற வரிந்து கட்டிக் கொண்டு நிற்கும் நமது கழகத்திற்கு மேலும்

ஆக்கம் தேடுகிற வண்ணம் மாவட்டத்திலேயுள்ள கழகத் தளபதிகள், அமைச்சர் பெரு மக்கள் ஆகியோர் நடுநிலை நின்று கழகச் செயல் வீரர்களிடையே கசப்பு உணர்ச்சிகள் தோன்றிடா வண்ணம் கழக வளர்ச்சிக்கேற்ற தொண்டினை ஆற்றுவர் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

'நடுநிலை' என்பது நியாயத் தராசின் முள்ளைப் போன்றது. எந்த ஒரு பக்கமும் சாயாமல், இருபக்கமும் இதயத் தூய்மையுடன் பாச உணர்வு காட்டி, தான் ஒரு பக்கம் சாய்வதாக வதந்திகள் வரின், இரு சாராரையும் அழைத்து மனந்திறந்து பேசி, கழக முகாமில் விரிசல் ஏற்படாமல் நல்விளைவு காணும் வகையில் உழைத்திட வேண்டும்.

போட்டியின் மூலம்தான் பொறுப்புக்கள் பகிர்ந்திடப்படக் கூடிய நிலைமை இருக்குமேயானால் அந்தப் போட்டி ஜனநாயக இலக்கணத்துக்கு ஏற்ப நடைபெறவும் மூத்தோர், இளையோர் அனைவரும் வழி வகுத்திட வேண்டும்.

நீ வாக்காளரானால் உழைக்கும் கண்மணிகளைத் தேர்ந் தெடுக்கத் தயங்காதே.

உழைப்பும் ஆற்றலும் அரவணைத்துச் செல்லும் போக்கும் தியாக நோக்கும் கொண்டவர்களைத் தேர்ந்தெடுப்பதில் உனக்கு நிகர் வேறு யாருளர்?

நீ வேட்பாளராக இருந்தால் வெற்றி தோல்விகளைப் பற்றிக் கவலைப்படாமல் எந்த நிலையிலும் கழகத்தின் மூச்சாக இயங்கிடுக!

உடன் பிறப்பே, ஒற்றுமையை உருவாக்கக் கூடிய இடத்தில் நீ வீற்றிருந்தால், உனது ஆற்றல் அதற்குப் பயன்படுத்தப்படுமேயானால் நான் மிக மகிழ்வேன். எப்படியும் கழகத்தின் சக்தி சிந்தாமல் சிதறாமல் காக்கும் பொறுப்பு உனக்கு இருக்கிறது என்பதை மட்டும் மறவாதே. 'எல்லா மலர்களும் எனக்கு ரோஜா மலர்களே' என்று நான் முன்பு சொன்னதையும் மறவாதே.

அன்புள்ள,

மு. க.

(18-05-1974)

90. கோடையிலே...!

உடன்பிறப்பே,

உன் இதயத்து அன்பையெல்லாம் பொழிந்து என்னை உணர்ச்சிப் பிரவாகத்தில் மூழ்கடித்து விட்டாய். நீ அணிவித்த மாலைகளும் ஆடைகளும் உடல் ஊனமுற்றவருக்காக வழங்கிய சிறு சிறு காணிக்கைகளும் நான் அமர்ந்திருந்த கூடத்தை நிரப்பியது. ஆனால் என் தங்கமே! நீ என் கரம் குலுக்கி, உன் கண் மலர்களை என் உள்ளங்கையில் பதித்தெடுத்து நெஞ்சு நெக்குருக வாழ்த்தித் தழுவிக் கொண்டாயே, அந்தப் பாசக்கருவூலம் என் இதயத்தை யல்லவா நிரப்பியிருக்கிறது.

உன் குடும்ப விளக்காம் என் அன்புத் தங்கையுடன் வந்தாய். சித்திரப் பதுமைகளாம் குழந்தைச் செல்வங்களுடன் வந்தாய். மாலை சூடிய மணவாளனுடன், அண்ணனுடன், தம்பியுடன், தள்ளாடி நடக்கும் பாட்டியுடன், என்னைப் பேரன் எனும் பரிவுடன் நோக்கும் பாட்டன் மாருடன் வந்தாய்.

மூன்றாம் தேதி காலையில் என்னைப் பெற்ற தாய் தந்தை படத்திற்கு மாலையிட்டபோதும், முத்துவைத் தந்து விட்டு மூச்சை நிறுத்திக் கொண்ட பத்மாவுக்கு மாலையிட்ட போதும், அண்ணன் கல்லறை - அய்யா பெரியாரின் கல்லறைகளுக்கு மலர் வளையம் வைத்து வணங்கிய போதும், கதறி அழுது விட்டேன்-அந்த உணர்ச்சியை மாற்றி எனக்கு ஆறுதல் அளிக்க ஆயிரமாயிரமாகக் கூடிய என் உடன் பிறப்பே!

நீதானே என் வேதனை தீர்க்கும் மாமருந்து.

பகலெல்லாம் சூரியனின் சூடான கதிர்களைப் போல் பிரச்சினைகள் பாய்கின்றன. இரவுப் பொழுதோ எத்தனையோ நாட்கள் சிந்தனைச் சுமைகளால் தூக்கமின்றிக் கழிகின்றன. அனைத்தையும் சமாளிக்கும் துணிவையும் மனத் திடத்தையும்,

ஆருயிரே! உன் முகத்தை நினைத்துத்தான் நான் பெற்றுக் கொள்கிறேன்.

என் மனப் பாரம் ஏராளம்.

அதனை முழுதும் பங்கிட்டுக் கொள்ள உன்னால் இயலாது. சுழன்றடிக்கும் சூறாவளியில் கடற் பயணத்துக் கப்பலாக இருந்திருந்தால் இந்நேரம் நான் கவிழ்ந்திருப்பேன். எளிமையான கட்டுமரமாக இருப்பதால் தான் மிதந்து கொண்டிருக்கிறேன்.

நீ பிறந்த நாள் வாழ்த்து முழங்குகிறாய் எனக்கு! மாற்றுக் கட்சியிலே உள்ள மனவளம் படைத்த நல்லோரும் நாடாளும் வல்லோரும் வெளிப்படையாகவே ஆசி கூறி என்னை ஊக்கப் படுத்துகின்றனர்.

ஒருவன் பிறந்த நாளைக் கூடத் துக்க நாளாகக் கொண்டாடும் மனப் பக்குவம் படைத்தவர்களும்-தொகையில் குறைவாயினும்-சிலராவது, நாட்டில் இருக்கிறார்கள். அதனை ஊக்கப்படுத்த ஏடுகள், அவர்களின் தலைவர், தளபதிகள் இருக்கிறார்கள்.

எதிர்முகாமில் இருப்பினும், சில நேரங்களில் நடுநிலையாக நின்று கருத்து வெளியிடுகிற பெரியவர் பக்தவத்சலம் அது பண்பாடற்ற முறை என்று கூறிக் கண்டனம் தெரிவித்துள்ளார். அதன் தொடர்பாக அவர் தெரிவித்துள்ள தமிழர்-மலையாளிகள் மோதுதல் பற்றிய கண்டனத்தையும் நான் வரவேற்பவன்தான்.

சென்னை தமிழர் பாதுகாப்புப் பேரவை ஊர்வலத்தின் போது நடைபெற்ற சம்பவங்களை, நான் உடனடியாகப் பெங்களூரிலிருந்தவாறு வன்மையாகக் கண்டித்திருக்கிறேன். அந்த நிகழ்ச்சியின் காரணமாக உடனடியாக நாற்பது பேர் கைது-அவர்கள் மீது வழக்கு-காவல்துறையினர் நடவடிக்கை எடுக்கத் தவறவில்லை. இனி இது போல் தமிழர்-பிற மொழியினர் மோதுதல்களை அனுமதிக்க முடியாது என்றும் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறேன்.

காமராஜர்கூடக் கொடைக்கானலில் இருந்தவாறு இனப்பகை வளர்வதைக் கண்டித்துள்ளார். அதுவும் வரவேற்கத் தக்க கருத்துத்தான்.

சென்ற ஆண்டு கம்பம் பகுதியிலிருந்து கேரள மாநில எல்லைக்குள் பணி புரியும் தமிழர்கள்

தொடர்ந்து தாக்கப்படுவதாகக் காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்களே என்னிடம் தூது வந்தனர். சட்ட சபையில் கூட எடுத்துக் கூறினர்.

குமரி மாவட்டத்தை மீண்டும் கேரளாவுடன் இணைக்க இங்குள்ள சில தலைவர்கள் சதி செய்வதாகப் பழைய காங்கிரஸ் உறுப்பினர் சட்ட சபையிலேயே பேசினார்.

அப்பொழுது காமராஜரும் பெரிய பத்திரிகை அதிபர்களும் தமிழ் நாட்டில்தான் இருந்தனர். வெளி நாட்டுச் சுற்றுப் பயணத்தில் இல்லை.

இன்றைக்கு எல்லாவற்றுக்கும் கருணாநிதிதான் காரணம் என்று கதைக்கிறார்கள்.

மதுரையில் நண்பர் எம். ஜி. ஆர். அவர்களை எதிர்த்து நண்பர் சிவாஜி கணேசன் அவர்கள் ஊர்வலம் நடத்தினால், உடனே அதே மதுரையில் கருணாநிதியை எதிர்த்து எம்.ஜி.ஆர். கட்சியினர் ஊர்வலம் நடத்தப் போவதாக அறிவிப்பு.

'அலைஓசையைப் படிக்காதே!' இது காஞ்சிபுரம் மாநாட்டுப்பேச்சு! அலை ஓசையைத் தவிர வேறு எதையும் படிக்காதே-இது அதன்பின்னர் விடுத்த அறிக்கை. இப்போது அலைஓசையில் எம்.ஜி.ஆர். பற்றி ஏதாவது எழுதினால் அதற்கும் கருணாநிதி மீதுதான் கண்டனம்! காய்ச்சல்! கணைகள்!

நேரு மறைந்த அடுத்த சில நாட்களில் சென்னையில் காமராஜர் பிறந்த நாள் ஊர்வலம். பொதுப்பணித்துறை பைப்புகள் எல்லாம் வீதியெங்கும் கொடி மரங்களாயின. அப்போது அவர் முதலமைச்சர்கூட அல்ல! அரசுத்துறை வண்டிகள், ஜீப்புகள், டிராக்டர்கள் ஊர்வலத்தில் அணிவகுத்தன. சட்டசபையில் கேட்டபோது வேறுவழியின்றி 'ஆமாம்' என்று ஒப்புக் கொண்டார் முதல்வர் பக்தவத்சலனார்.

இன்று இந்தச் சாமானியனுக்குப் பிறந்த நாளை நீ கொண்டாடுகிறாய். சாமானியர்களுக்கான திட்டங்களை அறிமுகப்படுத்துகிறேன்.

சிலர் சீறுகிறார்கள். சிலர் எதிர்க்கிறார்கள். பரவாயில்லை. அவர்கள் முன்பெல்லாம் என் பிறந்த நாட்களின் போது வாழ்த்தியதை எண்ணி, இப்போது வசை பாடுவதை மறந்து விடுகிறேன். அவர்களுக்குப் பல பிறந்தநாட்கள் வரட்டும். என் மானசீகமான வாழ்த்துக்கள் அவர்களுக்கு என்றும் உண்டு.

கொடைக்கானலில் இருந்தும்கூட காமராஜர் கோபம் கொப்பளிக்கப் பேசியிருக்கிறார் பார்த்தாயா?

"தி.மு.க.-அ.தி.மு.க. என்பது என்ன? ஏன் பிரிந்தார்கள்? திருட்டுக் கூட்டம் திருடியதைப் பங்கு போட்டுக் கொள்வதில் சண்டை ஏற்பட்டது. பிரிந்தனர்."

இதுவும் கோடையிலே வீசிய காமரசரின் "குளிர்ந்த தென்றல்" காற்றுதான்!

பரவாயில்லை. அவர் பெரிய மனிதர். எப்போதும் இப்படித்தான் பேசுவார்.

நீ அதற்காக அவரைப் பார்த்து-

"காங்கிரஸ் கட்சி ஏன்
இரண்டாகப் பிரிந்தது?
இதேபோல் திருட்டுச்
சொத்தில் பங்குத் தகராறு
தானா?"

என்று கேட்டு விடாதே! நீ குறும்புக்கார உடன்பிறப்பாயிற்றே! கேட்டாலும் கேட்பாய்! தயவு செய்து பொறுமையாக இரு.

அன்புள்ள,

மு. க.

(05-06-1974)

91. நமது விழாக்கள்!

உடன்பிறப்பே,

விழாக்கள் எதுபற்றிக் கொண்டாடப்படினும் அவை வீண் ஆடம்பரங்களாகவோ, வெற்று ஆரவாரங்களாகவோ முடிந்திடக் கூடாது என்பதை நான் அடிக்கடி வலியுறுத்தி வருகிறேன். என் கருத்தினை ஏற்றுக்கொண்டு என் பிறந்தநாள் விழாவில் வானளாவக் கழகக் கொடிகளை ஏற்றியும், உடல் ஊனமுற்றோர் நிதியினை வழங்கியும் ஏழைகட்கு உணவளித்தும் என்னை மகிழ்வித்த உனக்கு ஆயிரம் ஆயிரம் நன்றிகளைக் குவிக்கிறேன். நீ எடுத்த விழாக்களில் இதயம் திறந்து, ஒளிவு மறைவின்றி என்னை வாழ்த்திப் பாராட்டிய சான்றோர்களின் உரைகளை எல்லாம், என்னை என் பணியில் ஊக்கப்படுத்துவதற்காக அமைந்தவை என்றே எடுத்துக் கொள்கிறேன். "என்னை உன்னிடம் ஒப்படைத்திருக்கிறேன். என்னை நீ எப்படி வேண்டுமானாலும் பயன்படுத்திக் கொள்ளலாம்," என்று அன்று கடற்கரைக் கூட்டத்தில் நான் குறிப்பிட்டதை மறந்துவிடாதே!

தொடர்ந்து விழாக்கள் வருகின்றன. நமது அருமைப் பொதுச் செயலாளர் நடமாடும் பல்கலைக் கழகமாம் டாக்டர் மாண்புமிகு நாவலர் அவர்களின் பிறந்த நாள் வருகிற ஜூலைத் திங்கள் 11ஆம் நாள்-அன்றும் இதுவரை ஏற்றப்படாத இடங்களில் நமது இரு வண்ண இலட்சியக் கொடிகள் பட்டொளி வீசிப் பறந்திடச் செய்ய வேண்டும். நா மணக்க-கேட்போர் செவி, சிந்தையெலாம் மணக்கப் பூ மணக்கும் தமிழ்ப் பேச்சால் கொள்கை முரசறையும் என் மூத்த உடன்பிறப்பாம் நாவலரது விழாச் சிறப்பு, கழகச் சிறப்பாகத் திகழக் கச்சை கட்டிச் செயல் புரிந்திடுக.

என் அன்பே, இந்த ஆண்டு நீயும் நானும், கடல் கடந்து வாழும் நமது உடன் பிறப்புகளும், மகிழ்ச்சியும் எழுச்சியும் உணர்ச்சியும் மாறி மாறி அலைபாயும் ஒரு நிலைக்கு ஆளாகப் போகிறோமே; உனக்குத் தெரியுமா?

செப்டம்பர் 15-நம் ரத்தத்தின் ரத்தமாம்-உயிரின் உயிராம்-கண்ணின் ஒளியாம்-அண்ணனின் அறுபத்து ஐந்தாவது பிறந்த நாள் விழா!

செப்டம்பர் 17- இருண்டு, வெளவால் அடைந்து கிடந்த தமிழ்ச் சமுதாயமெனும் மண்டபத்தில் ஒளிவிளக்கேற்றி வைத்துத் தன்மானச் சுடர் பரப்பிய பெரியாரின் பிறந்த நாள் விழா!

அய்யா, அண்ணா - இருவர் பிறந்த நாள் விழாவையும் இருவரும் நம்மிடம் இல்லாத நிலையில் கொண்டாடுகிறோம். மன்னித்துவிடு! அவர்கள் நம்மிடம்தான் இருக்கிறார்கள். நம் நெஞ்சை விட்டு எங்கும் போய்விடவில்லை.

கண்ணின்மணியே! கழகம் பிறந்த இருபத்தைந்தாவது ஆண்டு - வெள்ளி விழாவையும் இந்த ஆண்டு நாம் சந்திக்கிறோம். தமிழகத் தலைநகர் சென்னையில் செப்டம்பர் பதினேழாம் நாள் அறிஞர் அண்ணா நமது கழகத்தைத் துவக்கினார்.

கொட்டும் மழையில் அவருடன் மேடையில் வீற்றிருந்த உடன்பிறப்புக்களில் நானும் ஒருவன்.

அதே ஆண்டு அக்டோபர் 17ஆம் நாள் நாடெங்கும் கழகம் தொடங்கப் பெற்றது. நான் தூத்துக்குடியிலும் கோயில்பட்டியிலும் கழகத் தொடக்க விழா நடத்தினேன். நினைவு இருக்கட்டும். 1949 செப்டம்பர் பதினேழு சென்னையில் தி. மு. க. தோன்றியது. அக்டோபர் பதினேழில் தமிழகமெங்கும் தி. மு. க. அமைப்புகள் தோன்றின.

ஆக-இந்த ஆண்டு செப்டம்பர் பதினைந்து முதல் அக்டோபர் முடிய கழகத்தின் வெள்ளி விழாவைக் கொண்டாட வேண்டியது தான்! விழா, விழாவுக்காக அல்ல! விளைவுகள் விழுதுகளாக இருக்க வேண்டும்! விதைகளாக இருக்க வேண்டும்!

கொள்கை முழங்கட்டும் இந்த விழாக்களில்! நம் கொடிகள் உயரட்டும் இந்த விழாக்களில்! உரிமை ஒலிக்கட்டும் இந்த விழாக்களில்! நம்மிடையே ஒற்றுமை ஓங்கட்டும் இந்த விழாக்களில்!

இனிய உடன்பிறப்பே! இந்த விழாக்களில் இலட்சிய கீதம் இசைக்க இன்றே தயாராகு!

அன்புள்ள,

மு. க.

(16-06-1974)

92. பயணம் தொடரட்டும்!

உடன்பிறப்பே,

நமது உடன் பிறப்புக்களில் சிலர் (அ.தி.மு.க.வினர்) பேசுகிற பேச்சு, எழுதுகிற எழுத்து - அவை பற்றி நீ கொண்டுள்ள கொதிப்பு, எனக்கு விளங்காமல் இல்லை. அவர்களையும் உடன்பிறப்பெனக் கூறுகிறாயா என்று நீ கனல் விழி காட்டுவாய். தெரியும் எனக்கு. வீடணன் இராவணனின் உடன்பிறப்பல்ல என்று கூறிவிட முடியுமா? எல்லா உடன்பிறப்புகளுமே மருது பாண்டியர்களாக, கட்டபொம்மன் - ஊமைத்துரைகளாக இருந்துவிட முடியாதே! குமணன் தலைக்கு விலைவைத்த அமணனும் குமணனுக்கு உடன்பிறப்புத்தானே!

அந்த அமணன் வழி நின்று இந்த உடன்பிறப்புக்கள் வாரி வீசுகின்ற காரமிகு சொற்கள், உன்னைப் போன்ற உளத்தூய்மை கொண்ட உடன்பிறப்புகளை உலைக்களத்துப் பெருமூச்சு எழுப்பிடத்தான் செய்யும். தலையை நறுக்குவேன் என்கிறார்கள். தமிழ்ப் பகைவனின் காலடியில் போடுவேன் என்கிறார்கள். தாசிகுலம் என்கிறார்கள். தமிழகத் தாய்க்குலத்தின் மானத்தை மிதிக்கிறார்கள். முசோலினியின் முடிவுதான் கருணாநிதியின் முடிவு என்கிறார்கள். லூயி மன்னனைப் போல், ஜார் அரசனைப் போல் வீழ்த்தப்பட வேண்டுமென்கிறார்கள். கண்ட இடத்தில் கல்லால் அடிப்போம் என்று கர்ச்சிக்கிறார்கள். அமெரிக்காவின் கைக்கூலி என்கிறார்கள். அண்ணாவின் கொள்கைக்குக் கருணாநிதி பகைவன் என்று முழங்குகிறார்கள்.

இப்படிப் பேசுகிற ஒவ்வொரு இளவலைப் பற்றியும் நான் அறிவேன். என்னை மிகக் கடுமையாக எதிர்த்து அவர்களது "தியாகத்" தலைவரிடம் 'சபாஷ்' பட்டம் பெறுவதற்காக இதனைச் செய்கிறார்கள் போலும். பரவாயில்லை. இவர்கள் தயாரித்துள்ள தலைவெட்டும் திட்டம் வெற்றிகரமாக முடியட்டும். அந்தத் தலை, இவர்களின் தலைவர் அவர்களின் காலிலோ, அல்லது

நாய் நரிகளின் வாய்களிலோ விழட்டும். "கருணாநிதியின் தலை துண்டாடப் பட்டது. போலீசார் புலன் விசாரித்து வருகிறார்கள்" என்ற செய்திகளோடு விவகாரம் முடிந்து அமைதி நிலவட்டும்.

உடன்பிறப்பே, தலைவெட்டப் புறப்பட்டுள்ள இந்தத் தம்பிமார்கள் எல்லாம் யார்? உலக வரலாறுகளைப் புரட்டி, தாழ்ந்த தமிழகம் தலைதூக்கி எழுந்திடத் தங்கள் தமிழாற்றலைப் பயன்படுத்தியவர்கள். அண்ணன் தந்த மாநில சுயாட்சிப் பாடலுக்கு "மெட்டு" அமைத்து இசை பாடியவர்கள். அந்தோ! அவர்கள் எல்லாம் இன்று, தங்கள் ஒப்பற்ற தலைவரின் சினிமாப் படத்தை எப்படி ஓட்டுவது என்பதற்கு விடை காணச் செயற்குழு கூட்டுகிறார்கள். காலம் எப்படி மாறிவிட்டது பார்த்தாயா?

'மாநில சுயாட்சி' என்பது கள்ளக் குழந்தையாம். அந்த உடன்பிறப்புக்களில் ஒன்று உரையாற்றியிருக்கிறது. 1968ஆம் ஆண்டு மாநில சுயாட்சி மாநாட்டில் அண்ணா கொட்டிய மாநில சுயாட்சி முரசம், கள்ளக் குழந்தையாம்! பரிதாபம்-தங்களை மறந்து பேசுகிறார்கள். இந்த அழகில் அண்ணாவின் பெயரால் கட்சி!

முன்னாள் உச்ச நீதிமன்ற நீதிபதி சுப்பாராவ், "கூட்டாட்சியும் மாநில சுயாட்சியும் பிரிக்க முடியாதவை, சுயாட்சி இல்லாமல் கூட்டாட்சி இருக்கவே முடியாது" என்று நேற்று சென்னைக் கருத்தரங்கில் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார். இது போன்ற கருத்துச் செல்வங்களுக்கு "கவிநயம்" உரைத்து கண்டுநிகர் மொழியில் பேசிட வல்லவராம் சில உடன் பிறப்புக்கள், இதனை விடுத்து எதனையோ நம்பி எரிச்சல் மொழிகளின் கதாபாத்திரங்களாகி விட்டனரே என எண்ணும்போது கவலை மேலிடாமல் இல்லை.

எனினும், நீ இருக்கிறாய்-நம் வாழ்வே முடிந்து போயினும் நாம் உருவாக்கிய வரலாற்று அத்தியாயங்களை யாராலும் அழிக்கவோ, மறைக்கவோ முடியாது என்ற துணிவும் நம்பிக்கையும் தருவதற்கு!

நம் பயணம் தொடரட்டும்!

அன்புள்ள,

மு. க.

(23-06-1974)

93. பிறந்த நாள் விழாவும் மறந்த சில விவரங்களும்!

உடன் பிறப்பே,

காமராஜர் அவர்களின் 72-வது பிறந்த நாள் விழா, சென்னை மாநகரில் மிக விமரிசையாகக் கொண்டாடப் பெற்றது. 72 இடங்களில் அலங்கார வளைவுகள்; விதவிதமான சுவரொட்டிகள்; ஒவ்வொரு சுவரொட்டியிலும், காமராஜரது வகை வகையான திருவுருவங்கள்; 'காந்தியின் வாரிசு' என்றும் 'உலகை உய்விக்க வந்தவர்' என்றும், 'ஒழுக்கம்-நேர்மை-ஊழலற்ற தன்மை அனைத்துக்கும் அவர் ஒருவரே இன்றைக்குக் கண்கண்ட தெய்வம்' என்றும், அந்தச் சுவரொட்டிகளிலே-சொற்பொழிவுகளிலே-புகழாரங்கள்! பாட்டுக் கச்சேரிகள்-பாராட்டு மொழிகள்! மகர தோரணங்கள்-மகத்தான ஊர்வலம்! வனப்புமிகு சித்திரங்கள்-வண்ண வண்ண வண்டிகள்! எண்ண எண்ண இனிக்கின்ற காட்சிகள்! இன்னும் எத்தனையோ அற்புதங்கள்!

'ஒரு தமிழர் ஏற்றம் பெறுகிறார்' என்பதைக் கேட்கும்போது, உணர்ச்சியுள்ள மற்றொரு தமிழன் மகிழ்வதுதான் இயல்பு-மகிழத்தான் வேண்டும்.

காமராஜர் இரஷ்யாவுக்குச் சென்றபோது, அறிஞர் அண்ணா அவர்கள் அப்படித்தான் கருத்துத் தெரிவித்துப் பாராட்டினார்.

இரஷ்யாவிலிருந்து திரும்பி வந்த காமராஜரைப் பாராட்டி, தேனாம்பேட்டையில் காங்கிரசுக் கூட்டம் நடைபெற்றபோது,

"தி.மு.க.காரர்களின் பிறவியிலே சந்தேகப்படுகிறேன்" என்ற பொன்மொழிகளைத்தான் உதிர்த்தார், காமராஜர்!

அதற்குப் பிறகும், அதற்குப் பதிலுக்குப் பதில் சுடு சொற்களை வாரி வீசக் கழகத்தினரோ, தலைவர் அண்ணா அவர்களோ

மேடைகளையோ - ஏடுகளையோ பயன்படுத்திக் கொள்ளவில்லை என்பதை நாடறியும்!

ஆனால், காமராஜர் எத்தகைய இயல்பு படைத்தவர் என்பதை மட்டும் அப்போது நாம், அவரது பேச்சுக்களைச் சுட்டிக் காட்டி மக்களிடம் விளக்கி வந்தோம்!

அவரது கடுமையான தமிழ்ச் சொற்களுக்கும் பதப் பிரயோகங் களுக்கும், 'பிரதமர் இந்திரா காந்தியே விதிவிலக்கு அல்லர்' என்கின்றபோது நாமெல்லாம் எம்மாத்திரம்!

"இரஷ்யாவுக்குப் போய்விட்டு வந்த ஒரு கோமாளி என்னமோ உளறுகிறான்"

என்று, கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனைப் பற்றிக் கடற்கரைக் கூட்டத்தில் காமராஜர் முழங்கியது நமக்கு மறந்து விடவில்லை!

"பெரியாரின் கட்டை விரலை வெட்டுவேன்"

என்று காமராஜர் கர்ச்சனை செய்ததும், அதற்கு மிகக் கடுமையான கண்டனக் கணைகளைக் குத்தூசி குருசாமி பொழிந்ததும் மறந்துவிடக்கூடிய அரசியல் நிகழ்ச்சிகள் அல்ல!

அண்ணா அவர்களைக் காமராஜர், மேடைகளில், 'அவன் - இவன்' என்று பேசியதும், அதற்குப் பதில் அளித்த அண்ணா அவர்கள் "ஆண்டவனைக்கூட, 'அவன்-இவன்' என்றுதான் பக்தர்கள் அழைக்கிறார்கள்" எனக் கூறி அரசியல் பெருந் தன்மையைக் காட்டியதும் நாட்டுக்கு நினைவிருக்கிறது!

இவைகளை எல்லாம் மறந்துவிடலாமென்று முயற்சித்தாலும், காங்கிரசுக் கட்சியின் இன்றைய அதிகார பூர்வமான ஏடான 'நவசக்தியும்' காங்கிரசுப் பேச்சாளர்களும் அவைகளை எல்லாம் மறக்க வேண்டாமென்று நமக்கு எச்சரிக்கை செய்து கொண்டே இருக்கிறார்கள்!

அண்ணா மறைந்து அமரராகி ஐந்து ஆண்டுகள் ஆகியும் கூட, அண்ணாவைப் பற்றி ஆபாசமாக எழுதுவதும் காமராஜர் பிறந்த நாளையொட்டிக் கேலிச் சித்திரம் போட்டுக் காட்டுவதும் அந்த ஏட்டில் ஓய்ந்த பாடில்லை!

எல்லோருக்கும் பழைய கதைகள் இருக்கின்றன! 'அந்தக் கதைகளைக் கிளறக்கூடாது' என்பதுதானே தவிர, கிளற முடியாது என்பதல்ல!

"அரசியல் அரங்கங்களைச் சந்துமுனைச் சிந்து பாடுவோரின் கூத்து மேடைகளாக ஆக்கிடக் கூடாது" என்பதே நமது கருத்து; அதில் நம்மவர்களே சற்று வரம்பு மீறினாலும் கண்டிக்கிறோம்-கட்டுப்படுத்துகிறோம்.

ஆனால், காங்கிரசின் அதிகாரபூர்வ ஏடாக விளங்குகின்ற 'நவசக்தி' அண்ணாவைப் பற்றிச் செய்கின்ற கேலிகள், சகித்துக் கொள்ளக்கூடியவையாக இல்லை; அதனால்தான், காமராஜரின் அரசியல் பண்பாடுகள் பற்றிய ஒன்றிரண்டு எடுத்துக் காட்டுகளை மட்டும் இப்போது உனக்கு நினைவூட்டினேன்.

'நவசக்தி' காங்கிரசின் அதிகாரபூர்வ ஏடு அல்ல-என்று, யாராவது வாதிக்கக் கூடும்; காங்கிரசிலேயே 'வடக்கே இருக்கின்ற காங்கிரசு அதிகார பூர்வமானதா அல்லது காமராஜர் தலைமையில் தமிழ் நாட்டில் இருக்கின்ற காங்கிரசு அதிகார பூர்வமானதா' என்பது விளக்க முடியாத ஒரு புதிர்!

கச்சத்தீவு ஒப்பந்தத்தை எதிர்த்து கம்யூனிஸ்டு தவிர, பழைய காங்கிரசு உட்பட எல்லா எதிர்க் கட்சிகளும் நாடாளுமன்றத்தில் வெளி நடப்புச் செய்திருக்கின்றன; ஆனால், இங்கே அந்தச் செய்தி, 'நவசக்தி'யில் சிறியதாக்கப்பட்டு,

'ஒப்பந்தம் சரிதான்'

என்ற அமைச்சர் சுவரண்சிங் அளித்த பதில் கொட்டை எழுத்துக்களில் வெளியிடப்பட்டிருக்கிறது.

இது, பழைய காங்கிரசுக்குள்ளே இருக்கின்ற கொள்கைக் குழப்பம்!

இத்தனையையும் ஒதுக்கி வைத்துவிட்டு, காமராஜருக்குப் பிறந்தநாள் விழா சிறப்புற நடைபெற்றது கண்டு நாமும் மகிழ்கிறோம்.

இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்பு, மாணவர் காங்கிரசார் நடத்திய காமராஜர் பிறந்த நாள் விழாவில் நானே கலந்து கொண்டு வாழ்த்திப் பேசியும் இருக்கிறேன்.

உடன்பிறப்பே, ஒன்று கவனித்தாயா? அவர்கள் பிறந்த நாள் விழா கொண்டாடலாம்; சுவரொட்டிகள் விதவிதமாக ஒட்டலாம்; வளைவுகள்-தோரணங்கள்-ஊர்வலங்கள் எல்லாம் நடத்தலாம்; ஆனால், நம்மவர்கள் பிறந்த நாள் விழா கொண்டாடினால் அவர்களுக்கு எவ்வளவு ஆத்திரம் கரை புரளுகிறது!

கேலி-
கிண்டல்-
ஏசல்-
ஏளனம்-
ஏகடியம்-

எத்தனை எத்தனை வெறுப்பு வெடிகள்! எத்தனை தலையங்கங்கள்! எத்தனை கேலிச் சித்திரங்கள்!

ஒரு தமிழ்ப் பெருமகனுக்கு நடைபெறுகின்ற பாராட்டைக் கண்டு, மகிழ்வதாகச் சொன்ன அண்ணாவின் வழி வந்த நம்மையும், அந்த அண்ணாவுக்குக் காமராஜர் விழாவில் ஆபாசக் கேலிச் சித்திரம் வரைந்து காட்டும் காங்கிரசார் மனவளத்தையும், நாடு ஒப்பிட்டுப் பார்க்காமல் போய்விடாது!

காமராஜர் பிறந்த நாள் விழா ஊர்வலம், மகத்தானதுதான்; ஆம்-சென்னையில் நடைபெற்ற பெரிய ஊர்வலங்களில் ஒன்று-ஒப்புக் கொள்வோம்!

அந்த ஊர்வலச் சிறப்புப் பற்றி, 'தினமணி' வர்ணிக்கிறது பார்-

"காமராஜரைக் 'கரிகாலன்' என்றும், 'செங்குட்டுவன்' என்றும் சித்தரிக்கும் அலங்கார வண்டி ஒன்று ஊர்வலத்தில் சென்றது."

"தினமணி" வர்ணனையில் இது ஒரு பகுதி; காமராஜரை யாருடனும் ஒப்பிடும் உரிமையும்-பாசமும் அவர்களது கட்சித் தொண்டர்களுக்கு உண்டு: அதில் யாரும் குறுக்கிட விரும்பவில்லை.

ஊர்வலத்தில் சென்ற இன்னொரு வண்டியைப் பற்றி வர்ணிக்கிறது பார், 'தினமணி'-

'ஓர் அலங்கார வண்டியில் போலீஸ்காரர் மது அருந்த-
அவருக்குப் பக்கத்தில் ஓர் ஆணும் பெண்ணும்

மதுவருந்திக் கும்மாளம் போட்டுச் செல்லும் காட்சி இடம் பெற்றிருக்கிறது.'

இது, காமராஜர் பிறந்த நாள் விழா ஊர்வலச் சிறப்புக்களில் ஒன்று! அந்தக் காட்சி கண்டு காமராஜர் கை அசைத்து மகிழ்ந் திருக்கிறார்!

போலீசாரில் சிலர் தவறு செய்யக்கூடும்; அதற்காக அந்த இலாகாவையே பழி கூறுகின்ற ஒரு காட்சியை-முன்னாள் முதல்வர் ஒருவரின் பிறந்த நாளில் இடம்பெற செய்வதும், அதனை மகிழ்ச்சியுடன் 'தினமணியார்' வெளியிடுவதும் 'ஒழுங்குமுறை'தானா என்று சிந்திக்க வேண்டும்.

ஊர்வல ஏற்பாடுகள், பிறந்த நாள் நிகழ்ச்சிகள் இவைகளை உற்சாகத்துடன் கவனித்த நண்பர் கவியரசு கண்ணதாசன் அவர்களின் கண்களிலே இந்த அலங்கார வண்டி எப்படித் தென்படாமல் போயிற்று என்றே எனக்குப் புரியவில்லை.

காந்தி ஜெயந்தியைவிட-நேரு பிறந்த நாளைவிட-மிக விமரிசையாகக் காமராஜர் பிறந்த நாள் விழாவைக் கொண்டாடிய காங்கிரசுத் தொண்டர்களின் ஆர்வத்தை நான் பாராட்டுகிறேன்; அவர்கள், அந்த முயற்சியில் பெற்ற வெற்றிக்காகவும் மகிழ்கிறேன்.

விழா பற்றிச் சொன்னேன்; அடுத்த கிழமை, மேலும் பல விவரங்களை விளக்குகிறேன்-அரசியல் ரீதியாக!

அன்புள்ள,

மு. க.

(28-07-1974)

94. நேரமும் நினைப்பும்!

உடன்பிறப்பே!

மதுவிலக்குப் பற்றித் தங்களுக்கு இருக்கின்ற அக்கறையும் ஆர்வமும் வேறு எந்தக் கட்சிக்காரருக்கும் இல்லை என்றும், அது பற்றிப் பேசுகின்ற மொத்த உரிமைக்கான குத்தகையைத் தாங்கள்தான் எடுத்துக் கொண்டிருப்பதைப் போலவும் பழைய காங்கிரசுக் கட்சியினர் கருதிக் கொண்டுதான்-காமராஜரின் பிறந்தநாள் விழா ஊர்வலத்தில்-'போலீசு இலாகா'வையே இழித் துரைக்கும் வகையில்-அலங்கார வண்டிகளை அணிவகுக்கச் செய்தனர்!

நமது கழகம் எதிர்க் கட்சியாக இருந்தபோது-போலீசு அடக்கு முறையினால் மக்கள் பாதிக்கப்படும் போதும் அல்லது தனிப்பட்ட போலீசார் தவறு செய்யும் போதும், அந்தக் குறிப்பிட்ட சம்பவங் களை மட்டுமே கண்டித்து எழுதவும், பேசவும் செய்திருக்கிறது!

நீ மறந்திருக்க மாட்டாய் என்று நம்புகிறேன்; காங்கிரசாட்சியில், நாம் போலீசாரால் தாக்கப்பட்ட நேரத்தில்தான்-போலீசாரால் அடக்கு முறைக்கு ஆளாக்கப்பட்ட நேரத்தில்தான்-நான் எழுதி நடித்த 'உதய சூரியன்' நாடகத்தில், போலீசாரின் கோரிக்கை களையும்-அவர்களுடைய குடும்பத் தொல்லைகளையும் மையமாக வைத்து இரண்டொரு காட்சிகள் அமைத்திருந்தேன்.

அந்த நாடகத்தில் நான் போலீசாரின் நல்வாழ்வுக்காக எடுத்துச் சொன்ன கருத்துக்களை யெல்லாம், இப்போது, 'போலீசுக் கமிஷன்' அமைத்து-அதன் பரிந்துரைகளின்படி நிறைவேற்றி வருகிறோம் என்பதை நாடு நன்கு அறியும்.

ஆனால், அன்றைக்கு நிலைமை என்ன? போலீசாருக்காக 'வக்காலத்து' வாங்கி நான் எழுதியிருந்த காட்சிகளுக்காக, 'உதய சூரியன்' முழு நாடகமே தடைசெய்யப்பட்டு விட்டது!

காவல் துறை நண்பரின் வீடு; அவரது மனைவி குழந்தையைத் தொட்டிலில் இட்டுத் தாலாட்டுப் பாடுகிறாள்-

“போலீசு வேலைக்கென்று
போகின்ற ஙொப்பனுக்கு
புத்திரனாய் வந்துதித்த
தரித்திரமே கண்வளராய்-
துப்பாக்கி தூக்கிகிட்டு
போகின்ற ஙொப்பனிடம்
பழம்பாக்கி கேட்டுகிட்டு
வருகின்றார் கடன்காரர்
காக்கி உடை மாட்டிகிட்டு
சேப்புத் தொப்பி போட்டுகிட்டு
போகின்ற ஙொப்பனுக்கு
உன்னைப்போல நாலுவந்து
பிறந்துவிட்டால்
காவி உடை வேணுமடா!
கமண்டலமும் தேவையடா!”

இது போலத்தான், அந்தத் தாலாட்டு- இதற்காக நாடகமே தடைக்கு ஆளாயிற்று!

நாம் அடக்கு முறைக்கு ஆளான போதும், போலீசாருக்காகப் பரிந்து பேசினோம்; ஆனால் காங்கிரசு நண்பர்களோ, இன்றைக்குப் போலீசுப் பாதுகாப்புப் புடைசூழ, போலீசு இலாகா, ‘குடிகார இலாகா’ என்னும் பொருள்பட ஊர்வலம் நடத்திக் காட்டுகிறார்கள்!

‘புதுச்சேரியில் தேர்தல்’ என்றால் மட்டும், இவர்களுடைய மதுவிலக்குக் கொள்கை மாயமாய் மறைந்துவிடும்!

‘புதுவையில் தமிழர்கள் வாழ்கிறார்கள்’ என்ற நினைவே அவர்களுக்கு இல்லை போலும்!

ஏக இந்தியா- இந்திய ஒருமைப்பாடு- அகில இந்திய அரசியல்- பாரதத் தலைவர்-இந்த வார்த்தைகள் எல்லாம், இங்குள்ள காங்கிரசுத் தோழர்களுக்கு மெத்தவும் பழகிப் போனவை; ஆனால், **‘இந்தியா முழுமைக்கும் மதுவிலக்கு வேண்டும்’** என்று அவர்கள் வாதாடவோ, போராடவோ தயாராக இல்லை!

மது விலக்குப் பிரச்சினையில் மட்டும், இந்தியாவிலிருந்து தமிழ்நாட்டைப் பிரித்து, 'பிரிவினை வாதிகள்' ஆகிவிடுகிறார்கள்!

'மது' என்றால் என்னவென்றே தெரியாமல் இருந்த தமிழ் மக்களிடம் நமது அரசு புதிதாக 'மது'வை அறிமுகப்படுத்தி விட்டதாம் - இப்படியொரு கட்டுப்பாடான பிரச்சாரத்தைக் காமராஜரும் மற்றும் சில மதுவிலக்கு வீரர்களும் செய்கிறார்கள்!

'மது' என்ற வெறி நாயை அவிழ்த்துவிட்டு-மனிதனைக் கடிக்கச் சொல்லி-இப்போது அந்த நாயைத் திரும்ப நான் இழுத்துக் கொண்டது போலக் கேலிச் சித்திரம் போடுகிறது ஓர் ஏடு!

இந்தியாவில் - கேரளம், ஆந்திரம், கருநாடகம், மராட்டியம், வங்கம், ஒரிசா, டெல்லி ஆகிய எல்லா இடங்களிலும்-குசராத்தையும், தமிழகத்தையும் தவிர-அந்த வெறி நாய்கள் தொடர்ந்து கடித்துக் கொண்டுதான் இருக்கின்றன!

அந்த நாய்க்கடி படுவதற்கு என்றே, தமிழ் நாட்டிலிருந்து அங்கு அடிக்கடி சென்று வந்தவர்களையும்-இனிமேல் செல்ல இருப்பவர்களையும் நாம் அடையாளம் கண்டு வைத்திருக்கிறோம் என்பதை, அந்த ஏட்டாளர் அறியாமல் போனதுதான் விந்தை! என்ன செய்வது?

"பூப்போட்ட கிளாசிலே
போடய்யா ஒண்ணரை"

என்று பாடிக்கொண்டே,

மதுவிலக்குப் போராட்டத்தில் ஈடுபடுவதும்-
'கள்ளையும் சாராயத்தையும் கண்டு பிடித்ததே கழக
அரசுதான் என்று கணை தொடுப்பதும்-

இன்றைய அரசியல் நாடகத்தில் ஓர் அங்கமாகி விட்டிருக்கிறது!

"நிறையக் குடித்தாலும்
நிதானம் தவறமாட்டேன்-
நெருப்புப்பெட்டி எங்கே வச்சேன்"

என்று தடவித் தடுமாறுகிறவர்கள் எல்லாம், மதுவிலக்கிற்காக வாதாடுகின்ற காட்சியும் நாட்டில் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது.

மது அறவே ஒழிய வேண்டும் என்பதில் காமராஜர் போன்ற தலைவர்களுக்கு இருக்கின்ற அக்கறையை நான் மதிக்கின்றேன்.

ஆனால், அதற்காக-அவர் அகில இந்திய காங்கிரசுக் கட்சியின் தலைவராக இருந்தபோது-எடுத்த நடவடிக்கை என்ன?

'நேருப் பிரதமரின்' நெருங்கிய நண்பராக இருந்தபோது, அப்படி ஒரு சட்டத்தை அகில இந்திய அளவில் நிறைவேற்ற அவர் முயற்சி எடுத்தாரா?

சாஸ்திரியை-இந்திரா காந்தியைப் 'பிரதமர்'களாக ஆக்கிய பெருமை, பெரியவர் காமராஜருக்கு உண்டே! மதுவென்னும் கொடிய வெறிநாயை விரட்டுவதற்கு அவர்களைத் துணையாகக் கொண்டு-அனைத்திந்திய நிலையில் சட்டம் கொண்டுவந்து நடவடிக்கை எடுத்தாரா?

'அகில இந்தியக் காங்கிரசுத் தலைவர்' என்று அவர் கொடிகட்டி வாழ்ந்தபோது-எல்லா மாநிலங்களிலும்-அவர் ஆணைக்கு உட்பட்ட காங்கிரசுத் தலைவர்களே முதலமைச்சர் களாக இருந்தார்கள்-யாரிடமாவது ஒரு வார்த்தை சொல்லி, மதுவிலக்குக் கொள்கையை அந்தந்த மாநிலங்களில் கொண்டுவர நினைத்தாரா?

'இவைகளை யெல்லாம் எண்ணிப் பார்க்க இங்குள்ள இதழாளர்களுக்கு நேரமில்லை' என்றா கருதுகிறாய்?

நேரமிருக்கிறது; ஆனால், நினைப்பு-நம்மீது எரிச்சலை எப்படிக் கொட்டுவது என்பதில்தானே இருக்கிறது!

அன்புள்ள,

மு. க.

(04-08-1974)

95. 'மாம்பழ மங்கை!'

உடன் பிறப்பே,

அழகின் சிரிப்பாய் முகமும்-அருவியின் கீதமாய்ப் பேச்சும்-'அங்கமோ தங்கம்' எனும் விதத்தில் நிறமும் கொண்ட பாவை ஒருத்தியைப் பாட்டெழுதும் புலவர்கள் 'மாம்பழ மங்கை' என வர்ணிக்கத் தவறமாட்டார்கள்!

'எலுமிச்சம் பழம் போல் இருக்கிறாள்' எனச் சிறப்பித்துக் கூறும்போது, அவள் நிறம் மட்டுமே நினைவில் வரும்!

'செந்தாமரையைப் போன்றாள்' எனக் கவிச்சரம் தொடுக்கும் போது, அவளுடைய எழில்மிகு மென்மையான வண்ண முகமே எதிர் நிற்கும்!

'மயிலனையாள்' என்றாலோ, சாயல்தான் மனவிழி முன் தோன்றி மறையும்!

'மலர்க் கொடியாள்' என்று கூறும் போழ்து, உடலின் வனப்பே உள்ளத்தில் நிழலாடும்!

இத்தனைக்கும் மேலாக, 'மாம்பழ மங்கை' என்றுகூறி விட்டாலோ-அவள் வண்ணம், வளம், சுவை அனைத்துமே நெஞ்சில் பதிந்து விடுகிறது!

மங்கை, 'மாம்பழம் போல் இருக்கிறாள்' என்று திரும்பத் திரும்பக் கவி எழுதித் தெவிட்டிப் போனவர்களுக்கு இதோ ஒரு புதிய 'பொருள்' கிடைத்திருக்கிறது!

மங்கை-மாம்பழம் போல் இல்லை; அதற்குப் பதிலாக, மாம்பழம்-மங்கை போல் இருக்கிறது!

"வெறும் மாம்பழத்தையே வண்டு துளைத்திடும் காட்சியைக் காண்கிறோம். மங்கை போல் இருக்கும் மாம்பழத்தை வண்டுகள்

சும்மா விடுமா?" என்று கேள்வி கேட்பதே-கவிஞர்களுக்கு-ஒரு காவியத்திற்கான 'மூலப்பொருள்' கிடைத்தது போலத்தானே!

மகேசன் அருளால் மாயமாய் மாம்பழத்தை வரவழைத்துக் கொடுத்து-மணாளனைத் திகைக்க வைத்த காரைக்கால் அம்மை யாரைத்தான், "மாம்பழ மங்கை" என்பர்!

"இதோ...மங்கையே மாம்பழமாக மாறி மரக்கிளையில் ஊஞ்சலாடுகிறாள் பாருங்கள்" என்று-கதாகாலட்சேப பாகவதர்கள், நீட்டி முழக்கிப் பாடத் தொடங்கினாலும் வியப்பில்லை!

"என்ன-மாம்பழம்-மங்கை என்றெல்லாம் ஏதேதோ கூறு கிறாய்! என்ன சொல்ல இந்தப் பீடிகை எல்லாம்?" என்று கேட்கத் தோன்றுகிறதல்லவா உனக்கு?

உடன் பிறப்பே! ஏடுகளில் பரபரப்புடன் வந்துள்ள செய்தி களை நீ படிக்கவில்லையா?

"இராணிப்பேட்டை பாலாற்றங்கரையில் உள்ள ஒரு மாந்தோப்பில் ஒரு மாம்பழம், ஒரு பெண்ணைப் போலவே தோற்றமளிக்கிறது. ஏறக்குறைய ஏழு அங்குல நீளம்-நாலு அங்குல அகலமுள்ளதாகக் காய்த்துத் தொங்கிக் கொண்டிருக்கிறது; இரு கைகளைத் தவிர, மற்ற எல்லா உருவத் தோற்றமும் அப்படியே காட்சி அளிக்கிறது. அந்த அதிசய மங்கையைக் காண ஏராளமான மக்கள் வருகிறார்கள். மாந்தோப்பு எந்த நேரமும் விழாக்கோலம் கொண் டிருக்கிறது. இந்த மாங்கனி மங்கைக்குப் பெண்கள் தேங்காய்-பழம், சூடம் சாம்பிராணி தூபதீபம் காட்டி வழிபடுகிறார்கள். இதற்கு ஒரு கோயில் கட்டி வழிபட மாமரத்தின் அடியில் ஒரு உண்டியலும் வைக்கப்பட்டு அதில் பணமும் குவிகிறது."

இப்படிச் செய்திகள் ஏடுகளில்! ஆண்டுக்கு ஒருமுறை இதுபோன்ற அதிசயங்கள் பரவுவதும், அதனை வேடிக்கை பார்க்க மக்கள் திரளுவதும் நம் நாட்டு வாடிக்கை!

"பரங்கிப் பூ ஒன்று பத்துத் தலை நாகம் போல் படமெடுத் தாடுகிறது; பக்தர்கள் கூட்டம் தாங்கவில்லை!" இப்படிச் சில நாட்கள் செய்திவரும்; பின்னர் மறையும்!

"ஊமைகளைப் பேச வைக்கும் சாமியார் ஒருவர் ஓட்டலில் தங்கியிருக்கிறார்" என்று இரண்டு நாட்கள், இதழ்களில் விளம்பரங்கள் மின்னும். பின்னர் 'அவர் ஓடிவிட்டார்' என்று தகவல் கிடைக்கும்!

சித்துக்கள் புரிகிறார். செத்தவரைப் பிழைக்க வைக்கிறார். செம்பொன்னா - மணியா - மரகதமா - மழலைச் செல்வமா எது கேட்டாலும் தருகிறார். ஆரணங்குகள் அவரைத் தனியேதான் சந்திக்க வேண்டும் என்று நிபந்தனை போட்டாலும் 'அப்படியே ஆகட்டும்' என்று அவர்தம் அருள் பெறப் பத்தினியை அனுப்பி வைக்கும் பக்திமிகு ஆடவர்களும் இன்னும் இருக்கிறார்கள்!

பத்து நாட்களில் சித்து விளையாடிய சாமியார், கள்ளநோட்டு வழக்கில் கைதாகிறார்; அல்லது கொலை வழக்கில் குற்றவாளி யாகிறார்; அல்லது 'தப்பிக்க முடியாது' என அறிந்து தற்கொலை செய்து கொள்கிறார்.

இத்தனை அனுபவங்களுக்குப் பிறகும் ஏமாளிகள் இருக்கத் தான் செய்கிறார்கள்! ஏமாற்றும் எத்தர்கள் 'புத்தர்'களைப்போல் வேடமிட்டுப் பொல்லாத் தொழிலை நடத்திக் களிக்கிறார்கள்!

என்ன செய்வது! காஞ்சிபுரம் யானைக்கு என்ன நாமம் போடுவது, வடகலையா? தென்கலையா? என்ற போராட்டம் இன்னும் ஓயவில்லையே! அர்த்தமுள்ள இந்து மதத்தின் மகிமையல்லவா இது!

உண்மை, ஆழ்ந்த பற்று, இலட்சியப் பிடிப்பு இவைகளுக்கு மேலாகச் சில நேரங்களில் அதிசயக் கவர்ச்சிகள் மக்களை ஏமாளிகளாக்கி விடுகின்றன என்பதற்கு இவை எல்லாம் எடுத்துக் காட்டுகள் அன்றோ!

மாம்பழம் மங்கை வடிவு கொண்டதாக விளங்குகிறது; வியப்புக்குரிய ஒன்றுதான்! வேடிக்கை பார்க்க வேண்டியதுதான்.

அதற்காக அதனையே 'அப்சரஸ்' என வர்ணித்து, ஆகாய லோகத்திலிருந்து நூலேணி வழியாக வந்திறங்கிப் பாலாற்றங்கரை மாந்தோப்பில் ஊஞ்சலாடும் ஊர்வசி, ரம்பை, மேனகை என நம்பி அதற்குக் கோயில் கட்டத் திட்டமிடுவானேன்? அதற்கென உண்டியலில் பணம் போடுவானேன்?

அதுவோ மரத்தில் தொங்கிக் கொண்டிருக்கும் மாங்கனி! வடிவம்-மாங்கனி போன்றது! கவர்ச்சியாகத்தான் இருக்கும்! சில புதிய கட்சிகளைப்போல!

அந்த மாம்பழ மங்கைக்குக் கைகள் இல்லையாம்-சில கவர்ச்சிக் கட்சிகளுக்குக் கொள்கைகள் இல்லாததைப்போல!

மாம்பழ மங்கை மரத்தில் தொங்கும் வரையில் கூட்டம் இருக்கத்தான் செய்யும்; கீழே விழுந்தபிறகும் சில நாட்கள் வேடிக்கை பார்க்கலாம்; என்னதான் 'பதம்' செய்து பாதுகாத்தாலும் நாளடைவில் தோல் சுருங்கும்; மேனி வதங்கும்; வற்றலாகக் காட்சி அளிக்கும்.

அதற்குள் வடஆற்காடு மாவட்டத்திலேயே வேறு ஒரு அதிசயம் கிளம்பும். 'பூசணிப் பூவில் புல்லாங்குழல் ஊதும் கண்ணன் தெரிகிறான்' என்று ஒரு வதந்தி பரவும்! பிறகு அந்தப் பூசணிக் கொல்லை விழாக் கோலம் காணும்!

என்ன செய்வது-இப்படியே பழகி விட்டார்கள் நமது மக்களில் ஒரு பகுதியினர்!

"பகுத்தறிவு வாதிகளின் பணி முழுமை பெறவில்லை" என்பதற்கு அடையாளந்தான் இவைகள் எல்லாம்!

உடன்பிறப்பே! ஓயாத உன் கட்சிப் பணியில் ஒரு பகுதிதான் பகுத்தறிவுப் பிரச்சாரம் என்பதையும் மறந்து விடாதே!

அன்புள்ள,

மு. க.

(11-08-1974)

96. அதே தேதிகள்!

பட்ட போதும்-தூக்கு மரத்திற்கு அழைத்துச் செல்லப்பட்ட போதும்-அவன் முகத்தில் ஒளி மங்கவில்லை. வீரம் மறையவில்லை. கேள்விகளுக்கு அலட்சியமாகப் பதில் அளித்தான். உலவிக் கொண்டே பேசினான். காட்டிக் கொடுத்த பாளையக் காரர்களைக் கேலியாகப் பார்த்துச் சிரித்தான். தூக்குக் கயிற்றைத் தானே கழுத்தில் மாட்டிக் கொண்டு உயிர் விட்டான்!

என்றெல்லாம் வெள்ளைக்கார அதிகாரிகளே வியந்துரைத் துள்ளனர்.

அவனுடைய கோட்டையை இடித்துத் தகர்க்கின்றனர்; வெள்ளையர் படை நெருங்கி வருகிறது; அப்போது நினைத்தாலும், கட்டபொம்மனும்-அவன் உற்றார் உறவினரும்-தளபதிகளும் உயிர் வாழ்ந்திருக்கலாம்-சரணாகதி அடைந்து! அதை விரும்பாத அந்த வேங்கைக் கூட்டம், வெளியேறுகிறது கோட்டையை விட்டு!

எட்டப்பனின் ஆட்கள் அந்தக் கூட்டத்தைப் பிடித்துக் கொடுக்க எட்டுத் திக்கும் வலை பின்னினர்! எங்கிருந்தோ வந்தவனுக்கு, இங்கிருப்பவனைக் காட்டிக் கொடுப்பதில் எவ்வளவு மகிழ்ச்சி! என் செய்வது-சுயநலம்! சுயநலம்!! கடைந்தெடுத்த சுயநலம்!!!

கோட்டையிலிருந்து கிளம்பிய கட்டபொம்மன், கோலார்பட்டி பாளையக்காரர் வீட்டில் தங்குகிறான். அங்கு எட்டப்பனுடன் வெள்ளையர் படை வந்து சூழ்ந்து கொள்கிறது; அங்கும் போரிட்டுத் தப்பிச் செல்கிறார்கள்-பாஞ்சை வீரர்கள்!

வெள்ளையரை எதிர்க்க-எல்லாப் பாளையக்காரரையும் ஒன்று திரட்டும் நோக்குடன் செல்லும் வீரபாண்டியன் குழுவினரைப்

புதுக்கோட்டை மன்னர் வரவேற்கிறார்; விருந்தளிக்கிறார்; புன்னகை புரிகிறார்; 'நான்கு நாட்கள் தங்கிவிட்டுப் போக வேண்டும்!' என்று நயம்படப் பேசுகிறார்!

நரியின் புதரைப் 'புலியின் குகை' என நம்பி-கட்டபொம்மன் ஏமாறுகிறான்!

இதற்கிடையே, புதுக்கோட்டை மன்னர், ஆங்கிலேயர்க்குச் செய்தி அனுப்புகிறார்!

நண்பரை நம்பி-விருந்தருந்தி அயர்ந்திருந்த வீரபாண்டியனும்-ஊமைத்துரையும்- மற்றவரும்-ஆங்கிலேயர் கையில் சிக்கி விடுகின்றனர்.

1790ஆம் ஆண்டு தனது முப்பதாவது வயதில் அரசுக் கட்டிலேறி-ஒன்பது ஆண்டுக்காலமும் எதிர்ப்புக்களையே சமாளித்து- மாற்றானிடம் மண்டியிடாமல் வாழ்ந்த அந்தச் சிங்கம், காட்டிக் கொடுக்கப்பட்ட நாள் என்ன தெரியுமா?

1799ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் இருபத்து நான்காம் நாள்!

அதே செப்டம்பர் இருபத்து நான்காம்நாளில் தான்-என் அன்பு உடன் பிறப்பே! நம் கழகத்தைக் காட்டிக் கொடுக்கும் செயல், செங்கற்பட்டு பொதுக் கூட்டத்தில் தொடங்கிற்று 1972இல்.

இருப்பதும் அழிவதும்-வாழ்வும் சாவும் இயற்கை; ஆனால், வரலாறுகள் மறைவதில்லை-மறைந்தாலும், ஒரு காலத்தில் வெளிவந்துவிடும்!

"எதிர்காலம் வீர வரலாறுகளை மறப்பதில்லை" என்பதற்கு எடுத்துக்காட்டே-நாம் எழுப்பியுள்ள கட்டபொம்மன் கோட்டை!

அன்புள்ள,

மு. க.

(01-09-1974)

97. இன்றே தயாராகு!

உடன் பிறப்பே,

கழகத்தின் வெள்ளிவிழா-கண்மணியாம் நம் அண்ணனின் பிறந்த நாள் விழா-காலத்தை வென்ற பெரியார் விழா-ஆம்; முப்பெரும் விழா எடுக்க முனைந்து விட்டாய் என அறிந்து மகிழ்கின்றேன்.

துரோகிகளால் அழிக்க முடியாத கழகத்திற்கு-காட்டிக் கொடுக்கும் கல் நெஞ்சர்களால் ஒழிக்க முடியாத கழகத்திற்கு-களம் என்றால் பதுங்கி, பணம் என்றால் பாய்ந்து பற்றி, 'தியாகமென்றால் விலை என்ன' என்று கேட்கும் கோழை மனிதர்களால் சாய்க்க முடியாத கழகத்திற்கு-வெள்ளிவிழா வருகிறது! வீரத் திருவிழா வருகிறது! வெற்றிப் பெருவிழா வருகிறது!

சந்து முனையிலே சிந்து பாடுவோர்-போராட்டம் என்றால் பொந்து தேடுவோர்- 'அந்துமணி' அரசியல் நடத்துவோர்-வாய் கிழியக் கத்தட்டும்!

நீ வகுத்திடுவாய் திட்டங்களை-கழகத்திற்கு எடுக்கும் விழா சிறப்படைய! எல்லா விழாக்களுக்கும் சிகரமாக அமைய!

பெரியாரின் பாசறையில் பயின்று - அண்ணாவின் அணி வகுப்பில் இருந்து- இன்று அந்த இருவர்தம் இலட்சியத் திருவிளக் கினைக் கையிலேந்தி நடை போடுவது நம் கழகமன்றோ?

நமக்கென இருக்கின்ற அரசியல் பாரம்பரியம்-இயக்கத்தின் தொடக்க நாள் முதலான வரலாறு-நாம் பெற்றுள்ள தியாகத் தழும்புகள் ஒவ்வொன்றும் ஒரு புரட்சிக் கதை சொல்லுமே!

நாம் பட்ட அடிகள்-தாங்கிக் கொண்ட சித்திரவதைகள்-புகுந்த சிறைக் கோட்டங்கள் இவைகளுக்கிடையே, 'கவர்ச்சிப் பதுமை'களாக இருந்து கழகத்தால் பயன்பெற்றோர்-மேனாமினுக்கி

களாகத் திரிந்தோர் - எல்லாப் பட்டியலுமே - என் உடன் பிறப்பே! உனக்கு மனப்பாடமாயிற்றே!

கொள்கைக்காகப் பிறந்தது நம் கழகம்!

கோட்டையைப் பிடிப்பதற்காகப் பிறந்தது அல்ல

கோட்டை-நமக்குக் குளிர் தருவும் அல்ல!

நாட்டின் கேட்டைக் களைய நமது வேலைத் திட்டங்கள், கோட்டையில் மட்டுமல்ல; கொட்டும் குளிரில்-கோடையின் வெப்பத்தில்-புயலில்- மழையில்- பூகம்பத்தில் அனைத்தையும் சமாளித்து நடைபெற வேண்டி இருக்கின்றன!

"அதற்கும் நாம் தயாராக இருக்கிறோம்" என்பதை எழுச்சி முரசு கொட்டி எட்டுத் திக்கும் அறிவித்திட-'எழுந்தது பார் எங்கள் அண்ணன் பட்டாளம்' என்று சின்ன மனக்காரர்களுக்குப் பிரகடனப்படுத்திட செப்டம்பர் 15 முதல் செயல் தொடங்கிடு!

சென்னைத் தலைநகர் அழைக்கிறது- அன்னைத் தமிழ் வளர்த்த அண்ணனுக்கு விழா நடத்த! அருமைத் தந்தைக்குச் சிலை எடுக்க! ஆயிரங்காலத்துப் பயிராம்-நம் கழகத்தின் புத்தொளியைப் பாரெங்கும் பரவச் செய்ய!

வா, வா! வலிமை கொண்ட நெஞ்சமே-வா! வா!

இன்றே தயாராகு- இலட்சியத் திருவிழா நடத்த!

பட்டி தொட்டி- சிற்றூர்-பேரூர்-நகரங்கள்! அனைத்திலும், 'வீதிக்கு வீதி பல வீட்டில் புலித்தமிழர் கழகக் கொடி ஏந்தி வந்தனர்-வாழ்க' எனப் பண் அமைத்துப் பாவாணர்கள் பாடும் வண்ணம் திரண்டிடுக-சென்னையில்.

திட்டங்கள் தீட்டிடுக- இன்றே!

அன்புள்ள,

மு. க.

(08-09-1974)

98. உயர்த்திடுவோம் தோள்!

உடன்பிறப்பே!

இன்றைக்கு நடந்தது போலிருக்கிறது; ஆனால் இருபத்தைந்து ஆண்டுகள் உருண்டோடி விட்டன. அப்போது நமது அண்ணனுக்கு, அகவை நாற்பதுதான்; அந்த வயது இந்தக் காலத்தில் ஒரு முதியவருக்கு உரியது அல்ல. எனினும் முதிர்ச்சி பெற்ற அனுபவக் களஞ்சியமாக, முழுமை அறிவின் சுடராக, நமது அண்ணன் திகழ்ந்தார்.

இல்லையேல் பெரியாரிடம் ஏற்பட்ட கொள்கை வேறுபாட்டின் காரணமாகத் திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்த ஏராளமானவர்களைக் கொண்டு, அந்தக் கழகத்தையே ஒழிக்கும் வேலையை அல்லவா மேற்கொண்டிருப்பார்?

அதற்கு மாறாக, 'தி.க-தி.மு.க. இரண்டு கழகங்களும் இரட்டைக்குழல் துப்பாக்கி' என்றல்லவா அறிவித்தார்? அதுதான் அவரது அரசியல் தெளிவுக்கும்-எதிர்காலத் தமிழ்ச் சமுதாயத்தைப் பற்றிய சிந்தனைகளுக்கும் எடுத்துக்காட்டாக விளங்குவதாகும்.

திராவிடர் கழகம்-திராவிட முன்னேற்றக் கழகம் ஆகிய இரண்டு அமைப்புக்களும் ஒன்றோடொன்று மோதி 'இரண்டில் ஒன்றை அழித்து விட்டுத்தான் மறு வேலை பார்ப்பது' என்று அண்ணா அவசரமானதும்-ஆத்திரமயமானதுமான அவசியமற்ற ஒரு முடிவை எடுத்திருப்பாரேயானால், இன்றைக்கு இரண்டு கழகங்களும், 'சமுதாயத் துறைக்கு ஒன்று-அரசியலுக்கு ஒன்று' என்ற வகையில் தோழமை பூண்டு, இலட்சியப்பயணம் புரிகின்ற காட்சியைக் கண்டிருக்க முடியாது. இரண்டுமே ஒன்றையொன்று தாக்கிக் கொண்டு அழிந்திருக்கவும் கூடும்.

திராவிடர் கழகத்தின் தாக்குதல்கள் தொடர்ந்து இருந்த போதிலும் கூட, அண்ணா அவர்களும்-அவர் உருவாக்கிய முன்னேற்றக் கழகமும்-மிக எச்சரிக்கையாக இருந்தது. பதிலுக்குத்

தாக்கும் பண்பை வளர்த்துக்கொள்ளாமல்-தேவையான நேரங்களில் மட்டும் தெளிவான விளக்கங்களை அளித்து-கொள்கை முழக்கம் செய்வதில் முழுக் கவனத்தையும் செலுத்திய தால்தான், 'தமிழ்ச் சமுதாயத்தின் இரு கண்கள்' என இரு கழகங்களையும் இன்று காண முடிகிறது!

ஆதிக்கம் புரிய, ஆலவட்டம் சுழற்றி வந்த இந்தி மொழியை எதிர்த்துத் திராவிடர் கழகம்-புகைவண்டி நிலையம், அஞ்சல் நிலையம் இவற்றிலுள்ள இந்தி எழுத்துக்களை அழிக்க-'ஒரு நாள்' போராட்டத் திட்டம் வகுத்தது.

முன்னேற்றக் கழகம், அதனைக் கேலி செய்து கொண்டோ அல்லது கண்டனம் செய்து கொண்டோ உட்கார்ந்திருக்கவில்லை; அண்ணாவும் அவசரமாக எங்களைக் கலந்து ஆலோசித்தார்.

'பெரியார் நடத்துகின்ற போராட்டங்களை எல்லாம் நாமும் பின்பற்ற வேண்டுமா?' என்ற கருத்தில், நமது சகோதரர் மதியழகன் அவர்கள் 'தி.மு.கழகத்தின் முடிவுகள், மீரான்சாகிபு தெருவில்தான் எடுக்கப்பட வேண்டுமா?' என்று சற்றுக் கடுமையாகவே கேட்டார். அப்போது தந்தை பெரியார், மீரான்சாகிபு தெருவில் உள்ள வீட்டில் வாழ்ந்து கொண்டிருந்தார்-சென்னையில்

மதியின் உணர்ச்சியைப் பாராட்டிய அதே நேரத்தில் அண்ணா அவர்கள் மிகுந்த கனிவோடு,

> **"நாமெல்லோருமே அங்கிருந்து வந்தவர்கள் தானே; இந்தியை எதிர்ப்பது நமக்குப் பொதுவான விவகாரம்; நமக்கும் திராவிடர் கழகத்துக்கும் 'கொள்கை உடன்பாடுகள்' பல உண்டு; அவைகளில் நாம் வேறுபட்டு நின்றால் எதிர்காலம் தமிழ் நாட்டில் இருளடையும்"** என விளக்கம் அளித்தார்கள்.

ஒரே நாளில் இந்தி எழுத்து அழிப்புப் போராட்டத்தைப் பெரியார் தலைமையில் திராவிடர் கழகமும்-அண்ணா தலைமையில் தி. மு. கழகமும் நாடெங்கும் நடத்தின.

உடன்பிறப்பே! அதில் எனக்குக் கிடைத்த நல்வாய்ப்பு, பெரியாரும்-நானும் திருச்சியில் இந்தி எழுத்துக்களை அழித்தோம். திருச்சி புகைவண்டி நிலையத்தில், பெரியார் ஒரு பலகையிலும்-நான் ஒரு பலகையிலும் உள்ள இந்தி எழுத்துக்களை அழித்தோம்.

இரு கட்சிகளுக்குமிடையே பகைமை உணர்ச்சி இருந்த போதிலும், கொள்கையை விட்டுக் கொடுக்காத தன்மையும்- 'அந்தக் கொள்கை வெற்றி பெற இரு கட்சிகளும் ஒன்றை யொன்று அழிப்பதில் முனையக் கூடாது' என்று அண்ணா வகுத்த நிலையும்தான்-அரசியல், சமுதாயப் பாரம்பரியமுள்ள திராவிடர் இயக்கத்தை இன்று பாதுகாத்து நிற்கிறது.

அண்ணா, சட்டப் பேரவையில் எதிர்க்கட்சி வரிசையில் அமர்ந்திருக்கிறார்; திரு. காமராஜர் அப்போது முதலமைச்சர்; பிரதான எதிர்க்கட்சி-ஜனநாயகக் காங்கிரசு; அதன் தலைவர் வி. கே. இராமசாமி முதலியார்; அவர்-எதிர்க்கட்சியில் முதல் இடத்தில்; அவருக்கு அடுத்து ஜனநாயகக் காங்கிரசின் துணைத் தலைவர்; மூன்றாவதாக அண்ணா அமர்ந்திருக்கிறார்.

தேசியக் கொடியைப் பெரியார் கொளுத்தப் போவதாக அறிவித்ததை யொட்டி, தேசியச் சின்னங்களைப் பாதுகாக்க ஒரு கடுமையான சட்டம் சட்டப் பேரவையில்-காங்கிரசு அரசாங்கத் தினரால் கொண்டு வரப்படுகிறது; அப்போதும் அண்ணா பெரியாரை விட்டுக் கொடுக்கவில்லை-

"பெரியார் அறிவிப்பையொட்டி இப்படி ஒரு சட்டம் கொண்டுவரத் தேவையில்லை; பெரியாரிடம் நெருக்கமாக இருக்கின்ற காமராஜர் அவரோடு பேசியே இதனைத் தீர்த்துக் கொள்ளலாம்" என்று பேரவையில் கருத்து மழை பொழிந்தார்.

"இந்தச் சட்டத்தின் வாயிலாகப் பெரியாரை அடக்கி விட வேண்டும்" என்று முனைந்தவர்களுக்குத் துணைபோக-அண்ணா தயாராக இல்லை!

தி.மு. கழகத்தின் மும்முனைப் போராட்டத்தில் ஒரு போராட்டம்-பண்டித நேரு அவர்கள்-பெரியார், சிலம்புச் செல்வர் போன்றவர்களைச் சுடுசொல் கூறி விமர்சித்ததைக் கண்டிப்ப தற்காகத்தான் நடைபெற்றது என்பதை உணர்ந்தவர்கள், தி.மு.கழகத்தின் அரசியல் பண்பாட்டையும்-தமிழ்ப் பற்றையும் வானளாவப் புகழ்ந்துரைத்தனர்!

நாற்பதாண்டு காலப் பொது வாழ்வில்- அறிஞர் அண்ணா, பெரியாரிடத்தில் கற்றுக் கொண்ட ஆழமான கொள்கைப் பிடிப்பும், அதன் அடிப்படையில் அண்ணா நமக்கு வழங்கிய கடமை-கண்ணியம்-கட்டுப்பாடு எனும் உணர்வும், எதையும்

தாங்கும் இதயத்துடன் அவர் நிகழ்த்திய எதிர் நீச்சல் அரசியலும் பொறுமையின் நிலைக்களமாய் இருந்து-அவர் கடைப்பிடித்த அரசியல் நாகரிகமும், எருவாக-நீராக-அமைந்துதான் ஆயிரங்காலத்துப் பயிராகத் திராவிட முன்னேற்றக் கழகத்தை வளர்த்திருக்கிறது.

இந்தப் பயிருக்குத் 'துரோகம்' எனும் களைகளால் கெடுதி வராமல்- 'சந்தர்ப்பவாதிகள்' எனும் பூச்சிகளால் தீமை வராமல்- எதிரிகளாய் மேய வரும் ஆடுமாடுகளால் சேதம் வராமல் பாதுகாக்கும் பொறுப்பை-உழவன் நிலையில் இருந்து-உடன் பிறப்பே! நாம் ஒவ்வொருவரும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

ஆண்டாண்டு காலமாக அப்படி ஏற்றுக் கொண்டதால்தான் அறிவுச் சுடர் பெரியாருக்கும் அரசியல் ஞானி அண்ணாவுக்கும் ஆயிரங்காலத்துப் பயிராம் கழகத்துக்கும் இன்று விழா எடுக்கி றோம்-வெள்ளிவிழா!

துள்ளி வரும் வேலே! ஆவேசத்தை அள்ளி வரும் வாளே! நீ இருக்க-உன் நெஞ்சில் தமிழ் உணர்விருக்க-அந்த உணர்வில் பெரியார், அண்ணா உருவிருக்க-நம் இயக்கப் பயிருக்கு ஒரு குறையுமில்லை; இலட்சியப்பயணம் தடைப்படுவதுமில்லை என்ற துணிவோடு நானும்-நாவலரும்-நமது பொருளாளர் பேராசிரியரும் நடைபோடுகிறோம்!

"இதற்கு அணைபோடுவோர் யாராயினும், நம்முன்னே தூள்-தூள்" என்று உயர்த்திடுவோம்-நம் தோள் தோள்!

அன்புள்ள,

மு. க.

(15-09-1974)

99. வழி மேல் விழி...

உடன்பிறப்பே,

பெரியார் பிறந்த நாளை- பெரியார் தந்த அண்ணன் பிறந்த நாளை-அண்ணன் தந்த கழகம் பிறந்த நாளை முப்பெரு விழாவாகக் கொண்டாடி முறுவலிக்கும் உன் முகம் பார்த்து ஊக்கம் பெறுகிறேன். உற்சாகமடைகிறேன். இளைய மருமகன் இனியவன் செல்வத்தின் உடல்நிலை திடீரெனக் கடுமையாகப் பாதிக்கப்பட்ட நேரத்திலும் முடிந்த அளவு என் கடமையை மதுரை முப்பெருவிழாவிலும், காஞ்சி முப்பெரு விழாவிலும், சென்னை பெரியார் சிலை திறப்பு விழாவிலும், ஊனமுற்றோர் நல்வாழ்வு விழாவிலும், வள்ளுவர் கோட்ட விழாவிலும் ஆற்றியுள்ளேன். தென்ஆற்காடு மாவட்ட நிகழ்ச்சிகளைத்தான் ஒத்திவைக்க நேரிட்டு விட்டது. இந்த மடலை உனக்கு எழுதிவிட்டு இன்று தர்மபுரி மாவட்டத்திற்குப் புறப்படுகிறேன். 20, 21, 22 ஆகிய மூன்று நாட்களிலும் முறையே தர்மபுரி, சேலம், வடஆற்காடு மாவட்ட நிகழ்ச்சிகளில் கலந்து கொள்கிறேன்.

உன் வீரத் திருமுகத்தை, வெற்றி கொள் கம்பீர நடையை, இலட்சிய முழக்கத்தைக் கண்டிட, கேட்டிட ஓடோடி வருகிறேன். மதுரை வந்திருந்தேன்; காலையிலே தமிழ்ப் பூங்காவிலே வண்டாக மொய்த்திருந்த உன்னைக் கண்டேன். புலவர்க்குப் பொற்கிழி வழங்கிய அந்த விழாவில் நானடைந்த பூரிப்புக்கு எல்லையே கிடையாது. மாலையிலே அண்ணா பிறந்த நாளையொட்டி காவல் துறையினர்க்குப் பதக்கமும், பண முடிப்பும் வழங்கும் விழா, மேட்டுக்குடியினரும் நிறைந்திருந்த அந்த விழாவில் என் அன்பு உடன்பிறப்பே, என் விழி உன்னையல்லவா தேடிக்

கொண்டிருந்தது. உனைக் கண்டேன். உவகை கொண்டேன். இதற்கிடையேதான் முரசொலி செல்வத்தின் உடல் நிலை பற்றிய திடுக்கிடும் செய்தி எனக்குக் கிடைத்தது, மதுரையில்! உன் கண்கள் கலங்கின. உனக்கு ஆறுதல் சொல்ல வேண்டியவனாயிற்றே நான்! அந்தப் பொறுப்பை உணர்ந்த காரணத்தால் மதுரை நகர் மாவட்டச் செயலாளர் தோழர் திருப்பதியும், மதுரை மாவட்டச் செயலாளர் நண்பர் பொன். முத்துராமலிங்கமும் எழுச்சியுற ஏற்பாடு செய்திருந்த முப்பெரு விழாவில் கலந்து கொண்டேன். அம்மவோ! எத்துணை பெரிய கூட்டம்! எவ்வளவு உணர்ச்சி! அண்ணா குறிப்பிட்டது போல, நரகல் நடையழகர்கள், நடுங்கா நாக்கழகர்களுக்கு மத்தியிலே நமது இலட்சியப் பயணம் வேகமாக-உறுதியாக நடைபெறுகிறது என்பதற்கு மதுரையின் எழுச்சி ஓர் எடுத்துக்காட்டு.

மறுநாள் நமது அண்ணன் பிறந்த காஞ்சிக்கு என்னையும் நண்பர் ப. உ. ச.வையும் அழைத்துச் செல்ல வந்த செங்கை மாவட்டச் செயலாளர் நண்பர் ஆறுமுகம் அவர்கள், காஞ்சிபுரத்துக் கூட்ட ஏற்பாடுகளையெல்லாம் வர்ணித்தபோது, உடனடியாகக் காஞ்சிக்குப் பறந்து செல்ல வேண்டுமென்றே தோன்றிற்று. அடடா! செங்கை மாவட்டக் கழகமும், காஞ்சி நகரக் கழகத்து நண்பர்களும்-அந்த நகரத்தைப் பல்லவன் காலத்துப் பட்டினம் போலவே உருமாற்றியிருந்தார்கள். மக்கள் வெள்ளம் என் கவலைகளை மறக்க அடித்தது. உடன்பிறப்பே, அங்கு என்னை நோக்கிய உன் அன்பு விழிகள் என் மனப் புண்ணுக்கு மருந்தளித்தன. இன்பத் தேன் வந்து பாய்ந்தது காதினிலே! நாவலரும், நமது கழகக் காவலர்களும் சென்று வந்த ஊர்களின் சிறப்பை யெல்லாம் சொன்னார்கள். சென்னையிலே பெரியாருக்குச் சிலை வைத்த விழாவின் சிறப்பை, இருட்டடிப்புச் செய்யும் ஏடுகளால் கூட மறைக்க முடியவில்லையே! கழகத் தலைமையின் வேண்டுகோளை ஏற்று, உணர்ச்சிப் பிழம்பாய் ஆகிவிட்ட என் உயிரினுமினிய உடன்பிறப்பே, உன்னைச் சந்திக்கப் புறப்படுகிறேன். நீ என்னைச் சந்திக்க, நமது கழகத் தலைவர்களைச் சந்திக்க, அண்ணனின் நினைவாலயம், அறிவாலயம், அய்யாவின் எழுச்சித் தூண், சிலை-இவைகளைக்கண்டிட, எழுச்சி பெற்றிட, இலட்சிய வெற்றி கண்டிட வரும் 29-ஆம் நாள் ஞாயிறன்று சென்னைக்குப் புறப்பட

மனைவி மக்களுடன் தயாராகிக் கொண்டிருக்கிறாய் என எனக்குத் தெரியும்.

என் கண்ணின் மணியே!

கையில் கொடியுடன்-நெஞ்சில் கொள்கை உறுதியுடன் சென்னை ஊர்வலத்தில் கலந்து கொள்ள எழுந்திடு எதிர்பார்த் திருக்கிறேன், வழிமேல் விழிவைத்து!

அன்புள்ள,

மு. க.

(22-09-1974)

100. அழைக்கிறேன் - வா! அன்பே வா!

உடன் பிறப்பே,

தர்மபுரி, சேலம், வடஆற்காடு மாவட்டங்களில், 'முப்பெரும் விழா' நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு செப்டம்பர் 22-ஆம் நாள் இரவு நான்கு மணிக்கு சென்னைக்கு வந்து சேர்ந்தேன்; என்னுடன் தலைமைக் கழகச் செயலாளர் நண்பர் வீராசாமியும் சென்னை திரும்பினார்.

வந்ததும் வராததுமாகத் தலைமைச் செயலகம் சென்று, அரசாங்க அலுவல்கள்-நிருபர்கள் சந்திப்பு ஆகியவற்றில் ஈடுபட்டிருந்தபோது, நமது கொள்கை பரப்புச்செயலாளர் நண்பர் சிட்டிபாபு, செப். 25, 26-ஆம் நாட்களுக்கான நீலகிரி, கோவை மாவட்டச் சுற்றுப்பயண நிகழ்ச்சிப் பட்டியலுடன் வந்து சேர்ந்தார்; ஒத்தி வைக்கப்பட்ட தென் ஆற்காடு மாவட்ட நிகழ்ச்சிகளுக்கான தேதியையும் பெற்றுக் கொண்டார்.

தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் கழகம் கொண்டாடும் 'முப்பெரும் விழா' எழுச்சிக்கோலம் கொண்டிருப்பதையும், மாயை கலைந்து-மாசு மருவற்ற கழகத்தின் மாட்சி கொடி கட்டிப் பறப்பதையும், தலைமைக் கழக அலுவலகத்தில் வந்து குவிகின்ற தகவல்கள் தெரிவித்துக் கொண்டே இருக்கின்றன!

காலை ஆறு மணிக்குச் சென்னையிலிருந்து காரில் புறப்பட்டு-வழியில் திருவண்ணாமலையில் சிற்றுண்டியை முடித்துக் கொண்டு-காலை 10 மணிக்கு ஊத்தங்கரை அண்ணா சிலை திறப்பு விழாவுக்குப் போய்ச்சேர்ந்த எங்களைத் தர்மபுரி மாவட்டச் செயலாளர் நண்பர் சின்னசாமி அவர்கள் வழி நெடுக ஏற்பாடு செய்திருந்த விழாக்களில் மக்கள் வெள்ளத்தில் மிதக்கவிட்டு-மாலை நான்கு மணி அளவில் அரூரில் பிற்பகல் உணவு அருந்த அனுமதித்தார்!

ஒரு மணிநேர ஓய்வு-மீண்டும் நிகழ்ச்சிகள்...வானைத் தொடுமளவுக்கு ஏற்பட்ட கழகக் கொடிகள்...வழி நெடுக மக்கட் பெருங்கடல்!

“விரைந்து தொழில் கேட்கும் ஞாலம்,
உன் விரல் அசைவு கண்டு”

-என்பதற்கேற்ப, நீ செய்திருந்த விழா ஏற்பாடுகள் விளங்கின என்றால், அது மிகையல்லவே!

மாலையில் அரூரில் தொடங்கி, எண்ணிறந்த இடங்களில் கொடியேற்று விழாக்கள்-கூட்டங்கள்!

இறுதியாக அதியமான் கோட்டையிலும், அதனையடுத்துத் தர்மபுரியிலும் அலை அலையாக வந்து குவிந்த தமிழ்ப் பெருங்குடி மக்களின் உணர்ச்சிப் பெருக்கை எப்படித்தான் வர்ணிப்பது என்று எனக்கே தெரியவில்லை.

மலர்களை ஏந்திய கொடிகளைப் போல் மழலைகளைக் கையில் ஏந்திய சகோதரிகள்-ஒளவை மூதூர் அதுவென உரைக்கும் வண்ணம் மூதாட்டியர்-உழைப்பின் உருவங்களாம் உழவர் பெரு மக்கள்-காணுமிடமெல்லாம் கண்ணுக்கெட்டிய தூரம் வரையில் கூட்டம்-கூட்டம்!

“இந்த மகத்தான மக்கள் சக்தியைத் தாண்டி, தி. மு. க. எனும் தீபத்தை ஊதி அணைத்துவிட முயலும் துரோகிகள் வெற்றி பெற முடியுமா?”

-என நான் அந்தக் கூட்டத்தில் கேட்டபோது, தகடூரே அதிர்ந்தது-‘முடியாது, முடியாது! விடமாட்டோம், வீடணர்களை’ என்று!

தர்மபுரி விழாக்களில், அமைச்சர்கள் என்.வி.என். இராசாராம், இராமச்சந்திரன் ஆகியோர் மட்டுமின்றி, திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் வீரமணியும் கலந்து கொண்டார்.

மூன்று மாவட்டச் சுற்றுப் பயணங்களில் என்னுடன் கலந்து கொள்ள வந்த நண்பர் தென்னரசு, தர்மபுரி அலைச்சலே தாங்காமல்-உடல் நலிவுடன்-சொல்லிக் கொள்ளாமலே ஊருக்குத் திரும்பி விட்டார்- வழக்கம் போல்!

மறுநாள் சேலம்-மாவட்டம்-காலை ஒன்பதரை மணிக்கு நண்பர் வீரபாண்டி ஆறுமுகம் கையில் சிக்கினோம்; பிற்பகல் ஓய்வு-ஒரு மணிக்கு ‘இராசிபுரத்தில்’ என்று நிகழ்ச்சி நிரலைக்

காட்டினார். ஆனால், நாங்கள் இராசிபுரம் போய்ச் சேர்ந்ததே மாலை நான்கு மணிக்குத்தான்; அங்கும் உணவருந்தாமல், நேரே கூட்டத்திற்கே போய் விட்டோம்!

கொளுத்தும் வெயிலில், ஆத்தூரில்-ஏத்தாப்பூரில்-பெத்து நாயக்கன் பாளையத்தில்-நாமகிரிப்பேட்டையில்-இவைகளுக் கிடையே அளவற்ற இடங்களில் குழுமியிருந்த மக்கள் தொகையை, மொத்தத்தில், இலட்சக்கணக்கில் தான் குறிப்பிட வேண்டும்.

எல்லா இடங்களையும் வென்று காட்டுவது போல், இராசிபுரம் கூட்டம் விளங்கிற்று!

"தமிழகத்திற்கு முக்கனி சிறப்புடையது-வாழை, மா, பலா! அந்த வாழைதான், தி. மு. க.-மாங்கனிதான் அறிஞர் அண்ணா; மேலே முள்ளிருப்பினும், உள்ளே இனிக்கும் சுவை அளிக்கும் பலாக்கனிதான் பெரியார்!"

-என்று நான் குறிப்பிட்டபோது, இராசிபுரமே உணர்ச்சி முகட்டில் எழும்பிக் குதித்தது!

பழைய காலத்திலிருந்து இராசிபுரம் நமது தன்மான இயக்கக் கோட்டைகளில் ஒன்று!

சுற்றுப்பயணத்தில்-சில சில நிகழ்ச்சிகளில், அமைச்சர்கள் அன்பில், இராமச்சந்திரன், கண்ணப்பன் ஆகியோர் கலந்து கொண்டுவிட்டு, சேலம் மாவட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த வேறு நிகழ்ச்சிகளுக்கு அவர்கள் சென்றனர்; என்னுடன், மாவட்டச் செயலாளர் ஆறுமுகம் அவர்களும்-குடிநீர் வாரியத் தலைவர் கந்தப்பன் அவர்களும் வந்தனர்.

மொத்தத்தில் சேலம் மாவட்டம் முழுவதும் அன்று விழாக் கோலம் பூண்டிருந்தது; இராசிபுரம் கூட்டத்தை முடித்துவிட்டு, வழியில் ஒரு மரத்தடியில் காரை நிறுத்திக் கொண்டு-மாலை ஐந்து மணிக்கு இரண்டு வடைகளை வயிற்றுக்குள் அனுப்பி விட்டுப் பயணத்தைத் தொடர்ந்தோம்!

இரவு 7-30 மணிக்குத் திருச்செங்கோட்டில் சற்று ஓய்வு; மீண்டும் எட்டு மணிக்குக் கொட்டும் மழையிலும் திருச்செங் கோட்டில் பொதுக்கூட்டம்!

தொடர்ந்து சங்ககிரி - மகுடஞ்சாவடி - சேலம் எல்லா இடங்களிலும் கூட்டம்-முடிய இரவு 11 மணி ஆயிற்று!

சேலத்தில் நாங்கள் வந்து சேரும் வரையில் கூட்டத்தில் ஈ.ஆர். கிருஷ்ணன் முழங்கிக் கொண்டிருந்தார்! நகரெங்கும், முப்பெரும் விழாவுக்கு மகத்தான ஏற்பாடுகள்!

'சேலம் மாவட்டத்தில் நடைபெற்ற முப்பெரும் விழாக் கூட்டம் ஒவ்வொன்றும் ஒரு மாநாடு' என்று சொன்னாலே போதும்-அதன் பெருமை விளங்கும்!

மறுநாள் வட ஆற்காட்டில் நண்பர் முருகையன் அவர்கள் மேற்பார்வையில் வாணியம்பாடியிலும், ஆம்பூரிலும் மிகப் பெரிய விழா ஏற்பாடுகள்!

நானும் அமைச்சர் ப.உ.ச.வும் இரவு 1 மணிக்கு ஆம்பூரில் கூட்டத்தை முடித்து விட்டுச் சென்னைக்குப் புறப்பட்டோம்.

இந்தச் செய்திகளையெல்லாம் எழுதி முடித்துவிட்டு, இன்று கோவை - நீலகிரி நிகழ்ச்சிகளுக்குக் கிளம்புகிறேன்.

பொதுவாக, கழகத்தின் எழுச்சி எப்படி இருக்கிறது என்பதற்கு, எதிர்க்கட்சி ஏடுகளில் வரும் எரிச்சல் கக்கும் விமர்சனங்களைப் படித்தாலே புரிந்து கொள்ளலாம்!

சேலம், தர்மபுரி, வடஆற்காடு மாவட்டங்களைப் போலவே, எல்லா மாவட்டங்களிலும் நமது நாவலர் பேராசிரியர், என்.வி.என். மற்றும் அமைச்சர்கள்-கழகத் தளபதிகள், முப்பெரும் விழாக்களில் கலந்து கொள்கின்றனர்!

ஆங்காங்குள்ள மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றியச் செயலாளர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள், மன்றங்களின் செயல் வீரர்கள் விளைத்திடும் செயலாற்றல் நினைத்து நினைத்துப் போற்றத்தக்க வண்ணம் அமைந்துள்ளது!

இந்த எல்லா நிகழ்ச்சிகளின் மொத்த வடிவத்தைச் சென்னையில் செப். 29-ஆம் நாள் நாங்கள் காண இருக்கிறோம்!

சென்னையில் நடைபெறும் விழா எப்படி இருக்கு மென்று நான் கற்பனை செய்கிறேன் தெரியுமா?

கலிங்கத்துப் பரணியில் குலோத்துங்கச் சோழன், 'பயணத்தை அறிவித்து முரசறைக' எனக் கூறியதும், உலகில் உள்ள அனைவரும் ஒரு நகரத்தில் - ஒரே நேரத்தில் வந்து புகுந்ததுபோல், அலைவீசும் கடலின் ஒலியும் ஓயும்படி, நான்கு திசையிலிருந்தும் படைகள் ஒன்று கூடித் திரண்டெழுந்தன- என்று ஜெயங்கொண்டார் சிறப்பித்துக் கூறுகிறார்.

"'முரசுஅறைக' என்று அருளுதலும்
முழுதுலகும் ஒருநகருள் புகுந்தது ஒப்பத்
திரைசெய் கடல்ஒலி அடங்கத்
திசை நான்கின் படைநான்கும்
திரண்ட, ஆங்கே"

-என்று ஆணையிட, நான் குலோத்துங்க மன்னன் அல்லன் ஆனால் நம் கழகப் படை, 'கலிங்கப் படையை வென்ற குலோத்துங்கனின் தமிழ்ப் படை' என்பதை நானறிவேன்-நாடறியும்!

ஆகவே, என் உடன்பிறப்பே!

"எழுந்தது சேனை; எழலும்
இரிந்தது பாரின் முதுகு"

-என வியக்கும் வண்ணம், சென்னை மாநகர் முப்பெரும் விழா சிறப்படைய உன் வருகையை எதிர்நோக்கி இருக்கிறேன்.

என்னையும்-ஏனைய நமது கழகத் தலைவர்களையும் பட்டி தொட்டியெல்லாம் இழுத்துச் சென்று-பட்டினி போட்டுக் கூட, கொள்கை பரப்பிக் கொடியேற்றிக் குதூகலிக்கிறாயே-

என்னை அழைத்து இன்புறும்
அன்பு உடன்பிறப்பே!
இப்போது உன்னை அழைக்கிறேன்-
சென்னைக்கு!
வா, வா! அன்பே, வா வா!

அன்புள்ள,

மு. க.

(25-09-1974)

101. உயிரே! உடன்பிறப்பே! வா! வா!

உடன் பிறப்பே,

வந்து விட்டாயா-வா! வா!

என் அன்பு வாழ்த்துக்களைப் பெற்றுக்கொள். நூற்றுக் கணக்கான மைல்களுக்கப்பாலிருந்து என் அழைப்பை ஏற்று ஓடிவந்துள்ள என் ரத்தமே! உனைக் கண்டு என் உள்ளம் முகில் கண்ட கலாபமாகிறது. எத்தனையோ நெஞ்சை அழுத்தும் பிரச்சினைகளுக்கிடையே உன்னைப் பார்ப்பது ஒன்றே அவைகளுக்கெல்லாம் மாற்றாக இருக்கிறது.

இரண்டு நாட்களுக்கு முன்பு நீலமலைக்குச் சென்றிருந்தேன். ஓய்வு எடுப்பதற்காகவா? ஓங்கி வளர்ந்த தருக்களைக் கண்டு மகிழவா? இயற்கை இன்பம் பருகவா? அல்ல! அல்ல!

காலை 9 மணிக்குக் கோவையிலிருந்து புறப்பட்டு 12 மணிக்கு உதகை சென்றேன். வழி நெடுக வரவேற்பு-உதகையில் மூன்று நிகழ்ச்சிகள்.

ஐந்து நிமிட நேரம் உதகை கவர்னர் மாளிகையில் ஓய்வு.

பிறகு கோத்தகிரி, உதகை கூட்டங்கள். நீலகிரி மாவட்டச் செயலாளர் நண்பர் ராஜுவின் சிறப்பான ஏற்பாடுகள்.

மாலை ஆறு மணிக்குக் கோவை, மேட்டுப்பாளையம், பிறகு காரமடை பொதுக்கூட்டங்கள். அடுத்தநாள் காலை முதல் இரவு பத்தரை மணி வரையில் கோவை மாவட்டச் செயலாளர் நண்பர் சாமிநாதன் அவர்களின் வசம் என்னை ஒப்படைத்துக் கொண்டேன்.

என்னுடன் அமைச்சர்கள் சாதிக், கண்ணப்பன், தலைமைக் கழகச் செயலாளர் வீராசாமி, மற்றும் கழகத் தளபதிகள்! இலட்சக் கணக்கான மக்களை அவிநாசியிலும், தாராபுரத்திலும், காங்கேயத் திலும் மற்றும் பல்வேறு கிராமங்களிலும் காணும் பேறு பெற்றேன்.

அங்கெல்லாம் நான் விடுத்த வேண்டுகோளை ஏற்று நீ சென்னை வந்துள்ளாய்.

கோவை நிகழ்ச்சிகளின்போது என் உடல் நிலை திடீரெனப் பாதிக்கப்பட்டதை நீ அறிவாய்.

இருப்பினும், டாக்டர்கள் ஆலோசனையை மீறி, நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டேன்.

அந்த உடல் நலிவுக்கும், சோர்வுக்கும் இதோ உன் விழிகளும், மொழிகளும் எனக்குப் பிணி தீர்க்கும் மாமருந்தாகின்றன.

என் அன்பே! என் ஆருயிர் உடன்பிறப்பே! இன்றைய ஊர்வலத்திலும், கூட்டத்திலும், நம் அண்ணன் கூறிய-

- **கடமை**
- **கண்ணியம்**
- **கட்டுப்பாடு**

நினைவிருக்கட்டும்!

அண்ணா வழியில் அயராது உழைப்போம்!
ஆதிக்கமற்ற சமுதாயம் அமைத்தே தீருவோம்!
இந்தித் திணிப்பை என்றும் எதிர்ப்போம்!
வன்முறை தவிர்த்து வறுமையை வெல்வோம்!
மாநிலத்தில் சுயாட்சி! மத்தியில் கூட்டாட்சி!

இந்த நமது ஐம்பெரும் முழக்கங்களோடு,

"வாழ்க"

எனும் முழக்கமே வானதிரப் பாரதிரக் கேட்க வேண்டும். யாரையும் புண்படுத்தும் "ஒழிக" எனும் சொல்லுக்கே இடமிருத்தலாகாது!

என் வேண்டுகோளை அலட்சியப்படுத்தாமல் நடந்திடுவாய் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு!

மீண்டும் ஒருமுறை உன் கரங்களை எடுத்து என் கண்களில் ஒத்திக்கொண்டு உன்னை வரவேற்கிறேன்.

அன்புள்ள,

மு. க.

(29-09-1974)

102. என் காணிக்கை!

உடன் பிறப்பே,

'வெட்டி வா' என்றுரைத்தால், கட்டி வரும் திறமை காட்டும் உன் இயல்பான வரலாற்றின் எடுத்துக்காட்டாக அமைந்தது - சென்னை முப்பெருவிழா!

தமிழகத் தலைநகரில் பத்து மைல் நீளமும் - பத்து மைல் தொலைவும் கொண்ட கழகப் பவனி, 'இந்தியாவில் இதுவரையில் நடைபெற்ற எல்லா ஊர்வலங்களையும் வென்று விட்டது' என்று மாற்று முகாமிலே இருப்பவர்கள் கூட மனம் விட்டுப் பேசுகிறார்கள்!

'தம்பியுடையான் படைக்கு அஞ்சான்' என்றும், 'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்' என்றும் நமது அண்ணன் அடிக்கடி கூட்டங்களில் முழங்குவாரே - அதனை நீ, நேரம் வரும்போதெல்லாம் நிரூபித்துத்தான் வருகிறாய்!

"'அறிவக'த்திலிருந்து சரியாக மூன்று மணிக்கெல்லாம் ஊர்வலம் தொடங்கிவிடும் - நீங்கள் முன் கூட்டியே வந்து விடுங்கள்" என்று சென்னை மாவட்டச் செயலாளர் சீதாபதி, தொலைபேசியில் கூறினார்; அவ்வாறே, நானும் - பொதுச் செயலாளரும் - பொருளாளரும் மற்றவர்களும், இரண்டே முக்கால் மணிக்குச் சட்டசபைக் கட்சி அலுவலகத்திலிருந்து 'அறிவகம்' நோக்கிக் கார்களில் கிளம்பினோம்! எங்கள் கார்கள், பாரி முனையில் இருந்து அறிவகம் வரை திரண்டிருந்த மக்கள் கூட்டத்தைக் கிழித்துக் கொண்டு சென்ற காட்சியும்-குழுமியிருந்தோர் எழுப்பிய வாழ்த்து முழக்கமும்-'ஊர்வலம் எப்படி இருக்கும்' என்பதை முன்னதாகவே எங்களுக்கு அறிவித்து விட்டன!

'அறிவகத்'தின் வாயிற்புறத்தில், ஒரு சிறிய பந்தல்-ஒரு மேடை; அதிலே கழக முன்னணியினர் சூழ்ந்திருந்தனர்; ஒரு

நாற்காலியில், எங்களுக்கு முன்பே சென்று நமது என்.வி.என். அமர்ந்திருந்தார். அவரை அணுகி-எப்போதும் அவரிடம் சிரித்துப் பழகும் என் வழக்கத்திற்கு ஏற்ப, 'என்ன சார், என்ன வேண்டும்?' என்று கேட்டேன். 'நமக்கு இனிமேலாவது யாரும் துரோகம் செய்யாமல் இருக்க வேண்டும்' என்று கூறிக் கொண்டே, தேம்பித் தேம்பி அழுது விட்டார்; நான் அவரை, அப்படியே தழுவிக் கொண்டேன்!

"எந்தத் துரோகமும் இந்த
இயக்கத்தை அழித்து விடாது"

என்று நான் அவருக்கு ஆறுதல் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, எங்கள் இருவர் கண்ணீரும் சங்கமமாயின!

உடன் பிறப்பே! இந்தக் குடும்பப் பாச உணர்வைத் தானே நமது அண்ணனும்-அந்த அண்ணனைத் தந்த பெரியாரும்-நமக்குச் சொத்தாக்கி விட்டுச் சென்றுள்ளனர்!

அந்தப் பாசத்தை நாசமாக்க, இடையிடையே எழுந்த மோசமும்-வேஷமும் நிரந்தரமாக நம்மை வென்றதில்லை என்பதைக் காட்டும் சான்றாகத் திகழ்ந்ததே - நமது தலைநகரம் எடுத்த முப்பெரு விழாவாகும்!

"கதிரவன் தோன்றா முன்னங் கடுந்திறல் மறவ வெள்ளம்
கதுமென வெழுந்து போந்து களத்திடைப் பரந்த தாங்கே
அதிர்குரல் முரசம் சங்க மருந்துடி பதலை காளம்
முதிர்கிணை முழவமற்றும் முகிலென முழங்கிற்றம்மா"

என்று இராவண காவியத்தில், புலவர் குழந்தை தீட்டியுள்ள கவிதை வரிகளை நினைவூட்டும் விழாவினைத் தலைநகர் கண்டது! தமிழகம் மகிழ்ந்தது! இந்தியா வியந்தது!

இங்கிருக்கும் 'அரசியல் காந்தாரிகள்' அம்மிக் குழவியை எடுத்துத் தங்கள் அடிவயிற்றில் அடித்துக் கொள்ளவும் தவற வில்லை!

திருவாரூரில் தேர் திருவிழா-தெப்பத் திருவிழா-நடக்கலாம்; திருவரங்கத்தில் சொர்க்க வாசல் உற்சவம் ஆண்டுதோறும் தொடரலாம்; மதுரையில் சித்திரைத் திருநாள் நடக்கலாம். மகந்துகள்-ஜீயர்கள் பல்லக்குப்

பவனி வரலாம்; 'இராமலீலா' நடைபெறலாம்; ஏன்-மற்ற அரசியல் கட்சிகள் எல்லாம் விழா எடுக்கலாம்; மாநாடு கூட்டலாம்; பிரதமர் கலந்து கொள்கின்ற நிகழ்ச்சி-கட்சிப் பொதுக் கூட்டமானாலும்-காஞ்சி காம கோடிகளின் சந்திப்பானாலும் - "மாநில அரசாங்கமே முழுச்செலவையும் ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று நிரந்தர உத்தரவே போடலாம்; நேரு பெருமான் மறைந்த அடுத்தமாதமே சென்னையில் காமராஜர் பிறந்த நாள் விழாவைப் பல லட்சம் ரூபாய் செலவில் கொண்டாடலாம்; அதற்கு அரசாங்க இலாகா வண்டிகள் - கொடிக் கம்பங்களுக்கான இரும்புக் குழாய்கள் அனைத்தையும் பயன்படுத்தலாம்; பிரன் நகரில் நடைபெற்ற காங்கிரசு மாநாட்டுக்கு வந்திருந்த தலைவர்களுக்கெல்லாம் அரசுச் செலவில் புதிய வீடுகள் கட்டித் தரலாம்.

இவை எதுவும் முதியவர் பக்தவத்சலனார் கண்களிலோ அல்லது பழைய காங்கிரசு நண்பர்கள் விழிகளிலோ படவில்லை. நாம்-நமது கழகச் சார்பில், தமிழின உணர்வை வெளிப்படுத்த, நம்மை ஆளாக்கி மறைந்த தலைவர்களாம் பெரியார், அண்ணா இருவருக்கும் விழா எடுத்தது மட்டும் வீண் காரியமாம்! ஊர்வலம் முடிந்த மறுநாளே, இந்தப் பெரியவர்கள் அறிக்கை விடுகிறார்கள் - பரவாயில்லை; என் உடன்பிறப்பே! அதைப் பற்றியெல்லாம் நீ கவலைப்படாதே!

எவனோ ஒருவன் தன்னைப் பார்த்து எச்சில் உமிழ்கிறான் என்று கூறி - எரிக்கின்ற கதிரவன் எரிக்காமல் போய் விடுவானா?

"கொட்டும் மழையைச் சுட்டுப் பொசுக்குகிறேன் பார்" என்று கொள்ளிக்கட்டையை எடுத்து நீட்டினால் கட்டைதான் அணையுமே தவிர, மழையா நின்றுவிடும்?

'பாவம், பரிதாபத்துக்குரியவர்கள்' என்று அவர்களை அலட்சியப்படுத்துவோம்! அதேசமயத்தில் இந்த எரிச்சல்காரர்களுக்கு மத்தியில் ஏறு நடை போட்டு-எழுச்சி முரசு கொட்டி - நமது வலிமையை மேலும் பெருக்குவோம்!

அன்பான உடன்பிறப்பே! நீ அதனைச் செய்வாய் என்ற நிறைந்த நம்பிக்கை எனக்கு உண்டு!

தலைநகர ஊர்வலத்தில் பத்து மைல் தூரம் நடந்து வந்த உன் பாதங்களுக்கு மலர் தூவுகிறேன்!

நீ ஒலித்த உணர்ச்சிமயமான கொள்கை முழக்கங்களுக்கு என்னையே உனக்கு நான் காணிக்கையாக்கிக் கொள்கிறேன்!

வெற்றி நமதே! வீணர் அதிர-வீடணர் வீழ-வீரச் சுடர்விழி காட்டு! 'இது தமிழர் நாடு' என்பதை நிலைநாட்டு!

அன்புள்ள,

மு. க.

(06-10-1974)

103. பார், பார்-இதோ பார்! இந்தியா பார்!

உடன்பிறப்பே!

பசிக் கொடுமையின் காரணமாக நாற்பது பேர் பிணமாக விழுந்து விட்டார்கள்.

"எங்கே இந்தக் கொடுமை-தமிழ் நாட்டில்தானே-கழக ஆட்சியில் வேறென்ன நடக்கும்?" என்று கனல் கக்கும் கண் களுடன் மாற்றுக் கட்சியின் மதிப்புமிகு நண்பர்கள் வரிந்து கட்டிக் கொண்டு வந்துவிடுவார்கள்! ஏடு கொள்ளாமல் - எட்டுப் பத்தி தலைப்பிட்டு எழுதிக் குவிப்பார்கள்! மேடை அதிர முழக்குவார்கள்!

பரிதாபத்துக்குரியவர்கள்! - பட்டினியால் மடிந்த இடம், பாட்னா நகருக்கு அருகாமையில் உள்ள 'சகர்சா' என்னும் ஊர்; அதாவது பீகார் மாநிலத்தில்!

இந்தச் செய்தி, செப்டம்பர் 29-ஆம் நாள் பம்பாயிலிருந்து வெளிவரும் 'டைம்ஸ் ஆப் இந்தியா' என்ற ஆங்கிலத் தினசரியில் வந்திருக்கிறது.

கல்கத்தாவிலிருந்து, 'அமிர்த பசார் பத்திரிகா' என்ற பத்திரிகை வெளிவருகிறது; புகழ்மிக்க ஏடுகளில் அதுவும் ஒன்று. மேற்கு வங்கத்தில் பட்டினிச்சாவுக்குப் பலியானவர்கள் தொகை, ஆயிரத்திற்கும் மேலாக இருக்குமென்று செப்டம்பர் 18-ஆம் நாள் அது பெரிய அளவில் செய்தி வெளியிட்டிருக்கிறது.

அதே தேதியில், ஒரு வதங்கிப் போன குழந்தையை இடுப்பில் அணைத்துக் கொண்டு-ஒரு சகோதரி சோகம் கப்பிய முகத்துடன் ஒரு காவல் நிலையத்தின் வாசலில் நிற்கின்ற படமும் அந்த இதழில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது!

பசியின் கோரப்பிடியில் சிக்கி அவள் வீட்டில் இரண்டு பேர் செத்துவிட்டார்கள்; ஊரில் உள்ளவர்கள் நன்கொடை வசூலித்துச் சிலருக்கு உணவு வழங்கு

கிறார்கள்; அந்த உணவைப் பெறுவதற்காகத்தான் 'ஹர்கள்' என்ற கிராமத்தின் காவல் நிலையத்தில் அவன் காத்திருக்கிறாள்

என்றும், 'அமிர்த பசார்' ஏடு, வங்கத்தில் எழுந்துள்ள வறுமையின் ஆதிக்கத்தைப் படம் போட்டுக் காட்டியிருக்கிறது!

கல்கத்தாவிலிருந்து வெளிவருகின்ற 'ஸ்டேட்ஸ்மேன்' என்னும் இதழில்-

"அசாம் சட்ட சபையில் பட்டினியால் மொத்தம் இறந்த வர்களின் கணக்கை எதிர்க்கட்சியினர் எடுத்துச் சொல்லி,

நாளொன்றுக்கு இருநூறு பேர் பசிக்கு இரை யாவதாகக் குறிப்பிட்டிருக்கின்றனர்!"

என்ற செய்தி, செப்டம்பர் 23-ஆம் நாள் வந்துள்ளது.

அக்டோபர் 4-ஆம் நாள் வெளிவந்துள்ள 'இந்துஸ்தான் டைம்ஸ்' என்ற ஆங்கில இதழில் முதல் பக்கத்து முகப்பில், ஈரான் நாட்டு 'ஷா'வும் நமது மத்திய அமைச்சர் சுவரண் சிங்கும் உள்ள பெரிய படம் பிரசுரிக்கப்பட்டுள்ளது. அதே பக்கத்தின் கீழ்ப் பகுதியில், மிகப்பெரிய அளவு படம் ஒன்று இடம் பெற்றிருக்கிறது

ஒட்டிய வயிறும்-குழி விழுந்த கண்களும்-பஞ் சடைந்த தலையும் உடைய ஆயிரமாயிரம் ஏழைத் தாய்மார்கள்- வாலிபர்- வயோதிகர்-குழந்தைகள் கையில் சட்டிகளுடன்-தங்களுக்கு இலவசமாக வழங்கப்படும் கஞ்சிக்கும் கூழுக்குமாகக் கன்னத்தில் கை வைத்துக் கொண்டு-கொளுத்தும் வெயிலில் உட்கார்ந்திருக்கிறார்கள்! இதுவும் மேற்கு வங்கத்து நிலைமைதான்!

ஒரிசாவின் வருவாய்த்துறை அமைச்சர், செப்டம்பர் 26-ஆம் நாள் விடுத்துள்ள செய்தி ஒன்றில்-

ஒரிசாவின் இந்த ஆண்டு உணவு நிலைமை இந்த நூற்றாண்டிலேயே மிகவும் மோசமானது

என்று குறிப்பிட்டிருக்கிறார்.

குஜராத் மாநிலத்தில் அகமதாபாத் மாவட்டத்தில் உள்ள 'தண்டுகா' தாலுகாவில் உள்ள மக்களைச் சந்தித்தபோது அவர்கள்-

"எங்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை. கொஞ்சம் விஷமாவது கொடுங்கள்!"

என்று கதறி அழுததாக-மொரார்ஜி தேசாய், நிருபர்கள் கூட்டத்தில் தழுதழுத்த குரலில் பேசியதாக செப்டம்பர் 17-ஆம் நாள், 'ஸ்டேட்ஸ்மேன்' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது!

கல்கத்தாவிலிருந்து, ஜல்பைகுரி மாவட்டக் காங்கிரசுக் கட்சித் தலைவர் ஜகதானந்தராய் என்பவர்-

அந்த மாவட்டத்தில் இதுவரை பட்டினியால் நானூறு பேர் மாண்டிருப்பதாகவும், இன்னும் நூற்றுக்கணக்கானவர் பட்டினிச் சாவை எதிர்நோக்கிக் கொண்டிருப்பதாகவும், பசி தாங்காமல், கணவன் மனைவியைப் பிரிந்தும்-மனைவி கணவனைப் பிரிந்தும்-பெற்ற குழந்தைகளை விட்டு விட்டும் ஓடிவிடுகிறார்கள்-

என்பதாகவும், உருக்கமாக ஓர் அறிக்கையே வெளியிட்டு-அது, 'டைம்ஸ் ஆப் இந்தியா' இதழில் செப்டம்பர் 18-ஆம் நாள் வந்துள்ளது.

"பம்பாய் நகரத்துப் 'பிளாட்பார'ங்களில் மராட்டிய மாநிலத்துக் கிராம மக்கள்-பத்தாயிரத்துக்கு மேற்பட்டோர்-பசியால் வாடி ஓடிவந்துள்ளனர்" என்று செய்திகள் வந்த வண்ணமிருக்கின்றன.

'மத்தியப் பிரதேசத்தின் களஞ்சியம்' என அழைக்கப்படும் 'சத்திஸ்கர்' எனும் பகுதியில் மட்டும்,

"நாள்தோறும் நூறுபேர் பசியால் நலிந்து மடி கிறார்கள்"

என்று மத்திய பிரதேச ஜனசங்கத் தலைவர் பிரிஜிலால் வர்மா கூறியிருக்கிறார்.

நமது இந்திய நாட்டில் பெரும்பாலான பெரிய மாநிலங்கள் இத்தகைய நெருக்கடிக்கு ஆளாகியிருக்கின்றன. அதனால்தான், காந்தி விழாவுக்குச் சென்னை வந்த திரு. உமா சங்கர் தீட்சித்,

"இந்தியாவில் தமிழ் நாட்டில் கஷ்டம் குறைவு"

என்று குறிப்பிட்டார்.

மற்ற மாநிலங்களில் மக்கள் படும் அவதி நம் நெஞ்சை உலுக்குகிறது! அந்தந்த மாநில அரசுகளும்-மத்திய அரசும்-அந்த மக்களைப் பாதுகாக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்-மேற்கொள்ள வேண்டும்.

அந்த மக்களின் கண்ணீர் துடைக்கப்பட-கட்சி சார்பற்ற முறையில் அனைவரின் ஒத்துழைப்பும் தேவை!

உடன்பிறப்பே! நான் சுட்டிக் காட்டியுள்ள பத்திரிகைச் செய்திகள் மிகக் குறைவு! இது போன்ற சோக நிகழ்ச்சிகள்-கண்களைக் குளமாக்கும் வேதனைக் கதைகள் ஏராளம் இருக்கின்றன!

எழுத நேரம் இல்லை; குடந்தைக்குச் செல்லும் வழியில், தாம்பரத்தில் தொடங்கி, செங்கற்பட்டு புகை வண்டி நிலையம் வரையில்தான் எழுத முடிந்தது. அதற்குள் நமது சிட்டிபாபு அனுப்பி வைத்த தலைமைக் கழகத் தேவராசன் கூடவே இருந்து, 'எழுதிய வரையில் போதும்' என்று வாங்கிக்கொண்டு போக வந்துள்ளார்.

உடன்பிறப்பே-ஒன்றைப் புரிந்து கொள்; இங்கே நமது மாநிலத்தில், கடுகை மலையாக்கிக் கதறுகிறார்களே-இந்தக் 'கருணாமூர்த்தி'களின் பார்வை, இப்போது மட்டும் 'அகில இந்தியப் பார்வை'யாக அகலமாக விரியாத காரணம் என்ன?

புரிகிறதா?-எதையோ சொல்லி எரிச்சலைக் கொட்டிக் கொள்ள வேண்டும் இவர்களுக்கு.

அதைப் புரிந்து கொண்டு, தமிழ் மக்களுக்கு நிலைமையை விளக்கு!

காலை முதல் மாலை வரை அதனையே பணியாகக் கொண்டிடு!

சென்னைக் கடற்கரை முப்பெரும் விழாவில், நீ பெற்ற உணர்ச்சியை, சிந்தாமல் சிதறாமல் செயல்படுத்து!

செங்கற்பட்டு வந்துவிட்டது!
உன் செங்கை பட்டுச் செழிக்கட்டும் கழகம்!
சிறப்புப் பெறட்டும் தமிழகம்!

அன்புள்ள,

மு. க.

(13-10-1974)

104. ‘கல்கி’யின் கண்ணோட்டம்!

உடன்பிறப்பே!

தமிழகத்தில் நடைபெறுகின்ற மாத ஏடுகள்-கிழமை ஏடுகள்-நாளேடுகள் என்பவைகளில் நம்மீது ஏதோ ஒரு வகையில் இயல்பாகவே எரிச்சலும் வெறுப்பும் அலட்சியப் போக்கும் கொண்ட ஏடுகளில் ‘கல்கி’ ஏடும் ஒன்று எனினும்-நாம் அந்த ஏட்டின் மீது பெரிய பக்தி எதனையும் கொண்டு விடாவிட்டாலும் மதிக்கத் தகுந்த ஏடுகளின் வரிசையில் வைத்து அதனை விமர்சிப்பது என்பது, நாம் கடைப்பிடித்து வரும் முறையாகும்.

“அவதூறுச் செய்திகளை விற்றுப் பிழைக்கப் பத்திரிகைச் சுதந்திரம் வேண்டும்” என்று சிலர் கூச்சலிடும் போக்கை, ‘கல்கி’ போன்ற ஏடுகள் ஆதரித்ததாக நாம் கூறிட இயலாது!

தவறான தகவல்கள்-விவரமற்ற விவகாரங்கள்-இப்படிச் சில குறைபாடுகளுக்கு இந்த வகை ஏடுகள் இலக்காகியிருக்கலாம்; அதனைப் பின்னர் திருத்திக் கொண்டும் இருக்கலாம்; நமக்கு உடன்பாடற்ற கருத்துக்களை வேகமாகவும் அவைகள் எழுதி யிருக்கலாம்; கேலியாகவும் குறித்திருக்கலாம்; ‘பெரிய தலை-சின்ன புத்தி’ போன்ற ஆத்திர மூட்டத்தக்க தலைப்புகளைக் கூடத் தந்திருக்கலாம்.

ஆனால், தனிப்பட்டவர்கள் மீது வேண்டுமென்றே அவ தூறாகவும், பொய்யாகவும், கெட்ட நோக்கத்தோடும் செய்திகளை-ஆதாரமற்ற நிலையில் வெளியிடுகின்ற தீச்செயலோ, இழிதகைமையோ, ‘கல்கி’ போன்ற சில ஏடுகளுக்கு இல்லை என்ற காரணத்தினால்தான், அந்த ஏடுகள் சில நேரங்களில் நமது கழகத்தைப் பற்றியோ-கழக அரசைப் பற்றியோ சில கருத்துக்களைத் தெரிவிக்கும் போது, அவைகளுக்கு விளக்கங்கள் சிலவற்றை அளிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறோம்.

அந்த வகையில் அண்மையில் 'கல்கி' எழுதியுள்ள இரண்டு தலையங்கங்கள் பற்றிக் குறிப்பிட விழைகிறேன்.

அக்டோபர் 13-ஆம் நாள் இதழில் 'வெள்ளிவிழாச் சாதனைகள்' என்ற தலைப்பில் ஒரு தலையங்கம்

> **"நிலையான ஆட்சியை வழங்குகிறார்கள்! குற்றச் சாட்டுகளைச் செவிமடுத்துக் கேட்டுத் தவறுகளைத் திருத்திக் கொள்ளவும் தயாராக இருக்கிறார்கள் என்ற இரட்டைப் பெருமை, தி.மு.க. தலைவர்களுக்கு உண்டு. மற்ற மாநிலங்களைவிடத் தமிழ்நாட்டில் நிலைமை எவ்வளவோ மேல்-சந்தேகமில்லை"**

என்று தலையங்கத்தை முடிக்கின்ற 'கல்கி'

> **"...ஆனால், இம்மட்டில் திருப்தியுறுவது அற்பத் திருப்தியாகும்"**

என்று முத்தாய்ப்பு வைக்கிறது!

"அற்பத் திருப்தி" என்பதற்கு, "சிறிதளவு திருப்தி" என்ற பொருளைத்தான், 'கல்கி' கொண்டிருக்கும் என்று நான் நம்புகிறேன்! உடன்பிறப்பே! நீயும் அவ்வாறே நம்பலாம்.

> **"கூவம் சுத்திகரிப்பு-வள்ளுவர் கோட்டம்-கட்ட பொம்மன் கோட்டை-பூம்புகார் புனர் நிர்மாணம் போன்றவற்றில் செலவிடும் பணத்தை நிரந்தர வேலை வாய்ப்புக்களைத் தரக்கூடிய தொழில் பெருக்கத்துக்குப் பயன்படுத்தியிருக்கலாம் என்ற வாதத்தில் அர்த்தமில்லாமல் போகவில்லை"**

என்று 'கல்கி' சுட்டிக் காட்டுகிறது.

சென்னை நகரத்தில் பேயாடுகின்ற பெண்ணின் தலைவிரி கோலம் போல் காட்சி தந்து கொண்டிருந்த கூவத்தைக் கரை கட்டி-சீர் செய்திருக்கிறோம்; இன்னும் முழுமையான சீர்திருத்தம் முடிய சில பணிகள் பாக்கியிருக்கின்றன; இதுவரை முடித்த பணி களையே வேறு மாநிலத்தவரும், வெளிநாட்டி லிருந்து வருகின்ற-ஏற்கெனவே சென்னையை அறிந்தவர்களும் பாராட்டுகிறார்கள்.

கூவம் சீர்திருத்தம் தெரிந்த 'கல்கி'யின் கண்களுக்கு குடிசை மாற்று வாரியத்தின் பணிகள் தெரியவில்லை-பார்த்தாயா?

வள்ளுவர் கோட்டமோ-கட்டபொம்மன் நினைவுக் கோட்டையோ-பூம்புகாரோ-கோடிக்கணக்கான ரூபாய்ச் செலவில் நடப்பவை அல்ல! நடந்தாலும் தமிழர்களின் பெருமையை-வரலாற்றுச் சிறப்பை-இலக்கியப் புலமைக்கு மதிப்பை அளிக்கின்ற காரியங்களுக்கு நினைவுச் சின்னங்கள் அமைப்பது போற்றத் தக்கதே தவிர, புழுதி வாரித் தூற்றத் தக்கது அல்ல!

'கல்கி' உயிரோடு இருந்திருந்தால், இப்படி ஒரு தலையங்கம் எழுதியிருக்க மாட்டார்; ஏனெனில், பாரதிக்கு அரசாங்கம் செய்யத் தவறிய காரியத்தை எட்டயபுரத்தில், 'பாரதி மண்டபம்' அமைத்ததின் மூலம் செய்துகாட்டி-ஆண்டுதோறும் விழா எடுக்கச் செய்தவர் அவர்!

பூம்புகாரை நாள் ஒன்றுக்குச் சராசரி ஆயிரம் மக்கள் கண்டு களிக்கின்றனர்! அவர்கள், பத்துக் காசு நுழைவுக் கட்டணம் செலுத்துகின்றனர்!

சிலப்பதிகாரக் கலைக்கூடத்தைக் காண்பதில்-இதுவரையில்-ஏறத்தாழ நான்கு இலட்சம் பேர் வருகை தந்ததாகக் கணக்கிடப் பட்டுள்ளது.

சென்னையில் காந்தி மண்டபத்தைப் புதுப்பித்தமைக்கும், இராஜாஜி நினைவு மண்டபம் கட்டிக் கொண்டிருக்கிறோமே-அதற்கும் பல இலட்சம் ரூபாய்கள் செலவாகின்றன!

'கல்கி' இதழில், இந்த இரண்டு நினைவாலயங்களும் குறிப் பிடப்படா விட்டாலும், அது குறிப்பிட்டுள்ள கோட்டைகள் - கோட்டங்கள் எல்லாமே இலட்சக்கணக்கான ரூபாயில் அடங்கு கின்றவையே!

பூம்புகாரில் கலைக்கூடங்கள்-எழில் மாடங்கள் மட்டுமல்ல; அங்கே வாழுகின்ற மீனவர்களுக்கும் நூற்றுக்கணக்கான வீடுகள் கட்டப்படுகின்றன!

அந்த மீனவர்களுக்கான நல்வாழ்வுத் திட்டம் ஒன்றுக்கும் அரசு ஒப்புதல் வழங்கியிருக்கிறது.

பாஞ்சாலங்குறிச்சிப் பகுதியிலும், நூற்றுக்கணக்கான கட்டபொம்மன் சந்ததியினருக்குச் சாகுபடி நிலப்பட்டாக்கள் வழங்குதல் போன்ற நற்பணிகள் ஆற்றப்பட்டிருக்கின்றன!

இந்த விவரங்களையும் 'கல்கி' சற்று சிரமம் எடுத்துக் கொண்டால் திரட்டியிருக்க முடியும்!

பூம்புகார், வள்ளுவர் கோட்டம் போன்ற சிற்பப் பணிகளுக்கு ஈடுபடுத்தப்படும் தொழிலாளர்களின் எண்ணிக்கை, ஐந்நூறைத் தாண்டும்-ஆயிரத்தை எட்டும்!

இந்தப் பணி வாயிலாகக் கிடைக்கும் புதிய வேலை வாய்ப்பையும்-நிலையான வரலாற்றுச் சின்னங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டால், கழக அரசுக்கு 'நிதான சிந்தனை' இல்லையென்ற குற்றச்சாட்டைக் 'கல்கி' சுமத்தியிருக்காது!

இவைகளைப் பற்றியெல்லாம் அவசரப்பட்டு எழுதாமல் இருக்க, பேனா பிடிப்பவர்களுக்கு 'நிதான சிந்தனை' அவசியம் தேவை!

"இராஜாஜி-அண்ணா கூட்டணி காங்கிரசை முறியடித்தது. அண்ணா மறைவுக்குப் பிறகு கட்சியின் மதிப்பு திபுதிபுவென்று சரியவும் தொடங்கியது."

இவ்வாறு எழுதுகிறது கல்கி.

இராஜாஜியின் கூட்டுத்தான் காங்கிரசை முறியடித்துக் கழகத்தை ஆட்சியில் அமர்த்தியது-என்ற வாதம், 'இராஜாஜி-காமராஜர் கூட்டணி' கழக ஆட்சியை 1971ஆம் ஆண்டில் முறியடித்திருந்தால் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இருக்க முடியும்.

1967-ஆம் ஆண்டு, தி.மு.கழகத்துடன் இராஜாஜி அவர்கள் துணை நின்றதை நான் மறுத்திடவும் இல்லை! மறந்திடவும் இல்லை! மதித்திடத் தவறியதும் இல்லை!

அண்ணா மறைந்த பிறகு, கழகம் திபுதிபுவென்று சரிந்து விட்டது-என்று, அண்ணா தந்த இலட்சியங்களையும், கொள்கைகளையும் பலவீனப்படுத்திக் காட்டக் 'கல்கி' முயலுகிறது போலும்!

அண்ணாவின் கொள்கைகளும்-அவர்வழியில் அயராது உழைக்கும் திடமும் நமக்கு இருந்த காரணத்தினால்தான், 138 ஆக இருந்த சட்டப் பேரவை தி. மு. க. வலுவை, 1971-ஆம் ஆண்டில் 184 ஆக உயர்த்திக் காட்டினோம் என்பதை, 'கல்கி' மறந்துவிடக் காரணம் எதுவும் இல்லை!

இராஜாஜியினால் தொடங்கப் பெற்ற சுதந்திராக் கட்சி-அவரே சொன்ன உவமையைப் போல்-'ஏழுகட்சி இணைப்பு!' என்ற குழம்பில் உப்பாகக் கரைந்து போய்விட்டதை இப்போது நான் குறிப்பிட்டால்-அது ஏதோ-'பதிலுக்குப் பதில்' சொன்னதுபோல் இருக்கும்!

உடன்பிறப்பே! 'கல்கி'யின் இரண்டு தலையங்கங்களில் ஒன்றுக்கே இந்த மடலில் சில விளக்கங்களைத் தந்துள்ளேன்; முதல் தலையங்கத்துக்கே மேலும் பல விளக்கங்கள் தேவைப்படுகின்றன; வழங்க இருக்கிறேன்-புள்ளி விவரங்களோடு!

இந்த மடலிலேயே அனைத்தையும் எழுதி முடிக்க நேர மில்லை; குமரி மாவட்டச் சுற்றுப் பயணத்திற்கு இன்று புறப்பட வேண்டும்; இப்போது மாலை மணி ஐந்துக்கு மேலாகி விட்டது; 'ஆறு மணிக்கு இரயில்' என்று செயலாளர்கள் அவசரப் படுத்துகிறார்கள்.

இதனையே தொடர்ந்து, உனக்கு அடுத்த மடலில் எழுதுகிறேன்.

அன்புள்ள,

மு. க.

26-10-1974

105. 'கல்கி'யின் கண்ணோட்டம் (2)

உடன் பிறப்பே!

> **"மக்களின் அடிப்படைத் தேவை எனப்படுவன சுத்தமான ஆட்சி-தொழில் வளர்ச்சி-வேலை வாய்ப்பு-விவசாயப் பெருக்கம்-நியாய விலையில் உணவு-ஆகியவையே; இம்மூன்று அம்சங்களிலும் நாம் அடைந்திருப்பது ஏமாற்றமே"**

என்று 'கல்கி'யின் தலையங்கத்தில் குறிப்பிட்டிருப்பது-பொதுவாக இந்தியாவைப் பற்றிச் சொல்லப்பட்டிருக்குமேயானால் நாம் அதனை முழுமையாக மறுத்திட இயலாது என்பது உண்மையே!

தி. மு. கழகத்தின் வெள்ளி விழாச் சாதனைகள் பற்றியும்-கழக ஆட்சி பற்றியுமே தலையங்கம் விமர்சிப்பதால், 'கல்கி'யின் கருத்து-தமிழக அரசைப் பொறுத்தே எழுந்துள்ளதாக நாம் கருத வேண்டும்.

'கல்கி' கூறியுள்ள அம்சங்கள், 'மூன்றா-நான்கா-ஐந்தா' என்ற கேள்விகளுக்கு நான் சென்றிட விரும்பவில்லை.

சுத்தமான ஆட்சிக்கு 'கல்கி' கூறும் விளக்கம் என்ன?

தவறுகள் எங்கு நடைபெற்றாலும்-அதனை யார் நடத்தினாலும் - அவர்கள் மீது தயவு தாட்சண்யமின்றி நடவடிக்கைகள் எடுப்பதற்கு இந்த அரசு விரைந்து முன்வந்ததைப் போல வேறு மாநிலங்களிலோ-அல்லது இந்த மாநிலத்திலேயே இதற்கு முன்போ-ஆதாரபூர்வமான எடுத்துக்காட்டுக்களைக் 'கல்கி' வழங்க முடியுமானால், நான் அதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இலட்சக்கணக்கான அலுவலாளர்கள், மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் பணியாற்றுகிறார்கள். ஆளுங் கட்சியில் பொறுப்பிலேயுள்ள அமைச்சர்களில் இருந்து அந்தக்

கட்சியின் தொண்டர்கள் வரையில் இலட்சக்கணக்கானவர்கள் இருக்கிறார்கள்; பொது மக்கள் பிரதிநிதிகள், ஆட்சிமன்றத்தில்-கூட்டுறவு நிறுவனங்களில்-பொது அமைப்புகளில்-பல்லாயிரக் கணக்கானோர் இருக்கிறார்கள்.

இப்படி இலட்சக்கணக்கானவர்களிடையே-இருபது முப்பது இடங்களில் தவறுநடந்துவிட்டால்-அதனை, 'ஒரு குடம் பாலில் ஒரு துளி விஷம்' என்ற உதாரணத்தால் அளந்து பார்த்து முடிவு கூறிவிடக் கூடாது.

பல குடம் பாலில், ஓரிரு குடங்களில் விஷம் கலந்து விட்டது - அந்த ஓரிரு குடம் பாலைக் கீழே ஊற்றி விட்டு, மற்றக் குடங்களில் உள்ள நல்ல பாலைப் பயன்படுத்திக் கொள்வது

போலத்தான் இதனைக் கருத வேண்டும்.

விஷம் கலந்த பால் கீழே ஊற்றப்படவில்லையென்றால், 'கல்கி' குற்றம் சாட்டுவது பொருத்தமாகும்.

ஆளுங்கட்சியின் நிர்வாகத்திலிருந்த மாநகராட்சி மன்றத் தைச் சென்னையில் கலைத்த வரலாறு, 'சாதாரணமான நிகழ்ச்சி' என்று யாரும் கூறமாட்டார்கள்!

சென்னையில்-கழகப் பொறுப்புக்கு மாநகராட்சி வருவதற்கு முன்பிருந்தே-அந்த நிர்வாகத்தில் பெரும் ஊழல்கள் பெருக் கெடுத்திருந்தன; அது நாடறிந்த இரகசியம்!

அன்று நாடாண்டவர்கள், அப்போது எடுத்திடத் துணியாத நடவடிக்கையை நாம் எடுத்ததற்குக் காரணம்-அதனைத் தொடர்ந்து மேலும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டதற்குக் காரணம், 'சுத்தமான ஆட்சி' நிலவிட வேண்டும் என்பதற் காகத்தான்!

'கல்கி'யார் சற்று அமர்ந்து சிந்தித்தால்-கழக அரசு-இப்படி யார் யார் மீதெல்லாம் நடவடிக்கை எடுத்துத் தன்னைச் 'சுத்தமான அரசாக' ஆக்கிக் கொண்டு திகழ்கிறது என்பதை உணர முடியும்.

தொழில் வளர்ச்சி பற்றிக் குறிப்பிடும் 'கல்கி'- "ஆர். வெங்கட்ராமன் காலத்தில் தொழில் துறையில் ஏற்பட்ட மான் வேக வளர்ச்சி, ஆமை வேகமாகி

விடாவிட்டாலும், தி. மு. க. ஆட்சியில் ஆட்டு வேக மாகி விட்டது!”

என, மானையும்-ஆமையையும்-ஆட்டையும் கொண்டு வந்து நிறுத்துகிறது!

திரு. வெங்கட்ராமன், தொழில் துறையில் தமிழகத்திற்குச் செய்திருக்கும் சாதனையை நான் மறுப்பவன் அல்லன்-பாராட்டுகிறவன். ஆனால், “தி. மு. கழக அரசின் தொழில் வளர்ச்சி ஆட்டு வேகந்தான்” என்பதைத்தான் மறுக்கிறேன்.

நான் மறுப்பதாக மட்டும் எண்ணாதே! உடன்பிறப்பே! இதோ-புள்ளி விவரங்கள் பேசுகின்றன-பார்!

சுதந்திரம் கிடைத்த பிறகு-மூன்று ஐந்தாண்டுத் திட்ட காலங்களில்-ஏராளமான நிதிவசதி, வெளிநாட்டு உதவிகள் கிடைத்துத் திட்டங்கள் நிறைவேற வாய்ப்புகள் இருந்ததையும், தி. மு. கழகம் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபிறகு மத்திய அரசின் நான்காவது ஐந்தாவது திட்டங்கள் வகுத்தவாறு நிறைவேறா ததையும் இடையில், திட்டத்தேக்கம்-திட்ட விடுமுறைகள்-தவிர்க்க முடியாததாக ஆகியதையும் நினைவு வைத்துக் கொண்டு, நெருக்கடிக்கிடையிலேயும் நமது தொழில் வளர்ச்சிக்கான விவரங்களை நீ அறிந்துகொள்:-

ஃ வங்கிகள், தொழில் துறைக்குத் தந்த கடன்கள் அடிப்படையில்-

1967: இரண்டு கோடியே எழுபத்தெட்டு இலட்சம் ரூபாய்!

1971: நான்கு கோடியே அறுபத்தேழு இலட்சம் ரூபாய்!

ஃ தொழில் தொடங்க நிதி தரும் நிறுவனங்கள் தந்த அடிப்படையில்!

தமிழகம் இரண்டாவது இடத்தைப் பெற்றிருக்கிறது; எடுத்துக்காட்டாக-

1971-72: மராட்டியம் ரூ. 3436 இலட்சம்

1971-72: தமிழகம் ரூ. 3042 இலட்சம்.

ஃ I. F. C. நிறுவனத்தின் வாயிலாக-

1967-68 ஆம் ஆண்டு 252 இலட்சம் ரூபாய்.

1972-73 ஆம் ஆண்டு 500 இலட்சம் ரூபாய்.

ஃ IC. I. C. I. நிறுவனத்தின் வாயிலாக-

1967-68 ஆம் ஆண்டு 659 இலட்சம் ரூபாய்.

1973-74 ஆம் ஆண்டு 873 இலட்சம் ரூபாய்.

இவைகள், தொழில் வளருவதற்காக வழங்கப் பெற்று பயன் படுத்தப் பட்டவை என்பதைக் கணக்கிட்டால், உண்மை புரியும்.

தொழில் வளர்ச்சிக்குத் தனி நிறுவனங்களை நமது அரசு அமைத்துள்ளது; தனியாரோடு சேர்ந்து கூட்டுத் துறையிலும் தொழில்கள் தொடங்க 'TIDCO' நிறுவனம் உருவாக்கப்பட்டது.

1966-67 ஆம் ஆண்டு வரையில் 'TIDCO' போட்ட மூலதனம், 61 இலட்சம் ரூபாய்!

நாம் மேற்கொண்டுள்ள புதிய முயற்சிகளின் விளைவாக, 1971-1972 ஆம் ஆண்டு வரையில், 1546 இலட்சம் ரூபாய் மூல தனம் அளித்து-தொழில்கள் பல தொடங்கியுள்ளோம்.

பெரிய தொழில் வளர்ச்சிக்கு உதவ-

'SIPCOT'

சிறிய தொழில் வளர்ச்சிக்கு உதவ-

'SIDCO'

வெளிநாட்டு அரசுடன் கூட்டுச் சேர்ந்து மாநில அரசு 'TIDCO' நிறுவனத்தின் வாயிலாகத் தொழில் தொடங்குவது நாம்தான்!

யூகோஸ்லேவியாவுடன் சேர்ந்து-11 கோடி ரூபாயில்-'Grey Iron castings' தொழிற்சாலை!

ருமேனியாவுடன் இணைந்து-இரண்டு கோடி ரூபாயில்-முழுமையாகப் பதனிடப்பட்ட தோல் உற்பத்தித் தொழிற்சாலை!

இவையல்லாமல், 84 கோடி ரூபாயில் தூத்துக்குடியில் உரத்தொழிற்சாலை!

அரக்கோணம் வார்ப்பட இரும்புத் தொழிற்சாலை
ஆலங்குளம் சிமெண்டுத் தொழிற்சாலை!

மத்திய அரசுடன் வாதாடிப் பெற்றுள்ள சேலம் இரும்புத் தொழிற்சாலை!

உடன் பிறப்பே-இன்னொரு கணக்கையும் பார்!

பதிவு செய்யப்பட்டு நடைபெறும் சிறு தொழில்கள்

1967-68; 11,813
1973-74 48,214.

பெரிய தொழில்கள்-

1967-68; 92
1972-73; 186

'Industrial Production Index' அகில இந்திய அளவில்-தொழில் உற்பத்தி அடிப்படையில் தந்துள்ள குறியீட்டுப் புள்ளி, 1966-ஆம் ஆண்டில் 148.1 என்று இருந்தது. அது, 1972-ஆம் ஆண்டில்,

195

என்று உயர்ந்துள்ளது.

தமிழக மொத்த வளர்ச்சியில்-தொழில்துறை தந்த பங்கின் அடிப்படை-

1966-67 ஆம் ஆண்டில்
215.18
குறியீட்டுப் புள்ளி

1971-72-ஆம் ஆண்டில்
379.15
குறியீட்டுப் புள்ளி

இவ்வளவு விவரங்களையும் பற்றிக் கவலைப்படாமல்-ஒரே வரியில் 'கல்கி' இதழாளர், நமது அரசின் தொழில் வளர்ச்சி, 'ஆமை வேகமல்ல-ஆட்டுவேகம்' என்று முடிவு கட்டிவிட்டார்!

தொழில் வளர்ச்சியினூடே, தொழிலாளர் நலனும்-தொழில் அமைதியும் பாதுகாக்கப்பட இந்த அரசு எத்தகைய

பணி புரிந்துள்ளது என்பதை, மனச்சாட்சியுள்ளவர்கள் மறக்க மாட்டார்கள்!

மேலும் இதன் தொடர்பான விளக்கங்களை அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன்.

நாம் ஆமையல்ல-'கல்கி'யே ஒத்துக் கொண்டது!

'ஆடல்ல-முயல்' என்பதற்குத்தான் ஆதாரங்கள் தந்தேன்! அதுவும் தூங்காத முயல்!

அன்புள்ள,

மு. க.

(27-10-1974)

106. 'கல்கி'யின் கண்ணோட்டம்(3)

உடன்பிறப்பே!

"கடமைகளைச் சரிவர நிறைவேற்றாத தி. மு. க. பிரமுகர்கள், கட்டுப்பாடு இழந்து பிளவுபடுவதும்-கட்சிக்குக் கட்சி தாவுவதும்-கண்ணியமிழந்து மேடைக்கு மேடை ஒருவரை யொருவர் தூற்றிக் கொள்வதும் அண்ணாவுக்குச் செய்யும் அபச்சாரங்கள்!"

இவ்வாறு நொந்து கொள்கிறது 'கல்கி'யின் தலையங்கம்!

'கல்கி'யின் வேதனையோடு நானும் கலந்து கொள்கிறேன்!

மேற்கண்ட வருத்தம் தோய்ந்த வாக்கியங்களைப் பகுதி பகுதியாகப் பிரித்து, சில விளக்கங்களைக் கூற விரும்புகிறேன்!

"அண்ணாவுக்கு அபச்சாரம் செய்கிறார்கள்"- இது 'கல்கி'யின் குற்றச்சாட்டு!

அண்ணாவுக்கு அபச்சாரம் செய்வதாகக் கருதப்படுகிறவர்கள் யார்? - 'கல்கி' எவரை அடையாளம் காட்டுகிறது?

முதல் வரியைப் படித்துப் பார். 'கடமைகளைச் சரிவர நிறைவேற்றாத தி. மு. க. பிரமுகர்கள்' என்றுதான் வாசகமே தொடங்குகிறது!

கட்டுப்பாடு இழப்பது-

கட்சி தாவுவது-

கண்ணியமிழந்து பேசுவது-

இந்த மூன்று அபச்சாரங்களும் எப்போது நடைபெறுகின்றன-கடமைகளைச் சரிவர நிறைவேற்றாதபோது!

உடன்பிறப்பே! உன்னைப் போல் கடமைகளைச் சரிவர நிறைவேற்றி-அண்ணா வழியில் அயராது உழைக்கின்ற கழகக்

கண்மணிகளுக்கு, 'கல்கி' எடுத்துக்காட்டுகின்ற 'அபச்சாரம்' என்ற வார்த்தை, நிச்சயம் பொருந்தாது.

என் பிறந்த நாளில் கொடும்பாவி கொளுத்துமாறு அறிக்கை விட்ட தலைவர்களின் போக்கையும்-என் தலையை வெட்டித் தன் காலடியில் வைக்க வேண்டுமென்று வீரமொழி பேசிய நண்பர்களின் போக்கையும்-நான் எவ்வளவு பொறுமையோடும் அடக்கத்தோடும் விமர்சித்தேன் என்பதைக் 'கல்கி' ஆசிரியர் உணராதவர் அல்லர்!

"மரத்தை வெட்டுகிறவன் கூட, களைத்துப் போனால் ஓய்வெடுப்பதற்கு இன்னொரு மரத்தின் நிழலில்தான் அமருகிறான்; 'நம்மையும் இவன் வெட்டுவானே,' என்று நினையாமல், அந்த மரம் அவனுக்கு நிழல் தருகிறது. அதுபோல, அரசியலில் நம்மைத் தாக்குவோரிடத்திலும் நிழல் தரும் மரம் போல அன்பு காட்ட வேண்டும்!"

என்று கூறிய அண்ணாவின் பொன் மொழியை நெஞ்சில் நிறுத்தித்தான், நாம் இயக்கம் நடத்துகிறோம். ஆயினும் அபவாதங்கள் - அவதூறுகள் - களங்கப்படுத்துவதற்கென்றே கற்பிக்கப்படும் பொய்கள் ஆகியவற்றைக் கேட்டு மக்கள் ஏமாந்து விடாமல் இருக்க, அதற்குப் பதில் அளிப்பதும்-விளக்கம் தருவதும்-வேண்டிய நடவடிக்கை எடுப்பதும் தவிர்க்க முடியாததாகிறது என்பதையும் நாடு உணர்ந்து தான் இருக்கிறது!

கட்சி தாவுகின்ற கொடுமையைப் பற்றி எழுதியுள்ள 'கல்கி'க்கு ஒன்றை நினைவூட்டுவது என் கடமையாகிறது! கொள்கை காரணமாகக் கட்சிகளைத் துறந்து மற்ற கட்சிகளில் இணைவதற்கும் பதவிக்காகவோ அல்லது பதவி கிடைக்காத கோபத்திற்காகவோ கட்சி தாவுவதற்கும் உள்ள வேறுபாட்டை மறந்துவிடக் கூடாது!

உடன்பிறப்பே! நமது மாநிலத்தைப் பொறுத்தவரையில், காங்கிரசை எதிர்த்து வாகைசூடிய இரண்டு கட்சிகளின் முக்கியத் தலைவர்களையே காங்கிரசு மந்திரி சபையில் சேர்த்து-முதன் முதல் இங்கே பதவிக்காகக் கட்சி தாவும் சரித்திரத்தை உருவாக்கியவரே இராஜாஜிதான்-1952ஆம் ஆண்டில்! பரவாயில்லை; நடந்தவை களை மறந்துவிடுவோம்-'கல்கி'யோடு சேர்ந்து!

'மாநில சுயாட்சி' என்ற தலைப்பில் 'கல்கி' மற்றொரு தலையங்கம் எழுதியுள்ளது.

"இது போன்ற கோரிக்கைகள் நிறைவேறுமானால் இந்தியாவின் ஐக்கிய பாவம் 'ஐயோ பாவம்' ஆகிவிடும் என்பதில் ஐயமில்லை" என்கிறது 'கல்கி'.

22-10-74 தேதியிட்டு, 'கல்கி' எழுதியுள்ள கருத்துக்களுக்கு, 'கல்கி'யே அளித்துள்ள மறுப்புக் கருத்துக்களை இங்கே நான் குறிப்பிட்டு, என் வேலையைக் குறைத்துக் கொள்ள விரும்புகிறேன்.

தி.மு.கவின் அடிப்படையை ராஜாஜி தெளிவு செய்திருக்கிறார். அதாவது எல்லா ராஜ்ய அரசாங்கங்களும் உரிய அளவுக்கு உண்மையான சுவாதீனம் பெற்று அவற்றின் சமஷ்டியாக தில்லி சர்க்கார் அமையவேண்டும் என்கிற அகில இந்தியப் பிரச்சினையையே தி.மு.க. தனது அடிப்படையாகக் கொண்டுள்ளது.

"அரசியல் சாசனப்படி இந்தியா சமஷ்டி முறையைப் பின்பற்றுவது என்றாலும் மத்திய சர்க்கார் பெருத்த அதிகாரங்களைப் பெற்று ராஜ்ய சர்க்கார்களை நகரசபையின் ஸ்தானத்துக்குக் கொண்டு வந்துள்ளது.

இந்தியா போன்ற ஒரு தேச நிர்வாகத்தின் பொறுப்புக்களை மத்தியில் மட்டும் குவிப்பது திறமையின்மையைத்தான் உண்டாக்கும். அதோடு மத்திய சர்க்கார் ராஜ்ய சர்க்கார்களை அடக்கியாளும் கொடுமையும் சேருகிறது.

அப்படிப்பட்ட ஆட்சிக்குத் தேசம் தெரிவிக்கும் எதிர்ப்பின் உருவமே தி.மு.கழகம். அது 'தேசப்பிரிவினை கோஷ்டி' என்பது காங்கிரஸ்காரர்களின் கற்பனைப் பூச்சாண்டியேயாகும்."

உடன்பிறப்பே! 19-3-67 'கல்கி'யின் தலையங்கப் பகுதி தான் இது!

அதே 'கல்கி' இப்போது மாநில சுயாட்சி கேட்கும் நம்மைப் பார்த்து 'பசுத்தோல் போர்த்திய புலிகள்' என்று கூறி இந்திய ஒற்றுமைக்கு நம்மைப் பகைவர்களாகக் கற்பனை செய்கிறது! பழைய 'கல்கி'யின் மொழியில் சொல்ல வேண்டுமானால் 'பூச்சாண்டி' காட்டுகிறது!

உன் மீதும் என் மீதும் உள்ள எரிச்சலில் உண்மைகளை மறந்து விட்டு, எதையாவது எதிர்ப்பாக எழுத வேண்டும் என்று முனையும் போது திரும்பிப்பார்க்கும் திறனை இழந்து விடுகிறார்கள்!

போகட்டும்! நாம் திரும்பிப் பார்ப்போம்! முன்னேறுவோம்! வெற்றி நமதே! வா!

அன்புள்ள,

மு. க.

(03-11-1974)

107. வாழ்க-உன் புன்னகை!

உடன்பிறப்பே,

நமது கழகத்திற்கு வயது இருபத்தைந்து என்கிறபோது, காளைப் பருவத்தின் கம்பீரத் தோற்றம் எதிர்நிற்கிறது! காளைப் பருவம் கம்பீரம் வாய்ந்தது மட்டுமல்ல-முறுக்கேறிய கட்டுடல்-முறுவலிக்கும் இதழ்கள்-துடிக்கும் இளம் மீசைகள்-துருதுருக்கும் கைகள்-ஆகிய அனைத்து இலக்கணங்களும் கொண்டது.

ஆனால், நமது கழகத்தின் வாலிப வனப்போடு, அடக்கம்-அமைதியான நோக்கு-எதையும் தாங்கும் பண்பு-இத்தனையும் சேர்ந்திருப்பதற்கு என்ன காரணம் என்று மாற்று முகாமில் இருக்கின்ற நல்லவர்கள் சிந்திக்காமல் இருப்பதில்லை.

நமது சாதனைகள் மறைக்கப்படுகின்றன! அந்தப் பணியைச் செய்வதற்காகவே சிலர் பத்திரிகைகள் நடத்துகிறார்கள்! ஏசல் கணைகளை எழுத்துக்களாக்குகிறார்கள்! நாராசங்களைப் பொழியும் நாவேந்தர்களாகச் சிலர் நடமாடுகிறார்கள்!

அவதூறுகள் பாயும்போது அதனைத் தடுக்கும் கேடயங்களாக மட்டும் நம்மை மாற்றிக் கொண்டு, இழிமொழிகள்-எரிச்சல் பாணங்கள் பற்றிக் கவலைப்படாமல் நமது இலட்சியப் பயணத்தை நடத்திச் செல்கிறோம்!

இதற்குக் காரணம் என்ன? ஒரு அடிப்படைக் காரணம் இருக்கிறது; நாம், பதவி பிடிக்க வேண்டுமென்று கட்சி தொடங்க வில்லை; நமது கழகத்துக்கு வயது இருபத்தைந்துதான் என்றாலும், இந்த நூற்றாண்டின் தொடக்க காலத்திலேயே தமிழகத்தில் தோன்றிய மறுமலர்ச்சி யுகத்தின் தூதுவர்கள் நாம்!

தாழ்த்தப்பட்ட - பிற்படுத்தப்பட்ட மக்களுக்காகத் தோன்றிய தென்னிந்திய நல உரிமைச் சங்கம், இந்தச் சமுதாயத்திலே உருவாக்கி இருக்கின்ற ஒளியை யாரும் மறுத்திட இயலாது!

அந்த ஒளி மகத்தானதாக - விரிவானதாக இல்லாமல் இருந்திருக்கலாம்; ஆனால், அன்று கிளம்பிய சிறுபொறிதான் இன்று நாம் கையில் ஏந்தியிருக்கிற தீபச் சுடருக்கு முழு முதல் ஆதாரமாகும்.

சுய மரியாதை இயக்கத்தின் தோற்றம், அடித்தள-நடுத்தர மக்களின் நடையிலே ஒரு மிடுக்கினை ஏற்படுத்தியதும், அந்தச் சமுதாயப் புரட்சியைத் தொடர்ந்து தென்னிந்திய நல உரிமைச் சங்கம் திராவிடர் கழகமாக-இன உரிமைப் போர் வாளாக மாறியதும் கடந்த காலத்துச் சரித்திரப் புகழ் ஏடுகளாகும்!

ஆகவே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் வயது இருபத்தைந்துதான் என்றாலும், ஏறத்தாழ முக்கால் நூற்றாண்டுக் காலத்து உணர்வுகள்-வரலாறுகள்-தியாகங்கள்-போராட்டங்கள்-அனுபவ ஆற்றல்கள்-தலைவர்கள்-தளபதிகள்-தொண்டர்கள் - அனைத்தையும் பின்னணியாகக் கொண்டு வயது முதிர்ச்சியிலே பெற வேண்டிய அனுபவத்தையும் நிதானத்தையும் பெற்றுத் திகழ்கிறது!

“இளமையின் கம்பீரமும், முதுமையின் பொறுமையும் இந்தக் கழகத்திற்குக் கிடைத்துள்ளதற்கு இதுவே காரணம்” என்று, தமிழக அரசியலில் நீண்ட நாட்களாக இருப்போர்-அவர்களிலும் வாய்மையுடையோர் ஒப்புக் கொண்டு உரை நிகழ்த்துகின்றனர்-துணிவுடையோர் வெளிப்படையாகவும், அஃதற்றோர் தனியாகவும்!

தியாகர் - நாயர்-பனகல் - பெரியார் - அண்ணா என்றுவரும் வரிசையில், முதல் மூவரும் ஏழையின் வீட்டு விளக்குக்கு எண்ணெய்யாகவும், பெரியாரும், அண்ணாவும் ஏழையின் வீட்டுக்கே மெழுகுவத்தி விளக்காகவும் இருந்தவர்கள்! எத்தனை எத்தனைத் தளபதிகள்-எத்தனை எத்தனைத் தொண்டர்கள்!

அந்தப் பட்டியலில் இடம் பெற்றோர் பலர், இன்றில்லை! அவர்தம் கல்லறைகளில் நமது கண்ணீர் அரும்புகளைத் தொடுத்து மலர் வளையம் வைத்துக் கொண்டிருக்கிறோம்!

உடன் பிறப்பே! அவர்கள் ஓடாகத் தேய்ந்து ஓயாது உழைத்த போது, ‘ஆட்சி வரும்-அந்தஸ்து வரும்’ என்று எதிர்பார்த்து இருந்தவர்கள் அல்லர்!

“என் கடன் பணி செய்து கிடப்பதே” எனத் தன்னலம் மறந்து தமிழினம் தன்மானத்தோடும் உரிமையோடும் வாழத் தங்களை

அர்ப்பணித்துக் கொண்டார்கள்! அவர்கள் பலர் பதவியிலும் இல்லை. பதவியைப் பற்றி நினைக்கவும் இல்லை! பதவியில் இருந்தவர்களோடு பழகிடவும் முயலவில்லை! பரிந்துரைச் சீட்டுக்களைச் சுமந்திடும் பழக்கமும் கொண்டிடவில்லை!

அவர்களின் உழைப்பை-ஓயாத செயல் திறனை உரமாகக் கொண்டு விளைந்திருப்பதே **கழகத்தின் மாட்சி!**

'கழகத்தின் ஆட்சி' என்று கூறாமல் 'கழகத்தின் மாட்சி' என்று நான் கோடிட்டுக் காட்டுவதைக் கவனம் வைத்துக் கொள்!

ஆட்சி வரும்-போகும்! மாட்சி ஒரு முறை போனால் மீண்டும் வராது! வர முடியாது!

அதனால்தான் நாம் ஆட்சியை விட மாட்சியைப் பெரிதாகக் கருதுகிறோம்!

அதனை நிலைநிறுத்தப் பாடுபட்ட தீரர்களுக்கும்-தொடர்ந்து பாடுபடும் உன்னைப் போன்ற வீரமிக்கவர்களுக்கும்-என்றைக்குமே என் தலை வணங்கும் என்பதை நீ அறிவாய்!

"மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே" என்று சிந்தனைச் சிற்பி சிற்றரசு அவர்களை அவையில் அழைத்தாலும்-அவரும், "மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே" என்று எனக்குப் பெருமை அளித்தாலும்-இருவரும் தனியாக இருக்கும் போதும், தொலைபேசியில் பேசும் போதும், 'என்ன அண்ணே - என்ன தம்பீ' என்று தான் உரையாடிக்கொள்கிறோம்.

இந்த அண்ணன்-தம்பி உறவு இன்று நேற்றா-எத்தனை எத்தனை ஆண்டுகளாக!

அவரும் சரி-வரும் 12ஆம் நாள் 63-வது பிறந்தநாளைச் சந்திக்கும் என்.வி.என். அவர்களும் சரி-இந்தக் கழகக் கொள்கைகளைக் காக்கக் கடந்து வந்துள்ள காட்டாறுகள் கொஞ்சமா?

கோடை இடியோ-குரலின் ஒலியோ-என ஐயுறும் வண்ணம் முழங்கிடும் அஞ்சா நெஞ்சன் அழகிரி-புயல் வேகப் பேச்சாளர் பொன்னம்பலனார்-மாவீரன் மாயூரம் நடராசன்-நாகை மணி-எஸ்.வி. லிங்கம்-குடந்தை நீலமேகம்-சௌந்தரபாண்டியன் - போளூர் சுப்பிரமணியம்-மூவலூர் மூதாட்டியார்-சென்னை தருமாம்பாள் அம்மையார்-குத்தூசி குருசாமி-குஞ்சிதம் அம்மையார்-காஞ்சி மணிமொழியார்-என்ற பெரியதோர்

அணியில் சிறப்பிடம் பெற்றிருந்தவர்கள்தான் இன்று மேலவைத் தலைவராகவும் அமைச்சராகவும் பொறுப்பேற்றுள்ள அண்ணன் சி.பி.சி.யும், சகோதரர் என்.வி.என். அவர்களுமாவார்கள்!

அவர்களில் ஒருவருக்கு 63-வது பிறந்த நாள் விழா நடை பெறுகிறது; கழகத்தினர் குழு அமைத்து அந்த விழாவைச் சீர்பெற நடத்துகின்றனர்!

பெரியாருக்கும்-பேரறிஞர் அண்ணாவுக்கும் அருகே இருந்து-அவர்கள் இட்ட கட்டளைகளை-தொலை தூரமாயினும், துன்ப துயரங்கள் எதிர்ப்பட்டாலும் துச்சமெனக் கருதி நிறைவேற்றிய பெருமை என்.வி.என். அவர்களுக்கு உண்டு. அண்ணாவின் கோபத்தையும், அதற்கு நேர்மாறான கேலி-கிண்டலையும் தாங்கக் கூடிய மன வலிமையும் கட்டுப்பாட்டு உணர்வும் என்.வி.என். பெற்ற சொத்துக்கள் ஆகும்!

இந்தியை எதிர்த்து இல்லத்தரசியுடனும்-குழந்தையுடனும் சிறையேகிய பெருமைமிகு தியாக வரலாறு படைத்தவர் அவர்!

துப்பாக்கிக் குண்டுகளுக்கிடையே குன்றத்தூரில் தடையை மீறிய கொள்கைக் குன்றம் அவர்!

அவருக்குப் பிறந்த நாள் கொண்டாடும் போது, என் அன்பு உடன்பிறப்பே! நமது இயக்கத்தில் இலட்சிய உணர்வுகள் பிறந்த அந்தக் காலத்தையும் எண்ணி மகிழ முடிகிறதல்லவா?

அவர் பிறந்த நாள் விழாவை எண்ணிக்கொண்டேன்.

நமது இலட்சிய வரலாறு பற்றிய சிந்தனைகள் அலை பாய்ந்தன - நெஞ்சத்தில்!

அந்த அலைகளை அடக்கி உனக்கு எழுத்துக்களாகத் தரும் திறமை எனக்கில்லை!

இந்த இலட்சிய வரலாற்றை மறந்துவிட்டவர்களையும் ஒரு கணம் நினைக்கிறேன்-கண்ணில் நீர் திரை போடுகிறது!

அதனை உன் அன்புப் புன்னகை உடனடியாக அகற்றுகிறது!

வாழ்க - உன் புன்னகை!

அன்புள்ள,

மு. க.

(10-11-1974)

108. வான வேடிக்கை!

உடன்பிறப்பே,

இந்திய நாட்டு முதுபெரும் தலைவர்களில் ஒருவரான ஜெயப்பிரகாஷ் அவர்கள், பீகார் மாநிலத்தில் தலைமையேற்று நடத்தி வருகின்ற கிளர்ச்சி பற்றி நமது திட்டவட்டமான கருத்தை, ஏற்கெனவே கழகச் சார்பில் நான் எடுத்துக் கூறியிருக்கிறேன்.

பெங்களூரில் சில திங்களுக்கு முன்பு நிருபர்கள் என்னிடத்தில், பீகார் கிளர்ச்சி பற்றிப் பல வினாக்களை எழுப்பினர்.

"மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசு ஐந்தாண்டுக் காலம் ஆட்சி புரிவதற்கு அனுமதிக்கப்பட வேண்டும். அந்த ஆட்சி தவறுகள் செய்தால் அதனை மக்கள் மன்றத்தில் எடுத்துச் சொல்லி...அடுத்த தேர்தல் வரையில் பொறுத்திருந்து மக்களின் வாக்குகளால் அந்த ஆட்சியை மாற்றுவதுதான் முறையாகும்.

இப்போது நாங்கள் ஆளும் கட்சியாக ஒரு மாநிலத்தில் இருப்பதற்காக இந்தக் கருத்தைக் கொண்டிருப்பதாக எண்ணக் கூடாது. நாங்கள் எதிர்க் கட்சியாக இருந்தபோது கூட சில பிரச்சினைகளின் மீதுதான் கிளர்ச்சிகள் நடத்தினோமே தவிர ஆட்சியை மாற்றுவதற்காக எந்தக் கிளர்ச்சியும் நடத்தவில்லை"

என்று குறிப்பிட்டேன்.

இந்தக் கருத்தை நான் அறிவித்த பிறகு, ஜெயப்பிரகாஷ் நாராயணன் தமிழ்நாட்டில் வந்து இப்படி ஒரு கிளர்ச்சியைத் தொடங்கினால் என்ன செய்வீர்கள்? என்று என்னிடம் கேட்கப் பட்டது; அதற்கு நான் சொன்ன பதில் உனக்குத் தெரியும்-

"இந்திய நாட்டுத் தியாகத் தலைவர்களில் ஒருவரான அவர், தமிழ்நாட்டு அரசில் என்ன குறை காணுகிறார்

என்பதை அவரிடமே விவாதித்து - அந்தக் குறை களைப் போக்கத் தக்க நடவடிக்கைகளை எடுத்து- கிளர்ச்சிக்கே தேவையில்லாத ஒரு நிலையை உருவாக்குவேன்”

என்றுதான் அன்றும் சொன்னேன்-இன்றும் சொல்கிறேன்.

இதில் வேடிக்கை என்னவென்றால், நமது கழக அரசைக் கவிழ்ப்பதற்கு ஒரே மாதம்-ஒரே வாரம்-ஒரே நாள்-ஒரே மணி நேரம் என்றெல்லாம் ‘கெடு’ வைத்து ‘கிடுகிடு’ போராட்டம் நடத்தியவர்கள்-கவர்னரிடம் மகஜர்-ஜனாதிபதியிடம் மகஜர் - பிரதமரிடம் மகஜர் - என்று அலைந்து திரிந்தவர்கள்-சட்டப் பேரவை உறுப்பினர் வீடுகளில் மகஜர் ஊர்வலம் நடத்திப் படை எடுத்தவர்கள் - கடை அடைத்தவர்கள்-கல் வீசியவர்கள்-பேருந்து களை கொளுத்தியவர்கள் - அமைச்சர்களின் கூட்டங்களில் அமளி நடத்தியவர்கள் பீகாரில் நடைபெறும் ஜெயப் பிரகாஷரின் போராட்டத்தை எதிர்த்து இங்கே போராட்டம் நடத்தப் போகிறார்களாம்! அந்தப் போராட்ட இயக்கத்திற்குப் பெயர் ‘சனநாயகப் பாதுகாப்புப் பேரணி’யாம்!

‘வடலூர் வள்ளலார் விலாஸ் கசாப்புக் கடை’-‘விவேகானந்தர் பீடி’ என்பது போல், இவர்கள் இயக்கத்திற்கு ‘சனநாயகப் பேரணி’ என்று பெயராம்!

உடன்பிறப்பே- எவ்வளவு விசித்திரமானவர்கள் பார்த்தாயா? தேர்ந்தெடுக்கப்பட்ட தொகுதியின் மக்களுக்கு ஆற்றிட வேண்டிய சனநாயகக் கடமையை, சட்டசபைக்கு வந்து ஆற்றிட இயலாதவர்கள்-சட்டசபை வெளித்தாழ்வாரம் வரையில் வந்து சம்பளத்திற்காகவும் பதவி பறிபோகாமல் இருப்பதற்காகவும் எப்போதாவது கையெழுத்துப் போட்டுவிட்டு ஓடி விடுகிறவர்கள் - இன்றைக்கு, சனநாயகத்தைப் பாதுகாக்கத் துடியாய்த் துடிக் கிறார்கள்!

“அய்யோ சனநாயகமே! உன் தலைவிதி இப்படியா ஆகவேண்டும்?” என்று இரங்கலுரை கூறத் தோன்றுகிறதல்லவா?

உடன் பிறப்பே! தேசிய விடுதலைப் போரின்போது ஒன்பது ஆண்டுகாலம் சிறையில் வாடியவர் ஜெயப்பிரகாஷ்; அமெரிக்க நாட்டுக் கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் பயின்றபோதே, ஆப்பிள் தோட்டங்களில் வேலைசெய்து-அதில் கிடைக்கும்

வருவாயில் அன்றாடச் செலவுகளைச்செய்துகொண்டு எளிய வாழ்வு வாழ்ந்தவர்; 1942-ஆம் ஆண்டு நாட்டு விடுதலைக் கிளர்ச்சியில், 'ஹசாரி பாக்' சிறையில் பூட்டப்பட்டவர்; அங்கிருந்து அவர் தப்பியபோது, அவர் தலைக்கு இலட்சக்கணக்கான ரூபாய்கள் பரிசளிப்பதாக ஆங்கிலேய அரசு அறிவித்தது!

அவரை, அப்போது ஒரு கம்யூனிஸ்டுதான் காட்டிக் கொடுத்த தாக வரலாறு இருக்கிறது!

1945-இல் ஏற்பட்ட இந்திய இடைக்கால அரசில் அமைச்சராகப் பொறுப்பேற்குமாறு காந்தியடிகள் கேட்டுக் கொண்டபோதும்-1948-இல் பண்டித நேரு கேட்டுக்கொண்டபோதும்-அதனை மறுத்துவிட்ட தியாக சீலர்.

நேரு, லால்பகதூர் மறைவுக்குப் பிறகு பிரதமர் பதவி அவரைத் தேடி வந்த போதும்-குடியரசுத் தலைவர் தேர்தலில் சஞ்சீவி ரெட்டியை எதிர்த்து, கிரிக்குப் பதிலாக அவரை நிறுத்துவதற்கு அனைத்துக் கட்சியினரும் வேண்டுகோள் விடுத்த போதும்-அவைகளை நிராகரித்து விட்டவர்!

அவர்தான் இன்று பீகாரில் கிளர்ச்சி நடத்துகிறார். அவர் மீது தடியடிப் பிரயோகம்-கண்ணீர்ப் புகை!

அவர் அப்படி நடத்தப்பட்டது சரியல்ல-என்று கூறிட சனநாயகம் பேசுகிறவர்களின் நா எழ மறுக்கிறது!

இவர்கள்தான் நாடு தழுவிய சனநாயகப் பாதுகாப்பு இயக்கம் நடத்தப் போகிறார்களாம்!

'இங்குள்ள முதலமைச்சரின் தலையை வெட்டுவோம்' என்று கூறலாமாம்! 'முதலமைச்சரின் பிறந்த நாளில் கொடும்பாவி கொளுத்த வேண்டும்' என்று அறிக்கை விடலாமாம்!

பீகார் முதலமைச்சர் கபூரின் கால்விரல் நகம் அழுக்குப் பட்டு விட்டதாம்! அதைக் கழுவுவதற்கு, 'காசி தீர்த்தம்' எடுத்துக் கொண்டு ஊர்வலம் விடப் போகிறார்களாம்! இந்த வேடிக்கை மனிதர்களைக் கண்டால், விலா நோகச் சிரிப்புத்தான் வருகிறது!

"ஜெயப்பிரகாஷின் கிளர்ச்சிக்காக, பீகார் சட்டசபையைக் கலைக்க முடியாது" என்று பிரதமர் இந்திராகாந்தி ஆணித்தரமாக அறிவித்திருக்கிறார்!

இந்த அறிவிப்பு, 'தமிழ்நாடு சட்டசபையைக் கலைக்க வேண்டும்' என்று நடிகரும்-அவர்தம் தோழமைக் கட்சியினரும் போராடியபோதும் வந்திருந்தால், அம்மையார் இந்திரா காந்தி அவர்களின் சனநாயகப் பற்றை நாம் பாராட்டியிருக்க முடியும்.

'கேரளத்தில் மன்னத் பத்மனாபன் நடத்திய கிளர்ச்சிக்காகக் கம்யூனிஸ்டு அரசாங்கத்தைக் கலைத்தார்கள் மத்திய அரசினர்! அது போல், இப்போது, பீகாரில் ஏன் கலைக்கவில்லை' என்று நான் கேட்கவில்லை.

"இன்று இந்திரா அம்மையார் பீகாருக்கு எடுத்து வைக்கின்ற வாதம், அன்று கேரளத்திற்கு ஏன் பொருந்தவில்லை" என்பதுதான் நமது சந்தேகம்!

அப்போது கேரளாவுக்குச் சென்று நிலைமையை அறிந்து-'கம்யூனிஸ்டு அரசைக் கலைக்க வேண்டும்' என்று தந்தையார் நேரு பெருமகனார் அவர்களிடத்திலே சிபாரிசு செய்தவரே இந்திராகாந்தி அம்மையார்தான்!

உடன்பிறப்பே! அரசியலில் எப்படிப்பட்ட மாற்றங்கள் பார்த்தாயா?

கிரி தேர்தல் முதல் கிருஷ்ணகிரி தேர்தல் வரையில் தி. மு. க.வின். ஆதரவைப் பெற்று வெற்றி கண்ட இந்திரா காங்கிரசின் தலைவர்கள், 1971-இல் தி.மு.க.வை ஆதரித்தது தவறு என்று இப்போது தாங்கள் உணருவதாகப் பேசுகிறார்கள் - அது ஒரு வேடிக்கை!

'ஒரு நாளைக்கு ஒரு போராட்டம்' என்று இங்கே அறிவித்த வர்கள், இன்று பீகார் போராட்டத்தை எதிர்த்து ஒரு போராட்டம் நடத்தப் போவது மற்றொரு வேடிக்கை!

உடன்பிறப்பே! தீபாவளியில் நீ வாண வேடிக்கைகள் நடத்தாவிட்டாலும், இந்த அரசியல் வாண வேடிக்கைகளையாவது கண்டு களித்திடு!

அன்புள்ள,

மு. க.

(17-11-1974)

109. அவள் ஒரு தொடர்கதை!

உடன்பிறப்பே,

கவிதா- ஒரு பெண்-ஆம்; அவள் ஒரு சுமைதாங்கி.

இன்பத்தின் விளைவை ஈரைந்து மாதங்கள் சுமக்கிறார்களே பெண்கள்-அந்தச் சுமையை அல்ல நான் குறிப்பிடுவது; அவள், அந்தப் பெரிய குடும்பத்தையே சுமக்கிறாள்.

கேளேன்-அந்தக் கதையை! குழந்தைகளைப் பெற்றுக் குடும்பத்தைப் பெருக்கிய தந்தை யாரிடமும் கூறாமல் சாமியாராகப் போய்விட்டார்! மூத்த சகோதரன், குடும்பப் பொறுப்பற்று-நாடோடி போல் தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு விட்டான்; அவன் பெற்ற பிள்ளைகளும் அந்த வீட்டிலேதான் கொட்டமடிக்கின்றன. கவிதாவின் தங்கை விதவைக் கோலத்தில்-வெண்ணிற உடையில்! குறும்புப் பையன் ஒருவன்- குருட்டுப் பையன் ஒருவன்! இவர்களையெல்லாம் பார்த்துக் கண்ணீர் விடும் தாயார்!

இப்படி ஒரு சோகமான குடும்பத்தின் சுமையைத் தன் தோள் மீது சுமந்திடும் பொறுப்பைக் கவிதா ஏற்றுக் கொள்கிறாள். 'சகோதரனும் சகோதரிகளும் சமுதாயத்தில் பெருமையுடன் வாழ வேண்டும் - சகோதரனின் குழந்தைகள் நல்வாழ்வு பெற வேண்டும்'- இதற்காகத் தன் நேரம்-நினைப்பு-உழைப்பு அனைத்தையும் செலவிடுகிறாள்.

விதவைத் தங்கையின் புது வாழ்வுக்காகத் தன் காதலையே தியாகம் செய்கிறாள்.

ஒவ்வொரு நேரமும், குடும்பத்தில் தன் பொறுப்பு குறைந்து-வீட்டைக் காக்கும் கடமையை வேறு யாராவது ஏற்றுக் கொள் வார்கள் - என்று நம்புகிறாள்; அவள் நம்பிக்கை ஈடேறவில்லை; அவள் தலை மீதுதான் அந்தக் குடும்பத்தின் பாரம் விழுகிறது.

இத்தனைச் சிரமத்திற்கும் தியாகத்திற்கும்-அவளுக்குக் கிடைக்கும் பரிசு என்ன? பட்டம் என்ன?

- **திமிர் பிடித்தவள்!**
- **கர்வி!**
- **சண்டாளி!**
- **இராட்சசி!**
- **நடமாடும் நெருப்பு!**
- **பாவி!**

இந்த அடைமொழிகளால்தான் அவள் அர்ச்சிக்கப்படுகிறாள்!

அர்ச்சிப்பது யார் யார் தெரியுமா! அவளைப் பெற்ற அன்னையேகூட, அவளைச் 'சண்டாளி' என்கிறாள்-சில நேரங்களில் அவசரப்பட்டு-ஆத்திரத்தில்!

எந்தக் குருட்டுப் பையனுக்காகக் கஷ்டப்படுகிறாளோ அவனே திட்டுகிறான்-கேலி பேசுகிறான்!

வீட்டுக்குள்ளிருக்கும் 'இளம் வானரங்கள்' எல்லாம்-அவள் உழைப்பால் வளர்ந்து கொண்டே-அவளை, 'இராட்சசி' என்று எழுதி அவளிடமே காட்டுகின்றன; அதையும் அவள் பொறுத்துக் கொண்டு, 'இராட்சசி' என்ற சொல்லில் எழுத்துப் பிழையைத் திருத்திக் கொடுக்கிறாள்.

"யார் அந்தக் கவிதா? என்ன, புதிர் போட்டுக் கொண்டே போகிறாய்!" எனக் கேட்கத் தோன்றுகிறதல்லவா உனக்கு?

நீ படம் பார்த்திருந்தால், இந்நேரம் உனக்குப் புரிந்திருக்கும். நமது அரங்கண்ணல் தயாரித்த-நண்பர் பாலச்சந்தர் டைரக்ட் செய்துள்ள 'அவள் ஒரு தொடர் கதை' என்ற அற்புதச் சமூகக் காவியத்தில் வருகின்ற உயிர்நாடிதான் அந்தக் கவிதா!

படத்தைப் பார்த்து விட்டு வீட்டுக்கு வந்தேன். உனக்கு இந்த வாரம் என்ன கடிதம் எழுதுவது என்ற என் கேள்விக்கு, உடனடியாகப் பதில் கிடைத்துவிட்டது; பிற்பகல் தூக்கத்தைத் துறந்துவிட்டு இதனை உனக்கு எழுதுகிறேன்.

அந்தப் பெண், எத்தனைத் துன்ப துயரங்களுக்கிடையே அந்தக் குடும்பத்தைத் தாங்கிப் பிடிக்கிறாள் பார்த்தாயா? அதற்கு அவள் பெறுகின்ற விருதுகள் பார்த்தாயா?

'வீட்டைத் திருத்த வேண்டும்' என்ற ஒரே இலட்சியத்திற்காக உழைக்கும் அவள்-தன் கூடப் பிறந்தவர்கள் தவறு செய்யும் போது, தாட்சண்யம் காட்டாமல் கண்டிப்பாக நடந்து கொள்கிறாள்; அதற்கு அவள் பெறும் வெகுமானம், 'சண்டாளி' என்ற தங்கப்பதக்கம்!

கடமையையும் - பொறுப்பையும் உணராமல், காவி கமண்டலங்களோடு திரிகின்ற தந்தையை அவள் மதிக்கவில்லை; அதற்கு அவளுக்குச் சூட்டப்படுகின்ற மகுடம், 'மகாபாபி' என்பதாகும்!

கவிதா, சம்பாதித்துப் போடுவது போதாது என்று-தன் சினிமாச் செலவுக்காக - 'குருட்டுச் சிறுவன்' தன் கண்ணற்ற நிலையைப் பயன்படுத்திக் கொண்டு பிச்சையெடுக்கிறான். அதைக் கண்டு அவள் குமுறுகிறாள்-தான் இவ்வளவு உழைத்தும் அந்த வீட்டுச் 'சுபாவங்கள்' மாறமாட்டேன் என்கிறதே என மனம் கலங்குகிறாள்; வேதனையைக் கண்ணீரால் வெளிப்படுத்துகிறாள். 'அதனை யாராவது பார்த்துவிடப் போகிறார்கள்' என்ற வெட்கத்தில், உடனே தன் சிரிப்பால் அந்தக் கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறாள்!

தான் பணியாற்றும் அலுவலகத்திலேயே தன் சகோதரன் பொய் சொல்லி-நேர்மையற்ற முறையில் பணம் வாங்குகிறான்; அது கேட்டுப் பதைக்கிறாள்-அந்தப் பாவை! துடிக்கிறாள் அந்தத் தோகை!

- **நாடோடிகள்!**
- **நாணயம் கெட்டவர்கள்!**
- **நச்சரிப்புகள்!**
- **நமப்பார்வதி பதேக்கள்!**

இத்தனைச் சூழலுக்குமிடையே அவளது உற்ற தோழிக்கு விளைந்த ஊனத்தையும் அகற்றத் தொண்டு செய்கிறாள்!

அவள் இன்னல்களுக்கெல்லாம் ஒரு முடிவு ஏற்பட்டு பொறுப்பை அந்த வீட்டில் இன்னொருவர் வசம் ஒப்படைத்துவிட்டு அவள், 'அப்பாடா' என்று ஆனந்தப் பெருமூச்சு விடப்போகிறாள் என்று நாம் எதிர்பார்க்கும்போது-திடீரென ஏற்பட்ட ஒரு திருப்பத்தால்-அவளே அந்தப் பெரிய குடும்பத்தைத் தாங்கும் கடமைக்குத் தன் தலையை மீண்டும் முட்டுக் கொடுக்கிறாள்! அதிலேயும் அவளுக்கு ஒருவகையான மகிழ்ச்சிதான்!

அவள் யாருக்காகத் தொடர்ந்து பாடுபடப் போகிறாளோ-யாருக்காகத் தியாகம் செய்கிறாளோ-யாருக்காகப் பல சாதனைகளைப் புரிந்தாளோ - அவர்களே அவளுக்குப் பிடித்தமான-அவள் மனத்தை மரத்துப் போகும்படி செய்துவிட்ட அந்தப் பரிசுகளை மீண்டும் வழங்கிடக்கூடும்.

- **திமிர் பிடித்தவள்!**
- **கர்வி!**
- **சண்டாளி!**
- **இராட்சசி!**
- **நடமாடும் நெருப்பு!**
- **பாவி!**

இந்தப் பரிசுகளை எதிர்பார்த்து, அவள் அவர்களுக்காகத் தொண்டாற்றக் கிளம்பிவிட்டாள்!

அவள்-ஆம்-கவிதா-அவர்களுக்காக வாழ்கின்றாள்!

அதைப்போலவே அவர்களும், அவளைத் திட்டினாலும், கடிந்தாலும்-அவளால்தான் தங்களை வழி நடத்திச் செல்ல முடியும் என்று நம்புகிறார்கள்!

உடன்பிறப்பே! படத்தில் வரும் கவிதா, ஒரு தொடர்கதை! 'கவிதா' இடத்தில் நமது கழகத்தை வைத்துப்பார். 'கழகம் ஒரு தொடர்கதை' என்று சொல்லத் தோன்றுகிறதல்லவா?

படத்தை ஒரு முறை பார்! பார்த்த பிறகு, இந்தக் கடிதத்தை மறுமுறையும் படி!

படத்தில் வரும் வீடு-நாடாகும்!
கதாபாத்திரங்கள்-நாட்டில் நடமாடும் பல்வேறு
அரசியல், சமூகப் பாத்திரங்களாவர்!
கவிதா-கழகமாகத் தோன்றும் உன் மனக் கண்ணுக்கு!

அன்புள்ள,

மு. க.

(24-11-1974)

110. கயிற்றில் தொங்கிய கணபதி!

உடன்பிறப்பே!

இரண்டொரு நாட்களுக்கு முன்பு வேலூர் சென்றிருந்தேன்; மலேயா சாம்பசிவம் என்ற நண்பருக்கு முதல்வர் நிதியிலிருந்து மூவாயிரம் ரூபாய் குடும்ப நிதியாக-அரசின் சார்பில் நானே நேரடியாக அவரிடம் வழங்கினேன்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு மலேயாவில் வெள்ளை ஆதிபத்தியத்தின் அடக்கு முறை காரணமாக 'கையில் ஆயுதம் வைத்திருந்தவர்கள்' என்று குற்றஞ் சாட்டப்பட்டுப் பல இளைஞர்கள் அங்கே தூக்கிலிடப்பட்டார்கள்.

அப்படித் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டு இறுதியில் மரணத்தின் வாயிலிருந்து விடுவிக்கப்பட்ட இளைஞர்களில் ஒருவர்தான் இந்த சாம்பசிவம்!

போர்க் குரல் கொடுத்த அந்த வாலிபர்களின் வரிசையில், கணபதி என்ற தமிழனும்-வீரசேனன் என்ற தமிழனும்-சாவின் கொடிய பள்ளத்தில் தள்ளப்பட்டார்கள்! வீரசேனன் வெள்ளை வெறியர்களால் சுட்டுக் கொல்லப்பட்டான்! கணபதி தூக்கி லிடப்பட்டான்!

அப்போது நான் எழுதிய ஒரு நூலுக்குக் "கயிற்றில் தொங்கிய கணபதி" என்று பெயர்.

1949ஆம் ஆண்டில் கணபதி, மலேயாவில் தூக்கிலிடப்பட்ட செய்தி வந்தபோது, நான் சென்னையில் உள்ள 'விருதுநகர் நாடார் விடுதி'யில் தங்கியிருந்தேன். அப்போதெல்லாம் சென்னை வரும்போது, அந்த விடுதியில் தான் தங்குவது வாடிக்கை.

கணபதி பற்றிய சோகச் செய்தியைப் படித்துவிட்டு "கயிற்றில் தொங்கிய கணபதி" என்ற நீண்ட கட்டுரையை எழுதினேன்.

அதை நான் எழுதி முடித்ததும், "அறிவுப் பண்ணை" நமசிவாயம், அதனைத் தாமே ஒரு சிறு புத்தகமாக வெளியிட விரும்பினார். அந்தச் சிறு புத்தகம் ஒரே ஆண்டில் நான்கு பதிப்புக்கள் வெளிவந்தன.

அந்தப் புத்தகத்திற்கு அப்போது மலேயா சர்க்கார் தடை விதித்து விட்டது; அதனையும் மீறி மலேயா வாழ் தமிழர்கள் அந்த நூலைப் படித்துவிட்டு, எனக்குக் கடிதங்கள் எழுதினர்.

அந்த நூலில்-இப்போது வேலூரில் சந்தித்தேனே சாம்பசிவம்-அவரைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தேன்.

அப்படி என்னால் குறிப்பிடப்பட்ட அந்த இளைஞரை இருபத்தைந்து ஆண்டுகளுக்குப் பிறகு நானே சந்தித்து அரசின் சார்பில் மூவாயிரம் ரூபாய் நிதியும் வழங்குவதென்றால், என் உள்ளம் எவ்வளவு உணர்ச்சிவசப்பட்டிருக்கும் என்பதை நீயே எண்ணிப்பார்!

அவரைப் பற்றி நான் எழுதியிருந்ததைச் சாம்பசிவமே என்னிடம் நினைவு படுத்தினார். அவரது சட்டையைக் கழற்றி என்னிடம் காட்டினார்; உடம்பெல்லாம் தழும்புகள்-ஆழமான தழும்புகள்!

இப்போது அவர் வயதான தோற்றத்தில் காணப்படுகிறார்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு, மலேயா ஏடுகளில்-குறிப்பாக திரு. சாரங்கபாணி அவர்களை ஆசிரியராகக் கொண்டிருந்த 'தமிழ் முரசு' போன்ற நாளிதழ்களில் அவரது இளமைப் பொலிவு நிறைந்த புகைப்படங்கள் அடிக்கடி வெளி வந்திருக்கின்றன.

அவைகளை யெல்லாம் அவர் என்னிடம் காட்டியதோடு, தாம் இன்னமும் பொதுவுடைமைவாதியாகவே இருப்பதாகவும் பெருமையுடன் சொல்லிக் கொண்டார்.

என் நெஞ்சு மகிழ்ச்சியால் கனத்தது! 1949-இல் திராவிடர் கழகத்திலிருந்தபோது, மலேசியாவில் அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்ட ஒரு சாம்பசிவத்திற்காகக் கண்ணீர் வடித்து-அதனைக் கட்டுரையாக்கிய நான்-இன்று அதே சாம்பசிவத்துக்கு, 'ஏதோ ஒரு உதவியைச் செய்ய முடிந்ததே' என நினைத்து, ஒரு இன்பப் பெருமூச்சு விட்டுக் கொண்டேன்!

உடன்பிறப்பே! அன்று நான் எழுதிய 'கயிற்றில் தொங்கிய கணபதி' புத்தகத்தின் சில வரிகளை இப்போது உனக்கு நினைவு படுத்துகிறேன்:-

"உலகில் எத்தனையோ பேர் தினம் தினம் சாகிறார்கள் - எல்லாவற்றுக்குமா எல்லோரும் கவலைப்படுகிறோம்?

அது போலவே, எத்தனையோ பேர் தூக்கிலிடப்படு கிறார்கள். ஆனால், கணபதியின் தண்டனை-தமிழ் நாட்டிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது!

கணபதியே ஒரு பாடமாகி விடுகிறார்-தமிழ்நாட்டுக்கு! அவர் வாழ்வே - தமிழர்க்கு ஓர் அரசியல் வகுப்பு!

அவர் இறுதிக் கடிதம், தமிழர் பட்டாளத்துக்கு ஒரு போர்ப் பிரசங்கம்!

"மலர் மலரும்-மணம் வீசும்-கருகி மடியும்!"

பூ மலர்வதும்-கருகி மடிவதும், 'காயமே இது பொய்யடா' எனக் கழறுபவர் பயன்படுத்திக் கொள்ளும் உதாரணங்கள்!

ஆனால், மலர்ந்த பூ-மணம் வீசுகிறதே-அதைத்தான் அறிவியக்கம் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறது!

"மனிதன் பிறக்கிறான்-சாகிறான்; வந்த வழியைப் பார்த்துக் கொண்டு போவதே மனிதனின் இலட்சணம்" என, வாழ்வை வெறுத்தவர் பேசுவர்!

மலர் மலர்வதும்-கருகி உதிர்வதும்தான் அவர்கள் கண்களில் படுமே தவிர, மலர் தரும் இன்ப வாசம் அவர்கள் உணர்வைத் தொடுவதில்லை!

தொட்டாலும் அதை உரைக்க மறுக்கின்றனர்!

'மடியப் போகிறோமே' என்று-மலர், மணம் தராமல் இருக்கிறதா? அப்படியிருக்கும் மலரைத்தான் மக்கள் விரும்புவரா?

வயது நீண்ட வாடா மல்லிகையை வரவேற்பவர் யார்?

"சாகப் போகிறோமே" என்பதற்காக-சமுதாயத்துக்குச் செய்ய வேண்டிய பணியைச் செய்யாமல் இருப்பதா? மலர் மணம் தர மறுப்பதா?

மணம் தரும் மலராகத்தான் இருந்தார் கணபதி; 'முடிசார்ந்த மன்னரெல்லாம் வெந்து பிடிசாம்பலாயினர்' என்று பாடி-முனிவர் ஆசிரமம் அமைத்துக் கொள்ளவில்லை-தூக்கு மேடையிலே இந்த முகாரியைப் பாடவுமில்லை-அந்த வீரர்!

"நான் மணம் தரும் மலர்-
கசக்கி எறியப்படுகிறேன்"

என்ற இதய ஒலியை அவர் கடிதமாக்கினார்!

அவர் கடிதம், 'அந்த லோக' ஆசைக்காரர்களுக்கு ஒரு சவுக்கு!

"மிகவும் உயர்ந்த நிலையில் இருந்து-தாழ்ந்துபோன ஒரு குடும்பத்தை உருவாக்காது உழைக்கிறானாம்" என்று பலர் என்னைப் பார்த்துப் பேசியதுண்டு; அதுபற்றி நான் கவலைப்படவில்லை!

ஊருக்கு உழைத்த உத்தமர், தோழர் சற்குணத்திற்கு எழுதிய கடைசிக் கடிதத்தில், இதையும் குறிப்பிடுகிறார்.

கடிதத்தில் நம்மையெல்லாம் வேல் கொண்டு குத்தும் பகுதிதான் கீழே வருவது:-

"நமது குடும்பம் நசித்துப் போன பின் நான் எப்படி இங்கு வந்தேன் என்பதை நீ அறிவாய்; அப்பம் விற்றுக் கொண்டும், இராணி வீட்டில் மங்கு கழுவிக் கொண்டும் ஆங்கிலம் படித்தேன்."

தஞ்சை மாவட்டத்திலே-தங்க நிற நெல் விளையும் சோழ வள நாட்டினிலே-தம்பிக்கோட்டையிலே பிறந்த கணபதி, ஒரு சாண் வயிற்றுக்காக, இளமையிலே மலேயாவுக்கு ஓடினார்.

தில்லை நடராசனுக்குத் தங்க வீடு-திருப்பதி வெங்கடேசனுக்கு வைரக் குல்லாய்-ஏன், ஆற்றங்கரைக் கணபதிக்குக் கூட அதிரசமும், அக்கார வடிசலும்!

ஆனால், தம்பிக்கோட்டை கணபதிக்குத் தாங்காத பசி, மலேயாவில் வயிற்றுப் பிழைப்பு!

தமிழகம் தானியக் களஞ்சியமாயிற்றே- தங்கம் தோண்டும் இடமாயிற்றே-முத்துக் குலுங்கும் கடல்கள் உண்டே-கணபதி ஏன் மலேயாவுக்கு ஓட வேண்டும்?

ஒரு கணபதியா? எத்தனை கணபதிகளை-ஏ, தாழ்ந்த தமிழ கமே-நீ மலேயாவுக்கும், இலங்கைக்கும் அனுப்பியிருக்கிறாய்?

செல்வச் சீமான்களுக்கு-சீரும் சிறப்பும்! கணபதிகள் காலந் தள்ள-இலங்கையும், மலேயாவும்! இது அடுக்குமா தமிழகமே!!!!

'அன்பு மகன் செத்தான்' என்று அழுகிறாயே-ஆத்திரப்படு கிறாயே- அலறித் துடிக்கிறாயே - அவனை நீதானே விரட்டி அடித்தாய்! 'அவனுக்குச் சோறில்லை' என்று சொன்னது நீதானே! 'அவன் நல்ல வீட்டில் வாழக் கூடாது' என்று கூறியது நீதானே! 'அவன் பொன்னையும் முத்தையும் தீண்டக் கூடாது' எனத் தடை போட்டது நீதானே!

இப்போது அழு! நன்றாக அழு! கண்விழிகள் கனத்துப் போகும்வரையில் அழு! விழிகளில் இரத்தம் வழிய ஆரம்பிக்கும் வரையில் அழு!

இதைத்தான் கணபதியின் உரத்த குரல் உத்வேகத்தோடு ஒலிக்கின்றது! 'இல்லை'யென்று கூற முடியுமா?

அவர் முழக்கமிடுவதற்குள்ளேயே, வீரசேனன் சுட்டு வீழ்த்தப் பட்டார் ஒரு அற்ப மிருகத்தைப் போல!

சாம்பசிவம்-சாவின் முனையிலேயே நிறுத்தப்பட்டு விட்டார்!

'செவிடன் காதிலே சங்கு ஊதினால் கேட்காது' என்பார்கள்! ஊதுபவர்களுக்கும் உதடு இல்லாவிட்டால் எவ்வளவு வேதனை யான வேடிக்கையாக இருக்குமோ அப்படித்தான் இருக்கிறது- மலேயா சர்க்காரின் வெறிப்போக்கும், இந்திய சர்க்காரின் வேண்டுகோள் படலமும்.

அன்பு உடன் பிறப்பே! இன்று நேற்றல்ல-இருபத்தைந்து ஆண்டுகட்குமுன்பே, எழுதப்பட்ட எழுத்து இது!

தமிழனுக்கு உலகத்தின் எந்த மூலையில் கொடுமை நடந்தாலும், அதனைச் சகித்துக் கொள்ளாமல் உரிமைக் குரல் கொடுத்த இயக்கம்-நமது இயக்கம்! கண்ணீர் சிந்திய விழிகள் நமதுவிழிகள்! காரணம்-தமிழ் நெஞ்சம் நமது நெஞ்சம்!

அன்புள்ள,

மு. க.

(01-12-1974)

1924 - 2018

நூல் கிடைக்குமிடம் :

கௌரா புத்தக மையம்
9, செ. ஜான் சர்ச் வணிக வளாகம்,
ராக்கின்ஸ் சாலை, திருச்சி - 1.
gowraputhagamaiyam@gmail.com

கௌரா ஏஜென்ஸீஸ்
1, சாமி தெரு, திருவல்லிக்கேணி,
சென்னை - 5. gowra09@gmail.com.
www.facebook.com/gowrabookcentre

கௌரா
பதிப்பகக் குழுமம்

அட்டை : ஜே.ஜே டிசைன்ஸ்

GO 2300
ரூ.300

செப்டம்பர் 2022